
# மாணிக்கவாசகர்





பேராசிரியர்

டாக்டர். ந. சுப்புரெட்டியார்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# மாணிக்கவாசகன்

பழுதி லாதசொல் மணியினைப்
பத்திசெய் தன்பு
முழுது மாகிய வடத்தினான்
முறைதொடுத் தலங்கல்
அழுது சாத்துமெய் யன்பருக்
ககமகிழ்ந் தையர்
வழுவி லாதபேர் மாணிக்க
வாசகன் என்றார்.[1]

—பரஞ்சோதி முனி

---

1. திருவிளையாடல்—வாதவூரடிகளுக்கு- 50.

# மாணிக்கவாசகர்

(ஆசிரியரின் 73 வது அகவை நினைவு வெளியீடு)

'அருங்கலைக்கோன்' 'சடகோபன் பொன்னடி'
பேராசிரியர்
**டாக்டர் ந. சுப்புரெட்டியார்**
(எம்.ஏ., பி. எஸ்சி., எல்.டி., பி எச்.டி)
தமிழ்ப்பேராசிரியர் - துறைத்தலைவர், (ஓய்வு)
திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி.

விற்பனை உரிமை:

**பாரி நிலையம்**
184. பிராட்வே · சென்னை · 600108

முதற்பதிப்பு : மே, 1989

© டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன் எம்.டி.,
(ஆசிரியரின் இளைய மகன்)
'வேங்கடம்'
AD — 13 (பிளாட் 3354)
அண்ணாநகர், சென்னை - 600 040

பக்கம் : xxiv + 388 = 412

விலை : 38 - 50

VENKATAM PUBLICATIONS
AD—13; Plot No. 3354
Anna Nagar, Madras - 600040
Phone : 615583

அச்சிட்டது : நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்
137, ஜானி ஜான்கான் சாலை,
சென்னை - 600014.
தொலைபேசி - 833231.

அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே.

— தாயுமான அடிகள்



வணிகர் குலச் செம்மல்

**திரு K. இராஜமாணிக்கம் செட்டியார்**

சித்தூர்—கட்டமச்சி (ஆ.மா.)

தோற்றம் :
28-3-1919

முத்தி :
14-3-1977

சித்தூர்—கட்டமச்சி (ஆந்திரம்) புகழ் மிக்க வெல்லம் மண்டி அதிபரும் அருட்பிரகாச வள்ளலாரின் திருத் தொண்டரும் முருக பக்தரும் சத்துவக்கும் இன்பம் கண்ட வரும் வணிககுலத் திருச்செல்வருமாகிய **மூத்தர் K. இராச மாணிக்கம் செட்டியார்** அவர்கட்கு

## அன்புப்படையல்

கள்ளவிழ் மலர்நேர் திருவருட் பாவிற்
கலைச்சுரும் பாகியின் புற்றோர்,
ஒள்ளிய சித்தூர்ச் சங்கங்குன் றாகி
ஓங்குறத் திருப்பணி புரிந்தோர்;
வள்ளுவர் தங்கப் பதக்கத்து மணிபோல்
வயங்கினோர்; நற்குணச் செம்மல்:
தெள்ளிய புகழ்சால் **இராசமா ணிக்கச்**
**செட்டியார்க் குரியதிந் நூலே.**

# முத்திதரும் வாசகம்

வலமழு உயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடல்
முகந்துல(கு) உவப்ப உகந்தமா ணிக்க
வாசகன் எனும்ஒரு மாமழை பொழிந்த
திருவா சகமெனும் பெருநீர் ஒழுகி
ஓதுவார் மனம்எனும் ஒண்குளம் புகுந்து
நாவெனும் மதகில் நடந்து கேட்போர்
செவியெனும் மடையில் செவ்விதிற் செல்லா
உளம் எனும் நிலம்புக ஊன்றிய அன்பாம்
வித்திற் சிவமெனும் மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் தருமே.[2]

—சிவப்பிரகாச அடி

2. நால்வர் நான்மணிமாலை.

ஓம்சக்தி

# சிறப்புப்பாயிர மாலை

[புலவர். த. பெரியாண்டவன், எம்.ஏ., உதவிஇயக்குநர்,
தமிழ்வளர்ச்சித் துறை சென்னை-108]

திருநீறு ஒளிரும் நெற்றி
தீந்தமிழ் மணக்கும் செவ்வாய்
திருமால்சீர் பரவும் நெஞ்சம்
சேர்ந்தாரைத் தாங்கும் அன்பு
உருவாகத் தோன்றும் செம்மல்
உயர்சுப்பு ரெட்டி யாராம்
பெருமகன் சீர்மை முற்றும்
பேசுதல் யாரா லாகும்?

சொல்லிலே இனிமை; தூய
நெஞ்சிலே தமிழு ணர்ச்சி;
அல்லுநன் பகலு மெல்லாம்
ஆய்வுகள் செய்தல் மற்றும்
பல்துறை வாயி லாகப்
பைந்தமிழ்த் தொண்டு செய்தல்
வல்லநல் லறிஞர் சால்பு
வையகம் அறிந்த தன்றோ!

ஆங்கில மொழிவ ளப்பம்
அருந்தமிழ் பெறுதல் வேண்டும்
தூங்காமல் அறிஞ ரெல்லாம்
தொண்டுகள் செய்ய வேண்டும்
ஏங்கிடும் தமிழ்த்தாய் ஏக்கம்
ஏகிட வேண்டும் என்னும்
பாங்குளம் வேண்டு மென்பார்
பலசெய்தி சுவையாய்ச் சொல்வார்!

பழங்கதை சொல்லிச் சொல்லிப்
பண்டைநற் பெருமை பேசிப்
பொழுதினை வீணே போக்கும்
புல்லர்போ லிருந்தி டாமல்
அழகுடைத் தமிழ்க்கன் னிக்கு
அணிகல னாகும் நூல்கள்
இழைத்திழைத் திட்டுப் பார்த்து
இன்புறும் மனத்த ராவார்!

கன்னலின் இனிமை தோற்கக்
கற்கண்டுத் தமிழு ரைப்பார்!
முன்னிய ஆழ்வார் பாட்டில்
மூழ்கியே இன்பம் காண்பார்!
தன்னிகர் இல்லா வண்ணம்
தமிழ்ப்பணி நாளும் செய்வார்
மன்னவர் இவர்ப டைத்த
மாநூல்கள் கொஞ்ச மாமோ?

அறிவியல் நூல்கள் தந்தார்
ஆய்வுநூல் பலவும் தந்தார்
நெறியிலக் கியங்கள் தந்தார்
நேர்சமய நூல்கள் தந்தார்
வரலாற்று நூல்கள் தந்தார்
வளப்பாசி ரியநூல் தந்தார்.
உரனேற்று மிவர்நூல் மொத்தம்
ஒரெண்பத் தேழு ஆகும்!

காவியச் சுவையில் தோய்ந்துக்
கலைபல ஆய்ந்தும் கற்றும்
பாவியல் திறங்கள் தேர்ந்தும்
பலநூ ல்கள் கொடுத்த தாலே

வாவியில் கதிரோன் தன்னை
வரக்கண்ட தாம ரைபோல்
மேவிய தமிழாம் கன்னி
மேனிபூ ரித்தாள் ஆமாம்!

அந்தநூல் வரிசை தன்னை
அடுத்ததாய்ப் புகழ்வி ளங்க
வந்தநூல் தான்மா ணிக்க
வாசகர் என்னு மிந்நூல்
இந்தநூல் தன்னை யானும்
எழுத்தெண்ணிச் சுவைத்து வேறு
எந்தநூல் இதற்கீ டென்றே
இன்பத்தில் திளைத்துப் போனேன்!

வேணியங் கொன்றைத் தாரான்
விரும்பும்நல் லடியா ரான
மாணிக்க வாச கன்சீர்
மன்பதைக் குரைக்கு மிந்நூல்
ஆணிப்பொன் னொத்த தாக
அமைந்துள திறங்கள் சொல்ல
வாணிக்கும் கூட யிங்கே
வார்த்தைகள் போதா தம்மா!

பெருமான்மணி வாச கர்தாம்
பிறந்தநற் பேறு பெற்ற
திருவாத வூரைப் பற்றித்
தெரியாதார் வருந்த வேண்டாம்
ஒருமுறை இந்த நூலை
ஓதுவா ராகில் அன்னார்
திருவாத வூர்க்கே சென்று
திரும்பிய உணர்வு கொள்வார்!

எத்துணை வருண னைகள்
  எழில்மிகு உவமைத் தேன்கள்
முத்தெனும் விளக்கப் பூக்கள்
  முழுமைசேர் ஒப்பு மைகள்
அத்தனை நயமும் சேர்ந்து
  அமிழ்தமாய் இனிக்கும் நூலை
வித்தகன் சுப்பு வன்றி
  வேறெவர் படைக்கக் கூடும்?

திருவாச கத்தை மற்றும்
  செய்வித்த பெரியோன் தன்னை
ஒருவாச கத்தில் முற்றும்
  உணருதல் வேண்டு மென்னில்
கருவினில் திருப டைத்த
  கலைவலோன் சுப்பு சொன்ன
பெருமைநூல் இஃதே போதும்
  பெரும்பயன் மலைபோல் சேரும்!

வான்புகழ்த் தொண்டு செய்து
  வண்டமிழ் வளர்த்த தாலே
தேன்தமிழ்க் கலைஞர் கையால்
  திரு. வி. க. விருது பெற்ற
கோன்சுப்பு ரெட்டி யாரைக்
  கும்பிட்டு வணங்கு கின்றேன்
நீணில மீதில் அன்னார்
  நீடூழி வாழ்க வென்றே!

சென்னை - 108
2-6-89

—பெரியாண்டன்

# அணிந்துரை

[டாக்டர் பொன். சௌரிராசன் பேராசிரியர்—துறைத் தலைவர், திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி]

கவிதை ஓட்டத்தைக் களிற்று நடை, பரிநடை (கஜகதி, துரக கதி) என்றெல்லாம் குறிப்பிட்டு வாய்விட்டுப் படித்து மனக்கண்ணில் கண்டு சுவைஞர்கள் மகிழ்வர். "ஆடு கொடிப் படை சாடி அறத்தவரே ஆள" என்னும் கம்பர்தம் பாடல் பரிநடையில் (துரக கதியில்) அமைந்துள்ளது என்று குறிப்பிட்டு அதற்கேற்ப மொழிநடையில் பாடி இன்புறுவர்.

இவ்வாறு ஒலி நயத்திற்குக் கவிதை உகந்த இந்தக் களிற்றுநடை, பரிநடை முதலியன உரைநடையில் இன்னொரு வகையில் அமைந்து அழகு செய்வதைக் காணலாம்.

பூனைக்கு ஒரு பொந்து போதும்; பூனை நடை பதுங்கு நடை. யானைக்குப் பெரிய தோப்பு வேண்டும்: அது நடையில் நிறைவும் பெருமிதமும் கொண்டு விளங்கும். அப்படித் தான் பேராசிரியர் டாக்டர். ந. சுப்புரெட்டியார் அவர்களது நடை எப்பொழுதுமே 'கோலஞ்செய் துங்கக் களிற்றின்' நடையாக அமைதலைக் காணலாம்.

மாணிக்கவாசகர் நூலின் தொடக்கமும் வளர்ச்சியும் இப்படித்தான் பெருமிதத்தோடும் மிகுந்த அநுபவத் துடனும் அமைந்து விளங்குவதைக் காணலாம்.

"மதுரையின் புகழுக்குத் தமிழ்ச்சங்கமும், மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலும்தான் முதற்காரணம் என்பதை நாம் அறிவோம். மீனாட்சி கோயிலின் மிகப் பெரிய வானளாவ நிற்கும் ஒன்பது கோபுரங்களும், அவற்றின்மீது புராணக் கதைகளையெல்லாம் விளக்கும்

பாங்கில் கொத்துக் கொத்தான அழகிய சிற்ப வடிவங்களும், கோயிலுக்கு உள்ளே அமைந்த உறுதியான கற்றூண்களும் அவற்றில் கைபுனைந்தியற்றிய அற்புதமான சிற்ப வடிவங் களும் பண்டைத்தமிழரின் கலைச் சிறப்பையும் நாகரிக முதிர்ச்சியையும் பறைசாற்றிக் கொண்டுள்ளன.'' என்ற பகுதி இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. இவருடைய நடையில் தத்துவம் தாண்டவமாடும்; அறிவியல் பல அழகு செய்யும்.

பிறப்பால் பேராசிரியர் ரெட்டியார் சைவர்; வளர்ப்பா லும் சைவர். வாழ்வால் அனைத்தும் கடந்த அனைவரை யும் அன்பால் பிணைக்கும் அருளாளர். ''முக்தி நெறியே அறியாத'' என்னும் மணிவாசகர் பாடலை ஆசிரியர் நெஞ்சம் அசை போடுகின்றது. முக்திநெறி, பக்திநெறி இரண்டும் அவர் சிந்தனையில் இடம்பெறுகின்றன. முக்தி நெறி—இது சரியை, கிரியை யோக, ஞானங்களால் முதிர்ந்த அறிவுடைய பெருமக்கள் மட்டுமே அறிந்து கடைப்பிடித்தற் குரிய அருமையுடையது. பக்திநெறி அப்படி அன்று. பேரன்பின் முதிர்ச்சியே பக்தி. இஃது உலக மக்கள் அனைவரும் அன்பினால் பின்பற்றுதற்குரிய எளிமை வாய்ந்த வழி. முக்திநெறியின் அருமையும், பக்திநெறியின் எளிமையும் வாசகர் வாக்கில் விளங்கும் வண்ணம் உண்மையை உணர்ந்து தெளிவு செய்யும்போதே ஆசிரியரின் நெஞ்சம் ஆழங்கால் பட்டு வைணவ நெறியின் மாட்சியை யும் கண்டு கற்பவர்க்கு நன்கு புலனாக்குகின்றது.

மாணிக்கவாசகர்தம் பிறப்பையும், வளர்ப்பையும் இன்று எழுதுகின்ற ஆசிரியர் என்றோ தாம் சென்று கண்ட திருவாதவூர்ச் சூழலை நெஞ்சில் நிறுத்தி நமக்கும் நினைவூட்டுகின்றார். அந்தப் பகுதியில் தொன்மையியல் கூறுகள் அமைந்து விளங்கக் காணலாம்.

''உழவுத் தொழிலே மக்களின் வாழ்க்கைத் தொழில். இந்த ஊரிலுள்ள ஏரியின் மதகின்மீது உள்ள ஒரு சிலை நம்

மனத்தைக் கவர்கின்றது. இச்சிலை மனித முகமும், சிங்க உடலும் கொண்டது. இதன் சிற்ப அழகே கண்ணைக் கவரும் பான்மையது. இது 'புருஷா மிருகம்' என்ற பெயரால் வழங்குகின்றது. இஃது ஏரி நீரைத் தூய்மையாக்கும் தெய்வம் என்றும், ஊரைக் காக்கும் தெய்வம் என்றும், இதனால் ஆண்டுதோறும் மகாசிவராத்திரியன்று ஒரு திருவிழா நடைபெறுகின்றது என்றும் சிலர் மூலம் கேள்விப்படுகின்றேன். இதன் அருகிலுள்ள பிடாரிக் கோயில் ஊர்ப் பெரு மக்களுக்குப் பத்தியின் இருப்பிடமாகத் திகழ்கின்றது. இத் திருக்கோயிலின் நித்திய கருமங்களில் ஏதேனும் ஒன்று எக் காரணத்தினால் தவறிவிட்டாலும் ஏரி வறண்டு மழை குன்றி வேளாண்மைக்குக் குந்தகமாய் விடும் என்று இன்றும் மக்கள் நம்புகின்றனர்,'' என்பதில் இவற்றைக் காணலாம்.

பேராசிரியர் சுப்புரெட்டியார் பிறவியிலேயே ஓர் ஆராய்ச்சியாளர். எந்தச் செய்தியையும் மேல்மட்டமாகக் கூறி யாரும் அவரிடமிருந்து தப்பமுடியாது. என்ன அது, எப்படியாயிற்று அது, எதற்கு ஆயிற்று அது, யாரால் ஆயிற்று அது, அதனால் விளையும் நன்மை தீமை என்ன என்று இப்படியெல்லாம் துருவித் துருவிக் கேட்பது அவரது இயல்பு. தாம் காணுகின்ற காட்சிகளையும், கற்கின்ற நூல்களையும் அவ்வாறு ஆய்ந்து, ஆய்ந்து உண்மை கண்டு அறிவுறுத்துதலும் இவருக்கு இயல்பு.

'திருத்தில்லையில் அருளிச் செய்த' பகுதியில் இவர்தம் ஆராய்ச்சி ஆழ்ந்தும், அகன்றும் செல்லுதலை நன்கு காணலாம். இப்படித்தான் மணிவாசகம் என்ற தொடர் அமைந்ததற்கு (பக்-26, 27, 28) ஆசிரியர் காட்டும் அகப்புறச் சான்றுகளும் ஆகும்.

இடையிடையே மணிவாசகப் பெருமானுக்கும் தில்லைக் கூத்தனுக்கும் மானசிகமாக நிகழ்ந்த பேச்சினை நேர்முக நடையில் சிறுகதை போக்கில் ஆங்காங்கே ஆசிரியர் தந்து செல்வது பூஞ்சோலையில் நடைபயில்வது போலக் கற்பவர் நெஞ்சம் எளிதில் நூலில் உலவ இடந்தருகின்றது.

'எல்லாப் பொருளும் இதன்பால் உள' எனத் திருவள்ளுவர்தம் திருக்குறளை உலகம் போற்றி உரைக்கும். பேராசிரியர் சுப்புரெட்டியார் அவர்களும் மண்ணுலகத்திலும்—விண்ணுலகத்திலுமுள்ள எல்லாச் சிந்தனைகளையும் தமிழில் தந்துள்ளார்கள். அவர்தம் சிந்தனைகள் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழ'வகை செய்வதோடு விண்ணிலும் ஒரு மச்சுவீடு கட்டிக்கொள்ளத் துணை செய்யவல்லன.

பல்வேறு பொருள்பற்றி பற்பல வகைப்பாடுகளில் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் நூல் பல எழுதினாலும் இறையியல் பற்றிப் பயண நூல் போக்கில் எழுதுகின்ற வகையில் அளவாலும், பொருளாலும் அதிகம் எழுதி இன்று முன்னணியில் இருப்பவர் ஆவர். இந்த வகையில் சாகித்திய அகடெமி இவரை நன்கு நினைவு கூர்தல் வேண்டும்.

மாணிக்கவாசகம் நெஞ்சுருக்கும் நீர்மையது; உண்மை தான். ஆனால், அதில் பொதிந்துள்ள சைவசித்தாந்தச் சிந்தனைகள் அறிந்து கொள்வதற்கு மிக அருமையானவை. மாணிக்கவாசகர் தம் அருள்மொழியும் சித்தாந்தக் கோட்டைக்குள் பயணம் செய்ய நம்மை மிக எளிதாக அழைத்துக் கொண்டு போகின்றார் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள். தொடக்கத்தையே பாருங்களேன்.

"தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி!

என்று மாணிக்கவாசகர் போற்றும் பழம்பதியாகிய பாண்டி நாட்டில் வைகையாற்றங்கரையிலுள்ள திருவாதவூர் என்பது ஒரு சிற்றூர். மதுரைக்குக் கிழக்கே சுமார் 12கல் தொலைவிலுள்ளது; பேருந்து வசதியுண்டு. இன்றளவும் சாலை நன்கு சீர்படவில்லை. 1979ஆம் ஆண்டு மே மாதம் கொடைக்கானலில் 10 நாள் என் மனைவியுடன் தங்கி மதுரைக்கு வந்தேன். மங்கம்மாள் சத்திரத்தில் இடம் கிடைக்காததால் 'காலேஜ் அவுஸ்' என்ற விடுதியில் இருவரும் தங்கினோம்.

வந்த மறுநாள் காலை மாணிக்கவாசகப் பெருமான் அவதரித்த திருத்தலத்தைப் பார்க்கவேண்டும் என்ற அவா எங்கள் மனத்தில் எழுந்தது.''

சேரன் கலம் ஒன்று கடலில் சென்றால் அடுத்து வேறொன்றும் செல்ல இயலாது என்று பண்டைத்தமிழ்ச் சான்றோர் ஒருவர் பாடியுள்ளார். அப்படித்தான் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் ஒருவரைப் பற்றி, ஒரு நூலைப் பற்றி எழுதிவிட்டால் பின் வருபவர் எழுவதற்கு வேறொன்றும் இல்லாது போய்விடும். அவ்வாறு பல நோக்குகளில் நூல் எழுதுதல் இவர்க்கே அமைந்த பாங்கு. பயன்பட்ட நூல்கள், சொல்லடைவுகள் முதலியவற்றை முறையாக அமைத்து எந்நூலாயினும்—படைப்பிலக்கிய மாயினும் ஆராய்ச்சி நூலாயினும்—பதிப்பித்தல் இவருக்குக் கைவந்த கலை.

இந்நூலிலும் அத்தகு பின்னிணைப்புகள் :

1. பயன்பட்ட நூல்கள், 2. பழமொழிகள், 3. புராண வரலாறுகள் 4. மாணிக்கவாசகர் வழிபட்ட தலங்கள் எனப் பல அமைந்து நூலுக்கு ஒரு முழுமை தருதலைக் காணலாம்.

ஆராய்ச்சிக்கும், அகங்குழைந்த பொருள் உணர்வுக்கும் உதவவல்ல இந்த நூல் சைவ அன்பர்களும், தமிழ் ஆய்வாளர்களும், கவிதை ஆர்வலர்களும் படித்துப் பயன் பெறவேண்டிய ஒப்பற்ற நூலாகும். இத்தகைய நூல் பல எழுதித் திருவேங்கடவன் திருவருளால், பல்லாண்டு, பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு, பலகோடி நூறாயிரம் வாழவேண்டி அமைகிறேன்.

11, பேராசிரியர் குடியிருப்பு
பிரகாசம் நகர்,
திருப்பதி-517502
16-5-1989

பொன். சௌரிராசன்

# நூல்முகம்

பெருந்துறையில் சிவபெருமான் அருளுதலும்
பெருங்கருணைப் பெற்றிநோக்கிக்
கரைந்துகரைந் திருகண்ணீர் மழைவாரத்
துரியநிலை கடந்து போந்து
திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல்
வாய்மடுத்துத் தேக்கிச் செம்மாந்து
இருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூர்
அடிகளடி இணைகள் போற்றி[3]

—சிவஞானமுனிவர்

'திருவருட் செல்வர்கள்' என்ற வரிசையில் நான்காவதாக வரவேண்டிய நூல் நான்காவதாகவே வெளிவருகின்றது. 'ஞானசம்பந்தர்' என்ற நூலை எழுதி முடித்து அச்சிட்டு வெளிவரும் நிலையில் இருந்த உற்சாகத்தில் மணிவாசகப் பெருமானின் அருளிச் செயல்களில் ஆழங்கால் பட்டு அநுபவித்தேன். அதிகாலையில் (3,4 மணிக்கு) துயில் எழுந்து உலகம் முழுவதும் உறங்கிய நிலையில் இருக்கும் போது இவர்தம் திருப்பாடல்களை வாய்விட்டு ஓதினால் நம் ஒலியே நம் காதின்மூலம் சென்று நம் மனத்தை உருக்கும். சிவப்பிரகாச அடிகள் கூறி மகிழும் 'மாணிக்க வாசகன் என்னும் மேகம் பொழிந்தது; திருவாசகத் தண்ணீர் ஓடிப் படிப்பவர் மனக்குளத்தினை நிரப்பிற்று; நாக்கெனும் மதகின் வழியாக வெளிப்பட்டுக் கேட்பவரின் செவிமடை வழியாக மனவயலில் பரவிற்று; அன்பாகிய வித்திலிருந்து சிவமுளையைத் தோற்றுவித்தது; அதிலிருந்து

3. காஞ்சிப்புராணம் - காப்புப் பகுதி

# 1. பிறப்பும் வளர்ப்பும்

**தென்னா டுடைய சிவனே போற்றி**
**எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி**

என்று மாணிக்கவாசகர் போற்றும் பழம்பதியாகிய பாண்டி நாட்டில் வைகையாற்றங்கரையிலுள்ள திருவாதவூர் என்பது ஒரு சிற்றூர். மதுரைக்குக் கிழக்கே சுமார் 12 கல் தொலைவிலுள்ளது; பேருந்து வசதியுண்டு. இன்றளவும் சாலை நன்கு சீர்படவில்லை. 1979-ஆண்டு மே மாதம் கொடைக்கானலில் 10 நாள் என் மனைவியுடன் தங்கி மதுரைக்கு வந்தேன். மங்கம்மாள் சத்திரத்தில் இடம் கிடைக்காததால் 'காலேஜ் அவுஸ்' என்ற விடுதியில் இருவரும் தங்கினோம். வந்த மறுநாள் காலை மணிவாசகப் பெருமான் அவதரித்த திருத்தலத்தைப் பார்க்க வேண்டும் என்ற அவா எங்கள் மனத்தில் எழுந்தது.

மதுரை-அழகர் கோயில் சாலையில் திருமோகூருக்குத் திரும்பும் சாலை வழியாக இந்த ஊரை அடைய வேண்டும். காலை 6மணிக்கே நீராட்டம்,சிற்றுண்டி இவற்றை முடித்துக் கொண்டு திருவாதவூருக்குப் புறப்பட்டோம்; வெயிலேறு வதற்கு முன் திரும்பி விடவேண்டும் என்பது எங்கள் திட்டம். ஒரு மணி நேரத்தில் அந்த ஊரைச் சென்றடைந்தோம். கோடைக் காலமாதலால் ஒரே வறட்சி. எம்மருங்கும் கோடையோடிய வயல் தான் காட்சி அளிக்கின்றது.

முல்லையும் குறிஞ்சியும் கதிரவன் வெப்பந் தாங்காது பாலையாகக் காட்சியளிக்கும் என்பதைச் சிலப்பதிகாரத்தில் படித்தது நினைவுக்கு வருகின்றது. ஆனால், நம்மாழ்வார் நானிலமும் திரிந்து கோடையாகும் என்று கூறுவர்.

**நானிலம் வாய்க்கொண்டு நன்னீர்**
**அறமென்று கோதுகொண்ட**
**வேனிலஞ் செல்வன் சுவைத்துமிழ்**
**பாலை**[1]

என்பது அவர் திருவாக்கு. நாட்டுப்புறத்தில் பிறந்து வளர்ந்தவனாதலால் இந்த ஊர்ச் சூழ்நிலை என்னை வியக்க வைக்கவில்லை.கோடையில் எங்கும் இப்படித்தான் இருக்கும். இந்த ஊரைச் செழிக்க வைக்கும் பெரிய ஏரி ஒன்று உண்டு. அதிலும் நீர் இல்லை; வறண்டு கிடக்கின்றது. சில மாதங்களில் நீர்வற்றி வறண்டு போய் விட்டால் விளைச்சலும் நின்று போகும். ஊர் மக்கள் பஞ்சத்தால் உழல வேண்டியது தான். வைகை அணை கட்டிய பிறகு இப்பகுதிகளில் நீருக்குப் பஞ்சம் இல்லை. உழவுத் தொழிலே மக்களின் வாழ்க்கைத் தொழில். இந்த ஊரிலுள்ள ஏரியின் மதகின் மீது உள்ள ஒரு சிலை நம் மனத்தைக் கவர்கின்றது. இச் சிலை மனித முகமும் சிங்க உடலும் கொண்டது. இதன் சிற்ப அழகே கண்ணைக் கவரும் பான்மையது. இது **'புருஷா மிருகம்'** என்ற பெயரால் வழங்குகின்றது. இஃது ஏரி நீரைத் தூய்மையாக்கும் தெய்வம் என்றும், ஊரைக் காக்கும் தெய்வம் என்றும்,இதனால் ஆண்டுதோறும் மகாசிவராத்திரி யன்று ஒரு திருவிழா நடைபெறுகின்றது என்றும் சிலர் மூலம் கேள்விப்படுகின்றேன். இதன் அருகிலுள்ள பிடாரிக் கோயில் ஊர்ப் பெருமக்களுக்குப் பக்தியின் இருப்பிடமாகத் திகழ் கின்றது. இத்திருக்கோயிலின் நித்திய கருமங்களில் ஏதேனும்

---

1. திருவிருத். 26

ஒன்று எக்காரணத்தினால் தவறி விட்டாலும் ஏரி வறண்டு மழை குன்றி வேளாண்மைக்குக் குந்தகமாய் விடும் என்று இன்றும் மக்கள் நம்புகின்றனர்.

இந்தத் திருவாதவூரில் மானமங்கலத்தார் என்று வழங்கப்பெறும் தொன்மை வாய்ந்த ஆமாத்தியர் வேதியர் குலத்தில் வந்தவர் **சம்புபாதாசிருதயர்**; இவர் வாழ்க்கைத் துணைவியார் **சிவஞானவதியார்**. இப்பெயர்களைத் திருப் பெருந்துறைப் புராணத்தால் அறிய முடிகின்றது. இவர்களின் தவப்பயனாலும் இறையருளாலும் ஒரு மகன் பிறக்கின்றார். இவர் பிறப்பைப் பற்றிப் பரஞ்சோதியார்,

**ஆயவளம் பதியதனின்**
**அமாத்தியரில் அருமறையின்**
**தூயசிவா கமநெறியின்**
**துறைவிளங்க வஞ்சனையான்**
**மாயன்இடும் புத்தஇருள்**
**உடைந்தோட வந்தொருவர்**
**சேயஇளம் பரிதியெனச்**
**சிவனருளால் அவதரித்தார்.**[2]

என்று கூறுவர். வேத நெறியும் சிவாகம நெறியும் விளங்குவதற்காகவன்றி புறச்சமயமாகிய 'புத்த இருள்' சிதறி ஓடுவதற்காகவும் இப்பிள்ளை அவதரித்திருப்பதாகச் செப்பி இருப்பது காண்க. இப்பிள்ளைக்குப் பெற்றோர் இட்ட பெயர் '**திருவாதவூரர்**' என்பது. 'திருவாதவூரர் எனுந் திருநாமம் தரித்தார்கள்' என்று திருவாதவூரடிகள் புராணத்தில் கடவுண்மாமுனிவர் கூறுவதால் அறியலாம். '**ஆரூரர்**' என்ற பெயர் திருவாரூரில் கோயில் கொண்டருளிய சிவபெருமானுக்குரிய பெயர். இத்திருப்பெயர் திருநாவலூரில் தோன்றிய சுந்தரமூர்த்திக்கு இடப்பெற்று

2. பரஞ்சோதி. வாதவூரடிகட்கு ...4.

வழங்கினமை போன்று, 'திருவாதவூரர்' என்ற திருப் பெயரும் (திருவாதவூரிலுள்ள இறைவன் பெயர்) அடிகட்குப் பெற்றோரால் இடப் பெற்று வழங்கியதாகக் கருதுதல் பொருந்துமல்லவா?

நம்பி திருவிளையாடல் சிவகணத்தலைவர் ஒருவர் இவர்கட்கு மகனாகப் பிறந்தார் என்று செப்புகின்றது. திருப்பெருந்துறைப் புராணப்படி சம்புபாதாசிருதயர் தம் மனைவியார் சிவஞானவதியாருடன் சிவபெருமானை வழிபட்டுப் புத்த சமயக் குறும்பினைப் போக்கவல்ல மகன் ஒருவனைத் தந்தருள வேண்டுமெனக் குறையிரந்து வேண்டு கின்றார். இவரது வேண்டுகோளை நிறைவேற்றத் திருவுள்ளங் கொள்ளுகின்றார் கண்ணுதல் அப்பன். ஆகமப் பொருளை அறிவுறுத்தல் வேண்டுமெனக் கேட்ட சிவகண நாதர் ஆயிரவர், சிவபெருமான் கட்டளைப்படி திருஉத்தர கோசமங்கை[3] என்னும் திருத்தலத்தை அடைந்து

3. **உத்தரகோசமங்கை :** இத்தலம் இராமநாதபுரத் திற்குத் தென்மேற்கில் 5 கல் தொலைவில் உள்ளது. இதற்கு மூவர் பாடல் இல்லை. மாணிக்கவாசகர் மட்டிலுமே பாடியுள்ளார். ஒரு காலத்தில் இத் தலம் பாண்டியரின் தலைநகராக இருந்தது. இப்போது இஃது ஒரு சிற்றூர். கோயில் ஒன்றே சிறப்பு. சுவாமி மங்களேசுவரர்; தலப்புராணம் ஊர்ப் பெயர் பற்றிக் குறிப்பிடுகின்றது. ஒரு சமயம் சிவபெருமான் பார்வதி தேவிக்கு வேத மந்திரத்தை உபதேசிக்கின்றார். மீண்டும் கேட்கும்போது அவள் மறக்கின்றாள். சினங்கொண்ட சிவபெருமான் பூவுலகில் **புகலூர்** என்னும் தலத்தில் அவதரிக்கு மாறு சபிக்கின்றார். தாமும் ஓர் அந்தணராகப் பிறந்து பார்வதியை மணக்கின்றார். மீண்டும் வேத மந்திரோபதேசம் செய்கின்றார். உத்தரம் - விடை; கோசம் - வேதம். இத்தலத்தில் நடராசர் கோயில் தனியாக உள்ளது. மணிவாசகப் பெருமான் நீத்தல் விண்ணப்பம் பாடியது இத்தலத்தில்தான்.

சிவபெருமானை வழிபட்டிருக்க சிவபெருமானும் ஓர் அந்தணர் வடிவில் அங்கு எழுந்தருளி ஆகமப் பொருளை உபதேசிக்கின்றார்.

இந்நிலையில் இந்திரன் பலவித அணிநலங்களுடன் உலா வருகின்றான். கணநாதர்களில் ஒருவர் உலாக்காட்சியில் கருத்தைச் செலுத்தி உபதேசத்தில் கவனமின்றி இருக்கின்றார். இதனால் அவரைப் பூவுலகில் பிறந்து விரும்பிய செல்வமெல்லாம் எய்தப் பெற்றுப் பின்னர்த் தம்மை அடையுமாறு பணிக்கின்றார் பரமன். தாமும் ஒரு குருவாக எழுந்தருளி அவரை ஆட்கொள்வதாகவும் தேற்றுகின்றார் இந்தக் கணநாதரே திருவாதவூரில் சம்புபாதாசிருதருக்கும். சிவஞானவதியார்க்கும் சற்புத்திரனாகப் பிறந்தருளுகின்றார்.

திருவுத்தர கோசமங்கைப் புராணத்தில் மாணிக்க வாசகரின் முன்னைய பிறப்பின் வரலாறு குறிப்பிடப்பெறுகின்றது. திருவுத்தர கோசமங்கைத் திருக்கோயிலின் தென் மேற்குத் திசையில் முற்றுணர்வுடைய முனிவர் ஆயிரவர் சிவபெருமானை நோக்கித் தவம் புரிகின்றனர். இறைவன் அவர்கட்கு முன்தோன்றி, 'நாம் மண்டோதரிக்கு அருள் செய்தற் பொருட்டுத் தென்னிலங்கை செல்லுகின்றோம். நீவிர் இவ்விடத்திலேயே இருமின்' என்று கூறி தம்மிடத்திலிருந்த அரும்பெரும் நூலாகிய திருமுறையை முனிவர்களிடம் தந்தருள்கின்றார். முனிவர்கள் இறைவனை நோக்கி 'தாங்கள் இரக்கம் என்ற ஒன்று இல்லா அரக்கர்கள் வாழும் இடத்திற்குச் செல்லுதல் தகுமா?' என்று வினவுகின்றனர். அதற்கு இறைவன்,'இராவணன் நம் திருமேனியைத் தீண்டும் பொழுது இங்குள்ள பொய்கையின் நடுவே ஒரு தீப்பிழம்பு தோன்றும்' என்று கூறி இலங்கை செல்லுகின்றார். அங்கு மண்டோதரியின் மாளிகைக்கு இராவணன் வருகின்றான். சிவபெருமான் இளங்குழவியாக உருமாறுகின்றார்.

இராவணன் மண்டோதரியை நோக்கி ''இக்குழந்தை எங்கிருந்து வந்தது?'' என்று வினவ, அவள் ''ஒரு தவ முதுமகள் என்னிடம் தந்து போயினள்' என்று கூறுகின்றாள். இராவணன் வனப்பு மிக்க அக்குழந்தையை வாரி எடுத்து அன்புடன் தன்மார்புடன் அணைத்துக் கொண்டு பின்னர்த் தன் மடிமீது அமர்த்திக் கொள்ளுகின்றான்.

இந்நிலையில் உத்தர கோசமங்கையின் திருக்குளத்தில் இறைவன் முற்கூறிய வண்ணம் தீப்பிழம்பு தோன்றுகின்றது. அப்பொழுது முனிவர்கள் அனைவரும் மனநடுக்கமுற்றுத் தீயில் பாய்ந்து மறைகின்றனர். ஆண்டில் இளையவரும் அறிவில் முதியவருமான **மணிவாசகர்** இறைவன் தந்தருளிய திருமுறையைக் காக்கும் பொருட்டு நெடுநாள் அப்பொய்கைக் கரையிலேயே தங்கியிருக்கின்றார். பார்வதி தேவியார் ஒரு தவமுதுமகள் வடிவத்துடன் மண்டோதரி மாளிகையை அடைந்து குழந்தையைப் பெற்றுத் திரும்புகின்றார். இறைவன் பொய்கைக் கரையை அடைந்து தீயிற்புகுந்த முனிவர்கட்கு அருள்பாலிக்கின்றார். திருமுறையைப் பாது காத்து நிற்கும் மணிவாசகரை நோக்கி, 'அன்பனே, நீ நாம் கோயில் கொண்டிருக்கும் தலங்கள் தோறும் சென்று எம்மைப் பாடிப் போற்றுக. யாமே ஒரு தலத்தில் நின்னை ஆட்கொண்டு மும்மலங்களை (ஆணவம், கன்மம், மாயை) களைந்து நினக்கு ஈறிலாப் பேரின்பமாகிய வீடு பேற்றினை அளிப்போம்' என்று அருள் செய்து மறைந்தருள்கின்றார். இஃது இப்புராணத்தில் கூறப்பெற்றுள்ள மணிவாசகரின் முன்னைப் பிறப்பின் வரலாறு.

**வளர்ப்பும் கல்வி கற்றலும் :** தவத்தினால் பெற்ற அருமைக் குழந்தையை அன்புடன் வளர்க்க, அது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகின்றது. பள்ளிப் பருவம் வந்தெய்துகின்றது. ஐந்து வயதில் எழுத்தறிவிக்கப் பெறுகின்றது. குழந்தை வளர்ப்பில்

பெற்றோர் தம் உணர்வு நிலையிலிருந்து எழுந்து அறிவு நிலையில் நின்று தம் கடமையை ஆற்றுதல் வேண்டும். இதில் தந்தையின் கடமை பெரிது. தன் மகன் கல்வி கேள்வி பெற்று வளர்வதற்கேற்ற வாய்ப்புகளைத் தந்தை தேடித் தரவேண்டும். இந்த வாய்ப்புகளைப் பெற்று மகன் அறிவுடையவனாய் வளர்ந்து அறிஞர் கூட்டத்தில் முன் நிற்கும் படியாகச் செய்தல் வேண்டும். இதுவே தந்தை மகனுக்குச் செய்ய வேண்டிய நல்ல கடமையாகும்.

தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.[4]

என்பது வள்ளுவம். சம்புபாதாசிருதயர் இதை நன்கு உணர்ந்தவராதலால் தன் செல்வனின் கல்வியில் அதிக அக்கறை செலுத்துகின்றார். கண்ணன் சாந்தீபினி முனிவரிடம் கல்விகற்றபோது சகல கலைகளையும் இரண்டே திங்களில் கற்றதாகக் கூறுவர். அவர் பரந்தாமனின் அவதாரமாதலால் அஃது அவருக்குச் சாத்தியமாயிற்று. ஆனால் வாதவூரர் 16ஆண்டு நிரம்புவதற்கு முன் கற்க வேண்டிய அனைத்தையும் கற்றுத் தெளிகின்றார்.

**நீர்வாய இளமதிபோல்**
**நிரம்புவார் வேதமுதல்**
**பார்வாயெண் ணெண் கலையும்**
**பதினாறாண் டினிற்பயின்றார்.[5]**

[நீர்வாய - குளிர்ந்த; பார்வாய் - புவியின்கண்; எண்ணெண் கலை - 64 கலைகள்]

''ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்'' பதினாறு வயதிற்குள்ளாகவே கற்றுத் தெளிந்தார் என்று கூறுவர் பரஞ்சோதி முனிவர்.

4. குறள்-67.
5. பரஞ்சோதி: திருவிளையாடல்- வாதவூரடிகட்கு...5.

வாதவூரரின் கல்வி ஆற்றல் முதலியவை எங்கும் பரவுகின்றன. அக்காலத்தில் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த அரிமர்த்தன பாண்டியன் செவிக்கும் எட்டுகின்றன. எப்படியாவது அவரைத் தன் அமைச்சராக்கிக் கொள்ளக் கருதுகின்றான் மன்னன். உடனே உடைவாள் தரித்த சேவகன் ஒருவன் மூலம் ஓலை அனுப்பிவைக்கின்றான். அதில் சம்புபாதாசிருதயர் தாமதமுமின்றித் தம் அருமந்த மகனை அரசவைக்கு அனுப்பிவைக்கின்றார் அரசன் அனுப்பி வைத்த பல்லக்கில். பெற்றோரும் உறவினரும் வாழ்த்த, ஊர்ப் பெருமக்கள் மகிழ்ச்சிப் பெருங் கடலில் திளைக்க, வாதவூரர் மதுரைக்குப் புறப்படுகின்றார்.

**மகன்தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை**
**என்நோற்றான் கொல்லெனும் சொல்.**[6]

என்ற குறள் சிலரது வாயில் ஒலிக்கின்றது.

பெற்றோர் தம் மக்களைப் பொருள் நிறைந்தவர்களாகச் செய்வதைவிட அறிவு நிறைந்தவர்களாகச் செய்வதே சிறப்பு. செல்வத்தைக் கண்டு பெற்றோர் மட்டிலும் மகிழலாம்; ஆனால் மக்களிடம் அறிவு நிறைந்திருந்தால் பெற்றோரும் மகிழலாம்; உலகோரும் மகிழலாம். உண்மையாக நோக்கினால், தம் மக்கள் அறிவுடையவர்களாக இருப்பது தம்மைவிட உலகத்தார்க்குப் பெருமை தருவதாகும். இதனால் மக்களுக்கு உரிய கடமையைச் செய்வதோடன்றி, உலகத்தாருக்கும் கடமை செய்வதாக முடியும்.

**தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லாம் இனிது.**[7]

6. குறள் - 70
7. ஷை-68.

என்பது வள்ளுவம் அன்றோ? மணிவாசகரின் வாழ்க்கை வள்ளுவரின் உண்மையுடன் ஒட்டியே செல்லுகின்றது.

வாதவூரடிகள் வரலாற்றை அறிவிக்கும் தமிழ் நூல்கள்: (1) செல்வி நகர் பெரும்பற்றப் புலியூர் நம்பி பாடிய திருவாலவுடையார் திருவிளையாடற் புராணம் (13-ஆம் நூற்றாண்டு), (2) பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணம் (17-ஆம் நூற்றாண்டு), (3) கடவுண் மாமுனிவர் இயற்றிய திருவாதவூரடிகள்புராணம், (4) திருவுத்தரகோச மங்கைப் புராணம், (5) கடம்பவன புராணம், (6) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடிய திருப்பெருந்துறைப் புராணம் முதலிய தலபுராணங்களாகும். சிலவற்றில் சுருக்கமாகவும், சிலவற்றில் விரிவாகவும் அடிகளாரின் வரலாறு விளக்கப்பெற்றுள்ளது. இவை யாவும் அடிகளார் வாழ்ந்த காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர்த் தோன்றியவையாதலின் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கூறும்முறையில் இவற்றிடையே சிற்சில வேறுபாடுகள் காணப்பெறுகின்றன. ஒவ்வொருவரும் தம் கற்பனையை விரித்துக் கொண்டே போயுள்ளனர். தவிர, நம் நாட்டில் ஆசிரியரே தம் வரலாற்றை எழுதிவைக்கும் பழக்கமும், அக்காலங்களில் வாழும் வேறு சிலர் இப்பெரியார்களைப் பற்றிய குறிப்புகளையாவது எழுதி வைக்கும் மரபும் இல்லாதது பெருங்குறை. ஆயினும் அடிகளாரின் நூல்களில் இலைமறைகாய்களாக சில குறிப்புகள் காணப்பெறுகின்றன. ஆங்கிலேயர் ஆட்சியில்தான் வரலாற்றுணர்ச்சி நம்மவரிடம் தோன்றியது; இன்று அது வளர்ந்தும் வருகிறது.

## 2. அமைச்சர் வாழ்வு

வாதவூரடிகட்கு மதுரையில் நல்ல வரவேற்பு. பல மரியாதைகளுடன் அரசன் வரவேற்கின்றான். வரிசைகள் பல நல்கி 'தென்னவன் பிரம்மராயன்' என்ற விருதையும் அளித்துத் தன் ஆட்சியில் அமைச்சராகவும் ஆக்கிக் கொள்ளு கின்றான். இதனைத் திருவாதவூரடிகள் புராணம்,

**தென்னவன் பிரம ராயன்**
**என்றருள் சிறந்த நாமம்**
**மன்னவர் மதிக்க நல்கி**
**வையகம் உய்வ தாக**
**மின்னவ மணிப்பூண் ஆடை**
**வெண்மதிக் கவிகை தண்டு**
**பொன்னவிர் கவரி வேழம்**
**அளித்தனன் பொருநை நாடன்**
[பொருநை நாடன் - பாண்டியன்]

என்று குறிப்பிடுகின்றது.

அமைச்சர் பதவி எளிதானது அன்று. தலைவனுக்குத் தக்க வழிகளை ஆராய்ந்து கூறவல்லவரே சிறந்த அமைச்சராவார். அறம் அறிந்து, கல்வியால் நிறைந்து, அமைந்த சொல்லுடையவராய், எக்காலத்திலும் செயல் ஆற்றும் திறனுடையவராக இருப்பவரே சிறந்த அமைச்சராகத் திகழ முடியும். இயற்கையான அறிவு நுட்பம், நூல்களைக் கற்றறிந்ததால் கிடைக்கும் அறிவுக் கூர்மை என்ற இருவகை

அறிவும் பெற்றவர்கட்கு மிக அரியது, முடியாதது என்பது ஒன்றில்லை; எல்லாவற்றையும் எளிதில் முடிக்கும் திறமை அமைந்துவிடும். வாதவூரர் அமைச்சரான பிறகு பாண்டியனின் ஆட்சி அல்லல் இன்றிச் சிறப்புடன் நடைபெற்றது. எதிர்பாராமல் கிடைத்த இப்பணியைத் தெய்வப்பணியாக நடத்தினார். புதிதாக அமைந்த போகத்தால் வாதவூரருக்குத் துளிகூட இறுமாப்பு ஏற்படவில்லை; தற்பெருமையும் கொள்ளவில்லை. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றைப் பெரிதாகக் கருதிச் செங்கோல் சிறப்புற நடைபெற வேண்டிய அனைத்தையும் குறைவறச் செய்தார். மக்கட்கு நேரிடும் இடுக்கண்களைத் தீர்த்தார். நாட்டில் ஏற்படும் பஞ்சம் நீங்க அறச்சாலைகள் அமைய ஏற்பாடுகள் செய்தார்.

> **தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்**
> **சொல்லலும் வல்ல தமைச்சு[1]**

என்ற வள்ளுவர் காட்டும் ஒளியில் காரியங்களை ஆராய்ந்து செய்தார்; அவை திறனுடன் முடியும் உபாயங்களை மேற்கொண்டார்.

> **செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ(டு)**
> **எய்த உணர்ந்து செயல்[2]**

என்ற குறள் விளக்கு நல்வழிகளைக் காட்டியது. கண்ணும் கருத்துமாக அரசியலில் தன்னை உட்படுத்திக் கொண்டார். இவர் அமைச்சராய் நின்று செயலாற்றியதை,

> **அண்ணலரி மருத்தனுக்(கு)**
> **அடல்வாத ஓர்அமைச்சர்**
> **கண்ணுமிகு கவசம்போல்**
> **காரியம்செய் தொழுகுவார்**

---

1. குறள் - 634 (அமைச்சு)
2. ஷை - 516 (தெரிந்துவினையாடல்)

தண்ணளிசெய் தவனியெலாம்
தன்கிளைபோல் குளிர்தூங்க
வண்ணமதிக் குடைநிழற்றி
முறைசெய்து வாழுநாள்.[3]

என்று காட்டுவார் பரஞ்சோதி முனிவர். நன்னெறியில் செலுத்தலால் அரசனுக்குக் கண்ணாகின்றார்.தெய்வத்தால் வரும் ஏதங்களைச் சாந்தியாலும் மக்களால் வரும் இடையூறுகளை நால்வகை உபாயங்களாலும் பாதுகாத்த லால் அரசனுக்குக் கவசம் போலாகின்றார்.

இயல்பாகவே சமய நெறியில் சார்ந்து நிற்கும் இவருக்கு மதுரைச்சூழ்நிலை சாதகமாக அமைந்து விடுகின்றது. மதுரை யின் புகழுக்குத் தமிழ்ச் சங்கமும், மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயிலும்தான் முதற்காரணம் என்பதை நாம் அறி வோம்.மீனாட்சி அம்மன் கோயிலின் மிகப் பெரிய வானளாவ நிற்கும் ஒன்பது கோபுரங்களும், அவற்றின்மீது புராணக் கதைகளையெல்லாம். விளக்கும் பாங்கில் கொத்துக் கொத்தான அழகிய சிற்ப வடிவங்களும், கோயிலுக்கு உள்ளே அமைந்த உறுதியான கற்றூண்களும் அவற்றில் கைபுனைந்தியற்றிய அற்புதமான சிற்பவடிவங்களும், பண்டைத் தமிழரின் கலைச்சிறப்பையும் நாகரிக முதிர்ச்சி யையும் பறைசாற்றிக் கொண்டுள்ளன. இவையெல்லாம் தென்னவன் பிரம்மராயரின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்திருக்க வேண்டும். மதுரையில் அமைதியாக இருந்து கொண்டு மீனாட்சியம்மனையும் சொக்கலிங்கப் பெருமானை யும் வழிபடுவதற்குத் தம் அமைச்சர் பதவியால் சந்தர்ப்பம் வாய்த்ததற்கு அவர் மனம் உள்ளூற மகிழ்ச்சிப் பெருக்கால் திளைத்திருக்க வேண்டும். நாடோறும் தவறாமல் அம்மை யையும் அப்பனையும் வழிபட்டு வருகின்றார் வாதவூரடிகள்.

---

3. பரஞ்சோதி - வாதவூரடிகளுக்கு...9

இதைத்தவிர, மதுரையில் தமிழாராய்ந்த புலவர் கூட்டமும், வாதப்போர் புரியும் தருக்க சங்கங்களும், சமய வாதிகளின் உறவும் வாதவூரரின் கவனத்தை ஈர்க்கின்றன. மதுரையில் பண்டைக் காலத்தில் ஒரு பெரிய கல்விக்கழகம் இருந்தது. அது **தமிழ்ச்சங்கம்** என்ற பெயரால் வழங்கி வந்தது. மூன்று தமிழ்ச் சங்கங்கள் இருந்து வந்தனவாக இறையனார் களவியலுரையால் அறிய முடிகின்றது. இது தவறு என்று கூறுவோரும் உளர். எனினும் மதுரைக்கும் தமிழுக்கும் நெருங்கிய உறவு உண்டு என்பதை எவரும் மறுக்க முடியாது. இடை இடையே வெள்ளப்பெருக்கும் பஞ்சமும் தோன்றி மக்கள் வாழ்க்கையை மிகவும் சீர் குலைத்துவிட்ட படியால் தமிழ்ச் சங்கமும் காலந்தோறும் தோன்றுதல் அழிதல் என்ற செயலுக்கு உட்பட்டுவந்தது. மூன்றாவது சங்கம் (கடைச் சங்கம்) மறைந்த பின்னரும் சங்கப் புலவர்களின் வழிவந்தோர் தமிழை வளர்த்து வந்தனர். கவிதைகள் எழுதுவதிலும் காவியம் படைப்பதிலும் ஈடுபட்டிருந்த புலவர் பெருமக்கள் சமயவாதங்களிலும் அளவை நூல்களிலும் ஈடுபடத் தொடங்குகின்றனர். இக்காலத்தில்தான் தென்னாட்டில் பௌத்த சமயத்துக்கும் சமண சமயத்துக்கும் தீவிரமான பிரசார இயக்கங்கள் தோன்றியிருந்தன. வாதவூரர் மதுரைக்கு வந்து பணியில் அமரும்பொழுது எம்மருங்கும் இந்நிலையைக் காண்கின்றார். இதனை,

**ஆத்த மானார் அயலவர் கூடி**
**நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்**

**......................................**

**சமய வாதிகள் தத்தம் மதங்களே**
**அமைவ தாக அரற்றி மலைந்தனர்**
**மிண்டிய மாயா வாதம் என்னும்**
**சண்ட மாருதம் சுழித்தடித் தாஆர்த்(து)**

உலோகா யதனெனும் ஒண்டிறல் பாம்பின்
கலாபே தத்த கடுவிடம் எய்தி
அதிற்பெரு மாயை எனைப்பல குழவும்[4]

என்ற பாடற்பகுதியில் குறிப்பிடுவதாகக் கருதலாம்.

வாதவூரர் மதுரையில் அமைச்சராயிருந்த பொழுது சமண் சமயவாதிகளும் புத்த பிட்சுகளும் தத்தம் சமய வாதங்களைப் புரிந்து கொண்டும், சைவசமய உண்மைகளைக் கடிந்து கொண்டும், சிவநிந்தனை புரிந்து கொண்டும் வருவதைக் காண்கின்றார். அந்தப் பரசமயவாதிகளின் கூற்றுகளும் வாதவூராரின் உள்ளத்தைப் புண்படுத்துகின்றன.

அத்தேவர் தேவர் அவர்தேவர் என்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே.[5]

உண்மையான முழுமுதற் கடவுளாகிய தேவனைக் காட்டித் தரும் ஒரு சற்குருவை நாடி நிற்கின்றது அவர்மனம். அமைச்சருக்கு ஆட்சிமுறைபற்றிய அல்லல் சிறிதும் இல்லையெனினும் உலகவாழ்வும், வாழ்விற்காணும் பெரும்போகமும் நிலையற்றன என்பதை உணர்கின்றார்; வாழ்க்கையில் உவர்ப்புத் தோன்றுகின்றது. கூத்தினர் தன்மையும் கோலமும் வேறு வேறு ஆமாறு போல் இவர் மேற்கொண்டிருக்கும் அமைச்சர் பதவிக்கும் அன்புகனிந்த அகப்போராட்டத்திற்கும் சிறிதும் தொடர்பற்ற நிலை உருவாகிக் கொண்டே வருகின்றது. இந்நிலையைப் பரஞ்சோதி முனிவர்,

மெய்ம்மை யாம்பொருள் விவேகமும்
வேறுபா டாய
பொய்ம்மை யாம்பொருள் விவேகமும்
புந்தியில் தோன்ற

4. திருவா - போற்றித் திருவகவல்-அடி 46, 47; 52-58.
5. திருவா. திருக்கோத்தும்பி-5.

**இம்மை யாசையும் மறுமையில்**
**ஆசையும் இகந்து**
**செம்மை யாகிய கருத்தராய்ப்**
**பரகதி தேர்வார்.[6]**

[விவேகம் - உணர்ச்சி; புந்தி - உள்ளம்; இகந்து - நீங்கி; பரகதி - வீடடையும் நெறி]

என்று காட்டுவர். ஈண்டு மெய்ம்மையாம் பொருள் என்பது நித்தியப்பொருள்; தனக்கோர் ஆக்கக் கேடுகளின்றிச் சுட்டறிவிற் படாது நின்ற சத்துப் பொருளாகும் இது பொய்ம்மையாம்பொருள் என்பது, அநித்தியப் பொருள்; ஆக்கக் கேடுகள் உடையதாய்ச் சுட்டறிவிற்கு எட்டி நிற்கும் அசத்துப் பொருள். இம்மை மறுமை இன்பங்கள் இந்திரசாலம் போலத் தோன்றும்போதே இலவாதலும், கனவு போல முடிவு போகாது இடையே அழிதலும், பேய்த்தேர் போல ஒரு காரணம் காட்டி நிலைபெறாமையும் உடைமையால் இந்த இரண்டின்பாலும் உள்ள ஆசை கழன்று போகின்றது. செம்மையாகிய கருத்தராய் என்பது சிவபுண்ணிய முதிர்ச்சியால் இருவினை யொப்புடையராகி விடுகின்றார் என்பதைக் காட்டுகின்றது.

நாடோறும் மதுரையைச் சுற்றிப் பார்க்கும்போது ஏழைகள் படுந்துன்பங்கள் இவர் கண்ணில் படுகின்றன. அவற்றைத் துடைத்து அவர்கட்கு உதவுகின்றார். பிறப்பு, இறப்பு வட்டங்கள் அவர் சிந்தையில் உதயமாகின்றன. உயிர்களின் பல்வேறு பிறப்பு வட்டங்கள், அவற்றின் பல்வேறு தோற்றங்கள், அவை நுகரும் இன்ப துன்பங்கள் இவற்றைப் பற்றிச் சிந்திக்கின்றார். பிறப்பு, இறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு மாக இருக்கும் இந்த வாழ்க்கை வட்டத்தைப் பற்றியும் சிந்தனை எழுகின்றது.

---

6. வாதவூரடிகளுக்கு-10.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்[7]

என்ற பகுதியில் உயிர்கள் மாறி மாறிப் பிறந்துழலும் நிலையைச் சிந்திக்கின்றார். இதில் டார்வின் சித்தாந்தமும் பிரதிபலிப்பதைக் காணமுடிகின்றது.

இங்ஙனம் உள்ளத்தில் எழும் உணர்வுகளின் போராட்டத்துடன் வாழ்ந்து வரும் வாதவூரர் மதுரையில் உள்ள பெரும் புலவர்களைச் சந்திக்கச் செய்து அவர்களுடன் ஆராய்கின்றார்; சமண முனிவர்களுடன் வாதாடுகின்றார்; புத்த பிட்சுகளுடன் உசாவி அறிகின்றார்; ஆனால், இச்செயல்கள் எல்லாம் அவருக்கு மனநிறைவு தரவில்லை; தக்க விடைகளைக் காண முடியவில்லை. உயிர்களின் பிறவித்துன்பத்தைப் போக்கவல்ல மருந்து இதுதான் என்று காட்டவல்ல சற்குரு ஒருவராவது தென்படவில்லை.

உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம்
சவலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறும்[8]

"இப்பொழுதாவது ஓர் உண்மையான ஞானாசிரியர் கிடைக்க மாட்டாரா? பிறவித் துன்ப இருளைப் போக்கும் ஞான விளக்கு ஒளி என்று கிடைக்கும்மோ?" என்று ஏங்கிக் கிடக்கின்றார். ஆனால் நாடோறும் மீனாட்சி அன்னையாரையும் சொக்கலிங்கப் பெருமானையும் தவறாது வழிபட்டு வருகின்றார். இவர்களைத் தவிரத் தம்மை ஈடேற்றவல்ல வேறுகதி தமக்கு இல்லை என்ற மனஉறுதியுடன் தெளிந்த

7. திருவா. சிவபுராணம்–அடி 26-31.
8. ஷை - திருத்தெள்ளேணம்-17.

சிந்தையராய், 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற நம்பிக்கையுடையவராய்க் காலம்கழித்து வருகின்றார். இதனை,

என்றவ் வாதவூர் மறையவர்
இன்பவீ டெய்தத்
துன்றும் ஆசையால் தொடக்குண்டு
சுருதிஆ கமநூல்
ஒன்று கேள்வியோர் வருந்தொறும்
உணர்ந்தவர் இடைதாம்
சென்று காண்டொறும் அளவளாய்த்
தேர்குவார் ஆனார்[9]

என்று கூறுவர் பரஞ்சோதியார். இதனையே வாதவூரடிகள் புராணம்,

வளங்கெழு புவியி லுள்ள
வாவியும் காவும் ஓடி
விளங்கிசை வண்டு தண்டேன்
மிகுமலர் தேடு மாபோல்
உளங்கொள நிமலன் என்னும்
ஓதினர் உண்மை யெல்லாம்
அளந்தறி உணர்ந்த நீரார்
யாவர்என்(று) ஆயும் நாளில்

என்று அழகாக விரித்துரைக்கும். வண்டுகள் பலஇடங்கட்குச் சென்று தேனைத் தேடுவதுபோல் வாதவூரர் அறிஞர்களை நாடி அலைகின்றார் சற்குரு வாய்ப்பர் என்று கருதி. கடலின் உவர்நீர் உண்டால் விடாய் தணியாது. மிகுதல் போல,

---

9, வாதவூடிகளுக்கு-15.

இவருக்கும் அமைதியுண்டாகாது உண்மையுணரும் வேட்கை மிகுவதாகின்றது என்கின்றார் பரஞ்சோதியார்.[10] இந் நிலையில்,

**சாத்திரத்தை யோதினர்க்குச் சற்குருவின் தன்வசனம்**
**மாத்திரத்தே வாய்க்குநலம் வந்துறுமே—ஆர்த்த கடல்**
**தண்ணீர் குடித்தவர்க்குத் தாகம் தணிந்திடுமோ**
**தெண்ணீர்மையாய் இதனைச் செப்பு.**

என்ற திருக்களிற்றுப்படியாரின் செய்யுள் நினைவுக்கு வருகின்றது.

**குதிரைகள் வாங்கச் செல்லல் :** ஒரு நாள் பாண்டியன் அவையில் வீற்றிருக்கும்பொழுது குதிரைத் துறைக் காவலர்கள் சிலர் வந்து அரசனைப் பணிந்து நின்று, "அரசர் ஏறே, நம் சேனையைச் சேர்ந்த குதிரைகளில் பெரும்பாலானவை பல நோய்களால் மரித்துப் போயின. எஞ்சியுள்ள சிலவும் மெலிவுற்று இறக்கும் நிலையிலுள்ளன. நம் குதிரைப் படையில் ஒரு நூறாயிரம் குதிரைகளேனும் இருத்தல் இன்றியமையாதது" எனத் தெரிவிக்கின்றனர். அரசனும் தென்னவன் பிரமராயரை நோக்கி, "அமைச்சர் தலைவரே, நம் குதிரைத் துறைப் பொறுப்பாளர்கள் குதிரைகள் யாவும் நோயால் இறந்து பட்டவனாகக் கூறிச் சென்றனர். குதிரை இலாயத்திலும குதிரைகள் மாறிப் பன்னெடு நாட்களாயின. திருப்பெருந்துறையில் குதிரைகள் ஈழத்து வழியாக வந்திறங்கி இருப்பதாகத் தூதுவன் கூறுகின்றான். நீரோ உத்தம இலக்கணம் பொருந்திய குதிரைகளை வாங்குவதில் சதுரர் என்பதை நான் அறிவேன். நம் அரசுக் கருவூலத்தில் வேண்டுமளவு பொருள்களை எடுத்துக் கொண்டு குதிரைகள் வந்திறங்கும் இடம் சென்று சிறந்த குதிரைகளை வாங்கிக் கொணர்வீர்களாக" எனப் பணிக்கின்றான்.

---

10. வாதவூரடிகளுக்கு— 16.

அமைச்சரும் அரசன் சொல்லுக்கு எதிர்ச்சொல் ஒன்றும் கூறாமல் நிதியறையில் வேண்டிய பொருள்களை எடுத்துக் கொள்கின்றார். கணக்கிலும் பதிவு செய்கின்றார். பொருள் களைப் பெட்டகத்தில் கட்டி நம்பிக்கைக்குரிய ஏவலாளர் களிடம் ஒப்புவித்துப் பயணப்படுத்துகின்றார். தானும் திரு ஆலவாய் திருக்கோயிலை அடைந்து அங்கயற்கண்ணியொடு அமர்ந்துள்ள ஆலவாய் இறைவனைப் பணிந்து, "பெருமானே, குதிரை வாங்கச் செல்லும் என் பயணம் இடையூறின்றி இனிது நிறைவேற அருள் புரிவாயாக" என வேண்டி விடை பெற்றுச் செல்கின்றார்.

அரச மரியாதையுடன் பயணம் தொடங்குகின்றது. சிறப்புடன் அணி செய்யப்பெற்ற முத்துச் சிவிகை, குடை, கொடி, ஆலவட்டம் முதலிய விருதுகள், மெய்காப்பாளர்— என்ற முறையில் அரச மரியாதை நடைபெறுகின்றது; அரசனே நேரில் வந்து அமைச்சரை வழியனுப்பி வைக் கின்றான். இதனைப் பரஞ்சோதி முனிவர்,

> **இன்னிய மதிர்ந்தன எழுந்தன பதாதி**
> **துன்னிய விணைக்கவரி துள்ளின துகிர்க்காற்**
> **பொன்னியன் மதிக்குடை நிழன்றன பொலங்கொள்**
> **மன்னிய மணிச்சிவிகை மேற்கொடு நடந்தார்**[11]
>
> [பதாதி - கொடி; இணைக்கவரி - இரட்டைச் சாமரை கள்; துகிர்க்கால் - பவளக்கால்; மதிக்குடை - சந்திர வட்டக் குடைகள்]

என்று காட்டுவர். இதுதான் இவர் வாழ்வில் நடைபெறும் இறுதி மரியாதை; அரசு வாழ்வு முடிவதற்கும் செய்யப் பெறும் மரியாதை. பிரமராயரின் அமைச்சர் வாழ்வும் போகம் நுகர்ந்த இலௌகிக வாழ்வும் முடியப் போகின்றன. இந்தப் பயணமும் வாதவூரர் வாழ்வைத் திசை திருப்புவதாக அமைகின்றது. பயணமும் வாதவூரருக்குப் புதிய வாழ்வு தரப்போகும் புண்ணியப் பயணமாக அமைவதாகின்றது.

11. வாதவூரடிகளுக்கு—26.

# 3. பெருந்துறை நிகழ்ச்சிகள்

திருவாதவூரர் திருப்பெருந்துறைக்கு எந்த வழியாக வந்தார் என்பதை ஒரு புராணமும் குறிப்பிடவில்லை. இப்பொழுது ஆவுடையார் கோயில்[1] என வழங்கும் தலமே திருப்பெருந்துறையாகும். திருப்பெருந்துறை மதுரையிலிருந்து நேர்கிழக்கில் உள்ள தலம். அரசுப் பணியாக வரும் அமைச்சர் பிரமராயருக்கு எந்த விதமான தொல்லையும் இருந்திருக்காது. மெய்காப்பாளர்களும் சேவகர்களும் குதிரை மீது இவர்ந்து தம்மைச் சூழ்ந்து வர, பல்லக்கிலோ அழகான இரதம் போன்ற குதிரை வண்டியிலோ பயணம் செய்திருக்க வேண்டும். நெடுந்தொலைவுப் பயணம் செய்பவர்கள் வழியில் இடைஇடையே தடாகங்களும் சோலைகளும் உள்ள இடங்களில் தங்கி இளைப்பாறிய பின்னர்தான் மீண்டும் பயணத்தைத் தொடர்வது வழக்கமாக இருந்து வருகின்றது. இன்று மகிழ்வுந்தில் செல்பவர்கள் கூட அப்படித்தானே செல்லுகின்றார்கள்? கையில் உணவுடன் செல்லுபவர்கள் இவ்வழக்கத்தைக் கடைப்பிடிப்பர்; கையை வீசிக் கொண்டு

---

1. திருப்பெருந்துறை (ஆவுடையார் கோயில்) : இஃது அறந்தாங்கிக்குக் கிழக்கே ஏழு கல் தொலைவிலுள்ளது. இது கடற்கரையை அடுத்ததுமன்று; துறைமுகப்பட்டினமும் அன்று. உள்நாட்டிலுள்ள சிற்றூர். மாணிக்கவாசகர் காலத்தில் இது கடற்கரையை அடுத்திருந்திருக்கலாம்.

வருபவர்கள் வழியிலுள்ள ஊர்களின் உணவு விடுதிகளில் காஃபி, குளிர்பானம் பருகி இளைப்பாறும் பழக்கத்தை மேற்கொண்டிருப்பதைக் காணலாம்.

மணிவாசகப் பெருமான் சிறந்த சிவநேசச் செல்வரா தலால் அவர் வழியிலுள்ள சில தலங்களை வழிபட்டுச் சென்றிருக்கலாம் என்று கருதுவதில் தவறில்லை. மதுரை யிலிருந்து சிவகங்கைக்கு ஒரு கல் சாலை உண்டு. அந்த வழி யாகச் சிவகங்கையை அடைந்து அதனையடுத்த **காளையார் கோயில்**[2], அதற்குக் கிழக்கிலுள்ள **திருவாடானை**[3] என்றதலங் களை வழிபட்டுக் கொண்டு இதற்குச் சற்று வடக்கிலுள்ள **திருப்புனவாயிலுக்கும்**[4] சென்று அங்கிருந்து திருப்பெருந் துறையை அடைந்திருக்கலாம் என்று நாம் ஊகம் செய்யலாம். இத்தலங்களையெல்லாம் வழிபட்டுக்கொண்டு திருப்பெருந்

2. **காளையார் கோயில்** (கானப்பேர்) : நாட்டரசன் கோட்டையிலிருந்து 7 கல் தொலைவு. தேவ கோட்டை செல்லும் வழியிலுள்ளது. சுந்தரர் கனவில் காளையாகத் தோன்றித் தாம் இருப்பது 'கானப்பேர்' என்று கூறி அவரை வணங்கச் செய்து பதிகம் பெற்றபடியால் 'காளையார் கோயில்' என்ற திருநாமம் பெற்றது இத்தலம்.

3. **ஆடானை** (திருவாடானை) : காரைக்குடியிலிருந்து 32 கல் தொலைவு. பேருந்து வசதியுண்டு. தொண்டிக்குச் செல்லும் பேருந்தில் ஏறவேண்டும். ஒருமுனிவரின் சாபத்தால் ஆட்டுத்தலையும் ஆனை உடலும் பெற்ற தேவகுமாரன் ஒருவன் இங்கு வழிபட்டு மீண்டும் தேவ உடல் பெற்றதால் ஆடானை தலப்பெயராயிற்று.

4. **புனவாயில்** : அறந்தாங்கிலிருந்து 29 கல் தொலைவு, திருவாடானையிலிருந்து 12 கல் தொலைவு. இது கடற்கரைத் தலம். இத்தலத்துக் கருவறையிலுள்ள இலிங்கம் மிகப் பெரியது. ஆவுடையாரைச் சுற்றி யுடுத்த 30 முழ நீளமுள்ள பரிவட்டம் தேவை. இலிங்கத்தைச் சேவிக்கும்போது தஞ்சைப் பெரிய கோயில் பிருகதீசுவரர் நினைவுக்கு வரும்.

துறையை அடைகின்றார் அமைச்சர் வாதவூரர். தம் பரிசனங் களுடன் முகாம் அமைத்துத் தங்குகின்றார்.

இதற்கு முன்னரே, சொக்கலிங்கப் பெருமான் இருவினையொப்பையும் மலபரிபாகத்தையும் நோக்குகின்றார். இருவினைகளால் உண்டாகும் இன்ப துன்பங்கள் இரண்டையும் ஒரு படித்தாக எண்ணி வாழ்க்கையில் விருப்பு வெறுப்பின்றிப் பழகும் மனநிலையே இருவினையொப்பு என்று சித்தாந்த நூல்களில் பேசப்பெறும். இந்நிலை எய்திய உயிர்களுக்கு ஆணவமலம் கழன்றொழியும் தகுதி ஏற்படுகின்றது. இத்தகுதியினை மலபரிபாகம் என வழங்குதல் மரபு. இங்ஙனம் இருவினையொப்பும் மலபரிபாகமும் வந்து எய்திய நிலையில் உயிரினது அறிவின் கண்ணே இறைவனது திருவருள் பதியப்பெறும். இந்நிலைதான் சத்தி நிபாதம் என்று பேசப்பெறுவது. நிபாதம் - வீழ்ச்சி; சத்தி - பதிதல். இஃது இறைவன் திருவருளை நாடி உலகப் பயன் கருதாது, வீடு பேற்றை அவாவி நின்று தம் செயலற்றிருத்தலும், இறைவனை அடையும் நெறி யாதெனை ஆராய்தலும், அகத்தால் உலகத்தை முற்றும் துறந்து புறத்தே உலகியலோடு ஒத்து வாழ்தலும், அகத்தும் புறத்தும் உலகினை முற்றத் துறந்து சிவஞானம் நல்கும் அருட்குரவன் ஒருவனையே நாடித் திரிதலும் என இவ்வருட் பதிவு நான்கு வகைப்படும்.[5] இவற்றுள் நாலாம் சத்தி நிபாதமாகிய முடிந்த நிலையில் நிற்பவர் திருவாதவூரர்.

5. சத்தி நிபாதம்— மந்த தரம், மந்தம், தீவிரம், தீவிர தரம் என நான்கு வகைப்படும். அரக்கு வெயிலில் வெதும்புவது, போல்வது மந்த தரம்; மெழுகு வெயிலில் உருகுவது போல்வது மந்தம்; நெய் சூட்டில் இளகுவது போல்வது தீவிரம்; நெய் நெருப்பில் உருகுவது தீவிர தரம் என்று பேசப் பெறும். தைலம் இடையறாது ஒழுகுவது போல்வது என்றும் தீவிரதரம விளக்கப் பெறும். வைணவ சமயத்தார் பக்தியை இந்நிலைக்குஓப்பாகக் கூறுவர்.

வாதவூரரின் நிலையை நன்கு அறிந்த கண்ணுதலப்பன் தம் கருணையினால் ஓர் அந்தணத் திருமேனி கொண்டு தம் திருவடியினைப் பிரியாத 999 சீடர்களோடும் திருப்பெருந் துறையின்கண் வந்து ஒரு குருந்த மரத்தடியில் தங்கு கின்றார். இதனை,

**சந்தமறை தீண்டரிய தங்கருணை யாலோர்**
**அந்தணர் குலக்குரவ னாகியடி நீங்கா**
**மைந்தர்பலர் தம்மொடு பெருந்துறையில் வந்தோர்**
**கொந்தலர் நெருங்கிய குருந்தடி யிருந்தார்.[6]**

என்று கூறுவர் பரஞ்சோதி முனிவர். இந்நிகழ்ச்சியினை,

**அருபரத் தொருவன் அவனியில் வந்து**
**குருபர னாகி யருளிய பெருமையைச்**
**சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்**
**பிறிவினை யறியா நிழலது போல[7]**

என்றும்,

**உணக்கி லாததொர் வித்து மேல்விளை**
**யாம லென்வினை யொத்தபின்**
**கணக்கி லாத்திருக் கோல நீவந்து**
**காட்டி னாய்க்கழுக் குன்றிலே[8]**

என்றும் அடிகளே விளக்குவதைக் காணலாம்.

வாதவூரர் திருப்பெருந்துறையை நெருங்க நெருங்க அவருக்கு மகிழ்ச்சிப் பெருக்கு நிறைகின்றது என்றும், கூப்பிய கைகள் தாமாக முடியின்கண் ஏறுகின்றன என்றும், ஆனந்தக் கண்ணீர் துளிக்கின்றதென்றும் விளக்குவார் பரஞ்சோதியார். மேலும், வாதவூரரிடம் நான்காவதாகிய தீவிரதர சத்தி

6. வாதவூரடிகளுக்கு- 8
7. திருவா. போற்றித் திருவகவல்-அடி 75-78
9· ஷை திருக்கழுக்குன்றப் பதிகம்-1

நிபாதம் உண்டாக தமது உண்மையறிவினை மறைத்த மலத்தினின்றும் அஞ்சி, முன் சுமைபொறுத்தோனை ஒத்து, பின்கட்டு நீங்கியவனையும் ஒத்தார் என விளக்குவர்.[9] வாதவூரரும் ''அடியேனை நெருப்பிலிட்ட வெண்ணெய் உருகுவதுபோல நெஞ்சு உருகுமாறு உருக்குகின்ற காரணத்தால் என் அறிவினை மறைத்த ஆணவ மலத்தின் வலியினைத் தீர்ப்பவனாகி அடியேனை ஆட்கொள்ளும் கருணையங்கடல் இருக்கும் இடம் இதுவேயாகும்'' என்று எண்ணி நகரினுள் புகுகின்றார். பின்னர் திருக்கோயிலினுட் புகுந்து வலம் வரும்போது,

> **''மூலமறை யோதிமுடி யாதபொருள் தன்னைச்**
> **சீலமுனி வோர்தெளிய மோனவழி தோற்றும்**
> **கோலமுறை கின்றதோர் குருந்தை''[10]**

காண்கின்றார்.

திருத்தில்லையில் சிற்றம்பலத்தில் திருநடனம் புரியும் வடிவமும், ஆலின்கீழ் நால்வர்க்கு அறம் உரைத்த வடிவமும் குருத்திருமேனி கொண்டு இங்கு எழுந்தருளியிருக்கும் இத் திருவுருவமே என்ற உணர்வு அவர் உள்ளத்தே எழுகின்றது. குருநாதருடைய திருவடிகளில் வீழ்ந்து இறைஞ்சுகின்றார். அன்புருவாகிய அவர் இறைவனது அருளாகிய வலையில் அகப்பட்டு நெஞ்சம் உருகுகின்றார். இந்நிலையில் குருவாய் வந்தருளிய சிவபெருமான் வாதவூரர் முடிமிசைத் தம் திருவடி சூட்டித் தீக்கை செய்தருளுகின்றார் (ஸ்பர்ச தீட்சை). திருவைந்தெழுத்தையும் உபதேசித்துப் பாசத்தொடர்பை அகற்றி இன்பமே திகழும் சிவ சொருபமாக ஆக்கியருள் கின்றார். இதனைப் பரஞ்சோதியார்,

---

9. வாதவூரடிகளுக்கு-30, 31
10. ஷை-24

சூக்க மாகுமைந் தெழுத்தினில்
சுற்றிய பாச
வீக்க நீக்கிமெய் யானந்தம்
விளைநிலத் துய்த்துப்
போக்கு மீட்சியுட் புறம்பிலார்
பூரண வடிவம்
ஆக்கி னானொரு தீபகம்
போல்வரும் அண்ணல்[11]

[சுற்றிய - பந்தித்த; பாசவீக்கம் - பாசக்கட்டு; தீபகம் பார்வை]

என்று விளக்குவர். பஞ்சாக்கரம் தூலம், சூக்குமம், அதி சூக்குமம் என்று மூவகைப்படும். இங்கு 'வாதவூரருக்கு உபதேசித்தது சூக்கும பஞ்சாக்கரம். இஃது,

நானேயோ தவஞ்செய்தேன்
சிவாயநமஎனப் பெற்றேன்
தேனாயின் னமுதமாய்த்
தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம்
புகுந்தடியேற் கருள்செய்தான்.[12]

என்று அடிகளே தம் திருவாசகத்துள் அருளிச் செய்யப் பெற்றதாகக் கொள்ளப்படும். இறைவன் நோக்கிய திருவருள் நோக்கத்தினால், காய்ச்சிய இரும்பு நீரினைப் பருகினாற் போல குருநாதனையும், அக்குரவன் உபதேச மொழி அருளியதையும், தம்மை மறைத்த பாசத்தையும், தம்மையும் மறந்து விட்டு மெய்ஞ்ஞான வடிவினராய் ஒன்றனையும் அறியாத நிலையினை எய்துகின்றார். இங்ஙனம் மூன்றையும்

11. வாதவூரடிகளுக்கு-46
12. திருவா, திருவேசறவு-10

மறத்தல் ஞேயம் (அறியப்படும் பொருள்), ஞானம் (அறிவு), ஞாதுரு (அறிபவன்) என்ற மூன்றும் நழுவாமல் நழுவி நிற்றல் என்பர்.

தேனும் பாலும் கன்னலும் அமுதமாகித் தித்தித்து ஊனையும் உள்ளத்தையும் உருக்கவல்ல சிவ உணர்வு வாதவூரரது மனத்தகத்தே பொங்குகின்றது; புறத்தேயும் கசிந்து படர்கின்றது. இந்நிலையில் அவர்தம் நாவிலே ஞான வாணியாகிய கலைமகள் வந்து அமர்கின்றாள். அன்புருவாய வாதவூரர் தம் வசமிழந்து மெய்ம்மயிர் சிலிர்ப்பக் கண்ணீர் மல்க நாத்தழுதழுப்பத் தம்மையாட் கொண்டருளிய குருமணியைத் தொழுது பழுதிலாத சொற் களாகிய மாணிக்கமணிகளை வரிசைப்படுத்தி அன்பாகிய வடத்திற் கோத்து இறைவன் திருவடிகளில் பாமாலையாகச் சாத்துகின்றார். குருவாக வந்தருளிய பெருமான் '**மாணிக்கவாசகன்**' என்ற திருநாமத்தைச் சூட்டியருளு கின்றார். தீக்கை பெறும்போது ஆசாரியர் சீடருக்கு ஏற்புடைப் பெயர் வழங்கப்படும் மரபுப்படி இப்பெயர் வழங்கப் பெற்றது என்றும் கொள்ளலாம். வைணவ சமயத் திலும் பஞ்ச சம்ஸ்காரத்திற்குப் பிறகு **தாஸ்ய நாமம்** வழங்கப் பெறுவது ஈண்டு நினைவுகூரத் தக்கது. வாதவூரர் என்ற பெயரைவிட மாணிக்கவாசகர் என்ற பெயரே அன்று முதல் அடிகளுக்குச் சிறப்பாக வழங்கி வருகின்றது.

இறைவனது பொருள்சேர் புகழை விரித்துரைக்கும் திருப்பாடல்களை அடிகளே '**மணி வார்த்தை**' என்ற பெயரால் குறிப்பிட்டுள்ளதை நாம் நினைக்கின்றோம்.

**சிந்தனைநின் தனதாக்கி நாயி னேன்றன்**
**கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி**
**வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்**
**மணிவார்த்தைக் காக்கி**[13]

13. திருவா. திருச்சதகம்-26

[வந்தனை - வழிபாடு; மணிவார்த்தை - அழகிய வார்த்தை]

என்றும்,

**பேசும் பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த**
**மாசில் மணியின் மணிவார்த்தை**[14]

[இலக்கிதம் - குறியாய் அமைந்தது]

என்றும் குறிப்பிட்டுள்ளதைக் கண்டு மகிழலாம்! 'மணி வார்த்தை' என்ற தொடருக்கு 'மாணிக்கமணி போலும் வாசகம்' எனப் பொருள் கொள்வர் உமாபதி சிவம். தாம் இயற்றிய கோயிற்புராணத்தில்,

**பேசுபுகழ் வாதவூர்ப்**
**பிறந்துபெருந் துறைக்கடலுண்**
**டாசிலெழி றடித்தயர்**
**வஞ்செழுத்தால் அதிர்த்தெழுந்து**
**தேசமலி தரப்பொதுவார்**
**சிவபோக மிகவிளைவான்**
**வாசகமா மாணிக்க**
**மழைபொழிமா முகில்போற்றி**

என்று அவரே வாதவூரடிகளை இறைஞ்சிப் போற்றியுள்ளதையும் கண்டு மகிழலாம். இதன்கண் 'வாசகமா மாணிக்க மழைபொழி மாமுகில்' என்று போற்றும் முகத்தால் அவருடைய திருப்பாடல்களை 'மாணிக்கவாசகம்' என்ற பெயராலும் குறித்துப் போற்றியுள்ளமையையும் கண்டு களிக்கலாம். இதனாலும் திருவாசகத்திற்கு வழங்கிய 'மாணிக்கவாசகம்' என்ற திருப்பெயரின் அடியாகவே இத் திருமுறையை அருளிச் செய்த அடிகளுக்கு 'மாணிக்கவாசகர்' என்ற சிறப்புப் பெயரும் தோன்றி அதுவே பெருவழக்காகி

14. திருவா. பண்டாய நான்மறை.7

விட்டது என்பதையும் அறிய முடிகின்றது. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும் தாம் இயற்றியுள்ள திருப் பெருந்துறைப் புராணம் உபதேசப் படலத்தில்,

**மன்னநன் மணியே வார்த்தையாய்த் திரண்டு**
**வருமொரு காரணக் குறியால்**
**அன்னமா ணிக்க வாசக ரெனும்பேர்**
**ஆகவின் றாதியென் றறைந்தார்**

என வரும் பாடற்பகுதியில் இக்காரணத்தைத் தெளிவாக விளக்கியுள்ளதையும் நினைவுகூர முடிகின்றது.

தித்திக்கும் மணிவார்த்தை கேட்டுமகிழ்ந்த எம்பெருமான் மாணிக்கவாசகரை நோக்கி,

**தித்திக்கும் மணிவார்த்தை இன்னஞ் சின்னாள்**
**திருச்செவியில் அருந்தவும்கைச் செம்பொன் எல்லாம்**
**பத்திப்பேர் அன்பளித்துக் கவர்ந்து வேண்டும்**
**பணிகொடுபாண் டியனையிவர் பண்பு தேற்றி**
**முத்திக்கே விடுத்திடவும் புத்தை வாது**
**முடித்திடவும் திருவுள்ளம் முன்னம் எய்தி**
**எத்தித்தொண் டரைக்கருமம் சிறிதுண் டிங்கே**
**இருத்தியென உருக்கரந்தான் அடிய ரோடும்**[15]

[புத்தை - புத்தரை; தொண்டர் - வாதவூரர்; எத்தி - விரகு செய்து]

என்று கூறிவிட்டு 999 அடியார்களோடும் மறைந்தருளு கின்றார்.

குருநாதரின் பிரிவுக்கு ஆற்றாது அழுது அரற்றுகின்றார் மாணிக்கவாசகர். அரற்றிய நிலையிலும் பின்னரும் திருப்பெருந்துறையில் பல்வேறு பதிகங்களைப் பாடியருளு

15. வாதவூரடிகளுக்கு-53

கின்றார். இதனை அடுத்துவரும் இயல்களில் காண்போம். (இச்செய்தி திருவாலவுடையார் திருவிளையாடற் புராணத்தில்கண்டது). இப்போது பாண்டியனிடமிருந்து ஓலையொன்று வருகின்றது. அதன் வாசகம் : ''தென்னவன் விடுக்கும் ஓலை. தென்னவன் பிரமராயன் என்னும் நல் அமைச்சன் காண்க. கிழக்குத் துறையில் குதிரை வாங்க எடுத்துக் கொண்டு சென்ற பொருளையெல்லாம் வீண் செலவுகளில் போக்கி விட்டு கோவணத்துடன் துறவுக்கோலம் கொண்டிருப்பதாகக் கேள்வியுறுகின்றோம். உமது கடமையில் தவறியதுமின்றி அரசுக் கருவூலத்தை அடாத செயல்களில் செலவிட்டுச் செய்த குற்றத்திற்கும் ஆளாகி விட்டீர். வையக மன்னரைச் சேர்ந்து வாழ்வதைவிட உதரத் தீயால் இரப்பது பெருமை என்றும் கொண்டீர் போலும். மன்னருடன் சேர்ந்து வாழ்தல் நஞ்சுமிழ் நாகத்துடன் மருவி வாழ்தலுக்கு ஒப்பாகும் என்று நீர் கருதுவீராகில், இவ்வோலை கண்டதும் தூதருடன் இந்நகர் வருக. மாறன் கையெழுத்து இது'' என்றிருந்தது.[16]

இந்த ஓலையைக் கண்டபின்னர்தான் மாணிக்கவாசகர் தமது நிலையை உணர்கின்றார். குதிரை வாங்குவதற்காகக் கொணர்ந்த பொருள்களெல்லாம் சிவப்பணியிலும் அடியார்கள் பணியிலும் விரயமாகி விட்டன. இப்போது குதிரைகளின்றி அரசன் முகத்தில் எப்படி விழிப்பது? சினங் கொண்டிருக்கும் அரசனிடம் சமாதானம் சொல்ல முடியாது. அரசன் கால்களில் விழுவதைவிட அரனின் திருவடிகளில் வீழ்வதே சிறந்தது; கழுவாயையும் காட்டுவான் என்று கருதுகின்றார். இந்த ''அரன்தானே குருநாதர் வடிவில் என் உள்ளமாகிய விளைநிலத்தில் அன்பாகிய முளை வளர பந்தமாகிய பாசம் என்னும் களைகளை வேரறக் களைந்து அருளாகிய நீரினைப் பாய்ச்சி முதலும் முடிவும் இல்லாத

16. இது வாதவூரடிகள் புராணத்தில் கண்ட வாசகம்.

சிவானந்த விளைவினைத் தந்த தெய்விக உழவன்'' என்று நினைந்தவராய் திருக்கோயிலைச் சார்கின்றார்.

சென்றவர், ''ஐயனே, பெருந்துறை மணியே, பாண்டியன் தந்த பொருள்களையெல்லாம் நின்கோயில் திருப்பணியிலும் நின் அடியார்பொருட்டும் செலவிடும் நெறியினை எனக்குக் காட்டினை. இப்போது பாண்டியனிடம் குதிரையுடன் செல்லும் நெறியினையும் காட்டியருள்க' என்று குறையிரக்கின்றார். உடனே, இறைவன் அருளால் ''பரிகள் வரும், என்று பாண்டியனுக்கு ஓலைவிடு'' என்ற வானின்கண் வாக்கு எழுகின்றது. இதனால் மகிழ்ச்சி மிக்கு இறைவன் பணித்த வண்ணமே ஓலை போக்குகின்றார். இந்நிலையில் இரவு வருகின்றது. மாணிக்கவாசகர் துயில் கொள்ளுகின்றார். இவரது கனவில் வெள்ளியம்பலத்திற்கு உரிய சோமசுந்தரக் கடவுள் குருந்த மரத்தடியில் ஆட்கொண்ட ஆசாரியக் கோலம் காட்டி எழுந்தருளி, ''பாண்டியன் மனங்கவரும் பரிகளுடன் வருகின்றோம். இன்று நீ முன்னதாகவே மதுரை ஏகுதி'' என்று அருளிச் செய்கின்றார். வாதவூரரும் விழித்தெழுந்து இறைவனின் கருணைத் திறத்தை வியந்து போற்றுகின்றார். இதனை.

**கனவிலும் தேவர்க் கரியாய் போற்றி**
**நனவிலும் நாயேற் கருளினை போற்றி**[17]

எனவும்,

**கனவேயும் தேவர்கள்**
**காண்பரிய கனைகழலோன்**
**புனவே யனவளைத்**
**தோளியொடும் புகுந்தருளி**

17. திருவா - போற்றித் - அடி 143, 144

நனவே யெனப்பிடித்
தாட்கொண்டவா நயந்துநெஞ்சம்
சினவேற்கண் நீர்மல்கத்
தெள்ளேணம் கொட்டாமோ[18]

—திருத்தெள்ளே 10

எனவும் வரும் அடிகளின் பாடற்பகுதியாலும் தெளியலாம்.[19]

* * *

பாண்டியனிடம் விடைபெற்று வரும் அடிகளின் வரலாற்றைத் திருவாதவூரர் புராணம் சற்று வேறுவிதமாகக் கூறுகின்றது. நம்பனுக்கு அருள்பூண்ட வாதவூரர் நற்றவக் கோலங் கொண்டு தம்மை ஆட்கொண்ட குருநாதரைக் கண்டிறைஞ்ச விரும்பித் திருப்பெருந்துறையை அடைகின்றார்; குருநாதர் திருவடிகளில் வீழ்ந்து இறைஞ்சுகின்றார். அடியார்கள் சூழ எழுந்தருளியிருந்த குருநாதர் அடிகளுக்குத் திருநீறு தரித்து அருட்பார்வை நல்குகின்றார். தம்மைச் சூழ்ந்துள்ள அடியார்களை நோக்கி, ''நாம் கருதிவந்த காரியங்கள் யாவும் முடிந்தன. கயிலையிலுள்ள நம் தொண்டர்கள் நம்மைக் காண விரும்பி தியானிக்கின்றனர். ஆகையால் நாம் அங்குச் செல்லுதல் வேண்டும். நீங்கள் மகிழ்ச்சியுடன் இங்கு வாழ்ந்திருப்பீராக''எனக் கூறுகின்றார். தொண்டர்கள் யாவரும் குருநாதர் திருவடிகளில் வீழ்ந்து இறைஞ்சித் தோத்திரம் செய்து, ''எம்பெருமானே, நினது பிரிவைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றலுடையோம் அல்லோம். எம்மைக் கைவிடுவாயோ?' என்று அழுதரற்றுகின்றனர். அவர்கள்மீது அருளுடைய இறைவனும், ''நீங்கள் வருந்த

18 திருவா். திருத்தெள். 10
19. மதுரையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பிறிதோரிடத்தில் (கட்டுரை - 7) காணலாம்.

வேண்டா. இக்குருத்தமரத்து நிழலில் தெய்வபீடம்அமைத்து அதன்மீது நம் திருவடிகளை வைத்து வழிபட்டிருப்பீராக. ஒருநாள் இந்தப் பொய்கையின் நடுவே ஒரு தீப்பிழம்பு தோன்றும். நீங்கள் யாவரும் அத்தழலில் மூழ்கி நம்மை அடைவீர்களாக''எனக் கூறித் தம்முடன் தொடரும் அடியார் களை 'நில்லுமின்' என நிறுத்திக் கயிலையை நோக்கிப் புறப்படுகின்றார். அவரை பிரிந்திருக்க முடியாத மணிவாசகப் பெருமான் அவரை மீண்டும் தொடர்கின்றார்.

அடிகளின் வருத்தத்தைப் போக்கக் கருதிய இறைவன் ஆங்குள்ள கொன்றை மரத்தின் நீழலில் சிறிது நேரம் தாமதித்து, வாதவூரரை அருகே அழைத்து "நாம் எங்கும் நிறைந்திருப்பினும், அன்பர்களாகிய அடியார்களின் வினைத் தொடர்பகற்றி ஆட்கொள்ளுவதற்காக இப்பெருந்துறையில் குருத்தமர நீழலில் எப்பொழுதும் எழுந்தருளியிருப்போம். இங்குச் சூக்கும ஒலியாகிய சங்கொலியைத் தவிர பிற இசைச் கருவிகள் ஆகா. அடியார்களுடன் நீ குருந்தடியில் நம்மை வழிபட்டிருப்பாயாக. பொய்கையில் தீப்பிழம்பு தோன்றுங்கால் அடியார்கள் அதனுள் புகும்பொழுது நீயும் உடன்புகாது இத்திருத்தலத்தைவிட்டு நீங்கித் திருவுத்தர கோசமங்கையை அடைந்து அங்குச் சித்திகளெல்லாம் பெறுக. பின்னர் இலிக்கத்திருமேனி கொண்டுள்ள திருத்தலங் களிலெல்லாம் இக்குருவடிவத்தையே கொண்டு மகிழ்வா யாக. பின்னர்த் திருக்கழுக்குன்றத்தைச் சேவித்து அங்கிருந்து மீண்டும் தென்திசை நோக்கி வந்து தில்லைப் பொன்னம்பலத்தை அடைவாய். அங்குப் புத்தர்களைவாதில் வென்று நம் திருவடிப் பேற்றினைப் பெற்று இன்புறுவாய்'' எனப் பணித்தருளுகின்றார்.

இங்ஙனம் அறிவுறுத்திய பெருமானை அடிகள் வணங்கி நின்று 'எம்பெருமானே, பெருந்துறை நகரிலன்றிப் புலியூர்ப்

பொன்னம்பலத்தே முத்திபெருவதாகக் கூறியது என்கருதி?' என வினவுகின்றார். இறைவனும், 'புழுவானது தான் எடுக்கப்பட்ட இடத்தின்கண் அன்றி வைக்கப்பட்ட இடத்திலேயே வேட்டுவனாகிய குளவியின் வடிவத்தைப் பெறும். அதுபோல இப்பெருந் துறையில் சிவஞானமாகிய மெய்ஞ்ஞானத்தை உபதேசித்தோம். சிவாநுபூதியாகிய பரமுத்தி[20] உனக்கு தில்லையம்பலத்தில் உண்டாகும்' எனக் கூறித் தில்லையின் சிறப்பினை எடுத்துரைத்து அடிகளின் நெற்றியில் திருநீறு சாத்திச் சிவபெருமான் மறைந்தருளு கின்றார். அடிகளும் அடியார் குழுவை வந்தடைத்து குருத்தின்கீழ்த் தெய்வபீடம் அமைத்து வழிபட்டுக் காலம் போக்குகின்றார். இக்காலத்தில் 'அற்புதப் பத்து' 'அதிசயப் பத்து' முதலிய பனுவல்களைப் பாடி இறைவனைப் போற்று கின்றார்.

சிலநாட்களுக்குப் பிறகு இறைவன் பணித்த வண்ணம் திருத்தமாம் பொய்கையில் தீப்பிழம்பு தோன்றுகின்றது. அடியார்கள் எல்லாரும் அஞ்செழுத்தோதி அதில் புகுகின்றனர். சிவபெருமான் உமையம்மையாருடன் விடை மீது தோன்றிக் காட்சி நல்குகின்றார். அடியார்கள் அனைவரும் சிவகணநாதர்களாகுகின்றனர். சிவபெருமான் அடியார்களுக்கு அருள்புரிந்து அவர்களுடன் மறைந்தருள் கின்றார். இந்நிலையில் கொன்றை மரநிழலில் சிவயோகத்தில்

---

20. பரமுத்தி - சித்தாந்தத்தில் இதுவே முடிந்தமுத்தி. வித்தியா தத்துவங்கள் ஏழிலும் உள்ள சீகண்ட புவனம் முதலிய உருத்திர உலகங்களை அடைதல் பரமுத்தியாகும். பல்வேறு முத்திகள் பற்றிய விளக்கத்தை இவ்வாசிரியர் எழுதியுள்ள ''சைவசமய விளக்கு'' (பாரிநிலையம், சென்னை 600 108) என்ற நூலில் (கடிதம்—44) கண்டு தெளிக.

அமர்ந்திருந்த வாதவூரடிகள் சிவனடியார்களாகிய அன்பர்களைக் காணாது அழுதரற்றி 'மெய்தான் அரும்பி' (5) எனத் தொடங்கும் 'திருச்சதகம்' பாடிப் போற்றுகின்றார், (இவ் வரலாறு திருவாதவூரர் புராணத்தில் கண்டது).

* * *

இன்றும் திருப்பெருந்துறைச் சிவாலயத்தில் திருவாசகப் பாடல் ஒலிகளைக் கேட்டு மகிழலாம். திருவாசகப் பாராயணந்தை எல்லாக் காலங்களிலும் கேட்டுக் களிக்கலாம். இத்திருக்கோயிலின் இறைவன் பெயர் **ஆத்மநாதர்**; இறைவி **யோகாம்பிகை**. கருவறையில் இலிங்கமோ, வேறு திருவுருவமோ இல்லை. இங்கு இறைவனும் இறைவியும் அருவமாய் எழுந்தருளியிருப்பதாக ஐதிகம். இதனைக் குறிப்பிடும் பாங்கில் இரண்டு பீடங்கள் மாத்திரம் வைக்கப் பெற்றுள்ளன. பீடங்களுக்கே வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. எல்லாச் சிவாலயங்களிலும் நந்திதேவரும் சண்டேசுவரரும் ஆலயக் காவலர்களாக இருக்கும் மரபுக்கு மாறாக மாணிக்கவாசகரே ஈண்டு வாயில் காப்பாளராக அமைந்துள்ளார். நந்திதேவருக்கும் சண்டேசுவாருக்கும் இத்திருக்கோயிலில் இடம் இல்லை.

பூவிருந்தவல்லியில் திருக்கச்சி நம்பியின் சந்நிதியும், திருமழிசையில் பக்திசாரரின் சந்நிதியும் சிறப்பாக இருப்பது போல் இங்கும் மாணிக்கவாசகர் சந்நிதிக்குத்தான் சிறப்பு. சந்நிதியில் ஓர் அழகான அடிகளின் பெரிய திருவுருவம் உள்ளது; மேற்கு நோக்கிய சந்நிதி இவர் சந்நிதிக்கு எதிரே கிழக்கு நோக்கிய யோகாம்பிகையின் சந்நிதி உள்ளது. யோகத்திலிருக்கும் அம்பிகையாதலால் சுற்றிலும் சலாகை யடித்த சுவர் மூடியுள்ளது. தீபாராதனை நடைபெறும் பொழுது மட்டிலும் வெளிச்சம் சிறிய துவாரங்களின்வழி யாகத் தெரியும். மாணிக்கவாசகருக்கும் அம்மனுக்கும் ஓரே

வேளையில் ஒரே விதமாகத் தீயாராதனை நடைபெறுகின்றது. மாணிக்கவாசகருக்கு ஆகமவிதிப்படி ஆதிசைவர்களும், மூலத்தானத்திற்கும் அம்மன் சந்நிதிக்கும் வைதிக அந்தணர்களும் பூசை செய்கின்றனர். தில்லையில் மூவாயிரவர் பரம்பரையைப் போல, இங்கே முந்நூற்றுவர் பரம்பரையில் வந்தவர்களாகச் சொல்லிக் கொள்ளுகின்றனர் இந்த வைதிகப் பிராமணர்கள்.

இறைவன் மாணிக்கவாசகருக்குக் குருமூர்த்தி வடிவினராக வந்து உபதேசித்ததைக் காட்டுவதற்காக குருமூர்த்தி என்ற தட்சிணாமூர்த்தி சந்நிதி தனியாக உள்ளது. அதனருகே குருந்தமரம் ஒன்றும் நிற்கின்றது. இதனடியில் தான் மாணிக்கவாசகர் திருவடி தீட்சை பெற்றார் என்பது ஓர் ஐதிகம். திருக்கோயிலின் தென்புறத்திலுள்ள தெப்பக் குளம் மிகவும் சிறப்புடையது. மாணிக்கவாசகருடன் இருந்த அடியார்கள் அவரைப் பிரிந்து முத்தியடைந்தபோது இக் குளத்தில் தோன்றிய தீப்பிழம்பிலேதான் மூழ்கி மறைந்த தாகச் சொல்வர், இதனால்தான் இத்திருக்குளம் '**அக்கினி தீர்த்தம்**' என்று வழங்குவதாகவும் கூறுவர்.

**சிற்பங்கள் :** ஆவுடையார் கோயிலின் சிறப்பு அதன் சிற்பத்தில் இருப்பதாகக் கூறுவர் திரு. **சோ. சிவபாதசுந்தரம்**. "சுவாமி சந்நிதிக்கு முன்னால் இருக்கும் கனக சபை என்ற மண்டபம் முழுவதும் கொத்துக் கொத்தாக மிகவும் அருமையான சிற்ப உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சிவபெருமான் மணிவாசகருக்காக நரிகளைப் பரிகளாக்கித் தாமும் குதிரைச் சேவகரானார் என்பதைச் சித்திரிக்கும் ஓர் அழகான **பரிமேலழகர்** சிற்பம் இருக்கின்றது. இதன் பெருமையை வேறெங்கும் காணமுடியாது. இது இருக்கும் மண்டபம் '**குதிரைச்சாமி மண்டபம்**' என்று வழங்குகின்றது. இதைவிட, குறவன் குறத்தி வடிவங்கள், பிற ஆலயங்களி

போல, மிக அழகுபட இரு தூண்களில் செதுக்கப்பட்டிருக்கின்றன. குறத்தியின் கண்களில் காணப்படும் 'வலைவீசும்' பார்வையும் அவள் உடலின் நெளிப்பும், கையிலிருக்கும் கூடையின் இழைப்பும் மிக ஆச்சரியப்படத்தக்கக் கலை நுட்பம் வாய்ந்தவை. மதுரைக் கிருஷ்ண தேவராயரும் தேவியும் இங்கு சிலாரூபமாக வைக்கப்பட்டிருப்பதால் இவ்வாலயம் அவர்கள் காலத்திலே புதுப்பித்துக் கட்டப் பெற்றதென்று ஊகிக்கலாம்.

இவற்றையெல்லாம் தவிர திருப்பெருந்துறையிலுள்ள 'கொடுங்கை' என்ற **எழுதகந்தான்** மிகவும் பிரசித்தி பெற்ற சிற்ப அமைதி. தனிக்கல்லிலேயே உத்தரங்களும் சலாகைகளும் மேற்கூரையும் சேர்ந்த மாதிரியாகப் பொளிந்து அமைக்கப்பட்டிருப்பது வியக்கத்தக்கது. சங்கிலித்தோரணங்களும் தூண்களும், விதானங்களும் கல்லிலே மிக அழகாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. அநேகமாக யாவும் கேரள சிற்ப முறையிலேயே காணப்படுகின்றன''[21]

மாணிக்கவாசகருக்கு உபதேசம் நிகழ்ந்த பின்னரே திருப்பெருந்துறைத் திருக்கோயில் அமைக்கப்பெற்றதென்றும், இங்ஙனம் உபதேசம் புரிந்தருளிய அருள்நிலையமாக இப்பொழுதுள்ள பெருந்துறைக் கோயிலில் சிவலிங்கத் திருவுருவமும் ஏனைய அங்கங்களும் அமைந்தில்லாமையே அடிகள் காலத்திற்கு முன் அங்கே திருக்கோயில் இல்லாமையைப் புலப்படுத்தும் என்றும் **மறைமலையடிகள்** கூறுவர். ஆயினும் திரு. க. **வெள்ளை வாரணனார்**

**செந்தழல் புரைதரு மேனியும் காட்டித்**
**திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி**
**அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்**[22]

---

21. மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில் (இரண்டாம் பதிப்பு)—பக் 52-53
22. திருப்பள்ளி-8 (373)

என வரும் பாடற்பகுதியை எடுத்துக் காட்டி அடிகள் குருவின் திருமேனியைக் காணுவதற்கு முன்னமும் திருப்பெருந் துறையிற் சிவபெருமானுக்குத் தனிக் கோயிலுண்டு என்ற குறிப்பை வற்புறுத்தல் காணலாம் என்று குறிப்பிடுவர்.[28] 'ஆரூர் மூலட்டானம்' (6.70 : 2) எனத் தொடங்கும் அப்பர் பெருமானின் க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில்

'பெருந்துறை காம்பீலி பிடவூர்'

என்று குறித்துப் போற்றப்பெற்ற பெருந்துறை என்னும் வைப்புத்தலம் திருப்பெருந்துறை எனக் கருதுதற்கும் இடம் உண்டு என்றும் கூறுவர். இக்காலத்தில் **'ஆளுடையார் கோயில்'** என வழங்கும் திருப்பெருந்துறையின் ஒரு பகுதியாகிய வடக்கூரில் வெள்ளாற்றின் தென்கரையில் அமைந்துள்ள ஆதி கைலாசநாதசுவாமி கோயில் பழைய திருப்பெருந்துறைக் கோயிலாக இருத்தல்வேண்டும் எனத் தம் ஊகத்தையும் காட்டுவர்.

---

28. பன்னிருதிருமுறை வரலாறு—இரண்டாம் பகுதி பக். 57

# 4. பெருந்துறை (குருந்தமரம்) அருளிச் செயல்கள்

மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் தங்கியிருந்த போது பல திருவாசகப் பாடல்களை அருளியதாக அவர் வரலாறு கூறும் புராணங்கள் குறிப்பிடுகின்றன. மாணிக்க வாசகர் காலத்துக்குச் சில நூற்றாண்டுகட்குப் பின்னர் இப்புராணங்கள் எழுந்தவையாதலின் ஒவ்வொருவரும் திருவாசகத் தொகுப்பை தம்முன் வைத்துக் கொண்டும் தம் கற்பனைச் சிறகுகளை விரித்துக்கொண்டும் ஒவ்வொருவித மாகப் பறக்கின்றனர். இதனால் பாடல்கள் அருளிய விவரமும் புராணத்திற்குப் புராணம் வேறுபடுகின்றது. சிலவற்றை இப்பகுதியில் காண்போம். எப்பாடல்கள் எங்குப் பாடப் பெற்றால் என்ன? நமக்குப் பாடல்கள் கிடைத் துள்ளன. அவை பாடப் பெற்ற இடங்களையும் சந்தர்ப்பங் களையும் பற்றி அதிகமாகக் கவலை கொள்ளாமல் பாடல் களில் மட்டிலும் ஆழங்கால்பட்டு அநுபவித்து மகிழ்வோம்.

நம்பி திருவிளையாடல் (13-ஆம் நூற்றாண்டு) கூறுவது; வாதவூரடிகள் குதிரை வாங்கப் புறப்படுகின்றார், திருப் பெருந்துறையை அடைகின்றார்; தம் வசம் இழக்கின்றார். இதற்குமுன் செல்வத்தின் மீதிருந்த அவா அற்றுப் போதலையும் தம் நெஞ்சம் ஒருவழி ஒடுங்குதலையும் காண் கின்றார். மிகவும் வியந்து 'இவ்விடத்தில் ஏதோ புதுமை

இருக்கவேண்டும்' என உணர்கின்றார். இங்கு அவர் திருவாயினின்றும் **அற்புதப் பத்து** பிறக்கின்றது.

**அற்புதப் பத்து (41)**[1] : இது பத்துப் பாடல்களைக் கொண்டது. 'அநுபவமாற்றாமை—அநுபவம் முற்றுதல் பொறாமை விம்முதல்' எனக் கருதுரைப்பர் முன்னையோர். குறுணி கொள்ளும் கோணியில் முக்குறுணி திணித்தால் அது விம்முதலைப் போலச் சிவாநுபவம் எல்லையின்றிப் பெருக அஃது இங்ஙனம் இருந்ததென்று சொல்லவும் முடியாதபடி விம்முதல். அற்புதம் என்பது, இதுவரையிலும் தோன்றாததும் இனித்தோன்றவும் கூடாததுவுமான நிகழ்ச்சிகள் விளைகின்ற காலத்துத் தோன்றும் உணர்வு. சிவாநுபவம் ஆன்மாவுக்குப் புதிதாகையாலும் ஒருமுறை அடைந்த ஆன்மா மீட்டும் அதனை அடைய வேண்டிய வாய்ப்பு நிகழாமையாலும் இவ் வற்புதத்தை உற்ற ஆன்மா அதனைப் பொறுக்கமுடியாது விம்முதல் இயல்பு. அந்த நிலையை அறிவிக்கும் இஃது அற்புதப் பத்தாகின்றது. உலக இன்பமே உயர்வு என்று எண்ணி இருந்த அடிகளுக்கு உண்மையறிவை அளித்து ஆண்டது அதிசயம் என்று உரைத்தல் அற்புதப்பத்தாகும் என்று உரைக்கின்றது திருப்பெருந்துறைப் புராணம். இப்பத்தில்,

> **மாடும் சுற்றமும் மற்றுள போகமும்**
> **மங்கையர் தம்மோடும்**
> **கூடி யங்குள குணங்களா லேறுண்டு**
> **குலர்வியே திரிவேனை**

---

1. பிறைக்குறிகளின் இடையேஉள்ள எண் திருவாசகப் பதிப்பிலுள்ள (தருமபுரப் பதிப்பு) எண்ணைக் குறிப்பது; இந்தநூல் முழுதும் இவ்வாறே கொள்க.

வீடு தந்தென் றன் வெந்தொழில் வீட்டிட
மென்மலர்க் கழல் காட்டி
ஆடு வித்தென தகம்புகுந் தாண்டதோர்
அற்புதம் அறியேனே (5)

(மாடு -செல்வம்; ஏறுண்டு - தாக்கப்பெற்று; குலாவி - விளங்கி)

என்பது ஐந்தாம் பாடல். ஒவ்வொரு பாடலும் 'அற்புதம் அறியேனே' என்று இறுகின்றது. இத்திருப்பதிகப் பாடல் தோறும் தம்முடைய சிறுமையையும் பெருமறை தேடிய அரும்பொருளாகிய இறைவன் தம்பொருட்டுக் குருத் திருமேனி கொண்டு வெளிப்பட்டுத்தோன்றிச் சிவஞானத்தை உபதேசித்தருளிய அற்புத நிகழ்ச்சியையும் ஒருங்கு குறித் துள்ளமை கண்டு மகிழலாம். தையல் அநுபவம் கூறுதல் 'நைச்சியாநு சந்தானம்', எனக் கொள்ளலே பொருந்தும்.

குருவருளால் பரஞானம் கைவரப்பெற்றுச் சிவஞானச் செல்வராகின்றார். ஆசிரியத் திருமேனிகொண்டு இறை வனால் திருவடி தீட்சை செய்யப்பெற்று அதனை ஏற்றுக் கொண்ட சென்னியை வியந்து சென்னிப்பத்து பாடுகின்றார்.

**சென்னிப் பத்து (42) :** சென்னிப்பத்தில் 'சிவவிளைவு—சீவனுக்கு நிச்சயப்படுத்தல்' என்பது பழைய குறிப்பு. இறைவனுடைய திருவடிகள் தமது சென்னியில் விளங்கும் முறையை விளக்குவது சென்னிப் பத்து. குருநாதன் திருவடி சூட்டியதால் தாம் பெற்ற சுகத்தை வியந்து கூறியது சென்னிப் பத்து என்று கூறும் திருப்பெருந்துறைப் புராணம். சிவபெருமான் குருவாக எழுந்தருளித் தம் சென்னியில் திருவடிசூட்டும் பேறு பெற்றதால், அச்சிறப் பினைத் தம்முடன் உள்ள அடியார்களுடன் மகிழ்ந்து பரவிப் போற்றும் முறையில் இத்திருப்பதிகமே அமைகின்றது. இறைவன் குருவாகி வந்து தன் திருவடிகளை அடிகளின் சென்னியில் சூட்டிய செய்தி,

**என்னையும் ஒருவனாக்கி இருங்கழல்**
**சென்னியில் வைத்த சேவக போற்றி**[2]

எனவரும் அடிகளது வாய்மொழியால் புலனாகும். இறைவன் தன் பொன்னார் திருவடிகளைச் சூட்டி அருள்செய்தமையால் தம் சென்னிக்கு வாய்ந்த பெருஞ்சிறப்பினை எண்ணி உவந்து போற்றுகின்றார் பத்துத் திருப்பாடல்களில், இறைவன் சேவடி தம்முடையை சென்னியில் மன்னி விளைக்கும் பேரானந்தத்தை நினைந்து போற்றும் நிலையில் அருளிய பதிகம் ஆதலின் 'சிவவிளைவு' என முன்னோர் கருத்து உரைத்துள்ளனர்.

**முத்த னைமுதல் சோதியை முக்கண்**
**அப்ப னைமுதல் வித்தினைச்**
**சித்த னைச்சிவ லோக னைத்திரு**
**நாமம் பாடித் திரிதரும்**
**பத்தர் காள்! இங்கே வம்மின் நீருங்கள்**
**பாசக் தீரப் பணிமினோ**
**சித்த மார்தரும் சேவ டிக்கணஞ்**
**சென்னி மன்னித் திகழுமே (10)**

(முத்தன்-நித்திய முத்தியில் இருப்பவன்; முதல்வித்து—அனைத்திற்கும் மூலமாய் இருப்பவன்; பாசம்—ஆணவ மலக்கட்டு)

என்பது இப்பதிகத்தின் பத்தாம் திருப்பாடல். ஒவ்வொரு பாடலிலும் 'சேவடிக்கணஞ் சென்னி மன்னித் திகழுமே' என்று வருவது நோக்கத்தக்கது. இதில் தாள்+தலை= தாடலை என்ற அத்துவிதக் கலப்பு குறிப்பாகப் புலப்படுத்தி இருப்பதைக் கண்டு மகிழலாம். ஈண்டு தலை ஆன்மாவையும், தாள் இறைவனையும் குறிக்கின்றன. இதனை இருசொற்கள் எனக் கொள்ளவும் முடியாது. ஒரு

2. திருவா. போற்றித் திருவகவல். அடி 129, 130

சொல்லெனக் கொள்ளவும் முடியாது. ஒருவிதத்தில் இஃது ஒரு சொல்; இன்னொரு விதத்தில் இன்னொரு சொல். இதைப் போன்றதே இறைவனோடு ஆன்மா ஐக்கியப்படும் விதமும் என்பதே சித்தாந்தத்தின் முடிவாகும். ஒவ்வொரு பாடலிலும் இக்கருத்து அமைந்திருப்பது மகிழ்ச்சி தருவதாகும். "என் சென்னியில் இறைவனுடைய திருவடிகள் மன்னித் திகழ்வதற்கு அத்திரு வடிகளின் அருளின் நீர்மையே காரணம் அன்றி என் தகுதி காரணம் அன்று" என்று குறிப்பிடுகின்றார் அடிகள். 'ஆயிரம் தாமரை போலும் ஆயிரம் சேவடி யானும்' (4-4-8) எனஅப்பர் பெருமான் போற்றியவாறு எங்கும் நீக்கமற நிற்பன இறைவன் திருவடிகள் ஆதலின் 'சேவடிக் கணம்' என்கின்றார். கணம்-தொகுதி.

இப்பதிகத்தின் ஐந்தாம், திருப்பாடலில், "திருப்பெருந் துறை மேவினான், காயத்துள் அமுது ஊற நீ கண்டு கொள் என்று காட்டிய தூய மர்மலர்ச் சேவடிக்கணம்," என்றது திருப்பெருந்துறை இறைவன் குருவாக எழுந்தருளி வந்து அடிகளுக்கு உபதேசத் தருளிய திருவடி ஞானத்தை. ஆன்மாவாகிய உடலுக்குள்ளே உயிராயிருக்கப் பெற்ற சிவஞானமாகிய தேனினைச் சொரியும் திருவடிப் பேரின்ப அநுபவத்தினை,

> **காயத்துள் மெஞ்ஞானக் கள்ளுண்ண மாட்டாதே**
> **மாயக்கள் உண்டாரென் றுந்தீபற**
> **வரட்டுப் பசுக்களென் றுந்தீபற** (43)

என வரும் திருவுந்தியார் பாடலில் உய்யவந்த தேவநாயனார் வெளியிட்டுள்ளமை ஈண்டு ஒப்பு நோக்கி மகிழத்தக்கது. 'நங்கையீர் எனை நோக்குமின்' எனத் தொடங்கும் திருப்பாடலில் அடிகள் தம்மை இறைவனாகிய ஆன்மநாயகனைக் காதலித்த மகளிர் நிலையில் வைத்துக் கூறியுள்ளமை காணத்தக்கது. நாயக-நாயகி பாவனையை நன்கு அநுபவிக்கவேண்டுமானால் ஆழ்வார்களின் பாசுரங்களை நாடவேண்டும்.

7. **அச்சோப்பதிகம்** (51) : திருவாசகப் பதிப்புகளில் இறுதியாகவுள்ள பதிகம். இதற்கு 'அநுபவவழி அறியாமை' என்பது முன்னோரின் கருத்துரை. சிவபெருமான் தம் பொருட்டு எளிவந்தருளிய பேரின்பத்தில் திளைத்து மகிழும் அடிகள் தாம் பெற்ற அருளார் இன்பத்தை வியந்து போற்றுவதாக அமைந்தது இப்பதிகம். 'அச்சோ' என்பது வியப்பினைப் புலப்படுத்தும் இடைச் சொல். இஃது 'அச்சோ பத்து' எனவும் சில சுவடிகளில் குறிக்கப்பெற்றுள்ளது. ஒன்பதே பாடல்கள் உள்ள இத்தொகுதியை 'அச்சோபதிகம்' என்று வழங்குதலே பொருத்தமுடையதாகும். இப்பதிகத்தில்,

> **முத்திநெறி யறியாத**
> **மூர்க்கரொடு முயல்வேனைப்**
> **பத்திநெறி அறிவித்துப்**
> **பழவினைகள் பாறும் வண்ணம்**
> **சித்தமலம் அறிவித்துச்**
> **சிவமாக்கி எனையாண்ட**
> **அத்தனெனக் கருளியவா**
> **றார் பெறுவார் அச்சோவே** (1)

[மூர்க்கர்-அகங்காரிகள்; பாறும் வண்ணம்-சிதறும்படி; சித்தமலம் அறுவித்து-பாச க்ஷயம், பண்ணி]

என்பது முதல் திருப்பாடலாகும். இறைவனை அடைதற்குரிய நெறிகள் இரண்டு. ஒன்று, முத்திநெறி. இது சரியை கிரியை யோக ஞானங்களால் முதிர்ந்த அறிவுடைய பெருமக்கள் மட்டுமே அறிந்து கடைப் பிடித்தற்குரிய அருமையுடையது. இரண்டு, பத்தி நெறி. பேரன்பின் முதிர்ச்சியே பத்தி. இஃது உலகமக்கள் அனைவரும் அன்பினால் பின்பற்றுதற்குரிய எளிமை வாய்ந்த வழி.[3] இப்பாடலில் அடிகள்

3. வைணவசமயத்தில் பத்தி நெறியை அட்டாங்கயோக முறைகளால் அநுட்டிக்கவேண்டும் எனக் காட்டிக் கடுமையான வழியாகக் கொள்வர். பிரபத்திநெறி (சரணாகதிநெறி) எளிமையது என்று காட்டுவர்.

முத்திநெறி அறியாத மூடரொடு கூடிக் காலங்கழிக்கின்ற தம்மை, இறைவன் தானே எளி வந்து பத்திநெறி அறிவித்து, பழவினைக ளெல்லாம் (சஞ்சிதம்) அறவே சிதைந் தொழியும்படிச் சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி ஆண்டு கொண்டருளினான் என்று வெளியிட்டு வியந்து போற்றுகின்றார்.

அடிகள் சிவாநுபவமாகிய பேரின்பத்தினை அடைதற்குத் தாம் மேற்கொண்ட சாதனங்கள் யாவை என எண்ணிப் பார்க்கின்றார். தாம் அதன்பொருட்டு மேற் கொண்ட முயற்சிகளாக எதுவும் புலப்படவில்லை. முயற்சி யும், உளப்பாடும் இன்றி இறைவன் அருளால் தமக்குக் கிடைத்த சிவாநுபவத்தை வியந்து உரைக்கும் முறையில் இப்பதிகப் பாடல்கள் அமைந்திருத்தலால் 'அநுபவவழியறி யாமை' என இதற்கு முன்னோர் கருத்துரைத்தனர் என்பது அறியத்தக்கது.

பெரியாழ்வார், தம் திருமொழியில் (1. 8) கண்ணன் பிள்ளைப் பருவ நிகழ்ச்சிகளைக் காட்டுமிடத்து 'அச்சோ பருவம்' என்ற ஒரு பருவநிலையைக் குறிப்பிடுகின்றார். 'அச்சோ' என்பது பழங்காலத்தில் குழந்தையை 'அணைத்துக் கொள்' என்று வேண்டுதற்கு ஏற்ற குறிப்புச் சொல்லாகக் கொள்ளப் பட்டதாகக் கூறுவர் வியாக்கியானக்காரர். கண்ணன் தன்னை (யசோதை நிலையிலுள்ள பெரியாழ்வார்) அணைத்துக்கொள்ளுதலை நினைக்கும்போது தோன்றும் பரமானந்தத்தில் மூழ்கி நெஞ்சுருகிச் சொல்லிடிந்து வாய் விட்டுச் சொல்ல மாட்டாமல் அவ்வாச்சரியத்தை ஒரு தரத்திற் கிருதரம் 'அச்சோ அச்சோ' என்கிறாள் என்கிறார் அவர்; இதனால் இறைவன் தமக்குச் செய்த கருணையினை- திருவருளில் சேர்த்துக் கொண்டதை - வாய்விட்டுச் சொல்ல முடியாமல் அநுபவத்த அதிசயத்தால் 'அச்சோ' என்கின்றார்

என்பது மிகப் பொருத்தமுடையதாக அமைகின்றது இங்ஙனம் இறைவனது பொருள்சேர் புகழைப் போற்றிப் பரவும் அடிகள் அமைச்சர் கோலம் நீங்கி முற்றத் துறந்து நான்மறை முனிவராய்த் திகழ்கின்றார்.

குருவாய் வந்தருளிய இறைவன் நான்மறையோதும் மாணாக்கர்களாகிய அடியவர் கூட்டத்தை வாதவூரடிகளுக்குக் காட்டியருளுகின்றான். அவர்களைக் கண்ட அடிகள் "நண்பர்களே, நீங்கள் முன்னை நல்வினைப் பயனால் ஈசனிடத்தது அன்பு பூண்டு அவனைப் பிரியாதிருக்கப் பெற்றீர்கள். யானும் அன்பர்களாகிய நும்மை அடையப் பெற்று மகிழ்கின்றேன்" என்று கூறி 'அதிசயப்பத்து' (26) பாடுகின்றார்.

**அதிசயப் பத்து** (26)[4] : முத்தியிலக்கணம் மோட்சத்தின் அடையாளம் என்பது முன்னோரின் கருத்துரை. 'அதிசயம்' என்ற சொல் மிகுதி என்னும் பொருளுடையது. தமக்குத் திருவருள் சுரந்த இறைவனது பெருமையின் மிகுதியைக் குறித்து அடிகள் வியந்து போற்றுவதாக அமைந்தது இப் பத்து. மூலமலத்திற்குப் பயந்த மன ஏக்கம் பொருந்திய அடியார்களோடு கூட்டிய இறைவனின் திருவருட் பேற்றிற்கு வியந்து கூறுவதாகவும் கொள்ளலாம். இப்பத்தில்,

**பொத்தை யூன்சுவர் புழுப்பொதிந் துளுத்தசும்**
**பொழுகிய பொய்க்கூரை**
**இத்தை மெய்யெனக் கருதிநின் றிடர்கடற்**
**சுழித்தலைப் படுவேனை**
**முத்து மாமணி மாணிக்க வயிரத்த**
**பவளத்தின் முழுச்சோதி**
**அத்த னாண்டுதன் அடியாரிற் கூட்டிய**
**அதிசயம் கண்டாமே** (7)

[பொத்தை-பொத்தல்; இத்தை-இதனை]

---

4. திருவாதவூரர் புராணத்திலும் திருப்பெருந்துறையில் பாடப் பெற்றதாக உள்ளது.

என்பது ஏழாம் பாடல். இஃது 'உடற்கூற்று வண்ணத்தை' அற்புதமாக விளக்குவது. இந்த உடல் சிறிதும் பெரிதுமான ஒன்பது வாயில்களும் எண்ணிலா நுண்ணிய மயிர்ப்புழை களும் ஆகிய பொத்தல்களையுடைய தசைச்சுவர்களைக் கொண்டது. இதனுள் புழுக்கள் அடைக்கப் பெற்றுள்ளன. நிண நீர் ஒழுகும் வாய்ப்புகளையுடையது. தோலால் வேயப் பெற்ற அழகிய குடிலுக்கு ஒப்பான பொய்யானது இவ் வுடல். இதனை மெய்யெனக் கருதித் தருக்கி நின்று பிறவித் துன்பக் கடலில் தோன்றும் காமச் சுழித்தலைப்பட்டு நையும் இயல்பு வாய்ந்த தம்மை முத்தும், நீலமணியும், செம்மணியும், வயிரமும், பவழமும் விரவி ஒருங்குதரும் முழுச்சுடர்போல் வயங்கும் அனைத்துயிர்க்கும் அத்தனாய்த் திகழும் சிவபெருமான் ஆண்டுத் தன் மெய்யடியார் திருக் கூட்டத்தில் கூட்டியருளிய அற்புதம் கண்டதாகக் கூறு கின்றார். பத்துப் பாடல்களும் "அடியாரிற் கூட்டிய அதிசயம் கண்டாமே" என்று இறுகின்றன. பாடல்கள் யாவும் அடிகள் இறைவன் திருவருளால் பொய்ந்நெறியாகிய பிறவித் தொடர்ச்சியை விட்டு நீங்கிச் சித்தமலம் அற்றுப் பத்தர் இனத்தராய்ப் பரன் உணர்வோடு ஒன்றியுணரும் மெய்த் தவச் செல்வராய் முத்திநெறியில் திகழும் மாண்பினைப் புலப்படுத்துவனவாக அமைந்திருத்தலால் இவை சீவன் முத்தரது இயல்பினை விளக்கும் சிறந்த இலக்கியமாகத் திகழ்கின்றன.

அடியார்களை வாதவூரருக்குக் காட்டிய இறைவன் 'மாணிக்க வாசக இங்குநில்' என்று கூறித் தம் மாணாக்கர் களாகிய 999 பேர்களுடன் விரைவில் மறைகின்றார். இந் நிலையில் ஆசிரியப் பெருமானையும் உடன் வந்த அடியார் களையும் காணப் பெறாத அடிகள் அளவிலாத் துயருற்று அழுது அரற்றுகின்றார். தம்மை ஆண்டருளிய குருமணியை நினைந்து கண்ணீர் ஆறாகப் பெருக 'கோயிற்பத்து' (22),

'புணர்ச்சிப்பத்து' (27) 'செத்திலாப்பத்து' (23), 'பிரார்த்தனைப் பத்து' (32), ஆசைப்பத்து (25), உயிருண்ணிப்பத்து (34), திருப்புலம்பல் (39), வாழாப்பத்து (28), எண்ணப்பத்து (44) ஆகிய திருவாசகப் பனுவல்களை நெஞ்சு நெக்குருகப் பாடிப் போற்றுகின்றார்.

**கோயில் திருப்பதிகம்** (22)[5] நம்பி திருவிளையாடலில் 'கோயில் பத்து' என்று கூறப்பெற்றிருப்பினும் 'கோயில்' என்ற பெயர் தில்லைக்கே சிறப்பாக உரியதாயினும், ஈண்டுக் 'கோயில்' எனக் குறிக்கப்பெறுவது திருப்பெருந்துறையில் அமைந்த திருக்கோயிலே எனக் கருத வேண்டியுள்ளது.

**செந்தழல் புரைதிரு மேனியும் காட்டி**
**திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி**

என்று (திருப்பள்ளி எழுச்சி 7) என்ற அடிகளது வாய்மொழியும் 'ஏயும் கோயிற்றிருப்பதிகம் பெருந்துறை தேசிகர் மோகம் இயம்பலாகும்' என வரும் திருப்பெருந்துறைப் புராணத் தொடரும் இக்கருத்தினை வலியுறுத்தும். அந்தாதியாக அமைந்த இப்பதிக்கத்தின் ஒவ்வொரு பாடலிலும் 'திருப்பெருந்துறையுறை சிவபெருமானே' என வரும் தொடர் இக்கருத்தினை அரண்செய்யும். இப்பதிகத்தின் திருவுள்ளக் கிடை 'அநுபோக இலக்கணம்-சிவாநு பூதிக்கு அடையாளம்' என்பதாகும். அடிகள் தாம் பெற்ற சிவாநுபவத்தைக் கொண்டு இறைவனது அருளார் இன்பத்தின் இயல்பினைப் புலப்படுத்தும் நிலையில் அருளிச் செய்யப்பெற்றது இத் திருப்பதிகம்.

---

5. திருமபுரப் பதிப்பில் இது திருத்தில்லையில் அருளியதாகக் குறிக்கப்பெற்றுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு பதிப்பாசிரியர் திரு. ச. தண்டபாணி தேசிகர் 'இது தில்லையிலிருந்து திருப்பெருந்துறைப் பெருமானை அடையும் குறிப்பாக அருளிச்செய்யப்பெற்றது' (நூலாராய்ச்சி-பக் ௫௨) என்று எழுதியுள்ளார்)

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
 தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
 நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாத்
 திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை அன்றியொன் றில்லை
 யாருன்னை அறியகிற் பாரே (7)

[கடிந்து-நீக்கி; உள்ளத்து - எழுகின்ற; ஞாயிறு-ஞான சூரியன்; உள்ளம்-ஆன்மா]

என்பது இதன் ஏழாம் பாடல். வாதவூரடிகள் இறைவனது திருவருளால் சுத்தாவத்தை அடைந்த நிலைமை இனிது புலப்படும் என்பர். ஈண்டு நினைப்பற நினைதலாவது ஒரு பொருளைச் சுட்டியறியும் சுட்டறிவாகிய நினைப்பும் மறப்பும் அற்ற அதீத நிலையில் இறைவனது திருவருளில் அழுந்தி நின்று உணர்தல். 'நினைப்பற உள்கில்' என்பது திருமந்திரம்[6] 'நினைப்பற நினைந்தேன்' எனவரும் திருவாசகப் பொருளைச் சிந்தித்துணர்ந்த தாயுமான அடிகள்,

'நினைப்பறவே தான்நினைந்தேன்'
 என்றநிலை நாடி
அனைத்துமாம் அப்பொருளில்
 ஆளும்நாள் எந்நாளோ?(6)'[7]

என்று கூறியுள்ளமை ஈண்டு உணரத்தக்கது. இறைவன் ஒவ்வொரு பொருள்தோறும் நீங்காது நிலைபெற்றுப் பரவித் தோன்றும் பருமை நிலையினனாகவும் உள்ளான். இங்ஙனம்

6. ஞானகுருதரிசனம் - 11 (ஒன்பதாந் தந்திரம்)
7. எந்நாட்கண்ணி - அறிஞர் உரை. (6)

எல்லாப் பொருள்களோடும் தான் பிரிவறக் கலந்து நிற்பினும் அவற்றின் தன்மை தனக்கு எய்தலின்றியும் இருப்பான். அஃதாவது அணுவினும் மிக நுண்ணியனாய், மிக மிக அணுகி மறையும் நுண்மை நிலையினனாக இருப்பான். உலகெலாம் ஆகி ஒரு பொருளாய்த் திகழும் திறத்தினை 'சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்' என்பதால் புலப்படுத்துவர். இங்ஙனம் இறைவன் உலகெலாம் ஆகி நிற்பினும் உலகப் பொருள்கள் ஒன்றினும் தோய்வின்றி உள்ளான் என்பதை 'ஒன்று நீ அல்லை' என்று தெரிவிப்பார். எவ்வகைப் பொருள்களும் இறைவன் சார்பின்றித் தாமே தனித்து நிற்கும் ஆற்றல் உடையன அல்ல என்பது 'அன்றி ஒன்று இல்லை' என்பதால் தெளிவாகின்றது. இங்ஙனம் அனைத்துமாய் அவையல்லையாய் நிற்கும் இறைவனைத் தம் ஆன்ம போதம் (தற்போதம்) இழந்து இறைவன் அருளின்வழி அடங்கிய சிவஞானிகளேயன்றித் தம்முணர்வினராகிய ஏனையோர் யாவரும் அறியவல்லாரல்லர். இதனை 'யார் உன்னை அறிய கிற்பார்' என்பதால் தெளிவுறுத்தப் பெறுகின்றது. இங்ஙனம் இறைவனது அருள்வழி நின்று அவனை உணர்ந்து மகிழும் இந்நெறியின் சிறப்பினைத் தாயுமானவர்,

> சென்றுசென் றேயணுவாய்த்
> தேய்ந்துதேய்ந் தொன்றாகி
> நின்றுவிடும் என்றநெறி
> நிற்கும்நாள் எந்நாளோ? (7)[8]

என்று விளக்கிய நுட்பம் ஈண்டு நினைவுகூரத் தக்கது.

**6. புணர்ச்சிப் பத்து (27)[9]** : திருப்பெருந்துறையில் குருவாக எழுந்தருளிவந்து ஆட்கொண்டருளிய இறைவனைப்

---

8. ஷை. ஷை. 7.
9. திருவாதவூர் புராணமும் இது திருப்பெருந்துறையில் அருளிச்செய்யப்பெற்றதாகவே செப்பும்.

பிரியாது போற்றும் பேரன்பினராகிய வாதவூரடிகள் அப்பெருமானின் திருவடிகளைப் பூண்டு அவனைப் பிரிவின்றி ஒன்றி உடனாம் பேரின்ப நிலையினை விரும்பிப் போற்றியும் தழுவியும், விரும்பியும், மாலைபுனைந்தும், மெய்புளகம் கொள்ள அணைந்தும் நிற்பது 'என் பொல்லா மணியைப் புணர்ந்து புடைபட்டு இருப்பது என்று கொல்லோ' என்று நெஞ்சம் நெக்குருகிப் போற்றும் நிலையில் இப்பதிகத்தினை அருளிச் செய்தமையின் இது 'புணர்ச்சிப் பத்து' என்ற திருப் பெயரைப் பெறுகின்றது. இப்பதிகத்திற்கு 'அத்துவித இலக்கணம் — ஒன்றுமல்ல இரண்டுமல்ல என்ற நிலையில் ஒன்றுதல்' என்பது முன்னோர் கருத்துரை. ஆன்மாவும் சிவனும் ஒரு பொருளாகில் ஆன்மா சிவத்துடன் சேர வேண்டியதில்லை. பொருள் ஒன்றானால் பெறுவானும் பேறும் இல்லை. ஆன்மா வேறு, சிவம் வேறு என இரண்டாய் நிற்கும் என்று கூறின் அந்நிலையைச் 'சாயுச்சியம்' என்று சொல்லுவதற்கு இடம் இல்லை. அத்துவிதத் தொடர்பில் அபேதம், பேதம், பேதாபேதம் என்ற மூன்று தன்மையும் ஒருங்கு காணப்படுகின்றது. பொருட்டன்மையால் வேறாகிய ஆன்மாவும் சிவமும் கலப்பினால் ஒன்றாய்ப் பிரிவறக் கலந்து ஒன்றி உடனாகும் நிலையே அத்துவிதம் (இரண்டல்லாதது) எனப்படும் என்று விளக்குவர் சித்தாந்திகள். இப்பதிகத்தில் புணர்ச்சி என்பது அத்துவிதத்தைக் குறிக்கும். மெய்ப்புணர்ப்பு என்பது சுத்தாத்துவிதம். தாடலை (தாள் + தலை) போல் கூடித் திருவடியின்பம் துய்க்கும் உயிர்க்கு உண்மை அறிவு இன்ப வடிவினனாம் சிவபெருமானைத் தன் அன்பினால் பற்றுதலும் அறிவினால் மறவாமையும், ஆற்றலால் துய்த்தலும் ஒரு காலத்து ஓரிடத்து ஒருங்கு நிகழ்வனவாகும்.

பரிந்து வந்து பரமானந்தம்
பண்டே அடியேற் கருள்செய்யப்
பிரிந்து போந்து பெருமாநிலத்தில்
அருமா லுற்றே னென்றென்று
சொரிந்த கண்ணீர் சொரியவுண்ணீர்
உரோமம் சிலிர்ப்ப வுகந்தன்பாய்ப்
புரிந்து நிற்பதென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே (6)

[பரிந்து - இரங்கி; அருமில் - வேறென்றாலும் நீக்குதற் கரிய மயக்கம்; புரிந்து - விரும்பி]

என்பது இப்பதிகத்தின் ஆறாம் பாடல். இப்பதிகப் பாடல்கள் யாவும் படிப்போரைப் பரவசப்படுத்தும் பான்மையவை.

7. **செத்திலாப் பத்து** (23)[10] : ஆன்மா அடைந்த சிவானந்தத்தை அளவு அறுகக முடியாத வண்ணம் சீவபோதம் (பசுபோதம்) இடையிடையே குறுக்கிட்டுத் தடை செய்தலின் அதுவும் சாக வேண்டிச் 'செத்திலேன்' என இரங்குவதாகக் கூறப்பெறுவது இது. ஈண்டுச் சாதல் என்பது பசுபோதம் முற்றும் கெட இறைவனது திருவருளாகிய ஓங்குணர்வில் உள்ளடங்கித் தூங்குதல். அத்தகைய சாதல் தனக்கு வாய்க்க வில்லையே என ஏங்குதலாகிய ஒரு பொருள் நுதலிய பத்துப் பாடல்களையுடைமையால் இது 'செத்திலாப்பத்து' என்ற பெயரைப் பெறுகின்றது. 'பதிகம் என்பது பலவகைப் பொருளையும் தொகுதியாகச் சொல்லுதலாகும். செத்திலாமையாகிய ஒரு பொருளே நுதலிய இது 'செத்திலாப் பதிகம்' என்னாது 'செத்திலாப் பத்து' எனக் குறிக்கப்

10. திருவாதவூரடிகள் புராணமும் இது திருப்பெருந்துறையிலேயே அருளிச் செய்யப்பெற்றதாகவே கூறும்.

பெறுவதாகின்றது. அன்னைப் பத்து, குயில் பத்து, அடைக்கலப் பத்து, யாத்திரைப் பத்து முதலானவற்றிற்கும் இஃது ஒக்கும்.

இதற்குச் 'சிவானந்தம் அளவறுக்கொணாமை' — அதாவது சிவானந்தம் அணுகிச் செயிக்கப்படாமை என்பது பழைய குறிப்பு. 'பசுபோதம் முற்றும் கெடவேண்டலே செத்திலாப் பத்தாகும்' என்று திருப்பெருந்துறைப் புராணம் செப்புகின்றது. தூய நீர் நிலையில் சென்று நீராடப் புகுந்தார் அந்நீரினுள் முங்கி முழுகி இன்புற விழைவரேயன்றி அந்நீரினை வேறாக முகந்து கொண்டு வந்து சிறிது சிறிதாக ஊற்றி முழுக எவரும் விரும்பார். இம்முறையால் ஆன்மபோதம் முற்றும் கெட்டொழிதல் வேண்டும் என இறைவனை வேண்டுபவர் அதற்கு நிலைக்களனாகிய தமது உடம்பும் பொன்றக் கெட இறந்து படவில்லையே என இரங்கி இறைவனை நோக்கி முறையிடும் நிலையில் பத்துப் பாடல்களும் அமைந்துள்ளன.

**அறுக்கி லேன்உடல் துணிபடத் தீப்புக்**
**கார்கி லேன்திரு வருள்வகை அறியேன்**
**பொறுக்கி லேன்உடல் போக்கிடல் காணேன்**
**போற்றி போற்றியென் போர்விடைப் பாகா**
**இறக்கி லேனுனைப் பிரிந்தினி திருக்க**
**என்செய் கேனிது செய்கவென் றருளாய்**
**சிறைக்க ணேபுனல் நிலவிய வயல்சூழ்**
**திருப்பெ ருந்துறை மேவிய சிவனே (6)**

[துணிபட — துண்டுபட].

என்பது இப்பத்தின் ஆறாவது பாடல்.

இப்பத்தின் ஐந்தாம் திருப்பாடலில் ஆட்டுத்தேவர் - உயிர்களின் உள்ளத்தைப் பலதுறைகளில் ஈர்த்து அலைக்

கழித்து ஆட்டுவிக்கின்ற ஐம்புலன்கள்; நாட்டுத்தேவர் — வானநாட்டில் வாழும் இந்திரன் முதலிய தேவர்கள்; சேட்டைத் தேவர் — உலகங்களைத் தொழிற்படுத்தி இயக்கும் காரணேசுவரர்கள் என்று குறிப்பனவாகும். ஏழாம் திருப்பாடலில் "'நமச்சிவாய'வென்று உன்னடிப் பணியாப் பேயனாகிலும் பெருநெறிகாட்டாய்" என்ற தொடர் திரு ஐந்தெழுத்து உயிர்களின் வாசனாமலத்தை ஒழிப்பதாய் இறைவனை வழிபட்டு இன்புறும் பெருநெறிக்குச் சாதன மாகும் என்ற உண்மையினைப் புலப்படுத்துகின்றது.

8. பிரார்த்தனைப் பத்து (32)[11] : பிரார்த்தனை வேண்டுதல். இடையீடில்லாது சிவானந்தப் பெருங்கடலில் திளைக்கச் செய்யுமாறு வேண்டிக் கொள்ளுதல் இதன்கண் விளக்கப் பெறுகின்றது. 'அந்தமிலா ஆனந்தத்து அகலாமல் எனை அழுத்தி ஆள்வாய் என்று, சிந்தை கலந்து உரைத்தலே பிரார்த்தனைப் பத்து.' என்று திருப்பெருந்துறைப் புராணம் கூறும். 'சதா முத்தி' என்பது பழைய குறிப்பு. 'ஆன்மாக் களுக்கு முத்தி நிச்சயம் பண்ணுதல் என்பது இதன் பொருள் இப்பத்தில்,

அருளா ரமுதப் பெருங்கடல்வாய்
    அடியா ரெல்லாம் புக்கழுந்த
இருளா ராக்கை யிதுபொறுத்தே
    எய்த்தேன் கண்டாய் எம்மானே
மருளார் மனத்தோர் உன்மத்தன்
    வருமால் என்றிங் கெனைக்கண்டார்
வெருளா வண்ணம் மெய்யன்பை
    உடையாய் பெறநான் வேண்டுமே (3)

---

11. திருவாதவூர் புராணமும் இது திருப்பெருந் துறையில் அருளிச் செய்யப்பெற்றதாகவே கூறும்.

[இருள் - அஞ்ஞானம்; ஆக்கை - உடல்; மருள்-மயக்கம்; வெருளாவண்ணம் - வெருண்டு ஓடாதபடி]

என்பது மூன்றாம் திருப்பாடல். ஒவ்வொரு பாடலும் சிவானந்தத்தில் அழுந்துவதையே வேண்டுகின்றது.

9. **ஆசைப்பத்து (25)** [12] :உலகப்பொருள்களிலும் வினை வாய்ப்பால் கிடைத்துள்ள பொய்யுடலின்மீதும் தமக்குள்ள ஆசையை அறவே அகற்றித் திருவருளில் தாம் கொண்டுள்ள ஆசையை நிறைவேற்றி அருளும் வண்ணம் அடிகள் தம்மை ஆட்கொண்டருளிய இறைவனை இறைஞ்சி விண்ணப்பிக்கும் பாங்கில் பரவிப் போற்றிய பத்துத் திருப்பாடல்களையுடைய இப்பதிகம் 'ஆசைப் பத்து' என்ற பெயரைப் பெறுகின்றது. 'ஆத்மவிலக்கணம்' என்பது பழைய குறிப்பு. ஆன்ம உருவத்தை அறிதல் என்பது இதன் பொருள். கண்ணொளி விளக்கொளியோடு கலந்து அதனோடு ஓர் உருவைக் கலந்தாலன்றி அவ்வுருவம் காணப்படாதவாறுபோல, உணர்த்த உணரும் தன்மையுடைய ஆன்மாக்கள் அருளோடு கலந்து அதனோடு சிவலிங்கத்தைப் பொருந்தினாலல்லது சிவானந்தம் சேராது என்பதனை அறிவிப்பதால் இஃது ஆன்ம இலக்கணம்' என்று பெயர் பெறுகின்றது.

**கருவியுறும் ஊனுடற்கண் வாராமல்**
**திருவருளில் கலப்ப தற்கே**
**அரனடியைப் புகழ்ந்துபெரு கார்வமொடு**
**பாடுதலே ஆசைப் பத்தாம்**

என்பது திருப்பெருந்துறைப் புராணம்.

---

12. திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பெற்றதாகவே திருவாதவூர் புராணமும் கூறும்.

இந்தப் பத்தில்,

அளிபுண் ணகத்துப் புறந்தோல்
    மூடி அடியே னுடையாக்கை
புளியம் பழமொத் திருந்தேன்
    இருந்தும் விடையாய் பொடியாடி
எளிவந் தென்னை யாண்டு
    கொண்ட என்னா ரமுதேயோ
அளியே னென்ன ஆசைப்
    பட்டேன் கண்டாய் அம்மானே (5)

[அளிபுண் - அளிந்தபுண்; பொடி - விபூதி; அளியேன் - இரங்கத்தக்கவன்.]

என்பது ஐந்தாம் திருப்பாடல். ஒவ்வொரு பாடலும் 'ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே' என்று இறுகின்றது; தலைப்பையும் தகுதியுடையதாக்குகின்றது.

**10. உயிருண்ணிப் பத்து** (34)[13]: சிவானந்தம் மேலிடுதல் என்பது பழைய குறிப்பு. நேயம் மேலிடுதல் என்பது கருத்து. மேலிடுதல் என்பது தோய்ந்ததை அகப் படுத்தல். சிவானந்தமாகிய வெள்ளம் தோய்வதாகிய ஆன்மாவைத் தன்னகப்படுத்தி வெள்ளம் மேலிடுதல், அதாவது தன் தன்மை கெட்டு இன்ப வடிவாயிருத்தல் என்பதாம். இன்னும் விளக்கினால் பசுபோதத்தை உண்டு சிவபோதமே விளங்கித் தோன்றும் நிலை என்பதாகும். இந்த நிலையை அடிகள் தமது அநுபவத் துணைகொண்டு உணர்த்தும் முறையில் அமைந்தது உயிருண்ணிப் பத்து ஆகும். உண்ணி — உண்பது.

13. திருவாதவூர் புராணமும் இது திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பெற்றதாகச்செப்பும்.

தழைத்துவளர் பேரின்பத் தானாகி
யுயிர்தோன்றித் தன்மையாய்த் துன்பு
ஒழித்து நிறைவைப் பெறுதல்
உயிருண்ணிப் பத்தாய்இங்கு உரைத்தாமே

என்பது திருப்பெருந்துறைப் புராணம்.

சிவானந்த மேலீடாகிய இந்நிலையினை, 'இன்பேயருளி யெனை உருக்கி உயிருண்கின்ற எம்மானே' (எண்ணப்பதிகம்-3) என்ற தொடரில் அடிகள் சுட்டியருள்தலைக் கண்டு மகிழலாம். இப்பத்தில்,

வினைக்கேடரும் உளரோபிறர்
சொல்லீர் வியனுலகில்
எனைத்தான்புகுந் தாண்டானென
தென்பின்புரை யுருக்கிப்
பினைத்தான்புகுந் தெல்லேபெருந்
துறையிலுறை யெம்மான்
மனத்தான்கண்ணி னகத்தான்மறு
மாற்றுத்திடை யானே (4)

என்பது நான்காம் பாடல். இறைவன் தன் ஆருயிரை அகப் படுத்திக் கொண்டருளிய திறத்தை 'ஊனாருடல் புகுந்தான் உயிர்கலந்தான் உளம்பிரியான்' (2) எனவும், 'கடலின் திரையதுபோல் வரு கலக்க மலமறுத்தென், உடலும் என துயிரும் புகுந்து ஒழியா வண்ணம் நிறைந்தான்' (6) எனவரும் தொடர்களில் காணலாம். 'உயிரை விட்டுச் சிவம் பிரியாது' என்னும் உண்மையை 'என் மெய்ந்நாள்தொறும் பிரியாவினைக் கேடா' (1) என்ற தொடரில் அடிகள் குறித் துள்ளார். (சிந்தைக்கும் மொழிக்கும் எட்டாதவனாய்த் திகழும் இறைவனை மூன்றாந் திருப்பாடலில் 'மனவாசகம் கடந்தான்' என அடிகள் குறித்துள்ளமை 'மனவாசகம் கெட்ட மன்னனை' (திருமந் 2575) என்ற திருமூலரின் வாய் மொழியை நினைவு படுத்துவதாக அமைந்துள்ளது.

**வாழாப்பத்து (28)**[14] : 'இறைவனாகிய நினது பற்றினையன்றி இவ்வுலகப் பொருள்களில் சிறிதும் பற்றுடையேன் அல்லேன்; உலக வாழ்க்கையில் சிக்குண்டு மேலும் வாழ்தற்கு விரும்புகின்றிலேன்; எளியேனை நின்பால் வருமாறு அழைத்தருளி நின்திருவடி நிழலில் கூட்டி அருள்புரிவாயாக' என்று இறைவனை வேண்டி அழுதரற்றி முறையிடும் நிலையில் அருளிச் செய்யப்பெற்றது இப்பத்து. வாழ்க்கை என்பது பற்றால் விளைவது; அந்தப் பற்று அற்றவிடத்து வாழாமையே வேண்டப்படுவது ஆதலால் 'நான் பற்றும் அற்றிலேன்' என்று கூறி வாழாமை வேண்டப்படுகின்றது. வாழாப்பத்து—வாழவிரும்பாமையைப் புலப்படுத்தும் பத்துப் பாடல்களால் ஆனது. இதில்,

**பஞ்சின்மெல் லடியார் பங்கநீ யல்லால்**
**பற்றுநான் மற்றிலேன் கண்டாய்**
**செஞ்செவே யாண்டாய் சிவபுரத் தரசே**
**திருப்பெருந் துறையுறை சிவனே**
**அஞ்சினேன் நாயேன் ஆண்டுநீ யளித்த**
**அருளினை மருளினான் மறந்த**
**வஞ்சனே னிங்கு வாழ்கிலேன் கண்டாய்**
**வருகவென் றருள்புரி யாயே (6)**
[செஞ்சவே - செம்மையாக; மருள் - மயக்கம்]

என்பது ஆறாம் பாடல். பற்றறுதல் முத்திக்கு உபாயம் ஆதலின் இதற்கு 'முத்தி உபாயம்' என்று பண்டையோர் குறித்தனர், "நீண்ட உலகத்தில் பற்று ஒன்று இலேன்; இவ்வுடற்கண் நின்று வாழேன்; நின்பத நிழற்கீழ் வருக என்று அருள்புரிக" என்று சொல்வது வாழாப்பத்து என்று கூறுகின்றது திருப்பெருந் துறைப்புராணம்.

---

14. திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பெற்றதாகவே திருவாதவூரர் புராணமும் கூறும.

**எண்ணப்பதிகம்** (44)[15] : அடிகள் தமது உள்ளக் கிடக்கையினை இறைவனுக்குத் தெரிவிக்கும் முறையில் இப்பனுவலை ஆக்கியிருத்தலால் இஃது 'எண்ணப்பதிகம்' என்ற பெயர் பெற்றது. எண்ணம் - உள்ளக் கருத்து. 'ஒழியா இன்பத்து உவகை' என்பது முன்னையோர் கருத்துரை. அடிகள் தம்மை ஆட்கொண்டருளிய முதல்வனது திருவருளில் திளைத்துப் 'பாருருவாய பிறப்பற வேண்டும்; பத்திமையும் பெறவேண்டும்; திருவருளைக் காண வேண்டும்; அதற்குத் தடையாகிய உடல் உலகம் முதலியவற்றின் ஆசை அறவேண்டும்' (1) என இவ்வெண்ணங்களை அறிவிப்பதால் இஃது 'எண்ணப்பதிகம்' எனப் பெயர் பெறுகின்றது. இதில் ஆறே பாடல்கள் உள்ளன. ''தில்லை மன்றுள் எழுந்தருளியிருக்கின்ற இறைவனது திருநாமத்தைச் செப்புவதாலுண்டாகும் இன்பத்தை அருளுக என்று வேண்டிக் கொள்வது எண்ணப்பதிகம்'' என்று திருப்பெருந்துறைப் புராணம் கூறும். இப்படிக் கூறுவதால் இப்பதிகம் தில்லையில் அருளப் பெற்றதாக மயக்கத்தை விளைவிக்கின்றது. இதி,

**பத்தில னேனும் பணிந்தில னேனுமுன்**
**உயர்ந்தபைங் கழல்காணப்**
**பித்தில னேனும் பிதற்றில னேனும்**
**பிறப்பறுப் பாயெம் பெருமானே**
**முத்தனை யானே மணியனை யானே**
**முதல்வனே முறையோவென்**
**றெத்தனை யானும் யான்றொடர்ந் துன்னை**
**இனிப்பிரிந் தாற்றேனே. (4)**

என்பது நான்காம் பாடல்.

---

15. தருமபுரப் பதிப்பில் இது தில்லையில் அருளியதாகக் கூறப்பட்டுள்ளது. இது திருப்பெருந்துறைப் புராணத்தைத் தழுவி எழுதியது. ஆனால் திருவாதவூரர் புராணம் இது திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பெற்றதாகவே கூறும்.

**13. பாண்டிவிருத்தம் (36) :** அடிகள் திருப்பெருந்துறையில் எழுந்தருளிய காலத்து தென்பாட்டி நாட்டானாகிய சிவபெருமான் குதிரையின்மீது அழகராக எழுந்தருளி வந்து ஆட்கொண்ட அருமைப் பாட்டினை வியந்து அருளிச் செய்தது. 'இது பாண்டிப் பதிகம்' என்றே வழங்கப் பெறுகின்றது. இறைவன் பாண்டிப் பிரானாக எழுந்தருளிய போது தமக்கு உண்டாகிய 'சிவானந்த விளைவினை அடிகள் விரித்துரைத்தலால் இதற்குச் சிவானந்த விளைவு-சுகமேவீடு' என முன்னோர் கருத்துரை வரைந்துள்ளனர்.

**புரவியின்மேற் பாண்டியன்முன் வரும்பதத்தை**
**யாம்பெரும் அற்புதம்போல் யாரும்**
**விரவுமின்கள் என்றடியார்க் குறுதிசொலல்**
**திருப்பாண்டி விருத்த மாமே.**

என்பது திருப்பெருந்துறைப் புராணக் கூற்று. தாம் பெற்ற சிவானந்த விளைவை எல்லாரும் பெறுமாறு அடியார்கட்கு உறுதி கூறுவது இப்பனுவல்.

இப்பதிகத்தின் இரண்டு பாடல்களில் ஆழங்கால் ஈடுவோம்.

**சதுரை மறந்தறி மால்கொள்வர்**
**சார்ந்தவர் சாற்றிச்சொன்னோம்**
**கதிரை மறைத்தன்ன சோதி**
**கழுக்கடை கைபிடித்துக்**
**குதிரையின் மேல்வந்து கூடிடு**
**மேற்குடி கேடுகண்டீர்**
**மதுரையர் மன்னன் மறுபிறப்**
**போட மறித்திடுமே (2)**

[சதுர்-சாமர்த்தியம்; அறிமால் - ஞானப்பித்து; சோதி-சோதிவடிவினன்; கழுக்கடை - சூலம்; குடிகேடு - குடியின்கட் பிறத்தலின் அழிவு]

என்பது இரண்டாவது பாடல், இதில் ''கதிரவனைத் தன்னு டைய குன்றுதலும் பொன்றுதலும் என்றுமில்லா இயற்கை யறிவுப் பேரொளியான் மறைந்து விளங்கும் பெருஞ் சுடராக வுள்ளவன் சிவபெருமான்; அவன் முத்தலை வேலாகிய கழுக் கடையினைக் கையின்கண் பிடித்து அழகிய வெண்ணிறக் குதிரையின்மேல் எழுந்தருளிப் பேரருளால் வந்து கூடுவன்; அங்ஙனம் கூடுமேல் கண்ட மெய்யன்பர்கட்கு இவ்வுலகப் பிணிப்பு வாழ்வு அகன்றொழியும்; மதுரைமாநகர் வாழ் வாரைத் தன்னுயிரினும் சிறப்பாகக் கருதிக்காவல் பூண்டு ஆட்சிபுரிந்து வரும் மதுரை மன்னனுயைட மறுபிறப்பு அடியோடு நீங்குமாறு போக்கியருள்வன்; திருவருளால் இத் திருக்கோலத்தைச் சார்ந்து காணும் பேறுபெற்ற மெய்யன் பர்கள் தங்களின் திறலை அறவே மறந்து அறிவழியாத பேரன்பு என்று சொல்லப்படும் அறிமால்கொண்டு இன்புறு வர். இவ்வுண்மையினை வாய்ப்பறையாக நாக்கடிப்பாகப் பிறரும் கேட்டு இன்புற்று உய்யுமாறுஎங்கணும் விளம்பிக் கூறினோம்'' என்கின்றார்.

ஈண்டிய மாயா இருள்கெட
எப்பொரு ளும்விளங்கத்
தூண்டிய சோதியை மீனவ
னுஞ்சொல்ல வல்லனல்லன்
வேண்டிய போதே விலக்கிலை
வாய்தல் விரும்பு மின்றான்
பாண்டிய னாரருள் செய்கின்ற
முத்திப் பரிசிதுவே. (6)

[ஈண்டிய - நெருங்கிய; எப்பொருளும் - உயிர் மனம் இறையொளி ஆகிய எல்லாப் பொருகள்; மீனவன் - பாண்டியன்; ஐவாய்தல் - ஐந்து வாயில்களாகிய பொறிகள்]

என்பது ஆறாம் பாடல். இதில், ''ஆருயிர்கட்கு இருள் சார்பாம் மருளினால் திரிபுணர்ச்சி என்று சொல்லப்படும் இருள் உண்டாகும்; அது நீங்கவும், நிலைத்த பொருள்களும்

நிலையாப் பொருள்களும் திருவருளால் நன்கு விளங்கவும் திருவருள் ஒளியோடு கூடிவந்துள்ள பரிமாவின்மேல் இவர்ந்து வந்து தன் இயற்கைப் பொருள் பேரொளியாய் காட்சியளித்து மீனவன்முன் எழுந்தருளி வந்தனன்; அப் பேரொளியின் சார்பு பேற்றால் மீனவனும் அறியாது காணும் வாய்ப்புப் பெற்றனன்; பெற்றும் இன்னவாறு இருந்ததென்று கண்ட மீனவனுக்கும் சொல்ல முடியாது; அவன் அத்தகைய வன்மையுடையவனும் அல்லன்; ஐம் பொறி வாயிலாகச் செல்லும் மனத்தினையும், அம்மனத் தினை இயைந்து தூண்டும் அறிவினையும், 'சென்ற இடத்தால் செலவிடாது தீதொரீஇ, நன்றின்பால் உய்ப்பது அறிவு' ஆதலால் நல்லதன்கண் உய்க்கவும் தீயதன்கண் விலக்கவும், விரும்பினால் விரும்பிய பொழுதே அவ்வாற்றால் சிவபெருமானின் திருவடியினை வேண்டினால் உயிர்கட்குக் கைகூடும். பாண்டியனாகிய தென்னாடுடைய சிவன் திருவருள் செல்கின்ற திருவடியாகிய வீடுபேற்றினைத் தந்தருளும் பரிசும் இதுவேயாகும்'' என்கின்றார்.

19. திருவார்த்தை(43) : சிவபெருமான் குருவாக எழுந் தருளி முழுமுதற்பொருளாகி தன் உண்மையினை வெளிப் படுத்தியருளியது முதலாகத் தன் சீரடியார்களுக்கு அருளிய திறங்களாகிய புகழ்ச்செய்திகளைப் போற்றிப் பரவும் பொருளுரையாக அமைந்தது திருவார்த்தை என்னும் இப் பதிகம். இறைவன் தன் அடியார் பொருட்டு எளிவந்தருளிய செயல்களைக்குறிக்கும் இப்புகழுரைகளை அறிந்து போற்றும் அடியார்கள் எம்பிரான் ஆவார் என அடிகள் இப்பதிகப் பாடல் தோறும் உளமுருகிப் போற்றியுள்ளமை காணலாம்.

**அறம் பெருகும் பெருந்துறையில் தமையாண்ட**
**செயல்முதலா அரனசீ ராட்டின்**
**திறமறிவார் எம்பிரா னாவரென**
**வுரைத்தல்திரு வார்த்தை யாகும்**

என்று திருப் பெருந்துறைப் புராணம் இதற்கு விளக்கம் கூறும்.

'அறிவித்து அன்புறுதல்' என்பது இப்பதிகத்திற்கு முந்தையோர் கூறிய குறிப்புரை. அதாவது, 'நின்னால் அறியப் படாதது உரைக்க அறிவை என்றது' இதன் பொருள். சிவனார் திருவாய் மலர்ந்தருள்வது வேதவாக்கு. அந்த வேதவாக்குப்படி பிரம்மம், விஷ்ணு, நாராயணன், சிவம் என்னும் சொற்களெல்லாம் ஒரே பரம்பொருளைக் குறிக்கின்றது. இதுவே திருவார்த்தை; அதாவது மெய்ப் பொருள் விளக்கம். 'வார்த்தை' என்ற சொல்லை அடிகளே தாம் அருளிய திருவாசகத்தில் பல இடங்களில் ஆண்டுள் ளார். 'வாக்கு உன் மணி வார்த்தைக் காக்கி'(30) எனவும், 'வார்த்தையும், பேசி' (166), எனவும், 'என்னை ஓர் வார்த் தையுட்படுத்துப் பற்றினாய்' எனவும்,

**'சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்**
**திரண்டு திரண்டுன் திருவார்த்தை**
**விரிப்பார் கேட்பார் மெச்சுவார் (384)**

எனவும் ஆண்டிருத்தல் காணலாம். இங்கெல்லாம் இச் சொல் இறைவனது பொருள்சேர் புகழ் என்ற பொருளிலும், இறைவன் அருளிய உபதேசமொழி என்ற பொருளிலும் ஆளப் பெற்றுள்ளது. எனவே, அவரருளிய வார்த்தை 'திருவார்த்தை' என்ற சிறப்புடன் இறைவனது புகழை விரித்துரைக்கும் திருவுடைய வார்த்தை எனவும், இறைவ னால் திருவாய் மலர்ந்தருளப் பெற்ற திருவுடைய உபதேச வார்த்தை எனவும் இரு வகையாகப் பொருள் கொள்ளும் முறையில் அமைந்துள்ளதைக் கண்டு தெளியலாம்.

இப்பதிகத்தில் இறைவனது திருவார்த்தைகளாக அருளிச் செய்யப் பெற்றவை; திருப்பெருந்துறையில் அடிகள்

பொருட்டுக் குருநாதனாக எழுந்தருளி ஆதிபிரம்மம் (மெய் பொருள்) வெளிப்படுத்தியது (1); இடவை (திருவிடை மருதூர்) யிலுள்ள கற்புடைய மாது ஒருத்தியை வரகுண பாண்டியன் மணந்தான்; நல்லதையெல்லாம் சிவனுக்கு அளிக்கும் அவ்வரசன் இப்பெண்மணியையும் பரமனுக்கு அளித்தான். சிவபெருமான் அவளைத் தன் சொரூபத்தில் இலயமாகும்படி செய்தார் (2); வலைஞர் மகளாகத் திருவ வதரித்த உமாதேவியாரை நேசித்து அவரைத் திருமணம் புரிந்து அவர்க்குத் தன் இடப்பால் உடம்பினைக் கொடுத் தருளி உலகினை வாழ்வித்தருளினன் (3); மகேந்திர மலைக் கண் வேட்டுவன் உருவாகி ஆகமம் அருளிய பெருமான ஆடலமர்ந்த பரிமாஏறி எல்லா இடத்திலுமுள்ள தொண்டர் களை ஆட்கொண்டருளினன் (4); கடலினைக் கடந்து இலங்கை நகர்சென்று இராவணன் மனைவியாகிய மண்டோ தரிக்குப் பேரருள் புரிந்தனன் (5); அம்பு பட்டு ஆவி நீத்த ஒரு பெண் பன்றிக்கு இரங்கிப் பன்றி வடிவுகொண்டு பன்றிக்குட்டிகட்குப் பால் கொடுத்தருளினன் (6); தங்கள் கணவன்மார்களை இழந்த கலைமகளும் திருமகளும் சிவபெருமானே வழுத்தியதனால் அன்னவர்களை அவர்கள். மீண்டும் உயிர் பெற்றுச் சுமங்கலிகளாயினர் (7); வருணனது வேள்வித்தீயில் தோன்றிய மங்கையரை மணந்து தன்மயமாக்கிய பெருமையுடையவன் (8); அடிகள் மீது கருணை காட்டி அவர் சென்னிமிசை திருவடிகளை வைத்து ஆட்கொண்டவன் (9); மதுரை மாநகரின்கண் நற்றவப் பயன்சேர் நங்கைமார்தம் கையிலுள்ள வளையல்களை எடுத்துக் கொண்டு அவர்கட்குத் திருவடிப்பேறு நல்கவும் வாணிகச் சாத்துடன் தோன்றியருளிய வாய்மைத் திற லோன் (10); இறைவனின் இந்தப் பொருள்சேர் புகழ்ச் செய்திகளைப் போற்றும் அடியார்கள் தமக்கு இறைவன் என்கின்றார்.

இங்ஙனம் அடியார்களைத் தம் தெய்வமாகக் கொண்ட தாக நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழி ஒன்றுண்டு (3.7). இதில் நம்மாழ்வார் பாசுரங்கள் தோறும் அடியார் களைத் தெய்வமாகக் கூறுவதைக் காணலாம். 'பரமனைப் பயிலும் திருவுடையார்...எம்மையாளும் பரமரே' (1) எனவும் 'கண்ணன் எம்மான் தன்னைத் தாளும் தடக்கையும் கூப்பிப் பணியும் அவர்...பிறப்பிடை தோறும் எம்மை ஆளும் பரமரே' (2) எனவும் எந்தை பிரான் தன்னைப் பாதம் பணிய வல்லாரைப் பணியும் அவர்...எம்மையாளுடையார்களே' (3) எனவும், 'திருநாரணன் தொண்டர்...எமக்கு எம் பெரு மக்களே' (4) எனவும், இவ்வாறாகவும் கூறுவதைக் கண்டு மகிழலாம். திருவாசகமும் திருவாய்மொழியும் ஒரு பொரு ளுடையவை அன்றோ?

15 திருவெண்பா (47) : மாணிக்கவாசகர் தாம் பெற்ற சிந்தையின் நிறைவாகிய சிவமே பெறுந்திருவினை, பெறாத ஏனையோரும் பெற்று மகிழுமாறு விளங்க அறிவுறுத்தும் திருப்பனுவல் இது. இதனால் இது 'திருவெண்பா' என்ற அழகிய பெயரினைப் பெறுகின்றது. அறிவினால் சிவமேயாகிய அடிகளின் சிவமாந்தன்மைப் பெருவாழ்வினைத் தெரிவிப்பது பற்றி இதற்கு 'அணைந்தோர் தன்மை'[16] என்று முன்னோர் கருத்துரை வரைந்தனர். தொட்டதையெல்லாம் பொன்னாக்கும் பரிசவேதியைப் போலச் சிந்தையைத் தீண்டிய அளவில் சீவனைச் சிவமாக்கிய திருவருள் தன்மையை விரித்துரைக்கின்றது. இதன் உட்கருத்தை,

---

16 **அணைந்தோர் :** சிவனை சீவன்முத்தர் பரமுத்தி அடைந்தோர், உடம்பைத்துறந்து பெறும் இன்பத்தை இவர்கள் உடம்போடு பெறுகின்றனர்.

தொந்தமா மலமறுக்கும் சுகம் பெருக்கிப்
பெருந்துறைவாழ் சோதி என்றன்
சிந்தையே ஊராகக் கொண்டிருந்தான்
என்றுரைத்தல் திருவெண் பாவாம்

என்று கூறும் திருப்பெருந்துறைப் புராணம். இது பதினொரு வெண்பாக்களையுடையது.

பொய்யும் வினையிரண்டும், வெந்தகல மெய்யுருகிப்
பொய்யும் பொடியாகா தென்செய்வேன்—செய்ய
திருவார் பெருந்துறையான் தேனுந்து செந்தீ
மருவா திருந்தேன் மனத்து (1)

(பொய்—பொய்யான வாழ்வு)

என்பது இதன் முதற் பாடல். இதில் "மகிமையோடு கூடிய ஞானத் தீயாக மிளிர்பவன் சிவன். அவன் சொரூபத்தில் என்னைச் சேர்த்துவிட்டால் நல்வினையும் தீவினையும் தூசாகிப் பொசுங்கிப் போகும். பஞ்ச பூதங்களால் ஆகிய பொய்யுடலும் வெந்து போகும். திருநீறு போன்ற சிவ சொரூபமே எஞ்சி நிற்கும். அதுவே சிவானந்தம் என்னும் தேன் ஆகும்.

மாணிக்கவாசப் பெருமான் பெற்ற சிவானந்தத் தேனாகிய பேரானந்தத்தினை இப் பனுவலின் பாடல்கள் தெளிவாக விளக்குகின்றன. "என் உள்ளத்தில் ஒளிர்கின்ற சிவ உணர்வு யாண்டும் உள்ளபடி அசலமானது. அஃது இரண்டற்ற தனிப் பொருள். அது பேரானந்த சொரூபம், அநுபூதியில் அதை அறிந்து கொண்டதனால் இனி எனக்குப் பிறப்பும் இல்லை; இறப்பும் இல்லை. நான் பெற்றுள்ள பேறு முத்தியாகும்"(7)

"சிவன் அகண்ட பொருள். பரிபூரணன். அற்பனாகிய என்னை அவன் உலகு அறியத் தன்மயமாக்கினான். இதற்கு

எப்படி நன்றி செலுத்துவது என்று எனக்கு விளங்கவில்லை" (8), "கட்புலனாகாத பொருள் தன்னைக் கட்புலனாக்குபடி கீழ்நிலைக்கு இறங்கி வந்தது அடியவர்களின் மீது அவன் வைத்துள்ள இரக்கத்தினாலேயாகும்" (9). இக்கருத்தைத் தெளிவாக்குதல் இன்றியமையாதது. கட்புலனாகாத நீராவி கட்புலனாகும் மேகமாக மாறுகின்றது. பிறகு அது மழையாக இறங்கி உயிர்கட்கு உணவாகின்றது. அங்ஙனம் நிர்க்குண நிராகாரப் பரம்பொருள் சகுணசாகர மூர்த்தியாகின்றது. அந்த மூர்த்தி பக்குவமான ஆன்மாக்களை உய்விக்கின்றது. சிவபெருமான் குருந்த மரத்தடியில் குருநாதனாக எழுந்தருளியது, குதிரைச் சேவகனாகப் போந்தது, பிட்டுக்கு மண் சுமந்தது இக்கோட்பாட்டுக்குச் சான்றுகளாகின்றன.[17] இறுதிப் பாடலில் "தொண்டன் உள்ளம் சிவபெருமானின் பெருங்கோயில் ஆகின்றது" (11) என்ற கருத்து தெரிவிக்கப் பெறுகின்றது.

16. **பண்டாய நான்மறை** (48) : 'பண்டாய நான்மறை' என்பது முதற்குறிப்பாற் பெற்ற பெயர். பண்டாய நான்மறை என்பது, இன்னநாள் என்று ஒருவராலும் அளந்தறிய முடியாத தொன்மைக் காலத்தே இறைவனது வாய்மொழியாகத் தோன்றிய நான்மறைகளை. அத்தகைய வேதங்களும் தனது இயல்பினை நுணுகி அரிய முடியாமல் 'ஐயா' என ஓலமிட்டு அலற அவற்றுக்கு அகப்படாது மேலோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியன் இறைவன் என்பார் 'பண்டாய நான் மறையும் பாலணுகா' (1) என்கின்றார். உலகம் காக்கும் மூவருள் திருமாலும் அயனும் இறைவனாகிய

17. வைணவசித்தாந்தப்படி அவன் (பரவாசுதேவன்) இராமன் கிருட்டிணன் போன்ற அவதார மூர்த்திகளாய் உலகில் வந்து தர்மத்தையும் பரதத்துவத்தையும் மக்களுக்கு விளக்கியருள்கின்றான். அவன் கருணாகரன்.

பெருமானை உள்ளவாறு காணப்பெற்றிலர் என்பார் 'மால்அயனும் கண்டாரும் இல்லை' (1) என்கின்றார். இங்ஙனம் திருமாலும் நான்முகனும் காணாக் கடவுள் தன் கருணையினால் எளிவந்து தோன்றி என்னைத் தன் தொண்டனாக ஏற்றுக் கொண்டருளினான். அவனது கைம்மாறு வேண்டாக் கடப்பாடாகிய பேரருளுக்குக் கடையேன் செய்யும் கைம்மாறு எதுவும் இல்லை என்பார் 'கடையேனைத் தொண்டாகக் கொண்டருளும் கோகழி' எம்கோமாற்கு நெஞ்சமே உண்டாமோ கைம்மாறு உரை என்கின்றார்.

இப்பனுவலில் ஏழு வெண்பாக்கள் உள்ளன. இவை ஒன்றோடொன்று பொருள் தொடர்பு உள்ளனவாக அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன. திருப்பெருந்துறை இறைவனை நண்ணி வழிபடும் நம்மவராகிய அடியார்கள் அனைவரும் பாசத்தொடர்பு அற்று இடர்கள் எல்லாம் நீங்கிப் பேரின்ப வாழ்வு பெற்று இன்புறுவர் என்ற உண்மை யினை அடிகள் தமது அநுபவம் கொண்டு ஐயமின்றித் தெரிவிக்கும் முறையில் அமைந்தது இத்தெய்வப்பனுவல். ஆகவே, இதற்கு 'அநுபவத்திற்கு ஐயமின்மை உரைத்தல்' என இதற்குக் கருத்துரை வழங்கியுள்ளனர் முன்னோர். 'திருப்பெருந்துறையை வாழ்த்துகின்ற அடியார்களே, பாசபந்தம் அறுத்து வாழ்வார்கள் என்பதைச் சொல்வது பண்டாய நான்மறையாம்' என்று கூறும் திருப்பெருந்துறைப் புராணம்.

இப்பனுவலின்கண் உள்ள பாடல்கள் அடிகளது அநுபவத்தினை இனிது புலப்படுத்தும் நிலையில் அமைந் திருத்தலைக் காணலாம். 'சிவஞானம் என்னும் தேனை சிவன் நல்கியருள்கின்றான். அதன் விளைவாக மும்மலங்கள் அழிகின்றன. பிறவிக்காடு வேரோடு அழிந்து போகின்றது'(2)

'சிவபெருமான் அடியார்க்கு எளியவன். அருச்சுனனுக்காக அவன் காட்டில் வேடனாக வந்தான். கடலில் வலையவ னாக வந்தான். நாட்டில் நமக்காகக் குதிரைப் பாகனாக— பரிமேலழகனாக—வந்தான். அவனை வழுத்தினால் வினை யும் அஞ்ஞான இருளும் ஒழியும்' (3). 'சிவவழிபாட்டின் வாயிலாக பக்தன் நிலைபெற்ற திருவடி வாழ்வினைப் பெறலாம். இது முத்திக்கு வித்தாகின்றது' (4). 'சித்தமிசை நீங்காது குடிகொண்டிருக்கும் சிவசக்தியைச் சார்ந்திருக்கு மளவு துன்பங்கள்மறைந்தொழிகின்றன' (5). 'உள்ளத்தினுள் அந்தர்யாமியாய் அமர்ந்திருந்து ஆங்கு எழுகின்ற எண்ணங் களுக்கெல்லாம் சாட்சியாயிருப்பவனைச் சாருமளவு நம்வாழ்வு நல்வாழ்வு ஆகின்றது' (6). பரமசிவனை மாசிலா மணி (அல்லது தோஷரகிதன்) எனலாம். அவன் நாதாதீதன். அத்தகைய பெரிய பொருள் என்நெஞ்சில் நீக்கமற நிறைந் துள்ளான். எனக்கு நன்மையே செய்யும் அவனைப் பற்றிப் பேசவேண்டும். பிறவிப்பிணியைப் போக்கும் அமுதமாய் இருக்கின்றான் அவன்' (7)

17. **ஆனந்தமாலை** (50) : ஆராஅன்புடைய மெய்யடி யார்களுடன் கூடிய பெருமானது பேரானந்தத்துப் பிரியா திருக்கப் பெறும் இன்பத்தின் இயல்பினை. விரும்பியுரைப்ப தாக அமைந்துள்ளது. ஆதலால் இஃது 'ஆனந்தமாலை' என்னும் திருப்பெயர் பெறுகின்றது. மாலை—இயல்பு. இது தொல்காப்பியத்தால் (தொல். சொல் - உரி-15) அறியப் படும். சிலம்பில் உள்ள 'துன்ப மாலை' என்னும் தலைப்பினைப் போன்று இன்பத்தின் இயல்பினை விளக்கும் இப்பனுவல் 'ஆனந்த மாலை' என்றாகின்றது. இதற்குச் 'சிவாநுபவ விருப்பம்'—அதாவது 'சிவாநந்த மேலீட்டில் கிரியா சக்தி அழிவு உரைத்தல்' என்று முன்னையோர் கருத்துரைப்பர். திருப்பெருந்துறைப் புராணமும் 'மோகமிகும் அடியா ரொடுங் கூட விரும்பியது ஆனந்தம்' என்று

கூறுவதால் இக்கருத்து வலியுறுகின்றது. இதில் ஏழு பாடல்கள் அடங்கியுள்ளன.

மின்னே ரனைய பூங்கழல்கள்
அடைந்தார் கடந்தார் வியனுலகம்
பொன்னே ரனைய மலர்கொண்டு
போற்றா நின்றார் அமரரெல்லாம்
கன்னே ரனைய மனக்கடையாய்க்
கழிபுண் டவலக் கடல்வீழ்ந்த
என்னே ரனையேன் இனியுன்னைக்
கூடும் வண்ணம் இயம்பாயே (1)

*[ஏர் - அழகு; அனைய - ஒத்த; கடையாய் - கடைப் பட்டவனாய்; அவலக் கடல் - துன்பக் கடல்]*

என்பது இப்பனுவலின் முதற் பாடல். 'மின்னேர் அனைய பூங்கழல்கள்' எனத் தொடங்குவதால் இதையே இப் பனுவலின் தலைப்பாகக் குறித்தலும் உண்டு. இதில் ''மின்னலையொத்தவைகளும் அழகிய தாமரை மலரை யொத்தவைகளுமாகிய நின் திருவடிகளையடைந்த அடியார் கள் பேருலகங்கள் அனைத்தையும் கடந்து எய்தற்கரிய பெரும்பேறு பெற்றனர். துறக்கவுலகத்து வாழும் தேவர்க ளெல்லாம் பொன் போன்ற மலர்களைக் கொண்டு வழிபடு கின்றனர். கல்லையொத்த சடபுத்தியையுடையவன் நான்; மிக மட்டமானவன் என்று அறிஞர்களால் தள்ளி வைக்கப் பட்டவன். துன்பக் கடலில் விழுந்து சிறுமையால் எனக்கு நானே ஒப்பானேன். இனி உன்னை அடையும் வகையைக் கூறியருள்க'' என்கின்றார்.

'இப்பாடல்களில் 'இனி உன்னைக் கூடும் வண்ணம் இயம்பாயே' (1) எனவும், 'பன்னாள் உன்னைப் பணிந் தேத்தும் பழைய அடியாரொடுங் கூடாது, என் நாயகமே பிற்பட்டிங்கிருந்தேன் நோய்க்கு விருந்தாயே' (2) எனவும்,

கோலங்காட்டி யாண்டானைக் கொடியேன் என்று கூடுவதே (3) எனவும் வரும் திருப்பாடல்களின் தொடர்கள் அடியார் கள் பலரும் இறைவனைத் தலைப்பட்டு இன்புற்றிருக்க, அந்த இன்பப் பேற்றில் திளைக்கும் நிலையை அவாவிய அடிகளின் விருப்பத்தினை நன்கு புலப்படுத்துகின்றன என்பதைத் தெளியலாம்.

**சீல மின்றி நோன்பின்றி**
**செறிவே யின்றி அறிவின்றித்**
**தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்**
**சுழன்று விழுந்து கிடப்பேனை**
**மாலுங் காட்டி வழிகாட்டி**
**வாரா உலக நெறியேறக்**
**கோலங் காட்டி யாண்டானைக்**
**கொடியேன் என்றே கூடுவதே (3)**

[சீலம் - சரியை; நோன்பு - கிரியை; செறிவு - யோகம்; அறிவு-ஞானம்; தோலின்பாவை-தோற்பொம்மை; கோலம் - குருவடிவான அழகு]

என்பது மூன்றாம் பாடல். அதில் "என்னிடத்தில் நல்லொழுக்கம் இல்லை; விரதம் இல்லை; அடக்கம் சிறிதளவும் இல்லை: விவேகமும் இல்லை; நான் வீணில் அலைந்து திரிவது தோற்பாவைக் கூத்தாகும். நான் கொண்டுள்ள மயக்கத்தை நீக்குதற்கான வழியை நினைவூட்டி நன்னெறியைப் புகட்டியுள்ளாய். நின் திருக் கோலத்தைக் காட்டி முத்திநெறியையும் காட்டியுள்ளாய். தீ நெறியில் ஒழுகும் நான் உன்னை எப்பொழுது கூடுவேனோ தெரியவில்லை" என்கின்றார்.

சீலநெறி நில்லார் மாலின் மெய்ம்மை தேறார். நோன்பு நெறி நில்லார் நாடற்கரிய நன்னெறியின் பீடுணரார்;

செறிவாகிய அகத்தவப்பயிற்சியில்லார் ஆண்டான் சிவகுரவனாக எழுந்தருளி வந்து ஆட்கொண்டருளும் அருட்டிருக் கோலத்தினைக் கண்டு வணங்கும் கடன் எய்தார். அறிவு நெறி நில்லார் ஆண்டான் அறிமைத் திறம் பூண்டு காண்டலும் கருதலும் மீண்டு வருதலும் இல்லாப் பேரின்பம் பூண்டு பெருவாழ்வு எய்தார். வாராவுலகம்—வானோர்க்கும் உயர்ந்த உலகம். ''யான் எனது என்னும் செருக் கறுப்பான்'' (குறள்—346) எய்தும் பேரின்ப உலகம். சீலத்தார்க்கு மால் காட்டுதலும், நோன்பினர்க்கு வழிகாட்டுதலும் நெறியினர்க்குக் கோலங் காட்டுதலும், அறிவினர்க்குத் திருவடிப்பேறு அளித்து ஆட்கொள்ளலும் சிவபெருமான் திருவருளாகும். 'சீலமின்றி நோன்பின்றிச் செறிவேயன்றி அறிவின்றி என்ற தொடர்.

செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின் (குறள்—123)

என வரும் திருக்குறள் அடியொற்றி அமைந்திருப்பதைக் கண்டு மகிழலாம்.

நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞாலமெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரை யெல்லாம்
பிச்ச தேற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே அவிநாசி
யப்பா பாண்டி வெள்ளமே
தெரிய வரிய பரஞ்சோதி
செய்வ தென்றும் அறியேனே (7)

(குதிரைப்பரி - குதிரையாகிய விரைந்து செல்லும் ஊர்தி; பிச்சது ஏற்றும் - திகைக்கச் செய்யும்)

என்பது ஏழாம் (இறுதிப்) பாடல். இதில் "நரியைக் குதிரை ஊர்தியாக்கி உலகமெல்லாம் பரவச் செய்தாய். பாண்டியன் ஆண்ட மதுரை நகர் முழுவதும் பித்து ஏறும்படி செய்தாய். திருப்பெருந்துறையுடையவனே, அருமையாகிய மெய்ப் பொருளே, நாசமடையாத தந்தையே, பாண்டிக் கருணைக் கடலே, கட்புலனாகாத ஆன்ம சோதியே, உய்வு அடைவ தற்கு நான் செய்யக் கிடப்பது யாது? என்று சிறிதும் அறியாதிருக்கின்றேன்" என்று கூறுவதில் திருவாதவூரடிகள் பெற்ற பேரின்பமாகிய ஆனந்தவெள்ளத்தின் இயல்பு தெளிவாகப் புலனாதலைக் கண்டு மகிழலாம்.

இதுகாறும் அருளிய பதிகங்கள் யாவும் திருக்கோயிலில் குருந்த மரத்தடியில் ஆசிரியத் திருமேனி கொண்டு ஆட்கொண்ட பின்னரும் அதன் பின்னர் ஆசிரியர் தம் சீடர்களுடன் மறைந்த பின்னரும், அருளப் பெற்றவை யாகும், இதன் பின்னர்ப் பாடியவற்றை அடுத்துக் காண்போம்.

# 5. பெருந்துறை (நகர்) அருளிச் செயல்கள்

குருநாதர் சீடர்களோடும் மறைந்தமைக்கு ஆற்றாது வருந்திப் பல பதிகங்களைப் பாடிய அடிகள் பெருந்துறை நகரினுள் செல்லுகின்றார். அங்குக் காணும் பல காட்சிகள் பற்றி பல திருப்பதிகங்கள் அருளுகின்றார். அவற்றை ஈண்டுக் காண்போம்.[1]

**18 திருப்பொற் சுண்ணம் (9)**[2] : இருபது பாடல்களைக் கொண்ட இப்பனுவல் திருக்கோயில்களில் இறைவனது திருமேனிப் பூச்சுக்குரிய பொன்னிறமான மணப்பொடியினை இடிக்கும்பொழுது இளமகளிர் பாடும் வரிப்பாடல்களாக அடிகளால் அருளிச் செய்யப் பெற்றது. பாடல்தோறும் 'ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே' எனப் பயின்று வருதலால் இப்பனுவல் 'திருப்பொற் சுண்ணம்' என்ற திருப்பெயரைப் பெறுகின்றது. உடற் பூச்சுக்குரிய மணப் பொடியினை இடித்தமைக்கும் செயலில் ஈடுபட்ட மகளிரது உள்ளம் அந்நறுமணத்தின் தொடர்பால் மகிழ்ச்சி நிலையினை அடைதல் இயல்பாகும். இங்ஙனமாகத்

1. ஈண்டுப் பாடியதாகக் குறிப்பிடப் பெறும் 'திருஅம்மானை' யை திருவண்ணாமலை அருளிச் செயல்கள்' (கட்டுரை—7) என்றதன் கீழ்க் காண்க.
2. இது திருத்தில்லையில் அருளிச்செய்யப் பெற்றதாகக் கூறுவர் கடவுள் மாமுனிவர்,

திருக்கோயிலில் இறைவனுடைய திருமஞ்சனத்துக்குரிய நறுமணப் பொடியினை இடிக்குந் திருப்பணியில் ஈடுபட்ட மகளிரின் உள்ளமோ வையத்து வாழ்வினை மறந்து இறைவன் திருவருளாகிய தெய்வமணத்தில் ஒன்றித் திளைக்கும் பெரு மகிழ்ச்சி அடைதல் இயல்பாகும். அன்றியும், மணப்பொடியை இடிக்குங்கால் தம் தலைவனின், புகழைப் பாடிக் கொண்டு இடிப்பதால் இசை தொழிலில் துயர் தோன்றாதவாறு தடுப்பதோடு பொருளால் இன்பத்தையும் விளைவிக்கும்.[3] எனவே, திருப்பொற்சுண்ண மிடிக்கும் இளமகளிரது உரை யாடலாக அமைந்த இப்பனுவலுக்கு 'ஆனந்தமனோலயம்' என்று முன்னோர் கருத்துரை கூறினர்; இதற்கு விளக்க உரை அளித்தோர் 'தானன்றி நிற்றல்' என்றனர். சிவானந்தத் தால் தான் கெட்டு மனோலயமான பிறகு தோன்றுவது ஒன்றுமின்மையின் தானன்றி நிற்றல் என்பது சரியான உரையாக அமைகின்றது.

நாம் பெற்றுள்ள உடல், கருவி, உலகு, நுகர்பொருள் (தநு கரண புவன போகம்)ஆகிய இவை யாவும் தம்பாலுள்ள வாலாமை நீங்கித் தூயனவாய் இறைவனது திருமேனிப் பூச்சுக்கு ஏற்ற இனிய நறுமணப் பொடியாய் நுணுகும்படி அவற்றை மாற்றியமைத்தருளும் வண்ணம் அருட்சக்திகளை அழைப்பது இத்திருப்பொற் சுண்ணத்தின் உட்கிடை என்று கூறுவர் பெரியோர். இந்நுட்பம்,

---

3. உலக்கை கொண்டு இடிக்கும் நிலையில் பாடுவதாக அமைந்த இப்பனுவல் சிலம்பில் வரும் வள்ளைப் பாட்டினையும், அடியார்க்கு நல்லார் உரையில் குறிக்கப்பட்ட அவலிடி என்னும் வரிப்பாடலை யும் ஒத்த அமைப்புடையதாக இருப்பது உய்த் துணரத் தக்கதாகும்.

**சத்திகளாற் றநுகரண**
**புவனபோ கங்கள்தமை**
**அத்தனுக்குச் சுண்ணமவை**
**யாயிடிக்கக் கூவுதலே**
**ஒத்ததிருச் சுண்ணம்.**

எனவரும் திருவாசக உண்மையால் தெளிவாகும்.

சுண்ணம் இடிக்கும் முறைபற்றிய செய்திகள் இப்பனுவற் பாடல்களால் அறிய முடிகின்றது. சுண்ணம் இடத்தை மெழுகித் தூய்மை செய்து நவமணியும் பொன்னுமாகிய நிதி பரப்பி முத்துமாலை முதலியவற்றால் அணி செய்து (3) முளைக் குடம் வைத்துத் தூபம் தீபம் முதலியன அமைத்துக் (1) கவரிவீசிக் கொடி எடுத்துச் சிறப்பு செய்யப் பெறும் (3). சுண்ணம் இடிக்கும் கருவியாகிய உரலுக்குப் பட்டுசாத்தி உலக்கைக்குப் பூண் முதலியன அணிந்து 'நேச முடைய அடியார்கள் நீடு வாழ்க' என வாழ்த்தி இறைவனைப் பாடுதல் மரபு(4). பொற்சுண்ணத்திற்குரிய மணப்பொருளில் மஞ்சள் சிறப்புடையது (9). சுண்ணம் இடிக்கக் குழுமிய மகளிர்களாக சத்தி (ரௌத்திரி), சோமி (திருமகள்), பார் மகள், நாமகள், சித்தி (கணபதியின்சத்தி), கௌரி (காளி), பார்ப்பதி (உமை), கங்கை என எண்மர் ஒரு பாடலில் (1) குறிக்கப் பெற்றுள்ளனர். இக்குறிப்பினைத் துணையாகக் கொண்டு 'அட்ட சிவசத்தியும் திருவையாறகலாத செம்பொற் சோதியை வணங்குதல்' என இப்பதிகத்திற்குக் கருத்துரைப்பர் சீகாழித் தாண்டவராயர்.

ஐயன் அணிதில்லை வாணன் திருமஞ்சனம் ஆடுதற் குரிய அழகிய சுண்ணத்தினை அமைக்க வேண்டுமானால் அதற்கு உலகமே உரலாகவும், மேருமலையே உலக்கை யாகவும், மெய்ம்மையாகிய உயர்ந்த குணமே மஞ்சளாகவும் கொண்டு திருப்பெருந்துறையில் கோயில் கொண்டருளிய

இறைவனுடைய திருவடிகளைப் பாடிப்பாடிச் செம்பொன் உலக்கையை வலக்கையிற் கொண்டு இடித்தல் வேண்டும். இதனை,

வையக மெல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே (9)

[அட்டி - இட்டு: மெய் - உண்மை]

என வரும் திருப்பாடலில் அடிகள் அருளியுள்ளார். இத்திருப் பாடல் இறைவனது பெருமையினையும் அப்பெருமானது திருமேனிக்குரிய பொற்சுண்ணம் இடித்தலாகிய திருப் பணியின் அருமையினையும் இனிது புலப்படுத்துதல் காணலாம்.

ஒரு பாடலில் சிவதத்துவம் கூறப்பெறுகின்றது.

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே (13)

என்றபாடலில் இத்தத்துவத்தைக் காணலாம். இறைவன் ஆணும் பெண்ணுமாய் உயிர்கட்கு அருள்செய்யும் திருக் குறிப்புடன் சிவமும் சக்தியுமாகத் திகழ்தல்பற்றி சிவ

பெருமான் சக்திக்குக் கணவன் ஆகின்றான், 'இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன்.' சிவதத்துவத்தினின்றும் சக்திதத்துவம் தோன்றுதல் பற்றிச் சிவன் சக்திக்குத் தந்தையாகின்றான். சக்தி தத்துவத்தினின்றும் சதாசிவதத்துவம் தோன்றும் முறைபற்றிச் சிவன் சக்திக்கு மகன் ஆகின்றான். சுத்தமாயையினின்றும் இறைவனது ஞானசக்தியின் தூண்டுதலால் சிவதத்துவமும், கிரியாசக்தியின் தூண்டுதலால் சக்தி தத்துவமும் முன்பின்னாகத்தோன்றும் முறைபற்றிச் சிவன் சக்திக்குத் தமையன் எனப்படுகின்றான். இங்ஙனம் அம்மையொடு அப்பனுக்குள்ள பிரிக்க வொண்ணாத தொடர்பினை உலகியல் உறவு முறைபற்றி உருவகஞ் செய்துரைப்பதாக அமைகின்றது இத்திருப்பாட்டு.இப்பாடல்களில் பல சிவபராக்கிரமங்கள் நுவலப்பெறுகின்றன.

**திருக் கோத்தும்பி(10)**[4], தும்பி என்பது ஒருவகை வண்டு. தலைமையுடையவண்டு கோத்தும்பி. நறுமலர்களில் படிந்து தேனுண்டு மகிழும் தலைமை வாய்ந்த அரசவண்டு மகிழ்ச்சி மிகுதியால் தேனுள்ள மலரையே சுற்றிச்சுற்றிச் சுழன்று பறத்தலைப் போல, விளையாடும் பருவத்து இளமகளிர் மகிழ்ச்சி மிகுதியால் ஒருவர்க்கொருவர் கைகோத்துக் கொண்டு சுற்றி விளையாடும் விளையாட்டினைத் தும்பி படித்தல் என்பர். இந்தவிளையாட்டில் ஈடுபட்ட இளமகளிர் கோத்தும்பியை முன்னிலைப் படுத்தி, அம்பலவனின் தேனார் கமலமாகிய திருவடித் தாமரையிலேயே சென்று படிந்து அவனது திருப்புகழாகிய இசையினையே இடைவிடாது இசைக்கும் வண்ணம் வேண்டிப் பாடுமாறு அமைந்த பனுவலாதலின் இது **'திருக்கோத்தும்பி'** என்ற திருப்பெயரினைப் பெறுகின்றது. பிரிவாற்றாத தலைவி தலை

4. இது தில்லையில் அருளப்பெற்றதாகக் கூறுவர் கடவுண்மா முனிவர்.

வனிடம் சென்று அவன் திருவடிக் கமலங்களில் ஊதுமாறு வேண்டிக் கொள்வதாகப் பாடப்பெற்றது இப்பனுவல் என்பர்,

இருபது பாடல் கொண்ட இருப்பனுவலுக்கு 'சிவனோடைக்கியம்' என்பது பழைய குறிப்பு. சிவனோடு இடையறாது நிற்றல்' என உரை காண்பார் அருணகிரி முதலியார். மனமாகிய அரசவண்டைப் பார்த்துச் 'சிவபெருமானுடைய திருவடித் தாமரைகளில் ஊது' என வேண்டிக் கொள்வதால் சிவனோடு ஐக்கிய மாகின்றது. 'சிவபோகத்திற்குப் பிரிவு உண்டாக அதற்கு மனத்தையே தூதாக அனுப்புதல் கோத்தும்பி' என்கின்றது திருப்பெருந்துறைப் புராணம். 'உயர்போத மொரு வண்டாகச் சித்தவிகாசத் தூது செப்பி விடல் கோத்தும்பி' எனவரும் திருவாசக உண்மையாலும் இது தெளிவாகும், 'சடசித் தெங்கணும் தாமே நிறைந்த சிவானுபவ சுவானுபூதிகம் விழைந்த அடியார்கள், அவ்விளக்கம் 'எனக்கும் கிடைத்தது, உனக்கும் கிடைத்தது' என்று ஒருவர்க்கொருவர் மடிபிடித்துக் கொண்டு வண்டு சுழலுகிறது போலச்சுழலும் விளையாட்டு என இத்திருக் கோத்தும்பிக்கு விளக்கம் கூறுவர் சீகாழித்தாண்டவராயர்,

இப்பனுவலில் இரண்டு பாடல்களில் ஆழங்கால் படுவோம்.

**நோயுற்று மூத்துநான்**
**நுந்துகன் றா யிங்கிருந்து**
**நாயுற்ற செல்வம்**
**நயந்தறியா வண்ணமெல்லாம்**
**தாயுற்று வந்தென்னை**
**யாண்டுகொண்ட தன்கருணைத்**
**தேயுற்ற செல்வற்கே**
**சென்றூதாய் கோத்தும்பீ (10)**

[நுந்து கன்று - தள்ளப்பட்ட காளை; நாயுற்ற - நாய் பெற்ற; தேய் உற்ற - ஒளிபொருந்திய]

என்பது இப்பனுவலின் பத்தாம் பாடல். "நாய் பெருஞ் செல்வம் பெற்றும் தானும் பயன்படுத்திக் கொள்ளாது பிறர்க்கும் பயன்படச் செய்யாதவாறு போலக் கிடைத்தற் கரிய பேறு பெற்றும் பெற்றதன் பயனை இழந்தேன்' என்கின்றார். இது நைச்சியாநுசந்தானம்.

**தோலும் துகிலும்**
**குழையும் சுருள்தோடும்**
**பால்வெள்ளை நீறும்**
**பசுஞ்சாந்தும் பைங்கிளியும்**
**சூலமும் தொக்க**
**வளையும் உடைத்தொன்மைக்**
**கோலமே நோக்கிக்**
**குளிர்ந்தூதாய் கோத்தும்பீ (18)**

[தோல் - புலித்தோல்; கோலம் - வடிவம்]

என்பது பதினெட்டாம் திருப்பாடல். இது மாதொரு பாகனாகிய சிவபெருமானின் தொன்மைக் கோலத்தைக் காட்டுவது. இந்தத் திருக்கோலத்தின் இடப்பாகத்தில் பட்டாடையும் தோடும் சந்தனமும் பச்சைக்கிளியும் வளைய லடுக்கும் உடைய அம்மை காட்சியளிக்கின்றாள்; வலப் பக்கத்தில் புலித்தோலும் குண்டலமும் திருநீறும் சந்தனமும் சூலமும் பெற்ற இறைவன் காட்சி அளிக்கின்றான். அம்மை யும் அப்பனும் ஒரு திருமேனியிலேயே காணப்பெறும் சிறப்பை இங்குக் கண்டு இன்புறுகின்றோம். தையல்பாகத் திருமேனி உலகத் தோற்றத்திற்கு மூலம் என்பதைத் 'தொன்மைக் கோலம்' எனக் குறிப்பிடுகின்றார். இதிலுள்ள பாடல்கள் யாவும் படித்து அநுபவிக்கத் தக்கவை.

**திருத்தெள்ளேணம்** (11)[5] : இது மகளிர் விளையாடும் விளையாட்டுகளில் ஒன்று என எல்லாக் குறிப்புரைகளும் கூறுகின்றன. சிறுமியர் முச்சில் என்னும் சிறிய முறத்தைக் கையில் கொண்டு தானியங்களைத் தெள்ளிக் கொழித்து விளையாடும் நிலையில் இறைவனுடைய புகழ்த்திறங்களைத் தெளிந்துணர்ந்து பாடிப் போற்றுவதாக அமைந்தது இப் பனுவல். இதனால் இது **தெள்ளேணம்** என்ற திருநாமமும் பெறுகின்றது. சிறிய முறத்தால் தெள்ளிப் புடைத்தலாகிய இது 'தெள்ளத் தெறுதல் எனத் தாண்டவராயர் உரையில் குறிக்கப் பெற்றுள்ளது. தெள்ளுதல் என்பது, தானியம் முதலியவற்றைக் கல்லும் மண்ணுமாகிய குற்றங்களைப் புடைத்தொதுக்கித் தூயனவாகத் தனியே பிரித்தெடுத்த லாகும். 'தெள்ளத்தெறுதல்' என்னும் இச்சொல்லின் உண்மை உருவம் 'தெள்ளத் தேறுதல்' என்பதாகும். 'பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ' என்று அடிகளார் குறிப்பிடுவ தால் பாட்டுக்கேற்பக் கைகொட்டியோ பறைகொட்டியோ இயற்றப்பெறும் விளையாட்டாக இருக்கலாம் எனக் கருத வும் இடம் உண்டு.

இப்பனுவலுக்கு 'சிவனோடடைவு—சிவனோடு சென்று கூடுதல்' எனப் பழைய குறிப்புகள் கூறுகின்றன. ஆன்மா வாகிய தாம் ஆன்ம நாயகனாகிய சிவனுடனே கூடி இன்புறும் திறத்தை உலகத்தார் அறியும் முறையில் அடிகளார் விரித்துரைக்கும் முறையில் நடைபெறுகின்றது இப்பனுவல். 'சிவமான வாபாடி' (4), 'தேவானவாபாடி' (7), 'பரஞ்சோதி தித்திக்குமாபாடி' (12), 'கழல் நான் மறவா வண்ணம் நல்கிய அத்திறம்பாடி' (8) என்பன போன்ற அடி களின் அநுபவ மொழிகளால் இக்கருத்து தெளிவாகின்றது.

5. இதுவும் தில்லையில் அருளிச் செய்யப் பெற்றதாகத் திருவாதவூரர் புராணம் கூறும்.

சிவபோத இன்பம் மிகுந்து 'தென்னா தென்னா' என்று தெள்ளேணம் கொட்டுவது என்று திருப்பெருந்துறைப் புராணம் கூறுகின்றது.

இப்பனுவலின் இரண்டு பாடல்களை அநுபவித்து மகிழ்வோம்.

திருவார் பெருந்துறை
மேயபிரான் என்பிறவிக்
கருவேர் அறுத்தபின்
யாவரையும் கண்டதில்லை
அருவாய் உருவமும்
ஆயபிரான் அவன்மருவும்
திருவாரூர் பாடிநாம்
தெள்ளேணம் கொட்டாமோ(2)

என்பது இப்பனுவலின் இரண்டாம் திருப்பாடல். பிறவியின் மூலமாகிய வினையும், அதற்கு அடியாயுள்ள மலமும் அற்ற பிறகு சிவபோகம் பெருகுகின்றது. இந்நிலை தானும் அவனும்கூட அற்ற நிலையாகும். இந்நிலையில் அழுந்தி நிற்றலின் 'யாவரையும் கண்டதில்லை' என்கின்றார்.

கனவேயும் தேவர்கள்
காண்பரிய கனைகழலோன்
புனவே யனவளைத்
தோளியொடும் புகுந்தருளி
நனவே எனப்பிடித்
தாட்கொண்டவா நயந்துநெஞ்சம்
சினவேற்கண் நீர்மல்கத்
தெள்ளேணம் கொட்டாமோ(10)

[கனவேயும் - கனவிலும்; புனவேய் அன்ன - காட்டு மூங்கிலையொத்த; நனவே - நல்ல விழிப்பு நிலையிலேயே; சினவேல்கண் - சிறிய வேல் போன்ற கண்கள்; சின - சின்ன (விகாரம்)]

என்பது இதன் **பத்தாம்** பாடல். வானோர்க்குக் கனவிலும் அகப்படாத அம்மெய்ப்பொருள் தமக்கு நனவிலேயே எளிவந்தருளினமையைச் செப்புகின்றார் இதில்.

21 திருப்பூவல்லி (13)[6] :'திருப்பூவல்லி' என்பது அழகிய பூக்களையுடைய கொடி என்று பொருள்படும். இச்சொல் பூக்கொய்தலாகிய இளமகளிர் விளையாட்டினையும் அவ்விளையாட்டில் பாடப்பெறும் வரிப்பாடலையும் குறித்த பெயராக இங்கு ஆளப் பெற்றுள்ளது.[7] இறைவனுக்குச் சாத்துதற்கென நறுமலர் கொய்யும் சிறுமியர்கள் பலர்கூடிப் பூப்பறித்தலும், நீர்ப்பூக்களைப் பறித்தலும், அவற்றைத் தம் தலையிலும் 'குழமகன்' தலையிலும் சூட்டி மகிழ்தலும் மரபு. அங்ஙனம் பறிப்பதை ஒரு விளையாட்டுபோல் மேற்கொள்வர். இந்த விளையாட்டில் இறைவனது கருணைத் திறத்தை வியந்து பாடும் முறையில் அடிகள் இத்தெய்வப் பனுவலை அருளிச் செய்துள்ளார்.

இப்பனுவலுக்கு 'மாயாவிசயம் நீக்குதல்-மாயையின் பலத்தை மறுத்தல்' என்பது பழைய குறிப்பு. வானோராலும் அறிய வொண்ணாத சிவபெருமான் மாயையின் தொடர்ச்சியுட்பட்டு மதி மயங்கும் மனிதர்களாகிய நம்

6. இது தில்லையில் அருளப்பெற்றதாகக் கடவுள் மாமுனிவர் கருதுவர்.
7. சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் குறித்த பல்வரிக் கூத்தினுள் ஒன்றாகிய 'கொய்யுமுள்ளிப்பூ' என்பது இப்பூவல்லியாகிய விளையாட்டினைக் குறிக்கும் எனக் கருதுதல் பொருத்தமாக அமைகின்றது.

மனோரை ஆட்கொள்ளுதல் பொருட்டுத் தன் பெருங் கருணையால் எளிவந்து மாயையின் வலியை நீக்கி ஆண்டு கொண்ட அருள் நலத்தினை அடியார் பலர்க்கும் ஆர்வமுடன் எடுத்துரைத்து 'அம் முதல்வனுக்குச் சாத்துதற்குரிய நறு மலர்களைக் கொய்வோமாக' என அடியார் பலரையும் ஒருங்கு அழைத்தல் இப்பனுவலின் பொருளமைதியாகும். இதைத் தெளிவுறுத்தற்கு அயன் தக்கன், எச்சன் சந்திரன், அக்கினி, அருக்கன், இயமன், அவன் தூதன், இந்திரன், அரி (4, 15) முதலாயினோரும் பாண்டியனும் மயங்கியிருந்த நிலையை இறைவன் போக்கினான் என்ற புராணவரலாறுகளும்பெருந்துணைசெய்யும்.[8] இந்த நுட்பம் ''தேவரறியாத சிவம்தேடியே மாண்டநலம், ஆவலொடும் சொல்லி அடியாரோடும் கூடி, பூவியந்து கொய்தல் திருப்பூ வல்லியாம்'' என வரும் திருவாசகவுண்மையால் இனிது தெளிவாகும். சிவபெருமான் வலிய வந்து ஆட் கொண்ட திறத்தை ஆவலோடும் சொல்லிக்கொண்டு அடியா ரோடு கூடப் பூக்கொய்தல் பூவல்லியாம்' என்று கூறும் திருப்பெருந்துறைப் புராணம்.

இப்பனுவலின்கண் 'தேனாடு கொன்றைச் சடைக் கணிந்த சிவபெருமான், ஊனாடி நாடி வந்துள்புகுந் தான்' (5) எனவும், 'இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே,துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்

8. தக்கன் தலையறுப்பட்டான். எச்சன் தலை மாற்றப் பட்டான். சந்திரன் உடல் தேய்வுற்றான். தீக் கடவுளின் நாவும் கையும், கொய்யப்பெற்றன, அருக்கன் பல்லுடைபட்டான். இராவணன் விர லால், மலைக்குக் கீழ் அழுத்தப் பெற்றான். அந்தகன் சூலத்துக்கு இரையாயினன், கூற்றுவன் உதையுண்டான். இந்திரன் வெட்டுண்டனன், அரி மார்பின்கண் நையப் புடைக்கப்பட்டான். அயன் குட்டுப்பட்டனன்.

தொழிந்தேன்' (1) எனவும், 'எந்தை எந்தாய் சுற்றம் மற்றுமெலாம் என்னுடைய' பந்தம் அறுத்தென்னை யாண்டு கொண்ட பாண்டிப்பிரான், (2) எனவும், 'தாயிற் பெரிதும் தயாவுடைய தம் பெருமான், மாயப்பிறப்பறுத்து ஆண்டான் (3) எனவும், 'பேராசையாம் இந்தப் பிண்டமறப் பெருந்துறையான் ,சீரார் திருவடி என்றலை மேல் வைத்த பிரான்' (10) எனவும் அடிகள் குறிப்பிடுதலால், தேவராலும், அறியவொண்ணாத இறைவன் தேடிவந்தாண்ட திறமும் 'மாயாவிசயம் நீக்குதல்' என்னும் பனுவற் கருத்தும் இனிது விளக்கமாதல் கண்டு தெளியலாம்.

இப்பனுவலின் இரண்டு பாடல்களில் ஆழங்கால்பட்டு அநுபவிப்போம்.

**வணங்கத் தலைவைத்து**
**வார்கழல்வாய் வாழ்த்தவைத்து**
**இணங்கத்தன் சீரடியார்**
**கூட்டமும்வைத் தெம்பெருமான்**
**அணங்கொ டணிதில்லை**
**அம்பலத்தே ஆடுகின்ற**
**குணங்கூரப் பாடிநாம்**
**பூவல்லி கொய்யாமோ(7)**

[குணங்கூர -அருட்பண்பு மிகுமாறு]

என்பது ஏழாம் திருப்பாடல். இதில் இறைவன் அடிகளை வணங்குதற்கேற்ற தலைமையமைந்த தலையும், அவனுடைய பொருள்சேர் புகழ் திறங்களை விரித்துரைத்தற்கேற்ற நாநலம் வாய்ந்த வாயும் இறைவன் திருவடிக்கேற்ற திருப்பணிகளை விருப்புடன் இணங்கிச் செய்தற்குரிய நேயமலிந்த அடியார் திருக்கூட்டமும் ஆகிய சாதனங்களைத் தந்தருளியுள்ளான் இறைவன். ஆகவே, அருளுருவாகிய அம்மையுடன் ஆடல் புரிந்தருளும் கூத்தப்பெருமானது திருவருட் குணத்தைப் பாடிப் பரவி இறைவன் திருவடிகளில் அருச்சித்தற்குரிய நறுமலர்களைக் கொய்வோமாக'' என அன்புடையாரை அழைக்கும் முறையில் அமைந்தது இத் திருப்பாடல்.[9]

---

9. இது 'வாழ்த்த வாயும்' (5.90 : 7) என்ற அப்பர் பெருமானின் அருளுரையினை ஒத்து அமைந் திருத்தல் நோக்கி மகிழ்வதற்குரியது.

**அத்தி யுரித்தது**
**போர்த்தருளும் பெருந்துறையான்**
**பித்த வடிவுகொண்**
**டிவ்வுலகில் பிள்ளையுமாம்**
**முத்தி முழுமுதல்**
**உத்தரகோச மங்கைவள்ளல்**
**புத்தி புகுந்தவா**
**பூவல்லி கொய்யாமோ (19)**

[*அத்தி - யானை; பிள்ளையுமாம் என்றது விருத்த குமார பாலரான வரலாற்றைக் குறித்தது.*]

என்பது இப்பனுவலின் **பத்தொன்பதாம்** பாடல். இதில், "இலங்கையில் அன்புடைய வண்டோதரி யம்மைக்கு அநுக்கிரகம் செய்ய எழுந்தருளி, உபதேசம் செய்தபோது, அன்புடைய இராவணன் வர, சுவாமி பாலகனாய்த் திருமேனி கொள்ள, பார்ப்பதி தாய்போலக் குழந்தையை எடுத்துக் கொண்டு இடுப்பில் வைத்து அன்பால் இன்புற்று எழுந்தருளிய" செயலைக் குறித்ததெனப் பொருள் கொள்வர் சீகாழித் தாண்டவராயர்.

இப்பனுவலில் 19 திருப்பாடல்களே உள்ளன. சில பதிப்புகளில் 'மாவார வேறி' என்று தொடங்கும் பாடல் இடம் பெற்றிருப்பினும், பழைய பதிப்புகளில் இது காணப் பெறாததால் 'செருகு கவி' எனக் கருதுகின்றனர் ஆய்வாளர்கள்.

22. **திருவுந்தியார்** (14)[10] : 'உந்தி பறத்தல்' என்பது மகளிர் விளையாட்டுகளுள் ஒன்று. உந்தி பறத்தலாவது விளையாடும் பருவத்து இளமகளிர் பாட்டுடைத் தலைவனது

10. இது தில்லையில் அருளியதாகக் கடவுள் மாமுனிவர் கூறுவர்.

வெற்றியை வாயாற் புகழ்ந்து கொண்டு உயர எழுந்து குதித்தலாகும். இதனை ஆடும் மகளிர், பறவைபோல் நிலத்தில் இரு பாதங்கள் மட்டிலும் படிய, இருகைகளையும் முடக்கியிருந்து, பின் விரைந்தெழுந்து, இருகைகளையும் இருபக்கங்களில் சிறகுபோல் நீட்டிப் பறவைகள் பறப்பது போலப் பாவனை செய்து ஓடி வேறோர் இடத்தில் முன் போல் அமர்ந்து, பின்னும் அவ்வாறே ஆடப்படும் என்று கொள்ளல் பொருந்தும். இங்கு உந்தியார் என்பது 'உந்தீ' என்று ஒருமையாக விளித்து 'பற' என்னும் ஒருமை ஏவலாலே முடிக்கப்படுகின்றது. அதனால் ஒருவர்க்கொருவர் தோழியராய் ஒத்த நிலையில் உள்ள மகளிர் தம்மில் இவ்வாறு விளித்தும், ஏவியும் பாடி ஆடுவர் என்பது பெறப் படும். இவ்விளையாட்டு விளையாடும்பொழுது பறந்து சென்று தொடுகின்றவள் இறைவன் புகழைப் பாட, தொட இருக்கின்றவள் அதன் விளைவைக் கூறுதலாக ஒவ்வொரு பாட்டும் முடிந்துள்ளது.

பத்தொன்பது பாடல்களே உள்ள இப்பனுவலுக்கு 'ஞான வெற்றி—அருட்சக்தியின் சாமர்த்தியம்' என்பது பழைய குறிப்பு. மும்மல காரியமாகிய முப்புரங்களும் இறைவனது அருட்சக்தியில் கெட்டமையையும், ஆணவ மலவடிவான தக்கன் அழிந்தமையையும், அதனோடு தொடர்புடைய சூரியன் முதலான பல்வேறு ஆன்மாக்களின் முனைப்பு அடங்கினமையையும் அறிவிப்பதால் ஞான வெற்றி ஆயிற்றுப் போலும். இறைவன் புகழைத் தீவினையால் வந்த கேடு நீங்கப் பாடுவது என்பது திருப்பெருந்துறைப் புராணத்தின் விளக்கம்.

இதன்கண் சிவபெருமான் திரிபுரம் எரித்தருளியது (1-4ம் பாடல்கள்), தக்கன் வேள்வியைத் தகர்த்தது (5-16ஆம் பாடல்கள்), பாலகனார்க்குப் பாற்கடல் ஈந்தது (17ஆம் பாடல்), நான்முகனது தலையைக் கிள்ளியது (18ஆம் பாடல்)

இராவணனை மலையின்கீழ் அடர்த்தது (19ஆம் பாடல்) என்னும் பழைய வரலாறுகளாகியஇறைவனுடைய வெற்றிச் செயல்கள் விரித்துரைக்கப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக ஒரு பாடல்.

தச்சு விடுத்தலும் தாமடி யிட்டலும்
அச்சு முறிந்ததென் றுந்தீபற
அழிந்தன முப்புரம் உந்தீபற (3)

சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினும் முதலில் வைக்கப் பெற்றுள்ள திருவுந்தியார் என்னும் நூல் உய்ய வந்த தேவநாயனார் என்பாரால் அருளிச் செய்யப் பெற்றது. இதுவும் மகளிர் விளையாட்டுப் பாவனையில் அருளிச் செய்யப்பெற்ற பனுவலே.

சொல்லும் பொருள்களும் சொல்லா தனவும் அங்கு
அல்லனாய் ஆனான்என் றுந்தீபற
அம்பிகை பாகனென் றுந்தீபற (21)

என்பது சித்தாந்தத்தில் சொல்லப்படும், இறைவனைக் காட்டுவது,

பெரியாழ்வார் திருமொழியில் (3·9) வருகின்ற 'உந்தி பறத்தல்' என்ற திருமொழியில் பாசுரந்தோறும் 'பாடிப் பற' என்றது 'உந்தி பறத்தல்' என்பதைக் குறிக்கும்; இறுதிப் பாசுரத்தில் 'உந்தி பறந்த' என்று வருவதைக் காணலாம். இத்திருமொழியில் ஆழ்வார் இரண்டு ஆய மங்கையரின் நிலையை எய்தி ஒருத்தி கண்ணபிரானின் குணச்சிறப்புகளையும் 'மற்றொருத்தி இராமபிரானுடைய குணச்சிறப்புகளையும்பாடி, 'உந்தி பறத்தல்' விளையாட்டில் ஈடுபடுகின்றனர்.

**23. திருத்தோணோக்கம் (15)**[11] : தோள் நோக்கம் என்பது, மகிழ்ச்சிப் பெருக்கினால் தம் தோள்கள் பூரித்து

---

11. திருவாதவூரர் புராணத்தில் இது தில்லையில் அருளிச் செய்யப்பெற்றதாகக் கூறப்பெற்றுள்ளது

மேலோங்க அவற்றை நோக்கிக் கைவீசியாடும் மகளிரது விளையாட்டு. இதன் விவரம் அறியக் கூடவில்லை. இதன் கருத்து 'பிரபஞ்ச சுத்தி—ஆன்மாக்களைச் சுத்திகரித்தல்' என்றுபழைய குறிப்புக் கூறும். உலக வாழ்வைச் சதமென் றெண்ணிகானல் நீரைக் கைநிறைய அள்ளிக் குடிக்கும் அறிவிலி போலாகாமல், என்றும் பிறந்திறந்து மயங்காமல் சித்தம் சிவமாக்கிச் செய்வன எல்லாவற்றையும் தவமாக்குகின்ற அத்தன் கருணையினால் 'நாம் தோள் நோக்கம் ஆடுவோம்' என்பன போன்ற பகுதிகள் ஆன்மாக்களின் மலத்தை அகற்றிச் சிவஞானத்தைச் சேர்ப்பிக்கின்ற மறைமொழிகளாய் இருத்தலின் பிரபஞ்ச சுத்தி ஆயிற்றுப் போலும்.

**சித்தம் சிவமாக்கிச்**
**செய்தனவே புண்ணியமாய்**
**அந்தன் செயும்கருணைக்கு**
**ஆராமையுள் மிகுந்து**
**பொத்திய கைகொட்டிப்**
**புகழ்தல் தோணோக்கம்**

என்பது திருவாசக உண்மை.

இப்பனுவலில் 14 பாடல்கள் உள்ளன. இரண்டு பாடல்களில் ஆழங்கால் படுவோம்.

**புத்தன் முதலாய**
**புல்லறிவிற் பல்சமயம்**
**தத்தம் மதங்களில்**
**தட்டுளுப்புப் பட்டுநிற்கச்**
**சித்தம் சிவமாக்கிச்**
**செய்தனவே தவமாக்கும்**
**அத்தன் கருணையினால்**
**தோணோக்கம் ஆடாமோ (6)**

[புல்லறிவு - சிற்றறிவு; தட்டுளுப்புப் பட்டு - தடுமாற்றமடைந்து]

என்பது இதன் ஆறாம் பாடல். சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன் - தற்போதம் கெட்டுச் சிவபோதம் அடைந்த ஆன்மாக்கள் செய்த செயல்கள் எல்லாவற்றையும் தவமாக்கலின் இங்ஙனம் கூறுகின்றார்.

**உரைமாண்ட வுள்ளொளி**
**உத்தமன்வந் துளம்புகலும்**
**கரைமாண்ட காமப்**
**பெருங்கடலைக் கடத்தலுமே**
**இரைமாண்ட இந்திரியப்**
**பறவை இரிந்தோடத்**
**துரைமாண்ட வாபாடி**
**தோணோக்கம் ஆடாமோ (14)**

[*உரைமாண்ட - வாக்கின் எல்லையைக் கடந்த; கரைமாண்ட - எல்லையற்ற; இரைமாண்ட - புலனுணர்ச்சியாகிய உணவு அற்றுப்போக; இரிந்து - கெட்டு; துரை - இடம் (எதுகை நோக்கித் துறை துரையாயிற்று.)*

என்பது பதினான்காவது பாடல். இதில் உரையிறந்த இறைவனாகிய இறைவனை உள்ளத்தால் நினைந்த அளவில் காம வெகுளி மயக்கங்களாகிய நோய்கள் அறவே கெட்டொழிய ஐம்பொறிகளாகிய பறவைகள் வலிகுன்றியோட ஆன்மாவின் மிகுதிப் பாடாகிய பசுத்துவம் கெட்ட திறம் விரித்துரைக்கப் பெறுகின்றது.

**24. திருப்பள்ளி எழுச்சி (20)[12] :** பாண்டிய மன்னன் குதிரைகளை விரைவில் கொண்டு வரும்படி ஓலை அனுப்பிய போது அடிகள் வருந்தித்திருப்பெருந்துறையிலிருந்துகொண்டு பாடியது. இஃது இறைவனைப் பள்ளி எழுந்தருள வேண்டி

12. திருவாதவூரர் புராணமும் இப்பனுவல் திருப்பெருந் துறையில் அருளப் பெற்றதாகவே மொழியும்.

கொள்ளுதல். 'எம்பெருமானே பள்ளி எழுந்தருளாயே' என்ற பாடல்களின் ஈற்றடிகளே இக்கருத்தை நன்கு விளக்கும். உறங்கலும் விழித்தலும் இன்றி இமையாமுக்கண்ணினனாய், தானே முழுதுணரும் இயற்கையுணர்வினனாய், நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் இறைவனைத் துயிலெழுப்புவதென்பது உண்மை நிகழ்ச்சியாதலின்றி வெறும் உபசாரமேயாகும். ஆயினும் 'துஞ்சும் பொழுதாடும் சோதி' ஆகிய அம்முதல்வனை, உறங்கி விழிக்கும் இயல்பினராகிய மாந்தர் தாம் துயிலெழுங்காலத்துத் தொழுது கொண்டு எழுதல் இன்றியமையாதது. ஆதலின் 'அவனருளாலே அவன் தாள் வணங்கித்' துயிலெழும் வழிபாட்டு நெறி முறையினை மாந்தர்க்கு அறிவுறுத்தும் நோக்கத்துடன் வாதவூரடிகளால் அருளப் பெற்றது 'திருப்பள்ளியெழுச்சி' என்னும் இப் பனுவலாகும். இது பத்துப் பாடல்களைக் கொண்டது.

இப்பதிகத்திற்கு 'திரோதான சுத்தி - ஏகமாகிய திரோதாயி மறைப்பான மலம் நீங்குதல்' என்று பழைய குறிப்புகள் கூறும்.

**ஏர்மருவு திருப்பள்ளி எழுச்சி**
**பணிவிடை கேட்டு**
**ஆர்வமுடன் ஆண்ட அரற்கு**
**அன்பு செயும் இயல்பே**

எனத் திருப்பெருந்துறைப் புராணமுடையார் இப்பதிகக் கருத்தினைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். முன்னிலைப் பரவலாக அமைந்த இத்திருப்பதிகத்தில் திருப்பெருந்துறையுறை சிவபெருமானை இறைஞ்சி 'எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே' எனப் பாடல்தோறும் அடிகள் இறைவனை வேண்டிப் போற்றுதல் காணலாம். இவ்வாறே தொண்டரடிப் பொடியாழ்வாரும் திருவரங்கப் பெருமானைப் போற்றித் திருப்பள்ளி எழுச்சி' (10 பாசுரங்கள்) பாடியுள்ளமை இங்குக் கருதத்தகுவதாகும். தேசிய கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரும் பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி' (5 பாடல்கள்)

பாடியுள்ளமை காணத்தக்கது. 'பள்ளி எழுந்தருளாய்' என்ற தொடருக்கு 'எமது உள்ளத்தில் திருப்பள்ளி ஓலக்கம் கொள்ள எழுந்தருள்க' எனப் பொருளுரைப்பர் சீகாழித் தாண்டவராயர்.

போற்றி என் வாழ்முதலாகிய பொருளே (1) எனத் தொடங்கும் பாடலில் 'நின் திருமுகத்து எமக்கு அருள் மலரும் எழில் நகை கொண்டு நின் திருவடி தொழுவோம்' என்றது இறைவனது திருமுகத்தின் முறுவல் நகையினைக் கண்டு 'அவனருளாலே அவன்தாள் வணங்க' விரும்பும் அடியார்களது விருப்பத்தினைப் புலப்படுத்துவதாகும். ''முத்தா உன்றன் முகவொளி நோக்கி முறுவல் நகை காண அத்தா சால ஆசைப்பட்டேன்' (ஆசைப்பத்து-6) என அடிகள் தம் உள்ளத்தமைந்த ஆசையினை வெளியிட்டுள்ளமை இங்கு நினைக்கத் தக்கதாகும்.

'பூதங்கள் தோறும் நின்றாய்' (5) எனத் தொடங்கும் திருப்பாடல் மாற்ற மனங்கடந்த மறையோனாகிய இறைவனைக் குறித்துப் புலவர்கள் பாடிப் போற்றும் தோத்திரப் பாடல்களின் பொருளமைதியைச் சுட்டுவதாகும். 'பப்பற' (6) என்ற பாடல் ஆண்டவனைக் காதலனாகவும் தம்மை அவனது அன்புக்குரிய காதலியாகவும் எண்ணி வழிபடும் அடியார்களது ஆராக் காதலைப் புலப்படுத்துவதாகும். 'முந்திய முதல் நடு இறுதியுமானாய்' (8) என்ற பாடல் திருப்பெருந்துறையில் சிவபெருமான் குருவாக எழுந்தருளித் தம்மை ஆண்டு கொண்டருளிய திறத்தை அடிகள் பரவிப் போற்றும் நிலையில் அமைத்துள்ளது, விண்ணகத் தேவரும் நண்ணுதற்கரிய விழுப்பொருளாகிய சிவபெருமான், தம் கண்ணகத்தே நின்று களிதரு தேனாக எழுந்தருளிய சீர்த்தியினையும், நாம்வாழும் உலகமாகிய இப்பூமி சிவன் உய்யக் கொள்ளுகின்ற நெறியாகத் திகழும் சிறப்பினையும் இறுதி இரண்டு பாடல்களில் (9,10) அடிகள் குறித்துப் போற்றியுள்ளனர்.

## 6. திருப்பெருந்துறையில்—திருச்சதகம்

பாண்டியனிடம் விடைபெற்றுக் கொண்டு ஆலவாய் அண்ணலை வணங்கியவர் நேரே திருப்பெருந்துறைக்கு வருகின்றார் மணிவாசகப் பெருமான். தம்மை ஆட்கொண்ட குருநாதரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்குகின்றார், அடியார்குழுவில் ஆசிரியத் திருமேனியுடன் திகழும் இறைவன் வாதவூரடிகளுக்குத் திருநீறு தரித்து அருட்பார்வை-நயனதீட்சை—நல்குகின்றார். இறைவன் பணித்தவண்ணம் குருந்தமரத்தடியில் ஒரு தெய்வபீடம் அமைத்து அதன்மீது இறைவன் திருவடிகளை வைத்து வழிபட்டிருக்கின்றார். சின்னாட்களுக்குப் பின்னர் பொய்கையில் தீப்பிழம்பு தோன்றுகின்றது. அடியார்கள் அஞ்செழுத்தோதி அதில் புகுந்து சிவகணநாதர்களாகிக் கயிலையை அடைகின்றனர். கொன்றை மரநீழலில் சிவயோகத்தில் அமர்ந்திருந்த வாத ஊரடிகள் தீப்பிழப்பு நிகழ்ச்சியினை யோகக் காட்சியாலுணர்ந்து பொய்கைக் கரையடைந்து இறைவனையும் அடியார்களையும் காணாது அழுதரற்றுகின்றார். பின் ஒருவாறு உள்ளந் தெளிந்து குருந்தமர நீழலையணுகி இறைவன் திருவடிகளை இறைஞ்சி நின்று 'மெய்தானரும்பி' எனத்தொடங்கி பாடல்களால் அழுதரற்றுகின்றார். இப்பாடல்களே **'திருச்சதகம்'** என்று பெயர் பெறுகின்றன.[1] 'அழுதடி அடைந்த அடிகள்'

---

1. இந்த வரலாறு திருவாதவூரடிகள் புராணத்தில் கண்டது.

என்று பரஞ்சோதியார் போற்றும் நிலைக்கு வந்து விடுகின்றன.

25. **திருச்சதகம் (5)** : தெய்வத்தன்மை வாய்ந்த நூறு திருப்பாடல்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குதலால் 'திருச்சதகம்' என்ற திருப்பெயரைப் பெறுகின்றது. சதகம் என்ற வடசொல் நூறு என்ற எண்ணினைக் குறிக்கும் பெயர். இச்சொல் 'க' என்னும் ஓர் இடைச்சொல்லைப் பெற்று 'சதகம்' என்ற பெயராகி நூலைக் குறிப்பதாகக் கூறுவர். இதிலுள்ள பாடல்கள் அந்தாதித் தொடையில் அமைந்தவை. ஒரு பாடலின் இறுதியிலுள்ள ஒரு சொல் அல்லது சொற்றொடர் (அல்லது எழுத்து) என்னும் இவற்றுள் ஒன்றை அடுத்த பாடலின் தொடக்கமாகக் கொண்டு பாடப்பெறுவது அந்தாதியாகும். நூல் 'மெய்தான் அரும்பி' என்று தொடங்கிப் பாடல்கள் யாவும் அந்தாதித் தொடையில் அமைந்து 'மெய்யர் மெய்யனே' என்று இறுதிப் பாடல் முடிகின்றது.

இப்பனுவல் (1) மெய்யுணர்தல், (2) அறிவுறுத்தல், (3) சுட்டறுத்தல், (4) ஆத்துமசுத்தி, (5) கைம்மாறு கொடுத்தல், (6) அநுபோக சுத்தி, (7) காருணியத்திரங்கல், (8) ஆனந்தத் தழுங்கல், (9) ஆனந்தபரவசம், (10) ஆனந்தாதீதம் என்ற பத்துத் தலைப்புகளை உடையதாய், ஒவ்வொரு தலைப்புக்கும் பத்துப் பத்துப் பாடல்களைக் கொண்டதாய் பத்து யாப்புவிகற்பங்களையும் பெற்றுள்ளது. இந்தப் பனுவல் அமைப்பு முறையினை அடியொற்றிப் பிற்காலத்தில் தோன்றியதே **'பதிற்றுப் பத்தந்தாதி'** என்னும் சிற்றிலக்கியம் என்பது நாம் நினைத்தற்குரியது.

குருந்த மரத்தடியில் தம்மை ஆட்கொண்ட குருநாதனாகிய இறைவன்பால் அடிகள் கொண்டுள்ள எல்லையற்ற பேரன்பினைப் புலப்படுத்தும் பாங்கில் அமைந்தது இப்பக்திப்

பனுவல். இதில் இறைவனிடத்து வாதவூரடிகள் கொண்ட பேரன்பின் முதிர்ச்சி தெளிவாகின்றது. இதன் பயனாக 'யான்' 'எனது' என்ற இருவகைப் பற்றுகளும் அற்றுப் போனதைக் காணமுடிகின்றது. இப்பற்றுகள் நீங்க அடிகள்பால் நிகழ்ந்த வியக்கத்தக்க பல நற்செயல்களையும் இத் திருப்பாடல்கள் புலப்படுத்துவனவாக உள்ளன. இம்முறையில் அமைந்த இத்தெய்வப்பனுவலுக்கு '**பக்தி வைராக்கிய விசித்திரம்**' என முன்னையோர் கருத்துரை வரைந்துள்ளனர். இக்கருத்தினை,

**சத்திய ஞானந்தரு தேசிகர்**
**மோகம் சதகமாம்.**

என வரும் திருவாசக உண்மைத் தொடரும் வலியுறுத்தல் காணலாம்.

பக்தி என்பது ஆண்டவன்மீது அடியார்கள் கொண்ட அன்பு. வைராக்கியம் என்பது இறைவன்பால் செலுத்தும் பேரன்புக்குத் தடையாகவுள்ள உலகப்பற்றுகளையெல்லாம் அறவே வெறுத்தொதுக்கும் கடைப்பிடியாகிய மனஉறுதி. விசித்திரம் என்பது பற்றற்றான் பற்றிற்காக உலகப் பற்றுகளையெல்லாம் விடுதலாகிய வியக்கத்தக்க தன்மை. இச் செயல் சதுரப்பாடுடைய சிவஞானச் செல்வர்களாலன்றி பிறரால் மேற்கொள்ளுதற்கரிய பெருமையுடையதாதலின் வியக்கத்தக்க தன்மையுடையதாகின்றது. அருட்குரவனாக எழுந்தருளித் தம்மை ஆட்கொண்ட இறைவன்பால் அடிகள் கொண்ட பேரன்பின் உவப்பும் அத்தகைய பேரன்பிற்குத் தடையாய் நிகழும் உலகப்பொருள்களிடத்தே அவர் வைத்துள்ள உவர்ப்பும் ஒருங்கே புலப்படும் முறையில் அருளிப் செய்யப்பெற்றது பக்தி வைராக்கிய விசித்திரமாகிய இத்திருச்சதகம்; படிப்போர் மனத்தை ஈர்த்து அவர்கள் மனத்தைத் தூய்மையாக்கும் தெய்வத் திருப்பனுவல். ஏட்டுச் சுவடிகள் சிலவற்றில் காணப்படும் 'பத்து வகையாக

இரட்சித்த முறைமை' என்ற குறிப்பும் இதற்குப் பொருத்த முடையதாகவே தோன்றுகின்றது. இனி நூலினுள் புகுந்து ஆழங்கால்பட்டு அநுபவிப்போம்.

1. **மெய்யுணர்தல் ;** மெய்யுணர்வாவது தோற்றம் கேடுகளின்றித் தூயதாய் என்றும் உள்ள மெய்ப் பொருளாகிய இறைவனை இடைவிடாது நினைந்து போற்றுதல். உடல், கருவி, நுகர்ச்சியாகிய உலகப் பொருள்களின் நிலையாமை கண்டு அவற்றின் பிணிப்பிலிருந்து விலகி மெய்ப்பொருளாகிய இறைவனை அநுபவவாயிலாக உணர்ந்து போற்றும் நிலையில் இப்பனுவலின் முதற் பதிகம் அமைந்துள்ளது. 'மெய்யுணர்தல்' என்னும் இத்தலைப்புக்கு 'தேகாதி, பிரபஞ்சங்களைக் கண்டு நீங்குதல்' என முன்னோர் கூறிய விளக்கம் இப்பதிகத்தின் கருத்தினை நன்கு புலப்படுத்துவதாகும்.

ஆருயிர்த் தலைவனான இறைவனை நினைந்த அளவில் உண்டாகும் அன்பு மேலீட்டால் உள்ளத்தில் ஓர் இன்ப உணர்வு தோன்றும். அவ்வுணர்வின் மெய்ப்பாடுகளாக உடம்பில் மயிர்சிலிர்த்தல், நடுக்கம் உண்டாதல், நெஞ்சம் நெகிழ்ந்து உருகுதல், கண்ணீர் அரும்புதல் போன்ற செயல்கள் நிகழும். அன்புரிமைச் செயல்களாகிய இவையனைத்தும் வாதவூரடிகள்பால் நிகழும் நிலையில் இச்சதகம் அருளிச் செய்யப் பெற்றுள்ளது.

**மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்(து)**
**உன்விரை யார்கழற்கென்**
**கைதான் தலைவைத்துக் கண்ணீர்**
**ததும்பி வெதும்பியுள்ளம்**
**பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி**
**சயசய போற்றிஎன்னும்**
**கைதான் நெகிழ விடேனுடை**
**யாய்என்னைக் கண்டுகொள்ளே (1)**

[மெய் - உடல்; அரும்பி - புளகாங்கிதம் கொண்டு; விரை - மணம்; கை - ஒழுக்கம்]

என்பது இப்பதிகத்தின் முதல் பாடல். இறைவனது திருவருளில் ஈடுபட்ட மெய்யடியார்கள்பால் நிகழும் அன்புரிமைச் செயல் முறைகளைப் புலப்படுத்தும் முறையில் இத்திருப்பாடல் அமைந்திருத்தலைக் கண்டு மகிழலாம். மெய் அரும்புதல், கைதலைவைத்தல்; கண்ணீர் ததும்புதல் வெதும்புதல் என்பன மெய்யில் தொழில்கள்; உள்ளம் பொய்தவிர்தல் மனத்தின் தொழில்; போற்றி சயசய போற்றி, என்றல் வாக்கின் தொழில், எனவே, மனம் மெய் மொழி என்ற முக்கரணங்களாலும் இறைவனை வழி பட்டமை புலனாவது தெளிவு. என்றும் நிலையாக உள்ள இறைவனை உள்குழைந்து போற்றும் திருவருள் வாழ்வின் சிறப்பினை உணர்ந்து, நிலையற்ற உலகியல் நடையாகிய பொய்மையைத் தவிர்ந்தொழுகும் மெய்த்தொண்டர் வாழ்வின் இயல்பினை விளக்கும் நிலையில் அமைந்த இப் பாடல் பக்தி வைராக்கிய விசித்திரம்' என்னும் திருச்சதகப் பொருளையும் அதன் முதற்பதிகமாகிய 'மெய்யுணர்தல்' என்னும் திருப்பதிகம் நுதலிய செழும்பொருளையும் உணர்த்துதல் கண்டு தெளியலாம். அன்றியும், இத்தகைய திருவாசகச் செழுமறையினை அருளிச்செய்த அன்புருவாகிய திருவாதவூரடிகளின் திருவுருவ இயல்பும் இதில் புலனா தலைக் காணலாம். அடிகளின் அன்பின் திருவுருவினை நம் நெஞ்சத் திரையில் ஓவியமாக எழுதி நினைவுகூரும் வகையில் அமைந்த இத்தகைய திருப்பாடல்களைத்'தியான சுலோகம்' எனப் போற்றுவர் வடமொழிவாணர்கள்.[2] இத்திருப் பாட்டில் அன்பால் விளையும் மெய்ப்பாடுகளை அறிவிக் கின்றார் அடிகள்.

---

2. பண்டிதமணி: கதிர்மணி விளக்கம்-பக். 12

இதற்கு அடுத்த பாடல்:

**கொள்ளேன் புரந்தரன் மாலயன்**
**வாழ்வு குடிகெடினும்**
**நள்ளேன் நினதடி யாரொடல்**
**லால்நர கம்புகினும்**
**எள்ளேன் திருவரு ளாலே**
**யிருக்கப் பெறின் இறைவா**
**உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்**
**லாதெங்கள் உத்தமனே (2)**

[புரந்தரன் - இந்திரன்; நள்ளேன் - நட்புக்கொள்ளேன்; எள்ளேன் - இகழேன்]

என்பது. இதில், ''ஈசா, நான் உன் திருவடிகளுக்குப் பாத்திர மானால் இந்திரன், திருமால், அயன் (அஜன்) முதலியவர் களின் பதவிகளை ஏற்றுக்கொள்ள மாட்டேன். என் குடிகெட்டாலும் உன் அன்பர்கள் அல்லாத மற்றவர்கள் நட்பை விரும்பேன். நரகம் புகுவதாயினும் அதை இகழ மாட்டேன். மேலோனே, உன்னையல்லாது மற்ற தெய்வங் களை நான் மதிக்க மாட்டேன்'' என்கின்றார். இப்பாடல் அடிகளாரின் திட சித்தத்தை உணர்த்துகின்றது.

'உள்ளேன் பிறதெய்வம்' என்ற தொடர் 'திருமாலை அல்லது தெய்வம் என்று ஏத்தேன்' என்ற பொய்கை யாழ்வாரின் வாக்கை (முதல் திருவந். 64) நினைவுகூரச் செய்து திருமழிசையாழ்வார் குறிப்பிட்டும் 'மறந்தும் புறந்தொழாமாந்தர்' (நான் திரு. 68) வகையைச் சார் கின்றார் அடிகள். ''மெய்ப்பொருள் ஒன்று; அது பல வடிவங் களில் இலங்குகின்றது. சாதனத்தின் தொடக்க நிலையில் இருப்பவர்கள் பல தெய்வங்கள் இருப்பதாகவே உணர் கின்றார்கள். அவற்றுள் தனது இட்ட மூர்த்தியினிடத்து

அதிக அன்பு வைப்பது உசிதமானது. இதனால் பக்தி பெருகுகின்றது. சிறுவன் ஒருவன் தன் தாயையே நேசிப்பது போன்று பக்தன் தன் வழிபடு தெய்வத்தையே உபாசிக்க வேண்டும். தாயோடு இருக்கும் குழந்தைக்கு வறுமை நோய் தோன்றாது. அங்ஙனம் இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமான பக்தனுக்கு நரகம் வேதனையுடையதாகத் தோன்றாது''[3]

2. **அறிவுறுத்தல்** : இதற்குப் 'பொறியோடே கூட்டுதல்' எனவும், 'அருள் தரிசனம்' எனவும், 'குருதரிசனம்' எனவும் முன்னோர் கருத்துரைத்துள்ளனர். உயிர் தன் அறிவினால் உய்த்துணர்தற் கரியதாய சிவபோகத்தை உடலின்கண் பொருந்திய ஐம்பொறியளவிலும் உணர்ந்து மகிழும் வண்ணம் இறைவன், அடிகளுக்குக் குருமூர்த்தியாக எழுந்தருளி வழங்கினான் ஆதலின் தாம் நுகர்ந்த சிவபோகம் பொறியுணர்வுக்குப் புலப்படும் நிலையில் இப்பதிகத்தால் இறைவனைப் பரவிப் போற்றுகின்றார். இதுபற்றியே இப்பதிகத்திற்குப் 'பொறியோடே கூட்டுதல்' என்று உரைக்கப் பெற்ற கருத்து பொருந்துவதாக அமைகின்றது. இப்பதிகத்தில்,

**நாடகத்தால் உன்அடியார்**
**போல்நடித்து நான் நடுவே**
**வீடகத்தே புகுந்திடுவான்**
**மிகப்பெரிதும் விரைகின்றேன்**
**ஆடகச்சீர் மணிக்குன்றே**
**இடையறா அன்புனக்(கு)என்**
**ஊடகத்தே நின்றுருகத்**
**தந்தருள்எம் உடையானே(1)**

[ஆடகம் - பொன்; மணி - மாணிக்கம்; என் ஊடு அகத்தே - எனக்குள் மனத்தே]

3. சித்பவாநந்த அடிகள் : திருவாசகம் பக். (261-62)

என்பது முதற் பாடல். இதில் தம் பொய்யன்பை மெய்யன் பாக்கி ஆண்டருள வேண்டுகின்றார். "உலகில் கோலங் கொண்டு கூத்தாடுவார் போன்று அடியேன் உன் மெய்யடி யார் போல்கோலங் கொண்டு நாளும் நடித்து வருகின்றேன். அந்நடிப்பின் நடுவே உன் திருவடிப் பேறாகிய வீட்டின் கண் புகுதல் வேண்டுமென்றுமுந்துகின்றேன். பொன்போலும் செம்மேனி ஒரு பாகமும், மணிபோலும் நீலமேனி ஒரு பாகமுமாகத் திகழும் மலைபோலும் உலைவில் ஒருமுதலே! அடியேனுக்கு உன்பால் அன்புஉருகிப் பெருகுமாறு தந்தருள் வாயாக. எம்மை அடிமையாகவுடைய சிவபெருமானே! ஏம் வேண்டுகோள் இதுவாகும்" என்கின்றார்.

"இகம் பரம் ஆகிய இரண்டிலும் மனிதன் எதற்குத் தகுதி வாய்ந்தவனாகத் தன்னைச் செய்து கொள்கின்றானோ அது தானாக அவனுக்கு வந்து வாய்கின்றது. இவ் வுண்மையை அறிவது அறிவு. முக்தி வேண்டும் என்று இறைவனைக் கேட்பதைவிட, முக்திக்குத் தன்னைப் பக்குவப் படுத்துவது அறிவுடையோர் செயல். தெரிந்த ஒன்றை உவமானமாகக் கொண்டு தெரியாத ஒன்றைத் தெரிந்து கொள்ள முயலுதல் முறை. ஆடகம் என்றால் தங்கம். தங்கத்தில் பதித்த மாணிக்கம் போன்றது ஆத்மப் பிரகாசம், பின்பு மலை போன்று ஆன்மா அசைவற்றது. அசலம் (மலை), பக்தி முதிர்ந்து மனம் தெளியும்போது இவ்வுண்மை விளங்குகின்றது"[4]

உள்ளத்தை உருக்கும் முதல் எட்டுப் பாடல்களில்அடிகள் ஆண்டவனை நோக்கித் தம் இயல்பினையும் வேட்கையினை

4. சித்பவாநந்த அடிகள் : திருவாசகம் பக். 2?2.

யும் வெளியிட்டு உரைக்கின்றார். இறுதி இரண்டு பாடல்கள் தம் நெஞ்சிற்கு அறிவுறுத்துவனவாக அமைந்துள்ளன.

3. **சுட்டறுத்தல் :** சுட்டறுத்தல் என்பதற்குத் தன் செயலறுத்தல்; அஃதாவது உலகப் பொருள்களைச் சுட்டி யறிதலாகிய ஆன்ம போதத்தை ஒழித்தல் என்பது பொருள் உயிர்கள் ஐம்பொறிகள் முதலிய கருவிகளோடு, கூடி நின்று அறியும் அறிவு ஒன்றைச் சுட்டியறியும்போது சுட்டுணர்வு எனப்படும். இங்ஙனம் சுட்டுணர்வினால் அறியப்படும் பொருள்கள் அனைத்தும் அளவுக்குட்பட்டவை; அழியும் தன்மையுடையவை. ஆதலின் அவை 'அசத்து' எனப்படுவன. ஐம்புலத் தொடக்கினின்றும் நீங்கிச் சுட்டிறந்து அறியும் அறிவு மெய்யுணர்வு எனப்படும். மெய்யுணர்வினால் அறியப் படுவதொன்றே 'சத்து' எனப்படும். முழுமுதற் பொருளாகும் சுட்டுணர்வு என்றாலும், பாச ஞானம் என்றாலும் ஒன்றே. இச்சுட்டறிவினால் அறிந்தவற்றை அழுந்தியறிதலாகிய ஆருயிர் தான் முதல் எனக் காணும் உணர்வு 'சிற்றுணர்வு.' இதனைப் பசுஞானம் என்று வழங்குவர். அடிகள் இவ் விரண்டினையும் கடந்து திருவடியுணர்வாகிய சிவ ஞானம் கைவந்த நற்றவத்தர். ஆதலினால் சுட்டறிவினை அகற்றுதல் வேண்டும் என்று விண்ணப்பிப்பது இப்பதிகம். இதில்,

> **வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்**
> **பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்**
> **பள்ளந்தாழ் உறுபுனலில் கீழ்மே லாகப்**
> **பதைத்துருகும் அவர்நிற்க என்னை ஆண்டாய்க்கு**
> **உள்ளந்தான் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்**
> **உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா**
> **வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாய்**
> **கண்ணிணையும் மரமாந்தீ வினையினேற்கே (1)**

[வெள்ளம் - கங்கைநீர்; வேட்ட - விரும்பிய; பள்ளந் தாழ் உறுபுனல் - பள்ளத்தை நோக்கி ஓடும் நீர்; உள்ளந்தாள் - உள்ளங் கால்]

என்பது இதன் முதற் பாடல். இதில் இறைவன் தன்னை ஆட்கொண்ட அருமைப் பாட்டினை எண்ணி எண்ணித் தன் நெஞ்சம் தாழாமைக்கு மிக மிக மாழாந்து உரைத்தருளு கின்றார் இதில். பேரருளாளனாகிய இறைவனை உணர்ந்து போற்றுதற்குத் தாம் பெற்றுள்ள கருவி கரணங்கள் போதிய ஆற்றல் வாய்ந்தவையல்ல என்பதை அடிகள் இங்குப் புலப் படுத்துகின்றார். இதில், "கங்காதரா என்றும் சடாதரா என்றும் இடப ஊர்தியையுடையவனே என்றும், விண்ணவர்க்கும் (மண்ணவர்க்கும்) மேவிய பெருமானே என்றும் உன்னை அழைப்பதைக் கேட்ட மாத்திரத்தில் உன் அன்பர்கள் அளவிறந்துள்ள வேட்கையுடையராய்ப் பரவச மடைகின்றனர். பேர் அருவி வீழ்கின்றமடுவினுள் தலைகீழாக மாட்டிக்கொண்டவர்கள் உயிர் தப்பிக்கத்திணறுவதுபோன்று உன் மெய்யடியார்கள் உன் அருளைப் பெறப் பேர் அவா உறுகின்றனர். அன்னவர்களைக் காத்திருக்க வைத்து விட்டு என்னை நீ ஆட்கொண்டுள்ளாய். அவர்கள் பெற்றுள்ள பேர் அவாவைப் பெறுவதற்கு அடியேனது சிறுநெஞ்சும் போதாது. உள்ளங்கால் முதல் உச்சியளவும் நான் நெஞ்சு ஆகி உருக வேண்டும். அவர்கட்கு நிகராக அன்புக் கண்ணீர் மல்குதற்கு எனக்கு இரண்டு கண்கள் போதா. உடம்பெல்லாம் கண்ணாய் அவற்றின்று கண்ணீர் பெருகி வெள்ளமாய்ப் பாய்தல் வேண்டும். ஆனால் என் தந்தையே, இச்சிறு நெஞ்சமும் கல்நெஞ்சாகி உருகாது உள்ளது. உலர்ந்த மரக்கட்டையில் செய்த கண்கள் போன்று என் கண்கள் இரண்டும் வறண்டு கிடக்கின்றன. அத்தகைய தீவினையினை உடையேன் யான்" என்கின்றார்.

அடிகளின் இக்கூற்றை சொற்பொருள் பண்ணி நாம் எடுத்துக் கொள்ளலாகாது. பொருள் ஆசை கொண்டவர் கட்கு எவ்வளவு பொருள் சேர்ந்தாலும் போதாது. அருள் நாட்டம் கொண்டவர்களுக்கு இறைவன் எவ்வளவு அருள் சுரந்தாலும் போதாது. ஆனால் பொருள் ஆசை மனிதனைப் பாழ்படுத்துகின்றது; அருள் ஆசையோ அவனை மேலும் மேலும் உயர்த்துகின்றது. ஈண்டுப் பர பக்தியின் உச்ச நிலையைக் காண்கின்றோம். இந்நிலையைச் சிந்திக்குமளவு இதில் ஊன்றியிருக்குமளவு, ஆன்ம சாதகன் உயர்நிலை அடைகின்றான். மனத்தில் மாறுபடுகின்ற இரண்டு ஆசைகள் ஒரே காலத்தில் தோன்றுவதில்லை. உலக ஆசைகள் நீங்க வேண்டும் என்று எதிர்மறையில் எண்ணுவதால் பயன் இல்லை. இறைநாட்டம் அதிகரிக்குமளவு உலக ஆசைகள் அகன்று போய் விடுகின்றன. இது வைராக்கியம் ஆகின்றது.

நுகர்வானும் நுகர்பொருளும் வேறே இருந்துணரும் சுட்டறிவு இருத்தற்கு வருந்திக் கூறுகின்றார் இத்திருப் பாட்டில். இங்ஙனமே ஏனைய பாடல்களிலும் பொருள் கண்டு அநுபவிக்க வேண்டும்.

**4 ஆத்தும சுத்தி :** ஆத்ம சுத்தி என்பதற்கு அநுபவத் தழுந்தல் என முன்னோர் கருத்துரைப்பர். சுட்டறுத்தலில் கூறியவாறு உண்மையுணர்ந்த ஆன்மா தூயதாய் அநுபவித்து அழுந்துகின்றதனை அறிவிப்பதால் இஃது ஆத்தும சுத்தியா கின்றது. ஆன்ம சுத்தியாவது, உயிர் பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும் அறியப்படாத முதல்வனை அவனருளிய சிவஞானத்தாலே தன்னறிவின் கண்ணே நாடிக் கண்டு அம்முதல்வன் அருள்வழி அடங்கி நிற்றலால் மலமாசு நீங்கித் தூய்மை பெறுதல். பதி ஞானத்தால் சிவபரம் பொருளைக் கண்ட காட்சி சலியாமைப் பொருட்டு நினைத்து அவனடிக்கு அன்புடையராய் ஆடுதல், என்புருகிப் பாடுதல், பாதமலர்

சூடுதல் ஆகியவற்றை மேற்கொண்டு அவனருளில் அழுந்து தலே உயிர்கள் தூய்மை பெறுதற்குரிய நெறிமுறையாகும். இதனை,

**ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற்**
**கன்பிலை என்புருகிப்**
**பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை**
**பணிகிலை பாதமலர்**
**சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை**
**துணையிலி பிணநெஞ்சே**
**தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை**
**செய்வதொன் றறியேனே (1)**

[பாதமலர் - பாதமாகிய மலர்]

என்பது இப்பதிகத்தின் முதற்பாடல். இங்ஙனம் இறைவனை நினைந்து போற்றும் முகத்தால் நெஞ்சம் தூய்மை பெறும் என்பதும், அத்தூய்மைதானும் இறைவனது திருவருளா லேயே உயிர்கள் பெறத்தக்க தென்பதும்,

**நெஞ்சினைத் தூய்மை செய்து**
**நினைக்குமா நினைப்பி யாதே**
**வஞ்சமே செய்தி யாலோ**
**வானவர் தலைவ னேநீ (4.23: 9)**

என்ற நாவுக்கரசரின் திருவாக்காலும் புலனாகும்.

'அறிவிலாத எனைப் புகுந்து ஆண்டு கொண்டு அறிவதை அருளி மேல், நெறியெல்லாம் புலமாக்கிய எந்தை'(2) எனவும், 'நம் களவறுத்துநின் றாண்டமை கருத்தினுட் கசிந்துணர்ந்திருந்தேயும்...பளக அறுத்து உடையான் கழல் பணிந்திலை' (5) எனவும் வரும் பாடற் பகுதிகள் ஆன்மா சிவனருளால் தூய்மை பெறுதலைச் சுட்டி நிற்பனவாகும் என்பது அறியத்தக்கது.

**5. கைம்மாறு கொடுத்தல் :** கைம்மாறு கொடுத்தல் என்பது, தன்னைச் சிவனிடத்தில் கொடுத்தல் என்று பொருள்படும். தன்னை முன்னம் நினைக்கத் தந்துதவிய இறைவனுக்கு ஆன்மா தன் ஆற்றலற்ற நிலையினை யுணர்ந்து தன்னையே கைம்மாறாகக் கொடுத்து இறைவன் அருள்வழி அடங்கியொழுகும் நன்றியறிவினைப் புலப் படுத்தும் முறையிலமைந்தது இப்பதிகம். ஆதலின் இது கைம்மாறு கொடுத்தல் என்ற பெயரினைப் பெறுகின்றது. இறைவன் தமக்குப் புரிந்த பேரருளுக்குக் கைம்மாறாகத் தாம் ஒன்றும் செய்ய இயலாத எளிமை நிலையினை நினைந்திரங்கிய அடிகள் தம்மையே கைம்மாறாக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிப் போற்றுகின்றார்.

இறைவன் தமக்குச் செய்த கைம்மாறு வேண்டாக் கருணைத் திறத்தை அடிகள் 'என்னுள்ளக் கருவை' (1), 'தொண்டனேற்கு உள்ளவா வந்து தோன்றினாய்' (2), 'ஆட்கொண்ட கூத்தனே' (3), 'எனை அன்பரில் கூய்ப்பணி கள்ளும்' (6), 'யாவரும் காணவே, பட்டிமண்டபம் ஏற்றினை' (9) என்பன போன்ற பாடற்பகுதிகளால்சொல்லிச் சொல்லி இன்புறுகின்றார். இவற்றிற்குக் கைம்மாறு தேடும் முறையில், 'சிற்றிலேன்' (1) எனவும், 'அறிவனோ அல்லனோ' (10) எனவும் கூறித் தமது இயலாமையையும், செய்ந்நன்றியறிதலைக் கூட மேற்கொள்ள முடியாமையை யும் விளக்கி அருள்கின்றார். அன்றியும், அவர் செய்த உபகாரத்துக்கு மாறாகக் 'கண்டும் கண்டிலேன்' (2) எனவும், 'கழல் கண்டும் பிரிந்தனன்' (8) எனவும் தம் தவறுகளையும் உணர்த்துகின்றார். 'எற்று வந்தெதிர் தாமரைத் தாளுறுங், கூற்ற மன்னதோர் கொள்கை என் கொள்கை' (5) என்று அபகாரம் செய்ததையும் அறிவிக்கின்றார்.

**காண லாம்பர மேகட் கிறந்ததோர்**
**வாணி லாப்பொரு ளேஇங்கோர் பார்ப்பெனப்**
**பாண னேன்படிற் றாக்கையை விட்டுனைப்**
**பூணு மாறறி யேன்புலன் போற்றியே (4)**

*(வாள்நிலா -மிக்க ஒளி; பார்ப்பு - குஞ்சு; படிறு -பொய்; பாழ்நன் - பாணன்]*

என்பது **நான்காம்** பாடல். இதில் முட்டையினை விட்டு வெளியேறும் பறவைக் குஞ்சினைப் போன்று தம் யாக்கைத் தொடர்பினை உதறிவிட்டு இறைவனையே தஞ்சமெனப் பற்றியுய்யும் கருத்துடையராகின்றார் என்பது புலனாகின்றது.

6. **அநுபோக சுத்தி;** அநுபோகசுத்தி என்பது, திருவடிப் பேரின்பத்தை ஆருயிர் நுகர்தற் பொருட்டுத் திருவருளால் அவ்வுயிர் தன்னைத் தூய்மைப் படுத்தலாகும், ''வலிந்து ஆட் கொண்ட பெருமானை அநுபவிக்க உடல் தடையாயிருப்பதற்கு இரங்கி, உடற் பற்றால் உண்டாகும் அழுக்கை ஒழித்து, உயிரைத் தூய்மைப் படுத்திக் கொள்ளுதல்' என்பர். இதனாற் போந்தபொருள் அநுபோகத்திற்காக ஆன்மாவைச் சுத்தி செய்தல் என்பதாகின்றது. அடிகள் தமது வாழ்க்கையநுபவங்களில் நேர்ந்த தவறுகளை எண்ணி உள்ளங் கசிந்து இறைவனைப் போற்றும் முகத்தால் தம் அநுபவங்களைத் தூய்மை செய்து கொள்ளும் பாங்கில் அமைத்துள்ளார். ஆதலால் இப்பதிகம் அநுபோகசுத்தி என்ற பெயர் பெறுகின்றது. அநுபவம் தூய்மையடையவே அதனால் உயிர்க்கு இன்பம் மேலிடுதல் இயல்பாகின்றது. இதனால் 'சுகமேலீடு' என்று பின்னுளோர் கருத்துக்கும் இயைய அமைகின்றது. இப்பதிகத்தில்,

செய்வ தறியாச் சிறுநாயேன்
செம்பொற் பாத மலர்காணாய்
பொய்யர் பெறும்பே றத்தனையும்
பெறுதற் குரியேன் பொய்யில்லா
மெய்யர் வெறியார் மலர்ப்பாதம்
மேவக் கண்டும் கேட்டிருந்தும்
பொய்ய னேனான் உண்டுடுத்திங்
கிருப்ப தானேன் போரேறே (2)

[வெறி - மணம்]

என்பது இரண்டாவது பாடல். "அஞ்ஞான இருளை அறவே அகற்றும் போர் வீரனாகிய இறைவா! அப்பெரிய செயலை அறிந்து கொள்ளாத அறிவிலி நான், ஞான சொரூபியாகிய உன்னை வணங்காது, அநித்தியமாகிய உடலைப் பேணி அதினின்று வருகின்ற அற்பசுகத்தை நாடும் நாய் போன்றவன் நான். பொய்யாகிய உடற்பற்றை ஒழித்துவிட்டு மெய்ப் பொருளாகிய உன்னையே சேவிக்கும் சான்றோர்களைப் பார்த்திருந்தும் அவர்களைப்பற்றிக் கேட்டிருந்தும், அவர் களது செந்நெறி சாராது உடலை ஓம்புதலிலேயே நான் கண்ணும் கருத்துமாயிருக்கின்றேன். என்னே என் இழி செயல்!" என்பதில் அடிகள் தம்பிழைகளை நினைந்து வேசறுகின்றார். ஏனைய பாடல்களிலும் இவ்வாறே தம்பிழைகளை நினைந்து வேசறுகின்றார். ஆகவே, அகங்கரைந்துருக வெளிவந்த இத்திருப்பதிகம் 'அநுபோக சுத்தி' என்ற தலைப்புக்கு ஏற்புடையதாகின்றது. 'தேனைப் பாலைக் கன்னலின் தெளிவையொளியைத் தெளிந்தார்தம் ஊனையுருக்கும் உடையானை' உள்கி உள்ள முருகும் பெருங் காதலாகிய சுகமேலீட்டுக்கும் சிறந்த இலக்கியமாகின்றது.

7 காருணியத்திரங்கல் : காருண்யமாவது, இறைவன் உயிர்கள்பால் வைத்த பெருங்கருணைத் திறம். காருணியம் .

திருவருள். பாசத் தொடர்புகளை அறவே போக்குவதாய்ச் சிவப்பேற்றுக்குக் காரணமாய் உள்ள இறைவனது திருவருள் பதியப்பெற்ற உயிர் முதல்வனது பெருங் கருணைத்திறமாகிய அதனையே நினைந்து போற்றும் முறையில் இரங்கி வேண்டுவதாக அமைந்துள்ள இத்திருப்பதிகம் காருணி யத்திரங்கல் என்ற திருப்பெயரைப் பெறுகின்றது 'உம்பர் தந்தருளு' (4) 'தருக நின்பாதம்' (8) என்ற தொடர்கள் இதனை அரண் செய்யும். தம்முடைய இடர்களை யெல்லாம் விரைந்து களைதல் வேண்டும் என்னும் துடி துடிப்புடன் இறைவனது பேரருளை எதிர் நோக்கிப் போற்றும் முறையீடுகளாக இப்பதிகத் திருப்பாடல்கள் அமைந்துள்ளன. பாசநீக்கத்திற்குப் பின்னரும் சிவப் பேற்றுக்கு முன்னரும் வேண்டற்பாலது இத்திருவருள் வீழ்ச்சி. இத்திருவருள் வீழ்ச்சியாகிய அருட்பேற்றைத் திரு வுளங்கொண்டே அடிகள் 'போற்றி' என்னும் பொருள்சேர் மறைமொழியினைத் திருப்பாடல்கள்தோறும் பன்முறை ஓதிப் போற்றுவர். போற்றிச்காத்தருள்க, வணக்கம், இந்த இரு பொருளும் பொருந்தும் இடம் நோக்கிக் கொள்ளப் படும். அடிகள் ஆண்டவனை மன்றாடி வேண்டும் திருக் குறிப்புகள் பாடல்கள்தோறும் பரவியுள்ளதைக் கண்டு மகிழலாம்.

இப்பதிகத்தின் இரண்டு பாடல்களில் ஆழங்கால் படுவோம்.

**போற்றியோ நமச்சி வாய**
**புயங்கனே மயங்கு கின்றேன்**
**போற்றியோ நமச்சி வாய**
**புகலிடம் பிறிதொன் றில்லை**
**போற்றியோ நமச்சி வாய**
**புறமெனைப் போக்கல் கண்டாய்**
**போற்றியோ நமச்சி வாய**
**சயசய போற்றி போற்றி (2)**

[வள்ளல் - கைம்மாறு கருதாது உபகரிப்பவன்; புதுமது - புதிய அமுதம்.]

என்பது இப்பதிகத்தின் இரண்டாவது பாடல். இங்கு அடிகள் திருவைந்தெழுத்தாய மந்திரத்தை 'ஓம்' என்னும் பிரணவத்துடன் போற்றி உலகம் உய்யத் திருவாய் மலர்ந்தருளிய அன்பின் திறத்தைக் காணலாம். இங்ஙனம் இறைவனின்பேரருளின் திறம் 'வெல்க வெல்க' (சயசய) எனப் போற்றிப் பரவும் முறையீடாக அமைந்த இப்பதிகத்திற்குச் 'சிவனுடைய வெற்றிப்பாட்டிரங்கல்' என்று கருத்துரை வழங்குவர் பின்னுள்ளோர் (அருணகிரிமுதலியார்)

அடுத்தது,

**போற்றியிப் புவன நீந்திக்**
**காலொடு வான மானாய்**
**போற்றியெவ் வுயிர்க்குந் தோற்ற**
**மாகிநீ தோற்ற மில்லாய்**
**போற்றியெல் லாவு யிர்க்கும்**
**ஈறாயீ றின்மை யானாய்**
**போற்றியைம் புலன்கள் நின்னைப்**
**புணர்கிலாப் புணர்க்கை யானே(10)**

[காலொடு - காற்றுடன்; ஈறுஆய் - முடிவாகி; புணர்கிலா - அணுகப் பெறாத]

என்ற பத்தாம் பாடல். இதில் ''சுட்டப்படுகின்ற இந் நிலம், நீர், தீ, காற்று, விண் என்னும் ஐம்பெரும் பூதங்களும் ஆயினாய், வணக்கம்: எல்லா உயிர்களும் தோன்றுதற்குக் காரணன் ஆகி நீ ஒன்றிலும் தோன்றுதல் இலன் ஆனாய், வணக்கம்; எல்லா உயிர்களும் ஒடுங்கும் இடனாய் நீ ஒன்றிலும் ஒடுங்குதல் இலன் ஆனாய், வணக்கம்; மனத்தோடியைந்த ஐம்புலன்களும் நின்னைச் சார்தல் இல்லாதபடி சார்ந்திருப்பவனே, வணக்கம்'' என்கின்றார்.

"பரம் பொருள் யாண்டும் தன்மயமாய் நிர்விகாரியாய் இருக்கிறார். அவருடைய சந்நிதான விசேடத்தால் அவருக்கு அபின்னமான மாயாசக்தி இத்தனை விதத் தோற்றங் களையும் அவற்றின் ஒடுக்கங்களையும் உண்டுபண்ணு கின்றாள் என்பது பெருந்தவத்திரு சித்பவானந்த அடிகளின் அற்புத விளக்கம்.[5]

8. **ஆனந்தத்தழுந்தல்** ஆனந்தத்து அழுந்துதல் என்பது சிவானந்தத்து அழுந்தி நிற்றல். பண்டிதமணி 'பேரின்பத்தில் அழுந்திநிற்றல்; அதாவது இறைவனின் கருணையின் பயனாகவுள்ள சிவானந்தவிளைவில் திளைத்தல், என்பர் இதன் இயல்பினைப் 'பேரானந்தம்' என்வும், 'உலப்பிலா ஆனந்தத் தேன்' எனவும், 'அந்தமொன்றில்லா ஆனந்தம்' எனவும் அடிகள் விளக்கியுள்ளார். அழுந்தல் என்றது, தான் என்னும் உணர்வு அற அப் பேரின்பத்தில் படிதலை. பெருந் தவத்திரு சித்பவாநந்த அடிகளின் விளக்கம்: 'ஆனந்தத்தை நாடுதல் மனிதனது அலாதிச் செயல் என்று நாம் எண்ண லாகாது உயிர்கள் அனைத்தும் அப்பேரியக்கத்தில் ஈடுபட்டிருக் கின்றன, ஆனந்தம் நிறைந்த உயிர் வாழ்க்கையையே அவை நாடுகின்றன. ஆனந்தமில்லாத உயிர் வாழ்க்கையை அவை வெறுக்கின்றன. ஏனென்றால், அவை யாவும் ஆனந்தத் தினின்றும் வந்தவைகள். 'ஆனந்தம் பிரம்மம். ஆனந்தமே மெய்ப்பொருள்' என்கின்றது உபநிடதம், இஃது எல்லாரு டைய பொதுவுடைமை. எந்தச் சமயத்திலோ சமுதாயத் திலோ இது கட்டுப்பட்டதன்று. பிரகிருதியின் மூலமாகப் பிரதிபலிக்கும் ஆனந்தம் தங்குதடையுடையது, அதில் அழுந்தியிருக்க சீவன் முயன்றாலும் அதுவே நிலைத்திருப்ப தில்லை. ஆதலால் அது சிற்றின்பம் எனப்படுகின்றது. பிர கிருதியோடு சம்பந்தப்படாத ஆனந்தமோ நிரந்தரமானது.

5. சுவாமி சித்பவானந்தர்; திருவாசகம் - பக் 352

சிவானந்தபோதம் என்பது அதுவே; அதில் அழுந்தியிருத்தல் வாழ்க்கையின் குறிக்கோள் ஆகும்''[6] என்பது.

இப்பதிகத்தின் முதற் பாடல்:

**புணர்ப்ப தொக்க வெந்த என்னை**
**யாண்டு பூண நோக்கினாய்**
**புணர்ப்ப தன்றி தென்றபோது**
**நின்னொ டென்னொ டென்னிதாம்**
**புணர்ப்ப தாக வன்றி தாக**
**வன்பு நின்க ழற்கணே**
**புணர்ப்ப தாக வங்க ணாள**
**புங்க மான போகமே (1)**

[புணர்ப்பது சேர்த்துக் - கொள்வது; புங்கம் - உயர்வு]

என்பது, தம்மை ஆண்டுகொண்டருளிய இறைவனை நோக்கி, 'எந்தையே, என்னை ஆட்கொள்ளுதலில் நீ காட்டிய காருண்யம் என்னை உன்னில் இரண்டற ஏற்றுக் கொள்வாய் போல் தென்பட்டது. ஆனால் இவ்வுடல் வாழ்க்கையிலேயே இன்னும் சிறிது காலம் இருக்க என்னை நீ விட்டுவைத் திருக்கின்றாய். நானோ உன்மீது வைத்துள்ள பேரன்பால் உடல் வாழ்க்கையை உள்ளத்தில் வாங்கிக் கொள்ளாது சிவானந்த போதத்திலேயே திளைத்திருபேன்'' என்று முறையிடுகின்றார்.

இறைவன் திருவடிக்கண் செலுத்தும் அன்பொன்றே இந்திரன் முதலியோர் பதவிகளை யெல்லாம் கீழ்ப்படுத்தி எல்லா இன்பங்கட்கும் மேலானதாகிய பேராவியற்கை யாகிய பேரின்ப நிலையை நல்கவல்லது என்பதனை,

---

6. சித்பவாநந்தர் - திருவாசகம் - பக் 352-53.

**போகம் வேண்டி வேண்டிலேன்**
**புரந்தரன் ஆதி இன்பமும்**
**ஏக நின்கழல் இணை அலாது**
**இலேன் என் எம்பிரான் (2)**

என்ற திருப்பாடல் பகுதியில் தெளிவாகக் குறிப்பிடுவர்.

(9) **ஆனந்த பரவசம் :** மேற்பதிகத்தில் குறித்தவண்ணம் ஆனந்த வெள்ளத்து அழுந்தியிருக்கின்றபோது ஆனந்தத்தை நுகர்கின்றோம் என்ற அறிவு அற்றுப் போகப் பரவசம் அடைதல். அதாவது, பேரின்பத்தில் தலைப்படக் கிடந்த நல்லுயிர் மேன்மேலும் உலப்பிலா ஆனந்தமாகிய அதன் கண் ஈடுபட்டுத் தன்வசம் அழிதல் ஆனந்த பரவசம் ஆகும். பரவசம் என்பதற்குப் பிறர்வயப்படல் என்பது பொருள். ஆயினும், ஈண்டு அச்சொல் தன்வசம் அழிதல் என்ற கருத்தில் ஆளப்பெற்றுள்ளதாகக் குறிப்பிடுவர் பண்டிதமணி.[7] உயிர் தன்வயம் இழந்து பேரின்பவயப்பட்டு அறிவிழந்து இறவா இன்பம் நுகர்ந்து கொண்டிருப்பதைக் குறிப்பது இத்திருப் பதிகம். இந்த நிலையை,

**தூங்காமல் தூங்கிச்**
**சுகப்பெருமான் நின்னிறைவில்**
**நீங்காமல் நிற்கும்**
**நிலைபெறவும் காண்பேனோ**[8]

என்றும்,

**சிந்தனைபோய் நானெனல்போய்த்**
**தேக்கஇன்ப மாமழையை**
**வந்து பொழிந்தனைநீ**
**வாழி பராபரமே**[9]

எனவும் வரும் தாயுமானவரின் திருமொழியிலும் கண்டு மகிழலாம். சுருக்கமாக உரைத்தால், சிவபோதம் முற்றும்

---

7. திருவா. திருச் சதகம் - கதிர் மணி விளக்கம் பக்-371
8. காண்பே. 10; 9. பராபரம் - 137

ஒடுங்கி சிவபோதம் எஞ்சி யிருக்கும்போது உயிர் அடையும் நிலையே ஆனந்த பரவசமாகின்றது.

இந்தப் பதிகத்தில் இரண்டு திருப்பாசுரங்களில் ஆழங் கால் பாடுவோம்.

**விச்சுக் கேடுபொய்க் காகா**
**தென்றிங் கெனைவைத்தாய்**
**இச்சைக் கானா ரெல்லாரும்**
**வந்துன் தாள்சேர்ந்தார்**
**அச்சத் தாலே யாழ்ந்திடு**
**கின்றேன் ஆரூரெம்**
**பிச்சைத் தேவா என்னான்**
**செய்கேன் பேசாயே(1)**

[*விச்சுக் கேடு - விதையின் அழிவு; இசைக் கானார் - கருணைக்கிலக்கானார்*]

என்பது முதற் பாடல். இதில் அடிகள், ''திருவாரூரில் கோயில் கொண்டருளிய பிச்சைத் தேவனான பெருமானே, இவ் வுலகில் பொய்யாகிய பயிருக்கு விதையில்லாமல் போகக் கூடாது என்னும் கருத்துடன் பொய்க்குரிய விதையாக என்னை இங்கே சேமித்து வைத்துள்ளாய். நின்பால் ஆரா விருப்புடையா ரெல்லாரும் நின் திருவடியை அடைந்து இன்புறுகின்றனர். யானோ நின் அருள் வெள்ளத்தில் அகப் பட்டும் அதனை நுகர்ந்து இன்புறும் உணர்வின்றி எனது அறி யாமையிலுளதாகிய அச்சம் காரணமாகத் துன்பத்துள் ஆழ்ந்து போகின்றேன். ஆற்றலற்ற யான் வேறு என் செய்ய வல்லேன்? நின் அருளாரின்பத்தை நுகர்தற்குரிய வழியை எளியேனுக்கு உரைத்தருள்வாயாக'' என்று இறைவனிடம் வேண்டுகின்றார். இதன்கண் 'அச்சத்தாலே ஆழ்ந்திடு கின்றேன். நான் என் செய்கேன்' என்ற பகுதி அடிகளது பரவச நிலையைப் புலப்படுத்துவதாகும். மெய்யடியார்கள் எல்லோரும் நின் திருவடியைச் சார்ந்து பேரா இன்பத்தில்

திளைத்து ஆனந்தபரவசராக அமர்ந்துள்ளார்கள். பொய்ய னாகிய யான் மட்டிலும் புறமே போந்து தனித்து வருந்து கின்றேன்' என அருள் பெறாதாரைப் போன்று அழுங்கிக் கூறுவனவாகிய திருப்பாடல்களையுடைய இத்திருப்பதிகம் அடிகள் ஆனந்தபரவசராய்த் தம் வசமிழந்த நிலையினை இனிது புலப்படுத்துவதாகும்.

இன்னொருபாடல் :

**தாரா யுடையா யடியேற்**
**குன்றா ளிணையன்பு**
**பேரா வுலகம் புக்காரடியார்**
**புறமே போந்தேன்யான்**
**ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்தாங்(கு)**
**உன்தான் இணையன்புக்**
**காராய் அடியேன் அயலே**
**மயல்கொண் டழுகேனே (7)**

(மிலைக்க - கனைக்க; ஆரா - பொருந்தாத)

என்பது ஏழாவது பாடல்; இதில் "யாண்டும் என்னை உடையவனே, எனக்கு உன்னை முறையாக நாடிய அன்பர் கள் மீண்டும் பிறவி விளையாத முத்தியடையப் பெற்றனர். ஆனால் நானோ வீடு பேற்றினுக்கு வேற்றானாக இருக் கின்றேன். கன்றைப் பார்த்தோ திண்டியைப்பார்த்தோ ஊர்ப் பசுவானது பொருள்படக்கத்துகிறது. அதைக் கேட்ட குருட்டுப்பசுவும் பொருளற்ற கூச்சல்போடுகின்றது. அங்ஙனம் உன் அன்பு வேண்டுமென்று நான் வீணில் ஓல மிடுகின்றேன். செந்நெறிபற்றிய அநுபவம் எனக்கில்லை." என்கின்றார்.

இந்தப் பாசுரத்திற்கு அநுபவ ஞானம் காணும் சித்பவா னந்த அடிகள், "விவேகம் என்ற கண்ணில்லாதவன் குருட்டுப் பசுவுக்கு ஒப்பாகின்றான். சாதனத்தில் அவன் எடுத்துக் கொள்கிற முயற்சி பயனற்றதாகிறது" என்று விளக்கிக் காட்டுவர்.

நம்மாழ்வாரின் திருவிருத்தத்திலும் இந்தப் பழமொழி அற்புதமாக அமைந்துள்ளது.

மைப்படி மேனியும் செந்தாமரைக்
    கண்ணும் வைதிகரே
மெய்ப்படி யாலுன் திருவடி
    சூழுந் தகைமையினார்
எப்படி யூராமிலைக்கக் குருட்டா
    மிலைக்கும் என்னும்
அப்படி யானும் சொன்னேன்
    அடியேன்மற் றுயாதென்பனே?

—திருவிருத்.94

(மை - நீலநிறம்; மெய்ப்படி - உண்மையான நெறி; தகைமை - தன்மை; மிலைக்க - கனைக்க; மற்றுயாது - வேறு என்ன)

இதில் ஆழ்வார் நாயகி (பராங்குச நாயகி) "கண்டார் கண் குளிரும்படியான உனது திருமேனியையும் சிவந்த தாமரை மலர்போன்று இருக்கும் திருக்கண்களையும் உடையவனான உன்னுடைய திருவடித் தாமரைகளை மெய்யாகக் கண்டு தலைமேற் கொண்டு அநுபவிக்கும் தன்மை யுடையவர்கள் வேதவேதாந்த ஞானத்திற் சிறந்த மகான்களேயாவர்; அறிவிலியான நானும் அவர்களைப்போல் ஏதோ சொல்லு கின்றேன். இஃது என்போலுமெனில் நன்றாய்க் கண்தெரிந்த பசுக்கள் (மேய்ச்சல் காட்டினின்று) ஊர்புகுந்து சேர்ந்ததும் மகிழ்வுற்று அந்த மகிழ்ச்சிக்குப் போக்குவீடாகக் கனைக் கின்றன கண்ணில்லாத குருட்டுப்பசுவும் அது கேட்டு அதனை இன்னதென்றறியாமல் ஒக்கக் கனைக்கும் என்று உலகம் சொல்லும். வேதவிற்பன்னர்கள் சொன்ன பாசுரத்தைக் கேட்ட ஞானத்தாலே சொல்லுகின்றேனேயன்றி என் ஞானத்தால் கண்டு என் ஆற்றலால் சொல்லவில்லை" என்கின்றாள்.

இந்த இரண்டு ஞானச் செல்வர்கள் கூறுவது ஒருவகை நைச்சியாநுசந்தானம் (தாழ்வை வாய்விட்டுக் கூறுதல்).

(10) **ஆனந்தாதீதம்** : ஆனந்தாதீதம் என்பது பேரின் பத்தின் உயர்ந்த எல்லை. ஆனந்தம் - மெய்யுணர்வினால் நுகரத்தகும் பேரின்பம். அதீதம் - கடந்தநிலை. தன்வசம் இழந்த ஆன்மா சிவானந்தாநுபவத்தில் கடந்த நிலையை சிவவிளக்கம் முற்றுப்பெற்றிருத்தல் என்று விளக்கலாம். ஆருயிர் சார்ந்ததன் வண்ணமாம் தன்மையுடையது. ஒரு பொருள் தன்னால் சாரப்பட்ட பொருளின் தன்மையையே தன் தன்மையாகக் கொண்டு நிற்பதுவே இது. தூய வெள்ளாடை தான் சார்ந்த வண்ணத்தைப் பெற்று உள்ளும் புறம்பும் அதன் தன்மையாய் அதன் உள்ளடங்கி அதன் நிறமும் பெயரும் பெற்று விளங்குவது இதற்கு ஒப்பாகும். இத்தன்மையே உயிர்களின் உண்மை எனப்படும் '**சொரூப இலக்கணம்**' ஆகும். உயிர் பாசத்தைச் சார்ந்தவழிப் பாசமாயும், பதியைச் சார்ந்தவழிப் பதியேயாயும் நிற்கும் என்பது சித்தாந்த உண்மை. உயிர்கட்கு இன்பத்தை விரும்புதலே இயற்கையாதலின் இன்பப் பொருளாகிய பதியை[10] அடைதலே உயிரின் இயல்பாக அமைந்துள்ளது. இதனால் ஆருயிர் சிவனையே மறவாநினைவுடன் நாடிக் கொண்டிருப்பின் சிவவண்ணத்தைப் பெற்றுச் சிவமாய்த் திகழும் என்பதை அறிகின்றோம். இந்நிலையில் பாச நீக்கமும் திருவருள் விளக்கமும் உண்டாகும். இஃது இருள் நீக்கத்தின்கண் ஒளி விளக்கம் உண்டாவதை ஒக்கும். இதன் மேல் ஆண்டவனின் தண்ணாத் தண்ணளியால் அழிவிலின்ப விளக்கம் உண்டாகும். இவ்வின்ப விளக்க மெய்யுணர்வோடு

10. அகமகிழவருந்தேன் முக்கனி, கற்கண்டு, அமிர்தம்-என்றெல்லாம் தாயுமான அடிகள் பதியைக் குறிப்பிடுவது (தா. பா. பொருள்வணக்கம் - 4) ஈண்டு நினைக்கத் தகும்.

உயிர் தோய்தல் ஆனந்தத்து அழுந்தலாகும், இத்தோய்வு முதிர முதிரத் தன்வயம் அழிதல் என்னும் ஆனந்த பரவசம் உண்டாகும். தன்வயம் அழிந்த நிலையின் மேம்பட்ட நிலையே ''அப்பால் நிலை' எனப்படும் 'அதீத நிலை'யாகும். இந்த நிலையில் காண்பான், காட்சி' காணப்படும் பொருள் என்னும் வேறுபாடு இல்லை. தன்வயம் அழிந்த நிலையிலும் ஓரோவழிப் பண்டைத் தொடர்பால் பேரின்பம் நுகர் கின்றோம் என்னும் எண்ணம் தோன்றுதல் கூடும். அப்பால் நிலையில் அதற்கு இடம் இல்லை. ஆண்டு மேலாம் சிவன்மை விளக்கம் அப்பால் நிலையில், மேலாகும் இன்பநிலை மேவும். இந்த இன்ப நிலைக்கண் நுகரும் ஆருயிர்க்குத் தன்னைக் குறித்து 'யான்' எனலும், நுகர்வுப் பொருளாகிய இறை வனைக் குறித்து 'நீ நினது' என்றலும் ஆகிய வேற்றுமை உணர்ச்சி சிறிதும் நிகழாது.

**எனைநானென்ப தரியேன்பகல்**
**இரவாவதும் அறியேன்** —உயிருண்ணி - 3

என வரும் அடிகளது அநுபவமொழி இதனைத்தெளிவாக்கும்

**அப்ப னேயெனக் கமுத னேஆ**
**னந்த னேயகம் நெகஅள் ளூறுதேன்**
**ஒப்ப னேஉனக் குரிய அன்பரில்**
**உரிய னாயுனைப் பருக நின்றதோர்**
**துப்ப னேசுடர் முடிய னேதுணை**
**யாள னேதொழும் பாவ ரெய்ப்பினில்**
**வைப்ப னேயெனை வைப்ப தோசொலாய்**
**நைய வையகத் தெங்கள் மன்னனே (8)**

(துப்பன் - உணவாயுள்ளவன்; தொழும்பாளர்-அடியார்; எய்ப்பினில்வைப்பு - இளைத்த காலத்தில் உதவும் சேமநிதி; நைய வருந்தும்படி)

என்பது எட்டாவது பாடல், இஃது அடிகள் பெற்ற ஆனந் தாத நிலையினைக் குறித்தல் அறியத்தக்கதாகும்.

# 7. ஆலவாய் நிகழ்ச்சிகள்

குருநாதன் கனவு நிலையில் தந்த ஆணைப்படி மாணிக்க வாசகர் திரு ஆலவாய்க்கு (மதுரைக்கு) வருகின்றார். முன்னரே அவர் எழுதிய வோலையைத் தூதர் வாயிலாகப் பெற்ற பாண்டியன் சினம் தணிந்திருந்தனன். இந்நிலையில் வாதவூரடிகள் அரண்மனை சென்று மன்னனை வணங்குகின்றார். அவரைக் கண்ட பாண்டியன் அன்புடன் வரவேற்றுச் சிறப்பிக்கின்றான். பின்னர் தனியே அழைத்துச் சென்று, "எவ்வளவு புரவிகள் வாங்கினீர்? எந்தத் துறையில் தங்கியிருந்தீர்? தங்குவதற்கு வசதிகளுடன் கூடிய இடம் கிடைத்ததா?" என்பனபோன்று பலவாறு வினவினான். இந்த வினாக்களுக்கெலாம் அடிகள் ஆலவாய் அமர்ந்து உறையும் அண்ணலின் திருவருளை மனத்திற் கொண்டு தக்கவாறு விடை அளிக்கின்றார். அடிகளின் இன்னுரையைக் கேட்ட பாண்டிய மன்னன் மிகவும் மகிழ்ச்சி யுற்று வரிசைகள் பல நல்கி அவர்தம் மாளிகைக்கு ஏகப்பணிக் கின்றான்.

வேந்தன்பால் விடைபெற்ற அடிகள் ஆலவாய் அவிர் சடை அண்ணலின் திருக்கோயிலை அடைந்து அவரைப் பணிந்து, "அண்ணலே, புரவிகள் விரைவில் வரும் என்று வேந்தன் மகிழ உரைத்தேன். குதிரைகள் வாங்க அரசன் தந்த பொருள்களையெல்லாம் அடியார்கட்கும் திருக் கோயிலுக்கும் செலவிட்டேன். உன்னையல்லால் அடியேனுக்கு துணையாவார் ஒருவரும் இலர்' எனத் தனி நின்று குறை இரக்கின்றார். அப்போது 'அஞ்சல், அஞ்சல்' என்றதோர் அருள்வாக்கு விசும்பிடைஎழுகின்றது. இதனைச் செவிமடுத்த அடிகள் தேறுதலடைகின்றார். தமது மாளிகையிற் சென்று இறைவனை வழிபட்டு அமுது செய்கின்றார். கருதிய செயல்

எங்ஙனம் முடியுமோ என்ற மனக்கவலையுடன் துயில் கொள்ளுகின்றார். இந்நிலையில் உறவினர்கள் வந்து அடிகளை எழுப்பி அரசன்பால் அவர் நடந்து கொண்டது நெறியற்ற செயல் என அறிவுறுத்துகின்றனர். வாதவூரர் அவர்களை நோக்கி,

**சுற்றமும் தொடர்பு நீத்தேம்**
**துன்பமும் இன்பு மற்றேம்**
**வெற்றுடன் மானந் தீர்ந்தேம்**
**வெற்றுக்கைமேல் வெறுக்கை வைத்தேம்**
**செற்றமும் செருக்கும் காய்ந்தேம்**
**தீவினை இரண்டும் தீர்ந்தேம்**
**கற்றைவார் சடையான் கோலம்**
**காட்டியாட் கொண்ட அன்றே.**

[வெறுக்கை - பொருள்; வெறுக்கை - வெறுப்பு; செருக்கு - சினம் ]

**தந்தைதாய் குரவன் ஆசான்**
**சங்கரன் நிராசை பெண்டிர்**
**மைந்தர்பல் உயிரும் கற்ற**
**மாசிலா ஈசன் என்பர்**
**அந்தமில் பிறவி ஏழும்**
**அடுபகை எனாது ஓர்ந்தேம்**
**எந்தையார் கருணை காட்டி**
**எம்மையாட்கொண்ட அன்றே[1]**

[மாசு - குற்றம்; அடுபகை - கொல்லும், பகை; ஓர்ந்தேம் - அறிந்தேம்]

என்று கூறுகின்றார்.

''உமக்கும் எனக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. எனக்கு உலகத்தில் வெறுப்பும் இல்லை; விருப்பும் இல்லை

1. வாதவூரடிகளுக்கு— 83, 84

இறைவன் மானிடத்திருமேனி கொண்டு எழுந்தருளி வந்து என்னை ஆட்கொண்ட அன்றே எனது பிறப்பு ஒழிந்தது. மன்னனுக்குத் தவறு விளைத்தலாகாது என்ற எண்ணத்தினால்தான் இவண் போந்தேன். அரசனுடைய கடன் முழுவதையும் விரைவில் தீர்ப்பேன். உங்கள் வழியில் நீங்கள் செல்லலாம்'' எனக் கூறி அவர்களை அனுப்புகின்றார். அவர்களும் மனம் நொந்து அவரைவிட்டு அகல்கின்றனர்.

அடுத்தநாள் பாண்டியன் அனுப்பிய ஏவலாளர் சிலர் அடிகளிடம் வந்து 'குதிரைகள் வந்தனவோ!' என வினவுகின்றனர். அதுகேட்ட அடிகள் 'குதிரைகள் மெய்யாகவே இப்பொழுது வந்துவிடும். நீங்கள் அவசரப்படுதல் வேண்டா நகரை அணிசெய்து வைக்கும்படி சொல்லுமின். என்சொல் தப்பாது' என்று சொல்லியனுப்புகின்றார். அடிகள் குறித்த காலம் வந்தும் குதிரைகள் வரவில்லை. அரசன் சினமுறுகின்றான். முறை செய்வோரை அனுப்பிக் கேட்கச் செய்கின்றான். அடிகள் முன்போலவே மறுமொழி சொல்லி அவர்களை அனுப்பி விடுகின்றார். இந்நிலையில் அமைச்சர் பலரும் ஒன்று கூடி அரசனை அணுகி, 'மன்னர் பெருமானே, வாதவூரன் பெரும்பித்தனாகி விட்டான். அவன் சொல்லை நம்பி நகரை அணி செய்வித்தனை; பித்தன் பெருந்துறையில் நமது பொருள் முழுவதையும் மனம்போனபடி வாரி இறைத்து விட்டான். இரக்கமின்றி அவனை ஒறுத்து அவனிடமிருந்து பொருளைப் பெற முயல்வதே இனிச் செய்யத்தக்கது' என்று அறிவுரை கூறித் தெளிவிக்கின்றனர்.

அமைச்சர் சொற்கேட்ட அரசன் தனது தெளிவின்மையால் நேர்ந்த பொருள் இழப்பினை எண்ணுகின்றான். பெருமூச்சு விட்டுப் பொருமுகின்றான். கண்களில் நெருப்புப் பொறி பறக்கச் சினம் கொள்ளுகின்றான். 'மையல் நெஞ்சினனாகிய வாதவூரரை வளைத்துப் பிடிமின்' எனப் பிரம்படிக்காரரை ஏவுகின்றான். அவர்களும் அரசன்

பணித்த வண்ணம் அடிகளை வளைத்துப் பிடிக்கின்றனர். எனினும் அடிகளது சிவபக்திச் சிறப்பினை யுணர்ந்து அவரைத் துன்புறுத்த அஞ்சுகின்றனர். வாதவூரரைச் சிறைப் படுத்தி ஒறுக்கும்படி மேலும் சிலரை அனுப்புகின்றான். அவர்கள் அடிகளைக் கொடுஞ்சிறையில் தள்ளித் துன்புறுத்து கின்றனர்; பல்வேறு தண்டனைகளைத் தருகின்றனர்.[2] துயரம் பொறாத அடிகள் இறைவனைநோக்கி முறையிட்டுப் புலம்புகின்றார். இப்பொழுதுதான் **குழைத்த பத்து, அருட் பத்து** என்ற பனுவல்கள் பிறக்கின்றன.

அடியார் வருத்தம் தரியாதவர் சிவபெருமான். தம்பால் அன்புடைய வாதவூரடிகளின் மனத்துயரைத் தீர்க்கத் திருவுளம்கொள்ளுகின்றார். மிழலை நாட்டுக் காட்டில் திரியும் நரிகளையெல்லாம் ஒருங்கு திரட்டி அவற்றுக்கு வேண்டிய அறிவுரைகளைச் சொல்லி அவற்றையெல்லாம் பரிகளாக்குகின்றார். தம்மைப் பிரியாதுள்ள கணநாதர் களைக் குதிரை வீரர்களாகப் பணித்துத்[3] தாமும் ஒரு குதிரை மீதமர்ந்து குதிரைத்திரளுடன் மதுரை வந்தருள் கின்றார். அங்ஙனம் வருபவர் வழியிடையே திருவாதவூரை அடைந்து வாதவூரடிகளின் செவியிற்படும்படி தம்முடைய திருவடிச் சிலம்பொலியைக் காட்டியருளுகின்றார்.[4]

> **வாத வூரினில் வந்தினி தருளிப்**
> **பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்**
> — **கீர்த்தித்திரு.** (52.53)

---

2. நரிபரியாக்கிய—7, 8, 9
3. தேவர்கள் குதிரை வீரர்களாக வந்தனர் என்று கூறும் திருவாதவூரர் புராணம்.
4. வாதவூரடிகள் துன்பத்தை அநுபவித்த சிறைக் கூடம் திருவாதவூரருகே இருந்தது போலும்

என்ற அடிகளது வாய்மொழி கொண்டு உய்த்துணரலாம். இவ்வொலியைச் செவிமடுத்த அடிகள் 'இஃது என்னை யாண்ட எம்பெருமானது பாதச் சிலம்பொலியே' எனத் தெளிகின்றார்; இறைவனை இறைஞ்சுகின்றார். அந்தப் பெருமான் கொண்டுவந்தமை யுணராது அவற்றைக் கொண்டு வருமாறு இறைவனைப் பணிந்து வேண்டுகிறார்.

பரிகள் வந்து கொண்டிருப்பதைக் காண்கின்றனர் சிறைக் காவலர்கள். அவர்கள் வாதவூரடிகளை யணுகிக் குதிரை களின் வரவைப் பாண்டியனிடம் நேரில் சென்று தெரி விக்குமாறு சொல்லி அவரைச் சிறையினின்றும் விடுவிக் கின்றனர். அடிகளும் அரசனிடம் நேரில் சென்று செய்தியைத் தெரிவிக்க அரசனும் குதிரைகளின் வரவை எதிர்பார்த்த வண்ணம் வீதியின்கண்ணதாகிய மண்டபத்தில் வந்து அமர் கின்றான். மன்னன் அதிக நேரம் காத்திருந்தும் இறைவனது அருள் விளையாட்டால் குதிரைகள் வரத் தாழ்க்கின்றன. பரிகளைக் காணாத பாண்டியன் மனம் புழுங்கி ஒற்றர்களை ஏவுகின்றான். அவர்கள் நாற்றிசையிலும் சென்று நோக்கிக் 'குதிரைகளைக் கண்டிலோம்' எனக் கூறுகின்றனர். இது கேட்டு வெகுண்ட வேந்தன் 'பொருள்களை வீணாகச் செலவிட்டதுமன்றி, குதிரைகள் வருவதாகச் சொல்லி ஏமாற்றும் அமைச்சனை ஊரினுள் கொண்டு போய் நிறுத்திப் புளியம்வளாரால் அடித்துத் துன்புறுத்துமின்' எனத் தண்டத் தலைவர்களை நோக்கிக் கூற, அவர்களும் அடிகளை அவ்வாறே இழுத்துச் சென்று துன்புறுத்தத் தொடங்கு கின்றனர். அடிகள் கண்களில் நீர்மல்கத் திருமுகம் வியர்க்கச் சிவபெருமானை நினைந்து **அடைக்கலப் பத்து** பாடுகின்றார். சிறைக் கூடத்தருகே சோலையில் புகுந்த குயிலை நோக்கிக் **குயிற் பத்து** பாடுகின்றார். இவ்வளவில் இறைவனருளால் குதிரைகள் மதுரை நகருக்குள் புகுகின்றன. அவற்றைக் கண்ட அரசன் பெரிதும் வியந்து வாதவூரடிகளை வர

வழைத்துத் தன்னருகே அமர்த்தி அவருக்கு ஆறுதல் கூறு கின்றான்; தான் செய்த பிழையினைப் பொருத்தருளுமாறும் வேண்டுகின்றான்.

இந்நிலையில் குதிரை வீரர்கள் குதிரையை நடத்திக் கொண்டு உடன்வர இறைவனும் அழகியதோர் பரிமேல் அமர்ந்து அரசவீதி வழியே வருகின்றார். பரிமேலழகராய் வந்தருளியபோது அவரது பேரழகில் ஈடுபட்டுக் காதல் கொண்ட இளமகளிர் வாக்காக அடிகள் அன்னைப் பத்தினை அருளுகின்றார். குதிரைகளை நடத்தி வந்த வணிகச் சாத்தினர் அனைவரும் உருவம், பருவம் முதலிய வற்றால் ஒத்த இயல்பினராக இருத்தலைக் கண்ட பாண்டிய னுக்கு ஒரே வியப்பு. அடிகளை நோக்கி 'இவர்களுள் தலைவர் யார்' எனக் கேட்கின்றான். அடிகளும் 'இப்போது குதிரையின் முன்னே வந்து தோன்றுவர்' எனக் கூறுகின்றார். இவ்வளவில் சிவபெருமான் வெள்ளைப் பரிமீது முன் வந்து தோன்றுகின்றார். வந்தவர் 'அரசரே, சிறிது நேரம் கண் இமையாதிருந்து காண்பீராக' எனக் கூறிக் குதிரையின் பல வகைக் கதிகளையும் தாம் அமர்ந்து வந்த குதிரையைக் கொண்டு நடத்திக் காட்டுகின்றார். அவருடன் போந்த குதிரை வீரர்களும் தத்தம் குதிரையினை அவ்வண்ணமே நடத்திக் காட்டுகின்றனர். இதனைக் கண்ணுற்ற மன்னன் அவ்வீரர்களை நோக்கி 'நும் தலைவர் யார்?' என வினவ, அவர்களும் தம்முடன் வந்த இறைவரைச் சுட்டிக் காட்டி 'யாவர்க்கும் தலைவர் இவரே' எனத் தெரிவிக்கின்றனர்.

குதிரைச் சேவகனாகிய இறைவனைக் கண்ட பாண்டியன் வியப்பினாலும் களிப்பினாலும் தன்னை மறக் கின்றான்; கைகளைத் தலைமேற் குவித்த வண்ணம் வணங்குவதற்கு எழுந்தவன் தான் ஒரு குதிரைப் பாகனை வணங்குதல் தக்கதன்றென நினைத்து வாளா இருந்து விடுகின்றான். அங்கிருந்தோர் அனைவரும் பரிப்பாகனாகிய

இறைவனைக் கைகூப்பி வணங்கித் தொழுது போற்று கின்றனர். பாண்டியன் அமைச்சர்களை நோக்கிக் 'குதிரைச் சாத்தின் தலைவராகிய இவர் நம் சொக்கநாதர்போல் காணப்படுகின்றனர். இவர் கொணர்ந்த குதிரைகளை நோக்குங்கள். காலம் தாழ்ந்துவிட்ட போதிலும் இவற்றை நல்லனவாகத் தேர்ந்து வாங்கின வாதவூரரைக் காணுங்கள்' எனப் பலமுறை வியந்துரைக்கின்றான்.

குதிரைப் பாகனாகிய இறைவன் அரசன்முன் வந்து 'அரசரே, உம் அமைச்சராகிய வாதவூரர் தந்த பொரு ளனைத்தையும் குதிரைகள் தருவதாக வாக்களித்து எம்மவர்கள் பெற்றனர். இக்குதிரைகள் யாவும் பல தீவுகளி லிருந்தும் இமயமலைக்கு அப்பாலிருந்தும் பெருந்துறையில் வந்து இறங்கியவை. உடற்பழுதின்றி நற்சுழிகள், நன்னி றங்கள் முதலியன வாய்ந்த உயர்சாதிக் குதிரைகள் இவை. அறிஞர் முன்னே இவற்றின் நல்லியல்புகளை ஆராய்ந்து கண்டு இக்குதிரைகளைக் கை கொள்வாயாக. இவை நின்னுடையனவாக ஆன பின்னர் இவற்றின் நன்மை தீமைகள் எம்மைச் சார்ந்தனவாகா' எனக் கூறி ஆவணி மூல நன்னாளில் குதிரைகளைக் கயிறு மாறிக் கொடுத்தருளு கின்றார். பாண்டியனும் பரிபாகன் சொல்லியவற்றுக் கெல்லாம் முழுதும் உடன்பட்டுக் குதிரைகளை ஏற் கின்றான். பரித்துறைக் காவலர்களிடம் அவற்றைக் ஒப்புவித்து இவற்றைப் பந்தியிற் சேர்க்குமாறு கட்டளை யிடுகின்றான். அவர்களும் அவற்றை நடத்திச் சென்று பந்தியிற் சேர்க்கின்றனர். இந்த வரலாறு நம்பி திருவிளை யாடலில் கண்டது.

பரஞ்சோதி முனிவரும் இந்த வரலாற்றை கிட்டத்தட்ட இம்மாதிரியே கூறுகின்றார். பரிப்பாகனாக வந்தவர் அரசரை நோக்கிக் குதிரைகளின் கதிகளைக் காணுமாறு கேட்டதைப் பரஞ்சோதியார்,

அண்டமெலா மாதார மாகத் தாங்கும்
ஆனந்தத் தனிச்சோதி அண்டம் தாங்கும்,
சண்டமறைப் பரிதனக்கா தார மாகித்
தரிக்கவொரு காலத்தும் அசைவிலாத
புண்டரிகத் தாளசையப் பாச நீக்கும்
புனைகரத்தாற் பரிபூண்ட பாசம் பற்றிக்
கொண்டரச னெதிர்போந்து 'மன்னா எங்கள்
குதிரையேற் றஞ்சிறிது காண்டி என்றார்[5]

[மறைப்பரி - வேதப் புரவி; புண்டரிகம் - தாமரை; பாசம் - கயிறு;]

என்ற பாடலால் காட்டுவர். பின்னர் குதிரையின் வகைகளை விளக்கத் தொடங்கிய பரிப்பாகனார்,

காயும்வேல் மன்ன ஓர்இக்
கடும்பரி அமையம் வந்தால்
ஞாயிலும் தாண்டிச் செல்லும்
நாட்டமும் நுழையாச் சால
வாயிலும் நுழையும் கண்ட
வெளியெலாம் வழியாச் செல்லும்
தீயவெம் பசிவந் துற்றால்
தின்னாத எனினும் தின்னும்.[6]

[ஞாயில் - மதில் உறுப்பு; நாட்டம் - பார்வை; சாலம் - பல கணி]

என்று தொடங்கி எட்டு வயதினை எட்டாத பாடலம் (88) கோடகம் (89), இவுளி (90), வன்னி (91), குதிரை (92) பரி (93), கந்துகம் (94) என்ற குதிரை வகைகளையெல்லாம் குதிரை இலக்கணம் தவறாது விளக்கும் பரஞ்சோதியாரின்

5. நரிபரியாக்கிய—76
6. ஷெ - 86

பாடல்களைப் படித்து அநுபவிக்க வேண்டும். குதிரைகளின் வகைகளைக் காட்டிய பாடல்கள்,[7] குதிரைகள் வந்த நாடுகளைக் கூறுபவை[8] அசுவ இலக்கணம் கூறுபவை[9] போன்ற பாடல்கள் படித்து, சிந்தித்து நுகர வேண்டியவை குதிரைகளைக் கயிறு மாறிக் கொடுப்பதைக் காட்டும்,

> கொத்தவிழ்தார் நறுஞ்சாந்தம் கொண்டுசெல்லும்
> புகைதீபம் கொடுத்துப் பூசை
> பத்திமையாற் செய்திறைஞ்சி யெதிர்நிற்ப
> ஆலவாய்ப் பரனை நோக்கிக்
> கைத்தலந்தான் சிரமுகிழ்த்து வாழியெனப்
> பரிகொடுத்தான் கயிறு மாறி
> முத்தொழிலின் மூவராய் மூவர்க்கும்
> தெரியாத முக்கண் மூர்த்தி[10]

[தார் - மாலை; ஆலவாய்ப் பரன் - சோமசுந்தரக் கடவுள்]

என்ற பாடல் படிப்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்வது. இது நிற்க.

கிடைத்தற்கரிய பரிகளைப் பெற்ற மகிழ்ச்சியினாலும் குதிரை ஏற்றங்களைக் கண்ட வியப்பினாலும் உள்ளங் கிளர்ந்தெழுந்த பாண்டியன், விலை மதிப்பில்லாத பொற் பட்டாடையொன்றைப் பரிப்பாகனாக வந்த இறைவனுக்கு வழங்க அதனை அவர், தம் பரிக்கோலால் வாங்கித் தன் அடியாராகிய வாதவூரர் பொருட்டுத் தம் முடிமிசைப் புனைந்து கொள்ளுகின்றார். இப்படி வாங்கினது,

---

7. ஷெ - 97 - 103
8. ஷெ - 104 - 107
9. ஷெ - 109 - 120.
10. ஷெ - 121

மரியாதைக் குறைவு என்று பாண்டியன் சினங் கொள்ள, அருகிலிருந்த அடிகள் 'இஃது அவர் நாட்டு வழக்கம்' என்று அமைதி கூறி அரசன் சினத்தைத் தணிவிக்கின்றார். மன்னன் அத்தலைவனோடு வந்த ஏனைய வீரர்கட்கும் உயர்ந்த ஆடைகளைப் பரிசாக வழங்க, வீரர்கள் அவற்றை வாங்கித் தத்தம் தலைமிசைத் தரித்துக் கொள்ளுகின்றனர்.

பரிசேவகனாய் வந்த இறைவன் பாண்டிய மன்னன் பால் விடைபெற்றுப் புறப்படும் பொழுது வாதவூரடிகள் அவருடைய திருவடிகளைப் பற்றிக் கொண்டு 'பிடித்தபத்து' என்ற பனுவலைப் பாடிப் போற்றுகின்றார்.[11] இறைவன் அடிகளை நோக்கி 'நேசம் மிக்க முனிவரே, நும் கருத்தை இங்கு வந்து முடித்தோம். பாதத்தைவிடுக' என்று சொல்லிப் புறப்பட்டுப் போகின்றார். அன்று குதிரையேற்றம் கண்டவர்கள் யாவரும் இத்தகையதொரு அற்புதக் காட்சியை என்றும் கண்டதில்லை எனக் கூறிப் பேரானந்தக் கடலில் திளைக்கின்றனர். பாண்டியன் வாதவூரருக்குப் பொற்பட்டம் முதலிய வரிசைகளை நல்கி அவர்தம் மாளிகைக்குச் செல்லுமாறு விடைகொடுக்கின்றான்; பின்னர்த் தன் அரண்மனையை அடைகின்றான். குதிரைச் சாத்தின் தலைவனும் உடன் வந்த ஏனைய குதிரை வீரர்களும் மறைந்து திருஆலவாய்த் திருக்கோயிலை வந்தடைகின்றனர்.

குதிரைச் சேவகனாக வந்து தோன்றிய எளிமைத் திறம் அடிகளின் திருப்பாடல்களில் அகச்சான்றுகளாக அமைந்துள்ளன.

**மதுரைப் பெருநகர் மாநக ரிருந்து**
**குதிரைச் சேவக னாகிய கொள்கையும்**

—கீர்த்தித்திரு 44-45

11. இது தோணிபுரத்தில் (சீர்காழியில்) அருளிச் செய்யப் பெற்றதாகத் திருவாதவூரர்புராணம் கூறும்.

என்றும், நரிகளைப் பரிகளாக்கிய செய்தி,

நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்

—கீழ்-36

.........நரிகளெல்லாம்
பெருங்குதிரை யாக்கியவா
றன்றேயுன் பேரருளே

—திருவேசறவு

என்றும் குறிப்பிடப் பெற்றிருப்பதைக் காணலாம். இன்னும்,

வெள்ளைக் கலிங்கத்தர்
வெண்டிரு முண்டத்தர்
பள்ளிக்குப் பாயத்தர்
அன்னே யென்னும்
பள்ளிக்குப் பாயத்தர்
பாய்பரிமேல் கொண்டென்
உள்ளங் கவர்வரால்
அன்னே யென்னும்

—அன்னைப் பத்து-7.

என்று வருவதும் காண்க.

புதியனவாக வந்த குதிரைகளைப் பந்திகளில் நிரல்படக் கட்டி அவற்றுக்குக் கருப்புக் கட்டியொடு கலந்த கொள்ளு, பயறு, துவரை முதலிய இனிய உணவுகளைக் கொடுத்தும் அவை அவற்றை உண்ணவில்லை. மாயக் குதிரைகளாகிய அவை அன்று நள்ளிரவில் ஒன்றையொன்று முகம் பார்த்து "நாம் நேற்று நன்றாக அடிபட்டோம்; கழுத்திலும் காலிலும் கயிற்றால் கட்டுண்டோம். இனி இங்கிருப்பின் குருதி நீரொழுகப் புண்படுவோம். நமக்கு வேண்டாத உணவும் படைக்கப்பெறும். விடியும்முன் நம் பழைய உருவத்தைக் கொண்டு இவ்விடத்தை விட்டு நழுவி விடவேண்டும்." என்று கூறிக் கழுத்திற் கட்டிய கயிற்றைக் கடித்தெறிந்து நரிகளா

உருமாறுகின்றன. அங்குக் கட்டப் பெற்றிருந்த பழைய குதிரைகளைக் கடித்துக் கொன்று அங்கிருந்து புறப்பட்டுக் கடைவீதிகளிலும் மாடம் மாளிகை திருமடம் முதலியவற்றின் முற்றங்களிலும் திரள்திரளாய்ச் சென்று ஊளையிட்டு ஓடுகின்றன. ஊர்ப்பெருமக்கள் விழித்தெழுகின்றனர். பரித்துறைக் காவலரும் இந்தக் கோரக் காட்சியைக் காண் கின்றனர்.

'என்ன விளையுமோ?' என்று அஞ்சி மன்னனை அடைகின்றனர் பரித்துறைக் காவலர்கள். 'மன்னர்பிரானே, நேற்று வந்த புதிய குதிரைகளைக் கண்துயிலாது காத்து வந்தோம். அவை நாங்கள் இட்ட உணவை உட்கொள்ள வில்லை. நள்ளிரவில் நரிகளைப்போல் உருமாறிக் குதிரை, மான், யானைக் கன்று, ஆடு, கோழி முதலியவற்றின் குடல் களைப் பிடுங்கித் தின்று ஊளையிட்டுக் கொண்டு எங்கள் பிடிக்கு அகப்படாமல் ஓடிப்போயின' என்று முறையிடு கின்றனர். இதனைச் செவிமடுத்த பாண்டியன் மின்னாமல் இடித்தது போன்ற இத்தகைய துன்பம் நேர்தற்கு எனது அரசு முறையில் ஏதேனும் தவறு நிகழ்ந்ததோ? அருளுடைய பெரியோர்க்கு யான் தீங்கிழைத்தேனோ?' என்று மனங் கலங்குகின்றான். அத்தாணி மண்டபத்தை அடைந்து அமைச்சர்களை அழைத்து நள்ளிரவில் நடந்தவற்றைக் கூறுகின்றான். அமைச்சர்கள் மறுமொழி கூற அறியாமல் தலை கவிழ்ந்து நிற்கின்றனர்.

அடிகள் பொருட்டு இறைவனாற் கொணரப் பெற்ற குதிரைகள் யாவும் அன்றிரவே மீண்டும் நரிகளாக மாறிய செய்தியினை,

**நரியைக் குதிரைப் பரியாக்கி**
**ஞால மெல்லாம் நிகழ்வித்துப்**
**பெரிய தென்னன் மதுரையெல்லாம்**
**பிச்ச தேற்றும் பெருந்துறையாய்**

அரிய பொருளே அவிநாசி[12]
யப்பா பாண்டி வெள்ளமே
தெரிய வரிய பரஞ்சோதீ
செய்வ தொன்றும் அறியேனே.

—ஆன, மாலை-7

[குதிரைப்பரி - குதிரை யூர்தி; பிச்சது ஏற்றும் - திகைக்கச் செய்யும்]

என்ற பாடலில் குறிப்பிடுவர் அடிகள். இறைவன் கொணர்ந்த பரிகள் நரிகளாய் மாறிய பின்பே அவை முன்னை நிலையில் நரிகளாயிருந்தன என்ற உண்மை புலப்படு மாயினும், பெருந்துறைப் பெம்மான் நரியைப் பரியாக்கிய அளவில் அமையாது பரிகளை மீண்டும் நரிகளாக மாற்றி மதுரை மக்களை மதி மயங்கச் செய்தனன் என்ற கருத் தமைய 'நரியைப்......பெருந்துறையாய்' என அடிகள் இறைவனை நெஞ்சம் நெக்குருகிப் போற்றுதலானும் குதிரைச் சேவகனாகிய இறைவனால் மதுரை நகரத்தே கொண்டு வந்து சேர்க்கப் பெற்ற பரிகள் மீண்டும் நரிகளாய் மாறிய நிலை நன்கு உணரப்பெறுகின்றது.

வழக்கம்போல் வாதவூரடிகள் நாட்கடன்களை முடித்துக் கொண்டு முகமலர்ச்சியுடன் பாண்டியனின்

---

12. **அவிநாசி :** திருப்பூரிலிருந்து 8 கல் தொலைவு. பேருந்து வழி. சுவாமியின் பெயர் தலத்திற்கும் பெயரா யிற்று. (திருவிட எந்தை என்ற இறைவன் பெயர் திருவிட எந்தை என்ற தலத்திற்கும் பெயராயினது போல—108 திவ்விய தேசங்களில் ஒன்று).முதலையுண்ட பாலனை உயிர்ப்பித்துக் கொடுத்த அற்புதம் நிகழ்ந்த தலம்; முதலை இருந்த மடு இப்போது 'தாமரைக் குளம்' எனப்படுகின்றது. சிறுவன் முதலை வாயினுட்புக்கு ஒளிந்த ஊர் புக்கொளியூர்.திருப்புக்கொளியூர் அவினாசி என்பது தலப் பெயர்.

பேரவையை அடைகின்றார். முகவாட்டத்துடன் இருக்கும் மன்னனைக் காரணம் வினவுகின்றார். அவ்வுரை கேட்ட மன்னன் அடிகளைச் சினந்து நோக்கிப் பலவாறு இகழ்ந்துரைக்கின்றான். பின்னர் தண்டலாளரை நோக்கி ''வாதவூரனாகிய இவனைக் கொண்டுபோய்த் தண்டித்துப் பொருளை வாங்குமின்'' என ஆணையிடுகின்றான். அவர்களும் அடிகளைச் சிறையிலிட்டுப் பலவாறு தண்டிக்கின்றனர். அரசனும் மனக்கவலையுடன் தனித்திருந்து வருந்துகின்றான். தண்டனைகளைப் பொறுக்க முடியாத வாதவூரர் அளவிலாத் துயரத்தால் மனங்கலங்கி திருவேசறவு என்ற பனுவலைப் பாடி இறைவனை நினைந்து புலம்புகின்றார்.

இறைவன் அன்பனாகிய அடிகளின் துயரத்தைப் போக்கத் திருவுளங் கொள்ளுகின்றார். வருணனை நினைக்க, அவனும் விரைந்து வந்து பணிந்து நிற்கின்றான். 'நீ வாதவூரர் படும் சிறைத் துன்பம் நீங்கக் கங்குற் பொழுதில் வைகையாற்றில் பெருவெள்ளம் வரச்செய்வாயாக' எனப் பணிக்கின்றார்[13] வருணனது ஏவலால் மேகங்கள் திரண்டு மழையைப் பொழிகின்றன; வைகை பெருக்கெடுத்து ஓடுகின்றது. அதன் கரைகளையுடைத்துக் கொண்டு மதுரை நகருள்ளும் புகுகின்றது. இச்செய்தி பறைஃறைவித்து ஊர்ப்பெருமக்களுக்கு அறிவிக்கப் பெறுகின்றது. பறையொலி கேட்டுத் துணுக்குற்ற பாண்டியன் 'காலமல்லாக் காலத்தே வைகை கடலெனப் பெருகியதே? இஃது என்ன ஊழிக்காலமோ?' என மனம் கவல்கின்றான். நாடு கண்காணிக்கும் தனது அதிகாரியை அழைப்பித்து, 'வாதவூர் முனிவரை நாம் சிறை செய்ததனால் விளைந்த துன்பமோ? இறைவன் திருவுள்ளத்தை யார் அறிவார்? மதுரை நகருள் மனைக்கட்டுடன் குடியிருப்போர்

13. பரஞ்சோதி திருவிளையாடலில் கங்கையை ஏவி வெள்ளம் பெருகச் செய்தார் என்று சற்று மாறுபாடான வரலாறு காணப்படுகின்றது.

ஒவ்வொருவர்க்கும் தக்க வண்ணம் அடைத்தற்குரிய பகுதியை அளந்து கொடுத்து விரைவில் அடைக்கச் செய்வாயாக' என்று கட்டளையிடுகின்றான். இதற்குள் பொழுதும் விடிகின்றது.

அரசனது ஆணையினை மேற்கொண்ட அதிகாரி இளைஞர் முதல் முதியவர் வரை எல்லோரையும் ஒருங்கு திரட்டிக் கொண்டு வைகைக் கரையினை அடைந்து அவரவர் அடைத்தற்குரிய கரைப்பகுதிகளை அளந்து கொடுக்கின்றான். அவரவர்களும் தத்தமக்குரிய கரைப் பகுதியில் மண்ணிட்டு அடைக்கத் தொடங்குகின்றனர். இந்நிலையில் மதுரையில் தென்கிழக்கு மூலையிலிருந்த மனையொன்றில் வாழும் நரை முதியவளாகிய பிட்டு வாணிச்சி (நம்பி இவள் பெயரைக் குறிக்கவில்லை)[14] தனக்கு அளந்த பங்கினை அடைத்தற்குரிய ஆள்கிடைக்காமல் அழுது புலம்புகின்றாள்: அரசதண்டத்திற்கு அஞ்சிக் கூலியாளைத் தேடி அலைகின்றாள். இவளது துயரத்தைப்போக்கத் திருவுளங்கொண்ட ஆலவாய் அப்பன் பதினாறு வயதுடைய இளைஞனாகி மண் வெட்டியும் கூடையும் கொண்டு அவள் முன் கூலியாளாகத் தோன்றுகின்றான். அவளிடம் சென்று 'அன்னையே வருந்தற்க. உலகில் என்னைப் போல் உனக்கு ஆள் கிடைக்காது. பலர் வேண்டியும் அவர்களிடம் செல்லாது நின்பால் வந்தேன். வேண்டுமானால் சொல்' என்கின்றான். அவளும் 'ஐயனே, நல்ல சமயத்தில் வந்து சேர்ந்தாய், உன்னைப் பார்த்தால் நான் வழிபடும் தெய்வமாகிய சொக்கநாதரைப் போல் காணப்படுகின்றாய். மண் சுமவா விடில் தண்டத் தலைவர்கள் மெய்நோவ அடிப்பார்கள். உன்னால் மண்சுமக்க முடியுமா?' எனப் பரிவுடன் வினவு

---

14. பரஞ்சோதி முனிவர் இவள் பெயரை வந்தி என்று குறிப்பிடுகின்றார். கடவுண் மாமுனிவர் இவள் பெயரை **செம்மனச் செல்வி** என்று குறிப்பிடுவர்.

கின்றாள். அதைக்கேட்ட கூலியாள் 'இளைப்பின்றி விறகு சுமப்பேன்; தண்ணீர் சுமப்பேன். மண் சுமக்க மாட்டேனா? என்ன கூலி தருவாய்?' எனக் கேட்கின்றான். 'தம்பீ, என்னிடத்தில் பொருள் இல்லை.' 'வெய்தாய் நறுவிதாய் வேண்டுமளவும் நுகரத்தக்க இன்சுவையுடையதாய் என்பாலுள்ள பிட்டமுதினைக் கூலியாக முற்படத் தருவேன்' என்கின்றாள். 'பாட்டீ, நீ சொக்கனிடத்துப் பேரன்பு பூண்டவள். உதிராத பிட்டினைத் தர வேண்டும் என்பதில்லை. உதிர்ந்த பிட்டையும் விருப்புடன் உண்பேன்' என்று மறுமொழி பகர்கின்றான். கூலியாளும் பிட்டை மடிநிறைய வாங்கிக் கட்டிக் கொண்டு வைகைக் கரையை அடைகின்றான்.

இறைவனாகிய கூலியாள் தான்பெற்ற சுவை நிறைந்த பிட்டினை வைகைக் கரையில் பணியாற்றும் ஏனையோர்க்கும் கொடுத்துத் தானும் உண்டு மகிழ்ந்து ஆடிப்பாடுகின்றான். தன்னிடமிருந்த பிட்டு தீர்ந்தவுடன் புழுதி படிந்த மேனியோடு வந்தியிடம் சென்று, 'அன்னையே மண் சுமந்து இளைத்தேன். உன் பங்குக்குரிய கரைப்பகுதியில் பெரும்பாலும் அடைத்து விட்டேன், சொக்கன் ஆணை' என்கின்றான். வந்தியும் அவன் மொழியினை நம்பி மேலும் பிட்டமுதினை நிறைய அளிக்கின்றாள். அதனைப் பெற்று முன்போலவே ஏனையோர்க்கும் கொடுத்துத் தானும் உண்டு கரையை அடைப்பவன்போல் அங்குமிங்கும் திரிகின்றான். சில இடங்களில் கரையினை உடைத்தும் விடுகின்றான்.

இந்நிலையில் கணக்கர்கள் அவ்விடம் வருகின்றனர். அவன் அவர்க்கு முன் சென்று, 'என்னை யொப்பவர் ஒருவரும் இலர். என்னை முதலில் தெரிந்து கொள்ளுங்கள்' எனக் கூறுகின்றான். அங்குள்ள பணியாளர்கள் இவனுடைய குறைகளைச் சொல்லுகின்றனர். எனினும் இவனால் தமக்குத் தீங்கு நேர்தலாகாதென்று அஞ்சிய கணக்கர்கள்

இவனையே முதலாமவனாகக் குறித்துச் செல்லுகின்றனர். அவர்கள் போனபின் இந்தக் கூலியாள் கூடையைத் தலைக் கணையாக வைத்துக் கொண்டு கால்மேல் கால்போட்டுக் கொண்டு படுத்திருக்கின்றான். அங்கு நிகழும் வேலைகளைக் கண்காணிக்க அரசனால் அனுப்பப்பட்ட பணியாளர் சிலர் அங்குவந்து 'மண்சுமவாது படுத்திருக்கும் இவன் யார்?' என வினவுகின்றனர். அங்குள்ள ஆட்கள் 'இவன் செம்மனச் செல்வியின் ஆள்' என்கின்றனர். அதுகேட்ட பணியாளர் கூலியாளாகிய இறைவனை நோக்கி 'அதிகாரியிடத்தில் உன்னை ஒப்படைப்போம் வா' என அழைக்க, அவனும் தண்டத் தலைவராகிய அதிகாரியின் முன்வந்து நிற்கின்றான்.

தண்டத் தலைவன் அவனைக் கண்டு அதிசயமுற்று 'மெல்லிய உடம்பினனாகிய நீயார்? விளங்கச் சொல்' என்று கேட்க, அவனும் 'ஐயா, தந்தை, தாய், உடன் பிறந்தார், சுற்றத்தார் ஒருவரும் எனக்கு இலர். இப்பெரிய நகரில் ஒரு மூலையிலிருக்கும் கொற்றாள் யான். பிறர்க்கெனஉழைப் பதே எனது தொழில். என்னைக் கொண்டு அதிகாரிக்கு என்ன ஆக வேண்டும்?' என்கின்றான் இறைவனாகிய கூலியாள். இம்மொழியினைக் கேட்டு வெகுண்ட அதிகாரி கூலியாளை நோக்கி 'உனக்கு அளந்து கொடுத்த கோலறை யில் ஒரு கூடை மண்கூட இடவில்லை. சிறிதும் அச்சமின்றி உரையாடுகின்றாய். உன்னை நூறு அடிகள் அடித்தாலும் தகும். உன் உடலின் மென்மையைக் கண்டு அடிக்க மனம் வரவில்லை. விரைந்து சென்று மண்ணை வெட்டியிட்டுக் கரையை அடைப்பாயாக' எனக் கடிந்து கூறிச் செல்லு கின்றான் கொற்றாளாகிய அவன் அவ்விடத்தை விட்டு அகன்று முன்போல் படுத்துக் கொள்ளுகின்றான்.

மன்னன் ஏவலால் மீண்டும் கரையை நோக்கிவந்த தண்டத் தலைவர்கள் பிட்டு வாணிச்சிக்கு அளந்து

கொடுத்த கரை அடைக்கப் பெறாது வெள்ளத்தால் அறுக்கப்பெற்றுச் சிதைவுறு தலைக் காண்கின்றனர். அருகே பணிசெய்யும் சிற்றாட்களை நோக்கி, 'இது யாருடைய பங்கு?' எனக் கேட்க அவர்களும் 'இது பிட்டுவாணிச்சியின் பங்கு' என்று உரைத்து அவளுடைய ஆள் செய்த குறும்புகளை யெல்லாம் எடுத்துக் கூறுகின்றனர். சினமுற்ற தண்டத் தலைவர்கள் பிட்டுவாணிச்சியின் கொற்றாளைக் கண்டு 'நீ சிறிதும் அச்சமின்றி மண்சுமவாமல் இவ்வாறு விளையாடித் திரிவதற்குரிய காரணம் என்ன?' எனக் கேட்க, அவனும் 'காரணம் ஒன்றும் இல்லை. கழுத்து நோவச் சுமப்பேன்' எனக் கூறுகின்றான். 'இனி நீ விரைந்து சென்று மண் சுமக்க வில்லையானால், நன்றாக அடிப்போம்,' என அவர்கள் அவனை அச்சுறுத்துகின்றனர். அவன் மிக அஞ்சியவன் போல ஒரு கூடை மண்ணை வெட்டி எடுத்து தலைமேல் சுமந்து கொண்டு 'இட்ட அடிநோவ, எடுத்தஅடி கொப் பளிப்ப' அடிமேல் அடிவைத்து நடக்கின்றான்.

இதனைக் கண்ட தண்டத் தலைவர் 'இக்கொற்றாளால் சிறிதும் பயன் இல்லை. இவன் உடைப்பினை ஒழுங்காக அடைக்க மாட்டான்' எனச் சினந்து அவனைப் பிடித்து நடுமுதுகிற் சிவக்க அடிக்கின்றனர். இந்நிலையில் கொற்றாளாய் வந்த இறைவன் தன் முதுகிற் சுமந்த கூடை மண்ணை வைகைக்கரை உயரும்படி அதன்மீது கொட்டிவிட்டு புன்முறுவல் பூத்தவனாய் 'என்னை ஏன் அடிக்கின்றீர்கள்?' என்று கூறிக் கொண்டே கொற்றாட்கள் கூட்டத்திடையே புகுந்து மறைகின்றான்.[15] தண்டத் தலைவர் அவனைத்

15. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடலில் பாண்டியன் பொற்பிரம்பால் ஓங்கி அடித்ததாகக் கூறப் பெற்றுள்ளது.

**கண்டனன் கனன்று வேந்தன்**
**கையிற்பொற் பிரம்பு வாங்கி**
**அண்டமும் அளவி லாத**
**உயிர்களும் ஆக மாகக்**

தேடிப் பார்த்தும் அவன் காணப்பட்டிலன். அவனை அனுப்பிய பிட்டுவாணிச்சியை அடைந்து அவளைத் தண்டித்தற்கு நெருங்குகின்றனர். அவர்கள் அவளை அணுகுவதற்கு முன்னரே முதியவளாகிய அந்த அம்மை சொக்கன் திருவருளால் மண்ணுலகத்தவர் காண மாறா இளநலம் வாய்ந்த தெய்வ வடிவத்தினைப் பெற்று எல்லா உலகத்திற்கும் மேலாகிய சிவலோகத்தை அடைகின்றாள், இந்த அழகிய காட்சியைக் கண்ட தண்டத் தலைவர்கள் திகைத்து அதிசயித்து நிற்கின்றனர்.

இறைவனாகிய. கூலியாள் மேல்பட்ட அடி நாடாள் வேந்தனாகிய பாண்டியன் முதலாக இவ்வுலகில் வாழும் நிற்பன நடப்பனவாகிய எல்லாவுயிர்களின் முதுகிலும் ஏனைய உலகங்களின் வாழும் தேவர் அசுரர் முதலிய எல்லோர் முதுகிலும் பட்டுப் புடைப்பினை உண்டாக்குகின்றது.[16] மதுரை நகர மக்கள் இதனை யறிவதற்காக மன்னனை அணுகி, ''ஒருவர் மேல் பட்ட அடி யாவர்மேலும் பட்டதற்குக் காரணம் என்ன'' என்று வினவுகின்றனர். பாண்டியன் தன் முதுகைக்காட்டி 'இதன் உண்மையினைச் சொக்கனே அறிவான்' என்கின்றான். அப்பொழுது வாதவூரர் பொருட்டு இறைவன் அருளால் வானில் ஓர் அருள் வாக்கு எழுகின்றது. ''பாண்டியா, நீ நூறாண்டு

கொண்டவன் முதுகில் வீசிப்
புடைத்தனன் கூடை யோடு
மண்தனை உடைப்பிற் கொட்டி
மறைந்தனன் நிறைந்த சோதி

—மண்சுமந்து - 52

என்ற பாடலில் இதனைக் காணலாம்.

16. எல்லார் முதுகிலும் பட்டதழும்பை பரஞ்சோதியர் விளக்குவதை அவர் பாடல்களைப் படித்து (பிட்டுக்கு மண்சுமந்த. 53, 54, 55, 56) அநுபவித்து மகிழ வேண்டும்.

நெடிது வாழ்வாயாக. நீ நற்பேறு உடையவன். நினது பொருள் அறத்தின் வழியே ஈட்டப்பட்டதாதலால் அதனை வாதவூரன் வாயிலாக நம் அடியார்கட்காகப் பெற்றுக் கொடுத்தோம். அப்பொருளுக்குத் தக நீ விரும்பிய வண்ணம் குதிரைகளையும் கொண்டுவந்து தந்தோம். அவனைச் சிறை வீடு செய்வதற்காகக் கொற்றாளனாகவும் வந்து மண்சுமந்து பிட்டும் தின்று அடியும் பட்டோம். அவனைச் சிறைவீடு செய்து அவன் விரும்புகின்ற வண்ணம் வாழச் செய்க. இங்ஙனம் செய்வதால் நினக்கே நலம் பெருகும்'' என்று வானத்தில் எழுந்த அருள்மொழியினை அங்குள்ளார் அனைவரும் கேட்டு வியப்பெய்தி அரசனை நோக்குகின்றனர்.

விண்ணில் வெளியிட்ட அருள்வாக்கினைக் கேட்ட பாண்டியன் உள்ளத்தில் அச்சமும் உடம்பில் புளகமும் எய்து கின்றான். 'இது குதிரைச் சேவகனாக வந்த ஆலவாயானின் அருள்வாக்கு எனத் தெளிகின்றான். உடனே அரசன் வாத ஊரடிகளை சிறையினின்றும் விடுவித்துத் தன் அருகே இருக்கச் செய்து பலவகை உபசாரங்களைச் செய்கின்றான்; அவரு டைய திருவடிகளில் வீழ்ந்து வணங்குகின்றான். அடிகளை நோக்கிப் ''பெரியீர், சொக்கநாதர் நும்பால் வைத்த அன்பி னைப் போல் நான் வேறெங்கும் கண்டிலேன். எனது அறியாமையால் நுமக்கு மிக்கஇன்னல்களை விளைவித்தேன். அவற்றையெல்லாம் பொறுத்தருளி நுமது திருவுளப்பாங்கின் படி இருப்பீராக'' என அடிகளைத் துதித்துப் போற்று கின்றான். அங்குள்ளார் அனைவரும் வியப்புற்று அடிகளார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி ஆசி பெறுகின்றனர்.

அரசனால் போற்றப்பெற்ற அடிகளார் அரசனை நோக்கி, ''மன்னரே, விசும்பில் தோன்றிய மொழியினை இறைவனது அருள்வாக்கு எனத் தெளிந்தீர். நும்மைச் சார்ந்து ஒழுகினமையால், இத்தகைய திருவருட் பேற்றி னைப் பெற்றேன்; நீக்குதற்குரிய பிறவித் தொடரையும்

அறுத்துஉய்ந்தேன்' இனி என் வழியே செல்வேன். எம்பெருமானாகிய இறைவன் உண்டு என ஐயமறநீர் உணர்ந்த மெய்யுணர்வால் நுமது செல்வம் தீங்கின்றி மேன்மேலும் பெருகியோங்கும்'' என்று வாழ்த்துக் கூறி 'நமச்சிவாய வாழ்க' எனத்தொடங்கும் 'சிவபுராணத்தை' ஓதிக் கொண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்படுகின்றார். பாண்டியனும் அளவிறந்த பேரன்புடையவனாய் அவரைத் தொடர்ந்து சிறிது தூரம் சென்று விடை பெற்றுத் தனது அரண்மனையையடைந்து அடிகளின் திருவருட்செயலை வாழ்த்தியவண்ணம் இருக்கின்றான்.

வாதவூரடிகள் திருவாலவாய்த் திருக்கோயிலுட்புகுந்து சொக்கனை வணங்கிநின்று ''எளியேனை உய்வித்த பெருமானே, என்பொருட்டுக் குதிரைகளைக் கொண்டு எழுந்தருளினாய்; முடிவருந்த மண் சுமந்தாய்; திருமேனிவருந்தப் பிரம்படியும் பட்டாய்'' என்று சொல்லி நெஞ்சம் நெக்குருகிப் பரவிப் போற்றுகின்றார். ஆலவாய்ச் சொக்கன் அடிகளை நோக்கி, ''வாதவூர, நீ 'உத்தர கோசமங்கை, கழுக்குன்றம் ஆகிய தலங்களில் நமது திருமேனியைக் கண்டு மகிழ்ந்து 'கோவை' என்னும் சிறந்த பனுவலைப் பாடிக்கொண்டு தில்லையம்பலத்தே வருக'' என்றதோர் அருள்வாக்கினை விசும்பில் தோன்றுவித்தருள்கின்றார். இந்த அருள்மொழியைச் செவிமடுத்த வாதவூரரும் தம் பயணத்தைத் தொடங்குகின்றார்.[17]

17. இந்த வரலாறு திருவாலவுடையார் திருவிளையாடல், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் இரண்டையும் தழுவியது.

# 8. ஆலவாய் அருளிச் செயல்கள்

வாதவூரடிகள் திருப்பெருந்துறையிலிருந்து மதுரைக்கு வந்த பிறகு நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கண்டோம். இக் காலத்தில் அவர் சில பதிகங்களை அருளிச்செய்கின்றார். அவற்றை ஈண்டுக் காண்போம். மாணிக்கவாசகர் இறைவனை நோக்கி குதிரைகளை விரைவிற் கொணரும்படி அழுதரற்றி 'குழைத்தபத்து', 'அருட்பத்து' ஆகிய பனுவல் களைப் பாடிப் போற்றுகின்றார்.

26. **குழைத்த பத்து** (33) : பண்டைக் கொடுவினைகள் தம்மைத் தொடர்ந்து வருத்தும் இன்னலுக்கு ஆற்றாது வருந்திய வாதவூரடிகள் அத்துன்பங்களுக்குக் காரணமாகத் தாம் செய்த பிழைகளை நினைந்திரங்கி இறைவனது கருணைத் திறத்தினையே தாம் உய்தி பெறுதற்குரிய சார்பாகக் கொண்டு இறைவனை நோக்கி மனம் நைந்து அரற்றிக் கூறும் முறையீடாக அமைந்தது 'குழைத்த பத்து' என்னும் இப்பதிகமாகும். ''இவ்யாக்கையைத் தாங்கி வினைகளை மேலும் மேலும் இழைத்தேன்; இனிக் கணமும் பொறுக்கேன்; அடியேனை மெலிவிப்பது எற்றுக்கு? பிழை பொறுத்து ஆட்கொள்ளவேண்டும் என்று இரங்கிக் கூறுதல் குழைத்த பத்தாம்'' என்று கூறும் திருப்பெருந்துறைப் புராணம். இப்பதிகத்திற்கு ''ஆத்ம நிவேதனம்—நேயத்தோடு ஒன்றல்' என்பது பழையகுறிப்பு. தனக்கென்று ஓர் உரிமை

இல்லாமையும், நல்லன செய்தலும் பிழைசெய்தலும் கூட அருள் வசப்பட்டனவே என்பதையும் அறிவித்துத் தான் என்பது ஒரு பொருளுமின்றி மெலிந்ததால் அறிவிக்கும் பத்து குழைத்த பத்தாகும்.' ஆத்ம நிவேதனமாவது, 'விஞ்ஞான தீக்கையின் உடல் பொருள்களோடு ஒப்ப ஆன்மாவாகிய தன்னையும் சற்குரவன் கையில் தானஞ்செய்து அளித்தும், தானம் செய்து அளித்த பொருள் என்று அறியும் அறிவு சலியாமைப் பொருட்டு நாளும் நாளும் சிவபூசையில் செபகன்மங்களோடு ஒப்பச் 'சிவோதாதா' என்னும் மந்திரம் ஓதி ஆன்மாவையும் சிவன் உடைமையாகப் பூ நீரோடு தானம் செய்து அளித்தல் (சிவஞான மாபாடியம் - சூத்திரம்-6, அதிகர 2) என்று விளக்குவர் மாதவச் சிவஞான யோகிகள்.

இன்னொரு விதமாகக் கூறினால் இறைவனே ஆசிரியனாகத் தோன்றி மெய்ப்பொருளை அறிவுறுத்தருளுதலால் இருவகைப் பாசங்களும் தீர்ந்து பொருளைக் கேட்கும் முறையில் கேட்டுச் சிந்திக்கும் முறையில் சிந்தித்து ஆசிரியன்பால் பேரன்புடையராய் ஆன்மபோதம் அடங்கப் பெற்ற மணிவாசகப் பெருமான், ஒன்றினும் தோய்வற நிற்கும் இறைவனாகிய முதற்பொருளோடு ஒற்றித்து நின்று, 'கூடாதே வாடாதே குழைந்திருப்பதான' பேரன்பில் திளைத்திருக்கும் இயல்பினைப் புலப்படுத்தும் நிலையில் அருளிய திருப்பதிகம் இது என்பதாகும். ஆதலின் இது 'குழைத்த பத்து' என்னும் பெயருடைத்தாகின்றது. இப்பதிகத்தின்கண்,

---

1. குழைத்தபத்து திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பெற்றதாகக் கடவுள் மாமுனிவர் பகர்வர் குருநாதர் தன்னை விட்டுப் பிரிந்த பிறகு அடிகள் அடியார் குழுவை வந்தடைந்து குருந்தின்கீழ் தெய்வபீடம் அமைத்து வழிபட்டிருந்த நாட்களில் இப்பத்து அருளிச் செய்யப்பெற்றதாகக் கூறுவர்.

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே யனையாய் என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறெனக் குண்டோ?
எண்டோள் முக்கண் எம்மானே!
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே (7)

[அன்றே - ஆட்கொண்ட முற்காலத்திலேயே; உடைமை - செல்வம்]

என்பது ஏழாம் பாடல். "இதனால் நன்றே வரினும் தீதே வரினும் நான் அறிவது ஒன்றேனும் இல்லை; எல்லாம் உன் பரம்" என்கின்றார். இந்தத் திருப்பாடல் ஆத்ம நிவேதனத்தின் இயல்பினை நன்கு புலப்படுத்தல் காணலாம்.

'எனது உயிரை ஆண்டவனாகிய உனக்கு உரிமை செய்து அளித்தபின் என் உயிர்க்கு உளவாகும் இன்ப துன்பங்கள் அனைத்திற்கும் யான் பொறுப்பாளி அல்லன்; என்னை உடையவனாகிய நீயே அவற்றுக்கு உரியன்' என்பார், 'தீமை நன்மை முழுதும் நீ' என்றும், 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே' என்றும், 'ஆயக் கடவேன் நானோதான் என்னதோ இங்கதிகாரம், காயத் திடுவாய் உன்னுடைய கழற்கீழ் வைப்பாய்' (8) என்றும் அடிகள் இறைவனை நோக்கி முறையிட்டருளிய திறம் இங்கு நினைத்தற்குரியதாகும். இவ்விடத்தில்,

எனது ஆவியுள் கலந்தபெரு
நல்லுதவிக் கைம்மாறு
எனது ஆவி தந்தொழிந்தேன்
இனிமீள்வது என்பதொன்றுண்டோ?

எனதுஆவி ஆவியும் நீ
பொழிலேழும் உண்டஎந்தாய்!
எனதுஆவி யார்?யான்ஆர்?
தந்தநீகொண்டு ஆக்கினையே
— (திருவாய் 2.3 :4)

என்ற நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரம் ஈண்டு அநுசந்திக்கத் தக்கது. இப்பாசுரத்தின் ஆறாயிரப்படி பரம போக்கியம்; அது வருமாறு : ''இப்படி எம்பெருமானோடு கலந்த கலவியாலுள்ள நிரவதிகப் பிரீதியாலே அறிவழிந்து 'இவ்வாத்மா நம்முடையதன்று' என்று நிரூபிக்க மாட்டா தாராய், அவன் தம்மொடு கலந்த இப்பெருநல் உதவிக்குக் கைம்மாறாகத் தம்முடைய ஆத்மாவை அவனுக்கு மீளா அடிமையாகக் கொடுத்து, பின்னையும் தம்முடைய சுவரூபத்தை உள்ளபடி விவேகித்து, தருகிற நான் யார்? தரப்புகுகின்ற இவ்வான்மாஆர்? பண்டேயுனக்கு சேஷமா யிருக்கின்ற இவ்வான்மாவை நீ கொண்டருளினாயத்தனை யிறே என்கின்றார்'' என்பதாகும்.

பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள் தரும் விளக்கம் : ''பண்ணின ஆத்ம சமர்ப்பணத்தைதப்பற்றி அநுதாபப்படுவதாகச் சொல்லலாமோ? அப்படியானால், அநுதாபயோக்கியங்களான பாவங்களைப் போலவே ஆத்ம சமர்ப்பணமும் ஒரு பாபந்தானேயாகும்; அது செய்யக்கூடாத காரியம் என்று ஏற்பட்டுவிடாதா? என்கின்ற கேள்வி பிறக்கும். இதனால் பூருவர்கள் அருளிச் செய்த சமாதானம் யாதெனில்; ஆத்ம சமர்ப்பணம் பண்ணுகையும் பண்ணினதற் காகப் பிறகு அநுதாபங்காட்டுகையும் ஆக இரண்டும் இவ் விபூதியில் மாறி மாறி நடந்தே தீரும் என்கின்றார்கள்'' என்று கூறி ''ஸம்ஸார பீதியால் ஸமர்ப்பிக்கையும், ஸ்வரூப யாதாத்ம்யஜ்ஞாநத்தால் அநுசயிக்கையும் இரண்டும்

யாவந்மோக்ஷம் அநுவர்த்திக்கக் கடவது'' என்ற பெரிய வாச்சான் பிள்ளையின் ஸ்ரீசூக்தியையும் காட்டுவர்.

27. அருட்பத்து (29)[2] இறைவனது திருவருளை வேண்டிப் போற்றிய பத்துப் பாடல்களையுடைய பதிகமாத லின் 'அருட்பத்து' என்ற திருப்பெயரினை உடைத்தாகிறது. திருப்பெருந்துறையில் குருந்தமரத்து நிழலில் குருவாக எழுந்தருளி வந்து தம்மை ஆண்டருளிய பெருமானை நினைந்து 'சோதியே சுடரே, சூழொளி விளக்கே ஆதியே? என அன்பினால் அழைத்து ''அடியேன் ஆதரித்தழைத்தால் அதெந்துவே என்றருளாயே'' என்று பாடல் தோறும் இறைவனது அருளை வேண்டிப் பரவிப் போற்றி ''மதுரை யில் தாம் படும் இடரைக் களையுமாறு' வேண்டுவதாகக் கொள்ளல் பொருத்தமுடையதாக இருப்பதால் நம்பி திருவிளையாடல் இப்பதிகம் மதுரையில் அருளிச் செய்யப் பெற்றதாகக் கருதுகிறது போலும். இஃது இப்பதிகத்தின்,

**திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்**
**செழுமலர்க் குருந்தமே வியசீர்**
**இருந்தவா றெண்ணி யேசறா நினைந்திட்டு**
**என்னுடை எம்பிரான் என்றென்(று)**
**அருந்தவா நினைந்தே ஆதரித் தழைத்தால்**
**அலைகடல் அதனுளே நின்று**
**பொருந்தவா கயிலை புகுநெறி இதுகாண்**
**போதரா யென்(று) அருளாயே (10)**

[ஏசறா - வருந்தி; போதராய் - வா]

2. இதனைத் திருப்பெருந்துறையில் அருளப் பெற்ற தாகத் திருப்பெருந்துறைப் புராணம் குறிப்பிடு கின்றது. மதுரையில் தாம் இடர்ப்பட்டபோது பழைய அநுபவத்தைக் நினைந்து பிரார்த்திப் தாகக் கருதுவது பொருத்தந்தானே.

என்ற இறுதிப் பாடலாலும் உறுதிப்படுகின்றது. 'நீ குருந்த மரத்தடியில் என்னை ஆட்கொண்டதை நினைந்து என்னுடை எம்பிரான்' என்று அழைத்தால், 'நீவா' என்று சொல்ல மாட்டாயா?'' என்கின்றார். ஈண்டு 'அலைகடல்' என்றது துன்ப அலைகலையுடைய பிறவிப் பெருங்கடல். மதுரையில் தாம் அல்லல்படும் துன்பக்கடல் என்றலும் பொருந்தும். துன்பக்கடலுள் அல்லல்படுவோர் 'என்னை விரைவில் உன்னுடன் கூட்டிக்கொள்' என்று அழுதரற்றுவது இயல்புதானே 'கயிலை புகும்நெறி இதுவென்று அருளிச் செய்க' என்ற வேண்டுகோளும் இதற்கு அரணாக அமையும்.

இப்பதிகத்திற்கு 'மகா மாயாசுத்தி' என்பது பழைய குறிப்பு. இறைவனது திருவருளை வேண்டித் தம்முடைய கருவி கரணங்களுக்கு இடமாய மாமாயையைத் தூய்மை செய்து கொள்ளும் முறையில் அடிகளால் அருளிச் செய்யப் பெற்றது இப்பதிகம். ஆதலால் இதற்கு 'மகா மாயாசுத்தி— மாயையைச் சுத்தி பண்ணுதல்' என்று முன்னோர் கருத்துரைத்தனர். ''இப்பிறப்பை விட்டு உன்திருவடி சேர்தற்கு அன்பு கொண்டு அழைத்தால் அது என்ன என்று கேட்டு 'ஆதரித்துக்கொள்' என வேண்டிக் கொள்வது அருட்பத்து என்பதாகக் குறிப்பிடுகின்றது திருப்பெருந் துறைப் புராணம், பாடல் தோறும்,

> '...அடியேன் ஆதரித் தழைத்தால்
> அதெந்துவே என்றரு ளாயே'

என்ற முடிவு காணப்படுகின்றது. அதெந்து / அதென்ன (மலையாள வழக்கு; அஞ்சாதே என்பது கன்னட வழக்கு).

மதுரையில் தண்டத் தலைவர்கள் அரசன் ஆணையிட்ட வண்ணம் புளியம்வளாரால் அடித்துத் துன்புறுத்துகையில்

அடிகள் கண்களில் நீர்மல்கத் திருமுகம்வியர்க்கச் சிவபிரானை நினைந்து 'அடைக்கலப் பத்து' பாடினதாக நம்பி திருவிளையாடல் குறிப்பிடும்.

28. **அடைக்கலப்பத்து** (24)[3] : மற்ற அடியார்களைப் போலவே ஆண்டானுடன் சேரவிடாது தன்னைத் தடுத்து நிறுத்துவது வாசனாமலம் ஆதலின் அதற்கு அஞ்சி இறைவனிடம் அடைக்கலம் புகுவதை அறிவிப்பதால் இஃது அடைக்கலப் 'பத்து' என்ற திருப்பெயர் பெறுகின்றது. இதற்குப் 'பக்குவ நிண்ணயம்—அதாவது வித்தும் அங்குரமும் போல என்றல்' என்பது பண்டைய குறிப்புரை; வித்தின் தன்மை அங்குரத்தில் காணப்படுவது போல, வீரையொன்று போட்டால் சுரையொன்று முளைக்காதவாறு போல, வாசனாமலம் கெடாத ஆன்மா திருவடிகளுக்கு இலக்கு ஆகாது. உயிர் மலமாசு நீங்கி இறைவனது அருளார் இன்பப் பெருவாழ்வை அடைதற்குரிய பக்குவத்தை அடைந்தது என உறுதி செய்தற்குரிய அடையாளமாதலின், இதற்குப் 'பக்குவ நிண்ணயம்' எனப் பண்டையோர் கொண்ட கருத்து மிகவும் பொருத்தமுடையதாகின்றது. 'அழுக்கு மனத் தடியேன் உடையாய் உன் அடைக்கலமே' (1) என்றும், 'வல்வினையேன் உன் அடைக்கலமே' (6) என்றும், 'கெடுவேன் உன் அடைக்கலமே' (8) என்றும் கூறுவதால் தடையும் அதனை நீக்கும் உபாயமும் வருவித்து வேண்டிக் கொள்ளுகின்றார் அடிகள். இப்பதிகத்தில்,

---

3. இதனைத் திருப்பெருந்துறையில் அருளியதாக திருவாதவூர்ப் புராணத்தில் கடவுள் மாமுனிவர் கூறுவர். குருவாய் வந்த இறைவன் மறைந்த பிறகு வாதவூரடிகள் அடியார் குழுவை வந்தடைந்து குருந்தின்கீழ்த் தெய்வபீடம் அமைத்து இறைவன் திருவடிகளை வழிபட்டிருந்தார். இந்த நாட்களில் பாடியது இப்பத்து என்பர்.

வழங்குகின் றாய்க்குன் னருளார்
அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக் கினேன்வினை
யேனென் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர்
பருகத்தந் துய்யக்கொள்ளாய்
அழுங்குகின் றேனுடை யாய்அடி
யேனுன் அடைக்கலமே (10)

[தழங்கு - ஒலிக்கின்ற; அழுங்குகின்றேன் - வருந்துகின்றேன்]

என்பது பத்தாம் பாடல்.

அடைக்கலம் என்பது, தனக்கு இன்றியமையாத உடைமைப் பொருளைப் பகைவர் முதலியோரால் உளவாம் கேடுகளை நீக்கிப் பாதுகாத்துத் தரவல்ல தக்கவர்பால் ஒப்படைத்தலாகும். அடிமையாகிய தன்னை உணர்வுடைய உயிராகக் கருதாது உணர்வற்ற உரிமைப் பொருள் போன்று எண்ணி ஏற்றுக் கொள்ளுமாறு இறைவன்பால் அடைக்கலம் புகுதல் அன்பிற் சிறந்த மெய்யடியார்களின் இயல்பாகும்.

படைக்கல மாகவுன் னாமத்
தெழுத்தஞ்சென் னாவிற் கொண்டேன்
இடைக்கல மல்லேன் எழுபிறப்
பும்உனக் காட்செய் கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது
வணங்கித் தூநீ றணிந்துன்
அடைக்கலம் கண்டாய் அணிதில்
லைச்சிற் றம்பலத் தரனே —4.81 : 8

என்ற அப்பர் பெருமான் திருமொழி ஈண்டு நினைத்தல் தகும்.

அடைக்கலத்தை வைணவர்கள் **சரணாகதி**, பிரபத்தி என்ற சொற்களால் குறிப்பிடுவர். சுவாமி தேசிகன் காஞ்சிப் பேரருளாளன் திருவடிகளைச் சரணமடைவதுபற்றி 'அடைக்கலப் பத்து' என்ற பத்துப் பாசுரங்களடங்கிய பதிகம் ஒன்றினை அருளிச் செய்துள்ளார்.[4] 'அத்திகிரி அருளாளர்க் கடைக்கலநான் புகுந்தேனே' என்றே முதற் பாசுரம் முடிகின்றது. ஆழ்வார்கள் அனைவருமே சரணாகதி வழியைப் பின்பற்றுபவர்கள். திருமங்கையாழ்வார் திருவேங்கடம்பற்றிய திருமொழியில் (1.9), 'வந்து அடைந்தேன்; அடியேனை ஆட்கொண்டருளே' (2,3, 4,5,6,7,8,9) என்று கூறியிருப்பதையும்; நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் (6.10) 'அடியேன் உன்பாதம் கூடும் ஆறு கூறாயே' (1) என்றும், அடியேன் உனபாதம் அகலகில்லேன் இறையுமே' (9) என்றும், 'அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே' (10) என்றும் கூறியிருப்பதை யும் நோக்கினால், சரணாகதி தத்துவம் தெளிவாகும். கிறித்துவப் பெருமக்களும் அடைக்கலத் தத்துவத்தைக் கடைப்பிடிக்கின்றனர்.

29. **குயிற்பத்து** (18): வாதவூரர் சிறையில் துன்பப்பட்ட போது, சிறைக்கருகே சோலையிற்புகுந்த குயிலை நோக்கியே இப்பத்தை அருளியதாக நம்பி திருவிளையாடல் குறிப்பிடு கின்றது.[5] (இவ்வளவில் இறைவன் அருளால் குதிரைத்திரள் கள் மதுரை நகர்க்குள்ளே புகுகின்றன). இது அகப்பொருள் துறையில் 'தூது' அனுப்பும் முறையில் அமைந்துள்ளது. இறைவனைக் காதலிக்கும் தலைவியொருத்தி சோலையி னிடத்தே வாழும் குயிலை நோக்கி, 'எங்கள் பெருமா னாகிய இறைவனை என்பால் வரக்கூவுவாயாக' என்று குறை

4. தே.பி. : 237 - 246.
5. இதனைத் தில்லையில் அருளிச் செய்ததாகக் கடவுண் மாமுனிவர் குறிப்பிடுவர்.

யிரந்து வேண்டும் முறையில் அமைந்துள்ளது பத்துத் திருப் பாடல்களையுடைய இப்பதிகம். இதனால் இது 'குயிற்பத்து' என்ற திருப்பெயரைப் பெறுகின்றது.

பொங்கரி னிடையே வாழும்
பொற்பிளங் குயிலே கூவி
இங்கழை எம்பிரானே என்பது

எனத் திருவாதவூரர் புராணமுடையார் (கடவுண்மா முனிவர்) இதன் பொருள் அமைதியைக் குறித்திருப்பது நோக்கத்தக்கது. இதன் கருத்தை "ஆத்துமவிரக்கம்—சிவனைக் கண்டு இரங்குதல்' என்று பழைய குறிப்பு கூறுகின்றது. ஆன்மநாயகனைக் கண்டு ஆன்மாவாகிய தலைவி தலைக்கூடப்பெறாமையால் உண்டான நோயின் மிகுதியை இப்பத்துப் பாடல்களிலும் அறிவிக்கப்படுதலால் இஃது இரங்குதலாகின்றது. "தூய அருட்குயிலே நற்சோதி எனைக் கூடுதற்குன், வாயினாற் கூவென முன்வாழ்த்தல் குயிற்பத்தாமே" என்பது திருவாசக உண்மை. இப் பதிகத்தில்,

கீத மினிய குயிலே
கேட்டியேல் எங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவில்
பாதாள மேழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லிற்
சொல்லிறந்து நின்ற தொன்மை
ஆதி குணமொன்று மில்லான்
அந்தமி லான் வரக்கூவாய் (1)

[கீதம்-இசை; பாதாளம் ஏழு-ஏழாவதாகிய பாதாளம், சொல் இறந்து - சொல்லின் எல்லையைக் கடந்து தொன்மை ஆதி - பழமையும் முதலும்].

என்பது இப்பத்தின் முதல் பாடல். இதில் இறைவனது சோதி மணிமுடி சொல்லிறந்து நின்றதொன்மையது என்றும், அம்முதல்வன் பாதம் இரண்டும் பாதாளம் ஏழினுக் கப்பால் ஊடுருவிப் பரவிய பெருமையுடையன என்றும் கூறு கின்றார்.

மேலும், இறைவன் பெருமையைப் பலபடப் பேசு கின்றார். ஆர்கலிசூழ் தென்னிலங்கை அழகமர் மண்டோதரிக்குப் பேரின்பம் அளித்தவன். அப்பெரியோன் ஞாலம் விளங்கத் திருவுத்தர கோசமங்கையில் எழுந்தருளி யிருப்பவன். போக பூமியாகிய வானைப் பழித்து இம் மண்ணுலகத்தில் எழுந்தருளி மனிதரை ஆட்கொண்டு ஊன் பழித்து உள்ளம் புகுந்து உணர்வாய்க் கலந்தவன். மூவரறியா முதல்வன். அந்தரத்தினின்றும் இறங்கி வந்து அடியவர்களின் ஆசையை அறுத்த அருளையுடையவன். பொற்பரிமேல் எழுந்தருளிய அற்புதன். அன்பர்களின் அகத்தாமரையில் வீற்றிருப்பவன். உலகவர் காண ஆசானாக எழுந்தருளி வந்து அழகிய சேவடி காட்டிப் பாசம் அறுத்துப் பணி கொண்டருளியவன். இங்ஙனம் பிறப்பறுத்த பிஞ்ஞகனை அடிகள் நெஞ்சம் நெக்குருகப் போற்றுகின்றார்.

நாச்சியார் திருமொழியில் **'குயிற்பத்து'** (5) என்ற திருமொழி ஒன்று உண்டு. இதில் கண்ணன்மீது காதல் கொண்ட ஆண்டாள் பேசுகின்றாள். அக்கண்ணபிரானும் தானும் கூடியிருக்கும் காலங்களில் அக்குயில் அணுகியிருந்து வார்த்தை சொல்லிக் கொண்டிருந்த பழக்கத்தால் ''ஓ குயிலே, என்னையும் அவனையும் நீ கூட்டக் கடவையோ? எப்படியாவது அவன் என்னிடம் வந்து கூடும்படிக் கூவாய் பார்ப்போம்'' என்று பலகாலும் சொல்லி அக்குயிலின் காலில் விழுந்து வேண்டுகின்றாள். 'பவளவாயன் வரக் கூவாய்' (1), 'வேங்கடவன் வரக் கூவாய்' (2),' கரு

மாணிக்கம் வரக் கூவாய்' (3), 'புண்ணியனை வரக் கூவாய்' (4), 'உலகு அளந்தான் வரக் கூவாய்' (5) என்று பலகாலும் கேட்பதைக் காணலாம். 'என் தத்துவன் வரக் கூகிற்றியாகில், தலை அல்லால் கைம்மாறு இலேனே' (6) என்று சரணாகதியே அடைகின்றாள். இப்பத்துப் பாடல் களிலும் ஆண்டாள் தன் காதல் நோயை அறிவிக்கின்றாள்.

**30. அன்னைப் பத்து (17)[6] :** திருப்பெருந்துறையில் குருவாய் எழுந்தருளித் தம்மை யாட்கொண்டருளிய இறைவன் மதுரை நகர வீதியில் குதிரைச் சேவகனாக—பரி மேலழகனாக — எழுந்தருளியபோது அவனது பேரழகில் ஈடுபட்டு அவன்பாற் காதல் கொண்ட தலைவியொருத்தி தன் அன்னையை நோக்கிக் கூறும் கூற்றினைக் கொண்டு கூறும்முறையில் திருவாதவூரடிகள் அருளிய பனுவல் அன்னைப் பத்தாகும். இச்செய்தியை,

> **ஆங்கொரு சிறுமி தன்சீர்**
> **அன்னையை நோக்கிக் கூறும்**
> **தாங்கிசை மொழியே யாகத்**
> **தருமவை ஈரைந் தோதி**

என வரும் கடவுள் மாமுனிவர் திருவாக்கால் தெளியலாம். தலைவியொருத்தி தன் அன்னையை நோக்கிக் கூறும் கூற்றினைக் கொண்டு கூறும் நிலையிலமைந்த பத்துத் திருப் பாடல்கள் அமைந்த பனுவலாதலின் இஃது 'அன்னைப் பத்து' என்னும் பெயர் பெறுகின்றது. இதன்கண் பாடல் தோறும் 'அன்னே என்னும்' என்ற தொடர் இருமுறை பயின்று வருதல் காணலாம். ஐங்குறு நூற்றில் குறிஞ்சித் திணையின் இரண்டாம் பத்தாக அமைந்த 'அன்னாய்ப்

---

6. இப்பத்து தில்லையில் அருளிச் செய்யப்பெற்ற தாகக் கூறுவர் கடவுள் மாமுனிவர்.

பத்து' என்னும் பெயர்ப் பொருளமைதியினை இவ்வன்னைப் பத்து அடியொற்றி அமைந்திருத்தல் கூர்ந்து நோக்கத்தக்கது. 'நேயம் மிகுந்த நிலைகுலையக் கூடுதலை, ஆயவருள் தாய்க்கிங் கறைதல் அன்னைப் பத்தாகும்'[7] என்பது திருவாசக உண்மை.

இந்தப் பனுவலுக்கு 'ஆத்தும பூரணம்—அதாவது ஆன்மா சிவனோடு நிறைதல்' என்று பழைய குறிப்புபொருள் காண்கின்றது. 'ஆன்மா சிவத்தோடு ஒன்றி ஒன்றித் தன் தன்மை கெட்டு, எல்லாம் சிவமயமான உன்மத்தமே இன்று எனக்கு ஆயிற்று' என்பதை இப்பத்தும் அறிவித்தலின் ஆத்மபூரணம் ஆயிற்றுப் போலும். இப்பனுவலில் அமைந்த பாடல்களில் இரண்டு மூன்றாம் அடிகள் இடைமடக்காய் அமைந்துள்ளன.

**வெள்ளைக் கலிங்கத்தர் வெண்டிரு முண்டத்தர்**
**பள்ளிக் குப்பாயத்தர் அன்னே என்னும்**
**பள்ளிக் குப்பாயத்தர் பாய்பரிமேல் கொண்டென்**
**உள்ளங் கவர்வரால் அன்னே யென்னும்**'

[கலிங்கம் - ஆடை; முண்டத்தர் - நெற்றியைஉடையவர்; பள்ளி - அறச்சாலை; குப்பாயம் - சட்டை]

---

7. பிரிவால் வருந்திய தலைவி உடல் மெலிந்து உள்ளந்திரிந்து, செய்கை ஒய்ந்து, ஆயத்தோடு விளையாடாது, உணவும் வெறுத்து ஓரிடத்துத் தனித் திருத்தலைக் கண்ட தாய்,தோழியை நோக்கி 'இம்மாறுபாடு இவட்கு எற்றினால் ஆயிற்று?' என்று வினவ, அதற்கு அவள் அறத்தொடு நிற்கும் நிலையில் 'தலைவி வாய் சோர்ந்தும் இங்ஙனம் கூறுகின்றாள்' என்று தாய்க்குத் தோழி அறிவித்தல் என்று கொள்ளல் மிகவும் பொருத்தமாக அமையும். இலக்கண வரம்புக்கும் மீறாமல் அமைகின்றது. ஆயின் கடவுள் மாமுனிவர் வாய்மொழிக்கு முரண்படுகின்றது.

என வரும் ஏழாம் திருப்பாடல் குருவாய் வந்து அருள் புரிந்த இறைவன் மீண்டும் குதிரைச் சேவகனாக எழுந்தருளிய திருக்கோலத்தினை இனிது புலப்படுத்துவதாகஅமைகின்றது.

**தாளி யறுகினர் சந்தனச் சாந்தினர்**
**ஆளெம்மை யாள்வரால் அன்னே யென்னும்**
**ஆளெம்மை யாளும் அடிகளார் தங்கையில்**
**தாள மிருந்தவா றன்னே யென்னும்(8)**

[தாளி - தாளிக் கொடி; அறுகு - அறுகம் புல்]

என்ற எட்டாம் திருப்பாடலில் இறைவன் குருவாய் எழுந் தருளி வந்து அடிகளை ஆட்கொண்ட நிலையில்அம்முதல்வன் 'பரமனையே பாடுவார்' என்னும் அடியார் திருக்கூட்டத்துள் ஒருவராய்த் தமது கையில் தாளத்தைக் கொண்டிருந்த தோற்றத்தினை நன்கு புலப்படுத்துவதைக் காணலாம்.

31. திருவேசறவு (38)[8]: வாதவூரடிகள் அளவிலாத் துயரத் தால் மனங்கலங்கிச் சிறையிலே துன்புறுங்காலத்துப் பாடியது இப்பனுவல். 'ஒன்றற்கும் பற்றாத இழிந்த நரியை அரசர்க் குரிய அங்கமாகிய குதிரையாக ஆக்கியது போல, தன்னையும் பெரிதாக்கித் திருவடிக்கீழ் வைத்த பெருமைதான் என்னே என்று வேசற்றுக் கூறுதல்.[9] இச்செய்தி திருப்பெருந்துறைப் புராணத்தால் அறியப்படும். வேசறுதல்—மனங்குழைந்து இரங்குதல்.

---

8. திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பெற்ற தாகக் கடவுண் மாமுனிவர் கூறுவர்.
9. அடிகள் திருப்பெருந்துறையில் இறைவன் திருவடி களை வழிபட்டிருக்கும் நாட்களில் 'திருவேசறவு என்ற இத்திருப்பதிகத்தை அருளியதாகக் கடவுண் மாமுனிவர் கூறுவர்,

ஏசினும் யானுன்னை ஏத்தினும்
என்பிழைக்கே குழைந்து
வேசறு வேனை'' (நித்தல்விண்-50)

என்ற அடிகளில் அடிகள் இச்சொல்லினை இப்பொருளில் ஆண்டுள்ளமை ஈண்டு நோக்கத் தக்கது. இப்பனுவலுக்கு 'சுட்டறிவொழித்தல்-தன் செயலற நிற்றல்' என முன்னோர் கருத்துரைத்தனர். இங்ஙனம் தம் பிழை நினைந்து இரங்கும் முறையில் அடிகள் அருளிய இப்பனுவல் ஆன்மா இறைவனது அருளின் வண்ணமாய் அடங்கித் தான் ஒன்றையும் சுட்டி யறியாத நிலையினைப் புலப்படுத்தலால் சுட்டறிவு ஒழித்த லாயிற்று.

இத்திருப்பதிகத்தில்,

இரும்புதரு மனத்தேனை
யீர்த்தீர்த்தென் என்புருக்கிக்
கரும்புதரு சுவையெனக்குக்
காட்டினையுன் கழலிணைகள்
ஒருங்குதிரை யுலவுசடை
யுடையானே நரிகளெல்லாம்
பெருங்குதிரை யாக்கியவா
றன்றேயுன் பேரருளே (1)

என்பது முதற்பாடல். ''எளிதில் உருகாமையும் வன்மையும் ஒளியின்மையும் உடைய இரும்பையொத்த மனத்தினை யுடைய என்னை ஈர்த்து ஈர்த்து என்பும் உருகச் செய்தாய்; உன் கழலிணைகளைக் காட்டிக் கரும்புதரு சுவையையும் காட்டினாய். இழிந்த நரிகளையெல்லாம் உயர்ந்த குதிரை களாக்கினாய். அதுபோல என்னுடைய கருவி கரணங்களை யும் உயர்ந்தனவாகத் திருத்தி ஆட்கொண்டாய். உன் பெருங்கருணைத் திறம் இருந்தவாறு என்னே,'' என்று உள்ளங் குழைந்து இரங்கிப் போற்றுகின்றார் இப்பாடலில்.

இதனைத் தொடர்ந்து நாய்க்குப் பொற்றவிசு இடுமாறு போன்று தமக்குப் பொன்னருள் சுரந்து (5) 'அஞ்சேல்' என்றருளி (6) அகம் நெகவே புகுந்து ஆட்கொண்டருளிய (7) சீர்த்தியையும் தமக்குத் திருவைந் தெழுத்தினை, உபதேசித் தருளித் தானே உள்ளம் புகுந்து தேனாய் இன்னமுதமுமாய்த் தித்தித்தருளிய திறத்தினையும் (10) அடிகள் இத்திருப்பாடல் களில் எடுத்துரைத்துப் போற்றியுள்ளமை ஓதி அநுபவிக்கலாம்

**சிவபுராணம் (1) :** [10]இது சிவனது அநாதி முறைமை யான பழமையை விரித்துரைப்பதால் 'சிவபுராணம்' என்ற பெயர் பெறுகின்றது, புராணம்—பழமை. பழமையில், காலத்தொடுபட்டபழமையும் காலங் கடந்த பழமையும் என இருவகையுண்டு. இறைவனது பழமை காலங்கடந்ததாகலின் அநாதி முறைமையான பழமை எனப்படுகின்றது.

சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான் (19-20)

என இதற்கண் அடிகள் குறிப்பிடுதலான் சிவனது அநாதி முறைமையான பழமை என்னும் ஒருபொருளே நுதலியது இத்திருப்பாட்டு என்பது இனிது தெளிவாகும். இது 95 அடிகளையுடையது.

ஒருபொருள் நுதலிய வெள்ளடி வியலால்
திரிபின்றி வருவது கலிவெண் பாட்டே. செய்யு—153

என்ற தொல்காப்பிய விதிப்படி அமைந்த கலிவெண்

10. இப்புராணத்தைத் திருப்பெருந்துறையில் அருளிய தாக உரைப்பர் கடவுண்மா முனிவர் (திருவாதவூரர் புராணத்தில்). குருவாய் எழுந்தருளிய இறைவன் மறைந்ததும், அடிகள் அடியார் குழுவில் வந்தடைந்து குருந்தின் கீழ்த்தெய்வபீடம் அமைந்து இறைவன் திருவடிகளை வழிபட்டிருக்கும் நாட்களில் இப்புராணம் பாடினார் என்பர். முதலில் பாடிய பனுவல் இதுவே என்றும் கூறுவர்.

பாட்டாகும். 'இது கடவுட் பராய முன்னிலைக்கண் வந்த பாடாண் பாட்டு' என்பர் மறைமலையடிகள்.

விசும்பில் தோன்றிய அருள் வாக்கின்படி பாண்டியன் மணிவாசகப் பெருமானை அவர் திருவுளப் பாங்கின்படி இருக்கலாம் எனத் துதித்துப் போற்றுகின்றான். பாண்டியனால் உபசரிக்கப்பெற்ற திருவாத வூடிகள் மன்னனை நோக்கி 'விசும்பில் தோன்றிய வார்த்தையினை இறைவனது அருள்வாக்கென்றே தெளிந்தாய். நின்னைச் சார்ந்து ஒழுகின்மையால் இத்தகைய திருவருட்பேற்றினைப் பெற்றேன். நீங்குதற்கரிய பிறவித் தொடர்பையும் அறுத்து உய்ந்தேன். இனி என்வழிச் செல்வேன், இன்று எம்பெருமானாகிய கடவுள் உண்டு என ஐயமற உணர்ந்த மெய்யுணர்வால் நினது செல்வம் தீங்கின்றி மேன்மேலும் பெருகி யோங்குக. எனக்கூறி 'நமச்சிவாய வாழ்க' என்றெடுத்து சிவபுராணத்தை ஓதிக் கொண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்படுகின்றார், இவ்வாறு நம்பி திருவிளையாடல் கூறுகின்றது.

* * *

இறைவனது பேரருட்டிறத்தை நினைந்துருகிய மணிவாசகப் பெருமான்

**நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க**
**இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க**
**கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க**
**ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க**
**ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க.**

(1—2)

[நமச்சிவாய - தூலபஞ்சாக்கரம்; நாதன் - திருவைந்தெழுத்தின் ஒலியிலுள்ளதாகிய நாத வடிவினன்; கோகழி - திருப்பெருந்துறை; ஆகமம் - உயிர்கட்கும்

மல நாசம் செய்து ஞானத்தை விளக்குவது;
அண்ணிப்பான் - அணுகி அருள் வழங்குவான்.]

என்று சிவபுராணத்தின் முதற்கண் பரம்பொருளின் திருவடிகளை வாழ்த்திப் போற்றுகின்றார்.

அடுத்து, இறைவனுடைய திருவடிச் சிறப்பினை,

**வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க**
**பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க**
**புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க**
**கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க**
**சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க** (5-10)

[வேகம் கெடுத்து - மனவிருத்திகளின்வேகத்தை அடக்கி;
பிஞ்ஞகன் - தலைக்கோலமுடையவன்; புறத்தார் - புறச்சமயிகள்]

என வெற்றித்திறம் விளங்க விரித்துப் போற்றுகின்றார்.

இங்ஙனம் சிவபெருமான் திருவடிகளுக்கு வாழ்த்தும் வெற்றியும் கூறிய வாதவூரடிகள்,

**ஈசனடி போற்றி எந்தையடி போற்றி**
**தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி**
**நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி**
**மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி**
**சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி**
**ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி** (11-16)

[ஈசன் - அனைத்தையும் ஆள்பவன்; தேசன் - ஒளியுள்ளவன்]

என எண்வகைப் போற்றி வாசகத்தால் எண் குணத்தானாகிய சிவபெருமானுக்கு வணக்கமும் கூறுகின்றார்.

சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

(ஓய - நுணுக)

என இறைவன் திருவருள் துணை கொண்டு தாம் துவலக் கருதிய பொருள் சிவபுராணம் என்பதனைத் தெளிவாக எடுத்துரைக்கின்றார். இதனால் சிவபுராணம் என்ற இப் பெயர் இம்முதற்பகுதிக்கேயன்றி அடிகள் திருவாசகம் முழுவதற்கும் பொருந்தும் எனக் கருதுவதற்கும் இடம் உண்டு. இங்ஙனம் நுதலிய பொருளை முன்மொழிந்த, மணிவாசகப் பெருமான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன் (21-25)

[கருணைக்கண் - நெற்றிக்கண்; இறந்து - கடந்து]

என்ற பாடற் பகுதியில் அவையடக்கமும் கூறுகின்றார். எனவே நூல்முகத்து உரைத்தற்குரிய வாழ்த்து, வணக்கம், வருபொருள் உரைத்தல் ஆகிய மங்கல வாழ்த்தும் அவை யடக்கமுமாக இச்சிவபுராணத்தின் முற்பகுதி அமைந் திருத்தலைக் காணமுடிகின்றது.

மேலும், இப் புராணத்தில் உயிர்கள் புல்முதல் மக்கள் ஈறாகவுள்ள உடம்புகளைப் பெற்றுப் பிறக்கின்றன; இவை ஓரறிவு முதல் ஆறாவதறிவு எனப்படும் மனவுணர்வு ஈறாகப் படிப்படியாக அறிவினால் சிறந்து வளரும் வளர்ச்சிமுறை

கூறப்பெற்றுள்ளது (26-31). இங்ஙனம் பலவகைப் பிறப்புகளிலும் பிறந்துழன்று தூய்மையடைந்த நல்லுயிர்கட்குத் திருவடிப்பேறு நல்கி அவ்வுயிர்களை ஆட்கொண்டருளுதலும், அறிவு நூல்களாகிய திருமறைகளாலும் உணர்தற்கரிய அப் பரம்பொருள் உயிர்களின் நலங்கருதிப் படைத்தல், காத்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் இயற்று முகமாக உயிர்களின் அறியாமையை அகற்றித் தூய்மை செய்து பேரின்பம் நல்கிப் பிறவி வேரறுக்கும் பெற்றியும், தாயிற்சிறந்து அருளாளனாகிய இறைவன் எல்லாமாய் அல்லவுமாய் நிற்கும் இயல்பும், தில்லைக் கூத்தனாகிய அவ்விறைவன் திருவடிகளை நெஞ்சம் நெக்குருகிப் பணிந் தேத்திப் பரவிய திருப்பாட்டின் பொருளுணர்ந்து சொல்லும் மெய்யடியார்கள் பல்லோரும் போற்றச் சிவனடிக்கீழ் வைகும் பேரானந்தப் பெருவாழ்வு எய்தி இன்புறுவர் என்பதும் ஆகிய உண்மைகள் இப்புராணத்தில் விரித்துரைக்கப் பெற்றுள்ளன.

இப்புராணத்திற்குக் குறிப்பெழுதிய பெரியார் ஒருவர் சிவனது அநாதி முறைமையான பழமைதான் சிவனது அருவநிலை கூறுவதாகும் என்றார். இறைவன் கருணையால் உருவு கொள்ளுமிடத்துக் காலத்தொடுபட்ட பழமையே சித்திக்கும் என்பதை நாம் அறிவோம். ஆகவே, காலங் கடந்த பழமையாகிய அருவநிலையை நாதன் (1), குருமணி (3), ஏகன் (5), ஈசன் (11), தேசன் (12) முதலான இறைவனுடைய உண்மை இலக்கணத்தால் உணர்த்துகின்றார். "ஈசர் தமக்கியல்பான திருநாம முதலெவையும், மாசறவே வாழ்கவென வாழ்த்துகின்ற அருட் குறிப்பு உடைய"தெனக் கூறுவர் (திருப்பெருந்துறைப் புராணம்).

மங்கலச்சொல் யாவற்றிற்கும் தலையாயதும், தான் மங்கலமாதலேயன்றித் தன்னைச் செபிப்பார்க்கும் தியானிப்

பார்க்கும் பெருமங்கலத்தைத் தர வல்லதும், திருமறை மரத்துக்கு வித்தாகவுள்ளதும், காழிச் சிவக்கன்றால், 'வேதநான்கினும் மெய்ப் பொருளாவது' (3.49 : 1) என்றும், 'சிந்தும் வல்வினை செல்வமும் நல்கும் (3.49 : 6) என்றும் நாவரசரால் 'கற்றுணைப் பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும் நற்றுணையாவது' (4.11 : 1) என்றும், 'நாவினுக்கு அருங்கலம்' (4.11 : 1) என்றும், 'நல்லக விளக்கு' (4.11 : 8) என்றும்; தூலம், சூக்குமம், அதிசூக்குமம் என்ற மூன்று முறைகளால் ஓதப்பெறுவதும் ஆகிய திருவைந்தெழுத்தை முதலாக வைத்து 'நமச்சிவாய வாழ்க' எனத் தொடங்கப் பெறுவது இப்பனுவலின் தனிச்சிறப்பாகும்.

# 9. பிற இடங்களில் அருளிச் செயல்கள்

தம் குருநாதராகிய சிவபெருமான் பணித்தவண்ணம் வாதவூரடிகள் **திருவுத்தர கோசமங்கையை**[1] அடைகின்றார். திருக்கோயிலில் புகுகின்றார். குருநாதர் கூறிய வண்ணம் தம்மை ஆண்டு கொண்டருளிய ஆசிரியத் திருமேனியைக் காணப்பெறாதவராய்ப் பெரிதும் வருந்துகின்றார். 'உத்தர கோசமங்கைக்கு அரசே, அடியேனைக் கை விட்டு விடுவாயோ?' என்று நெஞ்சம் நெருக்குருகி நின்று '**நீத்தல் விண்ணப்பம்**' (6) என்னும் பனுவலைப் பாடிப் போற்றினார் என்பதும், இந்நிலையில் உத்தரகோச மங்கைப் பெருமான் அடிகட்கு ஆசிரியத்திருக்கோலங் காட்டி அருள் புரிந்தான் என்பதும் வரலாறு. இது திருவாதவூரடிகள் புராணத்தால் அறியப்படுவது. இங்குப் பல சித்திகளையும் பெறுகின்றார்.

**33. நீத்தல்விண்ணப்பம்(6)**[2] : கட்டளைக் கலித்துறையாக ஐம்பது திருப்பாடல்களைக் கொண்டது இப்பனுவல்; ஒரு பாடலின் இறுதி அடுத்த பாடலுக்கு ஆதியாக அமையும்படி

---

1. **உத்தரகோச மங்கை :** இதுபற்றிய விவரம் முதல் கட்டுரை (இந்நூல் பக். 4) காண்க.
2. திருவாதவூரர் புராணமும் இப்பனுவல் உத்தர கோசமங்கையில் அருளிச் செய்யப்பட்டதாகவே உரைக்கும்.

அந்தாதித் தொடையால் ஆனது. 'கடையவனேனை' (1) என்று தொடங்கி 'அமுதுண்ணக் கடையவனே' (50) என்று மண்டலித்து முடிகின்றது. 'நின் திருவடிகட்குத் தொண்டு பட்டு இருக்கும் அடியேனைக் கைவிட்டு விடலாகாது' என வாதவூரடிகள் ஆண்டவனை நோக்கி வேண்டிக் கொள்ளும் முறையில் அமைந்தமையால் இது 'நீத்தல் விண்ணப்பம்' என்ற திருப்பெயரைப் பெறுகின்றது. இதன் முதல் இருபது பாடல்களிலும் 48-ஆம் பாடலிலும் 'உத்தர கோசமங்கைக்கு அரசே!' என அடிகள் இறைவனை அழைத்துப் போற்று வதால் இப்பதிகம் திருவுத்தரகோசமங்கையில் அருளிச் செய்யப் பெற்றதென்பது இனிது புலனாகின்றது.

இப்பனுவலுக்கு 'பிரபஞ்ச வைராக்கியம்' என்பது முன்னோர் வரைந்துள்ள குறிப்பு. இது 'உலக வாழ்க்கையில் பற்றறுதலாகிய உறுதிப்பாடு' என்று பொருள்படுகின்றது. திருப்பெருந்துறையில் இறைவன் அந்தணனாக வந்து அழகமர் திருவுருக்காட்டி ஆண்டருளிய பின்னர், அடிகளார் உலகத் தொடர்பினை அறவே உதறி விடுகின்றார்; இறை வனோடு பிரிவறக் கலத்தலாகிய பேரின்ப நிலையினைத் தலைப்பட்டு இன்புற முந்துகின்றார். இறைவன் 'இன்னும் சின்னாள் இங்கு இருதி' எனக் கூறி மறைகின்றார். இந்தப் பிரிவினை சிறுபொழுதும் தரித்திருக்க வொண்ணாமல் உலக வாழ்க்கையில் தமக்குள்ள வெறுப்பும், அவன் திருவடியினைத் தலைப்படுதற்குரிய பேரன்பினைப் பெறுதல் வேண்டும் என்னும் பெருவேட்கையும் விளங்க அருளிய பனுவலாதலின் இதற்குப் 'பிரபஞ்ச வைராக்கியம்' என்ற முன்னோர் கருத்துரை பொருத்தமாக அமைகின்றது. ஆண்டவனது திருவடியை அடைதற்குச் சாதனமாக இருப்பது அன்பு; அதன் வியக்கத்தக்க திறத்தினை விளக்குவது திருச்சதகம். அதன் பயனாக உலக வாழ்க்கையின் பற்றொழிவின் உறுதிப் பாட்டினைப் புலப்படுத்துவது நீத்தல் விண்ணப்பம். திருச்

சதகத்தை அடுத்து 'நீத்தல் விண்ணப்பம்' நூலில் அமைத்திருப்பது மிகப்பொருத்தமாகின்றது.

இந்தப் பனுவலின்,

**கடையவ னேனைக் கருணையி**
**னாற்கலந் தாண்டுகொண்ட**
**விடையவ னேவிட் டிடுதிகண்**
**டாய்விறல் வேங்கையின் றோல்**
**உடையவ னேமன்னு முத்தர**
**கோசமங் கைக்கரசே**
**சடையவ னேதளர்ந் தேனெம்பிரா**
**னென்னைத் தாங்கிக்கொள்ளே (1)**

[கலந்து — உள்ளும்புறமும் கலந்து; விடையவன் — இடபவாகனன்; விறல் வேங்கை—வலிய புலி].

என்பது முதல் பாடல். இதில் ''யாவர்க்கும் கடையேனாகவுள்ள எளியேனை நினது பெருங்கருணைத் திறத்தால் உளங்கலந்து நின்று ஆண்டு கொண்டருளிய ஏறூர்ந்த செல்வனே, அடியேனை இத்துயர் நிலையில் கைவிட்டு விடுவாயோ? வளம்மிக்க புலியின் தோலை உடையாகக் கொண்டவனே, நிலைபெற்ற திருவுத்தரகோசமங்கையைத் தலைநகராகக் கொண்டு வீற்றிருந்தருளும் வேந்தனே, செஞ்சடைக் கடவுளே, அடியேன் பெரிதும் தளர்வுற்றேன்; எம்பெருமானே, தளர்ச்சி நீக்கி அடியேனை தாங்கிக் காத்தருள்வாயாக'' என்று இறைவனைப் பரிந்து வேண்டுகின்றார்.

**பெருநீ ரறச்சிறு மீன்றுவண்**
**டாங்கு நினைப்பிரிந்த**
**வெருநீர்மை யேனை விடுதிகண்**
**டாய்வியன் கங்கைபொங்கி**

வருநீர் மடுவுண் மலைச்சிறு
　　தோணி வடிவின்வெள்ளைக்
குருநீர் மதிபொதி யுஞ்சடை
　　வானக் கொழுமணியே (26)

என்பது 26-ஆம் பாடல். "நீரற்ற குளத்தில் சிறு மீன் துவண்டதுபோல, தேவரீரைப் பிரிந்த யான் வாடினேன்; என்னை விடாதீர்" என வேண்டுகின்றார்.

தாரகை போலும் தலைத்தலை
　　மாலைத் தழலரவப்பூண்
வீரவென் றன்னை விடுதிகண்
　　டாய்விடி லென்னைமிக்கார்
ஆரடி யார்என்னின் உத்தர
　　கோசமங் கைக்கரசின்
சீரடி யாரடி யான்என்று
　　நின்னைச் சிரிப்பிப்பனே (48)

[தாரகை - விண்மீன்; சிரிப்பிப்பன் - நகைக்கும்படி செய்வேன்.]

என்பதில் 'தலை மாலையையும் பாம்பணியையும் பூண்ட வீரனே! என்னை விடாதே' என்கிறார். மேலும்,

சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத்
　　தொழும்பையு மீசற்கென்று
விரிப்பிப்பன் என்னை விடுதிகண்
　　டாய்விடின் வெங்கரியின்
உரிப்பிச்சன் றோலுடைப் பிச்சனஞ்
　　சூண்பிச்ச னூர்சுடுகாட்
டெரிப்பிச்ச னென்னையு மாளுடைப்
　　பிச்சனென் றேசுவனே (49)

[பிச்சன் - பித்தன்; தோல் - புலித்தோல்; நஞ்சுஊண் - நஞ்சாகிய உணவு]

என்பதில் 'அடியேனது பிழையும் அடிமையும் பெருமானுக் கென்றே விரிப்பேன்; ஆதலால் என்னை விடுதலாகாது' என்கிறார். இப்பாடல்கள் இரண்டும் பழிப்பதுபோலப் பரவுதலாகும். முத்தாய்ப்பாக,

ஏசினும் யானுன்னை ஏத்தினும்
என்பிழைக் கேகுழைந்து
வேசறு வேனை விடுதிகண்
டாய்செம் பவளவெற்பின்
தேசுடை யாயென்னை யாளுடை
யாய்சிற் றுயிர்க்கிரங்கிக்
காய்சின வாலமுண் டாயமு
துண்ணக் கடையவனே (50)

[வேசறுவேன் - வருந்துவேன்; தேசு - ஒளி; காய்சின ஆலம்-கோபத்தையுடைய நஞ்சு;கடையவன்-இறுதியாக இருப்பவன்].

என்கின்றார். 'வாழ்த்தினாலும் வைதாலும் என் தவறுகளுக்கு யானே வருந்துவன்; விட்டு விடாதே' என்கின்றார்.

நீத்தல் விண்ணப்பம் என்ற தொடருக்கு உலகப் பற்றை நீத்தல் பொருட்டு இறைவனிடத்து வேண்டிய வேண்டுகோள் எனவும், 'என்னை நீத்து விடாதே' என இறைவனை நோக்கிச் செய்து கொண்ட வேண்டுகோள் எனவும் இருவகையாக நம் முன்னோர் பொருள் கொண்டுள்ளனர்.

மித்தை யுலகினை யகற்றி
விடாமல் எனைஆண் டருளென்
றத்தர் அறிந்திட நீத்தல்விண்
ணப்பம் அறைந்த துவாம்

என வரும் திருவாசக உண்மையாலும் இது புலனாகும். இத் தொடர் 'மித்தை உலகினை அகற்றி எனை ஆண்டருள்'

எனவும், 'விடாமல் எனை ஆண்டருள்' எனவும் இயைத்து இப்பனுவலில் அமைந்த இருவகை விண்ணப்பங்களையும் ஒருங்கு சுட்டி நிற்றலை அறியலாம்.

வாதவூரடிகள் உத்தரகோச மங்கை வந்ததும் 'அட்டமா சித்திகள்'[2] என்ற கலைகளில் இறையருளால் வல்லுநரா கின்றார். அடிகள்,

> **பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்**
> **கட்டமா சித்தி அருளிய வதுவும்.**
> —கீர்த்தித் 62 - 63.

என்று குறிப்பிடுவதால் இறைவனே இவற்றை அடிகட்கு உபதேசித்தார் என்பதை அறிய முடிகின்றது. அன்றியும் அடிகளின்,

> **உத்தர கோச மங்கையுள் ளிருந்து**
> **வித்தக வேடம் காட்டிய இயல்பும்**
> —கீர்த்தித் - 48 - 49.

என்ற குறிப்பினால் திருப்பெருந்துறையில் தம்மை ஆட் கொண்டபோது காட்டிய குருவடிவத்தையே காட்டி னமையையும் அறிய முடிகின்றது. வித்தக வேடம் - ஞானத் திருவுரு.

மணிவாசகப் பெருமான் திருவுத்தர கோசமங்கை யினின்றும் புறப்பட்டுத் தில்லையை நோக்கி வருகின்றார்.

---

2. **அட்டமா சித்திகள்** அணிமா - மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் - என்பன. இவற்றுள் அணிமா - ஆன்மாவைப் போல் அணுவாதல், மகிமா- மகத்தாதல். கரிமா - தன்னுடல் கண்டிப்பின் றாய்க் கண்டிப்புள்ளவற்றை யுருவ வல்லனாதல். இலகிமா - இலகுத்துவமாதல். பிராப்தி - வேண்டுவன அடைதல். பிராகாமியம் - நிறையுள் ளானாதல். ஈசத்துவம் - ஆட்சியுள்ளனாதல் வசித் துவம் - தன்வசமாக்க வல்லவனாதல்.

இப்பொழுதுள்ள மாதிரி அக்காலத்தில் இருப்பூர்திகளும் பேருந்துகளும் இல்லை. எந்த வழியாக எப்படி வந்தார் என்று புராணம் குறிப்பிடவில்லை. தில்லையை நோக்கி வரும்போது திருவிடை மருதூரை[3] அடைகின்றார். என்பதை மட்டிலும் திருவாதவூரர் புராணத்தால் அறிய முடிகின்றது. நம்பியும், பரஞ்சோதியும் விளக்காத விவரங்களைக் கடவுள்மா முனிவர் விளக்குகின்றார். இந்தவூர் கும்பகோணத்திற்கு வடகிழக்கில் ஏழு கல் தொலைவில் உள்ளது. மருத மரத்திடையில் ஓர் இலிங்கம் தோன்றிய காரணத்தால் இடைமருது என்று பெயர் பெற்றதாகக் கூறுவர்'.[4] அடிகள் இடைமருதூர் வந்த செய்தியை,

**இடைமரு ததனில் ஈண்ட இருந்து**
**படிமப் பாதம் வைத்தஅப் பரிசும்**

—கீர்த்தித்திரு. 75 - 76

3. **இடைமருதூர் :** இப்பெயர் கொண்ட இது மயிலாடுதுறை - தஞ்சை இருப்பூர்தி வழியில் ஒரு நிலையம். வரகுணபாண்டியன் பெரும் புகழ் வரலாற்றுத் தொடர்புடையது. இவனுக்கு நேரிட்ட பிரம்மஹத்தி தோஷம் நீங்கியதாகப் புராண வரலாறு. பட்டினத்தடிகள் வழிபட்ட தலம். அவர் அருளிய 'திருவிடை மருதூர் மும்மணிக்கோவை' பெற்ற தலம். இங்குத் தைப் பூசத்தன்று காவிரியில் நீராடுதல் சிறந்தது. (சம்பந்தர் 2. 57 : 5; அப்பர் 5.14 : 1).

4. யசோதைப் பிராட்டியின் இல்லத்தில் கண்ணன் வளர்ந்தபோது இரு மருதமரங்களுக்கிடையே உரலைக் கட்டியிழுத்து அம்மரங்களை வீழ்த்திய கதையையொட்டி இடைமருதூரில் அம்மாதிரி வடிவம் ஒன்று செய்து வைக்கப்பெற்றுள்ளது. இதைப் பார்க்கும்போது,

**மருதிடைமுன் தவழ்ந்தருளும் செங்கண் மாலே!**
**மாதவத்தால் ஒருதமியன் வாழ்ந்த வாறே.**

என்று கன்னன் கண்ணனைப் போற்றும் பாசுரப் பகுதி வில்லிபாரதம் 17-ஆம் போர் 248) நினைவிற்கு வரும்.

[படிமப் பாதம் - தெய்வத் தன்மை வாய்ந்த திருவடி] என்ற அடிகளாலும்,

அந்த இடைமருதில்
ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம்
பூவல்லி கொய்யாமோ? (276)

என்ற அடிகளாலும் அறிய முடிகின்றது. இச்செய்தியைக் கடவுள்மா முனிவரும் தமது புராணத்தில் குறிப்பிடுவர்.

இங்குள்ள இலிங்கமே இத்தலத்தின் சிறப்புக்குக் காரணம். பெயர் பெற்ற இந்த மூர்த்தி 'மகாலிங்கம்' என்ற பெயரால் வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு ஈசுவரன் திருக்கோயிலிலும் கணபதி, சுப்பிரமணியர், தட்சிணாமூர்த்தி, நந்திகேசுவரர், நவக்கிரகங்கள் முதலிய தேவர்களின் திருமேனிகள் வைத்திருப்பதைக் காணலாம். இடைமருதூர் திருக்கோயிலில் இவை இடம் பெற்றிருப்பதுடன் இவ்வூரைச் சுற்றியுள்ள தலங்களில் இவர்கட்குத் தனித்தனிக் கோயில்கள் கட்டப் பெற்றிருப்பதையும் காண முடிகின்றது. **திருவலஞ்சுழி**[5] கணேசப் பெருமானுக்குத் தனிச் சந்நிதி உண்டு. **சுவாமி மலை**[6] முருகன் பெரும் புகழ் பெற்றவன். கட்டு மலைக் கோயிலில் உள்ள இப்பெருமானை அருணகிரியார்

---

5. **திருவலஞ்சுழி :** மயிலாடுதுறை - தஞ்சை இருப்பூர்தி வழியில் சுவாமிமலை என்ற நிலையத்திலிருந்து ½ கல் தொலைவிலுள்ளது. கும்பகோணத்திலிருந்து பேருந்து வசதி உண்டு. இங்கிருந்து போவதே வசதி. இத்தலத்துப் பிள்ளையார் சந்நிதி மிகு புகழ் வாய்ந்தது.

6. **சுவாமி மலை :** கும்பகோணத்திற்கருகிலுள்ள ஓர் இருப்பூர்தி நிலையம். கும்பகோணத்திலிருந்து பேருந்து வசதி உண்டு. இங்கிருந்து 'சுவாமிமலை' என்ற தலந்திற்குப் போவதே சிறப்பு.

'சுவாமிமலை வாழவந்த—பெருமாளே' என்று தம் திருப் புகழில் போற்றுவர். **ஆலங்குடி** தட்சிணாமூர்த்தி பெரும் புகழ் பெற்றவர். (இது பாடல் பெற்ற தலம் இல்லை). **திருவாவடுதுறை**[7] நந்திகேசுவரர் மகிமை பெற்றவர்: **சூரிய நயினார் கோயில்** நவக்கிரகங்கள் பக்தர்களை ஈர்க்கும் அற்புதத் தலம்.

திருவிடைமருதூர்ப் பெருமானை மணிவாசகர் பாடல் கள் பாடிப் பரவவில்லை. எனினும் வேறொரு காரணத்தால் இத்தலம் சிறப்பு பெற்றுள்ளது. அதுதான் சோழ மன்னன் ஒருவனைப் பற்றியிருந்த பிரம்மஹத்தி தோஷம் நீங்கின வரலாறு. ஒருமுறை சோழ மன்னன் ஆராயாது பிராமணன் ஒருவனைக் கொலை செய்து விடுகின்றான்; பிரம்மஹத்தி தோஷம் அவனைப் பற்றித் துன்புறுத்துகின்றது. இது நீங்கப் பல தலங்கட்கும் சென்று வழிபடுகின்றான்; ஆனால்,தோஷம் நீங்கவில்லை. இறுதியாகத் திருவிடைமருதூர் ஈசனை வழிபடும்போது பிரம்மஹத்தி கோயிலின் வாயிலிலே காத் திருக்கின்றது. ஆனால் அரசன் இறைவனின் அருள் பெற்றுக் கோயிலின் பின்வழியாக வெளியேறுகின்றான். 'அரசன் வருவான், வருவான்' என்று பிரம்மஹத்தி இன்றும் காத்துக் கொண்டிருப்பதாக ஐதிகம். ஏமாந்து போய் அமர்ந்திருக்கும் பிரம்மஹத்தியின் இருப்பைக் காட்ட திருக்கோயிலின் கிழக்குக் கோபுர வாயிலில் ஒரு சிலை உள்ளது. பேய்ச் சேட்டைகளால் பிடிக்கப்பெற்றவர்கள் பலர் இங்கு வந்து

7. **திருவாவடுதுறை** : நரசிங்கம்பேட்டையிலிருந்து ½ கல் தொலைவு. கும்பகோணத்திலிருந்து பேருந்து உண்டு வசதிடு. திருமூலர் திருமந்திரம் அருளிய தலம். சம்பந்தர் தம் தந்தையார் வேள்வி செய்தற் பொருட்டு இறைவனைப் பாடி 1000 பொன் பெற்றதலம் (அப்பர் 4.56 : 1) திருவிசைப்பா பாடிய திருமாளிகைத் தேவர் தொடர்பு இத் தலத்திற்கு உண்டு.

தங்கள் நோய்களை அகற்றிச் செல்வது இன்றளவும் வழக்க மாய் இருந்து வருவதைக் காணலாம். இதைத்தான் மக்கள் 'சோழ பிரம்மஹத்தி' என்று வழங்குகின்றனர்.

மணிவாசகப் பெருமான் செல்லும் திருத்தலங்களி லெல்லாம் திருப்பெருந்துறையில் ஆட்கொண்ட ஆசிரியத் திருமேனியைக் காட்டியே அவரை மகிழ்விக்கின்றார். திரு விடைமருதூரிலும் அந்தப்பாதக்காட்சியையே பெறுகின்றார். இதையே மேற்காட்டிய அடிகளில் குறிப்பிடுகின்றார்.

இடை மருதூரிலிருந்து திருவாரூருக்கு வருகின்றார். மணிவாசகப் பெருமான். இதனை,

**தேனமர் சோலைத் திருவா ரூரில்**
**ஞானம் தன்னை நல்கிய தன்மையும்** —கீர்த்தித் 73-74

என்ற அடிகளின் வாக்காலேயே அறியலாம். இந்த ஊரில் தான் திருப்புலம்பல் (39) என்ற பனுவல் பிறக்கின்றது.

**34. திருப்புலம்பல் (39)**[8]: திருவாரூரில்[9] அருளிச் செய்யப் பெற்ற இப்பனுவல் மூன்று திருப்பாடல்களைக் கொண்டது.

8. திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பெற்றதாகக் கடவுண்மா முனிவர் கருதுவர்.
9. **ஆரூர்:** மயிலாடுதுறை - காரைக்குடி இருப்பூர்தி நிலையத்திலிருந்து 1 கல் தொலைவு. கச்சி ஏகம் பத்தையும் பஞ்சபூதத் தலங்களுள் பிருதிவித்தல மாகக் கருதுவதுண்டு. சந்நிதிக்குத் தெற்கே தனிச் சந்நிதியாகவுள்ள தியாகராசர் சந்நிதி மிகு புகழ் வாய்ந்தது. திருமூலட்டானத்தின் பெயர் **பூங்கோயில்** என்பது. தலம் மூர்த்தியின் சிறப்புக்கு ஒத்த சிறப்புடையது. சோழ மன்னர்கள் முடிசூட்டு விழா கொண்டாடிய 5 நகரங்களுள் ஒன்று. ஏயர்கோன் கலிக்காமர், காடவர்கோன் கழற் சிங்கர், செருந்துணையார், தண்டியடிகள், திருநீலகண்ட யாழ்ப்பாணர், நமி நந்தியடிகள், விறன்மிண்டர் முதலிய நாயன்மார்கள் வாழ்க்கைத் தொடர்புடைய தலம். சுந்தரர்-பரவையார் வாழ்க்கைச் சிறப்புடைய அற்புதத் தலம்.

*புலம்பல் - தனிமையுற்று வருந்துதல். உயிர்களுக்கு இறைவனையன்றித் துணையாவார் ஒருவரும் இலர் எனத் தெளிந்துணர்ந்த மணிவாசகப் பெருமான் குருவாய் வந்து தம்மை ஆட்கொண்டருளிய இறைவனைப் பிரிந்துறைய நேர்ந்த தமது தனிமை நிலைக்கு மிகவும் வருந்துகின்றார். வருந்திய நிலையில் பாடப் பெற்றது இப்பனுவல். இதற்குச் 'சிவானந்த முதிர்வு—சிவானந்தம் பெறாவிச்சை' என்பது பழைய குறிப்பு.*

**கரைந்துருகும் பேரன்பு கழலிணைக்கே**
**கற்றாவின் மனம்போ லென்றும்**
**திருந்தும்வகை எனக்கருள்க எனக்கேட்டல்**
**திருப்புலம் பலாகும்.**

*என்பது திருப்பெருந்துறைப் புராண விளக்கம். இது திருவாரூரில் அருளிச் செய்யப் பெற்றது என்ற செய்தியினை,*

**'ஓங்கெயில்சூழ் திருவாரு ருடையானே'**

*என்று அடிகள் திருவாரூர்ப் பெருமானை முன்னிலையாக்கிப் போற்றும் திருக்குறிப்பினால் உய்த்துணரலாம்.*

*இப்பனுவலின்,*

**உற்றாரை யான்வேண்டேன்**
**ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்**
**கற்றாரை யான்வேண்டேன்**
**கற்பனவும் இனியமையும்**
**குற்றாலத் தமர்ந்துறையும்**
**கூத்தாவுன் குரைகழற்கே**
**கற்றாவின் மனம்போலக்**
**கசிந்துருக வேண்டுவனே (3)**

*[வேண்டேன் - விரும்பேன்; கற்றா - கன்றோடு கூடிய பசு]*

என்பது மூன்றாம் பாடல். வாதவூரடிகள் உற்றார், ஊரார், கற்றார், புகழ், கல்வி முதலிய உலகியல் தொடர்புகளை அறவே நீக்கி இறைவன் திருவடிக்கே நெக்கு நெக்குக் கசிந்துருகும் நேயம் மலிந்த நெஞ்சினராக விளங்கிய திறத்தினை இனிதுவிளக்கும் அநுபவமொழியாக இப்பாடல் திகழ்தலை அறிந்து இன்புறலாம்.

இப்பாடலில் 'குற்றாலம்' என்ற தலம் குறிப்பிடப் பெறுவதைக் கொண்டு சைவர்கள் இத்தலத்தை 'வைப்புத் தலம்' என்று கொள்வர்: வைணவர்கள் இதை மங்களா சாசனம் பெற்ற தலமாகவே கொண்டு போற்றுவர்.

'திருவாரூர் தேர் அழகு, திருவிடைமருதூர் தெரு அழகு' என்பது மக்களிடையே நிலவிவரும் ஒருவசனம். தமிழ் நாட்டுக் கோயில்களில் திருவிழாச் சிறப்பில் திருவாரூர் தேர் அழகிற்குப் பேர் போனது தேர்நிலையை விட்டுத் தேர் புறப்பட்டால் மறுபடியும் அந்த இடத்திற்கு வந்து சேர மாதக் கணக்காகும் என்பர். திருவிடைமருதூர் திருக்கோயிலின் வெளிச்சுற்றைச் சுற்றிவருதல் 'அசுவமேதப் பிரதட்சிணம்' என்பர். இது மிகவும் புனிதமான செயலாகக் ருதப்பெறுகின்றது.

திருவாரூருக்கு வந்த மணிவாசகப் பெருமான் மனுநீதிச் சோழனின் கதையைக் கேள்விப்பட்டிருப்பர். இந்த வரலாற்றை நினைவுறுத்தும் வகையில் கோயிலின் வட கிழக்குப் புறத்தில் ஒரு கல் தேரும், அதன் சக்கரத்தின் அடியில் ஒரு சிறுவனின் சிலையும் காணப்பெறுகின்றன. இவற்றின் அருகில் ஒரு பசுவும் இறந்து கிடக்கும் கன்றும் சிலை வடிவில் காணப்பெறுகின்றன. இவற்றையெல்லாம் அடிகள் கண்டிருக்கலாம். திருவாரூரில் பிறப்பதும், தில்லை யில் தரிசிப்பதும், காசியில் இறப்பதும் மோட்சம் என்பது ஒருவித ஐதிகம்; இதனை மக்கள் நம்புகின்றனர்.

தம்பிரான் தோழர் எனப்படும் சுந்தரர் திருத்தொண்டத் தொகை பாடியது இத்திருத்தலத்தில்தான். 'தில்லை வாழ்ந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' (7.9 : 1) என்பது முதற் பாடலின் தொடக்கம். இதுதான் சேக்கிழார் பெருமானுக்கு 'பெரியபுராணம்' பாடுவதற்கு வழி யமைத்துத் தந்தது. திருவாரூர் வந்த அடிகட்கு (அவர் மூவருக்கும் பிற்பட்டவராக இருந்திருந்தார்) சுந்தரர் பரவையாரை மணந்ததும், அவர்பொருட்டு இரவில் தூது போதுமான நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்திருப்பர். அடியார் பொருட்டு இறைவன் படுகின்ற பாட்டைக் கேட்டு மனம் நெகிழ்ந்து கண்ணீர் உகுத்திருப்பர்.

திருவாரூர் சப்தவிடங்கத் தலங்களில் ஒன்று என்பதை நாம் அறிவோம். 'விடங்கர்' என்பது கை புனையாது தானே தோன்றிய வடிவம். கல்லுளியால் பொளியப் பெறாத சுயம்பு மூர்த்தி என்பது இதன் பொருள். சோழமன்னர்களில் முன்னோன் முசுகுந்தச் சக்கரவர்த்தி. இவன் இந்திரனுக்குச் செய்த ஓர் உதவிக்குப் பதிலாகத் தியாகராச விடங்கமூர்த்தி கள் ஏழிடங்களில் ஏற்பட்டன. இந்த இடங்கள் திருவாரூர், நாகப்பட்டினம், திருநள்ளாறு, திருக்காறயில், திருக்கோயிலி, திருவாய்மூர், வேதாரண்யம் என்பவை யாகும். ஒவ்வோரிடத்திலும் சிவபெருமானின் வெவ்வேறு விதமான நடன உருவங்கள் காட்டப் பெற்றுள்ளன. திருவாரூர் திருக்கோயிலின் வெளிச்சுற்றில் ஏராளமான இலிங்கங்களைக் கண்டு மகிழலாம். இக்கோயில் சிற்பங் களுக்கும் பெயர் போனது. இத்திருத்தலத்தில் அடிகள் பெற்றது ஞானிசித்தியாகும். உவ்வூருக்குப் புறம்பே சுமார் ஒரு கல் தொலைவில் உள்ள '**தட்சிணாமூர்த்தி மடம்**' வரலாற்றுச் சிறப்பு மிக்கது. என் அறிய நண்பர் திரு. பா. அரங்கசாமி ரெட்டியார் (திருச்சி வழக்குரைஞர்) சில ஆண்டுகட்கு முன்னர் நடைபெற்ற மடத்துத் திருப்பணியில் பெரும்பங்கு கொண்டிருந்தது நினைவுக்கு வருகின்றது.

திருவாரூரிலிருந்து தில்லையை நோக்கி வரும் மணிவாசகர் கழுமலம்[10] என்ற தலத்திற்கு வருகின்றார். இதனை,

> கழுமல மதனில்
> காட்சி கொடுத்தும்[11]

என்ற அடியால் அடியலாம். இந்தப் பழம்பதியில்தான் **'பிடித்தபத்து'** என்ற மனுவலை அடிகள் அருளியதாக திருவாதவூரர் புராணம் செப்புகின்றது.

35. **பிடித்த பத்து** (37)[12]: இது திருத்தோணிபுரத்தில் அருளிச் செய்யப் பெற்ற தெய்வப் பனுவல். எல்லாத் திருவாசகப் பதிப்புகளிலும் தோணிபுரம் என்ற குறிப்பே காணப்பெறுகின்றது. தோணிபுரம் என்பது சீகாழி. இத் திருத்தலத்துக் கோயில் பிறகோயில்களினின்றும் சற்று வேறுபட்டது. மூலதானத்து மூலவர் இலிங்க வடிவமான **இரம்மபுரீஸ்வரர்.** கருவறையின் விமானம் இரண்டு கட்டுகளைக் கொண்டது. இரண்டாவது கட்டு 'மலை' என்று

---

10. **கழுமலம்** (சீகாழி) : விழுப்புரம்-கடலூர்-மயிலாடுதுறை இருப்பூர்தி வழியிலுள்ள சீகாழி இருப்பு நிலையத்திலிருந்து 1 கல் தொலைவிலுள்ளது. திருக்கோயில். ஞானசம்பந்தர் அவதரித்த தலம். இத்தலத்தில் கணநாத நாயனார் பயிற்சிக் கல்லூரி வைத்துத் தொண்டரை ஆக்கும் தொண்டு புரிந்துவந்தனர். பாடல் பெற்ற தலங்களில் இத்தலமே மிகுதியான பாடல்களைப் பெற்றுள்ளது. இத்தலத்திற்குப் பன்னிரண்டு பெயர்கள் உண்டு, அவை; கழுமலம், காழி, கொச்சைவயம், சண்பைநகர், சிரபுரம், தோணிபுரம், பிரமபுரம், புகலி புறவம், பூந்தராய், வெங்குரு, வேணுபுரம் என்பவை. இவற்றின் காரணங்கள் அருணாசல கவிராயர் இயற்றியுள்ள தலபுராணத்தில் தரப்பெற்றுள்ளன,

11. கீர்த்தித்திரு - அடி. 78.
12. ஆலவாயில் அருளிச் செய்யப்பெற்றதாக நம்பி திருவிளையாடல் குறிப்பிடும்.

வழங்கப்பெறுகின்றது. உலகமெல்லாம் ஒரு காலத்தில் பெருவெள்ளத்தில் அழிந்துபட்ட பொழுது நோவா என்பவனது தோணிமட்டிலும் மிதந்ததாக விவிலியத்தில் ஒருகதை உண்டு. அதுபோல ஒரு கதை தோணிபுரத்திற்கும் உண்டு. விவிலியக் கதையிலுள்ள பெரு வெள்ளம் போல் நம் நாட்டு ஐதிகத்தில் பிரளயகாலம் என்ற ஒன்றுண்டு. அப்போது உலகம் முழுவதும் பிரளய வெள்ளப் பெருக்கில் அழிந்து போக நோவாவின் கலம் போல இந்தச் சீகாழி என்ற தலம் தோணியாக மிதந்தது. இதனால் இத் தலம் தோணிபுரம் என்ற பெயர் பெற்றது. திருநாவுக்கரசர் தேவாரத்தின் "அலையும் பெருவெள்ளத்தன்று மிதந்த தோணிபுரம்" (4.82 : 6) என்ற தொடரில் இக்கதை குறிப்பிடப்பெறுகின்றது.

'பிடித்த பத்து'[13] என்பதற்கு முத்திக் கலப்புரைத்தல் என்பது பண்டையோர் குறிப்பு. அதாவது மற்றுமுள்ள ஆன்மாக்களுக்கு முத்தியின் சுகத்தைச் சொல்லியதாகும் என்பது இதன் பொருள். 'எல்லாத் தொடர்பையும் விடுத்து நின் திருவடிகளையே சிக்கெனப் பிடித்துக் கொண்டேன்' என இறைவனைப் போற்றிப் பரவும் நிலையில் அடிகள் அருளிய திருப்பதிகமே இப்பத்து. மற்றைப் பற்றுகளெல்லாம் அறவே நீங்குமாறு பற்றற்றான் பற்றினை இறுகப் பற்றிய பேரானந்தமாகிய முத்தியின்பத்தைப் புலப்படுத்தும் முறையில் அமைந்தது என்பது இப்பதிகம். இதனால் பிடித்த பத்து என்ற திருநாமம் பெறுகின்றது. "பிறவித்துயர் கெடுத்து விபுத்துவம் அளித்தலாலே 'நின்னைச் சிக்கெனப்

13. குதிரைச் சேவகனாய் வந்த இறைவன் பாண்டியன் பால் விடைபெற்றுப் போகின்றான். அப்போது வாதவூரடிகள் இறைவனுக்கு முன்னே சென்று அவருடைய திருவடிகளைப் பற்றிக் கொண்டு 'பிடித்தபத்து' என்னும் பனுவலைப் பாடியதாக நம்பி திருவிளையாடல் குறிப்பிடும்.

பிடித்தேன்' என்ற துணிவு உரைத்தல் பிடித்த பத்தாம்'' என்று திருப்பெருந்துறைப் புராணம் கூறும்.

இப்பதிகத்தில்,

**அம்மையே அப்பா ஒப்பிலா மணியே**
**அன்பினில் விளைந்தவா ரமுதே**
**பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்**
**புழுத்தலைப் புலையனேன் றனக்கு**
**செம்மையே யாய சிவபதம் அளித்த**
**செல்வமே சிவபெரு மானே**
**இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கெழுந் தருளுவ தினியே (3)**

[அன்பு - அன்பாகிய பாற்கடல்; பொய்ம்மை - பயனற்ற செயல்கள்; புலையன் - இழிதகைமையுடையவன்; செம்மை -நேர்மை]

**பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்**
**பரிந்துநீ பாவியே னுடைய**
**ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி**
**உலப்பிலா ஆனந்த மாய**
**தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த**
**செல்வமே சிவபெரு மானே**
**யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கெழுந் தருளுவ தினியே (9)**

[உவப்பு - அறிவு; புறம்புறம் திரிந்த - காக்கும் பொருட்டுத் தாயைப் போல நாலாபக்கங்களிலும் திரிந்த]

என்பன மூன்றாம், ஒன்பதாம் திருப்பாடல்கள். எல்லாப் பாடல்களும் 'சிக்கெனப் பிடித்தேன்; எங்கெழுந்தருளுவ தினியே' என்று இறுகின்றன. எல்லாப் பாடல்களும் பக்திச் சுவை விஞ்சி நிற்பன; பாடியவாய் தேனூறும் பான்மையுடன்

ஆழங்கால் பட்டால் பக்தியின் கொடுமுடியை எட்டிப் பிடிக்கலாம். காழிப்பிள்ளையார் திருவவதரித்த கழுமலத்தில் சில நாட்கள் தங்கிப் புறப்படுகின்றார் அடிகள்.

அடுத்து அருகிலிருப்பது 'தில்லை' என வழங்கப்பெறும் சிதம்பரம். விண்ணளாவிய கோபுரங்கள் அடிகள் கண்ணில் படுகின்றன. மிதிலையை நோக்கி விசுவாமித்திரருடன் இராமலட்சுமணர்கள் செல்லும்போது அந்நகரத்துக் கொடிகள் இராமனை விரைவில் வருமாறு அழைத்ததாகக் கம்பன் கூறுவான்.

**மையறு மலரின் நீங்கி**
**யாம்செய்மா தவத்தின் வந்து**
**செய்யவள் இருந்தாள் என்று**
**செழுமணிக் கொடிகள் என்னும்**
**கைகளை நீட்டி அந்தக்**
**கடிநகர் கமலச் செங்கண்**
**ஐயனை ஒல்லை வாவென்(று)**
**அழைப்பது போன்ற தம்மா.**[14]

(செய்யவள் - திருமகள்; கமலம் - தாமரை; கடிநகர் - காவலையுடைய நகரம்; ஐயன்-இராமன்; ஒல்லை - விரைவில்)

என்ற பாடலில் அற்புதமான வரவேற்பைக் கண்டு மகிழலாம். இம்மாதிரி அடிகளை அழைக்கின்றன தில்லைக் கோவிலின் திருக்கோபுரங்கள். அங்குப் போய்ச் சேர்ந்து விடலாம் என்ற விருப்பம் இருந்தாலும் குருநாதன் ஆணைப்

---

14. பாலகாண், மிதிலைக் காட்சி-1

படி இன்னும் சில தலங்களைச் சேவிக்க நினைத்து மேற்கு நோக்கி நடந்து திருமுதுகுன்றம்[15] அடைகின்றார்.

இந்தத் தலத்துத் திருக்கோயில் மிகப் பழமையானது. சுந்தரருக்கும் இத்தலத்திற்கும் உள்ள தொடர்பை அடிகள் நினைத்துப் பார்த்துப் பழமலைநாதரின் பெருங் கருணைத் திறத்தை எண்ணிப் பார்த்திருக்க வேண்டும். இங்கு மணிவாசகப்பெருமான் பழமலை நாதரைப் பற்றி எந்தப் பதிகமும் பாடியதாகத் தெரியவில்லை. பழமலை நாதரிடம் விடைபெற்றுக் கொண்டு திருவெண்ணெய் நல்லூர்[16]

---

15. **முதுகுன்றம்** (விருத்தாசலம்); விருத்தாசலம் டவுன்ரோடு என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. கோயில் சில அடிகளே உயர முள்ள கற்பாறையின்மீது அமைந்துள்ளது. இதற்கே பழமலை (விருத்தாசலம்) என்றும்பெயர் உண்டு. தலவிநாயகர் (ஆழத்துப் பிள்ளையார்) பல படிகள் இறங்கிச் சென்று சேரும் பள்ளமான இடத்தில் உள்ளார். இங்கிருந்து தண்ணீர் வெளிச் செல்ல வழி உள்ளது. திருக்கோயிலுக்கு எதிரே மணிமுத்தாறு. காசியில் இறந்தால் முக்தி என்பது போல இத்தலத்தில் இறந்தால் சாரூப முக்தி கிடைக்கும் என்று கந்த புராணம் கூறும். துறை மங்கலம் சிவப்பிரகாச அடிகள் முதலிய பெரியோர் கள் இத்தலத்தில் பெரிதும் ஈடுபட்டவர்கள். மாசி மகத் திருவிழாவின் 6 - ஆம் நாள் பகலில் நடை பெறும் இடப உற்சவம் புகழ் பெற்றது. காசியிலும் வீசம் பெரியதால் 'விருத்தகாசி' என்று இத்தலம் கூறப் பெறுவதுண்டு.

16. **வெண்ணெய் நல்லூர்** (திருவெண்ணெய் நல்லூர்) விழுப்புரம் - விருத்தாசலம் இருப்பூர்தி வழியில் இஃது ஒரு நிலையம். இங்கிருந்து 4 கல் தொலைவிலுள்ளது. இத்திருத்தலம், உமா தேவி யார் வழிபட்டமையால் 'அருட்டுறை' என்ற பெயரேற்றது இங்குள்ள திருக்கோயில். சுந்தரரின் திருமணத்தைத் தடுத்து அவரை ஆட்கொண்ட திருத்தலம் இது. சுந்தரரின் வழக்கை வென்ற

வருகின்றார் வாதவூரடிகள்: உமாதேவியார் வெண்ணெ யினால் கோட்டை கட்டி அதனிடையே பஞ்சாக்கினியை வளர்த்துத் தவம் புரிந்த காரணத்தால்[17] திருவெண்ணெய் நல்லூர் என்ற பெயர் பெற்றதாக ஒரு கதை வழங்கு கின்றது. திரு வெண்ணெய் நல்லூர் என்ற பெயரைக் கேட்ட வுடன் மூன்று நிகழ்ச்சிகள் நினைவிற்குவராமல் போகாது. சிவபெருமான ஒரு கிழ வேதியர் வடிவுகொண்டு வந்து ஓர் ஆவணப் பழவோலையைக் காட்டி சுந்தரரின் மணத்தைக் கெடுத்து ஆட்கொண்ட நிகழ்ச்சி இந்நிகழ்ச்சி மணிவாசகரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டிருக்க வேண்டும்; இறைவ னுடைய கருணை வெள்ளத்தை எண்ணி எண்ணி இரும்பூது அடைந்திருக்கவேண்டும். மணிவாசகர் காலத்திற்குப் பிறகு நடைபெற்ற இரண்டு நிகழ்ச்சிகளுள் ஒன்று, கம்பன் சடையப்ப வள்ளலின் ஆதரவால் இராமகாதையை அருளிச்செய்தது (11-ஆம் நூற்றாண்டு); மற்றொன்று, சைவசித்தாந்த சாத்திரமாகிய **சிவஞானபோதம்** என்ற முதல் சாத்திரத்தை அருளிச் செய்த மெய்கண்டதேவரின் சிவத்தொண்டு. (13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி). பன்னிரண்டு சூத்திரங் களாலான சிவஞான போதத்திற்கு விருத்தியாக ஏற்பட்டது **சிவஞான சித்தியார்**. இதை எழுதியவர் மெய்கண்டாரின் மாணாக்கர் அருணந்தி சிவாச்சாரியார். திருவெண்ணெய் நல்லூரில் திருக்கோயிலுக்கு மேற்கே தெருவோரத்தில் மெய்

---

இடம் 'வழக்கு வென்ற அம்பலம்' என்று கல் வெட்டில் குறிக்கப் பெற்றுள்ளது. இது திருக் கோயில் கோபுரவாயிலுக்கு எதிரிலுள்ள 100 கால் மண்டபம்.

17. பஞ்சாக்கினி தபசு - நான்குபக்கமும் தீ மூட்டி வைத்தும், தலைக்குமேல் பகலவன் வெப்பம் படும் படி செய்தும் புரியும் தவம். இஃது அசுர தபசு.

கண்டார் பெயரில் ஒருமடம் ஏற்பட்டுள்ளது. திருவெண்ணெய் நல்லூரில் மணிவாசகர் எந்தத் திருவாசகப் பதிகமும் பாடியதாகத் தெரியவில்லை.

திருவெண்ணெய் நல்லூரிலிருந்து **திருவண்ணாமலைக்கு**[18] வருகின்றார் மணிவாசகப் பெருமான். இங்கு சில நாட்கள் தங்கி அண்ணாமலையானை வழிபடுகின்றார்.

**அண்ணா மலையெம் அண்ணா போற்றி**
**கண்ணா ரமுதக் கடலே போற்றி**
—போற்றித்திரு. அடி 149-150

என்று வழிபட்டுக் கொண்டு **கச்சி ஏகம்பத்திற்கு**[19] வருகின்றார். காஞ்சித் தலத்தைப் பற்றி,

**தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்**
**திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி**
—திருப்பொன். 4

18. இங்கு அருளிச் செய்த இரண்டு பனுவல்கள் பற்றிய விவரங்களைத் தனிக் கட்டுரையில் (கட்டுரை-10) விளக்குவோம்.

19. **கச்சி ஏகம்பம்** (ஏகாம்பரேசுவரர் கோயில்): இது காஞ்சி இருப்பூர்தி நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவில் உள்ளது. பேருந்து நிலையத்திலிருந்து நகரப்பேருந்து மூலம் செல்வதே ஏற்றது. என்றும் அழியாத மாவடியின்கீழ் இறைவன் இருத்தலால் (ஏக+ஆம்ரன்=ஒருமாவின்கீழ் இருப்பவன்) ஏகாம்பரன் ஆயினன். காஞ்சிப்பதியிலுள்ள எல்லாச் சிவாலயங்களும் தேவார வைப்புத்தலங்களே: காஞ்சியிலுள்ள எந்தச் சிவாலயத்திலும் அம்மன் சந்நிதி இல்லை. இவ்வாலயங்களிலுள்ள சிவபெருமானுக்கு அம்பிகை காமாட்சி அம்மையாகத் தனிக்கோயிலில் உள்ளார். இவர் இரு நாழி நெல் கொண்டு 32 அறங்களை வளர்ப்பவர். காஞ்சியிலுள்ள இராஜ வீதிகள் போல் அகன்ற மாடவீதிகள் வேறு எந்தத் தலத்திலும் இல்லை. ஏழு திருமுறைகளிலும் கச்சி ஏகம்பனுக்குப் பதிகங்கள் உண்டு.

என்பது மணிவாசகப் பெருமானின் குறிப்பு: பண்டைக் காலத்தில் தமிழகத்தின் கலை, அரசியல், சமயம், நாகரிகம் யாவற்றிற்கும் சிறந்த இடமாகத் திகழ்ந்தது காஞ்சிபுரம் பௌத்தம், சமணம், சைவம், வைணவம் முதலிய சமயங் கள் சிறப்புடன் வளர்ந்த இடம் 'முத்திதரும் நகர் ஏழில் முக்கியமாம் கச்சி' என்று புகழப் பெற்றதலம். ஊரெல் லாம் திருக்கோயில்கள் நிறைந்துள்ளன. கும்பகோணத்தை யும் காஞ்சிபுரத்தையும் 'கோவில் நகரம்' (Temple City) என்று சொல்லி வைக்கலாம். இன்று சைவத்திற்கு ஏகாம்பர நாதர்கோயிலும், வைணவத்திற்கு வரதராசர் ஆலயமும் புகழ்பெற்றுத் திகழ்கின்றன. இரண்டும் விசாலமான பெரிய திருக்கோயில்கள். சோழர்கள், பல்லவர்கள் காஞ்சியைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டு வந்ததாக வரலாறு கூறும் பல்லவர்கட்கு பின் காஞ்சியைப் பிற்காலச் சோழர்கள், நாய்க்க மன்னர்கள், மராட்டிய மன்னர்கள், முகம்மதியர்கள் ஆகியோர் ஆண்டு வந்தனர். மாணிக்கவாசகர் இத்திரு நகரில் சில நாட்கள் தங்கியிருக்கக் கூடும். ஆனால் இங்குத் திருவாசகத்தின் பதிகங்கள் பாடியதாகத் தெரியவில்லை.

எல்லாத் தலங்களிலும் தம் ஞானாசாரியரைத் தேடித் திரிகின்றார். ஆனால் அந்தக் குரு எளிதில் அகப்படுவதாகத் தெரியவில்லை. ஓரிடத்தில் ஒரு பாதங் காட்டுவார்; பிறிதோரி டத்தில் சிறிது முறுவல் காட்டுவார்; மற்றோர் இடத்தில், காட்சிகொடுப்பதுபோலக் காட்டி அதையும் மறைப்பார். இதைத் திருவண்டப்பகுதியில் அடிகள் தெளிவாக விளக்கு வார். "புறநாட்டம் கொண்டு உன்னை வெளியுலகில் தேடுறவர்கட்கு (நான்முகன், திருமால்) நீ தென்படாது ஒளிந்திருப்பாய் (124-26); சாத்திர நூல்களில் சொல்லப் பட்ட நன்னெறிகளை ஒழுக்கங்களாகப் பழகியவர்கட்கும் நீ காட்சிக்கெட்டாதிருப்பாய் (127); பந்த பாசத்தால் நட்பும் பரிவும் கொண்ட உறவினர் மனம் வருந்தும்படி வெயிலில் கடுந்தவம் புரிகின்றவர்களாலும் காணப்பெறாதவன் ஆவாய்

(126-29); சாத்திர ஞானத்தைக் கருவியாகக் கொண்டு காண முயல்பவர்கட்கும் நீ அகப்படாய் (130); ஏதாவது ஓர் உபாயத்தைக் கொண்டு நின்னைக்கண்டு விடலாம் என்று முயல்பவர்கட்கு அந்த உபாயத்திலேயே நீ மறைந்திருந்து காட்சிக்கு எட்டாதவனாகின்றாய் (131-132); பேருக்கத்துடன் உன்னை நன்றாய்ப் பற்றிப்பிடித்து ஆராய்பவர்கட்கு நீ ஆணாக விளங்குகின்றாய்; அலியாகவும் விளங்குகின்றாய்; பண்பாடு அடைந்துள்ள மங்கையாகவும் பரிணமிக்கின்றாய்; பின்பு இவை யாவும் கடந்தும் உள்ளாய்(133-135); ஐம்பொறிகளை அடக்கி மலைகளிடையே சென்று உணவை அறவே துறந்து கடுந்தவம் புரிபவர்களின் அறிவுக்கும் எட்டாதவனாக உள்ளாய் (136-138); அனைத்துக்கும் ஆதாரமாய் முழுமுதற் பொருள் ஒருவன் உளன் என்று ஓர்ந்துகொள்ள இயலாத சிற்றறிவுக்கும் எட்டாதவனாய் உள்ளாய் (139); பண்டைய நூல்களிலும் பின்பு தோன்றிய நூல்களிலும் சொல்லப்பட்டுள்ள வழிகளைக் கையாண்டு முயன்றாலும் "ஒளிக்கும் சோரனாகத் திகழ்கின்றாய்" என்கின்றார். இங்ஙனம் அழுதழுது ஒவ்வொரு தலங்களிலும் 'வான்பழித்து இம்மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட' வள்ளலைத்தேடி வருகின்றார் சிதம்பரத்தை நோக்கி. வேதம் வளர்த்த வேத கிரியைக் கண்ணுற்றதும் அந்தத் திசையில் செல்லுகின்றார். ஆம், கணக்கிலாத் திருக்கோலம் காட்டும் கழுக்குன்றுக்குத் தான் வருகின்றார். கழுக்குன்றத் தமர்ந்தானை அப்பர் பெருமான் 'கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே' (6 92:1) என்கிறார்; சம்பந்தரும் போற்றியுள்ளார். சுந்தரர் படுகாடு கிடந்து வேதகிரியானிடம் பொன் பெறுகின்றார். 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்ற வழியைக் கண்ட மணிவாசகர் சும்மா திரும்பிப் போவாரா? குன்றக்கல்லும் உருகும் வண்ணம் கதறுகின்றனர்.

**36. திருக்கழுக்குன்றப் பதிகம்** (30);[20] ஏனைய பதிகங்கள் போலப் பொருளாலும் தன்மையாலும் பெயர் பெறாது பாடிய தலத்தால் பெயர்பெற்றது இத்தலத்துப் பதிகம் என்பது கருதத்தக்கது. இப்பதிகம் ஏழு திருப்பாடல்களைக் கொண்டது. இப்பதிகத்தைப் பற்றிய பழைய குறிப்பு 'குரு தரிசனம் – பசுத்துவம் கெட்டஇடம்' என்பது. ஆன்ம இயல்பு கெட்டு இருவினையொப்பு மலபரிபாகத்திற்கு ஏற்ற

20. **கழுக்குன்றம்** (திருகழுக்குன்றம்); செங்கற்பட்டிலிருந்து 9கல் தொலைவு. பேருந்து வசதி உண்டு. வடநாட்டார் பட்சிதீர்த்தம் என்பர். வேதமே மலையாதலின் வேதகிரி, வேதாசலம் என்ற பெயர்களும் உண்டு. மலையுச்சியில் அருமையாகக் குடைந்தெடுக்கப் பட்டது இத்திருக்கோயில். கருவறைச் சுவர்களில் பல அழகிய சிவபராக்கிரம வரலாறுகள் செதுக்கப்பெற்றுள்ளன. பாடல் பெற்ற தலங்களுள் இங்கும் திருப்பரங்குன்றத்திலுமே இன்றும் பூசிக்கப் பெறும் குகைக் கோயில்கள் உள்ளன. உச்சிவேளையில் இரண்டுகழுகுகட்கு நெய்யும் சருக்கரைப் பொங்கலும் 'பட்சி பண்டாரம்' என்பவரால் அளிக்கப் பெறுகின்றது. இராமாயண காலத்திலிருந்த சடாயு, சம்பாதி என்ற இருகழுகுகள் கழுக்குன்றத்துச்சியானை வழிபட்டதாகவும், இக்கழுகுகளின் வழித்தோன்றல்கள் இப்போது வருவன என்றும் கூறப் பெறுகின்றது. மாணிக்கவாசகருக்குக் 'கணக்கிலாத் திருக்கோலம் நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே' என்று கூறப்படும் அநுபவம் நிகழ்ந்த இடம். மலை வலம்வரும் வழியிலே இன்று மாணிக்கவாசகர் கோயிலாக உள்ளது. தேவார முதலிகள் மூவரும் தங்கியிருந்த இடம் 'மூவர் பேட்டை' என வழங்குகின்றது. உடல் நலிவுற்றவர் பலர் இத்தலத்தில் ஒரு மண்டலம் தங்கி நாடோறும் மலையேறிக் கழுக்குன்றத்துச்சியானின் அருளையும் சஞ்சீவிக் காற்றின் (Ozone) நன்மையையும் ஒருங்கே பெற்று மாலையில் மலைவலம் வந்து திடம் பெறுவதால் இத்தலம் நலப்பேருர் (Sanatorium) ஆகின்றது. அடிவாரத்தில் பக்தவத்சலர் ஆலயம் உள்ளது.

ஏற்ற குருதரிசனம் பக்குவம்வந்தபிறகே கிட்டும் என்பது அறியத்தக்கது. வாதவூரடிகள் திருக்கழுக்குன்றத்தினை யடைந்து அங்குக் கோயில் கொண்டிருக்கும் இறைவனை இறைஞ்சிப் போற்றித் 'திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலில் குருவாக எழுந்தருளியிருந்து மெய்ப்பொருளை உபதேசித் தருளிய குருவடிவத் திருக்கோலத்தை அடியேற்குக் காட்டியருள்வாயாக' என வேண்டி நின்றாராக; எம்பெருமானும் அடிகள் விழைந்த வண்ணமே திருப்பெருந்துறையில் தான் கொண்ட திருக்கோலத்தினை அடிகளுக்குக் காட்டியருளினான் என்பதும், அத்திருக்கோலத்தைக் கண்டு மகிழ்ந்த அடிகள் திருக்கழுக்குன்றப் பதிகம் என்னும் இப்பனுவலைப் பாடிப் போற்றினார் என்பதும் வரலாறு. இச்செய்தி,

நீதிமறை பரவுதிருப் பெருந்துறையில்
குருவடிவாய்த் திகழ்ந்த கோலம்
காதலொடுங் காட்டினையே யெனும்களிப்புப்
பகர்தல் திருக்கழுக் குன்றமாமே

என வரும் திருப்பெருந்துறைப் புராணத்தால் இனிது புலனாகும், தவிர, இப்பதிகப் பாடல்தோறும் பெருந்துறைப் பெருமானை முன்னிலைப் படுத்தி 'திருக்கோலம் நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே' எனஅடிகள் மனம் நைந்துருகிப் போற்றுதலாலும் அறியப்படுகின்றது.

இப்பதிகத்தில்,

பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு
மானுன் னாமங்கள் பேசுவார்க்
கிணக்கி லாததோ ரின்ப மேவருந்
துன்ப மேதுடைத் தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாம லென்வினை யொத்தபின்
கணக்கி லாத்திருக் கோல நீ வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே(1)

(பிணக்கு - மாறுபாடு; இணக்கு இலாத - ஒப்பற்ற; உணக்கு இலாததோர் வித்து-காயாத பிறவி விதை)

என்பது முதற்பாடல். காய்ந்து உலர்தல் இல்லாத நிலையில் உயிரோடு ஒற்றித்துள்ள ஆணவ மலமாகிய விதை மேல் விளைவெய்தித் துன்பங்களைப் பெருக்காதவாறு வறுத்த வித்துப்போல் ஆற்றல் குறைந்தடங்க, இருவினையொப்பு எய்த இறைவன் தம்மை ஆட்கொண்டருளிய செய்தி இதில் எடுத்துரைக்கப்படுகின்றது. ஈண்டு'உணக்கிலாததோர்வித்து' என்றது காய்ந்து உலர்தல் இல்லாத நிலையில் உயிர்களுடன் ஒற்றித்துள்ள ஆணவமலமாகிய விதையினை, மேல் விளையாமல் வினை ஒத்தலாவது, ஆணவமலமாகிய அவ்விதை வறுத்த வித்து போல் முளைக்கும் ஆற்றல் கெட்டு அடங்க, உயிர் இன்பதுன்பங்களை ஒன்றாக ஏற்று நுகரும் இருவினை யொப்பு அடங்கப் பெறுதல்.

சிவபெருமான் மதுரையில் தன்னை அன்பினால் வழி பட்டுப் பரவி வந்தி என்னும் செம்மனச் செல்வியின் பொருட்டு அவ்வம்மையார் தந்த பிட்டினைக் கூலியாகப் பெற்று மண் சுமந்த அருட்செய்தி (2) இறைவன் தனது கலக்கத்தைமாற்றிக் கண்ணீர்துடைத்து அருள் சுரந்த பெருமை (3), திருப்பெருந்துறையில் பிறவிப் பெருங்கடலைக் கடத் தற்கரிய தோணியாகத் தமக்கு வாய்த்த பெற்றி (4) கொழுநனே சிவன் எனக் கொண்டு போற்றும் வண்ணம் பேதமில்லதோர் கற்பளித்த பெருமை (6), இறைவன் தன்னை வழிபட்ட இயக்கிமார் அறுபத்து நால்வரும் தன் அருட்பண்பாகிய எண் குணங்களையும் பெற்றுத் திருவினராய் விளங்கச் செய்தருளிய சீர்த்தி (7) ஆகியவற்றை அடிகள் இத் திருப்பதிகத்தில் உளமுருகிப் பரவிப் போற்றியுள்ளமை நினைக்கத்தக்கவை. பாடல்களை உள்ளமுருகிப் படித்து அநுபவித்தால் இக்காட்சிகள் மனத்திரையில் அமைந்து நம்மைப் பக்தியின் கொடுமுடியை எட்டச் செய்யும்.

# 10. அண்ணாமலை அருளிச் செயல்கள்

**வா**தவூரடிகள் பல திருத்தலங்களையும் வழிபட்டுக் கொண்டு திருவெண்ணெய் நல்லூரிலிருந்து திருவண்ணாமலைக்கு[1] வருகின்றார். இங்குள்ள இறைவனை வழிபட்டுச் சில நாட்கள் தங்குகின்றார். இந்நிலையில் மார்கழித் திங்கள் வருகின்றது. இளமகளிர் வைகறைப்பொழுதில் துயில் உணர்ந்தெழுந்து ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும் சோதியாகிய இறைவனது பொருள்சேர் புகழினைப் போற்றியுரைக்கின்றனர். மகளிர் தம்மையொத்த மகளிரைத் துயில்எழுப்பிக் கொண்டு சென்று பொய்கையில் நீராடி அண்ணாமலையானை அன்பினால் பாடிப் போற்றி மார்கழி நீராடலாகிய நோன்பினைச் சிறப்புறக் கொண்டாடுகின்றனர். இந்த அழகிய காட்சியைக் காண்கின்றனர் மாணிக்கவாசகப் பெருமான். இம்மகளிர் வைகறைப் பொழுதில் ஒருவரையொருவர் எழுப்பிச் சென்று ஆர்த்த பிறவித்துயர் கெடப் பூத்திகழும் பொய்கையில் நீராடி இறைவனை ஏத்தி வழிபடும் நிலையில் அடிகள் அம்மகளிர் கூறும் உரைகளாக

---

1. **அண்ணாமலை** (திருவண்ணாமலை) : விழுப்புரம் - காட்பாடி இருப்பூர்தி வழியில் திருவண்ணாமலை நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவு. பஞ்சபூதங்களுள் இது தீயைக் குறிக்கும். திருவாசகம் கூறும் ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி (திருவெம்-1) உருவே இப்போது மலை உருவாயுள்ளது. மலையின் உயரம் கடல் மட்டத்திற்கு மேல் 2568 அடி. அருணகிரிநாதர் வாழ்ந்து முத்தி பெற்ற தலம். திருவெம்பாவை, திருவம்மானை இவற்றை மணிவாசகர் பாடியது இத்திருத்தலத்தில். அருணகிரி அந்தாதி, அண்ணாமலை வெண்பா சோணசைலமாலை, அருணைக் கலம்பகம் ஆகியவை இத்தலத்தைப் பற்றியவை. திருக்கார்த்திகை அண்ணாமலையார் தீபம் புகழ் பெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் தீபத்தைச் சேவிப்பர். அண்ணாமலை நடு நாட்டுத்தலம்.

'திருவெம்பாவை' என்னும் பனுவலைப் பாடியருளுகின்றார். இவ்வாறு கூறுவர் திருவாதவூரடிகள் புராண ஆசிரியர் கடவுண் மாமுனிவர்.

**37. திருவெம்பாவை (7) :** இப்பனுவல் இருபது பாடல்களையுடையது. இப்பாடல்கள் யாவும் மகளிர் ஒருவரையொருவர் 'எம்பாவாய்' என அழைத்துக் கூறும் முறையில் அமைந்திருத்தலால் 'திருவெம்பாவை' என்பது இதற்குரிய பெயராகின்றது. மகளிர் ஒருவரையொருவர் துயிலுணர்த்தி அழைத்து நீராடி இறைவனைப் போற்றும் முறையில் அமைந்த இப்பனுவலைப் **'பாவைப் பாட்டு'** என வழங்குவர் பேராசிரியர்.[2] பெரும்பற்றப் புலியூர்நம்பியும்'திருந்து பூவல்லியுந்தி தோணோக்கம் சிறந்த பாவை' என இத்திருவெம் பாவையைப் பாவை என்ற பெயராலேயே குறித்துள்ளார்.[3] திருமாலடியாராகிய அன்னை ஆண்டாள் அருளிய பனுவல் **'திருப்பாவை'** என வழங்கப்பெறுதல் இப்பழைய வழக்கினை நினைவுபடுத்துவதாகும்.

'திருவெம்பாவை' என்ற தொடர் திரு+எம்+பாவை எனப் பிரிந்து விளங்கும். திரு—தெய்வத்தன்மை: எம்—உயிர்த் தன்மை; பாவை – வழிபாட்டிற்கு அமைந்த திருவுருத் தன்மை. எனவே, தெய்வத் தன்மை வாய்ந்த திருவருள் (பார்வதி தேவி) மகளிரை இயைந்து இயக்குவதோடு அவர் கட்குத் துணை நாடித்தரற்கு அவர்கள் அநுட்டிக்கும் நோன்பினைப் பாவைத் திருவுருவில் நின்று ஏற்றுப் பயனளிக்கின்றாள் என்பது 'திருவெம்பாவை'யின் திரண்ட பொருள் என்று கொள்ளலாம். இத்தகைய நலம் வாய்ந்த இத்திருத்

---

2. தொல். செய்யு-149ஆம் நூற்பாவின் உரை காண்க.
3. திருவெம்பாவை திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பெற்றதாகக் கருதுவர் பெரும்பற்றப் புலியூர் நம்பி.

தொடரை இடைவிடாது நினைவு கூர்தற்பொருட்டு ஒவ்வொரு பாடல் இறுதியிலும் 'ஏலோரெம்பாவாய்' என்ற தொடரை அடிகள் அமைத்தருளியுள்ளனர். இதில் ஏலும், ஓரும் அசைகள். பாவாய் - விளி; பாவை நோன்பு நோற்கும் பெண்கள் 'பாவை' எனப்பெற்றனர். இது தொண்டர், தொழும்பர், பணியாளர் என்னும் பெயர்கள் போன்ற தாகும். இது வினையாலணையும் பெயர். பிறப்பால் வரும் பெயர் சிறப்புடையது. உருவினைப் பொறுத்தது பிறப்புப் பெயர்; உணர்வினைப் பொறுத்தது சிறப்புப் பெயர்.

திருவெம்பாவைக்குச் 'சக்தியை வியந்தது' என முன்னோர் கருத்துரை குறிப்பர். சக்திகளாவார் :

1. அம்பிகை
2. கணாம்பிகை
3. கௌரி
4. கங்கை
5. உமை
6. பராசக்தி
7. ஆதிசக்தி
8. ஞானசக்தி
9. கிரியா சக்தி

என ஒன்பதின்மர் எனவும்,

1. மனோன்மணி
2. சர்வபூத தமனி
3. பலப்பிரமதனி
4. பலவிகரணி
5. கலவிகரணி
6. காளி
7. இரௌத்திரி
8. சேட்டை
9. வாமை

என ஒன்பதின்மர் எனவும் வெவ்வேறு பெயரிட்டு வழங்குவர். இச்சக்திகளுள் முன்னின்றவர் பின்னுள்ளவர்களை எழுப்பி முறையே உலகத்தோற்றமும், நிலையும், நீக்கமும் ஆக்கமுறச் செய்யும் அருளிப்பாட்டின் திருக்குறிப்புகள் முதல் எட்டுத் திருப்பாட்டுகளாகும். இங்ஙனம் ஒரு சக்தி ஒரு சக்தியை எழுப்புதலே திருவெம்பாவையின் தத்துவக் கருத்தாகும்.

திருவெம்பாவையில் முதல் எட்டுத் திருப்பாட்டுகளும் 5 முதல் 12 வரை அகவையுள்ள கன்னிப்பெண்கள் ஒருவரை யொருவர் எழுப்புவதைக் குறிக்கின்றன. ஆண்டவன் நினை வுடன் செய்யும் எதுவும் ஆண்டவன் திருத்தொண்டேயாகும். அஃது அவன் பண்புமாகும். அதனால் எண் பேராற்றலையும் எண்குணத்தினையும் குறிப்பவையுமாகும். 9-ஆம் பாடல் அருவமும், 10-ஆம் பாடல் அருவுருவமும், 11-ஆம் பாடல் உருவமும் குறிப்பனவாகும். 12-ஆம் பாடல் முத்தொழிலைக் குறிப்பது. 13-ஆம் பாடல் அம்மையப்பராய்—தையல் பாகராய்—ஒரு திருமேனியில் மருவும் திருவுருவமும், சிவதீக் கையும் குறிப்பது. 14,15 - ஆம் பாடல்கள் முறையே மறைப்பும், அருளலும் குறிப்பன. 16-ஆம்பாடல் அருளொப்பும் பொதுப்பயனும் குறிப்பது. 17-ஆம் பாடல் பேரின்பம் குறிப்பது. 18-ஆம் பாடல் திருவடியினைக் குறிப்பது. 19-ஆம் பாடல் சிறப்புப் பயன் குறிப்பது. 20-ஆம் பாடல் ஐந்தொழில் முதல்வனே அனைத்துக் காவலன் என்பதைக் குறிப்பது. இத்திருவெம்பாவை 'வாழ்க அந்தணர்' (3.54) என சீகாழித் துரையால் அருளிச்செய்யப்பெற்ற 'திருப்பாசுரம்'போல் தனிச்சிறப்பு வாய்ந்தது என்று சொல்லலாம்.

மக்களுக்குரிய ஓராண்டு வானோர்க்கு. ஒருநாள் ஆடி முதல் மார்கழி முடியவுள்ள ஆறு திங்களும் இரவு; தை முதல் ஆனி முடிய ஆறு திங்களும் பகல். இவ்வகையில் மார்கழித் திங்கள் வானோர்க்கு வைகறைப் பொழுதாகக் கருதப் பெறுகின்றது, கூத்தப் பெருமான் திருவுருவில் திகழும் திருவாதிரை நிறைமதியுடன் கூடி விளங்கும் சிறப்புடைய திருநாளாக அமைவது மார்கழித் திங்களில் ஆதலின், மார்கழித் திருவாதிரைத் திருநாள் சிவபெருமானுக்கு உரிய திருநாளாகக் கொண்டாடப்பெறுகின்றது. மார்கழித் திருவாதிரையில் தொடங்கி தைத்திங்களில் நிறைவுபெறும்

மகளிர் நோன்பு சங்ககாலத்தில் 'தைந் நீராடல்' என வழங்கியது (பரிபாடல் - 11). இதுவே பிற்காலத்தில் 'மார்கழி நீராடல்' என வழங்கப்பெற்றுள்ளது. இதனை மணிவாசகப் பெருமானும் ஆண்டாளும் மார்கழி நீராடல் என்றே வழங்கியுள்ளனர். நீராடலாகிய இந்நோன்பின் நிறைவு தைத்திங்களில் முற்றுப் பெறுதல் கருதித் 'தைந்நீராடல்' எனச் சங்கப் புலவர்களும், நோன்பின் தொடக்கம் 'மார்கழி நீராடல்' எனப் பின்வந்தோர்களும் குறிப்பிட்டுள்ளனர். எனவே, சங்கச் செய்யுட்களில் குறிக்கப் பெற்றுள்ள தைந்நீராடலும், திருவெம்பாவையிலும் திருப்பாவையிலும் குறிக்கப்பெற்றுள்ள மார்கழி நீரர்டலும் ஒருநோன்பினையே குறித்து வழங்கும் இருவேறு பெயர்கள் என்பது தெளிவாகும்.

**பாவை நோனபு :** 'வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம், ஈண்டு முயலப் படும்' (குறள் - 265) என்ற வள்ளுவர் பெருமானின் வாக்குப்படி தொன்றுதொட்டுத் தமிழ்ச் சான்றோர் எல்லாச் செயலையும் இறைவனைத் தொழுதே செய்துவரும் வழக்கமுடையவர். சைவர்கள் சிவபெருமானையும்,வைணவர்கள் திருமாலையும் தொழுதே செயல் புரிவர். இவர்கள் தம்மையொத்தாரையும் அவ்வழி யொழுகுமாறு பணித்து உடனின்று துணைபுரிந்து ஊக்கி யும் வந்துள்ளனர். அம்முறையில் நோற்று வருவதே இப் பாவை நோன்பும். மணமாகாத (கன்னிப்) பெண்கள் மார்கழித் திங்களில் மேற்கொள்ளும் ஒருவகை நோன்பே பாவை நோன்பாகும். இந்த நோன்பு சைவமரபில் மார்கழித் திங்களில் திருவாதிரைக்குப் பத்து நாட்களுக்கு முன் தொடங்கித் திருவாதிரையன்று முடிவுபெறும். பன்னிரண்டு வயது முடிவதற்குள் பெண்களுக்குத் திருமணம் முடிப்பது பண்டைக்கால வழக்கம், நற்குணங்கள் எல்லாம் நிறைந்த

அழகன் ஒருவனைத் தனக்குக் கணவனாகப் பெறவேண்டும் என்பது ஒவ்வொரு மகளுக்கும் இயற்கையாகவே எழும் விருப்பமாகும். இவ்விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக நோற்கப்படும் நோன்பே பாவைநோன்பாகும். எல்லாம் வல்ல இறைவனுடைய திருவருளைச் சக்தி என்றும், அவனுடைய திருவடி என்றும் சரித்திரங்கள் பேசும். இச் சக்தியைக் கௌரி என்ற பெயரால் வழிபட்டுத் தனக்குச் சிறந்த நாயகனை அருளவேண்டும் என்று இந்த நோன்பு நோற்கும் காலத்தில் ஒவ்வொரு கன்னிப் பெண்ணும் அச் சக்தியை வேண்டிக் கொள்ளுவாள். இதற்காக அவள் வைகறைப் பொழுதில் துயிலுணர்ந்து எழுந்து கொள்ள வேண்டும்; பிறகு தூய நுண் மணலால் கௌரியின் உருவம் செய்து வைத்துப் பூசிக்க வேண்டும். இவ்வாறு பத்து நாட்கள் நோன்பு நோற்றால் கௌரியினிடமிருந்து அவள் விரும்பிய பயனைப் பெறலாம்.

திருப்பாவை பிறந்த கதை வேறு. பெண்மைக்குரிய காதலைத் தெய்வக் காதலாக்கியவள் ஆண்டாள். அவளது தூய்மையான உள்ளத்தில் ஊற்றெடுத்த காதல்தான் 'திருப்பாவை' வடிவம் பெற்றது. சிறுவயது முதற் கொண்டே கண்ணனையே தன் நாயகனாக அடைய வேண்டும் என்ற கருத்து இவள் உள்ளத்தில் கருக்கொண்டு வளர்ந்து வருகின்றது. அந்தக் காதலனை எப்படியும் அடைந்தே தீரவேண்டும் என்ற எண்ணம் இவள் இதயத்தில் அணையாத விளக்காக எரிந்து கொண்டுள்ளது. அந்தக் காதலனை மறக்கவும் முடியவில்லை; அவனை விட்டுத் தப்பிப் போகவும் முடியவில்லை. அந்த அழகுத் தெய்வம் இவளுடைய அகக்கண்ணுக்குத் தரிசனம் ஆகவில்லை. அந்த அவதார காலத்தில் தான் பிறக்கவில்லையே என்று ஏங்குகின்றாள். இது முடியக் கூடிய செயல் என்று அவளுக்குத்

தோன்றவில்லை. அந்தக் கண்ணன் பிறந்து வளர்ந்து மாடு மேய்த்த இடங்களையாவது கண்ணாரக் கண்டு ஆறுதல் அடையவும் அவளுக்கு வாய்ப்பில்லை. இந்நிலையில் அவளுக்குப் பாவனா சக்தி (Fantacy) துணை செய்கின்றது.

பக்தி மனமும் குழந்தை மனமும் ஒரு நிலையில்தான் இருக்கும். குழந்தைகள் கற்பனையுலகில் சஞ்சரித்துப் பல வகை விளையாட்டுகள் விளையாடுவதை நாம் பார்த்திருக் கின்றோம். குழந்தையைப் போலவே ஆண்டாளும் தன்னைக் கண்ணன் அவதரித்த காலத்தில் இருந்த கோபியாகவே எண்ணிக் கொள்ளுகின்றாள். தான் பிறந்த சிரீவில்லிப் புத்தூரைக் கோகுலமாகவே பாவித்துக் கொள்ளுகின்றாள்; அவ்வூரிலுள்ள வடபெருங்கோயில் நந்தகோபர் மாளிகையாக மாறுகின்றது. அக்கோயிலிலுள்ள வடபத்திரசாயி எனப்படும் ஆலிலைப்பள்ளியான் கண்ணனாகவே காட்சி அளிக்கின்றான். இந்தப் பாவனை ஆற்றலாகப் பிறந்ததுதான் திருப்பாவை என்ற இசைத்தமிழ்; பாடியவாய் தேனூறும் பக்திச் சுவைப் பாசுரங்களைக் கொண்ட தெய்வப் பாமாலை. பாவனை ஆற்றலின் முதிர்ச்சியால் கோகுலத்தில் பாவை நோன்பு நோற்கும் கோபியருள் ஒருத்தியாகிவிடுகின்றாள் ஆண்டாள். இந்தப் பாடல்களைச் சுவைத்துப்பாடும்பொழுது சொற்கள் மறைந்து சொற்கள் குறிக்கும் ஓசையும் மறைந்து நம்மையும் அக்காலங்களுக்கு இழுத்துச் சென்றுவிடுகின்றன! ஆகவே தான் வைணவர்கள் இப்பிரபந்தத்தில் சிறப்பாக ஈடுபாடு கொண்டு மார்கழி மாதத்தில் மாதம் முழுவதுமே இதனை ஓதிவருகின்றனர். படிக்காதவர்களும் ஓதக் கேட்டு அநுபவிக் கின்றனர். நாளொன்றுக்கு ஒரு பாசுரமாக முப்பது நாட் களுக்கு முப்பது பாசுரங்கள் ஓதுவது வழக்கமாக இருந்து வருகின்றது. இராமாநுசருக்கு இப்பிரபந்தத்தில் ஈடுபாடு அதிகம் உண்டு. இதனை அவர் ஓதாத நாளே இல்லை;

இதனால் அவருக்குத் 'திருப்பாவை ஜீயர்' என்ற பெயரும் வழங்கிவருகின்றது. இது நிற்க.

மாணிக்கவாசகர் திருவண்ணாமலையில் தங்கியிருந்த போது கன்னிப்பெண்கள் இவ்வாறு நோன்புநோற்பதைக் கண்ணாரக்கண்டு அநுபவித்தவர். அப்பெண்கள் புகன்றதாக அடிகள் திருவெம்பாவை பாடியருளினார் என்று கூறுவர் திருப்பெருந்துறைப் புராணமுடையார்.

**மலவிருள்உற்று உறங்காமல்**
**மன்னுபரி பாகர் அருள்**
**செலமுழுக வ்ருகவெனச்**
**செப்பல் திருவெம்பாவை**

என வரும் பாடற்பகுதியில் இத்திருக் குறிப்பைக் காணலாம். எனவே, இந்நோன்பு மணிவாசகர் அல்லது ஆண்டாள் காலத்தில் புதிதாகத் தோன்றிய வழக்கு என்று கொள்வதற்கில்லை' 'வெம்பாதாக வியனிலை வரைப்பென, அம்பா ஆடலின் ஆய்தொடிக்கன்னியர் (பரிபாடல்-11; அடி80-81), என்பதனாலும், தொல்காப்பியச் செய்யுளியலுக்கு உரை வகுத்த பேராசிரியர் (நூற்பா-149) 'பாவைப்பாட்டு' என்று குறிப்பிடுவதாலும் பாவை நோன்பும் பாவை இலக்கியமும் தொன்றுதொட்ட சிறப்பினைஉடையன என்று கொள்ளுதல் வேண்டும்.

இருபாலாரும் இறைவனது திருவருள் பெற்று உய்யும் நோக்குடன் ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும் சோதியாகிய இறைவன் ஒருவனையே மனம் மொழி மெய்களால் இறைஞ்சிப் போற்றும் ஒருமைநிலை வளர இளமகளிர் வைகறையிலே துயிலுணர்ந் தெழுந்து தம் தோழியர்களையும் எழுப்பிக் கொண்டு பொய்கையில் நீராடி இறைவனது பொருள் சேர்புகழை வாயாரப்பாடிப் போற்றும்

முறையில் வாதவூரடிகள் இத்திருவெம்பாவையை அருளிச் செய்துள்ளார். இப்பிரபந்தத்தில் இளமகளிர் தம்தோழியர் பால் வைத்த அன்பும் இறைவன் திருவடிகளில் தாம் வைத்துள்ள பக்தித் திறமும் வளர ஒருவரையொருவர் துயிலுணர்த்தும் முறையும் தெளிவாக விளக்கப் பெற்றுள்ளன. நகைச்சுவை பொருந்த உரையாடும் நிலையிலும்இறைவன்பாற் கொண்ட அன்பின் திறமே மேம்பட இனிமையாகப்பேசும் மொழித்திறமும், பொழுது புலர்வதற்கு முன் பூத்திகழும் பொய்கையில் குடைந்தாடி அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சி அம் முதல்வனைப் பண்ணார் தமிழால் பாடிப் போற்றும் பாங்கும், உலகம் வெயிலாலும் பனியாலும் வெம்பாது நலம்பெற வேண்டி உலகம் ஈன்ற அன்னையாகிய இறைவியின் திருவருளே என்ன மழையைப் பெய்யப் பணிக்கும் மனவளமும், இறைவன்பால் அன்புடையவரையே தாம் கணவராகப் பெறுதல் வேண்டும் எனத் தம் மணவாழ்க்கை குறித்து இறைவனைப் போற்றும் மனத்திட்பமும், மன்னுயிர்கள் உய்தற்பொருட்டு ஐந்தொழில் திருக்கூத்தியற்றும் இறைவனது அருளியல்பினைப் போற்றி அம்மகளிர் தாம் மேற்கொண்ட நோன்பினை நிறைவு செய்து கொள்ளும் முறையும் இப்பனுவலில் நன்கு விளக்கம் அடைகின்றன.

**இரண்டு பாவைகளிலுமுள்ள பொதுக் கருத்துகள் :** திருவெம்பாவை, திருப்பாவை ஆகிய இரண்டு பனுவல்களும் வெவ்வேறு தெய்வ வழிபாடுடையாருக்கு உரியவைகளாக இருந்தபோதிலும், இரண்டும் ஒரே பொதுக்குறிப்பு உடையவைகளாக இருப்பது நாம் கவனித்தறிய வேண்டியது ஒன்று. இக்குறிப்புகள் யாவை என்பதை இனிக் காண்போம்.

**முதலாவதாக :** இரண்டு பனுவல்களிலும் உள்ள பாடல் களை மேம்போக்காக நோக்கும்பொழுதே ஒவ்வொரு பாடலும் 'எம்பாவாய்' என்று முடிந்து நிற்பதை அறியலாம்.

இத்தொடர் மகளிர் மார்கழி மாதத்தில் விடியற்காலையில் நீராடி பிறகு தமது வழிபாட்டுக்கென ஈரமணலால் அமைத்த தேவியின் உருவத்தைக் குறிப்பதாகும் என்று ஊகித்தற்கு இடம் உண்டு. இந்த ஊகம் பொருந்துவதானால் 'பாவை' என்பது பெண் தெய்வத்தின் பிரதிமையைக் குறிப்பதாகும் என்று பேராசிரியர் மு. இராசவய்யங்கார் அவர்கள் கருதுவது பொருந்துவதாகின்றது.[3] 'நாமும் நம்பாவைக்குச் செய்யும் கிரியைகள் கேளீரோ' (திருப்.2), 'நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்' (ஷை-3), 'பிள்ளைகள் எல்லாரும் பாவைக்களம் புக்கார்' (ஷை-13) என்ற தொடர்களால் தேவியின் உருவம் ஒன்று இருந்திருக்க வேண்டும் என்பது அவர்கள் கருத்தாகும். இது சரியான ஊகம் என்றே தோன்று கின்றது. அன்றியும், 'ஏலோரெம்பாவாய்' என்பது இன்னொலியோடு பாவை தெய்வத்தை நினைவுபடுத்தற்குப் பயன்படும் மந்திரஒலி என்று கொள்ளலும் பொருந்தும்.

இரண்டாவதாக: மார்கழி மாதத்தில் மாதர்கள் வைகறையில் நீராடுவர் என்ற செய்தியைத் திருப்பாவையின் முதற்பாசுரம்,

**மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்**
**நீராடப் போதுவீர்! போதுமினோ நேரிழையீர்!**

என்று குறிப்பிடுகின்றது. இதே நீராட்டம் திருவெம்பாவை யின் இறுதிப் பாட்டில்,

**போற்றியாம் உய்யஆட்**
**கொண்டருளும் பொன்மலர்கள்**
**போற்றியாம் மார்கழி**
**நீராடல்**

3. ஆராய்ச்சித் தொகுதி-மார்கழி நோன்பாகியதை நீராடல் (கட்டுரை-13) காண்க.

என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. மார்கழி மாதத்தில் கதிரவன் தோன்றுவதற்கு முன்னர் மகளிர் நீராடி தேவி வழிபாடு செய்து நோற்கும் நோன்பு குறித்துச் சைவர்களால் ஒரு தத்துவம் கூறப் பெறுகின்றது. 'மக்களுக்கு ஓராண்டு வானோர்க்கு ஒருநாள்' என்ற கருத்துப்படி மார்கழித் திங்கள் வானோர்க்குரிய வைகறைப் பொழுதாகக் கருதப்படுகின்றது. இந்தக் காலம் படைப்புக்கு ஏதுவாக இருக்கும். இக்காலத்தில் மனோன்மணி முதல் வாமை ஈறாகவுள்ள நவசக்திகளும் ஒருவரையொருவர் பிரேரிக்க அநந்ததேவராலே அசுத்த மாயை காரியப்பட்டு மண்ணீறான பிரபஞ்சங்கள் உண்டாகும். இங்ஙனம் ஒரு சக்தி ஒரு சக்தியை எழுப்புதலே திருவெம்பாவையின் தத்துவக் கருத்தாகும். வைணவர்கள் பகவத்கீதையில் கண்ணன் தன்னை மாதங்களில் மார்கழியாகக் கூறியிருப்பதைத் தத்துவமாகக் கொண்டுள்ளனர். 'சிறந்த பொருள்களிளெல்லாம் சிறந்த பொருள் பரம் பொருளாகிய நானே' என்று கூறிய கண்ணன் கூற்றை ஆதாரமாகக் கொண்டுதான் வைணவர்கள் மார்கழி மாதத்தைச் சிறப்பாக மதிக்கின்றனர் என்று கொள்ள வேண்டியுள்ளது.

**மூன்றாவதாக** : பாகவதத்தில் தசமஸ்கந்தத்தில் 21-ஆம் இயலில் கண்ணன் கோபியரின் துயில் கவர்ந்த வரலாறு கூறப்பெறுகின்றது. அதில் மார்கழி நோன்புபற்றிய முக்கியமான செய்திகள் வருகின்றன. மகளிர் மார்கழி மாதத்தில் காத்தியாயனி விரதம் தொடங்கி அத்தேவியின் உருவம் அமைத்து ஒருமாத காலம் பூசை செய்துவரும் வழக்கம் இருந்துவந்ததாகத் தெரிகின்றது, இவ்விரத காலங்களில் கோகுலத்துப் பெண்கள் வைகறையில் துயிலெழுந்து கிருஷ்ண சரிதங்களைப் பாடிக் கொண்டு நீராடுவர் என்று தெரிகின்றது. இதே கருத்தைத்தான் பெரியவாச்சான் பிள்ளையும் தமது வியாக்கியானத்தின் அவதாரிகையில்

குறித்துள்ளார். ஆனால், பாகவதத்திலுள்ள ஆதாரத்தை அவர் குறிக்கவில்லை. திருவெம்பாவையின் பாடல்களை நோக்கும்பொழுது, மார்கழி மாதத்தில் கோகுலத்துப் பெண்கள் ஒருவரையொருவர் அதிகாலையில் துயிலெழுப்பி நீராடிக் கண்ணனைக் கணவனாக அடையவேண்டியது போலவே, திருவண்ணாமலையிலுள்ள பெண்கள் ஒருவரையொருவர் அதிகாலையில் துயிலெழுப்பி நீராடிச் சிவனடியாரைத் தம் கணவர்களாக அடையவேண்டும் என்று நோற்பதை உணர்த்துகின்றது. ஆகவே, இரண்டு பிரபந்தங்களும் காத்தியாயனி தேவியின் விரதத்தை உணர்த்துவதாகவே கொள்ளலாம். பதினான்காம் திருவெம்பாவையில்

**பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்**
**பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய் (14)**

என்று பராசக்தியைச் சிறப்பாக வணங்கியுள்ளனர். முன்னிக் கடலை (திருவெம் 16) என்ற பாடலில் பராசக்தி உவமையாகக் கூறப்பெற்றுள்ளாள். அன்றியும், திருவெம்பாவையின் தலைப்பில் 'சக்தியை வியந்தது' என்ற குறிப்பும் காணப்பெறுகின்றது. இம்மூன்று காரணங்களாலும் திருவெம்பாவை சக்தியின் நோன்பைத்தான் குறிக்கின்றது என்ற கொள்கை வலியுறுகின்றது என்று பேராசிரியர் மு. இராகவய்யங்கார் அவர்களும் குறிப்பிடுவர்.

**நான்காவதாக :** இரண்டு பனுவல்களிலும் மகளிர் ஒருவரையொருவர் துயிலுணர்த்தும் காட்சிகள் கூறப்பெறுகின்றன. இவற்றுள் பல ஒற்றுமையாகவும் உள்ளன. ஒன்றை மட்டிலும் ஈண்டு காட்டுவேன். கோகுலத்திலுள்ள பெண்கள் கூட்டம் ஒன்று தோழி ஒருத்தியைத் துயில் எழுப்புவதற்காக அவள் வீட்டையடைகின்றது. முதல் நாள் அப்பெண்களிடம் "நாளை நானே வந்து உங்களை எழுப்புவேன்" என்று கூறினவள் அவள். அவள் இன்னும் எழுந்து கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. அவள் வீட்டையடைந்த கூட்டம்,

**எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்**
**நங்காய் எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய்**
(திருப்.14)

என்று அழைத்து அவளை எழுப்புகின்றது. இந்தத் திருப்பாவை அடிகளை,

**மானேநீ நென்னல் நாளைவந்து உங்களை**
**நானே எழுப்புவன் என்றலும் நாணாமே**
**போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ**
(திருவெம்-6)

[நென்னல் - நேற்று; புலர்ந்தின்றோ - பொழுதுவிடிய வில்லையோ]

என்ற திருவெம்பாவை அடிகளுடன் ஒப்பிட்டு நோக்கலாம். திருவண்ணாமலையிலுள்ள பெண்கள் கூட்டம் ஒன்று "உங்களை நானே வந்து துயிலுணர்த்துவேன்!" என்று சொன்ன ஒருத்தியின் வீட்டிற்கு வந்து எழுப்புவதாக அமைந்த காட்சியை இவ்வடிகள் சித்திரிக்கின்றன.

**ஐந்தாவதாக :** இரண்டு பனுவல்களும் நோன்பின் பயனைக் கிட்டத்தட்ட ஒரேவிதமாகவே குறிக்கின்றன. நாடு வளங் குன்றியபொழுது மழை பெய்யவும், நல்ல நாயகர்களை அடைந்து இம்மை நலம் எய்தவும், கன்னியர் கார்த்தியாயனி தேவதையைக் குறித்து மார்கழி முழுவதும் நோற்கின்றனர் என்று இரண்டிலும் குறிக்கப்பெற்றுள்ளது. இரண்டிலும் கூறப்பெறும் மழைப்பாட்டுகளை நோக்க இது நன்கு வலியுறும். இவ்வுலக நன்மைகளுக்கெல்லாப் மழை இன்றியமையாததால் அம்மழையினை உலகினர் அமிழ்தம் என்று கருதுகின்றனர். இதனை நன்குணர்ந்த ஆயர் சிறுமியர் மழைக் கடவுளைக் குறித்து வரம் வேண்டுகின்றனர். ''மழையே! மழையே! வா,வா'' என்று குழந்தையின் பாணி யில் மழையின் அதிதேவதையை வரம் வேண்டுகின்றனர். மழைக் கடவுளை நோக்கி,

ஆழி மழைக்கண்ணா! ஒன்றும்நீ கைகரவேல்!"
என்று வேண்டுகின்றனர். 'நீ ஒரு வள்ளல்போல் வாரி வழங்க வேண்டும்; ஒன்றையும் கையிருப்பாக வைத்துக் கொள்ளாதே!' என்பது அவர்களின் வேண்டுகோள்.

மழைவருதலைக் குறித்து அவர்கள் மானசிகமாகக் காணும் காட்சி மிக அழகாக உள்ளது. தம்முடைய குறிக்கோளை மிக அழகாக வெளியிடுகின்றனர். மேகங்களின் கருமை மழைவளத்திற்கு அறிகுறியல்லவா? ஆகவே, மழைக் கடவுள் கடலினுள் புகுந்து அங்குள்ள நீரை முகந்து கொண்டு, மிக்க ஆரவாரத்துடன் வானத்தில் தோன்றுவான் என்று எண்ணுகின்றனர். தவிர, மேகத்தின் நிறம் கண்ணனுடைய அருள் வடிவத்திற்கு ஒத்திருக்கின்றதல்லவா? மேகத்தின் கருநிறம் ஊழி முதல்வனுடைய உருவத்தை நினைவுபடுத்து கின்றது. மழை பெய்யும்பொழுது மேகங்களிடையே 'பளிச் பளிச்' என்று மின்னல் வெட்டு காணப்பெறுகின்றது. அந்த மின்னல் அவனுடைய திருவாழியை நினைவுபடுத்துகின்றது. மின்னலுக்குப்பின் கேட்கப்பெறும் இடியோசை அவன் கையிலுள்ள வலம்புரிச் சங்கின் நாதத்தை நினைவுபடுத்து கின்றது. மழைக் காலத்தில் சில சமயம் வானத்தில் தோன்றும் வானவில், அவனுடைய சார்ங்கம் என்ற வில்லின் அறிகுறியாகத் தோன்றுகின்றது. 'சோ' என்று பெய்யும் மழையோ வில்லிலிருந்து வெளிப்படும் அம்புமாரியை நினைவிற்குக் கொண்டுவருகின்றது. ஆகவே, அந்த ஆயச் சிறுமியர்,

ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கருத்து
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் (திருப்.4)

என்று மழைவரம் வேண்டுகின்றனர். இவ்வுலகம் செழித்து மக்கள் உய்யவேண்டும் என்று வைகறையில் நீராடும் பொழுது இவ்வழிபாடு நடைபெறுகின்றது. மழை பெய்து நாடு நலம் செழிக்க வேண்டுமென்று வெளிப்படையாக விரதம் பூண்டவர்கள், கண்ணனுடைய காதலைப் பெற்றுத் தாங்களும் இன்ப நலம் பெற்று வாழவேண்டும் என்றும் ஆசைப்படுகின்றனர். மழையின்றித் தவிக்கும் நிலபுலங்கள் கண்ணன் அருளின்றித் தவிக்கும் மாதர் இதயங்களை ஒத்துள்ளன.

ஆண்டாள் கோபியரின் கூற்றாக மழைவரம் வேண்டியதைப் போலவே, மணிவாசகப் பெருமானும் திருவண்ணாமலையில் மார்கழி மாதத்தில் வைகறைப் பொழுதில் நீராடும் பெண்களின் வாய்மொழியாக மழை வேண்டுகின்றார்.

**முன்இக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்**
**என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்**
**மின்னிப் பொலிந்துஎம் பிராட்டி திருவடிமேல்**
**பொன்னஞ் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்**
**என்னச் சிலைகுலவி நம்தம்மை ஆளுடையாள்**
**தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு**
**முன்னி அவள்தமக்கு முன்சுரக்கும் இன்னருளே**
**என்னப் பொழியாய்!**

(திருவம் - 16)

என்பது அடிகள் அவர்களின் வேண்டுகோள். மழைவரம் வேண்டி நிற்கும் வைணவ பக்தராகிய ஆண்டாளின் மனக் கண்ணுக்கு முன்னே திருமால் உருவம் காட்சியளிப்பது போலவே. மழைவரம் வேண்டும் சைவ அடியாராகிய மணி வாசகப் பெருமானின் மனக்கண்முன் ஐயனை விட்டுப் பிரியாத அம்மையின் வடிவம் தோன்றுகின்றது. அன்றியும் பெண் பக்தரின்முன் கடவுளின் வடிவம் ஆண்பாலாகத்

தோன்றுவதும், ஆண்பக்தரின்முன் கடவுளின் உருவம் பெண் பாலாகத் தோன்றுவதும் சிந்தித்து மகிழ்வதற்குரிய செய்தி யாகும்.

கடலில் நீர் முகந்து கொண்டு வானத்தில் பரவிக்கிடக்கும் கார்மேகத்தின் காட்சி நீல நிறத்தையுடைய அம்மையின் திருமேனியை நினைவு படுத்துகின்றது. மேகங்களுக்கிடையே தோன்றிப் பொலியும் மின்வெட்டு தேவியின் சிறிய இடையை நினைவூட்டுகின்றது. மின்னல் தோன்றிச் சற்று நேரத்திற்குப் பிறகு கேட்கப் பெறும் இடிமுழக்கம், பிராட்டி யின் திருவடியில் அணிந்துள்ள சிலம்பின் ஒலிபோல் உள்ளது. வானத்தில் காட்சியளிக்கும் வானவில் அம்மையின் திருப் புருவத்தை நினைவிற்குக் கொண்டு வருகின்றது. மேகத் தினின்று பொழியும் மழையோ அடியவர்களிடம் சுரக்கும் ஆண்டவன் அருள்போல் காட்சியளிக்கின்றது.

ஆகவே, திருப்பாவை திருவெம்பாவை ஆகிய இரண்டு பக்திப் பனுவல்களும் சமய வேறுபாடுகளால் சில ஐதிகங் களில் மாறுபட்டாலும் தேவிநோன்பு போன்ற வழி பாட்டிலும், வழிபாட்டின் குறிக்கோள்களிலும் ஒன்று பட்டே உள்ளன. இந்த இரண்டு இசைத் தமிழ்ச் செல்வங் களும் தமிழ் இலக்கியப் பூங்காவை அழகு செய்து நிற்கும் வாடான் கவிதைப்பூந்துணர்களாகமிளிர்கின்றன. இரண்டிலு முள்ள பாடல்களில் நகைச்சுவையோடு ஒருவித நாடகத் தன்மையும் ஓசையின்பமும் ஏற்றதொரு முறையில் கலந்து இன்ப மணம் கமழ்கின்றது. அடிக்கடி மழையின்றி எம் மருங்கும் பஞ்சம் தலைவிரித்தாடும் இக்காலத்தில் பண்டைத் தமிழ்ப் பெண்மணிகளைப் போலவே இன்றைத் தமிழ்ப் பெண்களும் மார்கழியில் பாவை நோன்பு நோற்று மழை வரம் பெறவேண்டியது அவர்களுடைய தலையாய கடமை யாகும். “பெய் எனப் பெய்யும் மழை” என்பதுதானே

வள்ளுவர் வாக்கும்? தமிழ் நாடு உய்வது பக்தியும் ஆன்ம ஆற்றலும் மிக்க பெண்களின் கையில்தான் உள்ளது.

பத்தினிக் கடவுள் வழிபாடு மூலமாக எல்லா மரபினரை யும் ஒன்று படுத்தி வாழ முயன்றார் இளங்கோவடிகள். அது போலவே இப்பாவை நோன்பினால் எல்லா மரபினரையும் ஒன்று படுத்தும் முயற்சியும் தொன்று தொட்டு இருந்துவரு கின்றது. இஃதறியாமல் இடைக்காலத்தில் வேறுபட்டு ஒன்றையொன்று பழித்துக் கூறும் பழக்கத்தில் ஆழ்ந்துவிட்ட சைவம் வைணவம் முதலான சமயங்கள் இந்தத் தெய்வத் தமிழ்ப் பனுவல்களால் முன்போல் ஒன்றுபடுத்தும் முயற்சி யில் சிறந்த சேவை செய்து வருபவர் காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு பெருந்தவத்திரு சங்கராச்சாரிய சுவாமிகள். கடந்த சுமார் ஐம்பது ஆண்டுகளாக இப்புனிதச் சேவையில் ஈடுபட்டு வரும் உபநிடத முனிவர்போன்ற அடிகட்குத் தமிழகம் என்றென்றும் கடமைப் பட்டுள்ளது.

38. **திருவம்மானை(8)**[4] : 'அம்மானை' என்பது மகளிர் விளையாடல்களில் ஒன்று. அம்மனைக் காய்கொண்டு விளை யாடும் இளமகளிர் தம்முள் உரையாடி மகிழும் முறையில் அமைந்த வரிப்பாடல்களே இலக்கியங்களில் அம்மானை என்ற பெயரால் சிறப்பித்து வழங்கப் பெற்றுள்ளன. மகளிர் அம்மனை ஆடுங்கால் இறைவனைப் பரவிய புகழ்ப் பாடல்களையும் அரசன் முதலிய தலைவர்களைப் பற்றிய புகழ்ப்பாடல்களையும் பாடி மகிழ்வர். இது,

**அம்மனை தங்கையிற்**
**கொண்டங் கணியிழையார்**
**தம்மனையிற் பாடுந்**
**தகையேலோ ரம்மானை**

—சிலப், வாழ்த்துக்காதை (19)

---

4. திருப்பெருந்துறையில் அருளிச்செய்யப் பெற்ற தாகக் கூறும் நம்பி திருவிளையாடல்.

என வரும் பாடற்பகுதியால் இனிது விளங்கும். அம்மனை விளையாட்டில் மகளிர் மூவர் உடனமர்ந்து விளையாடுவர். அம்மூவருள் ஒருத்தி பாட்டுடைத் தலைவன் புகழ்ச் செயலைக் குறித்து வினா நிகழ்த்துவாள். இரண்டாமவள் அவ்வினாவிற்கு விடை கூறுவாள். மூன்றாமவள் அப்புகழ்ச் செயலைத் தொடர்ந்து கூறிப் பாராட்டுமுறையிலும், அம் மூவரும் ஒருங்குசேர்ந்து பாட்டுடைத் தலைவன் புகழைப் பாடிப் போற்றும் முறையிலும் அம்மானைப் பாடல்கள் அமைதல் இயல்பு.

சிலப்பதிகாரம் வாழ்த்துக் காதையில் வரும் அம்மானை வரிப்பாடல்கள் வினாவும் விடையுமாக அமைந்தவை. திருவாசகத்தில் வரும் திருஅம்மானைப் பாடல்கள் மகளிர் பலரும் ஒருங்கு சேர்ந்து பாடி மகிழும் நிலையில் அமைந்த வரிப்பாடல்கள். சிலப்பதிகாரத்தில் அம்மானைப் பாடல் ஐந்தடிகளால்[5] இயன்ற கொச்சக ஒருபோகாய் நாடாளும் வேந்தனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு பாடப்பெற்றவை. திருவாசகத்திலுள்ள அம்மானைப் பாடல்கள் ஆறடிகளால் இயன்ற கொச்ச ஒருபோகாய் எல்லா உலகிற்கும் முதல்வனான சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்றவை. இந்தப்பாடல்களில் 'அம்மானை' என ஐயீறு இயல்பாக வரும் விளி மகளிர் தம் கையிற் கொண்ட அம்மனைக் காயினைக் குறிக்கும். 'அம்மானாய்' என ஆயீறாய்த் திரிந்துவரும் விளிகள் மகளிர் தம்முடன் விளையாடும் தோழியை முன்னிலையாக்கும் நிலையில் அமைந்திருத்தல் அறியத்தக்தாகும்.

அந்தணனாய் வந்து பெருந்துறைப் பெருமானால் ஆட்கொள்ளப்பெற்ற வாதவூரடிகள் அம்கருணைவார்கழலால்

5. சிலப். வாழ்த்துக் காதை -19வது பாடல் 6அடிகளால் இயன்றது.

தம் உள்ளத்தே ஊற்றெடுத்துப் பெருகிய பேரானந்தத்தில் திளைக்கும் நிலையில் இப்பனுவல் அருளிச் செய்தமையால் இதற்கு 'ஆனந்தக் களிப்பு' என முன்னோர் கருத்துரை கூறியுள்ளனர். கடைசிப்பாடலில் 'பேரானந்தம் பாடுதுங் காண் அம்மானாய்' என முடிவதால் ஆனந்தக்களிப்பாயிற்று என்றலும் பொருந்தும். இப்பனுவலின்கண்,

> விண்ணாளும் தேவர்க்கும் மேலாய வேதியனை
> மண்ணாளும் மன்னர்க்கும் மாண்பாகி நின்றானைத்
> தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
> பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
> கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
> அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய் (10)

என்பது பத்தாம் பாடல். 'அண்ணாமலையானை' என்னும் குறிப்பு இப்பதிகம் அண்ணாமலைக்கண் பாடியருளினமையை நினைவுறுத்துவதாகும்.

'கேட்டாயோதோழி' எனத் தொடங்கும் ஆறாம் பாடலில் உயிர்கள் மும்மலங்களும் நீங்க இறைவன் திருவடியாகிய திருவருளிற் பிரிவறக் கலத்தலே வீடுபேறென்னும் உண்மையினை அடிகள் குறிப்பாக அறிவுறுத்தியுள்ளார்.

> சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
> நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும்
> செலவு நீ நயந்தனை யாயின்

என வரும் திருமுருகாற்றுத் தொடர்ப் பொருளை விளக்கும் நச்சினார்க்கினியர் "புலம் பிரிந்துறையும் அடி-மெய்ஞ்ஞானத்தால் அறிதலைக் கைவிட்டுத் தங்கும் அடி; திருவடியே வீடாயிருக்கும் என்றார். அது 'தென்னன் பெருந்துறையான், காட்டாதன வெல்லாம் காட்டிச் சிவங்காட்டித் தாட்டாமரை காட்டித் தன்கருணைத் தேன்காட்டி' என்பது

னாலும் பிறரும் திருவடியைக் கூறுமாற்றானும் உணர்க"" என இத்திருவம்மானைப் பாடலின் பொருள் நுட்பத்தினை விளக்கியுள்ளமை ஈண்டு நினைத்தல் தகும்.

இந்தப் பனுவலில் மாலும் அயனும் காண்டற்கரிய வள்ளல் திருப்பெருந் துறையில் குருவாக எழுந்தருளித் தன்னை ஆட்கொண்டதிறம், பந்தமெலாம் நீங்கப் பரிமேலழகனாக எழுந்தருளி அளவிலா ஆனந்தம் அருளிய பான்மை, வந்தி என்னும் செம்மனச் செல்வியின் பொருட்டு கூலியாளாய் வந்த எளிமைத்திறம், அண்ணாமலையண்ணல் பெருந்துறையில் தம்மையாண்ட தகவு முதயவற்றைக் குறிப்பிடுகின்றார். மேலும், பாண்டிநாட்டைச் சிவலோகமாக்கின பரிசு, ஐயாற்றில் அமர்ந்தருளிய வண்ணம், தன்னை மதியாத இந்திரன், எச்சன், கதிரோன் முதலிய தேவர்களைத் தண்டித்த வெற்றிப்பாடு, மதுரையில் குதிரைச் சேவகனாய் எழுந்தருளிக் குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிய பெற்றி ஆகியவையும் இப்பனுவலில் விரித்துரைத்துப் போற்றப்பெற்றுள்ள.

# 11. திருத்தில்லை நிகழ்ச்சிகள்

இறைவனின் கணக்கிலாத் திருக்கோலத்தைக் கழுக்குன்றத்தில் கண்டு களித்த வாதவூரடிகளின் சிந்தை 'அந்தமிலா,ஆனந்தம் அணிகொள் தில்லையை' நாடுகின்றது. மனத்திலும்,

**போவோம் காலம் வந்ததுகாண்**
**பொய்விட் டுடையான் கழல்புகழவே**

—யாத். பத்து-1

என்ற எண்ணம் முகிழ்க்கின்றது. உள்மனத்தின்கண் தில்லைச் சிற்றம்பலவனின் சிலம்பொலி கேட்கின்றது. சிவப்பேறு அடையும் நாளும் கிட்டி வருகின்றது. எனவே, தில்லையை நோக்கிப் புறப்படுகின்றார். இத்தில்லைப் பயணம்தான் இருவினை கெட்டுப் பிறப்பிறப்புத் துன்பமும் நீங்கிப் பரமானந்தப் பெருவெளியில் கலக்கச் செய்யும் திருப்பயணமாக முடியப்போகின்றது. இகவுலகவாழ்க்கை முடிந்து பரவுலக வாழ்க்கையின் அருணோதயக் கதிர்கள் வீசத் தொடங்குகின்றன. இந்தச் சிவானந்த சோதியின் கதிர்களில் இவர் உள்ளம் தோயத் தொடங்குகின்றது.

சிற்றம்பலவன் திருக்கோயில் சற்றேறக் குறைய நாற்பது ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இத்தில்லைப் பெருங் கோயிலினுள் ஐந்து சபைகள் உள்ளன. அவை : (1) நடராசப் பெருமான் திருநடம் புரியும் சிற்றம்பலம் அல்லது சிற்சபை,

(2) **கனகசபை:** இது சிற்றம்பலத்திற்கு எதிரிலுள்ள எதிரம்பலமாகும்; பொன்னம்பலம் என்றும் வழக்கப் பெறும். இங்குப் பெருமான் தினமும் ஆறுகால பூசைகளும், ஆண்டில் நான்கு முறை திருமஞ்சனமும் கொண்டருள்கின்றார். நாடோறும் காலை பத்து மணியளவில் அழகிய சிற்றம்பலமுடையாரும் இரத்தினசபாபதியும் திருமுழுக்கு ஆராதனை பெறுகின்றனர். (3) **தேவசபை :** இது வழக்கத்தில் பேரம்பலம் எனப்படுகின்றது. இது யாகசாலைக் கருகில் ஈசான மூலையில் உள்ளது. இங்குத்தான் உற்சவ மூர்த்திகள் எழுந்தருளியுள்ளனர். (4) **நிருத்தசபை:** இது நடராசருக்கு எதிரில் உள்ள கொடிமரத்திற்குச் சிறிது தென்பால் உள்ளது. இங்கு ஊர்த்துவத்தாண்டவ மூர்த்தியைக் கற்சிலைவடிவில் சேவித்து மகிழலாம். மிகவும் சித்திர வேலைப் பாடமைந்த ஐம்பத்தாறு தூண்களால் தாங்கப் பெற்றது. மண்டபம் குதிரை பூட்டிய தேர் அமைப்பைப் பெற்றுள்ளது. (5) **இராசசபை :** இது 1000 கால் மண்டபம். இது கோயிலினுள் வடகீழ்த்திசையிலுள்ளது. நடராசப் பெருமான் ஆண்டில் ஆனியிலும் மார்கழியிலும் இரு முறை இங்கு எழுந்தருளித் திருமஞ்சனம் கொண்டருளு கின்றார். இம்மண்டபத்தின் நீளம் 340 அடி; அகலம் 190 அடி மண்டபத்தூண்கள் வரிசைக்கு இருபத்து நான்காக நாற்பத்தொரு வரிசைகள் உள்ளன, நடுவில் வெளவால் நத்தி மண்டபம் அமைக்கப்பெற்றுள்ளதால் ஐம்பத்தாறு தூண்கள் குறைவென்றும், ஆதலால் மண்டபத்தின் வெளியிலுள்ள தூண்களையும் சேர்த்து எண்ணிக்கை கொள்வர், இது தேவாசிரியமண்டபமுமாகும். இராசசபைக்கு அருகில் தொன்மைக் கோயிற்குளமாகிய **சிவகங்கைத் தீர்த்தம்** உள்ளது. நீளம் 160 அடி; அகலம் 100 அடி. இது அழகிய திருச்சுற்றுமாளிகையைக் கொண்டது.

திருச்சிற்றம்பலமுடையான் திருக்கோயில் தென் தமிழ்நாட்டின் நடுநாயகமாக அமைந்துள்ளது. தமிழகத்

தில் நூற்றுக் கணக்கான திருக்கோயில்கள் இருந்தும் தில்லையையே **கோயில்** என்று வழங்குகின்றனர் சைவப் பெருமக்கள். வைணவர்களும் திருவரங்கத்தைக் **கோயில்** என்று வழங்கிவருவது ஈண்டு நினைவு கூரத்தக்கது. தில்லை என்னும் **சிதம்பரம்**[1] ஆதிகாலந் தொட்டே தமிழரின் பெருமைக்கும் தெய்விக அருளுக்கும் இருப்பிடமாகத் திகழ்வது. புலவர் பெருமக்களும் அடியார்களும் போற்றும் தெய்வத்திருத்தலமாக விளங்குவது. சோழர், பாண்டியர், பல்லவர், நாய்க்கர் ஆட்சிக்காலங்களில் கணக்கின்றி திருப் பணி செய்யப் பெற்றது. பண்டைத் தமிழர்கள் பாரதத்தையே விராட்புருடனாகக் கருதி சிவத்தலங்களைக் கொண்டு அதனை விளக்குவர். திருவாரூர் அதன் மூலாதாரம்; திருவானைக்கா கொப்பூழ்; திருவண்ணாமலை மணிபூரகம்; **சிதம்பரம் இதயம்**; திருக்காளத்தி கண்டம்; காசி புருவத்தின் நடுஇடம். சிதம்பரம் இதயம் ஆதலின் இறைவது இயக்க மாகிய படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல் என்ற ஐந்தொழில்களும் ஆடலரசனின் ஆனந்தத் தாண்டவத்தில் அமைந்திருப்பது ஒரு வியக்கத்தக்க தத்துவ மாகத் திகழ்கின்றது.

ஆனந்தத் தாண்டவத்தின் வரலாறு இது. உலகம் தோன்றிய காலம்முதல் இத்தாண்டவம் நடைபெற்று வருகின்றது. ஒரு காலத்தில் தேவர்களின் வேண்டுகோட் கிணங்கி இறைவன் தாருகாவனத்து முனிவர்களின் செருக்கை அடக்குவதற்காக ஆடிய கூத்து இது. அப்போது அவர் பிட்சாடனர்வடிவந் தாங்கி, திருமால் மோகினியாகப்

---

1. **சிதம்பரம் (தில்லை)**: கடலூர் மயிலாடுதுறை தென் னிந்திய இருப்புப் பாதையில் உள்ள ஓர் இருப்பூர்தி நிலையம், நிலையத்திலிருந்து சுமார் ஒரு கல் தொலைவிலுள்ளது திருக்கோயில். தில்லை என்பது இத்தலத்தின் பழம்பெரும் பெயர்.

பின்வர, பூதகணங்கள் பிச்சைப் பாத்திரம் தாங்கிவரத் தாருகாவனத்துக்கு வருகின்றார். முனிவர்களும் அவர்களது பத்தினிமார்களும் இத்தெய்வத் தம்பதிகளைக் காண்கின்றனர்; அவர்கள் வனப்பில் ஈடுபடுகின்றனர். முனிவர்கள் மோகினியைத் தொடர்கின்றனர்; அவர்தம் பத்தினிமார் பிட்சாடனரைத் தொடர்கின்றனர். சிறிது நேரத்தில் முனிவர்கள் இத்தெய்வத் தம்பதிகளின் உண்மை உருவங்களைத் தெளிகின்றனர். இதனால் மனம் கொதித்து வெட்கிப் போகின்றனர். பின்னர் அவர்களைக் கொல்லக் கருதி அபிசார யாகம் ஒன்று இயற்றுகின்றனர். ஓமத்தினின்றும் எழுந்த புலியைச் சிவனார்மீது ஏவுகின்றனர். தம்மை நோக்கிப் பாய்ந்து வரும் புலியைக் கொன்று அதன் தோலை தம் இடையில் அணிந்து கொள்ளுகின்றார். பின்னர் வந்த சிங்கம் அம்பிகைக்கு வாகனமாகின்றது. பாம்புகள் ஆலம் உண்ட நீலகண்டனுக்கு ஆபரணங்களாகின்றன. இவற்றைத் தரித்துக் கொண்டு நடனமாடத் தொடங்குகின்றார். அதனைக் கண்ட முனிவர்கள் சினமுற்று முயலகன் என்ற அரக்கனை ஏவுகின்றனர். சிவபெருமான அவனைக் காலின்கீழ் மிதித்து அடக்கி நாதாந்த நடனம் ஆடுகின்றார். முனிவர்கள் தங்கள் வலி இழந்து செருக்கடங்கி இறைவனது மன்னிப்பை பெறுகின்றனர், இந்தத் தாண்டவத்தை புலிக்கால் முனிவருக்கும் (வியாக்கிரக பாதர்) பதஞ்சலிக்கும் மீண்டும் தில்லையில் ஆடிக் காட்டுகின்றார்.

கூத்தப்பெருமானுடைய நான்கு திருக்கரங்களில் வலப்புறத்து மேற்கரத்தில் துடி என்னும் உடுக்கை அமைந்துள்ளது. அவ்வுடுக்கையிலிருந்து தோன்றிய நாத தத்துவத்தின் வழியாக உலகங்கள் தோன்றுகின்றன. ஆதலால் அவ்வுடுக்கை படைப்புத் தொழிலைக் குறிக்கும். வலப்புறக் கரத்தில் ‘அஞ்சேல்’ என்ற குறிப்பில் அமைந்துள்ள

அபயக் கை காத்தல் தொழிலைக் குறிக்கும். இனி இடப் புறத்துக் கைகள் இரண்டினுள் மேலே எடுத்த கை தீயினைத் தாங்கியுள்ளது. அத் தீ உலகங்கள் எல்லாவற்றையும் அழித்தலைக் குறிக்கும். வலப்பக்கத்துத் திருவடியின்கீழ் முயலகன் என்ற முரடன் அழுத்தப் பெற்றிருப்பது உயிர்கள் வினைப்பயன்களை அநுபவத்தற் பொருட்டு இறைவன் செய்யும் மறைப்புத் தொழிலைக் குறிக்கும். தூக்கிய திருவடியாகிய இடது திருவடியினை இடது திருக்கரத்தால் காட்டி நிற்கும் அமைப்பு, இறைவன் எடுத்த பாதத்தால் உயிர்களுக்குப் பேரின்பத்தை நுகர்விக்கும் அருளல் தொழிலைக் குறிப்பதாகும். இவ்வாறு அம்பலவாணன் செய்தருளும் திருக்கூத்து ஐந்தொழில்களையும் ஒருங்கே நிகழ்த்தவல்லது என்ற நுட்பத்தை உமாபதி சிவம்,

**தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில்**
**சாற்றிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமாய்**
**ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோதம் முத்தி**
**நான்ற மலர்ப்பதத்தே நாடு**[2]

என்ற வெண்பாவால் விளக்குவர்.

இதயமாகிய மன்றத்தில் இறைவன் ஆன்ம ஈடேற்றத்துக்கு அருள் நடனமாடும் பாவனையில் தூல சின்னமாக இருப்பது திருச்சிற்றம்பலம். இதன் அமைப்பு வேதங்கள், ஆகமங்கள், சைவ சித்தாந்த தத்துவங்கள் ஆகியவற்றை விளக்கும்முறையில் உள்ளன. பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் - இவர்கட்கென ஐந்து பீடங்கள் உள்ளன. ஐந்தெழுத்து மந்திரத்திற்கு அறிகுறியாக ஐந்து படிகள் உள்ளன. இவற்றிற்குப் பக்கத்திலுள்ள கதவின் பெயர் ஆவரணம்; சித்தாந்தத்தில் இதனை அவித்தை என்பர். தொண்ணூற்றாறு தத்துவங்களும் பலகணிகளாக

2. உண்மை விளக்கம்—36

அமைந்துள்ளன. நடுவிலிருக்கும் நான்கு பொற்கம்பங்களும் நான்மறைகளின் அறிகுறிகள். அதைச் சுற்றியுள்ள மரக் கம்பங்கள் இருபத்தெட்டும் ஆகமங்களாகப் பாவிக்கப் பெறுகின்றன.

திருச்சிற்றம்பலத்தின் மேலுள்ள தூபி ஏனைய தலங்களில் உள்ளது போன்றதன்று. சாதாரண வீடு களுக்குள்ள கூரை போன்றது. 21600 தங்க ஓடுகளால் ஆனது. ஒவ்வொரு ஓட்டிலும் 'சிவாய நம' என்ற ஐந்தெழுத்து மந்திரம் எழுதப் பெற்றுள்ளதாக தில்லையுலா கூறுகின்றது. ஒரு நிமிடத்திற்கு 15 மூச்சு வீதம் 24 மணி நேரம் கொண்ட ஒரு நாளுக்கு 21600 மூச்சு ஆகின்றது. இதுதான் தங்க ஓடுகளின் மொத்த எண்ணிக்கை. இன்னும் இவ்வாறு இக்கோயிலமைப்புக்குப் பல தத்துவங்கள் கூறப் பெறுகின்றன.

திருச்சிற்றம்பலம் கனக சபை என்றும் வழங்கப்பெறும். இங்குத்தான் இறைவன் நடராச மூர்த்தியாக எழுந்தருளி யிருந்து காட்சி தருகின்றார். பஞ்சலிங்கங்களுள் ஆகாச லிங்கம் சிதம்பரத்தில் உள்ளது. கனகசபையில் நடராசரின் திருமேனிக்குப் பின்னால் ஒரு திரை போடப் பெற்றுள்ளது. அதை நீக்கினால் ஒரு வெளி தோன்றும்; அவ்வெளியே சூக்குமமான வடிவு கொண்ட ஆகாசலிங்கம். இதுவே சிதம்பர இரகசியம் ஆகும். இதய வெளியில் அற்புதக் கூத்து நடத்தும் கூத்தப்பெருமானைத் மணிவாசகர் தேடி வரு கின்றார். இந்தக் கூத்தினை விளக்கும் திருப்பாடல் இது:

**வான நாடரும் அறியொ ணாதநீ**
**மறையி லீறுமுன் தொடரொ ணாதநீ**
**ஏனை நாடரும் தெரியொ ணாதநீ**
**என்னை யின்னிதா யாண்டு கொண்டவா**

**ஊனை நாடக மாடு வித்தவா**
**உருகி நானுனைப் பருக வைத்தவா**
**ஞான நாடக மாடு வித்தவா**
**நைய வையகத் துடைய விச்சையே**
— திருச்சதகம் - 95

வந்தவர் மன்றுள் ஆடும் பெருமானை வணங்குகின்றார்; கடவுட் பித்து தலைக்கேறுகின்றது; ஆடுகின்றார்; பாடுகின்றார்.

தில்லைச் சிற்றம்பலவனும் திருப்பெருந்துறையில் காட்டிய ஆசிரியத் திருமேனி காட்டி அருள் புரிகின்றார். இந்தத் திருமேனியைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் சொரியக் **கண்ட பத்து** பாடி ஓவியம்போல் அசைவற்று நிற்கின்றார். இங்ஙனம் நீண்ட நேரம் தன் வசமிழந்து நிற்கும் வாதவூரடிகளைக் கண்ட கோயில் மெய்காவலர் இவரைப் பித்தர் எனத் தவறாகக் கருதிப் பொன்னம்பலத்தை விட்டு வெளியேறுமாறு பணிக்கின்றனர். புலனொன்றி நின்ற அடிகளது திருச்செவியில் அச் சொல் புகவில்லை. சிறிது நேரத்தில் அடிகள் தன்னுணர்வு பெற்றுச் 'சிவசிவ போற்றி' எனத் தில்லையம்பலவனை வழிபட்டு வலம் வந்து திருப்புலீச்சரம், திருநாகேச்சரம் (அனந்தீசம்) ஆகிய திருக்கோயில்களை இறைஞ்சி வழிபட்டுத் தில்லை வீதியை வலம் வருகின்றார்.

இங்ஙனம் வலம் வரும்போது '**குலாப்பத்து**', 'கோயிற் திருப்பதிகம்', 'கோயில் மூத்ததிருப்பதிகம்', 'கீர்த்தித் திருவகவல்', 'திருவண்டப் பகுதி', 'போற்றித் திருவகவல்' என்பவற்றை அருளிச் செய்கின்றார். மகளிர் நறுமணப் பொடியாகிய சுண்ணம் இடிக்குங்கால் அவர்கள் கூறுவதாக திருப்பொற்சுண்ணம் பாடுகின்றார். அருகேயுள்ள சோலையின் சென்று அங்கு விளையாடும் சிறுமியர்களின் பலவகை விளையாடல்களைக் கண்டு களிக்கின்றார்.

அங்ஙனம் விளையாடும் மகளிர் 'பயனற்ற சொற்களை நீக்கி எம்பெருமானாகிய இறைவனைப் பாடுமின்' எனத் தமக்குள் உரையாடும் நிலையில் திருத்தெள்ளேணம், திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல் ஆகிய பனுவல்களைப் பாடிப் போற்றுகின்றார். அன்னைப் பத்து. திருக்கோத்தும்பி, குயிற்பத்து, திருத்தசாங்கம், அச்சப்பத்து ஆகிய செழும் பாடல்களைப் பாடித் தில்லை நகர்ப்புறத்திலே இலைக்குடில் (பன்னசாலை) அமைத்து அதன்கண் தங்குகின்றார். இந்த வரலாறு திருவாதவூர் புராணத்தைத் தழுவியது.

இவர் இங்ஙனம் இருக்கும் நிலையில் வேறொரு நிகழ்ச்சி நடைபெறுகின்றது. சிவனடித் தொண்டு புரிந்துவரும் அடியார் ஒருவர் சோழ நாட்டுத் தலங்களை வணங்கி வழி பட்டுக் கொண்டு தில்லைக்கு வருகின்றார். பொன்னம் பலத்தைக் கண்குளிரக் கண்டு இறைஞ்சுகின்றார். பின்னர் இவர் ஈழ நாட்டை அடைகின்றார். தில்லைச் சிற்றம் பலத்தின் பெருமையை உணர்ந்த இந்த அடியார் தாம் செல்லுமிடந்தோறும் 'பொன்னம்பலம்' என்று கூறுதலை வழக்கமாகக் கொண்டிருக்கின்றார். இவரது இயல்பினைக் கண்டு பொறாத புத்தர்கள் தம் வேந்தனாகிய ஈழ மன்னனைக் கண்டு முறையிடுகின்றனர். அரசனும் அந்த அடியவரை அரண்மனைக்கு அழைத்து வருமாறு பணிக் கின்றான். அங்ஙனம் அழைக்கப் பெற்று வந்தவர் அரசன் முன்னிலையில் 'பொன்னம்பலம்' என்று கூறி அமர்கின்றார். அரசன் 'அச்சொல்லின் சிறப்பு யாது?' என்று வினவ, சிவனடியார், சிவபெருமான் சிவகாமியம்மை கண்டுகளிக்கும் வண்ணம் திருநடனம் புரியும் தில்லைச் சிற்றம்பலத்தின் சிறப்பினை விரித்துரைத்து 'ஒருமுறை பொன்னம்பலம் என்று சொன்னவர் 21600 முறை ஐந்தெழுத்து ஓதிய பயனைப் பெறுவர்' என்று கூறுகின்றார். இதைச் செவிமடுத்த அருகே

யிருந்த புத்த குரு மிகவும் வெகுண்டு 'திரிபிடகத்தையருளிய புத்த தேவனாகிய எங்கள் தலைவனையன்றி வேறொரு தெய்வமும் உண்டோ? உண்டாயின் திருத்தில்லையை அடைந்து அங்குள்ளவர்களை வாதில்வென்று பொன்னம்பலத்தை போதிநிழல் பெருமானுக்குரிய புத்த விகாரமாக மாற்றுவேன்' என்று சூளுரைக்கின்றான். அத்துடன் நில்லாது புத்தர் குழுவுடன் தில்லையை நோக்கிப் புறப்படுகின்றான். ஈழவேந்தனும் தன் ஊமை மகளை அழைத்துக் கொண்டு தில்லைப்பதியை அடைகின்றான்.

முன்னதாகவே சென்ற புத்த குரு சிதம்பரத்தையடைந்துதிருப்புலீச்சரத்திருக்கோயிலில் தங்கியிருக்கின்றான். புறச்சமயத்தானாகிய அவனைக் கண்ட நகர மக்கள் தில்லையை விட்டு அகலுமாறு கடிந்துரைக்கின்றனர். தான் சோழ மன்னனுக்கெதிரில் சைவச் சமயம் மெய்ச் சமயம் அன்று எனத் தெரிவித்து தன் சமயமாகிய பௌத்த சமயமே மெய்ச்சமயம் என்றும்,புத்ததேவனே தெய்வம் என்றும் நிலை நிறுத்தாமல் அவ்விடத்தைவிட்டு அகல்வதற்கில்லை எனக் கூறுகின்றான். இதனைக் கேட்டோர் தில்லை மூவாயிரவரிடம் இச்செய்தியைத் தெரிவிக்கின்றனர். அவர்கள் அங்கு வந்து புத்த குருவை நோக்கி 'நீ இங்ஙனம் வந்து எங்கட்குத் தொல்லை தருவது ஏன்?' என்று வினவுகின்றனர். அதற்கு அவனும், 'நீங்கள் வேதசாத்திர அளவைகளைக் கொண்டு நுமது தெய்வமே தெய்வம் என்று நிலைகாட்டுவீராயின், யான் அதனை மறுத்துப் புத்தனே கடவுள் என நிலை நிறுத்துவேன்' என்கின்றான். புத்தனை வாதில்வென்று போக்குதலே முறை எனக் கருதிய தில்லைவாழ் அந்தணர்கள் சோழ மன்னனுக்குத் திருமுகம் எழுதி அனுப்புகின்றனர்; சிவனடியார்கட்கும் ஓலையனுப்புகின்றனர்.

அன்று இரவு வைகறைப்பொழுதில் தில்லைப் பெருமான் சடை முடியும் முழுநீறு பூசிய திருமேனியும் உடையராய்ச்

கையில் பிரம்பு தாங்கித் தில்லை நகர மக்களது கனவில் தோன்றி 'நீவிர் வருந்துதல் ஒழிமின்; நம்முடைய ஊர் எல்லையில் வாதவூரன் வந்து தங்கியுள்ளான். அவன் இம்மொழியைக் கேட்டபோதே விரைந்து வந்து அளவை நாலுக்குப் பொருத்தமான முறையில் புத்தர்களை வாதில் வெல்வான். தவப்பயனுடைய நீவிர் அவனை அண்மி அழைப்பீராக' எனப் பணித்து மறைந்தருளுகின்றார்.

**புத்தர்களை வெல்லல் :** மறுநாள் காலை இவர்கள் திருக்கோயில் மண்டபத்தில் கூடித் தாம் கண்ட கனவினை ஒருவரோடொருவர் சொல்லி மகிழ்ந்து திருவாதவூரடிகளை அடைகின்றனர். இறைவனது அருள்வாக்கினை எடுத்துரைத்துவணங்குகின்றனர். இறைவனது அருளிப்பாட்டினை அறிந்த மணிவாசகப் பெருமான் தில்லை மூவாயிரவருடன் சிற்றம்பலம் சென்று கூத்தப்பெருமானை வணங்கி வழிபட்டு அருள் பெற்றுப் புத்தர்கள் தங்கியிருக்கும் ஆயிரக்கால் மண்டபத்தை அடைகின்றார். சிவபெருமானுக்கு அன்பிலாதாரைக் கண்ணாற் காணுதலும் ஆகாது என்று நடுவே திரையிடுவித்து அத்திரை மறைவில் ஓர் இருக்கையில் அமர்கின்றார். சோழ மன்னன் விரைந்து அங்கு வந்து மணிவாசகரின் திருவடிகளை வணங்கி இறைஞ்சி அவர் அருகில் அமர்கின்றான். அப்பொழுது ஈழத்தரசனும் எழுந்து சென்று தான் கொணர்ந்துள்ள திறைப்பொருளைத் தந்து சோழ மன்னனை வணங்குகின்றான். சோழ அரசனும் மகிழ்ந்து அவனைத் தன் அருகே அமர்த்திக் கொள்ளுகின்றான். ஆராய்ந்துணர்ந்து வெற்றி தோல்வியினை நடு நின்று எடுத்துரைக்கும் சான்றோர்களும் அவை நடுவே வந்து அமர்கின்றனர்.

இனி, வாதம் தொடங்க வேண்டியதுதான். எல்லோரும் வந்து நிரம்பிய அச்சபையில் சோழமன்னன் திருவாதவூரரை

வணங்கி நின்று, "அரும்பெரும் அடிகளே, சைவ சமயத்தை நிலை நிறுத்துவது தங்கள் கடமை. தோல்வியுறும் புத்தர் களைப் போக்குவது என் கடமை" என்று மொழிகின்றான். மணிவாசகப் பெருமான் புத்த குருவை நோக்கி "நீர் இங்கு வந்த காரணம் என்ன?" என வினவ, புத்தகுரு, "அடிகளே, எங்கள் தெய்வத்தையன்றி வேறு தெய்வம் இல்லை என்று யாவரும் காண உறுதிப்படுத்துவதற்கும், இம்பொன்னம் பலத்தே எங்கள் புத்ததேவரை அமர்த்துவதற்காகவும் நேற்றே இங்கு வந்து காத்திருக்கின்றேன்" என்கின்றான். மணிவாசகப் பெருமான் புன்முறுவல் செய்து "உமது கடவுள் இலக்கணமும் முத்தி நிலையும் இன்னவெனக் கூறுவீராக" என்கின்றார். புத்தகுரு திரிபிடகத்தில் சொல்லிய வண்ணமே தன் சமயக் கொள்கைகளை எடுத்து விளக்குகின்றான். திருவாதவூரடிகள் அவன் சொல்லியவற்றையெல்லாம் அளவை நூல் வரம்பு தவறாது மறுத்துரைக்கின்றார். தன் சமயக் கொள்கை மறுக்கப்பெற்றமையால் ஒளி மழுங்கிய புத்தகுரு மணிவாசகரை நோக்கி "நும் கடவுள் யாது? நுமது முத்தி எது?" என வினவுகின்றான். அடிகளும் அரனது பெருமையினை விரித்துரைக்கின்றார். அவ்வளவில் புத்த குரு இடைமறித்து அடிகள் கூறியவற்றை இகழ்ந்துரைக் கின்றான்.

புத்தகுரு கூறிய இகழ்ச்சியுரைகட்கெல்லாம் நெறியும் பண்பும் தவறாது மறுமொழி கூறிய அடிகள், கலைமகளை நோக்கி "அம்மையே, நான் மறைகளை நவிலும் நாமகளாகிய நீ முன்னர்த் தக்கன் வேள்வியில் பட்ட துன்பத்தை மறந்து சிவநிந்தை செய்யும் இப்புத்தர்களது நாவிலிருப்பது தகுதியோ? இவர்களது நாவினை விட்டு விரைவில் அகல் வாயாக" எனச் சினந்து உரைக்கின்றார். நிறைமொழி மாந்தராகிய அடிகளின் சினங்கண்டு அஞ்சிய நாவின் கிழத்தி புத்தர்களுடைய நாவினைவிட்டு நீங்குகின்றாள். அதனால்

அவர்களனைவரும் பேச்சிழந்து ஊமைகளாகின்றனர். இத் துன்பநிலையைக் கண்ட ஈழவேந்தன், வாதவூரடிகளை வணங்கி நின்று, "அடிகள் பெருமானே, நும் முன்னிலையில் பேச வல்ல புத்தர்கள் ஊமைகளாயினர். பிறவி ஊமை யாகிய என் மகளைப் பேசும்படி செய்தருள்வீராயின் யான் நுமக்கு அடியனாவேன்" என்கின்றான். அடிகள் அம்மன்னன் மகளை அழைத்து வரச்செய்து அவளை நோக்கி முன்பு தன்பால் புத்தகுரு விடுத்த வினாக்களுக்கெல்லாம் விடை கூறும்படிப் பணித்தருள்கின்றார். அவளும் அவ் வினாக்களுக் கெல்லாம் தக்கவாறு விடை பகர்ந்து அனைவரையும் வியப்புக் கடலில் ஆழ்த்துகின்றாள். வாதவூரடிகள் அவ்வினா விடைகளைத் தொகுத்து மங்கையர் விளையாட்டில் பாடிப் பயிலும் முறையில் 'திருச்சாழல்' பாடல்களாகப் பாடியருள் கின்றார்.

**புத்தர்கள் சைவர்களாதல் :** ஊமை மகள் பேசிய அற்புத நிகழ்ச்சியைக் கண்டு வியந்த ஈழமன்னன் மணிவாசகர் திருவடிகளில் வீழ்ந்திறைஞ்சி அவருக்குத் தொண்டனா கின்றான். 'அடிகள் பெருமானே, இப் புத்தர்களுக்கு ஊமை நீங்க அருள்புரிய வேண்டும்' என இரந்து நிற்கின்றான். அடிகளது அருள் நோக்கினால் அங்கிருந்த புத்தர்கள் அனைவரும் ஊமை நீங்கப் பெறுகின்றனர். அவர்கள் அனைவரும் அடிகளின் திருவடியில் வீழ்ந்து வணங்கி "பெரியீர், அடியேங்களுக்கு தெய்வத்திருநீறும் அக்கமாலை யும் கல்லாடையும் அளித்தருளல் வேண்டும்" என வேண்டு கின்றனர். மணிவாசகரும் அவர்கள் விரும்பிய வண்ணம் இம் மூன்றையும் அளித்து அவர்களது துவராடையைச் சுட்டெரிக் கின்றார். பிறகு அனைவரும் குழுவாகத் தில்லைச் சிற்றம்பலவனை வணங்கிப் போற்றுகின்றனர்; அடிகள்பால் விடைபெற்றுத் தத்தம் இருப்பிடங்களை அடைகின்றனர். மணிவாசகர் வில்வ வனத்திலுள்ள இலைக்குடிலில் தங்கி

யிருந்து கூத்தப் பெருமானை வணங்கி வருவாராயினர். இக் காலத்தில் 'திருப்படையாட்சி', 'திருப்படையெழுச்சி', 'அச்சோப்பதிகம்' 'யாத்திரைப் பத்து' ஆகிய திருவாசகப் பனுவல்களைப் பாடிப்போற்றிக் கவற்சியும் களிப்புமற்ற பேரின்பப் பெருவாழ்வில் திளைத்திருக்கின்றார்.

**சிற்றம்பலவன் திருவிளையாடல் :** இங்ஙனம் அடிகள் தில்லையில் எழுந்தருளியிருந்து சிவத்தொண்டு புரிந்து வரும் நாட்களில் அற்புத நிகழ்ச்சியொன்று நடைபெறுகின்றது. ஒருநாள் தில்லைச்சிற்றம்பலவன் வேதியர் வடிவு கொண்டு மணிவாசகர் முன் வந்து நிற்கின்றார். அடிகள் அவ்வேதியர் இருப்பிடத்தையும் வந்த வேலையையும் கூறுமாறு கேட்க வேதியர் தாம் பாண்டிநாட்டைச் சார்ந்தவர் என்றும், அடிகளைக் காண்பதற்காகவே அங்கிருந்து புறப்பட்டு வருவதாகவும் கூறுகின்றார். மேலும், அவர் "பெரியீர், வானோர்களாலும் காண்டற்கரிய இறைவனைப் பரிமீது அமர்ந்து வரச்செய்தீர். உமது பெருமையால் பாண்டிநாடு உய்ந்தது. நீர் பெருந்துறைப்பெம்மானை வணங்கிப் பல தலங்களையும் வழிபட்டுத் தில்லையில் புத்தர்களை வாதில் வென்ற செய்தியையும் கேட்டு யாவரும் பெருமகிழ்ச்சி அடைந்தனர். சிவபெருமானது மெய்ப்பொருள் விளங்க நீவிர் இதுகாறும் அருளிய திருப்பாடல்கள் முழுவதையும் ஓத விரும்பி இவண் போந்தேன். அப்பாடல்களை யாம் எழுதிக் கொள்ளும்படி விளங்கச் சொல்வீராக" என வேண்டுகின்றார்.

மணிவாசகப் பெருமானும் தாம் பாடிய திருவாசகச் செழும் பொருட் பாடல்களையும் முறையே கூறுகின்றார்; வேதியராக வந்த இறைவனும் அப்பாடல்கள் முழுவதையும், ஒன்று விடாமல் எழுதிக் கொள்ளுகின்றார். மீண்டும் அடிகளை நோக்கி "தில்லைச்சிற்றம்பலவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அகப்பொருள் கோவை பாடுவீர்" என வேண்டுகின்றார். அடிகளும் அதற்கிசைந்து கோவை

பாடுகின்றார். வேதியராக வந்த அம்பலவாணர் அதையும் ஒரு பாட்லும் விடாமல் எழுதிக் முடிக்கின்றார். பின்னர் புத்தகத்தைக் கட்டிக் கொண்டு விரைவில் மறைகின்றார். மணிவாசகப் பெருமான் தமக்கு முன் இருந்த அந்தணரைக் காணாமல் மனம் வருந்துகின்றார்; புறத்தே சென்று தேடு கின்றார். பின்னர் வேதியராய் வந்தவர் எல்லாம் வல்ல இறைவனே எனத் தெளிந்து திருவருளின்பத்தில் தோய்ந்து இருக்கின்றார்.

இங்ஙனம் எழுதிச் சென்ற சிவபெருமான் அதன் முடிவில் 'அழகிய சிற்றம்பலமுடையார் எழுதியது' எனத் தமது கையொப்பமும் இட்டு அத்திருமுறை ஏட்டினை தில்லைச் சிற்றம்பலத்தின் திருவாயிற்படியில் வைத்தருள்கின்றார். மறுநாள் பூசனை புரிவதற்கு வந்த அந்தணர் என்று மில்லதோர் புத்தகம் அங்கிருத்தலைக் கண்டு அதிசயித்துத் தில்லை நகரத்தாருக்குத் தெரிவிக்கின்றார். அதனைக் கண்ட நகர மாந்தர் "இஃது இறைவன் அருளிய ஆகமமோ தமிழ் நூலோ என அறிதல் வேண்டும்" என்கின்றனர். அப்பொழுது தில்லை வாழ் அந்தணர் ஒருவர் அந்தத் தெய்வ ஏட்டினை நறுமலர் கொண்டு அருச்சித்து வணங்குகின்றார். பின்னர் அந்த ஏட்டினை அவிழ்த்துப் பார்த்தபொழுது அதன்கண் திருவாசகமும் திருச்சிற்றம்பலக் கோவையும் எழுதப் பெற்று முடிவில் "திருவாதவூரன் சொல்ல அழகிய சிற்றம்பல முடையான் எழுதியது" என்று கைச்சாத்திட்டிருத்தலைக் காண்கின்றார். பின்னர் அனைவரும் இறைவன் திருவருளை வியந்து போற்றுகின்றனர்.

இத்தெய்வத் திருமுறையின் பொருளைக் கேட்டுணர வேண்டும் என்ற பெருவிருப்பம் அனைவருள்ளத்திலும் தோன்றுகின்றது. எல்லோரும் மணிவாசகப் பெருமான் இருந்த இலைக்குடிலை அடைந்து அடிகளை இறைஞ்சி நின்று திருவாசகத் திருமுறை தமக்குக் கிடைத்த அற்புத நிகழ்ச்சியை எடுத்துரைத்து அத்திருமுறைக்குப் பொருள்

விரித்தருளும்படி வேண்டுகின்றனர். இறைவனின் திருவருட் பெருமையை நினைந்து நெக்குருகுகின்றார் வாதவூரடிகள். எல்லோரையும் அழைத்துக்கொண்டு கூத்தப் பெருமான் சந்நிதிக்கு வருகின்றார். "திருவாசகத்திற்குப் பொருளாவார் பொன்னம்பலவராகிய இவரே" என் அனைவருக்கும் சுட்டிக் காட்டி அவர்கள் யாவரும் காண தில்லையம்பலத்தில் புக்கு மறைகின்றார். கூத்தப் பெருமானாகிய இறைவன் மணிவாசகப் பெருமானைப் பாலுடன் கலந்த நீர்போல் பிரிவறக் கலந்து ஒன்றாம் வண்ணம் தன் திருவடிகளில் சேர்த்துக் கொள்ளுகின்றான். அடிகளது திருமேனி சிவசொருபமாகிய இந்த அற்புத நிகழ்ச்சியைக் கண்டவர்கள் கூத்தப் பெருமானது திருவருளை வியந்து திருவாசகத் தேனை நுகர்ந்து மகிழ்கின்றனர். இந்த வரலாறு திருவாதவூரர் புராணத்தில் கண்டது. இந்த வரலாற்றை அறியும் நமக்குத் திருப்பாணாழ்வாரின் வரலாறு நினைவிற்கு வருகின்றது. உலோக சாரங்க முனிவரின் திருத்தோளில் இருந்த வண்ணம் அரங்க நகர் அப்பனின் திவ்விய மங்கல் விக்கிரகத்தை (திருமேனியை) அடிமுதல் முடிவரைக் கண் குளிரச் சேவித்து அதில் ஆழ்ந்து அதன் அழகை அநுபவித்து அந்த அநுபவ அதிசயத்தைப் பின்புள்ளாருக்கும் விளங்கும் பொருட்டு அமலனாதிபிரான் என்ற திவ்வியப் பிரபந்தத்தை அருளிச் செய்து அதன் இறுதியில்,

> என் அமுதினைக்
> கண்ட கண்கள்
> மற்றொன்றினைக்
> காணாவே

என்றதமது துணிபினை வெளியிட்டு உகப்போடு நிற்கையில் பெரிய பெருமாள் அவரை அங்கீகரித்தருளத் திருப்பாணாழ்வார்—பாண் பெருமாள்—அனைவரும் காண அப்பிரானது திருவடிகளில் மறைந்து காய்ந்த இரும்புண்ட நீராகின்றார். இருபெரு அடியார்களும் இப்பூத உடலோடு இறைவன் திருவடிகளில் கலந்த நிகழ்ச்சி நம்மை மகிழ்விக்கின்றது; நாமும் நம்மை மறந்த நிலையை அடைகின்றோம்.

# 12. திருத்தில்லை அருளிச் செயல்கள்

மணிவாசகப் பெருமான் திருத்தில்லையில் வில்வ வனத்தில் இலைக்குடிலில் வாழ்ந்திருந்த காலத்தில் அருளிச் செய்த தெய்வப் பனுவல்களை ஈண்டுக் காண்போம்.

39. **கீர்த்தித் திருவகவல் (2)**: இது திருவாசகத்தில் இரண்டாம் பாட்டாக உள்ளது. நிலைமண்டில் ஆசிரியப் பாவாக அமைந்த இத்திருப்பாடல் 146 அடிகளையுடையது. சிவபெருமான் தன்பால் அன்புடைய மெய்யடியார்கட்கு எளிவந்து அருள் சுரந்த புகழ்ச் செய்திகளை விரித்துரைக்கும் பனுவலாதலின் இது 'கீர்த்தித் திருவகவல்' என்ற திருப் பெயரைப் பெறுகின்றது. கீர்த்தி—புகழ். இதற்குச் 'சிவனது திருவருள் புகழ்ச்சி முறைமை' என்று குறித்துரைத்தார் முன்னைச் சான்றோர் ஒருவர். 'புகழ் பெருகும் செய்கை யெல்லாம் புகல் அகவல்' என்று கூறும் திருப்பெருந்துறைப் புராணம்.

இதை அடிகள் திருத்தில்லையில் திருவீதி வலம் வருங்கால் அருளிச் செய்தார். இதன் காரணமாகவே இன்றும் சைவத் தமிழுலகம் திருக்கோயில் வலம் வருங்காலத்து இப்பனுவலைப் பாராயணம் செய்து கொண்டு வரும் வழக்கம் இருந்து வருகின்றது. குழுவாக வழிபடுபவர்களும் இதனைச் சொல்லிக் கொண்டே வருதல் மரபு. இதனால் வீண்

பேச்சிற்கும் சழக்குரைக்கும் இடம் இல்லாது இறைவனது புகழ்ச்சியிலேயே ஆழங்கால் படுவதற்கு வாய்ப்பாகவும் அமைகின்றது.

தில்லை மூதூரில் ஐந்தொழில் கூத்தியற்றும் ஆடலரசன் உலகத்து உயிர்கள் தோறும் உயிர்க் குயிராய்த் திகழும் தன்னுடைய அருட்குணங்கள் யாண்டும் விளங்க இவ்வுலகில் அன்பிற்சிறந்த அடியார்கள் பொருட்டு நிகழ்த்தியருளிய அற்புத நிகழ்ச்சியாகிய திருவிளையாடல்களை மணிவாசகப் பெருமான் இத்திருவகவலில் விரித்துரைத்துப் போற்றுகின்றார். எடுத்துக் காட்டுகளாக,

> மன்னு மாமலை மகேந்திர மதனில்
> சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்(9-10)
>
> குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசை
> சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும் (27-28)
>
> தர்ப்பண மதனில் சாந்தம் புத்தூர்
> விற்பொரு வேடற் கீந்த விளைவும் (31-32)
>
> ஆங்கது தன்னில் அடியவட் காகப்
> பாங்காய் மண் சுமந் தருளிய பரிசும் (46-47)
>
> வாதவூரினில் வந்தினி தருளிப்
> பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும் (52-53)
>
> பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்
> கட்டமா சித்தி யருளிய வதுவும் (62-63)
>
> ஓரி யூரினின் உகந்தினி தருளி
> பாரிரும் பாலக னாகிய பரிசும்(68-69)

என்பனவற்றில் இத்திருவிளையாடல்களில் சில குறிப்பிட்டிருத்தல் காணலாம். இப்பனுவலின்கண் குறிப்பிடப் பெற்றுள்ள அருட்செய்திகளின் விளக்கத்தைத் நம்பி திருவிளையாடல் பரஞ்சோதி திருவிளையாடல், திருவுத்தர

கோசமங்கைப் புராணம், திருப்பெருந்துறைப் புராணம் முதலிய நூல்கலைக் கொண்டு ஒருவாறு உணர்ந்து தெளியலாம்.

திருப்பெருந்துறையில் அருட்குருவாகப் போந்து மெய்ப் பொருளை உபதேசித்தருளிய சிவபெருமான் அடிகளை நோக்கி 'நலமலி தில்லையுட் கோலமார்தரு பொதுவினில் வருக' (127-28) எனப் பணித்தருளி மறைந்தமையும், அந்நிலையில் உடனிருந்த அடியார்கள் இறைவனது பிரிவாற்றாது தம் உடம்பினைத் துறந்து இறைவனுடன் இரண்டறக் கலந்தமையும், அங்ஙனம் இறைவனை அடையப் பெறாது எஞ்சி நின்ற அடியார்கள் எரியில் பாய்ந்து தம் உடம்பினை விடுத்து இறைவனை அடைந்தமையும் (130-132) கயிலைப் பெருமானாகிய கடவுள் அன்பர்களுக்கு நேர்நின்று அருள் செய்தற் பொருட்டுப் புலியூர்ப் பொதுவாகிய பொன்னம்பலத்திலே புகுந்தருளினமையும் ஆகிய செய்திகள் இப்பனுவலின் இறுதிப் பகுதியில் குறிப்பிடப்பெற்றுள்ளன. இக்குறிப்பினைக் கூர்ந்து நோக்கினால் திருப்பெருந்துறையில் குரவனாக எழுந்தருளிய இறைவன் பணித்தவண்ணம் அடிகள் தில்லைக்கு வந்தபொழுது இப்பனுவலை அருளிச் செய்தார் என்பது தெளிவாகும்.

திருக்குறளில் கடவுள் வாழ்த்தினை அடுத்து 'வான் சிறப்பு' என்ற அதிகாரம் வைக்கப் பெற்றிருப்பதுபோல், திருவாசகத்தில் கடவுள் இலக்கணம் உணர்த்தும் சிவ புராணத்தை அடுத்து இறைவனது இனிய திருவருளாகிய மழையின் சிறப்புணர்த்தும் 'கீர்த்தித் திருவகவல்' என்னும் இப்பனுவல் அமைந்திருத்தல் அறிந்து மகிழத் தக்கது.

40. **திருவண்டப் பகுதி (3):** உருண்டு திரண்டு நெருப்புக் காற்றாக இருப்பது கதிரவன். அதனிடத்திருந்து சிதறி வந்து குளிர்ந்து இறுகியிருப்பது இந்த நிலவுலகம்.

அதே விதத்தில் சுத்த சைதன்ய மாயிருப்பது (உணர்வுடையதாயிருப்பது) சிவம். அந்தச் சிவனிடத்திருந்து சட சக்தி வந்துள்ளது. சடசக்தி பஞ்ச பூதங்களாயின. பஞ்ச பூதங்களிலிருந்து எண்ணிறந்த அண்டங்கள் உண்டாயின. இவை யாவும் சிவபெருமானுக்கு உடலாக அமைந்துள்ளன. ஆதலால் அவற்றைத் திருஅண்டம் என அழைப்பது முறை. அண்டம் என்னும் சொல் உருண்டை அல்லது முட்டை வடிவில் இருப்பது எனப் பொருள்படுவது. எல்லாம் வல்ல பரம்பொருள் பிரபஞ்சப் (அகிலப்) பெரும் பரப்பாகிய அண்டங்களெல்லாம் இல் நுழைக்கதிராகிய வெயிலொளியில் விளங்கித் தோன்றும் நுண்ணிய அணுக்களைப் போன்று மிகச் சிறியனவாகத் தோன்றத் தான் அவற்றினும் மிகப் பெரியவனாகத் (பிரம்மம்-மிகப் பெரியது என்பதை நோக்குக; 'பிரம்மம்' என்பதைப் 'பெரிய பொருள்' என்பர் தாயுமான அடிகள்) தோன்றி எல்லா அண்டங்களுக்கும் அப்பாற் பட்டு விளக்குதலாகிய பருமைநிலையினையும், உயிர்க்குயிராய உள் நின்று எல்லாவகைப் பொருள்களையும் ஊடுருவி இயக்கியருளும் நுண்மைநிலையினையும் ஒருங்குடையவன். இவ்வுண்மையினை இறையருளால் உணரப் பெற்ற மணிவாசகப் பெருமான் அம்முதல்வனது தூலசூக்கும நிலைகளை வியந்து போற்றுவதாக அமைந்தது 'திருவண்டப் பகுதி' என்ற இப் பனுவல்; அகவல் யாப்பில் அமைந்துள்ளது. இஃது 'அண்டப் பகுதி உண்டைப் பிறக்கம்' எனத் தொடங்கி அண்டப் பரப்பின் உள்ளும் பிறம்பும் திகழும் இறைவனது பேராற்றலை விரித்துக் கூறுவதால் 'திருவண்டப்பகுதி' எனத் திருப்பெயர் பெறுகின்றது. 'அண்டப் பகுதி' என்னும் இது 'ஆத்திசூடி' என்றாற் போல பாட்டின் முதற்குறிப்பால் பெற்ற பெயராகின்றது 'இணைக் குறளாசிரிப்பா' வடிவில் அமைந்த இது 182 அடிகளையுடையது.

இப்பனுவலுக்கு 'சிவனுடைய தூலசூக்குமத்தை வியந்தது' என்று முன்னுள்ளோர் கருத்துரை வரைந்துள்ளனர். ஆனால் பதிகக் கருத்தும் பதிகப் பெயரும் முன்னயை போல ஒரு நோக்குடையன அல்ல. இறைவன் செய்தருளும் தொழில்களில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் என்னும் நான்கினைப் பற்றிப் பொதுவாகவும் விரிவாகவும் தெரிந்து கொள்ளுதற்கேற்ற அரும் பொருள்கள் இதன்கண் விரித்துரைக்கப் பெற்றுள்ளன. இப் பொருளைமைதியைத் திருவாசக உண்மையும் குறிப்பிடும்.

அளக்கலாகாப் பேரளவினவாகிய அண்டங்களெல்லாம் இறைவனது அருள் வெளிப் பரப்பினுள்ளே சிறிய அணுக்களையொப்ப அடங்கித் தோன்றுகின்றன. ஆகவே அவரது பெருமை, சொல்லுக்கும் மனத்திற்கும் எட்டா இயல்பினது. அண்டங்களின் தலைவராக நியமிக்கப்பெற்ற தெய்வங்களாகிய நுண்ணிய உயிர்களாலும் அறிய வொண்ணா நிலையினன்; உயிர்க்குயிராய் உள் நின்று இயக்குவோனும் அவனே. ஆகவே அப்பெருமான் நுண்ணியவற்று ளெல்லாம் மிக நுண்ணியன் ஆகின்றான். உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாச் சிறப்பினவாய் அண்டப் பரப்பில் திகழும் ஞாயிறு, திங்கள், வான், வளி, தீ, நீர், மண் முதலிய எல்லாப் பொருள்களுக்கும் ஆற்றலை வழங்கி அவற்றைத் தொழிற் படுத்துவோன் முதல்வனே. பேரருளாளனாகிய அப் பெரியோன் அன்புடைய அடியார்களுக்கு அணுகி நின்றருளும் எளிமைத்திறமுடையவன். அன்பரல்லாதாருக்கு மிகமிகச் சேய்மையனாக அப்பாற்பட்டு நிற்கும் அருமைத் தன்மையுடையவன். இறைவன் மாதொருபாகனாக எளிவந்து தோன்றி வழங்கிய பேரின்பம் உடம்போடிருந்து பொறுத்தற்கு இயலாதபடி உள்ளம் முழுவதையும் அகத்திட்டுக் கொண்டது என அடிகள் தாம் பெற்ற அருளாரமுதப் பேரின்ப நுகர்ச்சியை இத்திருவகவலில் விரித்துக் கூறியுள்ளார்.

இறைவன் திருவடிகளை இடைவிடாது போற்றும் பெரியோர்களே 'யான்' என்ற அகப்பற்றையும், 'எனது, என்ற புறப்பற்றையும் நீத்த நீத்தாராவர். புலன்களில் செல்லும் அவா ஐந்தினையும் அடக்கியவர்கள் இவர்கள்; சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் தன் மாத்திரை களின் ஐந்தனது கூறுபாட்டையும் உள்ளவாறு உணர வல்லவர்கள். அணு முதல் அண்டம் ஈறாகவுள்ள பொருள் களைப் பற்றிக் கூர்ந்து ஆராய்ந்து உணர்த்தவல்ல பேரறிவு முற்றத் துறந்த முனிவர்களாகிய இப்பெருமக்களுக்கே உரியது. இறைவனது இயல்பினை உணர்த்தும் முகமாக 'அவனருளாலே அவன்தாள் வணங்கிய' மெய்யடியார் களாகிய நீத்தார் பெருமையினையும் உடம்பொடு புணர்த்து விளக்கிய திறம் உணர்ந்து மகிழத் தக்கது. ஆதலின் இத்திருவகவல் திருக்குறளில் 'நீத்தார் பெருமை' என்ற அதிகாரத்தைப் போன்று திருவாசகத்தில் மூன்றாம் திருப் பாட்டாக அமைக்கப் பெற்றிருப்பது நீத்தார் பெருமை என்ற அதிகாரத்திற்கும் இதற்கும் உள்ள தொடர்பை இனிது புலப்படுத்துகின்றது. இந் நில உலகும் இதனைச் சூழ இயங்கும் ஏனைய உலகங்களும் உருண்டை வடிவினவாய் ஒன்றுக்கு ஒன்று ஈர்ப்பாற்றல் உடையனவாக இயங்கி வரும் அற்புதக் காட்சியினை அடிகள் விளக்குவது நம்மை வியப்பினில் ஆழ்த்துகின்றது. இதனை எண்ணியே பாரதி யாரும்,

**நக்க பிரானருளால் — இங்கு**
**நடைபெறும் உலகங்கள் கணக்கிலவாம்**
**தொக்கன அண்டங்கள் — வளர்**
**தொகைபல கோடிபல்கோடிகளாம்!**

இக்கணக் கெவரறிவார்? — புவி
எத்தனை யுளதென்ப தியாரறிவார்
நக்க மிலினறிவான்; — மற்று
நானறியேன் பிற நாரறியார்[3]

என்று கூறியதாகக் கருதலாம்.

41. போற்றித் திருவகவல் (4): 'போற்றி' என்னும் சொல் பெருவரவிற்றாய் (159) இப்பனுவலில் காணப் படுதலின் இது 'போற்றித் திருவகவல்' என்னும் பெயர் பெறுகின்றது. 'போற்றி' என்ற சொல் வணக்கம் எனப் பொருள்படும். 'நமசிவாய' என்னும் மந்திரத்தின் முன்னுள்ள 'நம' என்னும் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் 'போற்றி' என்பது. போற்றுதல் என்பது புகழ்தல், வணங்குதல், குறிக்கொண்டு பாதுகாத்தல் எனப் பல பொருள் தரும் ஒரு சொல். 'போற்றி' என்பது 'வணக்கம்' என்ற பொருளிலும், 'எம்மைப் பாதுகாத்தருள்க' என வேண்டிக்கோடற் பொருளிலும் வழங்கும் மந்திரச் சொல் என்பதை இந்த அகவலாலும், போற்றித் திருத்தாண்டகம் (6.5) முதலாக முன்னுள்ள திருமுறைகளில் காணப்பெறும் அருட் பாடலாலும் நன்கு துணியப்படும்.

இந்தப் பனுவலுக்குச் 'சகத்தின் உற்பத்தி' என்றும், அதாவது 'பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கும் முறைமை' என்றும் பழைய குறிப்பு கூறும். இங்கே 'சகம்' என்ற சொல் உயிர்களை உணர்த்தும் என்பர் மறை மலையடிகள் (திருவாசக விரிவிரை-2-ஆம் பதிப்பு பக். 249). உயிர்கள் இவ்வுலகில் பிறந்து வீடுபேறடைதற்குரிய நெறிமுறைகளை அறிவுறுத்தும் நிலையில் இப்பனுவல் அமைந்திருத்தலால் 'முத்திபெறும் நெறியறியும் மொழி போற்றித் திருவகவல்'

3. பாரதியார்: தோ. பா. கோமதியின் மகிமை-5

என இதனை அறிஞர் சிறப்பித்துரைப்பர் (திருவாசக உண்மை). இந்த அகவல் 225 அடிகளையுடைய நிலை மண்டில ஆசிரியப்பா யாப்பில் அமைந்துள்ளது.

ஆன்மாக்கள் அல்லல் பெறும் பிறவிகளாகிற யானை முதல் எறும்பு ஈறாகிய பல பிறவிகளிலும் தப்பி மானிடப் பிறப்பைச் சாரவும் (11-12), அன்னை வயிற்றில் பத்துத் திங்கள் இருந்து தப்பிப் பிழைக்கவும் (13-25), ஆண்டு ஏற ஏற உண்டாகும் அல்லல்களில் தப்பவும் (26-27), காலை மலமொடு கடும்பகல் பசி, இரவு, வேலை, உறக்கம் முதலிய வற்றினின்று தப்பவும் (28-29), காளைப் பருவத்தில் மங்கையர்கண் வீச்சினின்று தப்பவும் (30-5) வாழ்க்கைப் போராட்டத்தில் விளையும் செல்வம் நல்குரவு, கல்வி கல்லாமை முதலியவற்றில் தப்பவும் (36-40), பல்வேறு சமயச் சழக்கர்களிடமிருந்து தப்பவும்(45-55) பெருங்கருணை புரிந்த பெருமானின் உபகாரத்தை உணர்ந்தாலல்லது இறைவனைப் போற்றுதல் நிகழாதாதலின் முதற்கண் எண்பத்தேழு அடிகளால் இந்த அகிலத்தின் தோற்றமும் குருபரனாக வந்து ஆட்கொள்ளும் முறைமையும், பின்னர் எண்பத்து ஏழாம் அடி முதல் இருநூற்று இருபத்து ஐந்து அடிவரைவுள்ள அப்பனுவவின் பிற்பகுதி சிவபெருமானை முன்னிலைப் படுத்திப் போற்றும் மந்திர மொழியாக அமைந்துள்ளது. இப்பகுதி வடமொழி எசுர் வேதத்தின் இடையே அமைந்த திருஉருத்திரத்தைப் போன்று சிவபரம் பொருளை மலர்தூவி வழிபடுதற் கேற்ற செந்தமிழ் மந்திரங்களாக அமைந்துள்ளதென்றும், இவை திருக் கோயில்களிலும் பிற இடங்களிலும் இறைவனை வழிபடு வதற்குரிய சிறப்புரிமை வாய்ந்தனவென்றும் மறைமலை அடிகள் விளக்கியுள்ளனர்.

திருக்குறளில் உள்ள 'அறன்வலியுறுத்தல்' என்னும் அதிகாரத்தைப் போன்று திருவாசகத்தில் நான்காம்

பனுவலாக முறைப்படுத்தப் பெற்றது இந்த அகவல் ஆகும். முற்றத்துறந்த முனிவர்களால் உணர்த்தப்படும் உறுதிப் பொருள்களுள் இம்மை மறுமை வீடு என்னும் மும்மை நலன் களையும் ஒருங்கே தருவது அறம். எனவே முதற் பொருளாகிய இந்த அறத்தின் பெருமையினை வலியுறுத்தும் நோக்கத்துடன் 'நீத்தார் பெருமை' என்ற அதிகாரத்தை அடுத்து 'அறன் வலியுறுத்தல்' என்ற அதிகாரம் வைக்கப் பெற்றுள்ளது. திருக்குறளில் அமைந்த இம் முறையினை யொட்டியே திருவாசகத்திலும் நீத்தாராகிய திருத் தொண்டர்களின் பெருமையினை விளக்கும் 'திருவண்டப் பகுதி'யின் பின் என்றும் மாறாத நல்லறத்தின் சிறப்பினை வற்புறுத்தும் இப்பனுவல் வைக்கப்பெற்றுள்ளமை காணலாம்.

42. **திருச்சாழல் (12)**: 'சாழல்' என்பது மகளிர் விளையாடல்களுள் ஒன்று. ஒருத்தி ஒரு கதையின் செயலைப் பற்றி வினா நிகழ்த்த, மற்றொருத்தி கதையின் இடமாகத் தோன்றிய முரண்பாட்டினை நீக்கி அதன் உட்பொருளை விளக்கி விடை கூற, இவ்வாறு மகளிர் இருவர் ஒரு கதை பற்றி வினாவும் விடையும் நிகழ்த்தி உரையாடி விளையாடும் முறையில் அமைந்தது சாழல் என்னும் இவ்விளையாட்டு. சிலப்பதிகார உரையில் பல்வரிக் கூத்துள் ஒன்றாகக் குறிக்கப்பெறும் 'நற்சாழல்' இதுவேயாகும்.

திருவாதவூரடிகள் தில்லையில் புத்தரொடு நிகழ்த்திய வாதப் போரில் ஈழ நாட்டு மன்னன் வேண்டுகோட்கிரங்கி அவன் மகளாகிய ஊமைப் பெண்ணைப் பேச வைக்கத் திருவுளங் கொள்ளுகின்றார். அடிகள் ஊமைப் பெண்ணை நோக்கிச் சிவபெருமானுடைய திருவருட்செயல்களின் உட்கருத்து பற்றி வினவுகின்றார்; ஊமைப் பெண்

அவ்வினாக்களுக்கெல்லாம் தக்கவாறு விடை கூறுகின்றாள். இந்த வினாவிடைகள் தாம் 'திருச்சாழல்' என்ற பனுவலாக உருவெடுத்தது என்பது வரலாறு. இந்தப் புராண வரலாறு கற்பனையாக இடைச் செருகலாக அமைந்துள்ளது என்பது பெருந்தவத் திரு சித்பவாநந்த அடிகளது கருத்தாகும். அவர் கூறுவார்; இது யுக்திக்கோ சமய சம்வாதத்துக்கோ பொருந்தாதது. கடவுள் உண்டு என்றோ இல்லை என்றோ வாதிப்பது புத்தமதக் கொள்கையன்று. அக்ஞேயவாதம் (Agnosticism) புத்தமதமாகின்றது. அதாவது கடவுளைப் பற்றி மனிதனுக்கு ஒன்றும் தெரியாது. அதனால் அவனுக்குக் குறையொன்றும் இல்லை. தன்னைத் தானே திருத்தியமைத்துக் கொள்ள மனிதனுக்கு இயலும். அதற்குச் சீலம் முற்றிலும் அவசியமானது. "அறிவுக்கு எட்டாத ஒரு பொருள் இருக்கிறது என்றோ இல்லை யென்றோ வாதாடி வீண் பொழுது போக்காதே" — என்பது புத்தமதம்.

இப்பனுவல் எல்லாம் வல்ல சிவபெருமானது முழுமுதல் தன்மையினையும் அம்முதல்வன் உயிர்கள்மேல் வைத்த பெருங்கருணைத் திறத்தையும் விரித்துரைக்கும் முறையில் அமைந்தது. இதற்குச் 'சிவனுடைய காருண்யம்' என முன்னோர் கருத்துரை வரைந்துள்ளனர். 'முன்னார் கலையுமுணரா மூகையாமேடி, தன்னாற்பதி முதன்மை சாற்றியதாந் திருச்சாழல்' என்பது திருவாசகவுண்மை. 'இப்பதிகம் கதையழித்துப் பொருள் சொன்னது' என்பது தாண்டவராயர் குறிப்பு. சிவபுராணங்களின் உட்கருத்து இதுவெனத் தெரிவிக்கும் முறையில் அடிகள் இப்பனுவலை அருளிச் செய்துள்ளார் என்பது தாண்டவராயர் குறிப்பி னால் தெளிவாகும் உண்மையாகும்.

சிவபெருமான் ஆன்மாக்கள்மீது வைத்த காருண்யத் தினால் வெண்ணீறு பூசுதல், அரவம் பூணுதல், கோவண

ஆடை உடுத்தல், சுடுகாட்டைக் கோயிலாகவும், புலித் தோலை ஆடையாகவும் கொண்டுள்ளமை, அயன் அநங்கன் முதலியோரை ஒறுத்தமை, அயனும் மாலும் அடிமுடி காணாத வண்ணம் அழலாய் நிமிர்ந்து தோன்றினமை கங்கையைச் சடையில் கரந்தமை, ஆலகால நஞ்சை உண்டமை, மாதொருபாகன் ஆகினமை, தசையொழிந்த உடலின் முழு எலும்பாகிய கங்காளம் தரித்தமை, அம்பலத்தே கூத்தாடி அமுது செய்யப் பிச்சையேற்றுத் திரிந்தமை முதலிய திருவருட் செயல்களைப் பற்றிய விளக்கங்கள் இப்பனுவலில் இடம் பெற்றுள்ளன.

இப்பனுவலின் இரண்டு பாடல்களையும் அவற்றிலடங்கி யுள்ள திருவருட் செயல்களையும் விளக்குவேன்.

**பூசுவதும் வெண்ணீறு**
**பூண்பதுவும் பொங்கரவம்**
**பேசுவதும் திருவாயால்**
**மறைபோலும் காணேடி**
**பூசுவதும் பேசுவதும்**
**பூண்பதுவும் கொண்டென்னை**
**ஈசனவன் எவ்வுயிர்க்கும்**
**இயல்பானான் சாழலோ (1)**

[பொங்கு அரவம் — சீறுகின்ற பாம்பு; மறை — இரகசியம்; வேதம்]

என்பது இப்பனுவலின் முதற் பாடல். இதன் முதல் இரண்டடிகள் ஒருத்தியின் வினாவாகவும் ஈற்று இரண்டடிகள் அதற்கு மற்றொருத்தியின் விடையாகவும் அமைந் துள்ளன.

ஒருத்தி: பூசுவது வெண்ணீறு. அணிவது சீறுகின்ற பாம்பு. பேசுவது வேதம். தெய்வம் என்னும் ஒரு பொருளுக்கு இவையெல்லாம் பொருந்துமா?

**மற்றொருத்தி :** ஆம்; பொருந்தும். ஏனென்றால் ஈசன் தானே இயற்கையாகவும், அதிலுள்ள உயிர்கள் அனைத்து மாகவும் இலங்குகின்றான். அவனுடைய இயல்பே இப்படி மூன்று விதங்களில் உருவகப்படுத்தி விளக்கம் பெற்றுள்ளது.

இக்கருத்தை அற்புதமாகத் தெளிவாக்குவர் தவத்திரு சித்பவானந்த அடிகள்.

"ஒருதேசம் இயற்கையாய் அமைந்தது. அதை விளக்க தேசப்படம் மனிதனால் அமைக்கப்பெற்றது. இயற்கை யானது இறைவனின் உண்மை சொரூபம். இனி அவரை ஒரு மனிதனாகச் சமைத்து, நீறு பூசுவித்து, பாம்பு அணிவித்து வேதம் ஓதப் பண்ணியது மனிதனது கற்பனை. ஆயினும் இந்தக் கற்பனை மூலம் தத்துவம் மிளிர்கின்றது. இந்தத் தத்துவத்தை எந்தச் சமயவாதியும் மறுக்க முடியாது. உலகம் அழியும் தன்மையது; இறைவன் அழியாதிருப்பவன். உலகப் பொருள் ஒன்றில் அழியும் பகுதி தகனமாகின்றது. அழியாப் பகுதி சாம்பலாய் எஞ்சி நிற்கின்றது. பிறகு அதை எவ்வளவு சுட்டாலும் சாம்பலாகவே நிற்கும். எனவே சாம்பல் பரம் பொருளின் சின்னம். அழியும் தன்மையுள்ள அகிலத்திற்கு ஆதாரமாக அழியாப் பொருள் ஒன்று உண்டு என்னும் உண்மையை விளக்குகிற சின்னம் திருநீறு.

ஈசனுடைய படைப்பில் இனியவை இடம் பெற்றிருப்பது போன்று இன்னாதவைகளும் இடம்பெற்றுள்ளன. உயிர் களின் முன்னேற்றத்திற்கு இன்னாதவை எதிர்மறையில் தூண்டுதல் போடுகின்றன. எனவே அவை முற்றிலும் தேவையாகின்றன. சிவன் அரவத்தை அணிந்திருப்பதன் உட்கருத்து இதுவேயாகும்.

சரம் - அசரம், சேதனம் - சடம் ஆகிய அனைத்திலும் அறிவு மிளிர்கின்றது. ஏனென்றால் அனைத்தும் அறிவி னின்றும் வடிவெடுத்தவைகள். எது வித்தையின் சொருபமோ

அது வேதம். அகிலம் முழுவதும் வேத சொரூபம். சிவபெருமான் வேதம் ஓதிக்கொண்டிருக்கின்றார் என்பதன் பொருள் இதுவே. அவரவருக்கு உகந்த வேதத்தை இறைவன் ஓதுகின்றார் என்று சமயவாதிகள் இயம்புவது இத்தத்துவத்திற்கு ஒத்துள்ள கற்பனை.''[2]

இப்பனுவலில் நான்காம் பாடல்

**அயனை அனங்கனை**
**அந்தகனைச் சந்திரனை**
**வயனங்கள் மாயா**
**வடுச்செய்தான் காணேடி**
**நயனங்கள் மூன்றுடைய**
**நாயகனே தண்டித்தல்**
**சயமன்றோ வானவர்க்குத்**
**தாழ்குழலாய் சாழலோ (4)**

[அயன் - பிரமன்; அனங்கன் - மன்மதன்; அந்தகன் கூற்றுவன்; வயனம் - அடையாளம்; நயனம் - கண்]

என்பது. இந்தப் பாடலும் முன்காட்டிது போன்றே வினா விடையாக அமைந்துள்ளது.

**வினா :** பிரமனையும் காமனையும் யமனையும் சந்திரனையும் சிவன் தாக்கிச் சிதைத்தான். அப்படி ஏற்பட்ட தழும்புகள் என்றைக்கும் மறந்து பட்டுப் போகாத பழிச் சொற்களை அவர்கள்பால் கொண்டு வருவனவாயின. பரமன் இப்படிச் செய்தது நியாயமா?

**விடை :** நியாயமே. பரமன் முக்கண்ணன். அவனது மூன்றாவது கண் அதீத நிலையைக் குறிக்கும் ஞானக்கண் ஆகின்றது. அகலத்தில் உழலும் தேவர்கள் குறைபாடு உடையவர்கள் என்பதை அவர்களுக்கு எடுத்துக் காட்டுதற்

---

2. சிதபவாநந்தர் : திருவாசகம் - பக் 564 -565

பொருட்டுப் பரமன் அன்னவர்களைத் தண்டித்தார். தாங்கள் திருந்தியமையத் தீர்மானம் செய்துகொண்டதே தேவர்களுக்கு வெற்றியாகும்.

இந்த அகில வாழ்க்கையே குறைபாடுடையது. அதில் ஈடுபடுகின்றவர்கள் தேவர்களேயானாலும் அவர்கள் துன்பப்பட்டே ஆகவேண்டும். சீவர்கள் எல்லோருக்குமே துன்பம் என்னும் தண்டனை வந்தமைகின்றது. துன்பத்தினின்று விடுபடுதற்பொருட்டு அவர்கள் மேல்நிலை எய்துகின்றனர். இறைவனுடைய அருள் இங்ஙனம் மறக்கருணையாக வந்தமைகின்றது. பரநிலை எய்தும்வரை துக்கமுண்டு என்பதை முக்கண்ணன் உயிர்களுக்கு சிக்கலைக் கொடுத்து அறிவுறுத்துகின்றான்.

43. **திருப்பொன்னூசல் (16)** : இங்கு ஊசல் என்பது ஊஞ்சலைக் குறிக்கும். ஊஞ்சலில் ஏறியாடுதல் மகளிர்க்கு மனமகிழ்ச்சி விளைவிக்கும் விளையாட்டாகும். இளமகளிர் ஊசலில் ஏறிவிளையாடுங்கால் பாட்டுடைத் தலைவனது புகழ்திறத்தைப் பாடிக் கொண்டு ஆடும் நிலையில் அமைந்த இசைப்பாட்டு 'ஊசல்வரி' என்று வழங்கும். சிலப்பதிகாரம் வாழ்த்துக் காதையில் ஊசல்வரிப்பாடல்கள் மூன்றும் சேர மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெற்றவை. இங்ஙனமே சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு ஊஞ்சலாடும் மகளிர் பாடிப் பரவும் நிலையில் மாணிக்கவாசகப் பெருமான் அருளிய பனுவல் 'திருப்பொன்னூசல்' என்பது. மகளிர் பொன்னாற் செய்த ஊஞ்சலில் இருந்து இறைவன் புகழைப் பாடிக்கொண்டு ஒருவரையொருவர் 'பொன்னூசல் ஆடாமோ?' என்று வினவுவதாக அமைந்தது இப்பகுதிப் பனுவல். இதற்கு 'அருட்சுத்தி' எனக் கருத்துரைத்தனர் முன்னோர். அருட்சுத்தியாவது, ஆன்மா தன்முனைப்பழிய அருளொடு கூடுதல்

ஆகும். அருளொடு கலத்தலால் ஆன்மா அடையும் சுத்தி அருட்சுத்தியாகும். தில்லையில் அருளிச் செய்யப்பெற்ற இப் பனுவல் ஒன்பது திருப்பாடல்களைக் கொண்டது.

ஊசலில் அசைந்தாடும் மகளிர் தம் சார்பில் நில்லாது தமக்கு ஆதாரமாகிய ஊசலின் சார்பில் அமைந்த அதன் வழியே இயங்கி மகிழ்தல்போன்று, சிவபெருமான்பால் நேயம் மிக்க அடியார்களும் தம் உணர்வின் வழியொழுகாது எப்பொருட்கும் சார்பாகிய இறைவனது அருளே சார்பாகப் பற்றி நின்று யாண்டும் இயங்கி மகிழும் திறத்தினை விளக்கும் நிலையில் அமைந்தது இத்திருப்பொன்னூசல் எனக் கருத் துரைத்தல் ஏற்புடைத்தாகும். 'அருட்சக்தி இருந்தாடத் தாலாட்டல் பொன்னூசல்' என்று குறிப்பிடும் திருப்பெருந் துறைப்புராணம். இதனால் ஊஞ்சலில் இருந்து ஆடுவது அருட்சக்தியும், அங்ஙனம் ஆடத் தாலாட்டும் தொழிலினர் அன்புடைய மகளிரும் என்பது பெறப்படுகின்றது. இது திருக்கோயிலில் நிகழும் பொன்னூசல் விழாவினை அடியொற்றி அமைந்ததெனக் கொள்ளுதல் பொருந்தும்.

இப்பனுவலில் ஒரு பாடலைக் காண்போம்.

**கோல வரைக்குடுமி வந்து குவலயத்துச்**
**சால அமுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்து**
**ஞால மிகப்பரிமேல் கொண்டு நமையாண்டான்**
**சீலந் திகழும் திருவுத்தர கோசமங்கை**
**மாலுக் கரியானை வாயார நாம்பாடிப்**
**பூலித் தகங்குழைந்து பொன்னூச லாடாமோ (8)**

[கோலவரைக்குடுமி - கயிலைமலையின் உச்சி; ஞாலம் - உலகம்; மிக - உயர; பூலித்து - பூரித்து; (ரகரலகரப் போலி].

என்பது எட்டாம் பாடல். இதில், ''அழகிய வெள்ளிமலையின் கண் நின்று திகழ்பவன் சிவன். அவன் திருவுத்தரக்கோச

மங்கைக்கண் உமையம்மையுடன் எழுந்தருளியிருந்து அமுதுண்டருளினர்; தாழ்ந்த கடலின்மீது வலைவாணனாகக் காட்சியளித்தருளினன்; நிலவுலகம் எங்கணும் சிவவிளக்கம் மிகும்படியாகப் பாண்டியன்முன் குதிரைச் சாத்தாய் எழுந்தருளி நம்மை ஆண்டுகொண்டருளினன். செல்வமும் சிறப்பும் சேர்வதாகிய செந்நெறி திகழும் திருவுத்தரகோச மங்கைப் பதியிலுள்ளான். மாலுள்ளிட்ட தேவர்களும் அறிதற்கும் அரியவன். அவன் திருவடியினை வாயாரப் பாடி அகம் உருகி உள்ளும் புறமும் பொலிவுற்றுப் பொன்னூசல் ஆடுவோமாக' என்கின்றார்.

இங்கு வெள்ளி மலையால் குறிஞ்சியும், திருவுத்தர கோசமங்கையால் முல்லையும், தாழ்கடலால் கெய்தலும், பரிமேலிவர்தலால் மருதமும் ஆகிய நானிலமும் குறிப்பில் புலனாவதைக் கண்டு மகிழலாம்.

வைணவ சம்பிரதாய நூல்களில் திருமாலையும் பெரிய பிராட்டியாரையும் ஊஞ்சலில் எழுந்தருளுவித்து அவர்கள் புகழைப்பாடித் தோழியர்கள் ஆட்டுவதாக வருவதை ஈண்டு நினைத்தல் தகும். திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் பாடிய "சீரங்கநாயகரூசல்" (32 பாசுரங்கள் அடங்கியது) என்ற பனுவலை ஈண்டு நினைத்தல் தகும்.

44. **திருத்தசாங்கம் (19):** ஆட்சிபுரியும் தலைவன் ஒருவனுக்குச் சிறப்பாகச் சொல்லத்தக்க பத்து அங்கங்களையும் எடுத்துரைத்துப் போற்றும் பனுவல் '**தசாங்கம்**' எனப் பெயர் பெறும். வாதவூரடிகள் தில்லையில் வில்வவனத்தில் தங்கியிருந்தபோது பாடியது இப்பதிகம். தன்னேரில்லாத் தலைவனாகிய சிவபெருமான்பால் காதல் கொண்ட நங்கையொருத்தி கிளியை நோக்கிச் சிவபெருமானுக்குரிய பேர், நாடு, ஊர், ஆறு, மலை, ஊர்தி, படை, முரசு, தார், கொடி என்பவை யாவை என வினவக் கேட்ட கிளியானது

முறையே அவ்வங்கங்கள் இவை இவை என விடைகூறும் முறையில் வினாவும் விடையுமாக அமைந்த நேரிசை வெண்பாக்களையுடையது இத்திருப்பதிகமாகும். கிளி கூறும் முறையில் அமைந்திருத்தலால் இதனைக் 'கிள்ளைப் பத்து' என வழங்குதலும் பொருந்தும். இத்திருப்பதிகத்தில் சிவபெருமானுக்குரிய பேர், நாடு, ஊர் முதலிய பத்து அங்கங்களைப் பற்றிய புகழ்ச்சியே பொருளாக அமைந் திருத்தலால் இது 'திருத்தசாங்கம்' என்று பெயர்பெறு கின்றது.

இப்பதிகத்தில் சிவபெருமானுக்குரியனவாகக் கூறப் பெறும் பத்து அங்கங்கள் :

| | | |
|---|---|---|
| **பேர்** | : | ஆரூரன், எம்பெருமான், தேவர்பிரான் |
| **நாடு** | : | தென்பாண்டி நாடு |
| **ஊர்** | : | உத்தரகோசமங்கை |
| **ஆறு** | : | ஆனந்தமாகிய ஆறு |
| **மலை** | : | இன்பமரும் முத்தியருளும் அருளாகிய மலை |
| **ஊர்தி** | : | வான்புரவி |
| **படை** | : | கழுக்கடை (சூலம்) |
| **முரசு** | : | நாதப்பறை |
| **தார்** | : | தாளி அறுகு |
| **கொடி** | : | ஏறு (காளை) |

பாடலுக்கு ஒன்றாக இவை குறிக்கப்பெறுகின்றன. இவ்வாறு தசாங்கம் கூறுதல் பாடாண்திணையில் உலக வழக்கொடு பொருந்தியது; இத்திருத்தசாங்கம் பாடாண்திணையில் 'கடவுள் வாழ்த்தின்' பாற் படும்.

45. **கோயில் மூத்த திருப்பதிகம் (21)** : 'கோயில்' என்பது திருத்தில்லை மாநகரைக் குறிக்கும். மூத்த திருப்பதிகம் என்பது சிறந்த திருப்பதிகம் என்பதாகும். சிறப்பு என்பது பொருள் உண்மை என்றாகும். பொருள் என்பது முப்பொருள்.

அது இறை, உயிர், தளை (பதி பசு பாசம்). இஃது 'அனாதி யாகிய சற்காரியவாதம்' என்று முன்னோர் உரைத்த குறிப்பினால் புலனாகும். சற்காரியவாதம் - உள்ளாக்க வழக்கு. இதனை உள்வழக்கு எனவும் கூறுப. உள் வழக்கு என்பது 'இல்லது தோன்றாது, உள்ளது பொன்றாது' என்ப தாகும். இது தில்லையில் அருளிச் செய்யப்பெற்றது என்பது 'கோயில் மூத்த திருப்பதிகம் சிதம்பரத்தில் அருளடையும் குறிப்பதாகும்' எனவரும் திருப்பெருந்துறைப் புராணத் தொடர்பாலும் அறியலாம். இப்பதிகப் பாடல்கள் பத்தும் அந்தாதித் தொடையாக அமைந்துள்ளன.

இப்பதிகம் தில்லையைப்பற்றிய பழமையான பொருள் கள் பலவற்றையும் அறிவிப்பதாக அமைந்துள்ளது. பழமைக் கெல்லாம் பழமையான இறைவன் வசப்பட்டு அருட்சக்தி இருக்குந் தன்மையும், பொதுவிலக்கணத்தில் அருட்சக்தியின் வசப்பட்டு இறைவன் நிற்குந் தன்மையும், அடியார் வசப் பட்டு இருவரும் இருக்கும் தன்மையும் ஆகிய அநாதியாகிய சற்காரியத்தை உரைப்பதால் இது 'மூத்த திருப்பதிகம்' என வழங்கப் பெற்றது. இவ்வாறே பதினோராந் திருமுறையில் காரைக்கால் அம்மையார் அருளிய திருவாலங் காட்டு மூத்த திருப்பதிகமும் சர்வ சங்கார காலத்தில் இறைவன் இருக்கும் நிலையை அறிவிக்கின்றது. இப் பதிகத்தின்,

**உடையான் உன்றன் நடுவிருக்கும்**
**உடையாள் நடுவுள் நீயிருத்தி**
**அடியேன் நடுவுள் இருவீரும்**
**இருப்ப தானால் அடியேன் உன்**
**அடியார் நடுவுள் இருக்குமரு**
**ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்**
**முடியா முதலே யென்கருத்து**
**முடியும் வண்ணம் முன்னின்றே (1)**

[உடையாள் - உமையம்மை; நடுவிருத்தல் - உள்ளீடாய் இருத்தல்; முடியா முதல் - ஈறு இல்லாத முதல்வன்]

என்பது முதற் பாடல். இதில் ''பொன்னம்பலத்தில் திருக் கூத்தியற்றியருளும் பொன்றாத முதல்வனே, பொருள்களை உடைமையாகவும், உயிர்களை அடிமையாகவும் உடையாளாம் திருவருளன்னை உனக்கு உயிராக இருப்பாள்; அவ்வுடையாளுக்கு உயிராக நீ இருப்பாய், நீங்கள் இருவீரும் அடியேனுக்கு உயிராக உள்ளீர்கள். அம்மெய்ம்மையால் உன் மெய்யடியார்களால் அடியேன் உயிர் போன்று பேணப் பட்டு அவர்கள் எனக்கு உயிராக அடியேன் அவர்கள் நடுவுள்ளிருக்கும் பேரருளினைப் புரிந்தருளுதல் வேண்டும்'' என்கின்றார்.

இத்திருப்பாடல் திருவாசக நூலுக்கு இதய மந்திரமாகப் பாராட்டப் பெறுவது. நடுவிருத்தல் : உள்ளீடாயிருத்தல், உயிர்க்குயிராயிருத்தல், மெய்ப்புணர்ப்பாயிருத்தல் என்பன வாகும். இதனை '**அந்தர்யாமித்துவம்**' என்றும் கூறுவர். உள்ளீடு, உயிர்க்குயிர், மெய்ப்புணர்ப்பு என்னும் மூன்றும் முறையே அறிவு, ஆற்றல், அன்பு என்னும் மூன்றன் புடை பெயர்வுகளைக் குறிப்பனவாகும். அத்தன் மெய்யினின்றும் அன்னை மெய் தோன்றினமையால் நடுவென்றலும் ஒன்று. அத்தன் மெய் - சிவ தத்துவம்; அன்னை மெய் - சத்தி தத்துவம். மெய்ப்புணர்ப்பு - சுத்தாத்துவிதம். '**சிவசிவ**' என்னும் இப்பொருண் மறைக்கண் 'வ'கரமாகிய உடையாள் இருபக்கமும், '**சி**' கரமாகிய உடையான் நிற்க நடுவுள் இருக்கின்றமை புலனாகும். அதுபோல் 'சி' கரமாகிய உடையானும் இருபக்கமும் 'வ' கரமாகிய உடையாள் நிற்க நடுவுள் இருக்கின்றமையும் புலனாகும். இவைபோன்று '**சிவயசிவ**' என்னும் பொருள் மறைக்கண் இருபக்கமும் 'சிவ' என்னும் உடையானும் உடையாளுமாகிய இருவரும் நிற்ப,

'ய' கரமாகிய ஆருயிர் நிற்கின்றமை புலனாகும். 'சிவயசிவ' என்னும் திருவைந்தெழுத்து மீ நுண்மையாகும்; மீநுண்மை அதி சூக்குமம். 'சிவசிவ' முன்மையாகும்; முன்மை காரணம். 'சிவயநம' என்ற ஐந்தெழுத்தின் புற அடையாளம் ஐவகை மன்றங்கள். இவை மணி, பொன், வெள்ளி, செப்பு(தாமிரம்) ஓவியம். இவை முறையே திருவாலங்காடு, திருத்தில்லை, திருக்கூடல் (மதுரை), திருநெல்வேலி, திருக்குற்றாலம் என்பர். இவை ஐந்திணையும் குறிக்கும் பொருண் மறை 'சிவயசிவ' என்பதாகும். அடியார்கள் உண்மையில் சிவ வண்ணமேயாகின்றார்கள். மெய்யடியார்கள் அகத்துத் திருவைந்தெழுத்தினை ஆராக்காதலுடன், உணர்விற் கணிப்பதால் உடையான் உடையாள் நடுவுள்ளாகின்றனர். புறத்துச் சிவனார் திருவடையாளமாகிய திருவெண்ணீறும் சிவையின் திருவடையாளமாகிய சிவமணியும் பூணுதலால் அவ்விருவர்களின் நடுவுள்ளிருக்கின்றனர். திருநீறும் சிவமணியும் உடலிடங் கொள்ளுவதே 'எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்' (கோயில் திருப்பதிகம்-10) என்பதன் மெய்ப் பொருளுமாகும்.

திருப்பெருந்துறையில் சிவகுரவனாக எழுந்தருளின போது அன்புடை அடியார்கட்குக் காட்சி தந்து வெளிப் பட்டருளியும் தமக்கு ஓரளவு வெளிப்பட்டு முழுவதும் வெளிப்படாது மறைந்தும் நின்ற இறைவனது நிலையினை எண்ணி ஏக்கற்ற உளத்தினராகிய அடிகள்,

**கரைசேர் அடியார் களிசிறப்பக்**
**காட்சி கொடுத்துஉன் அடியேன்பால்**
**பிரைசேர் பாலின் நெய்போலப்**
**பேசா திருந்தால் ஏசாரோ (5)**

எனப் 'பொன்னம்பலத்தாடும் அமுதினைப்' போற்றுவார். பிரை சேர்ந்த பாலினகத்து (தயிரில்) நெய் முழுதும் வெளிப்

படாது சிறிது புலப்பட்டுத் தோன்றுமாறு போன்று, இறைவன் அடிகளுக்குச் சிறிதளவே தோன்றி அருள் செய்து மறைந்ததைக் குறிப்பிடுகின்றார்.

**விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்**
**மறைய நின்றுளன் மாமணிச் சோதியபன் (5-90:10)**

எனவரும் அப்பர் பெருமானின் அமுதத் திருமொழி ஈண்டு ஒப்பு நோக்கி மகிழ்வதற்குரியது.

அடிகள் அம்பலக் கூத்தனை நோக்கி,

**இரங்கு நமக்கம் பலக்கூத்தன்**
**என்றென் றேமாந் திருப்பேனை**
**அருங்கற் பனைகற் பித்தாண்டாய்**
**ஆள்வா ரிலிமா டாவேனோ (7)**

[என்றென்று - பலகாலும் எண்ணி; அருங்கற்பனை - இல்லாத கற்பனை; ஆள்வார் இலி மாடு - உடையவன் அற்ற ஊர் மாடு]

என்று அன்பினால் வேண்டுவதாக அமைந்தது இத்திருப் பாடல். இதன்கண் 'அருங்கற்பனை' என்றது, யாவராலும் முயன்று பெறுவதற்கு அரியதாய், இறைவனே பெருந்துறை யில் குருவாக எழுந்தருளிக் கற்பித்தருளிய சிவஞான உபதேசத்தினை. ஆள்வாரிலி மாடு - மேய்ப்பாரில்லாத ஊர்க்காளை. 'கண் கெட்ட, ஊர் ஏறாய் இங்கு உழல் வேனோ' (திருச்சதகம்-53) என்று முன்னரும் கூறியுள்ளமை ஈண்டு நினைத்தல் தகும்.

சிரிப்பார் களிப்பார் தேனிப்பர் (9), 'நல்கா தொழி யான்' (10) என்ற முதற் குறிப்புடைய இறுதிப் பாடல்கள் சிவஞானிகளாகிய அடியார்களது அநுபவத்தை இனிது விளக்குவன. சிரித்தல்—'உள்குவார் உள்கிற்றெலாம் உடனிருந்தறிதி' என இறைவனது முற்றுணர்வினையும்,

அதனையறியாது தாம் செய்த சிறுமையினையும் எண்ணி வெள்கிச் சிரித்தல். களித்தல் 'சிறுமான் ஏந்தி தன் சேவடிக் கீழ்ச் சென்று அங்கு இறுமாந்திருக்கும்' நிலையை எண்ணி எண்ணிக் களித்தல். தேனித்தல்—'காணும் கரணங்களெல்லாம் பேரின்பம் எனச் சிவ பரம்பொருளையே பேணித் தியானித்து உள்ளம் அள் ளூறித் தித்திக்கப் பெறுதல்.

**45. கண்ட பத்து (31)** : பல தலங்களையும் சேவித்துக் கொண்டு தில்லை மூதூரையடைந்த மணிவாசகப் பெருமான் தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் இயற்றியருளும் ஆனந்தக் கூத்தன் ஆசிரியத் திருமேனி காட்டி அருள்புரியக் காண்கின்றார். இதனைக் கண்ட அடிகள் ஆனந்தக் கண்ணீர் சொரியும் நிலையில் **'கண்ட பத்து'** என்ற பதிகம் பாடுகின்றார் என்பது வரலாறு. 'நிருத்த தரிசனம்' என்பது பழைய குறிப்பு. நிருத்தம் - கூத்து, நடனம்.

**இந்திரிய வயமாக்கி**
**இறப்பதற்கே காரணமாய்**
**அந்தரமே திரிந்துபோய்**
**அருநரகில் வீழ்வேற்குச்**
**சிந்தைதனைத் தெளிவித்துச்**
**சிவமாக்கி என்னயாண்ட**
**அந்தமிலா ஆனந்தம்**
**அணிகொள் தில்லை கண்டேனே** (1)

[இந்திரியம் - பொறிகள்; அந்தரம் - வான்; சிவமாக்கி - சிவத்தின் வசப்படுத்தி; அந்தம் இலா - முடிவு இல்லாத]

என்பது இதன் முதற்பாடல். இதில், ''மெய்வாய் கண் செவி மூக்கு என்னும் ஐவகைப் பொறிகளின் வயப்படு மயக்க மெய்தித் திருவடி சாராது பிறந்து இறப்பதற்கே காரணமாகிப் பற்றுக்கோடும் நிலைபேறுமின்றி உழல்வதாகிய

அந்தரமே திரிந்துழன்று அதன் பயனாக மீளா நரகிற்கு ஆளாய் வீழ்ந்து மாளாத் துன்பமுறும் அடியேற்கு எண்ணி லாகிய சிந்தையினைத் திருவருளால் தெளிவித்துத் தன் எண் குணங்களையும் தந்து தன் வயமாக்குதலாகிய சிவமாக்கி எளியேனையாட் கொண்டருளினை. அங்ஙனம் ஆண்ட ஈறிலாத இன்பமே வடிவமாகிய சிவபெருமானை அவனருளால் அழகுமிக்க, தில்லைப் பொதுமன்றின்கண் கண்டு இன்புற்றேன்'' என்கின்றார். இப்பதிகத்தின் ஒவ்வொரு திருப்பாடலும் 'தில்லையில் கண்டேனே' என்று முடிவதால் இது 'கண்ட பத்து' என்ற திருப்பெயரினைப் பெறுகின்றது. இந்திரியங்களின் வசப்பட்டு மயங்கி அழியாத படி கைதூக்கித் தாமாக்கும் தன்மை வாய்ந்த ஆனந்தத்தைத் தில்லையில் கண்டேன்' என்று மகிழ்ந்துரைப்பது 'கண்ட பத்து' என்று திருப்பெருந்துறைப் புராணமும் கூறும். இது பற்றியே பண்டையோர் 'நிருத்த தரிசனம்' எனப் பொருந்தக் கருத்துரைத்தனர். திருநாவுக்கரசர் பெருமான் திருவை யாற்றில் தில்லைக் காட்சியைக் கண்டு பாடிய '**மாதர் பிறைக் கண்ணியானை**' (4.3) என்ற முதற்குறிப்புடைய பாடல் தோறும்

**கண்டேன் அவர்திருப் பாதம்**
**கண்டறி யாதன கண்டேன்**

எனத் தாம் கண்ட தெய்வக் காட்சியினை விரித்துரைத்துப் போற்றியுள்ளமை ஈண்டு நினைவு கூரத்தக்கது.

# 13. திருத்தில்லை அருளிச் செயல்கள்—2

சென்ற கட்டுரையில் தில்லையில் அருளிய எட்டுப் பக்திப் பனுவல்பற்றிய செய்திகளை அறிந்தோம். இங்கு அருளிச் செய்த ஏனையவற்றைப் பற்றி அறிவோம். மணிவாசகப் பெருமான் ஆசிரியத் திருமேனி கொண்டு இறைவனால் ஆட்கொள்ளப் பெற்ற இடம் திருப் பெருந்துறை; அப்பெருமான் இறைவனுடன் கலந்து சிவப் பேறு அடைந்த இடம் திருத்தில்லை. இந்த இரு பேரிடங்களிலும் அதிகமான எண்ணிக்கையில் பனுவல் கள் அருளிச் செய்துள்ளதைக் காண்கின்றோம்.

47. **அச்சப்பத்து** (35): இப்பதிகம் இவ்வுலக வாழ்க்கையில் அறிவுடையோரால் அஞ்சத்தக்கனவும் அஞ்சத் தகாதனவும் இன்ன இன்ன எனப் பகுத்து உணர்த்துவதால் இஃது 'அச்சப்பத்து' என்ற திருப்பெயரைப் பெறுகின்றது. உலக வாழ்க்கையில் அஞ்சத்தக்க கொடியன எல்லா வற்றுள்ளும் இறைவன்பால் அன்பில்லாதவர்களே பெரிதும் அஞ்சி விலக்கத்தக்க கொடுமையுடையவர்கள் என்பது அடிகளின் கருத்தாக அமைந்திருத்தல் இப்பதிகத்தால் தெளி கின்றது.

**'துரையில்வளர் வினைமுழுதும் வரினும்அஞ்சேன்**
**சிவசமயத் தவஞ்சா ராதார்**
**அருகில்வரக் காண்கின்மனம் அஞ்சும்என**
**இகழ்ந்துரைத்தல் அச்சப்பத்தாம்'**

என்பது திருப்பெருந்துறைப் புராணக் கூற்று.

இப்பதிகத்திற்கு 'ஆனந்த முறுதல்' என்று முன்னோர் கருத்துரை கூறியுள்ளனர். நேயத்திலே ஒன்றுபட்டுச் சிக்கென அழுந்தினைமையால் ஏற்படும் பெருங்களிப்பு என்பது இதன் பொருள். சிவானந்தம் உற்றார்க்கன்றி இத்தகைய அஞ்சாமையும் அச்சமும் ஒருங்கு நிகழாவாதலின் இக்கருத்து பொருத்தமாக அமைகின்றது.

**அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது**
**அஞ்சல் அறிவார் தொழில்** (குறள்—428)

எனவரும் திருக்குறட் பொருளைத் தெளிவுறப் புலப்படுத்தும் முறையில் இப்பதிகத் திருப்பாடல்கள் அமைந்துள்ளன. பாடல்தோறும் முதலடியில் அஞ்சத்தகாதனவற்றை எடுத்துக் காட்டி மற்றைய மூன்று அடிகளில் அஞ்சத்தக்கனவற்றை விரித்துக் கூறுவர்.

இப்பதிகத்தில் இரண்டு திருப்பாடல்களில் ஆழங்கால் பட்டு அநுபவிப்போம்.

**பிணியெலாம் வரினும் அஞ்சேன்**
**பிறப்பினோடு இறப்பும் அஞ்சேன்**
**துணிநிலா அணியி னான்தன்**
**தொழும்பரோ டழுந்தி அம்மால்**
**திணிநிலம் பிளந்தும் காணாச்**
**சேவடி பரவி வெண்ணீறு**
**அணிகிலா தவரைக் கண்டால்**
**அம்மநாம் அஞ்சு மாறே** (5)

(துணி நிலா-பிறைமதி; தொழும்பர்-அடியார்; அம்மால்-அந்த விஷ்ணு)

என்பது இப்பதிகத்தின் ஐந்தாம் பாடல். உடலுக்குப் பலவகையான நோய்நொடி வந்தாலும், உள்ளத்தை வருத்தும் பிறப்பு இறப்பு ஆகிய பெரிய துன்பங்கட்கும்

அஞ்சாத அடிகள், சிவபெருமான் திருவடியிணையினைப் பலகால் தொழுது 'சிவய நம' என உளங்கனிந்தோதி அணிந்து கொள்ளாதவரைக் கண்டால் அஞ்சுவதாகக் கூறுகின்றார்.

மஞ்சுலாம் உருமும் அஞ்சேன்
　　மன்னரோ டுறவும் அஞ்சேன்
நஞ்சமே யமுத மாக்கும்
　　நம்பிரான் எம்பி ரானாய்ச்
செஞ்சவே யாண்டு கொண்டான்
　　திருமுண்டம் தீட்ட மாட்டா (து)
அஞ்சுவார் அவரைக் கண்டால்
　　அம்மநாம் அஞ்சு மாறே (9)

[மஞ்சு - மேகம்; உரும் - இடி; செஞ்ச - செவ்வையாக;
　　திரு - திருநீறு; முண்டம் - நெற்றி].

என்பது ஒன்பதாவது திருப்பாடல். இடிக்கும், மன்னரோடு கொள்ளும் உறவுக்கும் அஞ்சாத அடிகள், சிவனுக்கு உரித்தான திருவெண்ணீற்றினைச் செம்மையுற அணிந்து திருவருளின்பம் பெறமாட்டாது அஞ்சிக் கூசும் நேசமில்லாதவருக்கு அஞ்சுவதாகக் கூறுகின்றார். திருவெண்ணீறு 'கங்காளன் பூசும் கவசத்திருநீறு' (திருமந். 1666) என்ற திருமூலர் வாக்கால் சிவனுக்கு உரிமையாதல் தெரிகின்றது. அரசர் சினங்கொள்வாராயின் அயலார் எனவும் அன்புடையார் எனவும் பாரார் என்பதற்கு மனுநீதிச் சோழனின் வரலாறு காட்டும். மக்களாட்சியில் அரசியல் வாதிகளின் செயல்தான் அச்சம் தருவதாக உள்ளது.

48. குலாப்பத்து (40)[1]: தில்லையில் ஆடலரசனின் அருட் கூத்தினைக் கண்டு மகிழ்ந்த வாதவூரடிகள்

1. இது திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப் பெற்றதாகக் கடவுண்மா முனிவர் கூறுவர்.

'அடியேனுக்கு உண்டாகிய மகிழ்ச்சியெல்லாம் தில்லைச் சிற்றம்பலத்துள் ஆடல் புரிந்தருளும் ஆண்டவனைச் சார்ந்த தனால் ஆகியது' எனத் தமது மகிழ்ச்சியை எடுத்துரைத்து அம்பலவாணனைப் போற்றும் முறையில் அருளிய திருப் பதிகம் இது. குலாவுதல் - மகிழ்தல்; அஃது 'உலா' என்பது போன்று 'குலா' என முதல் நிலை அளவாய் ஈண்டுப் பெயராய் நின்றது.

'உள்ளம்
விரும்பு சிவானந்த வெள்ளம்விளைந்த
தில்லைநாயகன் மிகக்கொண் டாடி
நிரம்புமனக் களிமிகுந்த இறுமாப்பே
குலாப்பத்தாய் நிகழ்த்த லாமே.

என்று திருப்பெருந்துறைப் புராண ஆசிரியர் இப்பதிகக் கருத்தினை விளக்குவர். அஃதாவது, என்றும் ஒருபடித்தான இன்பவெள்ளத்துத் திளைப்பதால் மனத்தில் களிப்பு மிகுந்து இன்பத்திலிருத்திய இறைவனை வாயார வாழ்த்தி உரைப்பது 'குலாப்பத்து' என்பது இதன் கருத்தாதல் தெளியப்படும். இப்பதிகத்திற்கு 'அநுபவம் இடையீடு படாமை' என முன்னோர் கருத்துரை வரைந்தனர். அதாவது விட்டுவிட்டுப் பற்றாமல் ஒரு தன்மையாயிருப்பது இதன் பொருளாகும். இப்பதிகத்தில் உள்ள திருப் பாடல்கள் யாவும் அடிகள்பால் சிவாநுபவம் இடையீடின்றி நிகழுந் திறத்தினை இனிது விளக்கி நிற்றலைக் கண்டு மகிழலாம். ஒவ்வொரு திருப்பாடலும் 'குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே' என்ற தொடரால் இறுகின்றது. 'என்பால் உளதாகிய இம்மகிழ்ச்சிப் பெருக்கு தில்லையம்பலவாணனாகிய ஆண்டவனால் விளைந்ததாகும் எனப் பொருள் தருவதாகும் இது. குலா, எழுவாய். கொண்டன்று, பயனிலை, கொண்டன்று-கொண்டது. இப் பதிகத்தில் பத்துத் திருப்பாடல்கள் உள்ளன.

மூன்று திருப்பாடல்களில் நாம் ஆழங்கால் படுவோம்.

**ஓடும் கவந்தியுமே**
**உறவென்றிட் டுள்கசிந்து**
**தேடும் பொருளும்**
**சிவன்கழலே எனத்தெளிந்து**
**கூடும் உயிரும்**
**குமண்டையிடக் குனித்தடியேன்**
**ஆடும் குலாத்தில்லை**
**யாண்டானைக் கொண்டன்றே (1)**

*[ஓடு - திருவோடு; கவந்தி - கோவணம்; உள் - மனம்; குமண்டை - ஒருவகைக் கூத்து; குலா - விளங்குகின்ற*

*என்பது முதல் பாட்டு. இதில், "உண்கலமாகிய திருவோடும், நீங்கா உடையாகிய கோவணமும் உடம்பினை மிகை எனக் கொள்வாரும் நீக்கார்; திருவடி மெய்யுணர்வினர் அவ்விரண்டினையும் அகப்புறம், புறம் என்னும் இருவகை உறவாகக் கொள்வர்; அம்முறையில் அடியேனும் அவ்விரண்டினையும் பற்றும் உறவெனக் கொண்டு உள்ளம் உருகி என்றும் விடாது தேடும் பெரும்பொருள், நின்திருவடியே என நின் திருவருளால் தெளிந்துள்ளேன்; தெளிந்து உடலும் உயிரும் உவகை மேலிட்டால் கூத்தாடுவனவாயின; இவையனைத்தும் தில்லைச் சிற்றம்பலத்தின்கண் ஆடல் புரிந்து அருளும் ஐந்தொழில் இன்பக் கூத்தின் அசைவினாலாவன" என்கின்றார்.*

**மதிக்கும் திறலுடைய**
**வல்லரக்கன் தோள்நெரிய**
**மிதிக்குந் திருவடி**
**என்தலைமேல் வீற்றிருப்பக்**

கதிக்கும் பசுபாசம்
ஒன்றுமிலோ எனக்களித்து இங்கு
அதிர்க்கும் குலாத்தில்லை
ஆண்டானைக் கொண்டன்றே (7)

[மிதிக்கும் - நசுக்கும்; வல்லரக்கன் - இராவணன்; கதிக்கும் - நடக்கின்ற]

என்பது ஏழாம் பாடல். இதில், "இராவணன் தோள் நெரியும்படி கயிலைக் கண்ணுதலோன் மிதித்தருளினான்; அத்தகைய திருவடி, திருவருளால் அடியேன் தலைமீது பொருந்துவதாயிற்று. அங்ஙனம் பொருந்தி வீற்றிருக்கும் பேரருளால் முளைத்துத் தோன்றக் கூடிய சிற்றுணர்வாகிய[2] பசுத்தன்மையும் சுட்டுணர்வாகிய[3] பாசத்தன்மையும் இவற்றிற்கு ஏதுவாகிய ஆணவத்தன்மையுமாகிய குற்றப் பாடுகள் ஒன்றும் அடியேன்மாட்டு இல்லாது அகன்றன; ஆரவாரித்தற்கேதுவாகிய விளக்கம் மிக்க தில்லையாண்டானைப் பற்றிக் கொண்டு அல்லவா அடியேன் களிப்புறுகின்றேன்" என்கின்றார்.

இடக்கும் கருமுட்
டேனப்பின் கானகத்தே
நடக்கும் திருவடி
என்தலைமேல் நட்டமையால்

---

2. சிற்றுணர்வு - பசுவின் அறிவு. பசு - ஆன்மா. இது ஒரு காலத்து ஒரு பொருளையன்றிப் பிறிதொன்றினை உணரமாட்டாது; ஒவ்வொன்றாகவே உணரும் தன்மையது; அதனையும் விட்டு விட்டு உணர்வது. அதனால் அது சிற்றுணர்வு என்று பேசப்பெறுகின்றது.

2. சுட்டுணர்வு : ஒரு காலத்தில் ஓரிடத்தில் ஒரு பொருளையே குறித்துணர்தல், இது 'சிற்றறிவு' என்றும் சொல்லப்பெறும்.

கடக்கும் திறல் ஐவர்
கண்டகர்தம் வல்லாட்டை
அடக்கும் குலாத்தில்லை
ஆண்டானைக் கொண்டன்றே (8)

[இடக்கு - தோண்டுகின்ற; முருட்டு ஏனம் - வலிய பன்றி; கண்டகர் - கொடியவர்கள்; வல்லாட்டு - வலிய விளையாட்டு]

என்பது எட்டாம் திருப்பாடல். இதில் ''தவம் புரிந்த அருச்சுனனைத் தாக்க அரக்கன் ஒருவன் பன்றி வடிவெடுத்துப் போனான். அப்பன்றியைத் தொடர்ந்து சிவனார் வேடன் உரு எடுத்துப் போனார். அப்படிக் காட்டில் நடந்த திருவடி என் தலையில் படிந்தபொழுது ஐம் பொறிகளின் குறும்பு அடங்கியது'' என்கின்றார்.

**கதை :** ஐவருள் நடுவோனும் கண்ணனுக்கு மைத்துனனுமான அருச்சுனன் பகையை வெல்லும் பொருட்டுக் கானகத்தில் சிவனை நோக்கிக் கடுந்தவம் புரிகின்றான். அவனுடைய தாயப் பகையாகிய அரவக் கொடியோன் ஓர் அசுரன் துணையால் அத்தவத்தினை அழிக்க முற்படுகின்றான்; அவன் ஒரு பன்றி வடிவெடுத்து அருச்சுனனை நோக்கிச் செல்லுகின்றான்; அதனை அடக்குதற் பொருட்டுச் சிவபெருமானும் ஒரு வேடனாய் அப்பன்றியினைப் பின் தொடர்கின்றான். பன்றியினைக் கண்டதும் அருச்சுனன் வில்வளைத்து நாணேற்றி ஒல்லும் வகை எய்கின்றான்; சிவபெருமானும் பின்புறமாக நின்று அம்பு தொடுக்கின்றான்; அப்பன்றி மாய்கின்றது. அருச்சுனன் உண்மையறியாது வேடனாக வந்த சிவபெருமானுடன் போர் தொடுக்கின்றான். பின்னர் உண்மை தெளிந்து சிவபெருமானை வணங்கிப் படை (பாசுபதாஸ்திரம்) பெற்றுப் பகையை வெல்லுகின்றான்.

இவ்வுண்மை நிகழ்ச்சியினால் ஓர் உள்ளுறை மெய்ப் பொருள் தெளிவாகின்றது. பன்றி ஆணவ மலமாகும்; அருச்சுனன் எய்த அம்பு சிற்றுணர்வாகும். சிவபெருமான் எய்த அம்பு 'முற்றுணர்வு'[4] ஆகும். ஆணவம் சிற்றுணர்வி னால் அடங்காது; முற்றுணர்வினால் மட்டும் அடங்கும் ஆனால் அம்முற்றுணர்வு சிற்றுணர்வைக் கருவியாகக் கொண்டு அதனை அடக்கும். அக்குறிப்பே பின்னின் றெய்தமையாகும். அருச்சுனன் பன்றி என்று உணர்ந்தனனே யன்றி அசுரன் என்று உணரவில்லை. அதனைச் சிவபெருமானே உணர்ந்தருளினன். இந்நிலையில் அருச்சுனன எல்லார்க்கும் மேலாம் அளவிலாச் சீருடைய சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்தமையால் சிவன் அவனைக் காக்க முன்வர வேண்டுவது இன்றியமையாச் சிறப்புக் கடனாயிற்று. அங்ஙனமே வந்து காத்தருளினன். தவத்தோரைக் காப்பது சிவத்தின் தலைக்கடன் என்பதை அனைவரும் உணர்ந்துய்யக் காட்டப்பெற்ற நிகழ்ச்சியாகும் இது.

49. **திருப்படையெழுச்சி** (46) : அடிகள் இருளாகிய ஆணவ மலத்துடன் சார்ந்து மயக்கத்தைச் செய்யும் மருளாகிய மாயா காரியங்களை ஆணவச் சார்பினின்றும் அகற்றி அருட் சார்பிற்குத் துணையாகும் வண்ணம் பொருதற் பொருட்டு 'திருப்படையெழுச்சி' பாடுகின்றார். இப்பனுவலுக்கு "பிர பஞ்சப் போர்" என்று பண்டையோர் குறிப்புரை வரைந் தனர். 'மலவிளைவு அற்றது' என்பது இதன் உட்பொருள். இருள் நிறைந்த இந்த உலகவாழ்வில் மருளாகிய மாயப்படை ஆன்மாவைப் பற்றி அலைக்காதபடி 'அருள் மறவரது படை

4. முற்றுணர்வு : பதியினது உணர்வு பொருள்களை ஒவ்வொன்றாக உணராமல் எல்லாவற்றையும் ஒருங்கே உணர்வது; மேலும் அவற்றை இடை விடாது உணர்ந்தவாறே உணர்ந்து நிற்பது. அதனால் அது 'பேருணர்வு அல்லது முற்றுணர்வு' என வழங்கப்பெறும்.

எழுக' என்று அடியார்கட்கு அறிவிப்பது இத்திருப்படை எழுச்சி எனலாம். இங்ஙனம் தடை செய்தலின், உள்ள மலம் தேய மேல் விளைவு எழாதபடி அற்றுப் போகும். 'துர்க்' குணமாயப் படைகள் விளையாதபடி அருள்வாளேந்தி அடியார்கள் அனைவரையும் வருமாறு அழைப்பது திருப் படையெழுச்சி' என்று புராணமும் கூறும். இஃது இரண்டு பாடல்களையுடையது.

ஞானவாள் ஏந்தும் ஐயர்
நாதப் பறையறைமின்
மானமா ஏறும்ஐயர்
மதிவெண் குடைகவிமின்
ஞானநீற் றுக்கவசம்
அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம் நாம்
மாயப்படை வாராமே(1)

[ஏந்தும் - ஏந்துங்கள்; நாதம் - திருநாமம் ஓதும்ஒலி; மானம் மா - பெரியகாளை; வானவூர் - வீட்டுலகம்; மதி - விவேகம்; நீற்றுக் கவசம் - திருநீறு என்னும் கவசம்; மாயப்படை - காமக் குரோதாதிகளாகிய சேனைகள்]

என்பது முதற் பாடல். இது படைவீரர்கட்குத் தேவைப்படும் போர்க்கருவிகள் இன்னவை எனக்காட்டுகின்றது. "அவித்தை யாகிய மாயையில் உதிப்பது அஞ்ஞானம். இது மனிதனுக்குப் பெரும் பகை. அவன் படும் துன்பத்திற் கெல்லாம் இதுவே காரணம். ஞானவாள் ஒன்றே அஞ்ஞானத்தை அகற்று வதற்கு உற்ற உபாயம். இறைவனுடைய நாமசெபம் மெய்ஞ்ஞானத்தை வளர்க்கின்றது. சீவான்மாவை வாகன மாகக் கொண்டு சிவன் வீற்றிருக்கின்றார் என்னும் மெய்யுணர்வினின்று வீரம் பிறக்கின்றது. விவேகமானது

எதிரியைக் கொல்லுவதற்கான நல்வழியைக் காட்டித் தருகின்றது. அது குடை நிழலுக்கு நிகரானது. திருநீறு வைராக்கியத்தின் சின்னம். வைராக்கியம் பூணுதல் அல்லது பற்றை அழிப்பதே அஞ்ஞானப் பகையை ஒடுக்குவதற்கு உற்ற உபாயம். ஆகவே அதனைக் கவசமாக அணிந்து கொள்ளவேண்டும்'' என்கின்றார்.

இந்தப் படையெழுச்சிக்கு பாரதப் போர் புறச்சின்னமாக அமைகின்றது. கண்ணன் பார்த்தனுக்குச் சாரதியாக இருந்தது போன்று சீவர்கள் அனைவர்க்கும் சாரதியாகின்றான் சிவன். பண்பட்டவர்களுக்கு அவனது உதவி உறுதியாகக் கிடைக்கின்றது. குருட்டு மன்னன் திருதராட்டிரன் அஞ்ஞான இருளின் உருவகமாகின்றான். அவன் மக்கள் நூற்றுவர் அல்லல் ஆகிய மாயப்படையாகின்றனர். அவர்களை வென்று நல்வாழ்வை நிலைநாட்டுவது நல்லாருடைய குறிக்கோள்.

**தொண்டர்காள் தூசிசெல்வீர்**
**பத்தர்காள் சூழப்போகீர்**
**ஒண்டிறல் யோகிகளே**
**பேரணி யுந்தீர்கள்**
**திண்டிறல் சித்தர்களே**
**கடைக்கூழை செல்மின்கள்**
**அண்டர்நாடு ஆள்வோம்நாம்**
**அல்லல் படை வாராமே (2)**

[தூசி - முன்படை; ஒண்திறல் - நுண் அறிவோடுகூடிய ஆற்றல்; பேர் அணி - பெரும் படை; திண் திறல் - வச்சிராயுதம் போன்ற ஆற்றல்; கடைக் கூழை - பின் அணி; அண்டர்நாடு - வீடுபேறு]

என்பது இரண்டாவது பாடல், இது படைவீரர்கள் அணி வகுத்துச்செல்ல வேண்டியதைக்கூறுகின்றது. ''இதில் தொண்டர்களே, நீங்கள் முன் அணியில் மேல் நோக்கிச் செல்லுங்கள்

(தூசிப் படை, முன்னணிப் படை); பக்தர்காள், நீங்கள் இரு பக்கங்களிலும் புடை சூழ்ந்து செல்லுங்கள் (கைகோட் படை, வளைக்கும் படை); யோகியர்களே நீங்கள் பேரணிப் பகுதியினைச் செலுத்துங்கள்; (நடுவே சென்று எதிர்க்கும் பெரும் படை); சித்தர்களே, பின்னணிப் படையில் செல்லுங்கள் (கடைக் கூழைப் படை). துன்பத்திற்கு இடங்கொடாத வீடு பேறே நம் நாடு. அதை நாம் சென்றடைவோம்'' என்கின்றார்.

பரம்பொருளை நாடுபவர்களுள் பெருநெறி பிடிப்பவர் எவர் என்னும் பாகுபாடு பொருந்தாது. ஞானிகள், தொண்டர்கள், பக்தர்கள், யோகிகள், சித்தர்கள் ஆகிய யாவரும் ஒரே குறிக் கோளை நாடிச் செல்பவர்களாதலால், அவர்கட்கிடையே உயர்வு தாழ்வு காண்பது அஞ்ஞானத்தின் விளைவு ஆகும்.

போர்இயலில் வியூகம் அல்லது படைவகுத்தல் ஒரு தனிப்பட்ட கலை ஞானம். படையின் பெருக்கத்தால் மட்டிலும் வெற்றி வாய்த்து விடாது. சூழ்நிலைக்கு ஏற்ற வாறு அணிவகுத்தல் படைத்தலைவனின் போர்த் திறனின் விளைவு ஆகும்; நால்வகைப் படைகளைச் (தேர், யானை, குதிரை, காலாள்) சரியாகப் பயன் படுத்தினால் வெற்றி உறுதி. வாழ்க்கை என்னும் போராட்டத்திற்கு இஃது இன்றியமையாத கோட்பாடு ஆகும்.

உலக வாழ்க்கை வேறு, ஞான வாழ்க்கை வேறு எனப் பொருள் படுத்தலாகாது என்பது கீதையின் கோட்பாடு. யோகேசுவரனாகிய பரந்தாமன் கர்மயோகம், இராஜயோகம், பக்தி யோகம், ஞான யோகம் ஆகிய நான்கின் பலத்தை (நான்கு கூறுகளையுடைய அருள் படையை) அருச்சுனனுக்கு வழங்குகின்றான். இந்த நான்கு படைகளையும் முறையாகப் பயன் படுத்தும் சீவான்மா அஞ்ஞானப் பகையை வென்று பரமனுக்கு உரிய அடியவனாகின்றான்.

50. யாத்திரைப்பத்து(45): உலக பாசத் தொடர்பிலிருந்து விடுபட்டு ஈரிலாப் பேரின்ப வாழ்வாகிய வீடுபேற்றினை நச்சிச் சிவமாநகர்க்குச் செல்லும் நோக்குடன் அன்புடைய அடியார்களை அழைக்கும் நிலையில் அருளிய பத்துப் பாடல் களையுடைய பனுவல் இது. இதனால் இது 'யாத்திரைப் பத்து' என்ற திருப்பெயரினைப் பெறுகின்றது. இதற்கு 'அநுபவாதீதம்உரைத்தல்' என்பது பண்டையோர் உரைத்த குறிப்புரை. அஃதாவது அநுபவத்துக்கு எட்டாமையை அறிவு றுத்தல் என்பது இதன் பொருள். சிவாநுபவம் தன்னளவினன் றித் தன்னைச் சார்ந்தாருக்கும் வாரிவழங்கும் தரத்ததாய் மிக, ஆண்டவனால் 'வா' என்று அழைக்கப்பட, அடியார்கள் எல்லாரையும் அழைத்துக் கொண்டு திருவடிக்கு யாத்திரை செல்லுதலை அறிவிக்கும் பாங்கில் அமைந்துள்ளது. "பொய் மாயப்பிறவியை விட்டுச் சிவன் கழல் அடையும் காலம் அடியேனுக்குக் கிடைத்து விட்டது; எல்லாரும் வாருங்கள்" என்று கருணையால் அழைப்பது யாத்திரைப் பத்து" என்று கூறுவர் திருப்பெருந்துறைப் புராண ஆசிரியர்.

இப்பனுவலின்கண் அடிகள், "பொய்விட்டு உடையான் கழல் புகக் காலம் வந்துவிட்டது; வாருங்கள் போவோம்; இச் செவ்வியினைக் கைநழுவ விடாது பயன் பெறுவோமாக"(1) எனவும், "ஐம்புலநுகர்வுகளில் புகுதல் வேண்டா; புயங்கக் கூத்துடைய பெருமானது அழகிய திருவடிகளையே மிகுதியும் எண்ணுங்கள்; ஏனைய உலகியல் நாட்டம் அனைத்தினையும் நாம் வேண்டிப் போற்றும் பொருள்கள் அல்ல"(2) எனவும், "மயக்கங்கள் அத்தனையும் மாய்ந் தொழிந்து அகல முழு முதல் வேந்தனாகிய சிவபெருமான் முன்னரே ஆட்கொண் டருளியவர்கள் பண்டைத் தொண்டர்கள். அவனருளால் அவர்களைக் கூடுதல் வேண்டும். கூடி, அவன் திருக்குறிப்பே நம் முயற்சிக் குறிப்பாகவும் குறிக்கோளாகவும் கொண்டு ஒழுகுவோமாக. நில்லாதவற்றை நிலையின என உணரும்

பொய்மையினை நீக்கிப் புயங்கக் கூத்தன் பொன்னடிக்கே போய்ப் புகுவோம்''(3) எனவும், ''இறந்தும் பிறந்தும் வருவ தாகிய தடுமாற்ற விளையாட்டைத் திருவருள் நினைவால் அகற்றுங்கள்; நம்பன் திருவடியிணையினையே வந்துசேருங் கள்; அவன் திருவுள்ளக் குறிப்பினையே நன்கு கடைப் பிடியுங்கள்; குற்றம் பெருக்கும் இவ்வுடற் பற்றினை விட்டொழியுங்கள்; அவன் திருவடிக்கண்ணே உங்கள் நல்லுள்ளங்களைச் செலுத்துங்கள்'' (4) எனவும், ''வெகுளி, காம வேட்கை, நோயாகிய மயக்கத்தையும் அவனருளால் விட்டகலுங்கள்; அடியாரோடு ஒன்று கூடிச் செல்லுதற்கு முன்னில்லுங்கள்; திருப்புயங்கப் பெருமான் புகழ்களைப் போற்றுவோம்'' (5) எனவும், ''புயங்கப் பெருமானின் திரு வடிகளை உள்ளத்து வைத்துத் தொழுங்கள்; தொழுங்கள்; நறுமண மலர் கொண்டு வழிபடுங்கள்; அவன் திருவடிகளைச் சென்னியினால் வணங்கித் தொழுவோம்; அவன் அடியார் முன் சென்று நெஞ்சம் உருகி நிற்போம்''(6) எனவும் அன்பு கூர்ந்து அழைக்கின்றார்.

உலகியற்பிணிப்பால் தாமதித்தோரது நிலைமை கண்டு இரங்கிய அடிகள், ஏனைய மெய்யடியார்களை நோக்கி, ''திருவடி நாட்டமின்றி நிற்பார் நிற்க; நில்லா உலகில் இனி நாம் செல்லோம்; பிற்பட்டு நின்று பேழ்க்கணித்தால் பெம்மான் திருவடி பெறுவதற்கு அருமையாகி விடும்'' (7) எனவும், ''சிவபெருமானின் பேரின்பப் பெருவாழ்வு பெற்றுப் பிரியாதிருக்கும் பெற்றி வாய்ந்த பேரன்பர்களே! அந் நினைப்பினைச் சிறிது மறப்பினும் பசை மலம் மேலோங்கிப் பெரும் மயக்கத்தினைத் தரும். அத்தகைய மயக்கத்தினை எய்தி நீங்கள் வருந்தி அழுது அரற்றாவண்ணம், சிவபுரத்துத் திருக்கதவம் திறந்த போதே அங்குச் சென்று அவன் திருவடி களை அடைவோம்'' (8) எனவும் அறிவுறுத்துகின்றார்.

இவ்வாறு தாம் அழைத்த நிலையிலும் பின் தங்கியிருப்பாரது நற்பேறின்மையை நினைந்து வருந்திய அடிகள் பெருமான், ''இப்பொழுதே சிவன் திருவடிக்கு ஆளாகுமின்; அங்ஙனம் ஆளாகாது பின்னிருந்து இரங்குவீராயின் தீராத மருள் கொண்டவராவீர்; அம்மருளிடைப்பட்டு மயங்குவீராயின், பின் எவரும் நும்மை மதியார்; அப்பொழுது அறிவு திரிந்து கலக்க மெய்திப் பெரிதும் மயங்குவீர். இவ்வுண்மையினைத் திருவருள் நாட்டத்தால் தெளிவு பெறுவீர்களாயின், உடனே புறப்படுங்கள். சிவபுரத்து வீற்றிருந்தருளும் திருப்புயங்கச் செல்வன் திருவருளை வந்து பெறாதார் அனைவரும் 'ஐயோ ஐயோ ஐயோ' என்று கழிவிரக்கம் கொள்ளத்தக்கவராவார்'' (10) என்று அருள் மிகுதியால் அரற்றி அழைக்கும் நிலையில் இப்பதிகம் நிறைவு பெறுகின்றது.

இந்தப் பதிகத்தை படித்து ஆழங்கால் படும்போது பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டிலும் (1.1), நம்மாழ்வார் திருவாய்மொழியிலும் (5.2) உள்ள பாசுரங்கள் நினைவிற்கு வருகின்றன. ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பாடலைக் காட்டுவேன்.

**புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்**
**புயங்கன் தாளே புந்திவைத்திட்(டு)**
**இகழ்மின் எல்லா அல்லலையும்**
**இனியோர் இடையூறு அடையாமே**
**திகழும் சீரார் சிவபுரத்துச்**
**சென்று சிவன்தாள் வணங்கிநாம்**
**நிகழும் அடியார் முன்சென்று**
**நெஞ்சம் உருகி நிற்போமே** —*யாத்திரைப்பத்து-6*

[புயங்கன் - நாகாபரணன்; புந்தி - புத்தி; அல்லல் - துன்பம்; நிகழும் அடியார் - பழைய அடியார்]

**அண்டக் குலத்துக்கு அதிபதி ஆகி**
**அசுரர் இராக்கதரை**
**இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த**
**இருடிகே சன்தனக்கு**
**தொண்டக் குலத்தில் உள்ளீர்வந்(து)அடிதொழுது**
**ஆயிர நாமம்சொல்லி**
**பண்டைக் குலத்தைத் தவிர்ந்துபல் லாண்டுபல்**
**லாயிரத் தாண்டென்மினே** — திருப்பல்லாண்டு-5

[அண்டம் - உலகுருண்டை; அதிபதி - தலைவன்; இண்டைக் குலம் - நெருக்கமான கூட்டம்; தொண்டைக்குலம் - அடியார் திருக்கூட்டம்; பண்டைக் குலம் - பழைய குலம் (பயனை விரும்பிக் கிடக்கும் பழையதன்மை)]

**கொன்றுயிர் உண்ணும் விசாதி**
**பகைபசி தீயன எல்லாம்**
**நின்றுஇவ் வுலகில் கடிவான்**
**நேமிப் பிரான்தமர் போந்தார்**
**நன்றிசை பாடியும் துள்ளி**
**யாடியும் ஞாலம் பறந்தார்**
**சென்று தொழுதுய்ம்மின்; தொண்டீர்!**
**சிந்தையைச் செந்நி றுத்தியே.** —திருவாய் 5.2 : 6

[கொன்று - கொலை செய்து; விசாதி - வியாதி; பகை - வெறுப்பு; தீயன - கொடியவை; நேமி - சக்கரம்; நேமிப் பிரான்தமர் - பாகவதர்கள்; ஞாலம் - பூமி; பரந்தார் - பரவியுள்ளனர்; சிந்தை - நெஞ்சு; செம் நிறுத்தி - செம்மையாக நிலைநிறுத்தி]

இம்மூன்று திருப்பாடல்களும் அடியார்களை அழைத்து உய்யுமாறு அறிவுரை புகட்டுகின்றன.

51. **திருப்படை ஆட்சி** (49) : படை என்னும் சொல் ஆயுதத்தைக் குறிக்கும். ஆயுதம் இல்லாதவன் அரை பனிதன். சேனை என்னும் அங்கம் இல்லாத நாடு யாண்டும் அல்லல்படும். தேர், யானை, குதிரை, காலாள் ஆகிய படை நன்கு காக்கப்பெறவும் முன்னேற்றம் அடையவும் செய்யும் இங்ஙனமே இறைவனை அடைய விரும்புபவர்க்கு ஆன்ம சாதனங்கள் மிக நல்ல படையாகின்றன. ஆதலால் அவை திருப்படை எனப்படுகின்றன. அவற்றின் ஆட்சி அல்லது அநுபவம் ஓங்குமளவு ஆன்மசாதகன் முன்னேற்றம் அடைகின்றான். புரிவதற்குச் சாதனங்கள் பல அமைந்திருப்பது பரமனது அருள் விளைவாம். இந்தப் படைகள் இன்னவை என்று வகுத்துக் காட்டுவர் பெருந்தவத்திரு சித்பவானந்த அடிகள்[5]. அவை :

1. **நமச்சிவாய** (1.1) என்னும் அவனுடைய திருநாமம் முதற்படை. தாயைக் கூவியழைக்கச் சேய்க்கு உரிமை இருப்பது போன்று சிவநாமத்தை நவிற்ற எல்லோருக்கும் உரிமை உண்டு. நவிற்றும் அளவுக்கேற்ப சிவசக்தி பெருகுகின்றது.

2. **உன் அருள் பெறுநாள் என்றென்றே வருந்துவனே** (திருச்சதகம் 2.2) : இஃது இரண்டாவது படை. அருள்தாகம் ஓங்குதற்கு ஏற்ப ஆன்மசாதகன் விரைந்து மேன்மையுறுகின்றான்.

3. **ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானை** (திருவம்மானை-7): இது மூன்றாவது படை. இராஜ யோகமும் பக்தி யோகமும் ஒன்றுகூடி உண்டுபண்ணியுள்ள சமாதிநிலை இது. இதில் ஊன்றியிருப்பவன் புறத்தில் சீவனாகத் தென்படுகின்றான். அகத்தில் அவன் முற்றிலும் சிவமயம்.

5. சித்பவாநந்த அடிகள்—திருவாசகம்-பக் 836-839

4. **கோயில் சுடுகாடு...தாயும் இலி தந்தையிலி, தான். தனியன்...காயில் உலகு அனைத்தும் கல்பொடிகாண், சாழலோ** (திருச்சாழல்-3) : இது நான்காவது படை. சிவன் தியாகராசன். தியாகத்தாலன்றி சீவன் சிவசொரூபம் அடைய முடியாது. உடலைச் சுடுகாடாகக் கருதவேண்டும். அதன் வாயிலாகப் பெறுகின்ற சுகம் வெந்து சாம்பலாக வேண்டும். மனிதன் உலகில் வந்தது தனியாக; பின்பு அவன் உலகைவிட்டுப் போவதும் தனியாக. ஆதலால் அவன் இவ்வுலகில் இருக்கும்பொழுதே தாயும் இலி, தந்தை இலியாய்த்தான் தியாகத்தின்மூலம் தனியன் ஆகவேண்டும். அண்டங்கள் அனைத்தையும் துடைக்க வல்லவன் சிவன். தன் உடல் என்னும் பிண்டத்தைச் சவம் போன்று செய்ய வல்லவன் சிவனுக்கு உரிய நல்ல சாதகன் ஆகின்றான்.

5. **யானே பொய் என் நெஞ்சும் பொய், ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே** (திருச்சதகம்-9.10) என்பது ஐந்தாவது படை. பரமனை நாடி அழுகின்ற அளவு பொய்யான சீவான்மனுக்கு மெய்யான பரபோதம் வளர்கின்றது. மற்று, அழுகையில் இரண்டு விதம் உண்டு. உலக இன்பத்தை நாடி அழுவது ஒருவகை. இது பிறவிப் பிணியைப் பெருக்குகின்றது. பரமனை நாடி அழுபவர்கள் பேறு பெற்றவர்கள். இந்த இரண்டாவது வகை அழுகை வாயிலாகத் தூய்மையடையவும் பரமனை அணுகவும் அவர் களுக்குச் சாத்தியமாகின்றது.

6. **அன்றே என்தன் ஆவியும் உடலும் உடைமையும்...... நானோ இதற்கு நாயகமே** (குழைத்தபத்-7) : இஃது ஆறாவது படை. உறுப்புகள் உடலில் ஒன்று பட்டிருப்பது போன்று சீவாத்மன் பரமாத்மனில் ஒன்றுபடுகின்றான். அப் பொழுது அவ்வாயிலாக நடைபெறுவதெல்லாம் சிவன் செயல். பிழையாகத் தென்படுவதிலும் நலனே நிறைந் திருக்கும்.

7. **உள்ளந்தான் நின்று உச்சியளவு நெஞ்சாய்... தீவினையேற்கே** (திருச்சதகம் 3.1) என்பது ஏழாவது படை. இது மகாபாவனையில் வைக்கப் பெற்றுள்ளது. இந்நிலை வாய்க்கப் பெற்றவர் சிவமாவது திண்ணம்.

8. **வான்கெட்டு மாருதம் மாய்ந்து...தென்னேணம் கொட்டாமோ** (திருத்தெள். 18) : இஃது எட்டாவது படை. சதாசிவம் அல்லது சிதாகாசம் யாண்டும் தன்மயமாயிருக்கின்றது. அதன்மீதும் ஜகத்தும் (பிரகிருதியும்) சீவனும் தோன்றவும் ஒடுங்கவும் செய்கின்றன. முற்றிலும் பரிபக்குவம் அடைந்துள்ள சீவான்மா அறியாமையினால் தன்மீது வருவித்துக் கொண்ட சீவஉபதாதிகளையெல்லாம் களைந்து விட்டுத் தன் உண்மை சொரூபமாகிய சிதாகாசத்தில் சேருகின்றான். இதுவே மீண்டும் வாரா வழியாகும். கடஆகாசம் மகா ஆகாசத்தில் ஒன்றுபடுதற்கு ஒப்பானது இது. அட்ட அத்திரங்களுள் இது பிரம்மாத்திரம். இதன் பிரயோகத்தால் நதி கடலில் ஒடுங்குவது போன்று சீவான்மா பரமான்மாவில் ஒன்றுபடுகின்றான். **அத்வைத சித்தி** என்பது இதுவே.

இந்த அட்ட அத்திரங்கள் அடங்கிய திருப்படையாட்சி ஓங்குவதற்கேற்ப சிவபோதம் ஓங்குகின்றது.

இந்தப் பனுவலுக்கு 'சீவஉபாதி ஒடுங்குதல்' என்பது பழைய குறிப்புரை. 'இறைவன் எதிர்ப்பட்டு என்னுட்புகுமாயின் எந்த விதமான சீவோபாதிகளும் என்னை அணுகா என்பதை அறிவிப்பது. இதற்கு விளக்கம் எழுதிய அருணகிரி முதலியார் "ஞானானந்தவஸ்துவாகிய சிவத்தைத் தரிசித்தவர்கள் தூய ஞான நாட்டம் பெற்றவர்களாதலின், அவர்களுக்கு வேறு விவகாரங்கள் நிகழ்தலாகாவாம்." என்பர். திருப்பெருந்துறைப் புராண ஆசிரியர் "திருப்பெருந்துறையார் எழுந்தருளப் பெறின் எல்லா வளங்களும் முற்றும் ஆகும் எமக்கு அல்லாதது ஆகாதென்று இயம்பல் படையாட்சியாகும்" என்று விளக்குவர்.

**சீவ உபாதி ஒழிதல்:** இதற்குச் சித்பவாநந்த அடிகள் தரும் விளக்கம் அற்புதமானது; மிகத் தெளிவானது. ''ஏதேனும் ஒருபொருள் தற்காலிகமாக எடுத்துக் கொள்ளும் வியக்தி, அல்லது வடிவம், அல்லது நிலைக்கு 'உபாதி' என்று பெயர். சான்று ஒன்றின் மூலம் இக்கோட்பாட்டை விளக்குவோம். நீர் என்பது ஒரு பொருள் (வஸ்து); ஐம்பெரும் பூதங்களில் ஒன்று. அது கடல் நீர், நிலத்து நீர், குளத்து நீர், அகழி நீர், கிணற்று நீர், ஆற்று நீர், சேற்று நீர், மழை நீர், ஓடை நீர், அருவி நீர்—இப்படியெல்லாம் (தான் இருக்கும் இடத்திற்கு ஏற்பப்) பெயர் பெறுகின்றது. இந்நிலைகளில் எல்லாம் அஃது இளகித் திரவ நிலையில் உள்ளது. பின்பு அது காற்றுப் போன்று இருப்பதும் உண்டு. நீர் ஆவி, நிறமில்லாத ஆவி, வெண்மேகம், செம்மேகம், கார்மேகம், மஞ்சு, மூடுபனி, நீர்ப்பனி ஆகிய பல வடிவங்களில் அஃது அப்பொழுது உள்ளது. மேலும் அது குளிரால் கடினபதார்த்தம் ஆவதும் உண்டு. உறைபனி, கெண்டைப் பனி, ஆலங்கட்டி, ஐஸ்கட்டி என்ற நிலையில் அஃது அப்பொழுது உள்ளது. இத்தனை வித வடிவங்களும், நிலைகளும் நீரின் 'உபாதிகளாகும்', இந்த வேறுபாடுகளுக்கிடையில் நீர் தனது நீர்மையை இழப்ப தில்லை. கங்கை நீர் என்பது நீரின் ஒரு மேலான உபாதி. சாக்கடை நீர் அல்லது சிறுநீர் என்பது அதன் கீழான உபாதி. கீழ்நிலையை முன்னிட்டு அந்த வடிவு எடுத்திருக்கும் நீரை இழிவானது எனல் ஆகாது. ஏனென்றால் அதன் கீழ்நிலையும் தேவையானதே.

இனி, நீரின் உபாதிக்கு நிகரானது சீவான்மாவின் உபாதி. சீவன் கல்ஆய், புல்ஆய், புழுஆய், பூச்சிஆய், பாம்புஆய், பறவையாய், விலங்குஆய், மனிதன்ஆய், முனிவனாய், பக்தனாய், ஞானிஆய் இறுதியில் பரம் பொருளில் தனது சீவ உபாதியை ஒழித்துத் தள்ளுகின்றான். அவனுக்கு ஓர் உபாதி உருவெடுக்கும்பொழுது அதற்கு

முந்திய உபாதி ஒழிகின்றது. நீர் ஒரே சமயத்தில் உறைபனியாகவும், ஆவியாகவும் இருப்பதில்லை. அதுபோலவே சீவான்மாவும் ஒரே காலத்தில் கல் ஆகவும் புல் ஆகவும் இருப்பதில்லை. உபாதியானது மாறி அமையும் தன்மையுடையது என்பதை நாள்தோறும் கனவுநிலை மெய்ப்பிக்கின்றது. உபாதி நிலையற்றது என்பதை சுழுத்தி அல்லது கனவற்ற உறக்கம் உறுதிப்படுத்துகின்றது. அயர்ந்த உறக்கத்தில் மனிதன், விலங்கு, பறவை ஆகிய சீவான்மாக்கள் அனைத்தும் ஒரே அபேத நிலையில் உள்ளன. பின்பு உறக்கமோ தமோ குணத்தின் விளைவு. அஃது அஞ்ஞானத்தில் இடம்பெற்றுள்ளது. நனவுக்கு வந்தவுடனே சீவபேதம் என்னும் உபாதியும் தோற்றத்திற்கு வருகின்றது.

ஆனால் 'நிர்விகல்ப சமாதி' என்னும் அதீத நிலை முக்குணங்களுக்கும் அப்பாற்பட்டது. கால தேச வர்த்தமானம் ஆங்கு அடிபட்டுப் போகின்றன. மனம் என்னும் மாயை மாண்டு ஒழிகின்றது. கடலை ஆழம் பார்க்கப் போன உப்பு பொம்மை தனது வடிவம் என்னும் உபாதியை இழக்கின்றது. ஆனால் அதன் உண்மைச் சொரூபம் ஆகிய அகண்டாகாரம் அதற்குச் சொந்தமாகின்றது. கடலுக்குள் விழுகின்ற மழைநீர்த்துளி தனது வடிவம் என்னும் உபாதியை இழக்கின்றது. ஆனால் நீர் என்னும் அதன் உண்மை நிலை அகண்டாகாரமாகின்றது. அங்ஙனம் சமாதி நிலையில் பரம்பொருளில் கலக்கும் சீவன் பரம்பொருள் ஆகின்றான். இதுவே சிதம்பர இரகசியம். ஆங்குச் சென்ற சீவன் திரும்பி வருவதில்லை. அதாவது அவனது உபாதி அழிந்து பட்டுப் போகின்றது. சுத்த சைதன்யம் அல்லது அகண்ட சச்சிதானந்த சிவமே யாண்டும் உள்ள மெய்ப்பொருள். உபாதியை ஒழிக்கின்ற சீவன் சிவம் ஆகின்றான்.

இதுவே அத்துவிதசித்தி என்றும், வீடுபேறு என்றும் இயம்பப் பெறுகின்றது.''[6]

இந்த விளக்கத்தின் ஒளியில் மணிவாசகரின் 'திருப்படை ஆட்சி' என்னும் இப்பனுவலை நோக்குதல் வேண்டும். இதிலுள்ள எல்லாப் பாடல்களும் இந்த உண்மையைத்தான் வெவ்வேறுவிதமாக விளக்குகின்றன. பேரின்பப் பெருங் கூத்தப் பெருமானுடைய திருக்காட்சியில் ஆழ்ந்து அவ் வண்ணமாய் நின்றருளிய அடிகள் விழுமிய முழுமுதல்வ னாகிய அவன் வெளிப்பட்டு மேலோங்குங்கால் தம் புறச் செயல்கள் தாமே கழன்று சிவப்பேரின்ப நிறைவாய்த் தாம் நிற்கும் அருளிப் பாட்டினைப் பாடல்களில்ஓதியருள்கின்றார். அதாவது சிவபோதத்தில் சீவபோதம் கரையுங்கால் நிகழ்வன தெரிவிக்கப்பெறுகின்றன. ஒவ்வொரு பாடலிலும் கழலப்பெறும் செயல்கள் தெரிவிக்கப்பெறுகின்றன. ஒவ்வொரு பாடலிலும் ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளைக் காட்டுவேன். பாடலில் வரும் 'ஆகாதே' என்ற சொல் 'அன்றே' என்னும் சொல்லுப் போன்று 'அல்லவா' என வினவும் குறிப்புடைய இடைச் சொல்லாகும்.

### பாடல்—1

**கண்கள் இரண்டும் அவன்கழல்**
**கண்டு களிப்பன ஆகாதே** (அடி. 1)

**பொருள்:** கண்கள் மட்டுமல்லாது, பிரபஞ்சத்தை நுகர்தற்கென்றே அமைந்துள்ள பஞ்சேந்திரியங்கள் பர போதத்தில் செயலற்றுப் போகின்றன.

**விளக்கம்:** தூய மனம் படைத்திருக்கும்பொழுது தெய்வ தரிசனம் ஊனக்கண்கள் வாயிலாகப் பக்தனுக்கு நிகழ்தல் சாத்தியம். மாணிக்கவாசகருக்கு அவ்வாறு

6. சித்பவானந்த அடிகள் : **திருவாசகம்** பக். 839-840.

நிகழ்ந்தது. மற்று, நிர்விகல்ப சமாதியிலோ மனம் மாய் இன்றது. மாயப் பிரபஞ்சம் மறைகின்றது. சீவபோதம் ஒழிகின்றது. ஆதலால் உடல் உணர்ச்சிக்கு ஆங்கு இடம் இல்லை. உடல் பொருள்களை நுகர்தற்கென்றே வாய்த் துள்ள பொறிகள் ஐந்தும் செயலற்றுப் போய்விடுகின்றன. அவற்றுள் கண்கள் சிறப்பாக இங்குக் குறிக்கப்பெற்றுள்ளன.

**காரிகை யார்கள்தம் வாழ்வில்என்**
**வாழ்வு கடைப்படு மாகாதே (அடி-1)**

[காரிகையார்கள் - சீவான்மாக்கள்]

**பொருள் :** அஞ்ஞானத்தில் உழலும் சீவர்கள் பிரபஞ்ச வாழ்வு என்னும் கீழ்மையில் திருப்தியடைகின்றனர். பர போதம் அடைந்தவர்கட்குத் தாங்கள் இடையில் கீழ்மை அடைந்திருந்ததன் நினைவு வருவதில்லை.

**விளக்கம் :** அம்பிகையின் திருவருளால் தோன்றியுள்ள சீவர்கள் எல்லாரும் அம்பிகையின் சொருபமாகவே கருதப் பெறுகின்றனர். ஆதலால்தான் அவர்கள் ஈண்டுக் காரிகையார் கள் என வழங்கப்படுகின்றனர். 'எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்' என்கின்றார் அடிகள். சீவபோதமும் பிறவியும் இணைபிரியாதவை. பல பிறவிகளில் படைத்திருந்த சீவபோதமானது பரபோதத்தில் மாயமாய் மறைந்து போகின்றது. இவ்வுண்மையை அடிகள் ஈண்டு எடுத்து மொழிகின்றார்.

**மால்அறி யாமலர்ப் பாதம்**
**இரண்டும் வணங்குதும் ஆகாதே (அடி-2)**

**பொருள் :** சீவ உபாதி ஒழிந்த விடத்து வழிபடுவோன், வழிபடுபொருள் என்னும் வேற்றுமை இல்லை.

**விளக்கம் :** கண்ணப்பநாயனார்க்கு வாய்ந்தது பரபக்தி அல்லது பிரேமை பக்தி. இந்நிலையில் தெய்வமும்

தொண்டனும் அபேத நிலை எய்துகின்றனர். சிவனார் மலர்ப் பாதத்தைக் கண்ணப்பநாயனார் வணங்குதற்கு மாறாகத் தமது செருப்புக் காலை உயர்த்திச் சிவனார் கண்ணுக்கு அருகில் வைத்தார். பரமனுக்கும் அச்செயல் பரம திருப்தியை உண்டு பண்ணுகின்றது. சமாதி நிலையில் பசு, பதி என்ற பேதமின்மையால் இத்தகைய நிகழ்ச்சியும் நேர்வதில்லை.

இந்த அரிய பெரிய நிகழ்ச்சிகள் யாவும் இயற்கையோடு சம்பந்தப்பட்டவைகள்; ஆகையால் மாயா காரியங்களாகின்றன. பின்பு அதீதத்தில் உள்ள பரபோதத்தில் இவை யாவும் பொருளற்றவைகளாகின்றன.

**பாடல்—2**

**காரணம் ஆகும் அனாதி**
**குணங்கள் கருத்துறு மாகாதே (அடி-2)**

**பொருள் :** இறைவனது நித்திய விபூதிகளைப் பற்றிச் சிந்தனை பண்ணுவதும் இல்லை.

**விளக்கம் :** ஒருரும் ஒரு நாமமும் இல்லானுக்கு ஆயிரம் திருநாமங்கள் அமைந்துள்ளன. சிவனாருடைய எண்ணிறந்த குணச் சிறப்புகளை விளக்குதற்கென்றே இவை யாவும் அமைந்துள்ளன. இவற்றைக் கருத்தில் ஏற்று ஓர்ந்து பார்க்க எத்தனையோ பிறவிகள் வேண்டும். இவற்றை ஓர ஓர ஆனந்தம் அதிகரிக்கும். இத்தகைய மனன ஆனந்தம் நிர்விகல்ப சமாதியில் மறைந்து போகின்றது.

**என்றும்என் அன்பு நிறைந்த**
**பராவமுது எய்துவ தாகாதே (அடி-4)**

**பொருள் :** பரமானந்தத்தில் திளைத்திருப்பது என்பதும் அதீத நிலையில் இல்லை. ஏனென்றால் அதீதம் என்பது ஆனந்தத்திற்கும் அப்பாற்பட்டது. அதில் சுத்த சிவம் தன்னில் தானாய் எஞ்சி நிற்கின்றது.

**விளக்கம் :** காற்று அடிக்கும்போது ஒரு மரத்தின் கிளைகளும் அசைகின்றன ஆனால் அடிமரம் அசைவதில்லை. சகுண பிரம்மமாகிய நடராசர் ஆனந்தத் தாண்டவம் ஆடுகின்றார். நிர்க்குண பிரம்மமாகிய சிகாகாசம் அந்த ஆனந்தத்தையும் தன்னுள் ஒடுக்கிக் கொண்டு தன்மயமாயிருக்கின்றது. அதனுள் ஒடுங்குகின்ற பக்தர்களும் ஆனந்தாதீதத்திற்குப் போகின்றனர்.

## பாடல் — 3

**பாவனை ஆய கருத்தினில்**
**வந்த பராவமுது ஆகாதே** (அடி-1)

**பொருள் :** பண்பட்ட மனத்தில் உதிக்கின்ற தெய்விக விருத்திக்குப் பாவனை என்று பெயர். அதன் வாயிலாக வருகின்ற தெய்விகக் காட்சிக்கு **பாவனை சமாதி** என்று பெயர்.

**விளக்கம் :** பராஅமுதை யோக சாத்திரம் அமிர்த தாரை என வழங்கும். குண்டலினி சக்தி மூலாதாரத்தினின்று விழித்தெழுந்து மேல் நோக்கிப் போவது யோகியின் அநுபவம் ஆகின்றது. அது மற்ற ஆதாரங்களைத் தாண்டி சகஸ்ராரம் என்னும் ஏழாவது ஆதாரத்தின்கண் உச்சந்தலையில் எட்டுகின்றது. அப்போது சக்தி சிவத்தோடு சேருகின்றது. அதன் விளைவாக உச்சந்தலையினின்று அமிர்த தாரை சொட்டுகின்றது. அது பரமானந்தத்தை ஊட்டுகின்றது. இதுதான் **பாவனை சமாதி**. நிர்விகல்க் சமாதியில் இந்தப் பாவனை சமாதியும் அடிபட்டுப் போகின்றது.

**அந்தம் இலாத அகண்டமும்**
**நம்முள் அகப்படும் ஆகாதே** (அடி-2)

**பொருள் :** எல்லை இல்லாத உலகங்கள் அனைத்தும் நம் உள்ளத்தில் தோன்றுகின்றன.

**விளக்கம் :** எது அகண்டமோ அஃது ஒருபொழுதும் துண்டிக்கப்படுவதன்று என்பது கோட்பாடு. அகண்டமா யுள்ள ஆகாசம் இதற்கு நல்லதொரு சான்று. ஒரு பாண்டத் திற்கு உள்ளிருக்கும் ஆகாசம் புறத்திலுள்ள ஆகாசத்தி னின்றும் பிரிக்கப்பட்டது போன்று தென்படுகின்றது. உண்மையில் ஆகாசம் புறத்திலும், உள்ளும், பாண்டத் தினூடும் பிளவுபடாது வியாபகமாயிருக்கின்றது. சட ஆகாசத்தைப் பற்றிய இக்கோட்பாட்டை முதலில் அறிந்து கொள்வது அவசியமாகின்றது.

சடஆகாசம் போன்று சித் ஆகாசம் அகண்டமானது. அங்கு இங்கு எனாதபடி அஃது எங்கும் பிரகாசமாயுள்ளது. அதற்குப் போக்கும்வரவும் புணர்வும் இல்லை. அகண்டமா யுள்ள ஒரே சடஆகாசத்தில் எண்ணிறந்த கோளங்கள் மிதந்து கொண்டிருக்கின்றன. எண்ணிறந்த சூரிய மண்டலங் கள் அதில் தோன்றவும் ஒடுங்கவும் செய்கின்றன. அந்த நிகழ்ச்சிகளுக்கிடையில் ஆகாசம் பிளவுபடாமலும் மாறு படாமலும் யாண்டும் இருந்தபடியே உள்ளது. சித் ஆகாசம் அல்லது சிதம்பரத்தைப்பற்றிய உண்மையும் இதுவே. எண்ணிறந்த சீவான்மாக்கள் இதில் தோன்றி, இருந்து, ஒடுங்குகின்றன. சட ஆகாசம் எங்ஙனம் பாண்டங் களிலோ, சூரிய மண்டலங்களிலோ அகப்படுவதில்லையோ அங்ஙனமே சித் ஆகாசம் சீவ உபாதிகளுக்குள் அகப்படுவ தில்லை. உபாதியை முன்னிட்டு சீவான்மாவுக்குப் பெய ரளவில் அணுத்துவம் அல்லது ஆணவம் உள்ளது. தன்னை ஒரு சீவன் என்று எண்ணிக் கொண்டிருக்கிறபொழுதும் அவன் உண்மையிலேயே சிவம். நிர்விகல்ப சமாதியில் இவ் வுண்மை விளங்குகின்றது.

**பாடல்—4**

**என்அணி யார்முலை ஆகம்**
**அளைந்துடன் இன்புறும் ஆகாதே. (அடி-1)**

[என்அணி ஆர் முலை - எனது நெஞ்சு; ஆகம் - (இறைவனுடைய) திருமேனி; அளைந்து - படிந்து]

**பொருள் :** மூர்த்தியாகப் பரமனை தரிசித்து அவனைக் கட்டித் தழுவி ஆலிங்கனம் செய்வது சாத்தியப்படாது.

**விளக்கம் :** மார்க்கண்டேயன் சிவபூசை செய்து கொண்டிருந்தபொழுது மறலி வந்து பாசக் கயிற்றை வீசினான். இளைஞன் சிவனைச் சரணடைந்து சிவலிங்கத்தைத் தழுவியபோது இலிங்கம் மூர்த்தியாக மாறியது. பக்தனுடைய நெஞ்சைத் தழுவியபோது உண்டான சிவானந்தத்தை யார்தான் சொல்லால் விளக்க முடியும்? அதைவிட்டுப் பிரிய எந்த பக்தன்தான் இணங்குவான்? பெறுதற்கரிய அந்தப் பேறும் நிர்விகல்ப சமாதியில் அடிபட்டுப் போகின்றது.

மன்னிய அன்பரில் என்பணி
முந்துற வைகுவது ஆகாதே (அடி-3)

[மன்னிய - நிலைபெற்ற; முந்துற வைகுவது - முற்பட்டிருத்தல்]

**பொருள் :** அன்பர் பணிவிடை செய்தல் என்னும் ஆனந்தக் கைங்கரியம் அதீதத்தில் நிகழ்வதில்லை.

**விளக்கம் :** அப்போது தான் வெட்டியெடுத்த பச்சை மரத்திலும் தீப்பற்றி எரியும்படி செய்ய விருப் பினால் அதற்கு ஓர் உபாயம் உண்டு. கனல்விட்டு எரிகின்ற காட்டுத் தீயில் அப்பச்சை மரத்தைப் போட்டு விட்டால் சிறிது நேரத்தில் அதுவும் தீப்பற்றிக் கொள்ளும். சான்றோர்க்குப் பணிவிடை செய்யும் வாய்ப்பு ஒருவனுக்கு நேருமாகில் அந்தச் சான்றோரது சால்பு பணிவிடை புரிபவருக்கும் சொந்தமாகி விடுகின்றது.

வாதவூரடிகள் ஆனந்தக் கைங்கரியத்திற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு ஆகின்றார். குதிரை வாங்குவதற்காக

அரசின் செல்வத்தை எடுத்துச் சென்றார். வழியில் சிவகுருவையும் சிவனடியார்களையும் சந்தித்தார். தம் கடமையை மறந்துவிட்டு அன்பர் பணிவிடையில் அரசன் செல்வத்தையெல்லாம் செலவிட்டார். அந்தப் பணிவிடை அவருக்குப் பரமானந்தத்தை ஊட்டியது. அதற்காக அரசன் அவருக்குக் கொடுத்த தண்டனையை அமைதியாக ஏற்றுக் கொண்டார். அன்பர் பணி செய்ததில் பெற்ற இன்பநிலை அந்த அல்லல்களையெல்லாம் விழுங்கி விட்டது. உலக இன்னல் அவருக்கு இன்னலாகத் தோன்றவில்லை. அன்பர் பணியில் பெற்ற ஆனந்தம் அவ்வளவு பெரியது; மகத்தானது. அத்தகைய பேரானந்தமும் சமாதி நிலையில் நிர்மூலமாகி மறைந்து போகின்றது.

## பாடல்—5

**காதல் செயும்அடி யார்மனம்**
**இன்று களித்திடும் ஆகாதே** (அடி-2)

[காதல்செயும் - பக்தர்களிடத்து பக்தியை வளர்க்கின்ற]

**பொருள் :** பக்தர்களிடத்து பக்தர்கள் வைக்கும் அன்பு ஒப்பற்றது அதில் வருகின்ற ஆனந்தம் பரமானந்தமாகின்றது. நிர்விகல்ப சமாதியில் அந்த ஆனந்தம் மறைந்து போகின்றது.

**விளக்கம் :** சிறுவர் பலர் கூடி விளையாடுவதுண்டு. விளையாட்டில் மகிழ்ச்சி உச்ச நிகழ்ச்சிக்கு வந்திருக்கும் பொழுது பெற்ற தாய் வந்து கூப்பிட்டாலும் விளையாட்டை புறக்கணித்துவிட்டுத் தாயின் பின் செல்லச் சிறுவன் ஒருவன் இசைவதில்லை. பக்தர்களுக்கோ பக்தர் கூட்டுறவு அவ்வளவு இனிமை வாய்ந்தது.

மாணிக்கவாசகருக்குக் குருவின் கருணையும் அடியார் இணக்கமும் சேர்ந்து அமைந்தன. அவரை ஆட்கொண்ட பிறகு முதலில் குரு மறைகின்றார். ஆட்கொண்டவரிட

மிருந்து பிரிவது அவருக்குத் துன்பமாகத் தென்படவில்லை. பிறகு அடியார் குழாம் பிரிகின்றது. இவர்களை விட்டுப் பிரிந்தது அடிகட்குப் பெரும்வேதனையாக இருந்தது.

இறைவனே தொண்டர்க்குத் தொண்டன் ஆகின்றார். **அபுபென் ஆடம்** என்பவர் ஓர் இஸ்லாமிய பக்தர். அவருக்கு ஒருநாள் நள்ளிரவில் தேவர் தரிசனம் வாய்த்தது. தென்பட்ட தேவன் ஏதோ பட்டியல் ஒன்றை ஆயத்தப் படுத்திக் கொண்டிருந்தார். அந்தப் பட்டியல் எதைப் பற்றியது என்று வினவினார் அபு பென் ஆடம். அஃது ஆண்டவனின் அடியார் பட்டியல் என்ற விடை வந்தது. அதில் தன் பெயர் இடம் பெற்றுள்ளதா என்று அபு பென் ஆடம் வினவ, இல்லை என்ற மறுமொழி வந்தது. அப்படி யானால் அடியார்க்கு அடியவனாகத் தம் பெயரைப் பதிவு செய்யும்படி பக்தர் கேட்டார் அதன் விளைவாக அவர் அடியவர் தொகையில் முதல் இடம் பெற்றார். பக்தர்களது தொடர்பால் வருகிற பரமானந்தமும் நிர்விகல்ப சமாதியில் பின் அணிக்குப் போய் விடுகின்றது.

**எண்இலி ஆகிய சித்திகள்**
**வந்துஎனை எய்துவது ஆகாதே (அடி-3)**

**பொருள் :** கணக்கற்ற சித்திகளை நான் அடையப் பெறுவது பிரபஞ்ச வாழ்க்கையில் நிகழ்வதுண்டு. பாரமார்த்திகப் பெரு நிலையில் சித்திகள் யாவும் பயனற்றவைகளாகின்றன.

**விளக்கம் :** சித்திகள் என்றால் என்ன? பிரகிருதியில் உள்ள பஞ்சபூதங்களைக் கட்டி அசாதாரணமான காரியங் களுக்குப் பயன்படுத்துவது சித்தியாகும். இக்காலத்திய இயற்பியல் பல சித்திகளைப் பெற்றுள்ளது. ஐம்பூதங்களை யும் அரிய முறைகளில் அடக்கியாள்வதன் விளைவாக பல சித்திகள் வாய்த்துள்ளன. விரைந்து செல்லும் ஊர்திகள்

வானவூர்திகள், இராக்கெட்டு விமானங்கள், அம்புலியை அடைதல், அணுவைப் பிளந்து அரிய ஆற்றலை வெளிப் படுத்தி அற்புத விளைவுகளை உண்டாக்கும் நீரியகுண்டுகள், அணு குண்டுகள் இயற்றல், வானொலி, தொலைக்காட்சி, இன்சாட் சாதனம், அரிய முறைகளில் அறுவை சிகிச்சை போன்றவை சித்தியில் சேர்கின்றன.

மனிதன் தன்பால் உள்ள பூதங்களையும் அடக்கி ஆளுவ தால் பெறுகின்ற திறமைகளே சிறப்பாகச்சித்திகளாகின்றன. நீர்மேல் நடப்பது,நெருப்பில் இனிதாக அமர்ந்திருப்பது, பூமி யில் புதையுண்டு சாகாதிருப்பது, வானத்தில் சஞ்சரிப்பது, காயம் கட்புலனாகாமல் மறைந்திருப்பது, பரகாயப் பிரவேசம் பண்ணுவது, கல்லைக் கற்கண்டாக்குதல், மணலை சருக்கரையாக்குதல், திடீரென்று வாசனைத் திருநீற்றைத் தருவித்தல்—இவை போன்றவையும் சித்திகளாகின்றன.

ஆன்ம சாதகர்களுக்கு சித்திகள் வாய்ப்பதுண்டு. அவற்றில் மயங்கி ஈடுபடுபவர்கள் முன்னேற்றம் அடைவ தில்லை. பலர் அவற்றால் கீழ்மையுறுகின்றனர். நல்லறிஞர் கள் சித்தியைக் கருத்தில் வாங்குவதில்லை. நிர்விகல்ப சமாதி அடையப் பெற்றவர் சித்தியால் வரும் ஆபத்திற்கு அப்பாற் பட்டவராகின்றார். 'சினமிறக்கக் கற்றாலும் சித்தியெலாம் பெற்றாலும், மனம் இறக்கக் கல்லார்க்கு' (பராபரம்-169) சிவசொரூபம் வாய்க்காது.

## பாடல்-6

**பொன்னிய லுந்திரு மேனிவெண்**
**ணீறு பொலிந்திடு மாகாதே (அடி-1)**

[பொன் இயலும் - பொன் போல் விளங்குகின்ற;
பொலிந்திடுதல் - பிரகாசித்தல்]

**பொருள் :** சகுண பிரம்ம தரிசனம் பக்தனுக்கு பரமானந்தத்தை ஊட்டுகின்றது. இஷ்டமூர்த்தியின் தரிசனத்திற்கும் மேலானது நிர்விகல்ப சமாதி.

**விளக்கம் :** உபாசகன் உபாசன மூர்த்தியோடு கொள்கின்ற இணக்கம் ஒப்பு உயர்வு அற்றது. அதில் ஊறுகின்ற இனிமையை எதனோடும் சீர்தூக்கி ஒப்புமை காண இயலாது. அப்பேரன்புக்கு ஈடு அதுவேதான். பக்தர்களுள் பெரும்பாலோர் பரமனுடைய சாந்நித்தியத்தை (இருப்பை)த் தங்கள் உள்ளத்தின் உள்ளேயே உணர்கின்றனர். ஓட்டி உறவாடுதலும் உள்ளத்தின் உள்ளேயே நிகழ்கின்றது. மணிவாசகப் பெருமானும் 'ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானை' (திருவம்-7) என்று இயம்புவது அநுபூதியின் விளைவு எனக்கோடலே ஏற்புடைத்து,

உள்ளத்தினுள் ஞானக்கண்ணுக்கு இலக்கு ஆகின்ற இட்ட மூர்த்தி யாரோ சில அன்பர்க்குப் புறத்திலும் திருமேனி தாங்கித் திகழ்வதுண்டு. அகத்தில் இறைவனோடு உரையாடிப் பூரிப்பது போன்று புறத்தில் புலனாகின்ற அவனோடு பேச்சு வார்த்தை வைப்பதுண்டு. சைவகுரவர் நால்வர் வாழ்க்கையிலும் இத்தகையநிகழ்ச்சிகள் நடைபெற்றதை அவர்கள் வரலாற்றால் அறியலாம். இங்ஙனம் புறத்தில் புலனாகின்ற மேனியின் பொலிவோ பகர வொண்ணாதது. இங்கு அமைந்துள்ள சொல்லோவியம் அப்பேரழகிற்கு ஒருவாறு உகந்ததாயுள்ளது. பொன்னார் மேனியழகிற்கும் அதைப் புகழுதற்கென்று பொங்கி எழுகின்ற மொழியழகிற்கும் நிர்விகல்ப சமாதியில் இடம் இல்லை. அப்பெருநிலையை எட்டிய பெருமக்கள் எல்லார்க்கும் ஒப்ப முடிந்த முடிவு இது.

மணிவாசகப் பெருமானுக்குத் தமது வழிபடு தெய்வமே திருமேனி தாங்கிக் குருமூர்த்தியாக எழுந்தருளிற்று. இராமகிருஷ்ண பரமஹம்சருக்கு அவருடைய வழிபடு தெய்வமாகிய அகிலாண்டநாயகியே திருமேனி தாங்கியிருந்து தனது செல்வனைப் பரிபாலித்து வந்தாள். தாய்க்கும் சேய்க்கும்

உள்ள இணக்கங்கள் யாவும் அவர்களுக்கிடையில் நிகழ்வன வாயின. நிர்விகல்ப சமாதியில் வாதவூரர் வணங்குதற்குப் பொன்னார்மேனியன் இல்லை. இராமகிருஷ்ணருக்கு அருள் வடிவான அன்னை பராசக்தி இல்லை. இறுதி நிலையில் இருவர் அநுபவமும் ஒன்றேயாயிற்று.

**தன்னடி யாரடி யென்தலை**
**மீது தலைப்பன ஆகாதே:** (அடி-3)

[தழைப்பன ஆகாது - அருளை வளர்க்க மாட்டா]

**பொருள் :** சிவஞானம் பெற்றவரே சிவகுரு ஆகின்றார். அன்னவர் திருவடி சீடன்சிரசில் படிந்து ஸ்பர்சதீட்சையாகும் போது ஞானோதயம் உண்டாகின்றது. அது நிர்விகல்ப சமாதியாகுங்கால் குரு-சீடபேதம் போய் விடுகின்றது.

**விளக்கம் :** அருள் குருவுக்கும் பக்குவமான சீடனுக்கும் உள்ள இணக்கம் ஒப்பு உயர்வு அற்றது. எ-டு சிவகுருநாதன்-மணிவாசகர். இதனோடு சீர்தூக்குதற்கு உலகில் வேறொன்றும் இல்லை. வேண்டுமானால் ஓர் உவமையைக் கொண்டு விளக்கலாம். வெந்தழல் போன்றவர் குருநாதன்; விறகு போன்றவன் சீடன். இருவரும் இனிது ஒன்றுபடுவது முடிவு. அப்படி ஒன்றுபடுவதில் துவைதம், விசிட்டாத் வைதம், அத்வைதம் ஆகியவற்றிற்கு ஏற்பப் பாகுபாடுகள் அமைகின்றன. ஒரு சமயம் இராமபிரான் மாருதியை நோக்கி, 'நீ என்னை எவ்வாறு கருதுகின்றாய்?' என்று கேட்கின்றார். அதற்கு அந்த அஞ்சனைக் குமரன் தந்த விடை : 'என்னிடத்து உடல் உணர்வு இருக்கும்போது நீ ஆண்டான்; நான் உன்னை விட்டு அகலாத அடிமை. என்னிடத்து சீவான்ம போதம் வரும்போது நீ பூரணன்; நான் உன்னில் ஓர் அம்சம். என்னிடத்து சுத்த சைதன்ய போதம் வரும்போது நீயே நான்; நானே நீ. இஃது எனது முடிந்த அநுபவம்' என்பது.

இதனை இன்னொரு சான்றாலும் விளக்கலாம். சாத்திரத்தின் சொரூபம் வியாசமுனிவர்; பண்பட்ட சீடனது சொரூபம் அவருடைய பிள்ளையாகிய சுகப்பிரம்மம். நிறை ஞானியின் சொரூபம் இராஜரிஷியாகிய ஜனக மகாராஜன். ஞானதீட்சை பெறுதற்கு அந்த நிறைஞானியிடம் தந்தை வியாசர் தனயன் சுகப்பிரம்மத்தை அனுப்புகின்றார். தீட்சை பண்ணி வைப்பதற்கு முன்னதாகவே வழக்கத்தில் இருந்து வந்த குருதட்சிணையைச் செலுத்தும்படி சனகர் சுகரிடம் ஆணையிடுகின்றார். அதற்குக் காரணம் யாதோ என்று அருகில் இருந்த இருடிபுங்கவர் சிலர் வினவுகின்றனர். சனகர் இவர்கட்கு விளக்கம் தருகின்றார். 'சுகப்பிரம்மத்திற்கு பிரம்மோபதேசம் செய்தவுடனே அவருக்கு நிர்விகல்ப சமாதி கூடிவிடும். அதன் விளைவாக குரு-சீடன் என்ற பேதம் அழிந்து பட்டுப் போகும். குருதட்சிணை செலுத்துவதைப்பற்றிய எண்ணமே பிறகு எழாது என்பது. இது நிர்விகல்ப சமாதியைப் பற்றிய உண்மையாகும். மணிவாசகரும் 'தான் அடியோம் உடனே உயவந்து தலைப்படும் ஆகாதே' (அடி-3) என்று ஈண்டு இயம்புகின்றார்.

## பாடல்-7

**பல்லியல் பாய பரப்பற**
**வந்த பராபர மாகாதே** (அடி-2)

[பல் இயல்புஆய - பல இயல்புகள் வாய்ந்த; பரப்பு அறவந்த - மனத்தின் சலனம் ஒடுங்குமிடத்துத் தென்படுகின்ற]

**பொருள் :** அசையாத தூய மனத்தில் ஈசனது பலப்பல விபூதிகள் மிளிர்கின்றன. மனாதீதத்தில் அத்தகைய தெய்விக அநுபவங்கட்கு அவகாசம் இல்லை.

**விளக்கம் :** காற்று அடிப்பதனால் தரையிலுள்ள தடாகம் ஒன்று அலைவீசிக் கொண்டு உள்ளது. அதனால்

நீரினுள் பிரதிபிம்பிக்கின்ற சந்திரன் தாண்டவமாடுவது போன்று தென்படுகின்றது. தடாக நீரிலே தேக்கம் ஏற்படு வதற்கு ஏற்ப அதனுள் ஏற்படுகின்ற திங்களின் அசைவு குறைகின்றது. நீர் முற்றிலும் அமைதியுறுமிடத்து நிலாவின் தோற்றமும் அதனுள் நிலைபேறு எய்துகின்றது. மனமோ அலை நிறைந்த தடாகம் போன்றது. அடங்கிய மனம் அலையற்ற தடாகம் போன்றது. தூய்மையும் அமைதியும் அடையப் பெற்ற மனம் மாண்புமிகப் படைத்ததாகும். இறைவன் படைப்பில் அதற்கு அமைதியான சிறப்பு உண்டு.

புறத்திலே உள்ள அகிலாண்டங்களையும் தூய மனம் படைத்திருப்பவன் அகத்திலும் காணமுடியும். புறத்தில் வெட்டவெளி எவ்வளவு விசாலமானதோ அவ்வளவு விசால மான வெட்ட வெளியை அகத்திலும் காணலாம். புறவுலகில் ஆழ்கடல் எவ்வளவு ஆழமானதோ அவ்வளவு ஆழமான அமைப்பை அகத்திலும் காணமுடியும். அண்டத்தில் உள்ளவையெல்லாம் பிண்டத்திலும் உள்ளன. தன்னிடத்து அமைந்திருக்கின்ற தெய்விக விபூதிகளை முற்றும் அறிகின்றவனுக்கு மேலும் அறிந்துகொள்ள ஒன்றும்இல்லை. அப்படி மிளிர்வன யாவும் மாயா சகிதனான ஈசுவரனது விபூதிகளாம். பிரளய காலத்தில் அவை யாவும் ஒடுங்கு கின்றன. மனிதன் படைத்துள்ள தூய மனத்தை ஒடுக்கி விட்டு நிர்விகல்ப சமாதி எய்துவானாகில் அவன் சிதம்பரத்தை அடைந்தவன் ஆகின்றான், இறைவனது ஐந்தொழில்களைக் கடந்து மேலே போனவன் ஆகின்றான். அவனது மனோநாசம் அதற்கு உபாயமாகின்றது.

**வில்இயல் நல்நுத லார்மயல்**
**இன்று விளைந்திடும் ஆகாதே** (அடி-3)

[வில்இயல் - வில்லின் தன்மையமைந்த; நல்நுதலார் - அழகிய நெறியையுடையவர்கள்; மயல் - மயக்கம்]

**பொருள் :** புறத்தில் அழகான வடிவங்களைக் கண்டு அவற்றிற்கு வசப்படுதல் நிர்விகல்ப சமாதிக்குப் பிறகு நிகழாது.

**விளக்கம் :** சீவான்மனுக்கு சீவ வியக்தியானது பல பிறவிகளில் தொடர்ந்து வருவதற்குக் காரணம் ஒன்று உண்டு. அகத்தில் இருப்பதை அவன் புறத்தில் தேடித் திரிகின்றான். ஆதலால் அகத்தில் இருப்பதைப் புறத்தில் தேடியலைபவன் சீவான்மன் என்று அவனுக்கு விளக்கம் கொடுக்கலாம்.

நிலையற்ற வாழ்வை **நிரந்தர வாழ்வாகத்** திருத்தியமைக்க சீவன் பெருமுயற்சி எடுத்துக் கொள்ளுகின்றான். அதற்காக அவன் உணவைத் தேடித் திரிகின்றான். குடியிருக்க வசதியான இல்லம் அமைத்துக் கொள்ளுகின்றான். குளிர்ச்சி, வெப்பம் ஆகிய இயற்கையின் இயல்பை மீளுவதற்கேற்ற உடைகளை அணிகின்றான். இப்படி வாழ்வை நீடித்து வைத்திருக்க அவன் எடுத்துக் கொள்ளும் முயற்சியில் பெரிதும் வெற்றியடைகின்றான். ஆயினும் மரணம் வந்து அவனைத் தோற்கடித்து விடுகின்றது. மேலும் பிறவி எடுத்து வந்து அதே முயற்சியை மீண்டும் செய்கின்றான். எண்ணிறந்த பிறவிகள் எடுத்து இளைத்துப் போனபிறகு, தான் தேடும் நித்திய வாழ்வு தன்னிடத்திலேயே உள்ளது என்பதை அநுபூதியில் அறிகின்றான். ஆன்மா சத் பொருள்; அஃது அழிவற்றது.

அடுத்து அவன் நாடுவது **ஆனந்தம்.** இதை அவன் புறவுலகில் தேடியலைகின்றான். தனக்குக் கிடைக்கும் ஒவ்வொரு பொருளையும் சோதனை செய்து பார்க்கின்றான். எது ஆனந்தத்தைக் கொடுக்கின்றதோ அதே பொருள் பின்பு துக்கத்தையும் தருகின்றது. இப்படி உலகமெல்லாம் தேடித் திரிந்து விட்டுத் தான் தேடுகின்ற ஆனந்தம் தன்னிடத்

திலேயே உள்ளது என்பதை அறிந்து கொள்ளுகின்றான். கஸ்தூரி மானிடத்துக் கஸ்தூரி அதன் பருவத்தில் விளைகின்றது. அந்த மணம் மானுக்கு மிக விருப்பமானது. ஆதலால் அது அப்பொருளை நாடி அலைகின்றது. அப்படி அலையும் காலமெல்லாம் அந்த மணத்தை அது தன்னிடத்திலேயே வைத்துக் கொண்டுள்ளது. சீவான்மன் ஆனந்தத்தை நாடி அலைவதும் அத்தகையதாகும்.

சீவான்மாவின் மற்றோர் இயல்பு அழகைப் போற்றுவதாகும். அழகுப் பொருள்கள் எல்லாம் அவன் கவனத்தைக் கவர்கின்றன. அழகை அவன் நன்கு சுவைக்கின்றான். அதை அவன் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ள முயல்கின்றான். சொந்தமாவதற்கு முன்பு அழகாகத் தென்பட்டது சொந்தமானவுடனே சிறிது அழகை இழக்கின்றது. நாளடைவில் அஃது அவனுக்கு அழகற்றதாகின்றது. இங்ஙனம் அழகைநாடி அலைவது ஒய்வில்லாத முயற்சியாகின்றது. எத்தனை எத்தனையோ வடிவங்கள் அழகுடையனவாகத் தென்பட்டு அவனை மயக்குகின்றன. அவற்றுள் எத்தனையோ வடிவங்கள் தாமே அழகை இழந்து அவன்பால் அருவருப்பையூட்டுகின்றன. எத்தனையோ பொருள்கள் அவன் மனமாற்றத்தை முன்னிட்டு அழகை இழந்தவை போன்று காட்சி கொடுக்கலாயின!

ஆன்ம சாதனத்தில் ஈடுபடுகின்ற சீவான்மன் அழகு அனைத்தையும் தனது வழிபடு தெய்வத்திடத்துக் காண்கின்றான். பிறகு தனது வழிபடு தெய்வமே அழகுப் பொருள்கள் அனைத்துமாக உள்ளது எனக் காண்கின்றான். அழகுத் தெய்வமே அகத்திலும் புறத்திலும் மிளிர்வது அவனுக்குப் பரமானந்தத்தை ஊட்டுகின்றது. 'சாந்தம் சிவம் சுந்தரம் பிரம்மம்' என்னும் ஆப்தவாக்கியம் அவனுக்கு அநுபூதியாக அமைகின்றது. சவிகல்ப சமாதியில் இஷ்ட மூர்த்தியை சுந்தர சொரூபியாகக் கண்டு களித்திருப்பது ஒருவித அநுபூதி

யாகின்றது. இதன் பயனாகச் சிவனைச் சுந்தரேசன் என்கின்றான். திருமலைச் சுந்தரராஜன் என்கின்றான்; அம்பிகையைச் சௌந்தரிய நாயகி என்கின்றான். குமரனை முருகன் (முருகு அழகு) என்று கூறுவதன் உட்பொருள் அப்பொழுது அவனுக்குத் தெளிவாகின்றது. அழகும் இறைவனும் ஒன்று. அழகை போகத்துக்குரிய உலகப் பொருளாகப் புலப்படுத்திச் சீவன் தன்பால் துன்பத்தை வரவழைத்துக் கொள்ளுகின்றான். சவிகல்ப சமாதியில் அழகுத் தெய்வத்தோடு நேரான இணக்கம் வைத்து இன்புறுகின்றான். நிர்விகல்ப சமாதியில் அழகு என்னும் விபூதியும் மறைகின்றது. சுத்த சைதன்யமாகிய பரம்பொருளே எஞ்சி நிற்கின்றது.

பாடல்-8

**சாதி விடாத குணங்கள்**
**நம்மொடு சலித்திடும் ஆகாதே** (அடி-1)

[சாதி விடாத குணங்கள் - சாதியை விட்டுப் பிரியாத முக்குணங்கள்]

**பொருள்:** முக்குணங்களும் அவற்றினின்று உருவெடுத்து வருகின்ற சாதி பேதங்களும் அதீதத்தில் இடம் பெறுவதில்லை.

**விளக்கம்:** சத்துவம், இராஜசம், தாமசம் என்னும் முக்குணங்களால் ஆனது அண்டம்; இந்தப் பிரகிருதி. இதில் உள்ள உயிர்வகைகளும் முக்குணங்களால் ஆகியவையாகும். ஒவ்வோர் உயிர்வகைகளிலும் பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்னும் நான்கு சாதிகள் உள்ளன. இவற்றின் உட்பிரிவுகளோ எண்ணிக்கையில் அடங்கா, பண்பாடு அடைந்து மேல்நிலைக்கு வந்தவன் பிராமணன். அவன் ஆசாரத்தில் சிறந்தவன்; ஒழுக்கத்தில் உறுதி பெற்றவன்; அறிவில் தெளிந்தவன்; தூய அன்பில் ஊறியவன்; அருளில் நிலைத்திருப்பவன்; செயலில் சிவ சேவையே வடிவெடுத்தவன்.

உயிர் வகைகளுள் நான்கு சாதிகள் இருப்பது போன்று காலச் சக்கரத்தில் நான்கு யுகங்கள் உள்ளன. அவை கிருத யுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என வகுக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் கிருதயுகம் எல்லாவற்றிலும் உயர்ந்தது. அதில் வாய்த்துள்ள எல்லா விதமான நிறை நிலைகளுக்கிடையில் ஒரே ஒரு குறைபாடு உள்ளது. கிருத யுகத்தில் ஆன்ம சாதகனுக்கு முக்தி கிடைப்பது அரிதிலும் அரிது.

கிருதயுகத்திற்கு ஒப்ப பிராமணனுக்கு ஓர் இடையூறு உண்டு. சாதியில் மேலே வருவதற்கு ஒப்ப சாதியபிமானம் என்னும் உபாதி மனிதனிடம் வலுக்கின்றது. அந்த உபாதி பிராமணனிடத்தில் உச்சநிலையை அடைகின்றது. பெருங் காயம் வைத்துள்ள பாண்டத்தை எவ்வளவுதான் துலக் கினாலும் பெருங்காய நாற்றம் அப்பாண்டத்தை விட்டு அகலாது. அங்ஙனம் 'நான் பிராமணன்' என்னும் உபாதி எளிதில் அகலாது. வாழ்வின் ஆரம்ப நிலையில் அந்த உபாதி முற்றிலும் வேண்டப்பெறுகின்றது. ஆனால் சமாதியில் சீவஉபாதியை முற்றிலும் ஒழிக்க முயலுங்கால் அது குறுக் கிட்டு இடைஞ்சல் செய்யும். இந்த உபாதியை ஒழிக்க இராமகிருஷ்ணர் ஆறுமாத காலம் அற்புதமான சாதனம் புரிந்ததாக அறிகின்றோம். நள்ளிரவில் தட்சிணேசுவரத்து அருகில் இருக்கும் சேரிக்குச் செல்வார். தம் தலை முடி யால் அவ்விடத்தைத் துடைத்துத் தூய்மையாக்குவார். "தாயே, மக்களால் ஒதுக்கப்பெற்றவர்களும் உன் குழந்தை களே. நான் அவர்களைவிட உயர்ந்தவன் என்னும் உபாதி என் உள்ளத்தைவிட்டு அறவே அகல வேண்டும்" என்று பிரார்த்தனை செய்து பணிவிடை புரிந்து அவர் தமது மனப்பான்மையைத் திருத்தி அமைத்தார். அந்த உபாதியை ஒழித்தற்கு இராமகிருஷ்ணர் அத்தகைய அரும்பாடுபட்டார் என்பதிலிருந்து அஃது எவ்வளவு விபரீத வலிவு படைத்தது

என்பது தெளிவாகின்றது: சாதியுபாதியை யொழித்தா லொழிய நிர்விகல்ப சமாதி வாய்க்காது என்பதை மணி வாசகப் பெருமான் வெளிப்படையாக வற்புறுத்துவார். சாதிக் கருத்தை,

**சாதிகுலப் பிறப்பென்னும்**
**சுழிபட்டுத் தடுமாறும்**
**ஆதமிலி நாயேனை** (கண்ட-5)
(ஆதம்இலி-ஆதரவு இல்லாதவன்)

என்று கூறியிருப்பது ஈண்டு நினைக்கத் தக்கது.

**அங்குஇது நன்றுஇது நன்றெனும**
**மாயை அடங்கிடு மாகாதே** (அடி-2)

**பொருள் :** கர்மம் மாயையின் கூறு ஆகின்றது, நல்ல கர்மத்தையே செய்தல் என்னும் நியதி இவ்வுலகுக்குரியது. நல்ல கர்மத்தையும் கடந்து அதீதத்துக்குப் போகும்பொழுது மாயையின் ஆதிக்கம் அடங்கிவிடுகின்றது.

**விளக்கம் :** இயற்கை என்பதுதான் மாயை. மாயையின் அமைப்பு நல்லதா, கெட்டதா என்ற வினா ஓர் அறிஞரிடம் எழுந்தது. அதற்கு விடையாக அவர் பூனையின் பல் நல்லதா கெட்டதா என்று கேட்டார். இந்த வினாவை ஓர் எலியிடம் விடுத்தால், பூனையின் பல்லைவிடக் கொடியது உலகில் ஒன்றுமே இல்லையென்று இயம்பும். மற்றும் இதே வினாவை பூனைக் குட்டியிடம் விடுத்தால் தன் தாய்ப்பூனையின் பல்லைவிட நல்லது உலகில் வேறு ஒன்றும் இல்லையென்று சொல்லும். பூனையின் பல் தன் அளவில் நல்லதும் அன்று, தீயதும் அன்று. அதனோடு தொடர்பு கொள்பவர் பாங்குக்கு ஏற்ப அது நல்லதாகவோ கொடியதாகவோகாட்சி கொடுக்கின்றது.

மாயை அல்லது இயற்கையின் தன்மையும் அத்தகையதே நல்லார்க்கு மாயை அருள் நிறைந்தது. பொல்லார்க்கு

அது பாதகம் நிறைந்தது. மாயை முற்றிலும் கர்ம சொரூபம். கர்மத்தில் நலம், கேடு ஆகிய இரண்டும் கலந்தே உள்ளன. எக்கர்மத்தை ஆராய்ந்தாலும் இவ்வுண்மை புலனாகும். சிசுவை உருவாக்குதற்குத் தாயின் கருப்பம் நல்லது. உருவான பிறகு சிசு மேலும் அங்குத் தங்குவதற்கு அது கெட்டது. சீவர்களைப் பண்படுத்துவதற்கு உலகம் நல்லது. பண்பாட்டிற்கு ஏற்ப நல்ல கர்மத்தை ஒன்றன்பின் ஒன்றாகச் செய்து வரவேண்டும். நல்லார்க்குப் பணி விடை செய்வது கர்மம்; கடவுள் வழிபாடு கர்மம்; பக்திபூணுவது கர்மம்; ஞான விசாரம் செய்வது கர்மம், இயற்கையாகிய மாயை இவற்றிற்கெல்லாம் உதவுகின்றது. இறுதியில் நிர்விகல்பசமாதியின் வாயிலாகக் கர்மாதீதத்திற்குப் போவது குறிக்கோள். இந்நிலையில் மாயையின் ஆதிக்கத் திற்கு இடம் இல்லை.

**ஆசையெ லாம்அடி யாரடி**
**யோம்எனும் அத்தனை யாகாதே** (அடி-2)

**பொருள்:** சவிகல்ப சமாதியை அடைந்தவன் அதினின்று வியவகார நிலைக்குக் கீழே இறங்கி வந்து அடியவர்களுக்கு அடிமை பூணுதல் என்னும் திருத்தொண்டினில் விருப்புடன் ஈடுபடுவது இயல்பு. ஆனால் நிர்விகல்பசமாதி அடைந்தான பிறகு அத்தகைய ஆசைக்கோ அதன் தூண்டுதலால் திருத் தொண்டு புரிதலுக்கோ அங்கு இடம் இல்லை.

**விளக்கம்:** ஒருவர் ஒரு சங்கத்தில் உறுப்பினராய்ச் சேருகின்றார். அதற்காக என்று மிகவும் உழைத்து அதனை உயர்நிலைக்குக் கொணர்கின்றார். பின்பு அப்படி உழைத் தவர் சமுதாயத்தில் உயர்நிலை எய்துகின்றார். அவருக்குச் செல்வம் அதிகம்; செல்வாக்கு அதிகம்; ஆதிக்கம் அதிகம். இவை யாவும் தமது சங்கத்தின் வளர்ச்சிக்கு மேலும் பயன் படுத்துகின்றார். உலக நடைமுறையில் இது மிகவும் போற்றத் தக்கது.

சங்கங்களுள் தொடர் குழாம் மிகவும் மேலானது. அதில் தெய்விக சாந்நித்தியம் சிறப்புற்று மிளிர்கின்றது. அதற்குச் செய்யும் சேவை சிவசேவைக்கு நேர். அதில் வைத்திருக்கும் பற்றுதல் தெய்வப்பற்றுக்கு ஒப்பானது. தொண்டர் குழாம் ஒன்றுக்கு ஆத்மசாதகர் ஒருவர் அன்போடு உழைக்கின்றார். அவர் நிர்விகல்ப சமாதி அடையப் பெறுகின்றார். அது கலைந்த பிறகு அவர் பழைய அன்போடும் ஆதரவோடும் அடியார் சேவைக்கு வருகின்றாரா என்பது கேள்வி. நிர் விகல்ப சமாதி அடைந்தவரது பாங்கு அறவே மாறி விடு கின்றது. ஒரு பாலன் போன்று அவர் ஆய்விடுகின்றார். ஆசை ஒன்றும் அவரிடத்து இல்லை. கர்மத்துக்குத் தாம் கர்த்தா என்ற எண்ணம் அவரை விட்டு அறவே அகன்று போகின்றது. அபேதத்தில் அவர் நிலைத்திருக்கின்றார். யாருக்கு உழைத்தல், யாரிடமிருந்து விலகியிருத்தல் என்னும் பாகுபாடு அற்றவராகின்றனர். அவரைக் கொண்டு ஏதாவது வினை நிகழ்ந்தால் அது முற்றிலும் சிவன் செயல் ஆகும்.

**சீரடி யார்கள் சிவானுப**
**வங்கள் தெரிந்திடும் ஆகாதே** (அடி - 3)

**பொருள் :** சவிகல்ப சமாதியில் உண்டாகின்ற எண்ணிறந்த மூர்த்தி தரிசனங்களும் இணக்கங்களும் நிர்விகல்ப சமாதியில் ஒரே அகண்ட சச்சிதானந்த சிவ சொரூபமாய் நிலைமாறி விடுகின்றன.

**விளக்கம் :** சீர் அடியார்களுள் சீகாழிச் செல்வர் ஞான சம்பந்தர் சிவனைத் தந்தையாகவும் தம்மை ஒரு ஞானச் செல்வராகவும்கருதிவந்தார். (மகன்மை நெறி). இத்தகைய இணக்கத்திற்கு நிர்விகல்ப சமாதியில் இடம் இல்லை. அப்பர் பெருமான் தம்மை அடிமையாகவும் கடவுளை ஆண்டானாக வும் கருதிவந்தார் (அடிமை நெறி). நிர்விகல்ப சமாதியில் இப்படிப் பட்ட உறவு பொருளற்றது. சுந்தரர் வன்றொண்ட ராயிருந்து தேவ தேவனைத் தோழனாகக் கருதி அவரிட

மிருந்து வேலை வாங்கினார் (தோழமை நெறி). பாரமார்த்திகப் பெருநிலையில் இச்செயல் பொருளற்றது. வாதவூரரை ஆட்கொள்ளும் பொருட்டு அடியார்கள் புடைசூழ ஞானாசிரியனாக சிவன் எழுந்தருளியதும், பரிமேலழகனாக வந்ததும், பிட்டுக்கு மண் சுமந்ததும் நிர்விகல்ப சமாதியில் பொருளற்றவையாகப் போகின்றன. வெவ்வேறு பாங்குகளில் கயிலையைச் சென்றடைவதும், ஆங்குச் சிவசாந்நியத்தில் இன்புற்றிருப்பதும் நிர்விகல்ப சமாதியில் இடம் பெறமாட்டா. முடிந்த நிலையாகிய சுத்த சிவ சைதன்யத்தில் நாம ரூபங்களோடு கூடிய வியத்திகளுக்கு இடம் இல்லை.

நிர்விகல்ப சமாதிக்கும் கிரம முக்திக்கும் வேற்றுமையொன்று உண்டு. சுத்த கர்ப்பூரம் எறிந்தால் சாம்பலோ கரியோ எஞ்சியிருப்பதில்லை. அது போன்று நிர்விகல்ப சமாதியில் சீவபோதம் எஞ்சியிருப்பதில்லை. அது பரபோதத்தில் ஒடுங்கிவிடுகின்றது. கயிலாயத்திற்கும் வைகுந்தத்திற்கும், சத்தியலோகத்திற்கும் சென்று பதவி முக்தி துய்க்கின்றனர். பக்தர்கட்கு அது மிகப் பிரியமானது. பூவுலகில் செய்த ஆன்ம சாதனங்கள் ஆங்கும் நிகழ்ந்து வருகின்றன. பிரளயம் வரும்போது அன்னவர் எல்லோரும் கிரம முக்தி அடைகின்றனர். அப்பொழுது அது நிர்விகல்ப சமாதிக்கு நிகர் ஆகின்றது.

**எங்கும் நிறைந்தமு தூறு**
**பரஞ்சுடர் எய்துவது ஆகாதே** (அடி - 4)

**பொருள் :** நிர்விகல்ப சமாதி அடையப் பெற்றவன் அதிலிருந்து ஒரு படி கீழே இறங்கி வந்து சவிகல்ப சமாதியில் பரமானந்தத்தில் திளைத்திருப்பதில்லை. ஆனந்தாதீதத்துக்குப் போனவன் ஆனந்தத்துக்கு இறங்கி வருவதில்லை.

**விளக்கம் :** பரமன் ஒரே காலத்தில் சிதம்பர ரகசியமாகவும், நடராசராகவும், அம்மையப்பராகவும், அட்ட மூர்த்தி

யாகவும் இருக்கின்றான். இந்த நிலைகளை முறை
குண பிரம்மம், சகுணபிரம்மம், பிரகிருதி - புரு
பிரகிருதி தத்துவம் என வேதாந்தம் கூறும்.
பிரகிருதி தத்துவத்தில் உருவெடுக்கின்றான். சடமா
இருந்து பிறகு சேதநமாகப் பரிணமிக்கின்றான்.
தேவி மலையரசனுக்குச் செல்வியாகப் பிறப்பதில்
பாடு அடங்கியுள்ளது. ஆறுமுகம் என்று சொ
ஆறுஞான பூமிகளில் இருப்பவர்கள் எல்லோரும் சீவ
மாக்களேயாம். முதல் ஞான பூமி சடசக்தி அல்லது
தாரம். ஆறாவது ஞானபூமியாக இருப்பது நடராச தத்துவ
அல்லது சகுண பிரம்மம். சகுண பிரம்மத்தை அடையும்
பொழுதும் சீவான்மாவுக்கு சீவ வியக்தி இருக்கின்றது. அத்
தகையவனுக்கு ஞானத்தில் மேல்நோக்கிப் போவது போன்று
அஞ்ஞானத்தில் கீழ்நோக்கிப் போவதும் சாத்தியம், பிறவிப்
பெருங்கடலில் உழல்பவனுக்கு மேலான பிறவியும் கீழான
பிறவியும் வினைக்கு ஏற்றவாறு வந்து வாய்க்கின்றன.

சவிகல்ப சமாதியை எட்டுகின்றவன் விரைவில் நிர்வி
கல்ப சமாதிக்குப் போதல் வேண்டும். சீவனுடைய முயற்சி
யும் ஈசனுடைய அருளும் அதற்கு ஒன்று சேர வேண்டும்.
நிர்விகல்ப சமாதியில் முத்தி அல்லது வீடு எய்துதல் பூர்த்தி
யாகின்றது. சிதம்பரம் போனவர் திரும்பி வருவதில்லை
என்பதன் பொருள் இதுவாகும். அதீதத்தில் இருக்கும் இப்
பெருநிலையை அடையப் பெற்றவன் பகர்வது:

> **அந்த சாந்த மூர்த்தி, அசையாத**
> **பிரம்மம் இரண்டற்ற பேரின்பம்,**
> **திரண்ட பேரறிவு—அப்பொருளே**
> **நான்**

என்பதாகும்.[7]

---

7. 'திருப்படையாட்சி'—என்ற பகுதியின்கண் உள்ள விளக்கங்கள் யாவும் பெருந்தவத்திரு சித்பவாநந்த அடிகளின் திருவாசகப் பதிப்பிலுள்ள விளக்கங்களைத் தழுவி எழுதப்பெற்றவை.

## 14. திருவாசகம்—பதிக முறை வைப்பு

இதுகாறும் வெளிவந்த திருவாசகப் பதிப்புகளில் **சிவபுராணம்** முதல் **அச்சோ பதிகம்** ஈறாக ஐம்பத்தொரு பகுதிகளாக முறைப்படுத்தப்பெற்று வழங்கி வருகின்றது. இம்முறை வைப்பு திருவாதவூரடிகள் அருளிய கால அடைவினைப் பற்றியதோ, அன்றி அவர்தம் திருப்பாடல்களால் உணர்த்தப்பெறும் பொருளடைவினைப் பற்றியதோ என்பது திட்டமாகத் தெரிந்து உறுதி செய்யப்பெறவில்லை. ஆனால், திருவாசகம் மணிவாசகப் பெருமான் சொல்லத் தில்லைச் சிற்றம்பலப் பெருமான் எழுதிக் கொண்டது என்பது வரலாறு. அதன் வண்ணம் இப்போது வழங்குகின்ற முறை வைப்பு இருக்கலாம் என்பது தெளிவு. பாட்டுடைத் தலைவராகிய சிற்றம்பலவன் முன்னிலையில் பாடிய பாடல்களை முறைப்படுத்திப் பெரியோர் வைத்த முறையே முறை என்று கொண்டு அமைதி பெறுவதே நாம் மேற்கொள்ள வேண்டிய முறை.

**பதிகப் பெயர்கள் :** திருவண்டப் பகுதி, பண்டாய நான்மறை, குழைத்த பத்து என்பன அப்பாடல்களில் வரும் முதற் சொல்லையே கொண்டு வைத்த பெயர்கள் என்பது புலனாகும். திருவெம்பாவை, திருவம்மானை, திருக்கோத்தும்பி, திருச்சாழல், திருத்தெள்ளேணம், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல், திருப்பள்ளியெழுச்சி, அடைக்கலப்பத்து, அன்னைப் பத்து, ஆசைப்

பத்து, அதிசயப் பத்து, பிடித்த பத்து, அற்புதப் பத்து, சென்னிப் பத்து, திருக்கழுக்குன்றப் பதிகம் என்ற பெயர்கள் அவ்வப்பகுதியில் பாடல் இறுதியில் வரும் சொல்லாலும், இறுதியடியில் அமைந்த சொல்லாலும் அமைந்த பெயர் களாகும் என்பதைத் தெளியலாம். திருப்படையாட்சி என்பது அப்பகுதியில் முதற்பாட்டில் மூன்றாவது அடியில் வரும் 'படையாட்சி' என்ற சொல்லால் சூட்டிய பெய ராகும். செத்திலாப் பத்தும் அத்தகையதே. இவ்வாறு ஒரு பகுதியில்வரும் முதற் சொல்லாலும், இறுதிச் சொல்லாலும் செய்யுளிடையில் வரும் சொல்லாலும், அவ்வப் பகுதிக்குப் பெயர் சூட்டிப் பிற்காலப் புலவோர்க்கு வழிகாட்டி யுள்ளார் மணிவாசகர். ஏனைய தலைப்புகள் பொருள் நோக்கத்தால் அமைந்தவை.

**மகளிர் விளையாட்டுகள் :** தலைப்புகளில் சில மகளிர் விளையாட்டுகளாக அமைந்துள்ளன. இங்ஙனம் அமைந் துள்ளவை திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற் சுண்ணம், திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல் என்ற ஒன்பதுமாகும். இத்தலைப்புகளை விளக்குமிடத்து இவ்விளையாட்டுகள் விளக்கம் பெறுகின்றன. மகளிரிடத்தில் சமய உணர்வு பரவச் செய்து எல்லோர்க்கும் உய்வு நெறி காட்ட வேண்டும் என்ற கருத்துடையவர் மணிவாசகப் பெருமான். மெல்லிய இயல்புடைய பெண்டிர் மனத்தைச் சமய உணர்வில் பதியச் செய்துவிட்டால் பின்பு ஆடவர்கள் அவர் வழிச் சென்று சமயப் பற்றுடையவர்களாவர் என்ற கருத்தில் பெண்டிற்கே உரிய விளையாட்டுகளைத் தம் பத்தி நெறியில் அமைத்துப் பாடியுள்ளார்.

**பதிகக் கருத்துகள் :** அச்சிட்ட திருவாசகப் பதிப்பு களில் பதிகக் கருத்துகள் மிகச் சுருக்கமாக ஒவ்வொரு தலைப்பின் கீழும் எழுதப்பெற்றுள்ளன. ஆனால் அவை

எப்பொழுது யாரால் எழுதப் பெற்றன என்பது இதுகாறும் அறியக் கூடவில்லை. ஆயினும் பின்னர் உரை எழுதப் புகுந்த ஆசிரியரனைவரும் அக்கருத்துகளுக்கு விளக்கவுரை கூறியுள்ளனர். அவற்றையெல்லாம் ஒரு சேர நோக்கினாலேயே பதிகத்தின் உண்மைக் கருத்துகள் தெளிவாகும். வயிரமணி மாலைகளுள் உள் நுழைந்திருக்கின்ற நூற்கயிறு போல் இத்திருவாசக மாலையிலும் ஓர் இயைபு உள்ளது. இக்கருத்துகளின் விளக்கத்தை அருளிச் செயல்களை எடுத்துக்காட்டும் இடங்களில் காட்டியுள்ளேன். ஆண்டுக் கண்டு தெளிக.

**பதிக முறைவைப்பு—புராணங்களில் உள்ளவை :** வரலாறு விளக்கப் புகுந்த நூல்களாகிய நம்பி திருவிளையாடலும், திருவாதவூரடிகள் புராணமும் வெவ்வேறு முறைகளை எடுத்துரைக்கின்றன, மற்றொரு நூலாகிய பரஞ்சோதி திருவிளையாடல் பதிக அடைவைப் பற்றி ஒன்றும் கூற வில்லை. வெவ்வேறு முறைகள் கூறப்பெறுகின்றனஎன்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு: **சிவபுராணம்** திருப்பெருந்துறையில் முதற்கண் உரைக்கப் பெற்றதாக வாதவூரர் புராணம் வகுத்துக் காட்டுகின்றது. நம்பி திருவிளையாடல் அமைச்சர் பதவியைத் துறந்து மன்னனிடம் விடைபெற்றுப் போகும் பொழுது பாடிக் கொண்டே திருக்கோயிலினுள் புகுந்தார் என்று எடுத்துரைக்கின்றது. புராணங்களில்இவை தோன்றிய முறை தோன்றிய சந்தர்ப்பங்கள் இவை விளக்கப் பெற்றுள்ளன. அருளிச் செயல்களை விளக்கும் இடங்களில் இவற்றைக் கண்டு தெளிக.

இனி, புராணங்களில் பதிகங்கள் பாடிய இடங்களையும் பாடிய வரலாற்றையும் நிரலே காட்டுவேன். முதலில் நம்பி திருவிளையாடலில் உள்ள விவரங்களைக் கூறுவேன்.

**திருப்பெருந்துறை :** அடிகளார் திருப்பெருந்துறையை அடைந்து தன்வசம் கெட்டவுடன், இங்கே ஏதோ அற்புதம் இருக்க வேண்டும் என்று எண்ணி,

1. **அற்புதப் பத்து** என்ற பதிகத்தைப் பாடுகின்றார். குருநாதனைத் தரிசித்து அவரால் திருவடி தீட்சை செய்யப் பெறுகின்றார். அதனை ஏற்றுக் கொண்ட சென்னியை வியந்து,

2. **சென்னிப் பத்து** பாடுகின்றார். இறைவன் கருணையை வியந்து,

3. **அச்சோப் பத்து** அருளுகின்றார். கூட இருந்த அடியார்களைச் சுட்டிக் காட்டி,

4. **அதிசயப் பத்து** பாடுகின்றார். குருநாதன் மறையவே உளம் கவன்று,

5. **கோயிற் பத்து** 6. **புணர்ச்சிப் பத்து**
7. **செத்திலாப் பத்து** 8. **பிரார்த்தனைப் பத்து**
9. **ஆசைப் பத்து** 10. **உயிருண்ணிப் பத்து**
11. **திருப்புலம்பல்** 12. **வாழாப் பத்து**
13. **எண்ணப் பத்து**

ஆகிய பதிகங்களை அருளிச் செய்கின்றார். பின்னர் திருப் பெருந்துறையை (நகர்) அடைந்தபோது,

14. **திருவம்மானை** 15. **திருப்பொற்சுண்ணம்**
16. **திருக்கோத்தும்பி** 17. **திருத்தெள்ளேணம்**
18. **திருப்பூவல்லி** 19. **திருவுந்தியார்**
20. **திருத்தோணோக்கம்** 21. **திருவெம்பாவை**
22. **திருச்சதகம்**

ஆகியவற்றைப் பாடுகின்றார்.

பாண்டிய மன்னன் குதிரைகளை விரைவில் கொண்டு வரும்படி ஓலையனுப்பியபோது அடிகள் வருந்தித் திருப் பெருந்துறை கோயிலுட் சென்று,

23. **திருப்பள்ளி எழுச்சி** பாடுகின்றார்.

**மதுரை :** குறித்த நேரத்தில் குதிரைகள் வராமையால் அரசன் அடிகளைச் சிறையிலிட்டு வருத்துகின்றான். அத் துன்பத்தைப் பொறுக்க முடியாமல்,

24. **குழைத்த பத்து** 25. **அருட் பத்து**

என்ற இரண்டு பதிகங்களை அருளுகின்றார். இறையிடத்து அடைக்கலம் புகுவதாக,

26. **அடைக்கலப் பத்து** அருளிச் செய்யப்பெறுகின்றது. சிறைக் கூடத்தருகே சோலையில் புகுந்த குயிலை நோக்கி,

27. **குயிற்பத்து** பாடுகின்றார். குதிரைச் சேவகனாக இறைவன் எழுந்தருளுவதைப் பார்த்த மகளிரின் கூற்றாக,

28. **அன்னைப் பத்து** பிறக்கின்றது. குதிரைச் சேவக னுக்கு மன்னன் பரிசு வழங்கியபோது,

29. **பிடித்த பத்து** அருளப்படுகின்றது. பரிகளெல்லாம் நரிகளாக மாறியபோது அரசன் அடிகளைச் சிறையிலிடு கின்றான். அப்போது,

30. **திருவேசறவு** தோன்றுகின்றது. பாண்டியன் உண்மை யுணர்ந்து அடிகளைச் சிறை வீடு செய்த காலத்தில்,

31. **சிவபுராணம்** பாடிக் கொண்டே திருவாலவாய்த் திருக்கோயிலை அடைகின்றார்.

**பல தலங்கள் :** இறைவன் கட்டளைப்படி அடிகள் பல தலங்களைச் சேவிக்கின்றார். **திருவுத்தர கோசமங்கையில்**

32. **நீத்தல் விண்ணம்** பாடுகின்றார். **திருக்கழுக்குன்றம்** வரும்போது,

33. **திருக்கழுக்குன்றப் பதிகம்** அருளிச் செய்யப் பெறு கின்றது.

இந்த 33 பதிகங்களைத் தவிர ஏனைய 18 பதிகங்கள் பாடப்பட்ட இடத்தையோ பாடிய வரலாற்றையோ இப் புராணம் தெரிவிக்கவில்லை.

இனி, திருவாதவூரர் புராணத்தில் உள்ள விவரங்களைக் காட்டுவேன்.

திருப்பெருந்துறை : இங்குக் குருந்த மரத்தடியில் குருநாதருக்காகத் தெய்வ பீடிகை அமைத்து வழிபட்டு வந்த நாட்களில் முதலில்,

1. சிவபுராணம் ஓதப் பெறுகின்றது. அடுத்து சோதிப் பெருமான் வந்து அருள் செய்யும் அற்புதத்தை அறியேன் என்று,

2. அற்புதப் பத்து அருளப் பெறுகின்றது. இறைவன் அடிகளை ஆட்கொண்ட அதிசயத்தைக் கண்டோம் என்று,

3. அதிசயப் பத்து ஓதப் பெறுகின்றது. 'மின்னார் செஞ்சடை அண்ணல் என் நெஞ்சைக் குழைத்தான்' என்று கூறிய வண்ணம்,

4. குழைத்த பத்து பிறக்கின்றது. 'குருநாதன் திருவடி என் சென்னியின்மீது திகழ்கின்றது' என்று சொல்லும் முறையில்,

5. சென்னிப் பத்து பாடப் பெறுகின்றது. இறைவனைக் காண ஆசைப்பட்டதாகக் கூறும் போக்கில்,

6. ஆசைப் பத்து அருளிச் செய்யப் பெறுகின்றது. 'காலம் கிட்டிக்க உய்கிலேன்' என்று கூறும் முறையில்,

7. வாழாப் பத்து என்பதையும், 'வருந்தி உனக்கு அடைக்கலம்' என்று கேட்கும் முறையில்

8. அடைக்கலப் பத்து என்பதையும், செயலற்ற நிலையில் 'இன்னும் சாகவில்லையே' என்று நுவலும் முறையில்,

9. செத்திலாப் பத்து என்பதையும், 'நின் திருவடியை அடைதல் என்றோ?' என்று சொல்லும் முறையில்,

10. **புணர்ச்சிப் பத்து** என்பதையும் அடிகள் அருளிச் செய்கின்றார்.

இவற்றைத் தொடர்ந்து,

11. **அருட்பத்து** 12. **திருவார்த்தை**
13. **எண்ணப் பதிகம்** 14. **திருவெண்பா**
15. **திருப்பள்ளி எழுச்சி** 16. **திருவேசறவு**
17. **ஆனந்த மாலை** 18. **உயிருண்ணிப் பத்து**
19. **பிரார்த்தனைப் பத்து** 20. **திருப்பாண்டி விருத்தம்**

ஆகிய பனுவல்களைப் பாடிப் போற்றுகின்றார். இறைவன் ஆணைப்படி பொய்கைச் சோதியில் அடியார்கள் கலந்து மறைந்ததைக் கண்டு வருந்தி,

21. **திருச்சதகம்** என்ற பனுவலை அருளிச் செய்கின்றார். பின்னர் அடிகள் திருவுத்தரகோச மங்கைக்கு வருகின்றார். அங்கு,

22. **நீத்தல் விண்ணப்பம்** என்ற பனுவலை அருளிச் செய்கின்றார். இறைவன் இவரை ஆட்கொண்ட குரு உருவத்துடன் காட்சி தருகின்றார். இதனைத் தரிசித்த அடிகள் அங்கிருந்து புறப்பட்டுத் தெய்வத் திருத்தலங்கள் பலவற்றையும் சேவித்துக் கொண்டு சோழநாட்டை அடைகின்றார். **திருவிடைமருதூர்**[1] இறைவனை இறைஞ்சித் **திருவாரூர்** வந்து இறைவனைப் பணிந்து,

**23. திருப்புலம்பல்** பாடுகின்றார். பின்னர் **சீகாழியை** அடைந்து இறைவனை வணங்கி,

---

1. **இடைமருதூர்** : இத்திருத்தலம் மயிலாடுதுறை— தஞ்சை வழியில் ஓர் இருப்பூர்தி நிலையம். வரகுண பாண்டியன் பெரும் புகழ் வரலாற்றுத் தொடர்புடையது. பட்டினத்தார் வழிபட்ட தலம், அவர் அருளிய மும்மணிக்கோவை பெற்றது. இங்குத் தைபூசத்தன்று காவிரியில் நீராடுதல் சிறந்தது.

24. **பிடித்தபத்து** அருளிச் செய்கின்றார். **முதுகுன்றம்**[2] முதலான தலங்களை வணங்கிக் கொண்டு **திருவண்ணாமலை** வருகின்றார். இங்கு,

25. **திருவெம்பாவை** 26. **திருவம்மானை**

என்ற இரண்டு பனுவல்கள் அருளிச் செய்யப்பெறுகின்றன. திருவண்ணாமலையிலிருந்து **திருக்கழுக்குன்றம்** வந்து,

27. **திருக்கழுக் குன்றப் பதிகம்** பாடியருளுகின்றார். இங்கிருந்து புறப்பட்டுத் தில்லையை அடைகின்றார். தில்லைச் சிற்றம்பலவன் ஆசிரியத் திருமேனிகாட்டி அருள் புரியக் கண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிய,

28. **கண்ட பத்து** பாடி ஓவியம்போல் அசைவற்று நிற்கின்றார். தில்லையில் தங்கியிருக்கும் நாட்களில்,

---

2. முதுகுன்றம் : (விருத்தாசலம்) விருத்தாசலம் டவுன் ரோடு என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. கோயில் சில அடிகளே உயரமுள்ள கற்பாறையின் மீதுள்ளது. இதற்கே பழமலை (விருத்தாசலம்) என்று பெயர். தல விநாயகர் (ஆழத்துப் பிள்ளையார்) பல படிகள் இறங்கிச் சென்று சேரும் பள்ளமான இடத்திலுள்ளார். இங்கிருந்து தண்ணீர் வெளிச் செல்ல வழி உள்ளது! திருக்கோயிலுக்கெதிரே மணிமுத்தாறு உள்ளது. சுந்தரர் இத்தலத்தில் பதிகம் பாடி 12,000 பொன் பெற்று இந்த ஆற்றிலிட்டு ஆரூர்க் குளத்தில் எடுத்தார். காசியில் இறந்தால் முத்தி என்பது போல இத்தலத்தில் இறந்தாலும் சொரூப முக்தி கிடைக்கும் என்று கந்தபுராணம் கூறுகின்றது. (வழிநடைப்படலம் காண்க). துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் முதலிய பெரியோர்கள் இத்தலத்தில் பெரிதும் ஈடுபட்டவர்கள். மாசி மகத் திருவிழாவில் 6-ஆம் நாள் பகலில் நடைபெறும் இடப உற்சவம் புகழ்பெற்றது. காசியிலும் வீசம் பெரியதால் **விருத்த காசி** என்றும் இத்தலம் கூறப் பெறுவதுண்டு.

29. குலாப் பத்து
30. கோயில்மூத்த திருப்பதிகம்
31. கோயிற் பதிகம்
32. கீர்த்தித் திருவகவல்
33. திருவண்டப் பகுதி
34. போற்றித் திருவகவல்
35. திருப்பொற் சுண்ணம்
36. திருத்தெள்ளேணம்
37. திருவுந்தியார்
38. திருத்தோணோக்கம்
39. திருப்பூவல்லி
40. திருப்பொன்னூசல்

ஆகிய பனுவல்களை அருளுகின்றார். இவற்றைத் தொடர்ந்து,

41. அன்னைப் பத்து
42. திருக்கோத்தும்பி
43. குயில் பத்து
44. திருத்தசாங்கம்
45. அச்சப் பத்து

ஆகிய உள்ளத்தை உருக்கும் செழும் பனுவல்களைப் பாடித் தில்லைநகர்ப் புறத்திலே இலைக்குடில் (பன்னசாலை) ஒன்று அமைத்து அதன்கண் தங்குகின்றார். புத்தரை வாதில் வென்று,

46. திருச்சாழல்
47. திருப்படையாட்சி
48. திருப்படையெழுச்சி
49. அச்சோப் பத்து
50. யாத்திரை பத்து

என்ற பதிகங்களை ஓதுகின்றார். 51 பதிகங்களில் **பண்டாய நான்மறை** (48) காணப் பெறவில்லை. இதனை இப் புராணம் திருவெண்பாவில் (47) சேர்த்து ஒரு பகுதியாக வழங்குகின்றது. மற்றும் 'வெண்பா நாலேழ்' என இருபத்தெட்டு இருந்ததாகவும் உரைக்கின்றது. திருவாசகத்துள் வெண்பா யாப்பில் அமைந்த பகுதிகள் மூன்று. அவை திருத்தசாங்கம், திருவெண்பா, பண்டாய நான்மறை என்பன. இவை மூன்றிலும் இருபத்தெட்டு வெண்பாக்கள் உள்ளன. ஆனால் 'தசாங்கத்தைத்' தனியே கூறி மீண்டும் இருபத்தெட்டு வெண்பாக் கூறுவதால் திரு வெண்பா பதினொன்றும், பண்டாய நான்மறை ஏழும்

போக மீதி பத்து வெண்பாக்கள் இருந்து மறைந்திருக்கலாமோ என்று கருதுவதற்கு இடம் உள்ளது.

அடியேன் இந்த நூலில் பதிகங்களை அடியிற் கண்டவாறு அமைத்துள்ளேன்.

**திருப்பெருந்துறை (குருந்தமரம்):**

க. அற்புதப் பத்து (41)
உ. சென்னிப் பத்து (42)
௩. அச்சோ பதிகம் (51)
௪. அதிசயப் பத்து (26)
௫. கோயில் திருப்பதிகம் (22)
௬. புணர்ச்சிப் பத்து (27)
௭. செத்திலாப் பத்து (23)
௮. பிராத்தனைப் பத்து (32)
௯. ஆசைப் பத்து (25)
க0. உயிருண்ணிப் பத்து (34)
கக. வாழாப் பத்து (28)
கஉ. எண்ணப் பதிகம் (44)
க௩. பாண்டி விருத்தம் (36)
க௪. திருவார்த்தை (43)
க௫. திருவெண்பா (47)
க௬. பண்டாய நான்மறை (48)
க௭. ஆனந்தமாலை (50)

**திருப்பெருந்துறை (நகர்):**

க௮. திருப்பொற்சுண்ணம் (9)
க௯. திருக்கோத்தும்பி (10)
உ0. திருத்தெள்ளேணம் (11)
உக. திருப்பூவல்லி (13)
உஉ. திருவுந்தியார் (14)
உ௩. திருத்தோணோக்கம் (15)
உ௪. திருப்பள்ளியெழுச்சி (20)
உ௫. திருச்சதகம் (5)

**திருஆலவாய் (மதுரை)**

உ௬. குழைத்தபத்து (33)
உ௭. அருட்பத்து (29)
உ௮. அடைக்கலப்பத்து (24)
உ௯. குயிற்பத்து (18)
௩0. அன்னைப்பத்து (17)
௩க. திருவேசறவு (38)
௩உ. சிவபுராணம் (1)

**பிற இடங்களில்:**

௩௩. நீத்தல் விண்ணப்பம் (6) உத்தரகோசமங்கை
௩௪. திருப்புலம்பல் (39) திருவாரூர்
௩௫. பிடித்தபத்து (37) சீகாழி
௩௬. திருக்கழுக்குன்றப் பதிகம் (30) திருக்கழுக்குன்றம்

**திருஅண்ணாமலை**

௩௭. திருவெம்பாவை (7)
௩௮. திருவம்மானை (8)

**திருத்தில்லை (சிதம்பரம்):**

௩௯. கீர்த்தித்திருவகவல் (2)
௪0. திருவண்டப்பகுதி (3)
௪க. போற்றித் திருவகவல் (4)
௪உ. திருச்சாழல் (12)

௪௩. திருப்பொன்னூசல் (16)
௪௪. திருத்தசாங்கம் (19)
௪௫. கோயில் மூத்த திருப்பதிகம் (21)
௪௬. கண்டபத்து (31)
௪௭. அச்சப்பத்து (35)
௪௮. குலாப் பத்து (40)
௪௯. திருப்பள்ளியெழுச்சி (46)
௫௦. யாத்திரைப் பத்து (45)
௫௧. திருப்படையாட்சி (49)

இங்ஙனம் அமைத்ததற்குக் காரணம் ஒன்றும் இல்லை. திருவாசகத்தையும் முன்னோர் எழுதியுள்ள குறிப்புகளையும் நான் பயின்றபொழுது எனக்கு ஏற்பட்ட அநுபவமே இங்ஙனம் எழுதுவதற்குக் காரணம். பெருந்தவத்திரு சித்பவானந்த அடிகளின் திருவாசக உரையைப் படித்த பிறகு 'திருப்படையாட்சி' என்ற பதிகமே அடிகள் இறுதியாகப் பாடியிருக்கலாமோ என்று என் மனம் கருதுகின்றது. ஒவ்வொருவருக்கும் அவரவர் அநுபவத்திற்கும் ஈடுபாட்டிற்கும் ஏற்ப வெவ்வேறு விதமாகத் தோன்றுதல் கூடும். 'அச்சோபதிகம்' இறுதியில் அமைந்திருப்பதும் பொருத்தமாகவே தோன்றுகின்றது.

# 15. அருளிச் செயல்கள்

மணிவாசகப் பெருமான் அருளிய நூல்கள் இரண்டு. இவை, திருவாசகம் திருச்சிற்றம்பலக் கோவை என்பன. இவை சிவபெருமானது திருக்கரத்தால் எழுதிக் கொள்ளப் பெற்ற சிறப்புடையவை. இத்திருப்பாடல்களை திருவாசகம்" எனவும், 'திருச்சிற்றம்பலக் கோவை' எனவும் இரு வேறு தலைப்பில் வைத்து எண்ணப்படினும் இவ்விரு நூல்களும் 'பேச்சிறந்த மாசில் மணியின் மணிவார்த்தை'யாகவே விளங்குதலால் திருவாசகம் என்று ஒரு பெயராலும் வழங்கப் பெற்று வந்துள்ளன. 'கோவைத் திருவாசகம்' எனத் திருக்கோவையாருக்கு வழங்கும் பழம்பெயராலும் இவ் வழக்கின் தொன்மை இனிது புலனாகும்.

திருவாசகம் என்பது, முத்தியாகிய பேரின்பத்தை அடைவதற்குரிய பத்தி நெறியின் இலக்கியமாகத் திகழும் தேன் பிலிற்றும் தெய்வப் பனுவல். உலக வாழ்விற்கு இன்றியமையாத அன்பினை விளைவிக்கும் அகனைந்திணை ஒழுகலாற்றை விரித்துரைக்கும் பாங்கில் பத்தி நெறியின் பயனாகிய பேரின்ப வாழ்வின் அநுபவ நிலையினை விளக்குவது திருச்சிற்றம்பலக் கோவை எனப்படும் திருக் கோவையார். எனவே, இந்த இரண்டு செந்தமிழ்த் தெய்வப் பனுவல்களும் பொருளால் ஒன்றே என்பது நன்கு தெளிவாகும். இந்த அருள் நூல்கள் இரண்டையும் 'எட்டாங்

திருமுறை' என ஒரு திருமுறையாக முந்தைய சான்றோர் தொகுத்தமைத்திருத்தலை மேம்போக்காக நோக்கும்போதே இவை இரண்டும் ஒருவராலேயே அருளிச் செய்யப் பெற்றவை என்னும் உண்மை தெளிவாகப் புலனாகும். இந்தச் செய்தியை பெரும்பற்றப்புலியூர் நம்பியும் கடவுண் மாமுனிவரும் தம் தம் புராணங்களில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர்.

**சிவஞானபோதம்** என்ற மெய்கண்டார் நூலில் எட்டாம் சூத்திரம் ஐம்புலவேடர்களோடு பழகி அறிவு திரிந்து தம் உண்மை நிலையையும் கடமையையும் அறியாமல் அலையும் அரசகுமாரனாகிய ஆன்மாவுக்கு இறைவனே குருநாதனாக எழுந்தருளி உண்மை உணர்த்தி ஆட்கொள்வர் என்றும், அங்ஙனம் ஆட்கொள்ளப் பெற்ற ஆன்மாக்கள் ஆனந்தாநுபவ நிலையில் அரன்கழல் செல்லும் என்றும் தெரிவிக்கின்றது. எட்டாம் திருமுறையில் சேர்க்கப்பெற்ற இந்நூல் ஐம்புல இன்பத்துள் ஆரத்துய்க்கும் அரச வாழ்வில் அமைச்சர் பதவியில் சிக்கி, பிறந்ததன் பயனைச் சிறிது மறந்திருந்த ஆன்மாவாகிய வாதவூரடிகட்கு இறைவன் குருமூர்த்தியாக எழுந்தருளி உண்மை ஞானத்தை உணர்த்த, அதன் விளைவாக எழுந்த அநுபவஞானத்தை உணர்த்தும் பாங்கில் அமைந்துள்ளது இத்தெய்வத் திருநூல்.

**அருபரத் தொருவன் அவனியில் வந்து**
**குருபர னாகி அருளிய பெருமையை**

—போற்றித்திரு. (75-76)

என்று அடிகளே இந்நிகழ்ச்சியைத் தம் வாக்கால் புலப்படுத்துவர்.

## 1. திருவாசகம்

திருவாசகம் என்ற பெயர் திருவுடைய சொற்களால் ஆகிய அருள் நூல் என்ற பொருள் தருவது. திருத்தக

விற்றாகிய மனச்செம்மையினை வழங்கும் ஆற்றல் நிறைந்த சொற்களால் இயன்றமையின் இந்நூல் 'திருவாசகம்' என்ற திருப்பெயர் பெறுகின்றது. வாசகம்-சொல். இறைவன் தம்மையாட்கொண்ட அருளின் சிறப்பை உலகத்தவர்க்கு உரைப்பது போலவும், பிரிந்ததனால் உண்டான வருத்தத்தைப் பற்றிப் பெருமானோடு உரையாடுதல் போலவும் இந்நூல் முழுவதும் அமைந்துள்ளது. ஆகவே பேச்சு முறையால் அமைந்த இந்நூல் 'வாசகம்' என வழங்கப் பெற்றிருக்கலாம் எனக் கருதுவதற்கும் இடம் உண்டு. கடவுளைப் பற்றிய வாசகமாயிருத்தலின் 'திருவாசகம்' எனப் பட்டது எனக் கருதுவோரும் உளர்,

**திருவாசகத்தின் பெருமை :** இந்நூல் படிப்பவர் மனத்தைப் பரவசப்படுத்தும் பான்மையது; ஒருமுறை ஓதினாலும் ஆன்மா தன் தன்மை கெட்டுச் சிவத்தன்மை அடைதல் தெளிவு. அம்பலத்தரசைப் பற்றிப் பேசும் இது அலைகின்ற மனத்திற்கு ஒய்வு அளிக்கும் ஓர் அருமருந்து. வாலறிவன் அருளை வாரி வழங்கும் கற்பகத்தரு. படிப்போர் மனத்தில் சிவானந்தப் பெருங்கடலைச் சிந்தையில் நிறைவித்துத் திருமேனி எங்கும் பரவச் செய்து புளகாங்கித முறுத்தும் புண்ணிய மறை. ஊனினை உருக்கி உள்ளத்தைப் பெருக்கி உலப்பிலா ஆனந்தத்தை நல்கும் பெருநூல். எளிய சொற்களால்-விழுமிய பொருளால்-இழுமென் ஓசையால் - ஓதுவார் உள்ளத்தைத் தன்வயப்படுத்தும் தகுதியுடையது. சிந்தை செல்லாச் சேணெடுந்தூரத்திற்கு நம்மை இட்டுச் சென்று அந்தமில் பேரின்பத்தை அளிக்க வல்லது. உரைமனம் கடந்து நிற்கும் ஒண்மையது என்று சுருங்கச் சொல்லி வைக்கலாம்.

**சான்றோர் கருத்துகள்:** இந்நூலின்பெருமையைக்குறித்து சான்றோர்கள் பலர் பலவாறாகக் குறிப்பிட்டுள்ளனர். ஒரு சிலரது கருத்துகளை மட்டிலும் ஈண்டுக்காட்டுவேன்.

திருவாசகத்தை முழுவதையும் ஓதி உளம் கரைய அநுபவித்து அதன் சுவையூற்றுகள் தோறும் தோய்ந்து அதற்கு ஒப்புமை பற்றிச் சிந்தித்து இறுதியில் தேனை ஒப்பாகக் கொண்டார். சான்றோர் ஒருவர். சுவைக்காக மட்டிலும் தேனைக் கூறினார் என்று கருதுவதற்கில்லை இனிய பொருள் பலவற்றுள்ளும் தேனைக் கொண்டதில் ஒரு தனிச்சிறப்பு உண்டு என்று கருதலாம். தேன் நெஞ்சுக்கு வலிவூட்டும். குரல் இனிமை மிகுவிக்கும். பித்தம் தணிக்கும். நோய் தீர்க்கும். அதுபோல திருவாசகத்தேன் உயிருக்குச் சிவஞான உணர்வாகிய வலிமையூட்டும். சேயின் குரல்போல இனிமையாகிச் சிவத்தாய்க்குக் கருணையை மிகுவிக்கும்; உயிர்கள் எல்லாவற்றிற்கும் இனியன் ஆக்கும். மிகுதியும் தோய்ந்தால் விளையும் பயனை,

**தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி**
**அல்லலறுத் தானந்த மாக்கியதே—எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவா சகம்என்னும் தேன்.**

என்ற வெண்பாவால் புலப்படுத்துவர்.

தாயுமான அடிகள் திருவாசகம் முழுவதும் கற்கண்டாற் செய்த பாவைபோல் இருத்தலின் அதனை முழுதும் சுவைத்து ஒருபானை சோற்றுக்கு ஒருசோறு பதம் என்பது போல், 'நினைப்பற நினைந்தேன்', 'சென்றுசென்றணு வாய்த்தேய்ந்து தேய்ந்தொன்றாம்' (கோயில் திரு. 7) 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி' (திருவெம்-1) என்ற பகுதிகளை மட்டிலும் சுவைத்து இன்புறுவதைப் பராபரக்கண்ணியில்[1] கண்டு மகிழலாம்.

---

1. பராபரம்-அறிஞர்உரை 6,7,8.

இராமலிங்க அடிகள் திருவாசகத்தையே உபாசனா மூர்த்தியாகக் கொண்டு அதனையே படித்து அதனாலேயே அகங்கரைந்தவர். இதனாலேயே அவரது திருப்பாடல்கள் முழுவதும் திருவாசகம் போலவே மனங்கரைக்கும் மாண்புடையனவாய்த் திகழ்கின்றன. திருவாசகத்தை எண்ணும்தோறும் காமம் மிக்க காதலனுடைய கலவியை விரும்புகின்ற கற்புடைய மங்கையானவள் அடையும் இன்பத்தைக் காட்டிலும் இன்பம் மிகுகின்றது என்பர்.[2]

**வான்கலந்த மாணிக்க**
**வாசக! நின் வாசகத்தை**
**நான்கலந்து பாடுங்கால்**
**நற்கருப்பஞ் சாற்றினிலே**
**தேன்கலந்து பால்கலந்து**
**செழுங்கனித்தீஞ் சுவைகலந்து**
**ஊன்கலந்து உயிர்கலந்து**
**உவட்டாமல் இனிப்பதுவே.** [3]

என்று ஈடுபட்டுப் பேசுவர். இன்னும் 'திருவாசகத்தைச் செவிமடுத்தால் கீழ்ப்பறவைச் சாதிகளும் பொல்லா விலங்குகளும்கூடச் சிவஞானத்தின்மீது நாட்டமுறும்போது அடியேன் அதனை அடைதல் வியப்பா?' என்கின்றார்.

துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் கற்போர் உள்ளத்தைக் கரைக்கவல்ல திருவாசகத்தைப் பற்றி,

**திருவா சகமிங் கொருகால் ஓதின்**
**கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்**
**தொடுமணற் கேணியின் சுரந்துநீர் பாய**
**மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி**
**அன்பர் ஆகுநர் அன்றி**
**மன்பதை உலகில் மற்றையர் இலரே.**[4]

2. ஆளுடைய அடிகள் அருள் மாலை - 6.
3. ஷை - 7
4. நால்வர் நான்மணி மாலை - 4

மனோன்மணீய ஆசிரியர் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் சர்வ சங்காரகாலத்து உண்டாகும் தனிமையைக் கழிப்பதற்காகவே திருவாசகத்தின் ஒரு படியைத் தில்லை நடராசப் பெருமான் எழுதிக் கொண்டார் போலும் என்று திருவாசகத்தின் பெருமையைப் பேசுகின்றார்.

**கடையூழி வருந்தனிமை**
**கழிக்கவன்றோ அம்பலத்தில்**
**உடையார்உன் வாசகத்தில்**
**ஒருபிரதி கருதினதே**[5]

என்ற தாழிசையில் இதனைக் காணலாம்.

**பழமொழிகள் போற்றல்:** ஒரு கொள்கை அல்லது ஒருநூல் பொதுமக்கள் உள்ளத்தைப் பிணித்துள்ளது என்பதனை நாடிபோல் காட்டுவன நாட்டில் வழங்கும் பழமொழிகள், இப்பழமொழிகள் கற்றாரும் மற்றாருமாகிய எல்லோர் வாயிலும் ஒப்பப் பழகிவருவன. ஆகையால் திருவாசகத்தைப் பற்றிய இத்தகைய பழமொழிகள் யாவை என்பதை ஈண்டுக் காண்போம்.

'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பது ஒரு பழமொழி, மக்களின் மன உறுதியை அளந்தறியும் அளவு கோலாகத் திருவாசகத்தைக் கருதியிருந்தனர். ஆதலால் மனத்தையுருக்கும் மாண்புடையது திருவாசகம்; அதற்கு உருகாதார் மனம் இரும்பினும் வலியது என்று உணர்ந்தபின்னரே இப்பழமொழி தோன்றியது போலும்.

2. 'சிதம்பரத்தில் பிறந்த பிள்ளைக்குத் திருவெம்பாவை கற்றுக் கொடுக்க வேண்டுமா?' இப்படி மற்றோரு பழமொழி. திருவெம்பாவை திருவண்ணாமலையில் அருளிச் செய்யப்

5. மனோன்மணீயம் - காப்பு.

பெற்றது. ஆயினும் மார்கழித் திருவாதிரைத் திருநாளில் சிதம்பரத்தில் ஓதப்பெறுகின்றது, அதனால் சிறுவர்முதல் அனைவரும் கற்றிருப்பர். ஓதாமலே வந்த வித்தையாக அது பயின்று வந்திருக்கும் அதனால்தான் இப்பழமொழி வழங்கி யிருக்க வேண்டும்.

3. 'தில்லை பாதி திருவாசகத்தில்' என்பது, இன்னொரு பழமொழி. மணிவாசகப் பெருமான் பாண்டிய நாட்டில் மதுரையில் அமைச்சராக இருந்தும் பாதிக்குமேல் தில்லையைப் பற்றியதாக இருத்தலின் இப்பழமொழி எழுந்தது போலும் எனக்கருதலாம்.

**நூலமைப்பு :** திருவாசகம் சிவபுராணம் முதல் அச்சோபத்து ஈறாக ஐம்பத் தொருபகுதிகளாக 656 பாடல் களாக அமைந்துள்ளன. முதல் நான்கு பாடல்கள் கலிவெண்பா, நிலைமண்டிலம், இணைக்குறள், நிலை மண்டிலம் ஆகிய அகவல் யாப்பில் அமைந்துள்ளன. திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் கோயில் மூத்ததிருப்பதிகம் கோயில் பதிகம், பிரார்த்தனைப் பத்து, குழைத்த பத்து, பண்டாய நான்மறை, யாத்திரைப்பத்து என்பன அந்தாதித் தொடையால் அமைந்துள்ளன. ஏனையவை அங்ஙன மின்றித் தனிப்பாடல்களின் தொகுதியாகக் கோக்கப் பெற்றுள்ளன. சில பதிகம் என்றும் சில பத்தென்றும் பெயர் பெற்றுள்ளன. இவற்றின் வேறுபாடுகள் அறியக் கூடவில்லை. அச்சோபதிகம் என்பது அச்சோப்பத்தென்றும், திருப்பாண்டிப் பதிகம் என்பது, திருப்பாண்டி விருத்தம் என்றும், கோயிற்பதிகம் என்பது, கோயிற் பத்தென்றும் வழங்கி வருகின்றது. இப்பதிக முறைவைப்புகளையும் ஒவ்வொருபுராணமும் ஒவ்வொரு விதமாக வழங்குகின்றது. இவைபற்றிய விவரங்கள் பிறிதோர் இடத்தில் விளக்கப்பெற்றுள்ளன.[6]

6. இந்நூல் - 236 பக்கம் முதல்.

**யாப்பமைதி :** முதல் நான்கு பாடல்கள் அகவல் யாப்பிலும், திருத்தசாங்கம், திருவெண்பா, 'பண்டாய நான்மறை' என்ற பகுதிகள் வெண்பா யாப்பிலும் இயன் றுள்ளன. ஏனையவை தரவுக் கொச்சகக் கலிப்பா என்ற பாவகையிலும், ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கலித் தாழிசை, கட்டளைக் கலித்துறை என்ற பா வினங்களிலும் அமைந்துள்ளன என்பதைத் தெளியலாம்.

நூலின் சிறப்பை,

**ஆன்ற தமிழ்மறையாம் அம்மூவர் தேவாரம்**
**சான்றத் தமிழ்மறையின் சார்முடியாம் - என்றசிவன்**
**போந்துதிரு ஏட்டில் பொறித்ததிரு வாசகமெய்**
**ஏந்துதிருக் கோவையடி இன்பு.**

என்ற வெண்பா அற்புதமாக எடுத்துக்காட்டுகின்றது. தேன் மலரில் தோன்றி, சுவைமிக்கு, பிணிநீங்கி, இதயவன்மையை அளிப்பது. அதுபோல், திருவாசகம் மணிவாசகர் திருவாயில் பிறந்து சொல்லும் பொருளுமாகிய சுவையுடையதாய்ப் படிப்போருக்குப் (பிறவிப்) பிணி நீக்கிப் பேரின்பம் அளிப்பது. ஆதலின் ஒப்பாகின்றது.

## 2. திருச்சிற்றம்பலக் கோவை

மணிவாசகப் பெருமான் தில்லையில் புத்தர்களை வாதில் வென்று சிற்றம்பலவனை வழிபட்டுக் கொண்டு வில்வ வனத்தில் தாம் அமைத்துக் கொண்ட இலைக்குடிலில் தங்கியிருக்கும்போது அழகிய சிற்றம்பலமுடையானே அடிகள் முன் அந்தணனாக வந்து தோன்றுகின்றான். அடிகள் பாடி யருளிய திருவாசகத்தைத் தம் திருக்கையினால் எழுதிக் கொண்டு 'அகத்திணைக் கோவையொன்று பாடித்தருக' என அடிகளை வேண்டுகின்றான். அங்ஙனமே அம்முதல்வன் எழுதிக் கொள்ள அடிகள் திருவாய் மலர்ந்தருளிய தெய்வப் பனுவலே திருச்சிற்றம்பலக்கோவையாகும். இது முழுமுதற்

கடவுளாகிய சிவபெருமான் உலகெலாம் உய்ய ஆனந்தத் திருக்கூத்தியற்றியருளும் திருவருள் நிலையமாகிய தில்லைத் திருச்சிற்றம்பலத்தைப் பரவிப் போற்றும் முறையிலமைந்த அகத்திணைக் கோவையாதலின் 'திருச்சிற்றம்பலக் கோவை' என்ற திருப்பெயர் பெறுகின்றது. திருவாசகப் பனுவலைப் போன்று இதுவும் வாதவூரடிகளின் மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனாகத் திகழ்தலால் இதனைக் **'கோவைத் திருவாசகம்'** எனச் சான்றோர் சிறப்பித்துப் போற்றுகின்றனர்.

ஆழ்வார் பெருமக்களும் தேவார ஆசிரியர்களும் தன்னேரில்லாத் தலைவனாகிய இறைவனை ஆருயிர் காதலனாகவும், அவனருள் விழைந்த ஆன்மாக்களை அம்முதல்வனைக் காமுற்று வருந்தும் தலைவியாகவும் கொண்டு அகப்பொருள் துறையமையப் பல திருப்பாடல்களைப் பாடியுள்ளனர். இம்முறையைப் பின்பற்றி மணிவாசகப் பெருமானும் சிவபெருமானைத் தம் ஆருயிர்க் காதலனாகவும், அவனுடைய திருவடிப்பேரின்பத்தைப் பெற விரும்பும் தம்மைத் தலைவியாகவும் கொண்டு நெஞ்சம் நெக்குருக்கவல்ல பல திருப்பாடல்களைப் பாடியுள்ளார்.

**மூலமாகிய மும்மலம் அறுக்கும**
**தூய மேனிச் சுடர்விடு சோதி**
**காதல னாகிக் கழுநீர் மாலை**
**ஏலுடைத் தாக எழில்பெற அணிந்து**
—கீர்த்தித்திரு. (111-114)

என வரும் திருவாய்மொழியால் ஆண்டவனைத் தலைவனாகவும், தம்மை அவனருளுக்கு ஏக்கமுற்று வருந்தும் தலைவியாகவும் கொண்டுள்ளமை தெளிவாகும்.

திருக்கோவையாரிலும் இறைவனைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் கொண்டுதான் பாடியுள்ளார்

இந்நூலில் உரையாடும் இயல்பினராகிய தலைவன், தலைவி, தோழி, பாங்கன், செவிலி முதலிய அனைவரும் இந்நூலின் பாட்டுடைத் தலைவனாகத் திகழும் தில்லையம்பலவனின் திருவடிகளில் அழுந்திய பேரன்பினர்கள்; அம்முதல்வனின் தொண்டர்களாய் ஒழுகும் சிவபக்திச் செல்வர்கள். இவ் வுண்மை அவர்கள் தத்தம் உரையாடல்களில் தில்லையம்பலப் பெருமானுக்கும் தனக்கும் உள்ள ஆண்டான்—அடிமைத் தொடர்பினை ஆங்காங்குக் குறித்துச் செல்வதால் நன்கு தெளியலாம்.

தலைவன்,

**அணியும் அமிழ்தும்என் னாவியும்**
**ஆயவன் தில்லைச்சிந்தா**
**மணியும் பராரறி யாமறை**
**யோன்அடி வாழ்த்தலரில் (5)**

[ஆவி - உயிர்; உம்பர் - தேவர்; மறையோன் அந்தணன்]

இப்பாடற் பகுதியில் தனக்குச் சிவபெருமான் அணியும்-அமிழ்தும் ஆவியுமாக இருக்கின்றமையைப் புலப்படுத்தி யிருத்தல் காணலாம். பாங்கனும்,

**சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும்**
**என்சிந்தை யுள்ளும்**
**உறைவான் (20)**

என்று தன் சிந்தையுள் சிவன் தங்கியிருத்தலைப் புலப்படுத்து கின்றான். 'பிரிவு கூறல்' என்னும் துறையில் தோழியும் தலைவன் பகைதணிவினைக்குப் பிரிவினை யுணர்த்தும் போது,

**...பல்பிறவித்**
**தொகைதணித்தற் கென்னை ஆண்டுகொண்**
**டோன்தில்லைச் சூழ்பொழில் (313)**

என்று கூறித் தன்சிவபக்தியைப் புலப்படுத்துகின்றாள். இது தாய் 'சுடரோடிறத்தல்' என்ற துறையில்,

நாணனுகப்
பெற்றேன் பிறவி பெறாமற் செய்தோன்
தில்லை (232)

எனத் தான் சிவபிரானை நணுகியதையும், நணுகியதால் பிறவி பெறாமல் அவன் செய்ததையும் குறிப்பிடுதல் காணலாம்.

அகனைந்திணைக் கோவையாகிய இப்பனுவலில் பாடாண்திணை என்னும் புறத்திணை அமையப் புலவரால் பாராட்டப்பெறும் பாட்டுடைத் தலைவன் தில்லைச் சிற்றம்பலவன். கூற எடுத்துக் கொண்ட அகப்பொருள் ஒழுகலாற்றொடு தொடர்புடையவன் கிளவித் தலைவன். கிளவித் தலைவனது இயற்பெயர் கூறுவது அகப் பொருள் மரபன்று. கிளவித் தலைவனும் அம்பலவன் திருவடியைத் தன் சென்னியிலும் சிந்தையிலும் கொண்டு போற்றும் திருத்தகவுடையவன். தில்லைச் சிற்றம்பலவனே திருப்பெருந்துறையில் குருவின் திருமேனி கொண்டு அடிகளை ஆட்கொண்டமையால் பசு கரணங்களெல்லாம் பதி கரணங்களாக மாறப்பெற்ற அடிகள் ஐம்பொறி உணர்வுகள் நீங்கப் பெற்றவர். இந்நிலையில் அறிவன் நூற்பொருளும் உலக நூல் வழக்கும் என இருபொருள்களையும் விளக்கும் பாங்கில் இத்திருக்கோவையினை அருளிச் செய்துள்ளார். அறிவன் நூற்பொருளாவது, முற்றுணர்வினனாகிய இறைவன் அருளிச் செய்த ஆகமநூல் வழியில் கூறப்பெற்ற ஞானயோக நுண்பொருள். உலக நூல்வழக்காவது, ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியும் ஆகிய இருவரும் நல்லூழின் செயலால் எதிர்ப்பட்டு ஒருவரையொருவர் இன்றியமையாதவராய் மறைவில் கலந்து அளவளாவிப்

பின்னர் உலகத்தார் அறிய மணந்து கொண்டு மனையறம் நிகழ்த்தி இன்புற்று வாழ்தலாகிய உலகியல் வாழ்வு. தொல்காப்பியம், இறையனார் களவியல், சங்கச்செய்யுள் இவற்றில் உலகியல் ஒழுக்க வரலாறு பற்றி எடுத்தோதப் பெற்ற களவு, கற்பு என்னும் அகத்திணையின் இன்ப வரலாறே இத் தெய்வப் பனுவலில் விளக்கப்பெறும் உலக நூல் வழக்காகும்.

அறம் முதலாகிய உறுதிப் பொருள் நான்கினுள் இன்பத்தை நுதலிய களவொழுக்கமாகிய அகனைந்திணை விரிந்துரைக்க எழுந்த நூல் திருக்கோவையார். ஆயினும் இப் பனுவலில் பாட்டுடைத் தலைவன் தில்லையம்பலக் கூத்தனையும், அவன் ஐந்தொழில் கூத்தியற்றியருளும் பர ஞான அருள் வெளியாகிய தில்லைச் சிற்றம்பலத்தையும் போற்றிப் பரவும் முறையில் அமைந்த நூற்பகுதிகள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பொருளுடன் சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகிய வீடுபேற்றின் திறத்தினையும் இனிது புலப்படுத்தும் நிலையில் அமைந்துள்ளனர். ஆதலால் இந்நூல் நான்கு குறிக்கோள் பொருள்களையும் பயக்கும் நிலையில் அருளிச் செய்யப் பெற்றுள்ளது என்று கருதுதல் பொருந்தும்.

அகப்பொருள் ஒழுகலாற்றினைப் பாடுவதற்குக்க லிப்பா, பரிபாடல்பா ஆகிய இருவகைப் பாக்களே சிறப்புரிமை யுடையன எனக் கூறுவர் தொல்காப்பியர். ஆனால் சங்கப் பாடல்கள் (கலித்தொகை, பரிபாடல்களைத் தவிர) இந் நியதியைப் பின்பற்றி அமையவில்லை; அவை யாவும் ஆசிரியப்பாவிலேயே அமைந்தன. கோவைப் பிரபந்தம் பாட எண்ணிய பிற்காலச் சான்றோர் தொல்காப்பியர் கருத்தினைப் பின்பற்றி தாம் எடுத்துக் கொண்ட கோவை யினைக் கலிப்பாவின் இனமாகிய கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைத்துப் பாடுதலை வழக்கமாகக் கொண்டனர். ஆகவே, இக்கோவையில் கட்டளைக் கலித்துறை

யாப்பு கையாளப் பெற்றுள்ளது. அன்றியும், நானூறு துறைக ளாக வகுத்தமைத்துப் பாடியவர் மணிவாசகப் பெருமானே யாவர். அடிகள் நானூறு என்னும் பாடல் தொகையினைத் தேர்ந்து எடுத்துக் கோண்டமைக்கு நற்றிணை நானூறு, குறுந்தொகை நானூறு, நெடுந்தொகை நானூறு என அமைந்த சங்கத் தொகை நூல்களே அடிப்படையாக அமைந் திருத்தல் வேண்டும்.

இக்கோவையில் இயற்கைப் புணர்ச்சி, பாங்கற், கூட்டம், இடந்தலைப்பாடு, மதியுடன் படுத்தல், இருவரும் உள்வழி அவன்வர உணர்தல், முன்னுற உணர்தல், குறையுற உணர்தல், நாண நாட்டம், நடுங்க நாட்டம், மடல், குறை நயப்பித்தல், சேட்படை, பகற்குறி, இரவுக்குறி, ஒருவழித் தணத்தல், உடன் போக்கு, வரைவு முடுக்கம், வரை பொருட் பிரிதல், மணஞ்சிறப்புரைத்தல், ஓதற்பிரிதல், காவற்பிரிதல், பகைதணி வினைப் பிரிதல், வேந்தற் குற்றுழிப் பிரிதல், பொருள்வயிற் பிரிதல், பரத்தையிற்பிரிதல் என இருபத்தைந்து கிளவிக் கொத்துகளாகப் பகுக்கப் பெற்ற இருபத்தைந்து அதிகாரங்களையுடையது. இவ்வமைப்பு இறையனார் களவியலுரையினை அடியொற்றி மேற் கொள்ளப்பட்டதாகக்கருத இடம் உண்டு. திருவள்ளுவர் காமத்துப்பாலில் 25 அதிகாரங்களை அமைத்த பாங்கு ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

அகத்திணை யொழுகலாற்றினை உணர்தற்குக் கருவியாய உள்ளுறை, இறைச்சி என்பவற்றைப் போலன்றி, அவ்வொழுகலாற்றோடு தொடர்பில்லாததாய் இரட்டுற மொழிதலால் பிறிதொரு பொருள் விளங்கித் தோன்றும் பாடல்களும் இக்கோவையில் உள்ளன. அகப்பொருளுக்கு அயன்மையுடையதாய்த் தோன்றும் இப்பொருளை உரை யாசிரியராகிய பேராசிரியர் நுண்ணிதின் உணர்ந்து இவற்றை

'வேறு ஒருபொருள்' என எடுத்துக்காட்டியுள்ளார். இவை ஒவ்வொன்றுக்கும் ஓர் எடுத்துக் காட்டு தருவேன்.

**உள்ளுறை உவமம் :** அகப்பொருள் ஒழுகலாற்றில் வெளிப்படக் கூறாது குறிப்பால் உணர்த்தத் தகுவனவற்றைக் கூறுவதற்கு அமைந்தது உள்ளுறை உவமமாகும். இது அகப் பாடல்களில் மட்டிலுமே பயின்றுவரும். இதில் வெளிப்படை யாகத்தோன்றும் கருத்துகள் உள்ளே அடிப்படையாக உறைந்துகொண்டிருக்கும் கருத்துகளுக்கு உவமையாக வரும் படி அமைக்கப்பெற்றிருக்கும். சாதாரணமாக வெளிப்படை உவமமானால் அதில் உவமேயமும் இருக்கும்; உள்ளுறை உவமமாகில் உவமேயம் வெளிப்படையாகத் தெரியாது. ஆனால், உவமைபோலக் கொண்டு இதற்கு ஒப்பான வேறு பொருளை நுண்ணுணர்வால் சிந்தித்து அறிந்து கொள்ள முடியும்.

**அந்தியின் வாயெழில் அம்பலத்துஎம்மான்**
**அம்பொன், வெற்பில்**
**பந்தியின் வாய்ப்பல வின்சுளை**
**பைந்தே னொடுங் கடுவன்**
**மந்தியின் வாய்க்கொடுத் தோம்பும்**
**சிலம்ப மனங்கனிய**
**முந்தியின் வாய்மொழி நீயேமொழி**
**சென்றும் மொய்குழற்கே —திருக்-99**

[அந்தி - மாலை; எழில் - அழகு; வெற்பு - மலை; கடுவன் - ஆண்குரங்கு; மந்தி - பெண்குரங்கு; ஓம்பும் - பாது காக்கும்; சிலம்பு - மலை; மொய்குழல் - தலைவி]

என்ற பாடல் 'நீயே கூறென்று மறுத்தல்' என்ற துறையில் வந்தபாடல். களவொழுக்கம் ஒழுகாநின்ற தலைமகன் தலைமகளை அடைய விரும்பித் தோழியைக் குறையிரக் கின்றான். தோழி, ''யான் குற்றேவல்மகள்; நினதுகுறையைத்

தலை மகளிடத்தில் துணிந்து கூறமுடியாதவளாக உள்ளேன்; நீயே அவள்பால் சென்று நின்குறையைச் சொல்வாயாக'' எனத் தான் உடன்படாது மறுத்துக் கூறுவதாக உள்ளது இப்பாடல்.

''அந்திப் பொழுதின்கண் உண்டாகிய செவ்வானத்தின் எழிலையுடைய அம்பலத்தின்கண் உள்ளவனும், எல்லாப் பொருட்கும் அப்பாலானவனும் ஆகிய எம்முடைய இறைவனது அழகிய பொன்னையுடைய மலையிடத்தே பந்தியாகிய நிறையின் கண்ணே ஆண் குரங்கு இனிய பலாச்சுளையைச் செவ்விய தேனோடும் (தன் துணையாகிய) பெண்குரங்கின் வாயிலே அருந்தக் கொடுத்துப் பாதுகாக்கும் மலைப் பக்கத்தையுடைய தலைவனே, அவளது மனம் நெகிழுமாறு இவ்வினிய மொழிகளை அம்மொய் குழலையுடையாளாகிய தலைமகட்கு நீயே சென்று கூறுவாயாக'' என்பது இப் பாடலின் பொருள். 'பந்தியின் வாய்ப் பலவின் சுளை பைந் தேனொடும் கடுவன், மந்தியின் வாய் கொடுத்து ஓம்பும்' என்றது உள்ளுறை உவமமாக வந்த கருப் பொருள் நிகழ்ச்சி. ''மந்தி உயிர் வாழ்வதற்குக் காரணமாகியவற்றைக் கடுவன் தானே கொடுத்து மனமகிழ்வித்தாற்போல அவள் (தலைமகள்) உயிர்வாழ்வதற்குக் காரணமாகிய நின் வார்த்தைகளை நீயே கூறி அவளை மன மகிழ்விப்பாயாக'' என்பது இதற்குப் பேராசிரியர் தரும் விளக்கமாகும்.[6]

செய்யுளில் வெளிப்படச் சொல்லப்பட்ட பொருளின் புறத்தே தங்கிய குறிப்புப் பொருளை இறைச்சி என வழங்குதல் மரபு. ''இறைச்சிப் பொருள் என்பது, உரிப்

6. திருக் கோவையாரில் 128, 133, 159, 168, 193, 250, 252, 254, 260, 262, 264, 265, 276, 369, 377, 380 ஆகிய எண்ணுள்ள பாடல்களில் உள்ளுறை உவமை வந்துள்ளது. பேராசிரியர் உரை நோக்கித் தெளிக.

பொருளின் புறத்ததாகித்தோன்றும் பொருள்; அதாவது, கருப் பொருளாகி நாட்டிற்கும் ஊர்க்கும் துறைக்கும் அடையாகி வருவது'' என்று விளக்குவர் இளம்பூரணர்.

**நறமனை வேங்கையின பூப்பயில்**
**பாறையை நாகநண்ணி**
**மறமனை வேங்கையென நணியஞ்சு**
**மஞ்சார் சிலம்பா**
**குறமனை வேங்கைச் சுணங்கோ**
**டணங்கலர் கூட்டுபவோ**
**நிறமனை வேங்கை யதள்அம்**
**பலவன் நெடுவரையே.**

—திருக்.96.

[நறமனை - தேனிற்கு இடமாகிய; நாகம் - யானை; வேங்கை - புலி; சிலம்பன் - மலை நாட்டவன்; அதள் - தோல்; வரை - மலை]

என்ற பாடல் 'இசையாமை கூறி மறுத்தல்' என்ற துறையில் எழுந்தபாடல். களவொழுக்கம் ஒழுகா நின்ற தலைமகன் கழுநீர் மலரைக் கையுறையாகக் கொண்டு சென்று அதனை ஏற்றுக் கொள்ளும்படி தோழியை வேண்டுகின்றான். அவள் 'தெய்வத்திற்குரிய அம்மலர் எம் குலத்திற்கு இசையாது' எனக் கூறி மறுப்பதாக அமைந்தது இப்பாடல்.

''தேனிற்கு இடமாகிய வேங்கைப் பூக்கள் நிறைந்துள்ள பாறையை யானை சென்றணைந்து (அப்பாறையைத்) தறுகண்மைக்கு இடனாகிய புலி என்று (எண்ணி) மிகவும் அஞ்சும் மேகம் தவழும் மலையினையுடைய தலைவனே, நிறந் தங்கிய புலித்தோலை அணிந்த அம்பலவனது நீண்ட இம்மலையின் கண்ணே குறவர் மனையில் உளவாகிய வேங்கையினது சுணங்குபோலும் பூக்களோடு தெய்வத்திற் குரிய கழுநீர் முதலாகிய பூக்களைக் கூட்டுவரோ? கூட்டார்'' என்பது இப்பாடலின் பொருளாகும்.

இதன்கண் வேங்கை மலரால் மூடப்பெற்றுள்ள கற்பாறையைக் கண்ட யானை அதனைப் புலி என எண்ணி அஞ்சும் நாடன் எனத்தலைவனுக்கு அமைந்த அடைமொழி இறைச்சிப் பொருள்பட வந்தது. ஒன்றைப் பிறிதொன்றாகப் பிறழவுணரும் நாடன் ஆதலால், தெய்வத்திற்குரிய நறுமலரைச் சூடாத குறமகளிராகிய எம்மை அம்மலரைச் சூடுவேமாகப் பிறழ உணர்ந்தாய்' என்பது இதன்கண் அமைந்த இறைச்சிப் பொருள். 'ஒத்ததோற்றம் உடைமை ஒன்றேபற்றி, அஞ்சப்படாததனையும் அஞ்சுதற்கு இடனாயது எமது மலைநிலம் ஆதலால், எம்குலத்திற்கு ஏலாததாய் நீதரும் தெய்வமலரைச் சூடுதற்கு யாம்அஞ்சுதல் சொல்லவேண்டுமோ?' எனக் கூறித் தோழிமறுத்ததாக இறைச்சிப்பொருள் கொள்ளினும் பொருந்தும் என்பர் பேராசிரியர்.

இந்த உள்ளுறை, இறைச்சி என்பவற்றைப் போலன்றி, அகத்திணையொழுகலாற்றோடு தொடர்பில்லாததாய் இரட்டுறமொழிதலால் பிறிதொருபொருள் விளங்கித் தோன்றும் பாடல்களும் இத்தெய்வப் பனுவலில் உள்ளன. இங்ஙனம் அகப்பொருள் ஒழுகலாற்றிற்கு அயன்மையுடையதாய்த் தோன்றும் இப்பொருளைப் பேராசிரியர் நுண்ணிதின் உணர்ந்து இவற்றை 'வேறு ஒருபொருள்' என எடுத்துக் காட்டியுள்ளார்.

**நேயத்ததாய் நென்னல்என் னைப்புணர்ந்து**
**நெஞ்சம் நெகப்போய்**
**ஆயத்ததாய் யமிழ்தாய் அணங்காய்**
**அரனம் பலம்போல்**
**தேயத்ததாய் என்றன் சிந்தையதாய்த்**
**தெரியிற் பெரிதும்**
**மாயத்த தாகி இதோவந்து**
**நின்றதென் மன்னுயிரே —திருக். 39.**

[நென்னல் - நெருநல் - நேற்று; நேயத்ததாய் - நெகிழ்ச்சி யுடையதாய், நெக - உடைய; ஆயம் - தோழியர் கூட்டம்; அரன் - சிவன்; அம்பலம் - சபை; தேயம் - ஒளி; தெரியின் - ஆராயின்]

என்பது 'உயிரென வியத்தல்' என்ற துறையில் அமைந்தது, இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பின் பாங்கனைக் கண்டு அவனால் தெருட்டப்பெற்றுத் தான் முன்னாளில் தலைவியை எதிர்ப்பட்ட பொழிலை அடைந்து அங்குநின்ற தலைமகளைக் கண்ணுற்று 'என் உயிர் இவ்வாறு செய்து நிற்பதோ' எனத் தலைவியைத் தனது உயிர் என வியந்து கூறியதாக அமைந்தது இத்திருப்பாடல்.

"நெருநல் (நேற்று) உள்ள நெகிழ்ச்சியையுடையதாக என்னைக் கூடிப் பின் நேயம் இல்லது போல என் நெஞ்சு உடையும் வண்ணம் நீங்கிப்போய் ஆயத்தின்கண்ணதாய், இன்பத்தைச் செய்தலின் அமிர்தமாய், துன்பத்தைச் செய்தலின் அணங்காய், புலப்படும் தோற்றப் பொலிவால் இறைவனது பொன்னம்பலம்போலும் ஒளியையுடைத்தாய் புலப்படாது வந்து என் சிந்தையின் கண்ணதாய், ஆராயிற் பெரிதும் மாயத்தையுடையதாய், வந்து நின்றது இதுவே எனது மன்னுயிர்" என்பது இதன் பொருள். நேயமுடைமையும் நேயமின்மையும், இன்பஞ் செய்தலும் துன்பஞ் செய்தலும், புலப்படுதலும் புலப்படாமையும் ஒரு பொருட்கு இயையாமையின் 'பெரிதும் மாயத்ததாகி' என்றான் தலைவன்.

"என் மாட்டு அருள் உடைத்தாய், முற்காலத்து என்னை வந்து கூடி, அருளில்லது போல என் நெஞ்சு உடையும் வண்ணம் போய்த், தன் மெய்யடியார் குழாத்ததாய், நினைதோறும் அமிர்தம்போல இன்பம் செய்து, கட்புலனாகாமையின் துன்பம் செய்து அம்பலம் போலும் நல்ல தேசங்களின் கண்ணதாய் வந்து என் மனத்தகத்ததாய், இத்

தன்மைத்தாகலின் பெரிதும் மாயத்தையுடையதாய் எனது நிலை பெறும் உயிர் வந்து தோன்றாநின்றது' எனவேறும் ஒரு பொருள் விளங்கியவாறு கண்டு கொள்க' எனப் பேராசிரியர் இப்பாடலில் தோன்றிய மற்றொரு பொருளை யும் எடுத்துக் காட்டுவர்.[7]

இவண்கூறிய இரண்டாவது பொருள் மணிவாசகப் பெருமான் திருப்பெருந்துறையில் தமக்குக் குருவாக எளி வந்து அருள் செய்து மறைந்தருளிய இறைவன் மீண்டும் தம் கண்காண எழுந்தருளிய அற்புத நிகழ்ச்சியினை நினைந்து வியந்து போற்றும் நிலையில் அமைந்திருத்தல் அறிந்து மகிழத் தக்கதாகும். அகத்திணையொழுகலாற்றுக் குரிய களவித்தலைவன், தலைவியைத் தன் உயிரெனக் கண்டு வியந்துரைப்பதாக அருளிச் செய்யப் பெற்ற இத் திருப்பாடலில், அடிகள் தம்மை வலிய வந்து ஆண்டருளிய இறைவனை நினைந்து அம்முதல்வனது திருவருளை வியந்து போற்றுதலாகிய இப்பொருளும் வெளிப்பட்டுத் தோன்று மாறு அமைத்த நுட்பம், உய்த்துணர்ந்து போற்றத் தக்கது.

திருவாசகம், திருக்கோவையார் என்ற அடிகள் அருளிய இரண்டு நூல்களை ஆழ்ந்து கற்றலால் தேறிய உண்மை இது; அடிகள் தாம் பாடியருளிய திருவாசகத் திருப்பாடல் களில் இறைவனைத் தலைவனாகவும் உயிராகிய தம்மை அவனருள் விழையும் தலைவியாகவும் கொண்டு அன்புடன் போற்றியுள்ளார். திருக்கோவையாரில் வரும் அகப்பொருள் ஒழுகலாற்றுக்குரிய தலைவியைப், 'பெருந்துறைப் பிள்ளை' எனப் பெயரால் குறித்துள்ளார். 'பெருந்துறைப்பிள்ளை' என்னும் இப்பெயர் அடிகளைக் குறித்து வழங்கும் பெய ரென்பது 'திருந்திய அன்பிற்பெருந்துறைப் பிள்ளையும்' என

7. இங்ஙனம் வேறு ஒரு பொருள் பொதிந்திருப்பதை 158, 281, 349, 352, 365, 394 என்ற எண்ணுள்ள பாடல்களில் கண்டு மகிழலாம்.

வரும் திருவெண் காட்டடிகளின் வாய்மொழியால் இனிது புலனாகும். ஈண்டுத் திருந்திய அன்பு என்பது, இறைவனைத் தந்தையாகவும், தன்னை மகனாகவும் (மகன்மை நெறி - ஞான சம்பந்தர்), இறைவனை ஆண்டவனாகவும் தன்னை அடிமையாகவும் (அடிமை நெறி - அப்பர் பெருமான்), இறைவனை நண்பனாகவும் தன்னைத் தோழனாகவும் (தோழமை நெறி - சுந்தர மூர்த்தியடிகள்),[8] இவ்வாறு பல படியாக வழிபட்டு வளர்ந்து பின் இறைவனைத் தன் ஆருயிர் நாயகனாகவும் தன்னை அவனருள் விழையும் பெண்ணொருத்தியாகவும் கருதித் தன் செயலற்றுத் 'தான்' என்பது அற்று அவன்தன் செயலேயாக அடங்கி நின்றொழுகும் நிலையில் செலுத்தப் பெறும் பேரன்பாகும்.[9]

இம் முறையில் மணிவாசகப் பெருமான் தம்மையாட் கொண்டருளிய சிவபெருமானை ஆருயிர் நாயகனாகவும், தம்மை, அவரது அருளார் இன்பத்திற்கு ஏக்கற்று நிற்கும் நாயகியாகவும் கருதி அன்பு செலுத்தியவர் என்பது மேற் குறிப்பிட்ட திருவெண்காட்டடிகளின் வாய்மொழியால் நன்கு துணியப்படும். அன்றியும், திருக்கோவையாரில் வரும் இரண்டு சான்றுகள் இக்கருத்திற்கு அரணாகவும் அமையும்.

8. சன்மார்க்கம் - நன்னெறி. இந் நெறிக்கு மணி வாசகரை எடுத்துக் காட்டாகக் கொள்வர். இந்த ஞான நன்னெறியானது, முதல்வனை ஆன்ம நாயகனாகவும், உயிராகிய தன்னை அவனைத் தலைப்பட்டு மகிழவிழைந்த தலைவியாகவும் கருதி யொழுகும் இயல்பினது என்று அறியத்தக்கது.

9. இதனை 'மதுரபாவம' என்றும் 'நாயக - நாயகி பாவம்' என்றும் வழங்குவர். வைணவ சமயத்தில் இதற்குக் கூறப் பெறும் தத்துவம் அற்புதமானது. தோழிப் பாசுரம், தாய்ப் பாசுரம், மகள்பாசுரம் எனப் பாசுரங்கள் அமைந்திருப்பதற்குக் கூறப் பெறும் தத்துவக் கருத்துக்கள் சிந்தையைக் கவர் பவை.

(1) புலியூர் அம்பலவர்க்குற்ற
பத்தியர் போலப் பணைத்திரு
மாந்த பயோதரத்தோர்
பித்திதற் பின்வர முன்வரு
மோவார் பெருந்தகையே (242)

[பத்தியர் - பத்தியையுடையார்; பித்தி - பேதை; பயோ
தரம் -முலை]

இத்திருப் பாடலில் பத்தியராகிய அடியார்களைத் தலைவிக்கும், அம்பலவனைத் தலைவனுக்கும் அடிகள் உவமித்துக் கூறியிருத்தல் நோக்கததக்கது.

(2) புலியூர்
ஒருவனது அன்பரின் இன்பக்
கலவிகள் உள்ளுருகத்
தருவது செய்தென தாவிகொண்டேகி
யென்னெஞ்சிற் றம்மை
இருவின காதலர் ஏதுசெய்வான்
இன்று இருக்கின்றதே (281)

இத்திருப்பாடலில் தலைமகள் தன்னை அடியவரோடும் தன் காதலனாகிய தலைவனை இறைவனோடும் உவமித் துரைப்பதாக அடிகள் கூறியுள்ள திறம் நோக்கத் தக்கது.

இந்தத் தெய்வப் பனுவலில் இறைவன் இயல்புகளை விரித்துரைத்துப் போற்றுவனவாக அமைந்த தொடர்கள் யாவும் அறிவனூற் பொருள் பற்றியனவாகவும், தலைவன் தலைவி தோழி பாங்கன், செவிலி முதலியோர் இயல்புரைப் பனவாக அமைந்த தொடர்கள் யாவும் உலக நூற்பொருள் பற்றியனவாகவும் பகுத்துணர்ந்தால்தான் இப்பனுவல் நுவலும் பொருளை உணர்ந்து அநுபவிப்பதற்குத் துணையாக இருப்பது நன்கு புலனாகும். திருக்கோவையாரின் சிறப்பைப்பற்றி,

ஆரணம் காண்என்பர் அந்தணர்;
யோகியர் ஆகமத்தின்
காரணம் காண்என்பர்: காமுகர்
காமநன்னூல் என்பர்;
ஏரணம் காண்என்பர் எண்ணர்
எழுத்தென்பர்; இன்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக்
கோவையைச் செப்பிடினே.

[ஆரணம் -, வேதம்: எண் - தருக்க நூல்; எழுத்து - இலக்கண நூல்]

என்று பிற்காலச் சான்றோ ரொருவர் கூறிய பாடல் சிந்தித்து மகிழத்தக்கது.

'செவ்வை நெறிகள் பற்பலவும், தெரியக்காட்டும் தமிழ்' மூதாட்டி ஔவைப்பாட்டி,

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் -கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம்என் றுணர் [10]

என்று திருக்குறள், நான்கு மறை, தேவாரம், திருக்கோவையார், திருவாசகம், திருமந்திரம் என்ற நூல்களை ஒப்பாய்வு செய்து எல்லாம் ஒரே முடிவையே காட்டுகின்றன. என்கின்றார். இவ்வுரை நம் வாழ்வில் என்றும் நின்று நிலவட்டும்.

10. நல்வழி - 40

# 16. அருளிச் செயல்களில் அடிகள்

"கவிதை வாழ்விலிருந்து மலர்ந்தது; வாழ்விற்கே உரியது; வாழ்விற்காகவே நிலைபெற்றுள்ளது" என்று அட்சன் என்ற திறனாய்வாளர் கூறுவர். பொதுவாகக் கவிதைக்குக் கூறப்பெற்ற இக்கருத்து பக்திக் கவிதைகட்கும் அருட்கவிதைகட்கும் முற்றிலும் பொருந்தும். அருட்கவிஞர் கள் தாம் கவிதையைப் படைக்கவில்லை என்றும், தம்மை ஏதோ ஒன்று படைக்கச் செய்கின்றது என்றும், தாம் அதற்குக் கருவியே என்றும் கூறுகின்றனர். நம்மாழ்வார்,

என்றைக்கும் என்னையுய்
　　யக்கொண்டு போகிய
அன்றைக்கு அன்றுஎன்னைத்தன்
　　னாக்கிஎன் னால்தன்னை
இன்தமிழ் பாடிய
　　ஈசனை　　　　　　　　(திருவாய் 7.9 : 1)

என்றும்,

என்சொல்லால் யான்சொன்ன
　　இன்கவி என்பித்துத்
தன்சொல்லால் தான்தன்னைக்
　　கீர்த்தித்த மாயன்　　　　(ஷெ 7.9 : 2)

---

1. 'Poetry is made out of life, belongs to life, exists for life'—Hudson : *An introduction to the study of literature*—P. 92

என்றும் கூறுவது காண்க. தீட்சை பெற்றதும் பரஞானம்வந் தெய்தப்பெற்று மணிவாசகர் சிவஞானச் செல்வராகிக் கலை ஞானத் தெய்வமாகிய நாமகள் நாவில் அமர, ஆணவம் முதலிய மும்மலங்களும் அகல, இறைவன் பணித்த வண்ணம் பாடினார் என நம்பி திருவிளையாடல் கூறுகின்றது. எனவே, இந்த ஞானச் செல்வர்கள் யாவரும் இறையருளால் பாடினை தாகவே வரலாறுகள் கூறுகின்றன. எனவே, இப்பாடல்கள் அவர்தம் அருள் வாழ்க்கையிலிருந்து மலர்கின்றன என்பதை அறிகின்றோம்.

வாதவூரடிகள் தம் வாழ்க்கையைத் தம் பாடல்களில் புலப்படுத்துவதற்காகப் பாடல்களை எழுதினாரல்லர். தம் வரலாற்றைப் பாடல்களாக எழுதியிருந்தால் அது தன்—வரலாறாக முடிந்திருக்கும். ஆனால், அவர் அருளிய திருப் பாடல்கள் சிவானந்த அநுபவத்தில் திளைத்துத் தேக்கிட்டு அந்த அநுபவத்தின் வாயிலாக வெளிவந்தவை. அங்ஙனம் வெளிவந்த பாடல்களில் அத்தி பூத்த மாதிரி அங்கொன்றும் இங்கொன்றுமாக அவர் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அமைகின்றன. அவற்றை மட்டிலும் ஈண்டு எடுத்துக்காட்ட முயல்வேன்.

**முன்னைய பிறப்பு :** மணிவாசகப் பெருமான் இம் மண்ணுலகில் தோன்றுவதற்குமுன் எங்ஙனம் இருந்தார் என்பது பற்றிய குறிப்புகள் திருவாசகத்தில் இடம் பெற்றுள்ளன. இறைவன் திருவருள் கைவரப்பெற்றபின் பழைய நிலையை உணரும் ஆற்றல் அடியார்கட்கு வாய்ப்ப துண்டு. தம்பிரான் தோழர் வாக்கினில் இத்தகைய குறிப்பு கள் வெளிப்படுவதை அவர் இயற்றிய தேவாரப் பாடல்களில் காணமுடிகின்றது. அதுபோலவே, இங்கும் அடிகளின் வாக்கிலேயே சில குறிப்புகள் வெளிப்படுகின்றன.

அறிவி லாத எனைப்புகுந் தாண்டுகொண்
டறிவதை யருளிமேல்
நெறியெ லாம்புல மாக்கிய எந்தையை (36)[2]

[மேல்நெறி - வீட்டுநெறி; புலமாக்கிய - அறிவகத்தே விளங்கச் செய்த]

என்பதில் முன்னைய நிலை புலப்படுகின்றது. இங்கு மேல் நெறி என்றது, உயர்ந்த ஞானநெறி என்றும், முன்னர்த் தாம் இருந்த மேல் நெறி என்றும் பொருள்படும். ஈண்டுத் தாம் பிறப்பதற்கு முந்தியிருந்த மேலைநெறியைப் புலப்படுத்திய எந்தை எனப் பொருள் கொள்வதில் தவறில்லை.

திருவாதவூரில் பிறப்பதற்கு முன்பு மணிவாசகர் சிவ பிரான் திருவடிகளில் கலந்து இன்புற்றிருந்த செந்நெறிச் செல்வர். அந்த இன்பநெறியில் திளைத்திருந்தவரைச் சிவ பெருமான் சிவப்பயிர் வளர்ப்பதற்கென்றே தென்னாட்டில் பிறக்கச் செய்கின்றார். தன்னோடு கலந்திருந்த அடிகளைச் சிவபிரான் பிரித்து ஓர் உடம்பில் புகுவித்துப் பிறப்பித்தார் என்பதையும், அவ்வாறு பிரிந்துவந்து பிறந்தபின்பு இறைவன் தன் அருட்கண்ணால் நோக்கியும் நுண்ணிய பொருளை யுடைய — நொடியளவில் சொல்லக்கூடிய — ஒரு திரு வார்த்தையைச் செவியறிவுறுத்தினர் என்பதையும் ஒரு பாடலில் குறிப்பிடுகின்றார்.

நீக்கி முன்னெனைத் தன்னொடு
நிலாவகை குரம்பையிற் புகப்பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன
சொற்செய்து நுகமின்றி விளாக்கைத்துத்

---

2. இதிலும் பின்னரும் காட்டப்பெறும் பாடல் எண்கள் தருமபுரப் பதிப்பின்படி உள்ளவை.

**தூக்கி முன்செய்த பொய்யறத்**
**துகளறுத் தெழுதரு சுடர்ச்சோதி**
**ஆக்கி யாண்டுதன் அடியாரிற்**
**கூட்டிய அதிசயம் கண்டாமே (433)**

[நிலாவகை - நில்லாத வகை; நுண்ணிய நொடியன சொல் - மிக நுண்ணியனவும் கைநொடியில் அமைந்தனவுமாகிய சொல் (சின் முத்திரையால் உணர்த்திய உபதேசத்தை); நுகம் இன்றி விளாக்கைத்து - நுகத்தடி இல்லாமல் உழுது. உழுதலை விளாவடித்தல் என்றது உழவர் வழக்கு. பொய் - பயனில செய்கைகள். துகள் -குற்றம்.]

என்ற திருப்பாடல் இந்நிகழ்ச்சியைக் குறிப்பிடுவதாகக் கருதலாம். அதிசயப்பத்தில் உள்ள இப்பாடலில், "நுகத்தடியாகிய பாரம் வைக்காமல் நிலத்தை உழச்செய்வது போல் எவ்வித முயற்சியையும் யான் மேற்கொள்ளாமலேயே ஞான நிலையை அடையச் செய்து யான் முன்செய்த பொய்கள் அறுமாறு என்னை எடுத்து யான் பிறந்தபின் உண்டான என் பாசத் துகள்களையெல்லாம் அறுத்துப் பின்பு உதய மலையில் எழுகின்ற சூரியனைப் போன்ற சோதி வடிவினனாக என்னை ஆக்கி ஆட்கொண்டு தன் அடியாரோடு கூடிய அதிசய நிகழ்ச்சியைக் கண்ணாலே கண்டு அநுபவித்தோமே' என்று அடிகள் வியத்தலைக் காணலாம்.

**மானேர் நோக்கி மணவாளா**
**மன்னே நின்சீர் மறப்பித்துஇவ்**
**வூனே புகவென் றனைநூக்கி**
**உழலப் பண்ணு வித்திட்டாய் (497)**

[ஊன் - உடல்; நூக்கி - செலுத்தி]

என்ற குழைத்தபத்தின் திருப்பாடலிலும் இறைவன் தன் புகழை மறக்கச்செய்து தம் இவ்வூனுடலில் புகுமாறு தள்ளிய

நிகழ்ச்சியை அடிகள் குறிப்பிடுவதைக் காணலாம். இங்ஙனம் அடிகளே கூறுவதால், வாதவூரில் அவர் பிறப்பதற்கு முன்பு சிவபிரானோடு கலந்திருந்து அவன் புகழை மறவாது இன்புற்றிருந்தார் என்பதும், மண்ணுலகில் ஊனுடம்பில் புகுந்து அவர் பிறந்த பின்பு உலகவர் சார்பால் பல துன்பங்கள் உற்று வருந்தினர் என்பதும், சிவபெருமான் குருவாக எழுந்தருளித் தன் நோக்காலும் வாக்காலும் திருத்தித் திருவடி சூட்டி அவரை ஞானஒளிவீசும் சோதி வடிவினராக்கினார் என்பதும் நமக்கு நன்கு புலனாகின்றன. சோதி வடிவினராக்கின நிகழ்ச்சி,

**ஈறி லாதநீ எளியை யாகிவந்**
**தொளிசெய் மானுட மாக நோக்கியும் (85)**

என்று திருச்சதகத்தில் குறிப்பிடுதல் கண்டு மகிழலாம்.

**பாண்டியன் தொடர்பு :** மாணிக்கவாசகர் பாண்டிய மன்னன்பால் அமைச்சுரிமை பூண்டொழுகிய நிகழ்ச்சியை எல்லாப் புராணங்களுமே தெளிவாக விளக்குகின்றன.

**ஈண்டிய மாயா இருள்கெட**
**எப்பொரு ளும்விளங்கத்**
**தூண்டிய சோதியை மீனவ**
**னுஞ்சொல்ல வல்லனல்லன் (529)**

[எப்பொருளும் - உயிரும் மனமும் இறையொளியும் ஆகிய எல்லாப் பொருளும்; மீனவன் - பாண்டியன்]

என்ற திருப்பாண்டிப் பதிகப் பாடலாலும்,

**மதுரையர் மன்னன் மறுபிறப்**
**போட மறித்திடுமே (525)**

என்ற பாண்டிப்பதிகத் தொடராலும் அறிய முடிகின்றது.

**நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமல்**
**பரகதி பாண்டியற் கருளினை போற்றி** —போற்றித்-214,15

என்ற திருவாசகத் தொடர்களும் வாதவூரடிகள் காலத்து ஆட்சி புரிந்த பாண்டியனுடன் நெருங்கிய தொடர்புடையவர் என்பது நன்கு புலனாகும்.

**குரு உபதேசம் :** மாணிக்கவாசகர் வரலாற்றில் பெரிய திருப்பத்தையுண்டாக்கியது குதிரை வாணிகம் பற்றிய நிகழ்ச்சி. பெரும்பொருளுடன் கீழ்க்கடல் துறையை நாடிச் செல்லும்பொழுது வழியிடையே திருப்பெருந்துறையில் சிவபெருமான அடியார்களாகிய மாணாக்கர்கள் புடைசூழ அந்தணராய் ஆசிரியத் திருமேனி கொண்டு எழுந்தருளியிருந்து அமைச்சராகிய வாதவூரரை அருள் நோக்கால் அழைத்தருளி தீக்கை புரிவித்து திருவைந்தெழுத்தின் உட்பொருளை உபதேசித் தருளுகின்றார். இச்செய்திக்கு அடிகளின் பல்வேறு பாடல்கள் அகச்சான்றுகளாக அமைகின்றன.

தெங்குதிரள் சோலைத்
தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய்
அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே
பாடுதுங்காண் அம்மானாய் (175)
—திருவம்-1

எந்தரமும் ஆட்கொண்டு
தோட் கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்கும்
சீரார் பெருந்துறையான் (177)
—ஷை. 3.

தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாம்
காட்டிச் சிவம்காட்டித்
தாட்டா மரைகாட்டித்
தன்கருணைத் தேன்காட்டி

நாட்டார் நகைசெய்ய
நாமேலை வீடெய்த
ஆட்டான்கொண் டாண்டவா
பாடுதுங்காண் அம்மானாய் (180)
திரு. 6.

பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல்காட்டி
நாயேனை யாட்கொண்ட
அண்ணா மலையானைப்
பாடுதுங்காண் அம்மானாய் (184)
—திரு-10

சீரார் பெருந்துறையில்
எளிவந் திருந்திரங்கி
எண்ணரிய இன்னருளால்
ஒளிவந்தென் உள்ளத்தின்
உள்ளே ஒளிதிகழ
அளிவந்த அந்தணனைப்
பாடுதுங்காண் அம்மானாய் (192)
திரு-18

என்ற திருவம்மானைத் திருப்பாடற் பகுதிகளால் இச்செய்தி தெளிவாகின்றன.

இன்னும்,

அருவாய் மறைபயில்
அந்தணனாய் ஆண்டுகொண்ட
திருவான தேவற்கே
சென்றூதாய் கோத்தும்பி (228)
—திருக்கோத்-14

என்ற திருக்கோத்தும்பிப் பாடலாலும்

உருநா மறியவோர்
அந்தணனாய் ஆண்டு கொண்டான் (235)
—திருத்தென்-1

என்ற தென்னேணப் பாடற் பகுதியாலும்,

**அந்தண னாகிவந் திங்கே**
**அழகிய சேவடி காட்டி**
**எந்தம ராமிவ னென்றிங்**
**கென்னையு மாட்கொண் டருளும்**
**செந்தழல் போற்றிடு மேனித்**
**தேவர்பி ரான்வரக் கூவாய் (355)**

—*குயிற்*-10

**பாரிடைப் பாதங்கள் காட்டிப்**
**பாசம றுத்தெனை யாண்ட**
**ஆருடை யம்பொனின் மேனி**
**அமுதினை நீவரக் கூவாய்.**

—ஷை 9

*என்ற குயிற்பாட்டுகளாலும் இச்செய்தி தெளிவாகும்.*

*மேலும்,*

**செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்**
**திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி**
**அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்**
**ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே (373)**

*என்ற திருப்பள்ளி எழுச்சிப் பாடலும்,*

**பேராசை யாமிந்தப்**
**பிண்டமாப் பெருந்துறையான்**
**சீரார் திருவடி**
**யென்தலைமேல் வைத்தபிரான் (284)**

—*திருப்பூவ*-10

*என்ற திருப்பூவல்லிப் பாடற்பகுதியும்,*

**மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி**
**மதித்தி டாவகை நல்கினான்**
**வேய தோளுமை பங்கனெங்கள்**
**திருப்பெ ருந்துறை மேவினான்**

காயத் துள்ளமு தூறவூ றநீ
கண்டு கொள் ளென்று காட்டி
சேய மாமலர்ச் சேவடிக்கணஞ்
சென்னி மன்னித் திகழுமே (581)—சென்னிப். 5

என்ற சென்னிப் பத்துப் பாடலாலும் இது வலியுறும்.

இன்னும்,

நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே (456) —அருட். 1

என்னும் அருட்பத்துப் பாடற்பகுதியும்,

போதலர் சோலைப் பெருந்துறையெம்
புண்ணியன் மண்ணிடை வந்துதோன்றிப்
பேதங் கெடுத்தருள் செய்பெருமை
அறியவல் லாரெம் பிரானாரே (593)
—திருவார்த். 7

என்ற திருவார்த்தைப் பாடற்பகுதியும்,

நானேயோ தவஞ்செய்தேன்
சிவாயநமஎனப் பெற்றேன்
தேனாயின் னமுதமாய்த்
தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம்
புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை
ஒறுத்தன்றே வெறுத்திடவே (553)
—திருவேசறவு-10

என்ற திருவேசறவுத் திருப்பாடலும்,

உய்யுநெறி காட்டுவித்திட்
டோங்காரத் துட்பொருளை
ஐயனெனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே (654) —அச்சோ-7

என்ற அச்சோபதிகத் திருப்பாடல் பகுதியும் தெளிவாக்கி யுள்ளன.

திருப்பெருந்துறையில் அடிகளுக்கு ஆசிரியத் திருமேனி கொண்டு உபதேசித்தது திருவைந்தெழுத்து என்று நம்பி தம் திருவிளையாடலில் குறிப்பிட்டுள்ளார். இதனை அடிகளின்

**நமச்சிவாய வாஅழ்க**
**நாதன்தாள் வாழ்க**
—சிவபு. அடி. 1

எனவும்,

**நானேயோ தவஞ்செய்தேன்**
**சிவாயநம எனப்பெற்றேன் (553)**
—திருவேசற. 10

எனவும்,

**என்னையோர் வார்த்தையுட்**
**படுத்துப் பற்றினாய்**

எனவும்,

**ஓங்காரத் துட்பொருளை**
**ஐயனெனக் கருளியவா**
**றார்பெறுவார் அச்சோவே (654)**
—அச்சோ-7

எனவும்,

**அஞ்செழுத்தின் புணைபிடித்துக்**
**கிடக்கின் றேனை (37)**
—திருச்சத. 27

எனவும் வரும் திருவாசகப் பாடற்பகுதிகள் திருவைந் தெழுத்துபதேசத்தின் சிறப்பினை வற்புறுத்தலைத் தெளியலாம்.

இருவினைகளால் நேரிடும் இன்பதுன்பங்கள் இரண்டை யும் ஒருபடித்தாக எண்ணி—அதாவது இன்பத்தில் விருப்பமும் துன்பதில் வெறுப்பும் கொள்ளாது இரண்டையும் சமமாக எண்ணி—பழகும் நிலையே 'இரு வினையொப்பு'

என்று சித்தாந்தம் பேசும். இந்நிலை எய்திய உயிர்களுக்கு ஆணவ மலம் கழன்றொழியும் நிலை ஏற்படும். இந்நிலையை 'மலபரிபாகம்' என்று வழங்குதல் மரபு. இந்த இரண்டு நிலைகளும் வந்தெய்தும் வாய்ப்பு ஏற்பட்ட பிறகு உயிரின் அறிவின்கண்ணே இறைவனது திருவருள் பதியப்பெறும். இந்நிலையைச் **'சந்தி நிபாதம்'** என்று வழங்குவர். நிபாதம் - வீழ்ச்சி; சத்தி - பதிதல். இது நான்கு விதத்தில் நிகழும், வாதவூரர் நான்காவது சத்திநிபாதமாகிய முடிந்த நிலையில் திருப்பெருந்துறையில் குருமூர்த்தியைக் கண்டு இறைஞ்சியதாகக் கடவுள் மாமுனிவரின் திருவாதவூரர் புராணம் கூறும். இருவினையொப்பு வந்தெய்திய நிலையே குருநாதனைக் கண்டு மகிழ்வதற்குரிய செவ்வி என்பதனை அடிகள் தமது வாழ்க்கை நிலையில் வைத்து,

> **உணக்கி லாததோர் வித்து மேல்விரை**
> **யாம லென்வினை யொத்தபின்**
> **கணக்கி லாத்திருக் கோல நீவந்து**
> **காட்டி னாய்கழுக் குன்றிலே (466)**
>
> —திருக்கழுக்-1

என்று விளக்கிய திறம் இங்கு நினைவுகூரத்தக்கது.

ஆன்மாக்கள் மூவகைப்படுவர். ஆணவமலம் ஒன்றேயுடைய விஞ்ஞானகலருக்கு உயிர்க்குயிராய் உள் நின்றும், ஆணவம், கன்மம் என்னும் இருமலமுடைய பிரளயாகலருக்கு அம்மையப்பராய் முன்னின்றும் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களுமுடைய சகலருக்கு மானுடத்திருமேனி கொண்டு படர்க்கையில் நின்றும் இறைவன் சிவஞானம் நல்குவன் என்று சித்தாந்த நூல்கள் கூறும்.[3] இம்மரபின்படி சிவபெருமான் மானுடத் திருமேனி கொண்டு குருநாதராய் வந்து அடிகட்குத் திருவடி ஞானம் வழங்கி ஆட்கொண்டருளினன் என்பது வரலாறு. இச்செய்தி,

---

3. சுப்புரெட்டியார், ந: சைவசமய விளக்கு - பக். 321.

**ஈறி லாதநீ எளியை யாகிவந்து**
**ஒளிசெய் மானுட மாக நோக்கியும்**
**கீறி லாத நெஞ்சுடையவ னாயினேன் (95)**
—திருச்சத-91

[கீறிலாத - பதிவு இலாத.]

என் இறைவனை நோக்கி அடிகள் உளமுருகிப் போற்றுதலால் இனிது தெளியலாம். தேவரும் காணாச் சிவபெருமான் இப்புவிமிசைத் தம் கண்காண எழுந்தருளிவந்து தம்மை ஆட்கொண்டருளிய அருட்செயலை,

**தேவரும் அறியாச் சிவனே காண்க**
**பெண்ஆண் அலியெனும் பெற்றியன் காண்க**
**கண்ணா லியானும் கண்டேன் காண்க**

* * *

**புவனியிற் சேவடி தீண்டினன் காண்க**
**சிவனென யானும் தேறினன் காண்க**
**அவனெனை யாட்கொண் டருளினன் காண்க (3)**
— திருவண்ட 56-58; 61-63

எனவும்,

**அருபரத் தொருவன் அவனியில் வந்து**
**குருபர னாகி அருளிய பெருமையை (4)**
—போற்றித் 75-76

எனவும் வரும் திருவாசகப் பகுதிகளில் அடிகள் தெளிவாகக் குறித்துப் போற்றியுள்ளதைக் கண்டு மகிழலாம்.

மணிவாசகப் பெருமானுக்கு இறைவன் ஞானோபதேசம் செய்த முறையைப் பிற்காலத்தில் விரிந்து பரவிய சைவசமய தீக்கை முறைகளில்[4] நிர்வாண தீக்கை முறைக்கு ஒத்தவாறு கடவுள் மாமுனிவர் விரித்துக் கூறுவர். நம்பிதிருவிளையாடலில் இம்முறை விரிவாகக் கூறப்பெறவில்லை. இங்கு

4. சுப்புரெட்டியார், ந: சைவசமய விளக்கு பக் 316-323.

அருட்குரவனாகிய இறைவன் திருநோக்கினாலும், நினைவாலும் தொடுதலாலும் அடிகளின் சித்தமலம் அறுவித்துப் பேரறிவு நல்கினன் என்ற அளவே கூறப்பெற்றுள்ளது. கடவுள் மாமுனிவரோ குருநாதர் அடிகளின் சென்னியில் திருவடி சூட்டித் தீக்கை செய்து, பல்லோருங்காண அவரது பாசத்தொடர்பாகிய மும்மலங்களையும் நீக்கியருளி, இறைவன் திருவடிகளை அகத்தும் புறத்தும் காணுமாறு காட்டிச் சொல்லிறந்த பேரின்பமாகிய சிவானந்தப் பெருந்தேனை நுகர்ந்து இன்புறும் முறையை அறிவுறுத்தி 'நின்னை ஒரு பொழுதும் பிரியேன்' (அகப் பொருள் தலைவன் கூறுமாப்போல!) என அன்புரை பகர்ந்து அழிவிலாப் பேரின்ப வாழ்வில் அடிகளை நிலைபெறச் செய்ததாக விரித்துக் கூறுவர்.

> **பெரியோன் ஒருவன் கண்டுகொ**
> **ளென்று பெய்கழ லடிகாட்டிப்**
> **பிரியேன் என்றென் றருளிய வருளும்**
> **பொய்யோ எங்கள் பெருமானே (598)**
>
> —எண்ணப்-2

என்ற எண்ணப்பதிகப்பாடற் பகுதியாலும்,

> **காயத் துள்ளமு தூறவூறநீ**
> **கண்டு கொள்ளென்று காட்டிய**
> **சேய மாமலர்ச் சேவடிக்கணஞ்**
> **சென்னி மன்னித் திகழுமே (581)**
>
> —சென்னிப்-5

என்ற சென்னிப்பத்துப் பாடற் பகுதியாலும்,

> **வாக்கிறந் தமுதம் மயிர்க்கால் தோறும்**
> **தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன்றழை**
> **குரம்பை தோறும் நாயுட லகத்தே**
> **குரம்பைகொண் டின்றேன் பாய்த்தி நிரம்பிய**
> **அற்புத மான அமுத தாரைகள்**

எற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவ
துள்ளம் கொண்டோ ருருச்செய் தாங்கெனக்
கள்ளு ராக்கை யமைத்தனன் ஒள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையும் இருப்ப தாக்கினன் (3)

—திருவண் (170-179)

[தேக்கிட - நிறைய; ஊன் - தசை; குரம்பை - குடிசை;
எற்பு - எலும்பு; கன்னல் - கரும்பு.]

என வரும் திருவண்டப் பகுதியாலும்தெளிவுறுத்தப் பெற்றிருப்பதைக் கண்டு மகிழலாம்.

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் பெற்ற மணிவாசகப் பெருமான் இறைவன் பேரருளை நினைந்து சிவபோகமாகிய பெருந்தேனை நுகர்ந்து, சுற்றத் தொடர்புகளையெல்லாம் முற்றிலும் தொடர்ந்து, பற்றற்றான் பற்றினை மட்டிலும் கொண்டு சித்தம் சிவமாகத் திகழ்ந்த நிலையை நாம் அறிவோம். அடிகளது இந்த அநுபவ நிலை பல பாடல்களில் நிழலிடுகின்றன. இவற்றைக் காண்போம்.

நனவேஎனைப்பிடித் தாட்கொண்டவா
நயந்து நெஞ்சம்
சினவேற்கண் நீர் மல்கத்
தெள்ளேணம் கொட்டாமோ (244)

—திருத்தெள்-10

[நனவு - விழிப்பு நிலை; சின - சின்ன

கயல்மாண்ட கண்ணிதன்
பங்கனெனைக் கலந்தாண்டலுமே
அயன்மாண் டருவினைச்
சுற்றமும் மாண் டவனியின்மேல்

மயல்மாண்டு மற்றுள்ள
வாசகமாண் டென்னுடைய
செயல்மாண்ட வாபாடித்
தெள்ளேணம் கொட்டாமோ (245) —ஷை-11

[மாண்ட - உவமஉருபு;-வஅயல் - பக்கம்; மயல் - மயக்கம்; வாசகம் - உரை]

திருவார்பெருந்துறை
மேயபிரான் என்பிறவிக்
கருவே ரறுத்தபின்
யாவரையும் கண்டதில்லை (235)
—ஷை.2

ஊன்கெட் டுயிர்கெட்
டுணர்வுகெட்டென் உள்ளமும்போல்
தான்கெட்ட வாபாடித்
தெள்ளேணம் கொட்டாமோ? (252)
—ஷை-18

நவமாய செஞ்சுடர்
நல்குதலு நாமொழிந்து
சிவமான வாபாடித்
தெள்ளேணம் கொட்டாமோ (238)
—ஷை.4

இணையார் திருவடி
யென்றலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள்
அத்தனையும் துறந்தொழிந்தேன் (235)
—திருப்பூவ.1

[இணை - இரண்டு]

சிந்தைதனைத் தெளிவித்துச்
சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம்

என வரும் திருவாசகப்பாடற் பகுதிகளில் இனிது புலனாவதைக் கண்டு மகிழலாம்.

இங்ஙனம் சிவாநுபவக் கடலில் திளைத்து இன்புறும் மணிவாசகப் பெருமான் குதிரை வாங்குதற் பொருட்டுக் கொண்டுவந்த செல்வம் எல்லாவற்றையும் இறைவன் தம்மைத் திருப்பெருந் துறையில் ஆட்கொண்ட அன்றே அப் பெருமானிடம் ஒப்புவிக்கின்றார். இதனை,

**அன்றே யென்றன் ஆவியும்**
**உடலும் உடைமை எல்லாம்**
**குன்றே யனையாய் என்னையாட்**
**கொண்ட போதே கொண்டிலையோ (500)**
— குழைத்த - 1

எனவரும் அவரது திருவாக்கால் நன்கு விளங்கும். இங்ஙனம் தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் குருநாதனுக்கு உரிமையாக்கி அவர் பணித்த வண்ணம் அப்பொருளை இறைவன்திருப்பணிக்கும் அடியார்கட்கும் செலவிடுகின்றார். இதனை,

**கொம்மை வரிமுலைக்**
**கொம்பனையாள் கூறனுக்குச்**
**செம்மை மனத்தால்**
**திருப்பணிகள் செய்வேனுக்கு (566)**
—குலாப்-10

எனவரும் குலாப்பத்துப் பாடற்பகுதியாலும்,

**தன்சீரடியார்**
**குலப்பணி கொள்ளஎனைக் கொடுத்தேன்**
— திருக்கோ-54

என வரும் கோவைத் தொடராலும் தம்மைப்பற்றிக் கூறும் குறிப்புகளால் ஒருவாறு உய்த்து உணரலாம்.

திருப்பெருந்துறையில் குருநாதன் பால் மெய்ஞ்ஞான உபதேசம் பெற்ற அடிகள் பித்தர்போன்று தாம் செய்வது இதுவென உணராது இறைவன்பால் அளவிலாப் பேரன் புடன் விளங்கிய அடிகளின் நிலை,

**வஞ்ச கப்பெரும் புலைய னேனைஉன்**
**கோயில் வாயிலிற் பிச்ச னாக்கினாய்**

**கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை**
**வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்**
**கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை**
**வெள்ளத் தழுத்தி (179)**

—திருவம்-5

**பித்தென்னை யேற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதாம்**
**மத்தமே யாக்கும்வந் தென்மனத்தை—அத்தன்**
**பெருந்துறையான் ஆட்கொண்டு பேரருளால் நோக்கும்**
**மருந்திருவாப் பேரின்பம் வந்து (620)**

—திருவெண்-6

என வரும் அடிகளின் அருளிச்செயல்களால் நன்கு தெளி வாகப் புலனாகும்.

உலகப் பொருளனைத்தும் இறைவன் உடைமையே என்பதைத் தெளிவாக உணர்ந்தவர் வாதவூரடிகள். இதனால் தாம் குதிரை வாங்கக் கொணர்ந்த பொருளை யெல்லாம் இறைவனிடம் ஒப்புவிக்கின்றார். தாமும் சித்தம் சிவமாக்கப்பெற்றுச் சீவன் முத்தராகின்றார். உலகியல் பற்றிய விருப்பு வெறுப்பு இல்லாத நிலையை அடைகின்றார். பிராரத்தம் காரணமாக உடலுக்கு இன்பம் வரினும் துன்பம் வரினும் இன்பத்தில் மகிழ்தலும் இல்லை; துன்பத்தில் வருந்துதலும் இல்லை. ''பரஞானத்தால் பரனைத் தரிசித் தோர், பரமே பார்த்திருப்பர்; பதார்த்தங்கள் பாரார்'' என்று சித்தியார் கூறுவது இந்த நிலையையேயாகும். பரமுத்தி

அடைந்தோர் உடம்பைத் துறந்து பெறும் இன்பத்தைச் சீவன்முத்தர் உடம்போடு பெறுகின்றனர். அடிகள் பொருளை விரயம் செய்த செயலை உலகர் நடை முறையில் வைத்து ஆராயப் புகுவது சிற்றறிவும் சிறுதொழிலும் உடைய நம்மனோர்க்கு ஒரு சிறிதும் ஏற்புடையதன்று. தம்மை மறந்து இறைவனையே சிந்திக்கும் செம்மை மன முடைய சிவஞானிகளின் செயலை இறைவன் தன் செய லாகவே ஏற்றுக் கொள்ளும் இயல்பினனாதலால் அடிகளின் செயலையும் தன் செயலாகவே கொண்டருளுகின்றான்.

சித்தம் சிவமாக்கிச்
செய்தனவே தவமாக்கும்
அத்தன் (318) —திருத்தோணோ-5

என்பது அடிகளின் அநுபவமொழி. 'மாணிக்கவாசகர் அறிவால் சிவனே என்பது திண்ணம்' என்பது சான்றோர் வாய்மொழி[5]. அடிகளின்செயல்கள் யாவும் தவச்செயலெனக் கொண்டருளிய இறைவனது எளிமைத் திறமே அடிகளது வரலாற்றால் உலகோருக்கு அறிவுறுத்தப் பெறும் சிறந்த உண்மையாகும்.

**குதிரைகள் வந்த வரலாறு :** 'இறைவன் அருளால் குதிரை கள் மதுரையை வந்தடையும்' என்று மதுரை ஏகுகின்றார் அடிகள். அடிகள் நம்பிய வண்ணமே பெருந்துறை யீசனும் அப்பக்கத்தில் திரியும் நரிகளைக் குதிரைகளாக்கி அவற்றைச் செலுத்தும் குதிரைச் சேவகனாகத் தம் பரிசனத்துடன் மதுரைநகரத்தே வந்து தோன்றுகின்றனன். இச்செய்தி,

ஆண்டுகொண் டருளிய அழகுறு திருவடி
பாண்டியன் தனக்குப் பரிமா விற்று
ஈண்டு கனகம் இசையப் பெறாஅது
ஆண்டான் எங்கோன் அருள்வழி இருப்பத்
தூண்டு சோதி தோற்றிய தன்மையும் —போற்றித், 37-41

5. சிவஞான சித்தியார். 11-2

என வரும் அடிகளது வாய்மொழியால் இனிது புலனாகும். இறைவன் தம் துயரத்தைத் தீர்க்கத் திருவுளங் கொண்டு மிழலைக் காடுகளில் திரியும் நரிகளைக் குதிரைகளாக்கிச் சிவ கணத்தலைவர்களைக் குதிரை வீரர்களாக வரும்படி செய்து தானும் அழகியதோர் குதிரைமேல் பரிமேலழகனாக எழுந்தருளிய செய்தி அடியிற் காணும் அடிகளின் வாக்கில் பல முறை வந்திருத்தல் காணலாம்.

**குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்**
**சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்** —*கீர்த்திதிரு,* 27-28

**அரியொடு பிரமற் களவறி யொண்ணான்**
**நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்** ௸ 35-36

**அரியொடு பிரமற் களவறி யாதவன்**
**பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்** —௸ 115-116

*என்ற கீர்த்தித் திருவகவல் அடிகளாலும்,*

**ஒருங்குதிரை யுலவுசடை**
**யுடையானே நரிகளெல்லாம்**
**பெருங்குதிரை யாக்கியவா**
**றன்றேயுன் பேரருளே** (544) —*திருவேசற.* 1

*என்ற திருவேசற்றப் பாடற் பகுதியாலும்,*

**ஆட லமர்ந்த பரிமாவேறி**
**ஐயன் பெருந்துறை யாதியந்நாள்**
**ஏடர் களையெங்கும் ஆண்டுகொண்ட**
**இயல்பறி வாரெம் பிரானாவரே** (590) —*திருவார்த்*-4

*[ஏடர்கள்-தோழர்கள்]*

**சங்கங் கவர்ந்துவண் சாத்தினோடும்**
**சதுரன் பெருந்துறை யாளியன்று**
**மங்கையர் மல்கு மதுரைசேர்ந்த**
**வகையறி வாரெம் பிரானாவாரே** (596) —௸:10

*[சங்கம்-வளை; சாத்து - வணிகர் கூட்டம்; மதுரை சேர்ந்த வகை: வளையல் விற்க மதுரைக்கு வந்த வரலாறு]*

*என்ற திருவார்த்தைப் பாடல்களாலும் தெளிவு பெறலாம்.*

இறைவன் கொணர்ந்த மாயக் குதிரைகள் யாவும் அன்றிரவே நரியாக மாறி மதுரை நகரில் உள்ளோரைக் கடித்துப் பிச்சேற்றிய செய்தியை,

**நரியைக் குதிரைப் பரியாக்கி**
**ஞால மெல்லாம் நிகழ்வித்துப்**
**பெரிய தென்னன் மதுரையெல்லாம்**
**பிச்ச தேற்றும் பெருந்துறையாய் (647)**

—ஆனந்தமாலை-7

[குதிரைப்பரி-குதிரையாகிய விரைந்த செலவினை யுடைய ஊர்தி; பிச்சதேற்றும்-திகைக்கச் செய்யும்]

என்ற ஆனந்தமாலைப் பாடற்பகுதியால் அறியலாம். பரியை நரியாக்கிய செய்தியை அடிகள் வெளிப்படையாகக் குறிப் பிடாவிடினும், 'மதுரையெல்லாம் பிச்சதேற்றும் பெருந்துறை யாய்' என்றதனால், பரிகளை நரிகளாக்கி மதுரையில் உள்ளவர்களைக் கடித்துப் பிச்சேற்றிய நிகழ்ச்சியைப் புலப் படுத்துகின்றார் என்பது ஆழ்ந்து நோக்குவார்க்குப் புலனா காமற் போகாது.

**அடிகளது சிவாநுபவம் :** குதிரைகளுடன் மதுரையை நோக்கி வரும் இறைவன் வழியில் திருவாதவூரையடைந்து அடிகளின் செவியிற் புலனாகுமாறு தமது திருவடிச் சிலம் பொலியைக் காட்டியருளினார் எனவும், சிறையிலிருந்த வண்ணமே அடிகள் அவ்வொலியைச் செவிமடுத்து "இஃது என்னை யாண்ட எம்பெருமானது பாதச் சிலம்பொலியே" எனத் தெளிந்து இறைவனை வழுத்தி இறைஞ்சினார் எனவும் நம்பிதிருவிளையாடல் குறிப்பிடும்.[6] இந்நிகழ்ச்சி,

---

6. இங்ஙனம் இறைவன் சிலம்பொலியைக் கேட்டு மகிழ்பவர் மற்றொரு சிவனேசர் சேரமான் பெருமாள் நாயனார். இவ்வாசிரியர் எழுதியுள்ள **'தம்பிரான் தோழர்' (பக். 126-127'** காண்க.

**வாத வூரினில் வந்தினி தருளிப்**
**பாதச் சிலம்பொலி காட்டிய பரிசும்**

—*கீர்த்தித். 52-53*

என வரும் திருவாசகத் தொடரால் அறியப்படும். திருப்பெருந்துறையில் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற நிலையில் அப்பெருமானை நினைந்து மகிழும் பாங்கில் அவனது திருவடிச் சிலம்பொலியைக் கேட்டு மகிழும் சிவாநுபவ இன்பத்தில் பலகாலும் திளைத்திருப்பார். இச் செய்தி,

**சீரார் திருவடித்**
**திண்சிலம்பு சிலம்பொலிக்கே**
**ஆராத ஆசையதாய்**
**அடியேன் அகமகிழத்**
**தேரார்ந்த வீதிப்**
**பெருந்துறையான் திருநடஞ்செய்**
**பேரானந் தம்பாடிப்**
**பூவல்லி கொய்யாமோ (292)**

—*திருப்பூவல்லி-18*

எனவரும் திருப்பூவல்லியில் அடிகளது அநுபவ மொழியால் புலனாகும்.

**பரிமேலழகன் காட்சி:** அடிகள் தம்பொருட்டு இறைவன் பரிமேலழகனாக மதுரை நகரத்தே வந்து தோன்றிய எளிமைத் திறத்தையும், அப்பெருமானது திருமேனிப் பொலிவையும், அந்த எழில் மிக்க தெய்வத் திருக்காட்சியைப் பாண்டியனும் தாமும் மதுரை மாநகரப் பெருமக்களும் கண்டு உளமுருகப் பெற்ற செய்தி அடிகளின் திருவாக்கினாலேயே அறியக் கிடக்கின்றது.

மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையும்
— கீர்த்தித் 44-45

*என வரும் கீர்த்தித் திருவகவல் அடிகளாலும்,*

நன்பொன் மணிச்சுவ டொத்த
நற்பரிமேல் வருவானை (351)
—குயில் பத்து-7

பொன்னை யழித்தநன் மேனி
புகழிற் றிகழும் அழகன்
மன்னன் பரிமிசை வந்த
வள்ளல் (352) —குயில் பத்தும்-7

*எனவரும் குயிற்பத்தின் பாடற்பகுதிகளாலும்,*

வெள்ளைக் கலிங்கத்தர் வெண்டிரு முண்டத்தர்
பள்ளிக் குப்பாயத்தர் அன்னே யென்னும்
பள்ளிக் குப்பாயத்தர் பாய்பரிமேல்கொண்டென்
உள்ளங் கவர்வரால் அன்னே யென்னும் (342)
—அன்னைப்-7

*[கலிங்கம் - ஆடை; முண்டம் - நெற்றி; குப்பாயம் - சட்டை; பள்ளி - அறச்சாலை]*

*என்ற அன்னைப் பத்துப் பாடலாலும்,*

மருவரை மங்கைதன் பங்கரைப்
பாண்டியற் காரமுதாம்
ஒருவரை யொன்றுமி லாதவ
ரைக்கழல் போதிறைஞ்சித்
தெரிவர நின்றுருக் கிப்பரி
மேற்கொண்ட சேவகனார்
ஒருவரை யன்றி யுருவறி
யாதென்றன் உள்ளமதே (524)
—பாண்டிப்பதி-1

*[பருவரை-இமயம்]*

விரவிய தீவினை மேலைப்
பிறப்புமுந் நீர்கடக்கப்
பரவிய அன்பரை யென்புருக்
கும்பரம் பாண்டியனார்
புரவியின் மேல்வரப் புந்திகொ
ளப்பட்ட பூங்கொடியார்
மரவியன் மேல்கொண்டு தம்மையுந்
தாமறி யார்மறந்தே (532)

—ஷை-9

[விரவிய - கலந்த; பிறப்பு முந்நீர் - பிறவிக்கடல்; மர இயல்- மரத்தின்தன்மை]

எனவரும் திருப்பாண்டிப் பதிகப் பாடல்களாலும் விரித்துக் கூறிய திறம் பன்முறை படித்து இன்புறத்தக்கது. பரிமேல் எழுந்தருளிய பாண்டியனாரை மீனவன் இறைவனே என்ற உண்மையைச் சிறிதும் உணரப்பெற்றிலன். அவனுக்கு அத்தகைய பக்குவம் ஏற்படவில்லை. இதனை,

ஈண்டிய மாயா இருள்கெட
எப்பொரு ளும்விளங்கத்
தூண்டிய சோதியை மீனவ
னுஞ்சொல்ல வல்லனல்லன் (529)

ஷை. 6

[மீனவன்- பாண்டியன்[

என்ற பாண்டிப்பதிக மற்றொரு பாடற் பகுதியால் இனிது தெளியலாம்

**மண்சுமந்த திருவிளையாடல்:** நரி - பரி, பரி - நரி ஆன திருவிளையாடல்கட்குப் பின்னர் அரச தண்டனையை அநுபவிக்கும் அடிகள் பொருட்டு பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடல் நிகழ்கின்றது. சுடுமணலில் நிறுத்தப் பெற்றுத் தண்டனையை நீக்கும்பொருட்டு இறைவன் வையையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடச் செய்கின்றான்.

மன்னனது அதிகாரிகளால் தனக்கு வரையறுக்கப்பெற்ற பங்கினை அடைத்தற்கு ஆள்கிடைக்காது அல்லற்பட்டழுத் வந்தி என்னும் தவமுதியாள்பொருட்டுக் கூலியாளாகத் தோன்றியதும், மண் சுமந்ததும், பாண்டியனால் பிரம்படி பட்டதுமான நிகழ்ச்சிகள்,

ஆங்கது தன்னில் அடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்

—கீர்த்தித் (46-47)

எனவும்,

பிட்டு நேர்பட மண்சு மந்த
    பெருந்து றைப்பெரும் பித்தனே (467)

—திருக்கழுக்-2

எனவும்,

திண்போர் விடையான்
    சிவபுரத்தார் போரேறு
மண்பால் மதுரையில்
    பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன்
    தன்னைப் பணிகொண்ட
புண்பால் பாடிநாம்
    பூவல்லி கொய்யாமோ (290)

—திருப்பூவல்லி-16

எனவும்,

கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய் (182)

—திருவம். 3

எனவும் வரும் திருவாசகத் தொடர்களாலும் பாடல் களாலும் அடிகளால் குறிப்பிடப்பெறுகின்றன.

மேலும், இத்தகைய நிகழ்ச்சிகளால் இறைவன் தென் பாண்டி நாட்டையே சிவ லோகமாகச் செய்தருளின சிறப்பினை,

மாவார வேறி மதுரை நகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலம் திகழப் பெருந்துறையான்
கோவாகி வந்தெம்மைக் குற்றேவல்கொண்டருளும்
பூவார் கழல்பரவிப் பூவல்லி கொய்யாமோ

—திருப்பூவல் (20)

எனவும்,

பெற்றி பிறர்கரிய
பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல்
வந்தருளித் தன்னடியார்
குற்றங்கள் நீக்கிக்
குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத்
தொடர்வறுப்பான் தொல்புகழே (194)

—திருவம். 20

எனவும் வரும் திருப்பாடல்களில் அடிகள் குறித்துப் போற்றுவர்.

அடியார்கள்தீப்பாய்தல்: இறைவனுடனிருந்த அடியார்கள் தீப்பாய்ந்ததிறத்தையும் தனது தனிமையையும் அடிகள்,

நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல என்னை யீங்கொழித் தருளி
அன்றுடன் சென்ற அருள்பெறும் அடியவர்
ஒன்ற ஒன்ற உடன்கலந் தருளியும்
எய்தவந் திலாதார் எரியிற் பாயவும்

—கீர்த்தித் (127-132).

என்ற கீர்த்தித்திருவகவல் பகுதியாலும்,

**விச்சுக் கேடு பொய்க்காகா**
**தென்றிங் கெனைவைத்தாய்**
**இச்சைக் கானா ரெல்லாரும்**
**வந்துன் தாள்சேர்ந்தார் (85)**

—திருச்சத-81

*என்ற திருச்சதகப் பாடற் பகுதியாலும்,*

**புறமே போந்தோம் பொய்யும்**
**யானும் மெய்யன்பு**
**பெறவே வல்லே னல்லா**
**வண்ணம் பெற்றேன்யான்**
**அறவே நின்னைச் சேர்ந்தவடியார்**
**மற்றொன் றறியாதார்**
**சிறவே செய்து வழிவந்து சிவனே**
**நின்தாள் சேர்ந்தாரே (90)**

—ஷை. 86

*[சிறவு - சிறப்பு மற்றொன்று - பொய்]*

*என்ற திருச்சதகப் பாடலாலும் தெளிவாக்கியுள்ளார்.*

*இறைவனது பிரிவாற்றாது உயிர் துறந்த மெய்யடியார்கட்கு அம்மையப்பராகத் தோன்றி அருள் வழங்கிய திறத்தையும், அத்தகைய பேரன்பர்களாகிய அடியார்களைப் பிரிந்தமையால் தாம் கண்கெட்ட ஊரெருது போன்று அல்லல் பட்டு உழலும் அவல நிலையையும்,*

**போரே றேநின் பொன்னகர்வாய்**
**நீபோந் தருளி யிருள்நீக்கி**
**வாரே றிளமென் முலையாளோ**
**டுடன்வந் தருள அருள்பெற்ற**
**சீரே றடியார் நின்பாதம்**
**சேரக் கண்டும் கண்கெட்ட**
**ஊரே றாயிங் குழல்வேனோ**
**கொடியேன் உயிர்தான் உலவாதே (57)**

—திருச்சத. 53

[ஊரேறு - ஆள்வாரில்லாத ஊர்க்காளை]
எனவும்,

பொருத்த மின்மையேன் பொய்ம்மை யுண்மையேன்
போத வென்றெனைப் புரிந்து நோக்கவும்
வருத்த மின்மையேன் வஞ்ச முண்மையேன்
மாண்டி லேன்மலர்க் கமல பாதனே
அரத்த மேனியாய் அருள்செ யன்பரும்
நீயும் அங்கெழுந் தருளி யிங்கெனை
இருத்தி னாய்முறை யோவெ னெம்பிரான்
வம்ப னேன்வினைக் கிறுதி யில்லையே (97)
—திருச்சத (93).

[பொருத்தம் - தகுதி; போத - வருக; அரத்தம் - சிவப்பு
வம்பனேன் - வீணன்]

எனவும் இறைவனை நோக்கி முறையிடுமுகமாக அடிகள் விரித்துரைத்த திறம் ஈண்டு நினைக்கத் தக்கது. இந்நிலையில் பாடப் பெற்ற பனுவல்தான் 'திருச்சதகம்' என்பது தெளிவுடன் துணியப்படும்.

பிற தலங்கள்; மணிவாசகப் பெருமான் பெருந்துறையிலிருந்து திருவுத்தரகோச மங்கையை அடைந்து நீத்தல் விண்ணப்பம் பாடி பெருந்துறையில் கண்ட காட்சியையே இங்கும் கண்டனர் என்பதற்கு அகச் சான்று உண்டு.

தெங்குலவு சோலை திருவுத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொள்வான்
பங்குலவு கோதையும் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் (335)
—திருப்பொன்-9

[தெங்கு - தென்னை; எந்தரமும் - எந்த நிலையிலும்
பங்கு - பாதி; கொங்கு - தேன்]

என்ற திருப்பொன்னூசல் பகுதியால் இனிது புலனாகும். பின்னர் மணிவாசகப் பெருமான் பல தலங்களையும் வணங்கித் திருவிடை மருதூர் ஈசனைச் சிறப்பாக வழிபட்ட செய்தி,

**இடைமரு ததனில் ஈண்ட விருந்து**
**படிமப் பாதம் வைத்தவப் பரிசும்**

—கீர்த்தி 75-76

என்பதனாலும்,

**அந்த இடைமருதில்**
**ஆனந்தத் தேனிருந்த**
**பொந்தைப் பரவிநாம்**
**பூவல்லி கொய்யாமோ (276)**

—திருப்பூவல்-2

என்ற திருப்பூவல்லிப் பாடற் பகுதியாலும் உறுதிப்படுகின்றது.

அடுத்து, திருவாரூர் என்ற திருத்தலத்துக்கு வந்து 'திருப்புலம்பல்' அருளிச் செய்தார் என்பது கடவுண் மாமுனிவர் குறிப்பு. இது,

**பூங்கமலத் தயனொடுமால்**
**அறியாத நெறியானே**
**கோங்கலர்சேர் குவிமுலையாள்**
**கூறாவெண் ணீறாடி**
**ஓங்கெயில்சூழ் திருவாரூர்**
**உடையானே அடியேனின்**
**பூங்கழல்கள் அவையல்லா**
**தெவையாதும் புகழேனே (554)**

[கோங்கலர் - கோங்கம்பூ; எயில் - மதில்; யாதும் - ஒரு சிறிதும்]

என்ற அப்பதிக முதற் பாடலால் தெளிவாகும். பின்னர் சீகாழிப் பதியை அடைந்து தமக்கு வெளிப்பட்டருளிய 'சீகாழித் துறையின்' திருவடிகளை இறுகப் பற்றிக் கொண்டு 'பிடித்த பத்தினை'ப் பாடினார் என்பது திருவாதவூரர் புராணக் குறிப்பு[7] இதில் பாடல்தோறும் 'உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவதினியே'' என்று இறைவனை நோக்கி வினவும் குறிப்பும்,

'கழுமல மதனில் காட்சி கொடுத்தும்'[8]

என வரும் கீர்த்தித் திருவகவல் தொடரும் கடவுண் மாமுனிவரின் குறிப்பை அரண் செய்கின்றன. பின்னர்க் குறிப்பிட்ட அடி முற்காலத்தில் ஆளுடைய பிள்ளையாருக்கு தோணிபுரத்தீசர் அம்மையப்பராகத் தோன்றிய அருட் காட்சியையும் குறிப்பிடுவதைக் கண்டு மகிழ்கின்றோம்.

இறைவன் பணித்த வண்ணம் மணிவாசகப்பெருமான் கழுக்குன்றம் வந்து கழுக்குன்ற நாதனை வணங்கி மகிழ்ந்த செய்தி,

மலங்கினேன் கண்ணின் நீரை மாற்றி
மலங்கெ டுத்தபெ ருந்துறை
விலங்கி னேன்வினைக் கேட னேனினி
மேல்வி ளைவத றிந்திலேன்
இலங்கு கின்றநின் சேவ டிகளி
ரண்டும் வைப்பிட மின்றியே (468)
—திருக்கழுக். 3

[மலங்கினேன் - கலங்கினேன்; விலங்கினேன் - விலகி கினேன்]

7. பிடித்த பத்து (37) காண்க.
8. கீர்த்தித்-அடி. ௪௮

பேத மில்லதோர் கற்ப ளித்த
　　பெருந்து றைப்பெரு வெள்ளமே
ஏத மேபல பேச நீஎனை
　　ஏதி லார்முனம் என்செய்தாய்
சாதல் சாதல்பொல் லாமை யற்ற
　　தனிச்ச ரண்சர ணாமெனக்
காத லாலுனை யோத நீவந்து
　　காட்டி னாய்கழுக் குன்றிலே (471)
—செ. 6

என வரும் இப்பதிகப்பாடல்களால் தெளிவாகப் புலனாகும்.

திருக்கழுக்குன்றத்திலிருந்து கோயில் என வழங்கும் தில்லையை யடைந்து பொன்னம்பலவனைப் போற்றி வழிபட்டிருந்தமை தில்லையில் பாடிய திருவாசகப் பதிகங்களால் தெளிவாக அறியலாம்.[9] தில்லையில் அடிகள் தங்கியிருந்த பொழுது புத்தரை வாதில் வென்ற நிகழ்ச்சியை நம்பி திருவிளையாடலும், திருவாதவூரர் புராணமும் குறிப்பிடுகின்றன. இதற்கு அகச் சான்றுகள் எவையும் கிடைக்கவில்லை. 'புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்' (318) என்ற திருவாசகத் தொடரால் தமிழ்நாட்டில் அவர் காலத்தில் புத்தசமய வாடை ஓரளவு வீசியதாகக் கருதலாம். தில்லையில் வாதில் வெல்லப்பட்ட புத்தர்கள் யாவரும் இலங்கையிலிருந்து வந்தவர்களாவர். இலங்கையரசன் மகள் ஊமைப் பெண்ணைப் பேசுவித்த நிலையில் வினாவும் விடையுமாக அடிகள் 'திருச்சாழல்' அருளினார் என்பதற்கு நெடுநாட்களாக வழங்கி வரும் செவிவழிச் செய்தியே சான்றாகும். திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் அழகிய சிற்றம்பலவனே தனது திருக்கையினால் எழுதிக் கொண்டான் என்ற செய்தியைத் திருவாதவூரர் புராணம்

9. கட்டுரை 12, 13 காண்க.

மட்டிலுமே விரித்துக் கூறுகின்றது. நம்பியும் பரஞ்சோதி முனிவரும் இச்செய்தியைத் தம் புராணங்களில் குறிப்பிட வில்லை. பின் வந்த சான்றோர்கள் இரட்டைப் புலவர், இரசை வடமொழியப்ப பிள்ளை, சிவப்பிரகாச அடிகள் முதலியோர் குறித்துள்ளனர். ஆயினும், திருக்கோவையாரை இறைவனே பாடும்படி பணித்த செய்தி,

நினைவித்துத் தன்னையென் நெஞ்சத்
திருந்தம்பலத்து நின்று
புனைவித்த ஈசன் (140)

இருந்துதி யென்வயிற் கொண்டவன் (300)

என்ற திருச்சிற்றம்பலக் கோவைத்தொடர்களும் இவற்றிற்கு பேராசிரியர் எழுதிய உரைக்குறிப்புகளும் தெரிவிக்கின்றன.

# 17. மணிவாசகரின் சிவநெறிக் கொள்கை

சைவ சமய குரவர் எனப்போற்றப்பெறும் நால்வரும் (ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர்) சிவநெறி வளர்த்த செந்தமிழ்ச் செல்வர்கள். இந்நால்வரும் சைவ உலகில் இறையருளால் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் கைவரப் பெற்ற திருநெறிச் செல்வர்களாகத் திகழ்கின்றனர். இவர்களை இறைவன் தானே எளிவந்து ஆட்கொண்டு சிவகதியில் சேர்த்தருளின வரலாற்றை தமிழ் மெய்ந்நூல்களால் அறியலாம். மேற் குறிப்பிட்ட நால்வருள் காலமுறைப்படி நாலாமவராக வைத்தெண்ணப்படுவர் மணிவாசகப் பெருமான். இவர் தமக்கு முன்னுள்ள தேவார ஆசிரியர் மூவரும் அம்மூவர்க்கும் காலத்தால் முற்பட்ட திருமூலரும் கொண்டொழுகிய சைவ சித்தாந்தம் என வழங்கும் சிவநெறிக் கொள்கையினையே மேற்கொண்டொழுகிய சீலர். இதனைத் தாம் அருளிய திருவாசகத்திலும் திருக்கோவையாரிலும் அடிகள் திருமந்திர மாலை, தேவாரத் திருப்பதிகங்கள் ஆகியவற்றின் தொடர் களையும் கருத்துகளையும் எடுத்தாண்டிருப்பதனால் அறியலாம்.

**முப்பொருள் உண்மை :** சைவ சித்தாந்தத்தில் 'முடிந்த முடிபாக' கொள்ளப்படும் 'பதி பசு பாசம்' என்னும் முப்பொருள் உண்மை திருவாசகத்தில் பேசப்பெறுகின்றது.

இவற்றுள் பதி இறைவன், கடவுள், பரமான்மா எனப் படுவதும் இதுவேயாகும். பசு என்பது, ஆன்மா; உயிர். சீவான்மா எனப்படுவதும் இதுவே. பாசம் என்பது தளை; அஃதாவது உயிரைப் பிணித்துள்ள கட்டு. இக்கட்டு ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களாகும். மலங்கள் மூன்றேயாயினும், உலகிற்கு முதற்காரணமாகிய மாயை காரண நிலை காரியநிலை என இரு நிலைகளை யுடையது. மாயை என்பதைக் காரண மாயையையே குறிப்பதாகக் கொண்டு அதன் காரியங்களை 'மாயேயம்' என வேறொரு பெயரால் குறிப்பர். இப்பெயர் அசுத்த மாயை யின் காரியத்திற்கே பொருந்தும் (இம்மாயை சகலர்க்கு உரியது). ஐந்தாவது இறைவன் சக்தியாகிய திரோதான சக்தியும் ஒரு மலமாகக் கொள்ளப்பெறுகின்றது. இங்ஙனம் மலங்கள் ஐந்தாகின்றன. மும்மலம், ஐம்மலம் என வழங்கும் சைவ சித்தாந்தக் குறியீடுகளும் இருவினையொப்பு, மலபரிபாகம் முதலிய நுண்பொருள்களும் திருவாசகத்தில் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். இக்குறிப்புகளைக் கூர்ந்து நோக்குங்கால் வாதவூரடிகள் திருமூலர்முதல் வழி வழியாக வருகின்ற சைவ சித்தாந்தத் தத்துவக் கொள்கை களை மேற்கொண்டொழுகும் செம்புலச் செல்வர் என்பது தெளிவாகின்றது.

தவிரவும், அடிகள் மாயாவாதக் கொள்கையினையும்,[1] முப்பொருள் உண்மையினையு உடன்படாமையால் அதனோ டொத்த உலோகாயதக் கொள்கையையும் வெறுத்தொதுக் கியவர். இதனை,

---

1. மாயாவாதம் 'பிரம்மம் ஒன்றே உள்பொருள்; உலகம் வெறும் பொய்த்தோற்றமே' என்பது இக் கொள்கை.

மிண்டிய மாயா வாதம் என்னும்
சண்ட மாருதம் சுழித்தடித் தாஅர்த்து
உலோகா யதமெனும் ஒண்டிறல் பாம்பின்
கலாபே தத்த கடுவிடம் எய்தி
—போற்றி. 54-57

[மிண்டிய - வலிய; கலாபேதத்த - காமக் கலையின் பேதங்களாகிற கொடிய பாம்பு]

என்ற போற்றித் திருவகவல் பகுதியால் தெளியலாம்.

**ஆணவ மலத்தின் இயல்பு:** உயிர்களின் அகத்தே மறைத்து நிற்கும் மலமும் அவ்வுயிர்களின் புறத்தே மறைத்து நிற்கும் இருளும் ஆணவ மலத்தின் இருவேறு திறங்கள். ஒருவிதத்தில் ஆணவம் இருளை ஒத்திருப்பினும், இன்னொரு விதத்தில் ஆணவம் இருளை விடக் கொடியது. இருள் தன்னிடத்திலுள்ள பொருளை மறைக்கும்; தன்னை மறைக்காது. ஆனால் ஆணவம் தன் செயலை மறைப்பது மட்டுமின்றித் தன்னையும் மறைத்துக் கொள்ளும். இருளில் மறைந்து கிடக்கும் பொருள்கள் நம் கண்ணுக்குப் புலனாகாவிடினும், அவற்றை மறைத்துக் கொண்டிருக்கும் இருளாவது நமக்குப் புலனாகும், ஆணவம் நம் அறிவை மறைக்கின்றது. அதேசமயம் தன்னையும் மறைத்துத் தன்செயலையும் மறைக்கின்றது. இருள் வெளிப்பட்டுத் தன்னைக் காட்டிக் கொண்டே தனது செயலைப் புரிகின்றது. ஆனால் ஆணவம் வெளிப்படாமல் தன்னை மறைத்துக் கொண்டே தனது தொழிலைச் செய்கின்றது.

ஒருபொருளும் காட்டாது
இருஉருவம் காட்டும்
இருபொருளும் காட்டாது
இது (திருவருட் பயன்—இருள் மலநிலை-3)

எனவும்,

**பலரைப் புணர்ந்தும்இருட்**
**பாவைக்குண் டென்றும்**
**கணவர்க்கும் தோன்றாத**
**கற்பு (டிை-டிை-5)**

என்றும் இதன் கொடுமையை விளக்குவர் உமாபதிசிவம்.

மணிவாசகப் பெருமான் ஆணவத்தை 'இருள்' எனவே கூறுவர்.

**வல்வினையேன் தன்னை**
**மறைந்திட மூடிய மாய இருளை**
—சிவபுரா, 50-51

எனவும்,

**என்னுடை இருளை ஏறத் துரந்தும்** கீர்த்தித் - 6

எனவும்.

**ஈசற்கு யான்வைத்த அன்பின்**
**அகன்றுஅவன் வாங்கியஎன்**
**பாசத்திற் கார்என்று அவன் (திருக்-109)**

எனவும் கூறுவது காண்க. மற்றும், ஆணவமலம் அறியாமையைச் செய்தலின் அஃது 'அஞ்ஞானம்' எனவும் பேசப்பெறும், இது,

**அஞ்ஞானம் தன்னை**
**அகல்விக்கும் வல்லறிவே** —சிவபு 40

என்ற அடியால் அறியப்படும். உயிர்களின் அறிவுசெயல் முதலியன வெளிப்பட வொட்டாது அவற்றைக் கயிறுபோல் இறுகப் பிணித்து நிற்றலின் அது **பாசம்** எனப்படுகின்றது. இதனை,

**பாசமாம் பற்றறுத்து**
**பாரிக்கும் ஆரியனே** —சிவபு.64

எனவும்,

பாசவேர் அறுக்கும்
பழம்பொருள் தன்னைப் (440)
—பிடித்த. 7

எனவும்,

பிறவிவே ரறுத்தென் குடிமுழுதாண்
பிஞ்ஞகா பெரியஎம் பொருளே (539)
—பிடித்த-6

பாசத் தளையறுத் தாண்டுகொண்
டோன் தில்லை.
—திருக்கோ.115

எனவும் வருகின்ற அடிகளின் திருவாய்மொழிகளால் அறியலாம். உயிர்கட்குக் கலக்கத்தை விளைவித்தலின் 'மலம்' எனவும், அம்மலத்தின் முனைப்பால் உயிர்கள்பால் நிகழும் வினைகள் கொடுமையுடையனவாயிருத்தலின் 'கடியவினை' எனவும், இவ்வாறு தொன்றுதொட்டு உயிர் களைப் பற்றி வருத்தும் பழைமையுடையதாதல் பற்றி அதனைப் 'பழமலம்' எனவும் கூறுவர் அடிகள். இதனை,

கடலின்திரை யதுபோல்
கலக்கமல மறுத்து (509)
—உயிருண்ணி - 6

எனவும்,

ஓடிய வினையகற்றிப்,
பழமலம் பற்றறுத்து ஆண்டவன் (531)
—திருப்பாண்டி - 8

எனவும்,

கடியே னுடைய கடுவினையைக்
களைந்துன் கருணைக் கடல்பொங்க
உடையாய் (484)
—பிரார்த்-2

எனவும்,

முன்னை வினையிரண்டும்
　　வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும்
　　பேராளன் (618)
—திருவெண்பா - 4

எனவும், வரும் திருவாசகத் தொடர்களால் தெளியலாம்.

**சிவத்தின் இயல்பு :** ஆருயிர்களைப் பற்றியுள்ள மலத்தின் இயல்பினைக் கூறும் அடிகள் அம்மலத்தின் ஆற்றலைக் கெடுத்து உயிர்களை உய்வித்தருளும் சிவத்தின் இயல்பினை யும் செப்புவார். 'அஞ்ஞானந்தன்னை அகல்விக்கும் நல்லறிவு' (சிவபு -40) எனவும், 'மலம் அறுத்து வான்கருணை தந்தானை'(கண்ட- 9) எனவும், 'மலம் அறுத்து என் உடலும் எனது உயிரும், புகுந்து, ஒழியா வண்ணம் நிறைந்தான்' எனவும், 'கழிவில் கருணை' (531) எனவும், 'கருணைக்கடல்' (117, 223) எனவும், 'பருகற்கினிய பரங்கருணைத் தடங்கடல்' (249), பழம் பொருள்' (163, 540,) எனவும், 'அவன் தில்லை யின்ஒளி' (திருக்கோ 106) எனவும் வரும் திருவாசகத் தொடர் களில் அடிகள் உடன் வைத்து உணர்த்தியுள்ளார். பழம் பொருளாகிய சிவம் என்றும் நல்லறிவுப் பொருளாகத் திகழ்தலும், மலம் நீங்கிய உயிர் தன் பொருட்டன்மை சிதையாதிருக்க, அவ்வுயிரின்கண் சிவம் புலப்பட்டுத்தோன்றி அதன் உடல், கருவிகரணங்களை அகத்திட்டு விளங்குதலும் இக்காட்டிய திருவாசகத் தொடர்களால் புலனாகும். மேலும், பேரருளாளனாகிய இறைவன் உயிர்களின் மலத் துன்பத்தை நீக்கித்தன் பேரருள் இன்பத்தை உயிர்கட்கு வழங்கும் அருட் குறிப்பு உடையனாதலும், அம்முதல்வன் தன்பால் அன்புடைய அடியார்கட்கு அருள் வழங்குதற் பொருட்டுத் தில்லைச் சிற்றம்பலமாகிய அருள் வெளியில் ஒளியுருவினனாக நின்று ஆடல் புரிதலும் இவற்றால் தெளிவாகின்றன.

இன்னும், ஆருயிரும் கருணைகக் கடலாகிய சிவமும் பொருட்டன்மையால்இருவேறுபொருள்களாதலும் சிற்றுணர் வினவாகிய உயிர்கள் தொன்மையிலிருந்தே மும்மலப்பிணிப் புடையனவாயிருக்க,முற்றுணர்வும் பேரருளும், அளவிலாற்ற லும் வரம்பிலின்பமும் உடையனாய் இயல்பாகவே பாசத் தொடர்பற்ற இறைவன், உயிர்களை மும்மலப்பிணிப் பினின்றும் விடுவித்து அவ்வுயிர்களைச் சிவமாகிய தன்னுடன் பிரிவின்றி ஒன்றும் வண்ணம் தன் அருளொளியில் சேர்த்துக் கொள்ளுதலும் ஆகிய செயல்கள் இவ்வாய்மொழிகளால் தெளிவாகின்றன. இதனால் மணிவாசகப் பெருமான் சிவநெறிக் கொள்கையினராதல் உறுதிப்படுகின்றது.

**மலங்களின் செயல்கள் :** மலம் என்பது அழுக்கு. உயிர் களின் தூய்மையைக் கெடுத்து நிற்றலால்இப்பெயர்பெற்றது. அறிவுடைய பொருளாகிய உயிரை அறியாமையுடையதாகச் செய்வதே இதன் இயல்பாகும். ஆணவமலம் ஒன்றேயன்றிப் பல இல்லை. ஆயினும் அஃது எண்ணிறந்த சக்திகளை யுடையது. அதனால் எண்ணில்லாத ஆன்மாக்களை மறைத்து நிற்றல் அதற்குக் கூடுவதாகின்றது. எல்லா உயிர்களும் மாயையால் ஆக்கப்பட்ட உடல், கருவி, உலகு, நுகர் பொருளைப் பெற்று அவற்றின் உதவியால் அறியாமை சிறிது சிறிதாக நீங்க அறிவு விளங்கப் பெறுவன. இங்ஙனம் உயிர் களது அறிவு விளங்குதற்குக் கருவியாய் நின்று உதவுதல் மாயையின் செயல். உயிர்கள் மலம் மாயை என்னும் இரண்டின் அகமாய் நின்று வினை செய்யுங்கால் நல்வினை, தீவினை என்னும் இருவினைகள் நிகழ்வன. இவ்வினை களால் உண்டாகும் பழக்கத்தை உயிர்களின் அறிவிற் பதியும் படி செய்தல் கன்மமலத்தின் செயலாகும். இவற்றுள் மாயை அனைவராலும் எளிதில் உணரப்படுவது; காரணம் அது பருப் பொருள். கன்மமோ இவ்வளவு எளிதாகக் காட்சியால் உணர முடியாதது; ஆனால் சிறிது நோக்கினால் உணரக்

கூடியது. இதற்குமேல் உள்ள 'ஆணவம்' என்பதை உணர்தல் மிகவும் அரிது. ஆணவம் நுண்பொருள்; கன்மம், ஆணவம் மாயை ஆகிய இரண்டற்கும் இடைப்பட்ட பொருள்.

ஆணவமலத்தால் அறியாமையும் மாயை கன்மங்களால் அவ்வறியாமை நீங்கி அறிவு விளங்கப்பெறுதலும் உயிர்கள் பால் இடையறாது நிகழ்ந்து கொண்டே இருக்கும். இவற்றுள் ஆணவமலம் ஒன்றே செம்பில் களிம்புபோன்று உயிரோடு ஒற்றித்து அதன் விழைவு அறிவு செயல் ஆகிய ஆற்றல்களைத் தொன்றுதொட்டு மறைத்து நிற்பது. இம்மலம் 'சகசமலம்' (சகசம் – கூடப்பிறந்தது) என்றும், 'அநாதி செயற்கை' என்றும் வழங்கப்பெறும். அறியாமையே வடிவமாய் நிற்றலின் இது 'இருள் மலம்' என்றும் பெயர் பெறும். மாயையும் கன்மமும் ஆணவமல நீக்கத்திற்கும் உயிர் களின் அறிவு விளக்கத்திற்கும் துணைசெய்வனவாய், இறை வனால் கூட்டப்பெற்று இடையே ஒரு காலத்து வந்து சேர்ந் தனவாகும், மலநீக்கத்திற்கு உதவி செய்யவந்தஇவ்விரண்டும் ஆணவமலத்தோடு உடன் நின்று அதன் சார்பில் தாமும் ஒரோ வொருகால் மயக்கத்தை விளைத்தல் பற்றி மலம் என்று வழங்கப் பெறுகின்றன.

அறியாமையை விளைவிக்கும் ஆணவ மலத்தின் வலியை யொடுக்கி உயிர்கட்கு அறிவு விளங்கச் செய்தற் பொருட்டே எல்லாம் வல்ல இறைவன் மாயையின் காரியமாகிய பல்வேறு உடம்புகள், அவை உறைவதற்கேற்ற பல்வேறு உலகங்கள், அவை நுகர்தற்கேற்ற நுகர் பொருள்கள் ஆகியவற்றை மாயையாகிய முதற் பொருளினின்றும் படைத்து வழங்கு கின்றான். அருட்பெருங் கடலாகிய இறைவன் உயிர்கள் உலக நுகர்ச்சிகளால் நன்றும் தீதும் கண்டு அறிவு விளங்கப் பெற்றுத் தம்மைப் பிணித்துள்ள மும்மலங்கள் கழன்

றொழிதல் வேண்டும் என்றும், பேரின்ப உருவினதாகிய சிவத்தோடு இரண்டறக் கலந்து தாமும் சிவமுமாய் நிலை பெயராப் பேரின்ப நிலையில் இருத்தல் வேண்டும் என்றும் கருதுகின்றான்.

**சிவமாதல் :** எம்பெருமான் அருளால் உயிர்கள் மாயை கன்மங்களின் துணையால் அறியாமை தேய்ந்து அறிவு விளங்கப் பெறுகின்றன. பின்னர் அவை தமக்குத் தோன்றாத் துணையாக நின்று அருள் புரியும் சிவபரம்பொருளை அடைந்து அம்முதல்வன் அருளில் இரண்டறக் கலந்து ஒன்றாதலிலே தமது நாட்டத்தைச் செலுத்துகின்றன. மேலும், அவை உலகியற் பொருள்களிலும் தம்மைச் சூழ்ந் துள்ள உற்றார் உறவினர் முதலியோரிடத்திலும், தம் உடம்பிலும், உயிராகிய தம்மிலும் செல்லும் உணர்வை மடித்துத் திருப்பி தம் உயிர் உணர்விற்கு உணர்வாய் விளங்கும் சிவபரம்பொருளில் படியச் செய்கின்றன. இந் நிலையில் தாம் ஒரு பொருள் உண்டென்பதை மறந்து சிவமாகவே அமர்ந்து விடுகின்றன. இந்நிலையை மணி வாசகப் பெருமான் '**சிவமாதல்**' எனக் குறிப்பிடுகின்றார்.

> **சித்தமலம் அறுவித்துச்**
> **சிவமாக்கி எனையாண்ட**
> **அத்தன்** (648 - அச்சோ - 1)

என்ற அச்சோ பதிகப் பாடற் பகுதியாலும்,

> **சிந்தைதனைத் தெளிவித்துச்**
> **சிவமாக்கி எனையாண்ட**
> **அந்தமிலா ஆனந்தம்** (473 - கண்ட-1)

என்ற 'கண்டபத்துப்' பாடற் பகுதியாலும் இதனை அறியலாம். "சிவமாதல் என்றது, ஆன்மா தற்போதமாய் நிற்பதும் செய்யாமல் தானென்கின்ற முதல் கெடுவதும்

செய்யாமல் தற்போதம் கெட்டு அந்தச் சிவத்தோடு கூடி இரண்டற நின்று (அத்துவிதமாய்) அநுபவித்தது என அறிக"[2] என்பர் மதுரைச் சிவப்பிரகாசர்.

ஆன்மா, தன் பொருட்டன்மை அழிந்து சிவம் ஒன்றாயே ஒழியாமலும், சிவத்தின் வேறாய்த் தான் தனித்து நில்லாமலும், பாலோடு அளாவிய நீர் தன் உண்மை கெடாமல் பாலின் தன்மையதாய் அதனுடன் பிரிவறக் கலந்து ஒன்றாக இருக்குமாப்போலே, மலம் நீங்கித் தூயதாகித் தன் உண்மை கெடாமல் சிவத்துடன் இரண்டறக் கலந்து ஒன்றாதலையே. 'சிவமாதல்' எனச் சித்தாந்த நூல்கள் கூறும். சிவத்தின் திருவடியைச் சேர்தல் என்பது, இறைவன் திருவருளில் பதிதல். இதனைச் 'சிவமாதல்' என வழங்குதல் திருமூலர் காலந்தொட்டு வழங்கி வரும் சித்தாந்த வழக்காகும் இவ்வுண்மை,

**ஒன்றும் இரண்டும் இலதுமாய் ஒன்றாக**
**நின்று சமய நிராகாரம் நீங்கியே**
**நின்று பராபரை நேயத்தைப் பாதத்தால்**
**சென்று சிவமாதல் சித்தாந்த சித்தியே (1437)**

என்ற திருமூலர் வாய்மொழியால் தெளிவாகும்.

மேலும், இக்கருத்தைத் தெளிவாக்குவேன். ஆதித்தன் ஒளியைக் கொண்டு கண் பிரபஞ்சத்தைப் பற்றி நிற்கின்றது. அப்பொழுது கண் அந்த உருவங்களை விட்டு அந்த ஒளிக்கு முதலாயிருக்கின்ற ஆதித்தனைக் கண்டு பிரிவற நிற்கின்றது. அதுபோல ஆன்மாவும் அருளிடமாகக்கூடி நின்று சத்தாதி விடயங்களைப் புசித்து நின்றாலும்,அதனையும்விட்டு மனோ விகாரமும் அடங்கி அந்த அருளுக்கு முதலாயிருக்கின்ற சிவத்தோடும் அந்த அருளை வழியாகக் கொண்டு சென்று

2. சிவப்பிரகாசம் - 80ஆம் செய்யுள் உரை.

கூடிப்பிரிவற்று இரண்டற நிற்கும். இங்ஙனம் ஆன்மா அந்தச் சிவத்தோடும் கூடிச் சிவமாய் நிற்கும் என்பதை,

**அவமாய தேவர் அவகதியில் அழுந்தாமே**
**பவமாயங் காத்தென்னை யாண்டுகொண்ட பரஞ்சோதி**
**நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாமொழிந்து**
**சிவமான வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ (238)**
திருத்தெள் 4

[அவமாய - பயனற்ற; அவகதி - கீழ்நிலை; பவமாயம் - பிறவிக்கு ஏதுவாய வஞ்சனை; நவம் - புதுமை]

என்ற திருத்தெள்ளேணத் திருப்பாடலால் அறியலாம். "தேவர் பிறப்பும் மாந்தர் பிறப்பும் வினையால் வருவன. மாந்தர் பிறப்பினும் தேவர் பிறப்பு பயனின்றிக் கழியும் வீண் பிறப்பாகும். வீணாய்க் கழியும் தேவர் பிறப்பும், வீண் செருக்கேற்றும் அவர்தம் நிலையும் இரங்கத் தக்கவை. இந்நிலையில் எளியேனை அழுந்த விடாமல் பிறப்பினைப் பின்னும் பெருக்கும் மருள்நெறி புகாமல் காத்து ஆண்டு கொண்டருளினன். அவன் அருட்பேரொளியாவன்; அவனே என்றும் புதுமையாக இயற்கையில் திகழும் அறிவு நிறை செஞ்சுடராவன்; அவன் அவ் அறிவுச்சுடரை எளியேன் மாட்டு நல்குதலும் அப்பொழுதே (ஒளி முன் இருள்போல்) 'யான்'என்ற உடற்பற்றும்,'எனது' என்னும் உடைமைப்பற்றும் ஆகிய அகப் புறப்பற்றுகள் அகன்று அடங்கின; அடங்கலும் சிவமாம் பெருவாழ்வு எய்தினம். எய்தலும், 'எங்கும் இலாததோர் இன்பம் நம்பாலதாயிற்று'. அச்சிறப்பினைப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோமாக" என்கின்றார்.

மேலும் இத்திருப்பாடலில் 'நாம் ஒழிந்து' என்பது மலப்பிணிப்பாம் உயிர்த்தன்மை (பசுத்துவம்) அகன்று கலப்பிணிப்பாம் திருவருட்சார்பு எய்துதலாகும். காரணம், பசுவின் அறிவு அஃது அடையும் பொருளின் தன்மையாக மாறிவிடும். இதுவே சித்தாந்தம் பேசும் 'சார்ந்ததன்

வண்ணமாதல்' என்பதாகும். சிவமாவதென்பது சிவமாம் பெருவாழ்வு நுகர்வதாம் என்பதாம். ஆருயிர் சிவன் திருவடிக்கண் வைத்த அன்பினால் இறவாத இன்பம் நுகரும். அப்பொழுது அவ்வுயிரை அன்பி என்றும், இன்பூட்டும் சிவனை இன்பி என்றும் கூறுவர். இந்நிலையே சிவமாவதென்பதாம். அதுவன்றி உயிரழிந்து சிவமாதல் என்பதன்று. கோலம் பூண்டார் கோலப் பொலிவினராய் முழுவதும் காணப்பெறுவர். ஆயினும் கோலம் மட்டும் இருப்ப, அவர் அழிந்தனர் என்று கருதுவது ஏலாதன்றே? அதுபோல சிவன் திருவடியைச் சார்ந்தோர் சிவன் நிறைவில் அடங்கிச் சிவனாய்த் திகழ்வர். அதுவன்றிச் சிவமழிந்து உயிராகாது. இவ்வுண்மை சிவஞானபோதம் (சூத்திரம்-11), சித்தியார் (11-2-5) என்பவற்றாலும் அறியலாம். இங்ஙனம் மாணிக்கவாசகப் பெருமான் அருளிய திருவாசகப் பனுவலில் சைவ சித்தாந்தப் பொருள்கள் தெளிவாக விளக்கப் பெற்றிருத்தல் காணலாம்.

**அத்துவிதக் கருத்து :** இறைவன் உலகத்தோடு கொண்டுள்ள தொடர்பை 'அத்துவிதம்' என்பர் சித்தாந்திகள். அத்துவிதமாவது இரண்டல்லாமை (அதாவது பிரிவின்மை) என்பது மெய்கண்டார் தரும் விளக்கம். "'அத்துவிதம்' என்ற சொல்லே அந்நிய நாத்தியை (பிரிப்பின்மையை) உணர்த்துமாயிற்று." என்று உரைத்தருளினமையால் உணரலாம்.[3] 'பிரிவின்மை' எனவே, 'பொருள் இரண்டு' என்பதும் 'இரண்டாயினும் வேறு வேறாய் நில்லாது' ஒன்றியே நிற்கும் என்பதும் பெறப்படும். அத்துவிதத் தொடர்பில் அபேதம், பேதம், பேதா பேதம் என்கின்ற மூன்று தன்மையும் ஒருங்கு காணப்படுகின்றது.

3. சி. ஞா. போ. 2-ஆம் சூத்திரம் முதலதிகரணம்— வார்த்திகம் (7 - b) - சிற்றுரை காண்க.

இம்மூன்றற்கும் பொதுவாய் நிற்றலையே வேதம் 'அத்வி தீயம்' (அத்துவிதம்) என்று கூறுகின்றது. இதன் உண்மைப் பொருள் சித்தாந்தத்துள்தான் விளங்குகின்றது. 'இறைவன் உயிர்களோடு கலப்பினால் ஒன்றாயும், பொருட்டன் மையால் வேறாயும், உயிர்க்கும் உயிராதல் தன்மையால் உடனாயும் நின்று உலகத்தைச் செயற்படுத்துவான்' என்பது சித்தாந்தம் தரும் விளக்கம்[4].

இங்ஙனம் ஒன்றெனலும் ஆகாமல் இரண்டெனலும் ஆகாமல் தூய நல்லுயிர்கள் சிவத்தோடு இரண்டறக் கலந்து சிவத்தன்மையாய் அடங்கி ஒன்றாகும் வீடு பேற்றின் நிலையை **'சிவமாதல்'** என்ற சொற்றொடரால் அறிவுறுத்தப் பெறும். சைவ சித்தாந்த முடிவுப் பொருளாகும். இம் முடிவினைத் தெளிவாக்கும் நிலையில் அமைந்ததே 'நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம் ஒழிந்து சிவமான வாபாடி' எனவரும் திருவாசகத் தொடராகும். இறைவன் அருளும் சிவஞானத்தால் உள்ளத் தெளிவும் பெறாதவர்களும் இங்ஙனம் சிவமாதலாகிய பேரின்ப நிலையை அடைய முடியாது என்பதனை,

**தெளிவறியாதார் சிவமாக மாட்டார் (1480)**

என்று திருமூலரும் அறிவுறுத்துவார்.

இக்கருத்தை திருவாசகப் பாடலொன்றால் தெளிவாக அறியலாம்.

> **நிலநீர் நெருப்புயிர்**
> **நீள்விசும்பு நிலாப்பகலோன்**
> **புலனாய ஐந்தனோ (டு)**
> **எண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்**

---

4. அத்துவிதம் : இதன் விரிவான பொருள் விளக்கத்தை இவ்வாசிரியரின் **'சைவ சமய விளக்கு'** பக். 63 - 68, (பாரி நிலையம், சென்னை - 108). என்ற நூலில் காண்க

**உலகே ழெனத் திசை**
**பத்தெனத்தா னொருவனுமே**
**பலவாகி நின்றவா**
**தோணோக்கம் ஆடாமோ (317)**
திருத்தோ. 5

[பகலோன் - சூரியன்: புலனாய மைந்தன் - அறிவு உடையவனாகிய இயமானன் அல்லது ஆன்மா; திசைபத்து - நேர்த்திசை 4, கோணத்திசை 4, மண்ணும் விண்ணுமாகிய 2 ஆகப் பத்து].

இதில் இறைவனது அட்ட மூர்த்த சொரூபம் பேசப்படுகின்றது. அதாவது இறைவன் ஐம்பூதங்கள், ஞாயிறு, திங்கள், ஆன்மா எல்லாப் பொருள்களிலும் கலந்து விளங்கும் திறத்தினை அடிகள் விளக்குகின்றார். இறைவன் இவ்வாறு பொருள்தோறும் யாண்டும் நீக்கமறக் கலந்து உடனாய் நிற்கும் இயல்பினைக் கூறுவது இத்திருப்பாடல். இதில் ‘தான் ஒருவனுமே பலவாகி நின்றவா’ என்பது இப்பாடலின் இதயம் போன்றது. ‘இறைவனையன்றி வேறொரு பொருளும் இல்லாதிருக்க, அவன் ஒருவனே உலகுயிர்களாகிய பல பொருள்களாகக் காணப்படுகின்றான்’ எனச் சிலர் இதற்குப் பொருள் கூறுவது தவறு; அடிகளாரின் கருத்துக்கு இப்பொருள் சிறிதும் பொருந்தாது. ஒரு பொருளே பல பொருளாகத் தோற்றுதலும், ஒரு பொருளே பல பொருள்களில் ஊடுருவி நிற்றலும் தம்முள் மாறுபட்ட இருவேறு தன்மைகள். இவற்றுள் அடிகள் குறித்தது இரண்டாவது பொருளே; அஃதாவது ஒரு பொருளே தம்முள் வேறுபட்ட பல பொருள்களிலும் இரண்டறக் கலந்து நிற்கும் இயல்பினையேயாகும். ‘எண்வகையான் நின்றான்’ என்னாது ‘எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்’ எனத் தாம் கூறும் பொருள் தெளிவடைவதற்கே என்பது அறியத் தக்கது.

'எண் வகையாய்ப் புணர்ந்து நின்றான்' என்பதில் 'புணர்ந்து நிற்றல்' என்பது அத்துவித கலப்பினை உணர்த்துவது. சிவபெருமானுடைய அளத்தற்கரிய முத்திறப்புணர்ப்பினுள் பொருட்டன்மையால் வேறு நிற்றல் ஒருவனாய் நிற்றலும், உலகுயிர்களுடன் கலப்புத் தன்மையால் ஒன்றாய் விரவி நிற்றல் பலவாய் நிற்றலும், உயிர்க்கு உயிராதல் தன்மையால் இயைந்தியக்குதல் உடனாய் நிற்றலும் ஆகும். ஞாயிறு பொருட்டன்மையால் கதிரோன் எனவேறு நிற்றலும், கதிர் பலவாய்க் கண்ணினும் பொருளினும் பொதுவாய் விரவி நிற்றல் பலவாய் நிற்றலும், சிறப்பாகக் கண் ஒரு பொருளை நோக்கிக் காணுங்கால் கதிர் கண்ணோடு விரவி நிற்றல் காட்டுதலாகவும், பொருளோடு விரவி நிற்றல் காணுதலாகவும் கொள்ளுதல் வேண்டும். இவையே பலவாதற்கு ஒப்பாகும்.

இன்னும், புணர்ந்து நிற்றல் என்றது, ஒரு பொருள் தானல்லாத வேறு பொருளுடன் கூடி நிற்றலைக் குறிப்பதன்றி, ஒரு பொருளே பலவாய் விரிந்து தோன்றுவதனையோ ஒன்று மற்றொன்றாய்த் திரிந்து தோன்றுவதனையோ (பால் தயிராவது போல) குறிப்பதன்று என்பது அறியத் தக்கது. ஓர் உடம்பினுள் கலந்து நிற்கும் உயிர், அவ்வுடம்பின் ஐம்பொறிகளினும் ஐம்புல உணர்வினைத் தோற்றுவித்தல் பற்றி உடம்போடு ஒன்றாய்க் கலந்திருப்பினும், உண்மையால் நோக்கும்போது அவ்வுயிர் உடம்பின் வேறாதல் போன்று, இறைவனும் உலகுயிர்கள் எல்லாவற்றினும் நீக்கமறக் கலந்து நின்று அவற்றை இயக்குவித்தல் பற்றி அவை பலவுமாய் விரவி இருப்பினும் உண்மையில் அம்முதல்வன் அவற்றின் வேறாய்த் தான் ஒருவனேயாவன் என்னும் மெய்ம்மை யினையே 'தான் ஒருவனுமே பலவாகி நின்றவர்' எனவரும் இத்தொடரில் அடிகள் விளக்கியுள்ளார். 'ஒருவன்' என்பதால் ஒருவன் என்னும் இறைவனாகிய ஒருவனும்'

'பல' என்பதால் அவனல்லாத உலகுயிர்களும், 'ஆகி' என்பதால் அவற்றோடு அத்துவிதமாய்க் கலந்து விளங்கும் அவனது தன்மையும் புலப்படுத்தப் பெற்றுள்ளமை கண்டு தெளியத்தகுவதாகும். இக்கருத்தினை,

**நள்ளும் கீழுளும் மேலுளும் யாவுளும்**
**எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே (50)**

—திருச்சத. 46

[நள் - நடு; எள்ளும் எண்ணெயும் போல் என்றது எங்கும் வியாபித்திருத்தலைக் குறித்து]

என்ற திருச்சதகத் திருப்பாடலிலும் கண்டு மகிழலாம்.

**அஞ்செழுத்தின் பெருமை:** திருவாசகம் முழுதும் ஓதி உளம் கொண்டவர்கட்கு அஃது ஐந்தெழுத்துப் பெருமை கூற எழுந்த நூல் என்பதை நன்கு தெளிவர். நூல் தொடங்கும் பொழுதே '**நமச்சிவாய வாழ்க**' (சிவபுராணம்) என்று தொடங்குகின்றது.

**போற்றியோ நமச்சி வாய**
**புயங்களே மயங்கு கின்றேன்**
**போற்றியோ நமச்சி வாய**
**புகலிடம் பிறிதொன் றில்லை**
**போற்றியோ நமச்சி வாய**
**புறமெனப் போக்கல் கண்டாய்**
**போற்றியோ நமச்சி வாய**
**சயசய போற்றி போற்றி (66)**

[போக்கல் - போக்காதே]

'போற்றி என்னும் செந்தமிழ்த் திருமறைக்குக் 'காத்தருள்க' 'வணக்கம்' என்ற இரு பொருளும் பொருந்துமிடம் நோக்கிக் கொள்ளப்படும். ஈண்டு இத்திருப்பாடல் ஐந்தெழுத்து மந்திரத்தைப் பாராட்டுகின்றது.

**எண்ணி லேன்திரு நாமவஞ்**
**செழுத்துமென் ஏழைமை யதனாலே (431)**

[ஏழைமை - மடமை]

என்றும்,

**இப்பி றப்பினில் இணைமலர் கொய்துநான்**
**இயல்பொடஞ் செழுத்தோதித்**
**தப்பி லாதுபொற் கழல்களுக் கிடாதுநான் (573)**

[இணைமலர் - பொருத்தமான பூக்கள்]

என்பவற்றால் தாம் அறியாமையினால் ஐந்தெழுத்து ஓதாமைக்கு இரங்குகின்றார். (ஒருவகையில் இது நைச்சியாறு சந்தானம்)

**நானேயோ தவஞ்செய்தேன்**
**சிவாயநமஎனப் பெற்றேன் (553)**

[சிவாயநம - சூக்கும பஞ்சாக்கரம்]

என் அநுபவ முதிர்ச்சிக்கண் சூக்கும பஞ்சாக்கரத்தை வியக்கின்றார். இன்னும் இந்நூல் ஐந்தெழுத்து மந்திரத்தை மறைவாகவும் சொல்லி நம்மை உய்யவைக்கின்றது.

**உடையாள் உன்றன் நடுவிருக்கும்**
**உடையாள் நடுவுள் நீஇருத்தி**
**அடியேன் நடுவுள் இருவீரும்**
**இருப்ப தானால் அடியேனுன்**
**அடியார் நடுவுள் இருக்கும்அரு**
**ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்**
**முடியா முதலே யென்கருத்து**
**முடியும் வண்ணம் முன்னின்றே (376)**

—கோயி. மூத். திருப்.

என்ற திருப்பாடலில் 'சிவயசிவ' என ஆன்ம எழுத்தை இருமருங்கும் சிவசக்திகள் பாதுகாத்து நிற்க இருக்கும் 'முக்தி பஞ்சாக்கரம்' மொழியப்படுகின்றது. இதனை விளக்குவேன்.

நடராசர் நடனமாடுவதற்கு நம்நாட்டில் ஐந்து மன்றுகள் உள்ளன. திருவாலங்காட்டிலுள்ளது மணி (இரத்தினம்) யாலானது; திருத்தில்லையிலிருப்பது பொன்னாலானது; திருக்கூடலி லிருப்பது (மதுரை) வெள்ளியாலானது; திருநெல்வேலியி லிருப்பது செம்பால் (தாமிரம்) ஆனது; திருக்குற்றாலத்திலிருப்பது ஓவியத்தாலானது. இந்த ஐந்தினையும் குறிக்கும் பொருண்மறை 'சிவயசிவ' என்று கூறுவர். இதில் இருபக்கமும் 'சிவ' என்னும் உடையானும், உடையாளுமாகிய இருவரும் நிற்ப 'ய'கரமாகிய ஆருயிர் நிற்கின்றமை புலனாகும். 'சிவயசிவ' என்னும் திருவைந்தெழுத்து மீநுண்மையாகும். மீநுண்மை அதிசூக்குமம். அடியார்கள் உண்மையில் சிவ வண்ணமேயாகின்றனர். மெய்யடியார்கள் அகத்துத் திருவைந்தெழுத்தினை ஆராக் காதலுடன் உணர்விற்கணிப்பதால் உடையான் உடையாள் நடுவுள்ளாகின்றனர். புறத்துச் சிவனாரின் திருவடையாள மாகிய திருவெண்ணீறும் சிவையின் திருவடையாளமாகிய சிவமணியும் பூணுதலால் அவ்விருவர்களின் நடுவிலிருக் கின்றனர். திருநீறும் சிவமணியும் உடலிடம் கொள்ளுவதே 'எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்' (395) என்பதன் மெய்ப்பொருளாகும்.

இன்னும் உடையான் உன்றன் நடு இருக்கும்—அம்மை சிவமாகிய உனக்குள் எழுந்தருளியிருக்கும் என்றது ஐந்தொழில் ஆற்றலிலிருந்தும் நீங்கிப் புறப்பொருளை நோக்காது, அறிவே வடிவமாயிருக்கும் உண்மை நிலையில் சக்தி சிவத்தின் வசமாக இருப்பதை விளக்கியவாறு. உடையாள் நடுவுள் நீ இருத்தி—அம்மையின் நடுவில் நீ இருக் கின்றாய் என்றது புறத்தை நோக்கி, உலகெல்லாமாய் வேறாய் உடனாய் நிற்கும் தடத்த நிலையில் சத்தியின் வசமாய்ச் சிவன் நிற்பதை விளக்கியவாறு. அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதனால் என்றது அருள்வயப்பட்டு நிற்கும்

அடியேன் மனத்து இருவரும் எழுந்தருள்வது ஆனால் என்றவாறு. இத்திருப்பாடல் இத்திருவாசக நூலுக்கு இதய மந்திரமாகப் பாராட்டப் பெறுவது. இதில் ஆன்மா இரு பக்கமும் சிவசக்திகள் பொருந்த 'சிவயசிவ' என இருக்கும் இருதலை மாணிக்கம் விளக்கப் பெற்றுள்ளது. முடியாமுதல்— ஈறுஇல்லாத முதல்வன். இங்ஙனம் எடுத்த இடங்கள் தோறும் ஐந்தெழுத்தின் பொருளும் அமைதியுமே காட்டிச் செல்வதை அறியலாம்.

**சிவாநுபவம் :** கதிரவன் எழுந்தவுடன் உலகவிருள் நீங்கி கண்ணறிவு விளங்கப் பெற்று எல்லாப் பொருள்களும் கண்ணுக்கு இலக்காகின்றன. அதுபோல் ஆன்மாவுக்கே இறைவனது அருளொளி தோன்றிய அளவில் அதனைப் பற்றியிருந்த ஆணவ இருள் அகன்று மறைய அவ்அருளொளி யின் துணையால் ஆன்மா தன்னையும் தன் முதல்வனையும் ஏனைய பொருள்களின் நிகழ்ச்சியினையும் உள்ளவாறு காணும் ஆற்றலைப் பெறுகின்றது. பளிங்கினில் விளங்கித் தோன்றிய மலர்களின் வடிவும் நிறமும் கதிரவன் வானின் உச்சியை அடையும்போது மெல்ல மெல்லக் குறைகின்றது; அஃது உச்சிக்கு வரும்போது முற்றிலும் இல்லையாய் ஒழிகின்றது. அதுபோல இறைவனது அருள்விளக்கம் ஆருயிரின்கண் பதியுந்தோறும் பதியுந்தோறும் முன் ஆன்மாவைப் பற்றியிருந்த மாயை கன்மங்களின் சார்பும் அணுவணுவாய்த் தேய்ந்து பின்னர் அவ்வருளொளி ஆன்மாவை முற்றிலும் கலந்த நிலையில் அவற்றின் பற்று ஆன்மாவை விட்டு முற்றிலும் இல்லையாய் ஒழிந்து போய் விடும். இவ்வாறு மாயை கன்மங்களின் சார்பு முற்றும் கெடச் சிவனொளியில் ஒன்றித்துக் காணும் தூய நல்லறிவின ராகிய சிவஞானிகட்கு மெய்ப்பொருளாகிய சிவபரம் பொருளைத் தவிர உயிராகிய தம்மைப் பற்றிய உணர்வும், ஏனைய உலகப் பொருள்களும் தோன்றா தொழியும்.

இவ்வுண்மையினைச் சிவனருளில் திளைக்கும் திருவாதவூரடிகள் தாம் பெற்ற சிவாநுபவத்தில் வைத்துப் போற்றுகின்றார் ஒரு திருப்பாடலில்.

**இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்(து)**
**எழுகின்ற ஞாயிறே போன்று**
**நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்**
**நீயலால் பிறிதுமற் றின்மை**
**சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்**
**திருப்பெருந் துறையுறை சிவனே**
**ஒன்றும்நீ யல்லை அன்றியொன் றில்லை**
**யாருன்னை அறியகிற் பாரே (392)**

—கோயில்திருப்.7

[கடிந்து - நீங்கி; உள்ளம் - ஆன்மா]

என்பது பாடல். "எளியேன் அகத்திருள் கடிதற்பொருட்டு என் உள்ளத்து வெளிப்பட்டுத் தோன்றியருளும் பேரறிவுக் கதிரே! புறத்திருள் கடியும் ஞாயிற்றினைப் போன்று அகத்திருள் கடிந்து நின்ற மெய்ப்பொருளே, நின் திருவருளால் அத்தன்மையினை வேறொரு நினைப்பின்றி அதுவே நினைப்பாக நின்று நினைந்தேன். நின்னுடைய நிலைக்களமும் நின்செறிவினுள் அடக்கமும் அல்லாத எப்பொருளையும் எவரும் காணார் என்ற உண்மை புலனாயிற்று. அஃதாயுமிடத்து உன் இருப்பு மிகவும் நுண்மையாதலால் ஆய்ந்தாய்ந்து செல்லச் செல்ல அணு அணுவாக நுணுகி நுணுகி ஒன்றாந் தன்மையினை உணர்ந்தேன். திருப்பெருந்துறையுறை சிவனே, அப்பொருள்களில் ஒன்றும் நீ இல்லை. அப்பொருள்களுள் ஒன்றும் உன்சார்பின்றித் தோன்றுவன அன்று. இந்நிலையில் உனது கலப்பு நிலையிலும் கடந்த நிலையிலும் நீ நிற்கும் அரிய நிலையினை நீயே நின்னருளால் உணர்த்தினாலன்றி யாவர் அறிய வல்லார்?" என்பது இப் பாடலின் பொருள்.

பொருள்களின் பருமை நுணுகி நுணுகி ஒடுங்கிச் செல்லுந்தோறும் அவற்றிற்கு இடங்கொடுத்து நிற்கும் சார்பும் நுணுக்கமாகவே அமையும். கரும்பின் பருமை எங்கணும் நிறைந்துள்ள சாறும் அக்காலத்துப் பருமை யாகவே நிறைந்து நிற்கும். அத்துடன் விரவி நிற்கும் இனிமைப் பண்பும் அச்சாறு முழுதும் பரந்தே நிற்கும். பின்பு அச்சாறு பிழிந்தெடுக்குங்கால் பரப்பு நுணுகிய நிலையினை எய்தும். அப்பொழுது இனிமைப் பண்பும் அதற் கேற்றவாறு நுணுகிய நிலையினை எய்தும். மேலும் பாகு ஆகும் போதும், கண்டு ஆகும்போதும் மேலும் மேலும் நுணுக்கம் எய்தும். அப்பொழுதெல்லாம் இனிமைப் பண்பும் அவ்வவற்றிற்கியைந்தவாறு நுணுக்கம் எய்தும். இம் முறையே இறைவன் பொருள்களுடன் இயைந்து ஆண்டாண்டு நுணுக்கம் எய்துவதற்கு ஒப்பாம் என்பதாகும். இறைவன் உயிர்ப் பொருள்களுடனும் ஏற்றவாறு இயைந்து இயக்கும் இயல்பே நுணுக்கம் என்பதாகும். 'சென்று சென்றணுவாய் தேய்ந்துதேய்ந்தொன்றாம்' என்னும் தொடர் இறைவனது இந்த இயல்பினை உணர்த்துவ தாகும்.

இறைவனது திருவருளுக்குரியவராகிய சிவஞானிகள் இறைவனுடன் பிரிப்பின்றி ஒன்றியுடனாகும் வீட்டு நிலையில் இறைவனும் உளன்; ஆருயிரும் உள்ளது; முன் உயிரைப் பற்றி நின்று பின் அப்பிணிப்பினின்றும் விலகிச் செயலற்று அடங்கிய மலமாயைகன்மங்களும் உள்ளன. முன்பெல்லாம் உயிரை இறுகப் பிணித்து நின்ற மும்மலப் பிணிப்பு அவ் வுயிரை விட்டு நீங்கினமையால், உயிர் இறைவனது திருவருளில் மூழ்கி அவ்வருளே மேற்பட்டுத் தோன்றத் தான் அதன்கண் பிரிவற இயைந்து பேரின்பம் நுகர்ந்திருக்கும். அவ்வளவே அவ்வுயிரின் முன்னைய நிலைக்கும் பின்னைய நிலைக்கும் உள்ள வேறுபாடாகும்.

இறைவன் திருவருளில் மூழ்கி நிற்பார்க்குப் புறத்தே யுள்ள புறப்பொருள்களைப் பற்றிய உணர்வும், தம்மொடு உடனாய் நிற்கும் உடம்பைப் பற்றிய உணர்வும், தமக்கு அகக்கருவிகளா யமைந்த மனம் முதலியவற்றைப் பற்றிய உணர்வும், உயிராகிய தான் ஒரு பொருள் உண்டு என எண்ணும் தன்னைப்பற்றிய உணர்வும் நிகழாதவண்ணம் அவையனைத்தும் மறக்கப்பட்டு மறைந்தொழிதல் இயல்பு. இறையருளால் மலம்மாயை கன்மங்களின் பிணிப்பு நீங்கிய பொழுதே அவற்றோடு உடன் நிகழும் இவ்வுணர்வுகளும் அணுவணுவாய்த் தேய்ந்து தம்மைவிட்டு ஒழியும். இதனை,

வான்கெட்டு மாருதம்
 மாய்ந்தழல்நீர் மண்கெடினும்
தான்கெட்ட லின்றிச்
 சலிப்படையாத் தன்மையனுக்(கு)
ஊன்கெட்டு உயிர்கெட்டு
 உணர்வுகெட்(டு) என் உள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித்
 தெள்ளேணம் கொட்டாமோ? (252)
—திருத்தெள்-18

[வான் - ஆகாயம்; கெட்டு - ஒடுங்கி; தான் – சிவம்; சலிப்பு - அசைதல்; நான் - தற்போதம்]

என்ற திருப்பாடலில் அடிகள் விளக்கியுள்ளார். இக் கருத்தினைத் திருமூலரும் தெளிவாக்கியுள்ளார்.[5] இந் நிலையைத் திருவதிகை மனவாசகம் கடந்தாரும்,

முத்திதனின் மூன்று முதலும் ஒழியக்கேள்
சுத்தவது போகத்தைத் துய்த்தலணு—மெத்தவே
இன்பம் கொடுத்தலிறை யித்தைவிளைவித்தல்மலம்
அன்புடனே கண்டுகொ ளப்பா. —உண்மை விளக்கம் 5

5. திருமந். 2951, 2952 காண்க.

என்ற வெண்பாவால் தெளிவாக விளக்குவர். உலக நுகர்ச்சியில் பதிந்த உணர்வோடு நிற்கும் உயிர்க்குச் சிவம் விளங்காது; சிவபோகத்தில் திளைக்கும் உணர்வோடு கூடிய உயிர்க்கு உலகம் தோன்றாது. இவ்வாறு கட்டு நிலையிலும் வீட்டு நிலையிலும் இருதிறப்பட்டுச் சார்ந்ததன் வண்ணமாதல் உயிரின் இயல்பு. இந்நிலையைச் சித்தாந்திகள் 'பசு பாசத்தில் அழுந்தி நிற்கும் நிலை பெத்தம்; அது பதியில் அழுந்தி நிற்கும் நிலை முத்தி' என விளக்குவர். இந்த அத்துவிதக் கலப்புக்குத் தாள்+தலை=தாடலை என்னும் சொற்புணர்ச்சியைக் காட்டாக்குவர்.

மேலும் இந்நிலை,

> **மரத்தை மறைத்தது மாமத யானை**
> **மரத்தின் மறைந்தது மாமத யானை**
> **பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்**
> **பரத்தின் மறைந்தது பார்முதல் பூதமே** (2290)

என்ற திருமந்திரத்தினாலும் தெளிவாகும். திருவள்ளுவர்,

> **நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்(கு)**
> **இனத்தியல்ப தாகும் அறிவு** (குறள்-452)

என்று பொதுமுறையில் விளக்குவர். தாயுமான அடிகளும்,

> **யாதொன்று பற்றின்அதன் இயல்பாய் நின்று**
> **பந்தமறும் பளிங்கனைய சித்து நீ**—ஆகாரபுவனம்-18

என்று சிறப்பு முறையில் தெளிவாக்குவர்.

சிவஉணர்வாய் நிற்றல் என்பது மலம் மாயை கன்மங்களில் ஒன்றினிடத்தும் ஒரு சிறிதும் நினைவு செல்லாமல் உயிராகிய தன்னையும் நினையாமல் சுட்டுணர்வு அறச் சிவம் ஒன்றையே நினைத்திருத்தல். இங்ஙனம் சிவஉணர்வில் அழுந்தி நிற்கும் உயிர் இறைவனது திருவடிஞானத்தில் சிவமே பெறும் திருவுடையதாகத் திகழும். இதனை,

திருவடி ஞானம் சிவமாக்கும் (திருமந் 1598)

என்ற தொடரால் திருமூலர் தெளிவாக விளக்குவார். மதுரைச் சிவப்பிரகாசர் தம் சிவப்பிரகாச உரையில் 'தற்சேட்டைக் கெடநின்றதே சிவாநுபவம்' என்று கூறி இதற்குப் பிரமாணமாக,

தன்னை மறந்தாள் தன்னாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே (6. 25 : 7)

என்ற அப்பர் தேவாரத்தையும்,

ஊன்கெட்(டு) உயிர்கெட்(டு) உணர்வு கெட்(டு) என் உள்ளமும் போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ (252)

என்ற திருவாசகத்தையும் காட்டுவர்.

மணிவாசகப் பெருமான் தம்மைப் பிணித்துள்ள பசுத் தன்மை பாசத்தன்மைகளை அறுத்து இறைவன் தன் திருவடிக் கண்ணே சேர்த்துக் கொண்டதையும் அங்ஙனம் தமக்குத் திருவடி நல்கியதே தம்மைச் சிவமாக்கியாண்டமை யாதலையும்,

பத்திமையும் பரிசுமிலாப்
பதிபாசம் அறுத்தருளி
.................................
சித்தமெனும் திண்கயிற்றால்
திருப்பாதம் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் (479)

—கண்டபத்-7

எனவும்,

சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி எனையாண்ட
அத்தன்எனக் கருளியவாறு (648)

—அச்சோப்பதி-1

எனவரும் திருவாசகத் தொடர்களில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். ஆன்மா இங்ஙனம் சிவத்தோடு ஒன்றியைந்து சிவமாகிய நிலையிலும் இறைவனுக்குரிய ஐந்தொழில் இயற்றல் முதலியவற்றைச் செய்யாததாய் அம்முத்தி நிலையிலும் இறைவனுக்கு அடிமையாய் சிவாநுபவம் ஆகிய நுகர்ச்சியொன்றிற்கே உரியதாய் 'சிவமாக்கி' என்ற அளவில் அமையாது 'எனையாண்ட' என அடிகள் விதந்து கூறும் சொற்குறிப்பால் இனிது புலனாகும்.

**இமைப்பொழுதும் என்னெஞ்சின்**
**நீங்காதான் தாள்வாழ்க.** —சிவபு-2.

# பின்னிணைப்பு (1)

## பயன்பட்ட நூல்கள்


ஆழ்வார்கள் : நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் (கி. வேங்கடசாமி ரெட்டியார் 2ஆம் பதிப்பு (1981), திருவேங்கடத்தான் திருநெறிமன்றம், 31, பெருமாள் முதலித் தெரு, இராயப்பேட்டை, சென்னை-600014)

சிவஞான முனிவர் : காஞ்சி புராணம் (கழக வெளியீடு)

சிவபாத சுந்தரம், சோ : மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில் (வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை-600017) —இரண்டாம் பதிப்பு-1984

சுப்பு ரெட்டியார் ந : சைவசமய விளக்கு(பாரி நிலையம், 184, பிரகாசம் சாலை, சென்னை-600108) (முதற்பதிப்பு1984)

தாயுமான அடிகள் : தாயுமான சுவாமிகள் பாடல் (தருமையாதீனம், மயிலாடுதுறை-1965)

தொல்காப்பியர் : தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணர் உரை, கழக வெளியீடு.

பரஞ்சோதியார் : திருவிளையாடற்புராணம் (வேங்கடசாமி நாட்டார் உரை, கழக வெளியீடு)

பாரதியார் : கவிதைகள் (எஸ் ஆர். சுப்பிரமணிய பிள்ளை 9, பிலிப்ஸ் தெரு, சென்னை -.1)

மாணிக்கவாசகர் : திருவாசகம் (தண்டபாணி தேசிகர் பதிப்பு, தருமையாதீன வெளியீடு-1949

மாணிக்கவாசகர் : திருவாசகம் தவத்திரு சித்பவாநந்த அடிகள் பதிப்பு(தபோவனப் பிரசுராலயம், திருப்பராய்த்துறை அஞ்சல், திருச்சி மாவட்டம்)-1968

மெய்கண்டார் முதலியோர் : மெய்கண்ட சாத்திரம் பதினான்கு (2 பகுதிகள்) கழக வெளியீடு

வெள்ளைவாரணன், க. : பன்னிரு திருமுறை வரலாறு - I (அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அண்ணாமலைநர் 1962)

வெள்ளைவாரணன், க. : பன்னிரு திருமுறை வரலாறு - II (அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

# பின்னிணைப்பு (2)

## அடிகள் கையாண்ட பழமொழிகள்

ஒரு நாட்டின் பண்பாட்டை உணர்த்துவன அந்நாட்டு மக்கள்பால் அடிபட்டுவரும் பழமொழிகள். அவை நுண்ணிய தெள்ளிய கருத்துகளைக் கொண்டுள்ளன. மிக உயர்ந்த கருத்துகளை எளிய பழமொழிகளின் வாயிலாகப் பெரியோர்கள் வழங்குவதுண்டு. செய்யுளில் இவை கையாளப்படும் போது அதன் நடைக்கேற்ப மாற்று வடிவத்துடன் வெளிப்படும். திருவாசகத்தில் பயின்று வரும் பழமொழிகள் அகர வரிசையில் பாட்டெண்ணுடன் ஈண்டுத் தொகுக்கப் பெறுகின்றன. பாட்டெண் தருமபுரப் பதிப்பில் உள்ளபடி.

அடி அகலா நிழல்பொல
ஆள்வரிலி மாடு போல (382)
ஆற்றங்கரை மரமும் அரசறிய வாழ்ந்த வாழ்வும் (107)
இருதலைக் கொள்ளி எறும்பினையொத்து (113)
இரைதேர் கொக்கு போல (380)
உண்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் (173)
உள்ளங்கை நெல்லிக்கனி (3.162)
ஊராமிலைக்கக் குருட்டா மிலைத்தது போல் (91)
எட்டும் இரண்டும் அறியாதவன் (53)
எறும்பிடை அகப்பட்ட நாங்கூழ் போல (129)
கடல்நீரை நாய் நக்கியது போல (117)
கரையில்லா வெள்ளம் போல (390)
கல்லில் நார் உரித்தாற்போல (4-97, 243, 288)
காலமெல்லாம் பாழுக் கிரைத்தல் (325) (காலம் - நீர்)
குருட்டுக் காளை ஊர் சுற்றியது போல
குழந்தை கையில் பொற்கிண்ணம் (96)

கொடிறும்பேதையும் கொண்டதுவிடா (4-67)
கொழுகொம்பில்லாக் கொடிபோல (124)
சிறியோர் பிழையைப் பெரியோர் பொறுத்தல் (66, 110)
தாம் வளர்த்த நச்சு மரமாயினும் கொல்ல
மாட்டார்கள் (100)
தாயினாற் தள்ளப்பட்ட கன்றுபோல - 224
நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாற்போல
நாயைச் சிவிகையில் ஏற்றுவித்தல் (222, 636)
நாயைப் பல்லக்கில் வைத்தாற் போல (656)
நாய் பெற்ற செல்வம் போல் (224)
நாய்க்குப் பொற்றவிசு இட்டாற்போல (548)
நாய்மேல் தவிசு இட்டாற்போல (234)
நிழலுக்குப் பயன்படாத காட்டு மரம் போல (513)
நீர்வறள மீன் துவண்டாற் போல (130)
நெய்க்குடத்தை எறும்பு மொய்த்தாற் போல (128)
நெருப்பிடைப் பட்ட மெழுகுபோல - (399 - 423)
பலாப்பழத்தில் ஈ மொய்த்தாற் போல (150)
பாவோடு குழல் போல (413)
பிரைசேர் பாலின் நெய் போல (380)
மத்துறு தயிரு போல (133, 134)
மூங்கிற் புதரில் தீப்போல (140)
வல்வினை வாயில் மண்ணைப் போடுதல் (277)
வலையிடைப்பட்ட மான் போல (144)
வாழைப் பழம் போல மனம் கனிதல் (138)
விளக்கில் வீட்டில் பூச்சி போல (118)
வெள்ளத்தில் நாவற்றியது போல (109)

# பின்னிணைப்பு - (3)

## அருளிச் செயல்களில் புராணவரலாறுகள்

வரலாறு நமக்குப் பழைமையை உணர்த்துவது, புராண வரலாறுகள் இறைவன் நமக்கு அருளிய பேருதவிகளைப் பழைய நிகழ்ச்சிகள்மூலம் நினைவூட்டுவன. இவற்றை எடுத்தாளும் தோத்திரப் பாடல்கள் அன்புக் கருவூலங்கள் ஆகின்றன. திருவாசகத்தில் வருவன ஈண்டுப்பாட்டெண் களுடன் காட்டப் பெறுகின்றன (தருமைப் பதிப்புப்படி).


அடிகள் சோதியிற் கலந்தது- ·2-132
அட்டமா சித்தி அருளியது - 472
அந்தணனாகி ஆட்கொண்டது- 3-149, 355
அருச்சுனர்க்காகப் பன்றியை வெருட்டியது - 564
அரையிலும் கையிலும் பாம்பணிந்தது—213.
அழலுருக் கொண்டது 260, 324, 353
அறம் உரைத்தது 270, 274, 287
அனலேந்தியது. 191
ஆகமம் அருளியது. 2-20
இந்திரனைத் தோள் நெரித்தது - 189
இந்திரன் பூங்குயிலாகத் தப்பியோடுதல்—302
இலக்குமி இறைவழிபாடு இயற்றியது - 141
இலக்குமி கடலில் தோன்றியது - 141
இயமனை உதைத்தது - 129, 212, 323, 404, 462.
இரசவாதம் செய்தது - 250
இறைவன் குழந்தையானது - 293
உக்கிரகுமாரனுக்கு வேல் கொடுத்தது - 2-29
உத்தர கோசமங்கையில் உபதேசித்தது - 2-49
உபமன்யுவுக்குப்பாற்கடல் ஈந்தது - 310
உமையைத்தழுவிக் கொண்டது - 460
எச்சன் தலையை அரிந்தது - 189

ஏனக்குருளைக்கு அருளியது - 4-166
ஐயாற்றில் தன்னைத்தானே பூசித்துக் கொண்டது -2-85
கங்காளத்தை அணிந்திருப்பது 265
கடலில் நஞ்சு அமுதுசெய்தது - 132
கண்ணப்பர்பூசை செய்தது - 315
கரிக்குருவிக்கு உபதேசித்தது - 4-209
கலைமகள் மூக்கு இழந்தது - 306, 325
கல்லால நிழலில் வேதம் அருளியது - 287
கழல்காட்டி ஆட்கொண்டது - 595, 598
காமன் உடல் இழந்தது - 323
குடர் மாலை சூடியது - 134
குதிரைவிற்றது - 4, 76, 2-93
குரு உருவங் கொண்டது - 2.93, 4.76
சடையில் கங்கை தரித்தது - 4.14, 25, 58
சடையில் மதி அணிந்தது - 105, 130, 139
சண்டேசர் தம் தாதைத்தாளை வெட்டியது - 319
சந்திரன் கலை தேய்ந்தது - 189, 323
சந்திரன் சாபத்தைத் தீர்த்தது - 323, 509
சந்திரன் முகம் தேய்ந்தது - 306
சந்திரனுக்குத் தண்மை வைத்தது - 3-21
சலந்தரனைக் கொன்றது - 282
சாமந்தனுக்குப் படைகள் அனுப்பியது - 2-67
சிங்கத்தோலை உடுத்தது - 4-190
சூரியனுக்குச் சோதிவைத்தது – 3.20, 119
சூரியன் பல் இழந்தது - 189, 212, 308, 323
சோழனை மடுவில் வீட்டியது - 2.65
தக்கன் ஆட்டுத்தலையைப் பெற்றது - 304
தக்கன் தலையறு பட்டது - 259
தக்கன் புண்பட்டது - 278
தக்கன் வேள்வியில் தேவர்கள் சிதறுண்டது - 189

தசக்கிரீவன் கைகளை நெரித்தது - 12 3
தசக்கிரீவன் தோள்களை நெரித்தது - 563
தண்ணீர்ப்பந்தல் வைத்தது - 2-59
தவமுனிவர்க்கு ஒளித்தது - 3.136
திரிபுரம் எரித்தது- 114, 198, 211, 212, 270, 280, 294, 295, 295, 435, 449, 462, 592,
திருமால் அவிர்ப்பாகம் கொண்டது- 299
திருமால் இடபமாய்த் தாங்கியது - 69, 269, 506
திருமால் இறைவனைத் தேடியது- 4.4, 175, 327, 334, 353, 633
திருமால் உலகளந்தது- 4.2
திருமால் சக்கரம் பெற்றது - 272, 322
திருமால் பன்றியாய்த் திருவடிதேடியது 4.6; 236
திருமாலும் பிரமனும் இறைவன் அடிமுடியைத்தேடியது
2-35, 2-115, 3-38, 3-182, 11, 103, 159, 174, 178, 186, 192, 215, 234, 237, 239, 241, 248, 260, 286, 291, 314, 324, 396, 399, 403, 405, 408, 436, 438, 440, 447, 449, 454, 456, 459, 499, 515, 554,619626
திருமாலைக் காத்தது - 3-14
திருவுருக் காட்டி ஆட்கொண்டது - 180, 643
தில்லையில் திருக்கூத்தாடியது - 1-90, 2-1, 2-141, 254
நரியைக்குதிரையாக்கியது 2-36, 544, 647
நஞ்சுண்டது - 4-173, 73, 111, 122, 132, 136, 150, 153, 154, 211, 254, 262, 273, 284, 286, 331, 398, 402, 522, 528, 546
நள்ளிருளில் நட்டமாடியது - 1-69
நாய்கள் சூழச் சென்றது - 592
நால்வேதங்களை அரைஞாணாகக் கொண்டது - 256
நீலகண்டரானது - 136, 283
நால்வர்க்கு அறம் உரைத்தது - 270, 274
நெஞ்சில் திருவடிவைத்தது - 282
பகன்கண் இழந்தது - 305
பதஞ்சலிக்குப் பரமநாடகம் அருளியது 2-37

பன்றிக்குட்டிகளுக்குப் பால் அருத்தியது - 166
பன்றித் திருமேனி கொண்டது - 470
பாண்டியனுக்குப் பரகதி அளித்தல் 4-214
பாண்டியனாகித் தமிழைப் பாதுகாத்தது - 184
பாம்பு சந்திரனைக் கண்டு சுருக்கிக் கொண்டது - 146
பாம்பைக்கண்ட பிறை பயந்து கங்கையில் மூழ்குதல்-146
பாற்கடலில் விடம் எழுந்தது - 136
பிட்டுக்கு மண் சுமந்தது - 2-471, 182, 467
பிரமனைப் படைத்தது - 3-14,
பிரமன் இறைவனைத் தேடியது-3-126, 404
பிரமன் கபாலத்தை அளித்தது -212
பிரம்படிபட்டதனால் மண் சுமந்தது - 182, 290
பிரமன் தலை இழந்தது- 306, 311, 323
புல்வாய்க்குப் புலிப்பால் கொடுத்தது -4.207
பெருந்துறையில் சோதியிற்கரந்தது - 2-55
மகேந்திரத்தில் ஆகமம் தோற்றுவித்தது - 2.9,10
மன்மதனை எரித்தது - 450
மூன்றுருத்தாங்கியது - 280
மேருவை வில்லாகக் கொண்டது - 462
மொக்கணி சிவலிங்கமானது -2-33
யானையைக் கொன்றது -135, 212
யானைத்தோல் போர்த்தது -128, 153, 212,293,454
வளையல் விற்றது - 596
வண்டோதரிக்கு அருள் புரிந்தது - 347, 591
வண்ணங்காட்டி வடிவு காட்டி திருவடி காட்டி ஆட்கொண்டது -29, 32
வந்திக்காக மண்சுமந்தது - 2-87
வலைவீசி மீன்பிடித்தது - 2-17, 589
விண்ணும் மண்ணும் படைத்தளித்தது - 2-4
வீரபத்திரனால் புண்பட்டது - 278
வெள்ளை யானைக்குச் சாபந்தீர்த்தது - 246
வேடன் ஒருவனுக்கு வாள் படை அளிப்பித்தது - 231,32
வேடுருவாகி மகேந்திரத்திருந்தது - 590, 592
வேத உண்மை உபதேசித்தது - 147

# பின்னிணைப்பு - 4

## மணிவாசகப் பெருமான் வழிபட்ட திருத்தலங்கள்

| தலம் | பதிகம் | பக்கம் |
|---|---|---|
| அண்ணாமலை | திருவெம்பாவை (7) | 185 |
| | திருவம்மானை (8) | 200 |
| ஆடானை | பதிகம் இல்லை | 21 |
| ஆரூர் | திருப்புலம்பல் (39) | 168 |
| ஆலவாய் | குழைத்தபத்து (33) | 138 |
| | அருட்பத்து (29) | 142 |
| | அடைக்கலப்பத்து (24) | 144 |
| | குயிற்பத்து (18) | 146 |
| | அன்னைப்பத்து (17) | 149 |
| | திருவேசறவு (38) | 151 |
| | சிவபுராணம் (1) | 159 |
| ஆவடுதுறை | பதிகம் இல்லை | 167 |
| இடைமருதூர் | பதிகம் இல்லை | 165 |
| உத்தரகோசமங்கை | நீத்தல் விண்ணப்பம் (6) | 158 |
| கச்சி ஏகம்பம் | பதிகம் இல்லை | 178 |
| கழுக்குன்றம் | திருக்கழுக்குன்றப் பதிகம் (30) | 131 |
| கழுமலம் (சீகாழி) | பிடித்த பத்து (37) | 172 |
| காளையார் கோயில் | பதிகம் இல்லை | 21 |
| சிதம்பரம் (தில்லை) | கீர்த்தித்திருவகவல் (2) | 219 |
| | திருவண்டப் பகுதி (3) | 221 |
| | போற்றித் திருவகவல் (4) | 225 |
| | திருச்சாழல் (12) | 227 |
| | திருப்பொன்னூசல் (16) | 232 |
| | திருத்தசாங்கம் (19) | 234 |
| | கோயில் மூத்த திருப் | |

| | | |
|---|---|---|
| | பதிகம்(21) | 235 |
| | கண்ட பத்து (31) | 240 |
| | அச்சப் பத்து (35) | 242 |
| | குலாப்பத்து (40) | 244 |
| | திருப்படை எழுச்சி (46) | 249 |
| | யாத்திரைப் பத்து (45) | 253 |
| | திருப்படையாட்சி (49) | 257 |
| திருப்பெருந்துறை (கோகழி) (குருந்தமரம்) | அற்புதப் பத்து (41) | 39 |
| | சென்னிப்பத்து (42) | 40 |
| | அச்சோப் பதிகம் (51) | 43 |
| | அதிசயப்பத்து (26) | 45 |
| | கோயில் திருப்பதிகம் (22) | 47 |
| | புணர்ச்சிப் பத்து (27) | 49 |
| | செத்திலாப் பத்து (23) | 51 |
| | பிரார்த்தனைப் பத்து (32) | 53 |
| | ஆசைப் பத்து (25) | 54 |
| | உயிருண்ணிப் பத்து (34) | 55 |
| | வாழாப் பத்து (28) | 57 |
| | எண்ணப்பதிகம் (44) | 58 |
| | பாண்டி விருத்தம் (36) | 59 |
| | திருவார்த்தை (43) | 61 |
| | திருவெண்பா (47) | 64 |
| | பண்டாய நான்மறை(48) | 66 |
| | ஆனந்தமாலை (50) | 68 |
| திருப்பெருந்துறை (கோகழி) (நகர்) | திருப்பொற்சுண்ணம் (9) | 73 |
| | திருக்கோத்தும்பி (10) | 77 |
| | திருத்தெள்ளேணம் (11) | 80 |
| | திருப்பூவல்லி (13) | 82 |

| | | |
|---|---|---|
| | திருவுந்தியார் (14) | 85 |
| | திருத்தோணோக்கம் (15) | 87 |
| | திருப்பள்ளியெழுச்சி (20) | 89 |
| | திருச்சதகம் (5) | 93 |
| முதுகுன்றம் | பதிகம் இல்லை | 176 |
| வெண்ணெய் நல்லூர் | பதிகம் இல்லை | 176 |


குறிப்பு : இவர் வரலாறு கூறும் புராணங்களில் இவை மட்டிலுமே நேரில் சென்று வழிபட்டதாகக் குறிப்பிடப் பெற்றுள்ளன, இவை தவிர அருளிச்செயல்களில் அடியிற் கண்ட தலங்கள் குறிப்பிடப் பெற்றுள்ளன. (25 தலங்கள்)

1. ஈய்ங்கோய்மலை
2. ஐயாறு
3. ஓரியூர்
4. கடம்பூர்
5. கல்லாடம்
6. கயிலை
7. குற்றாலம்
8. சந்திர தீபம்
9. சாந்தம் புத்தூர்
10. சிராப்பள்ளி
11. சிவபுரம்
12. துருத்தி
13. தேவூர்
14. நந்தம்பாடி
15. பட்டமங்கை
16. பராய்த்துறை
17. பழனம்
18. பனையூர்
19. பாண்டூர்
20. புறம்பயம்
21. பூவணம்
22. மகேந்திரமலை
23. வாஞ்சியம்
24. வெண்காடு
25. வேலம்புத்தூர்

## பேராசிரியர்

## டாக்டர் ந. சுப்பு ரெட்டியாரின் நூல்கள்

**ஆசிரியம் :**

1. *தமிழ் பயிற்றும் முறை*
2. *கவிதை பயிற்றும் முறை*
3. *அறிவியல் பயிற்றும் முறை*
4. *கல்வி உளவியல் கோட்பாடுகள்*
5. *யுனஸ்கோ : அறிவியல் பயிற்றும் மூலமுதல் நூல்*

**இலக்கியம் :**

6. *கவிஞன் உள்ளம்*
7. *காலமும் கவிஞர்களும்*
8. *காதல் ஓவியங்கள்*
9. *அறிவுக்கு விருந்து*
10. *முத்தொள்ளாயிர விளக்கம் (பதிப்பு)*
11. *பரணிப் பொழிவுகள்*
12. *அறிவியல் தமிழ்*
13. *திருக்குறள் கருத்தரங்கு மலர்—1974 (பதிப்பு)*
14. *கம்பனில் மக்கள் குரல்*
15. *காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது (பதிப்பு)*
16. *திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்*
17. *தமிழ் இலக்கியங்களில்—அறம் நீதி, முறைமை*

**சமயம், தத்துவம் :**

**(அ) விளக்க நூல்கள் :**

18. முத்திநெறி (தமிழக அரசு பரிசு பெற்றது)
19. சிலநோக்கில் நாலாயிரம்
20. வைணவமும் தமிழும்
21. சைவசமய விளக்கு
22. ஆன்மிகமும் அறிவியலும்
23. வைணவ உரைவளம் (ஐதிகம், இதிகாசம், சம்வாதம்)
24. கலியன் குரல்
25. கீதைக்குறள் (பதிப்பு)
26. கண்ணன் எழில் காட்டும் கவிதைப் பொழில் (பதிப்பு)
27. ஆண்டாள் பாவையும் அழகுதமிழும் (பதிப்பு)
28. கீதைப்பொழிவுகள்
29. கண்ணன் துதி
30. இராமர் தோத்திரம்

**(ஆ) திருத்தலப் பயண நூல்கள் :**

31. மலைநாட்டுத் திருப்பதிகள்
32. தொண்டைநாட்டுத் திருப்பதிகள்
33. பாண்டிநாட்டுத் திருப்பதிகள்
34. வடநாட்டுத் திருப்பதிகள்
35. சோழநாட்டுத் திருப்பதிகள்-முதற்பகுதி (த.அ.ப. பெற்றது)
36. சோழநாட்டுத் திருப்பதிகள்-இரண்டாம் பகுதி (ஷை)
37. தம்பிரான் தோழர்
38. நாவுக்கரசர்
39. ஞானசம்பந்தர்
40. மாணிக்கவாசகர்

**திறனாய்வு :**

41. பாட்டுத் திறன்
42. கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்
43. அகத்திணைக் கொள்கைகள்
44. புதுக்கவிதை-போக்கும் நோக்கும்
45. கண்ணன்பாட்டுத் திறன்
46. பாஞ்சாலி சபதம்-ஒரு நோக்கு
47. பாரதீயம் (த.அ.ப. பெற்றது)
48. குயில்பாட்டு-ஒரு மதிப்பீடு
49. உயிர்தந்த உத்தமன் (பதிப்பு)
50. ஆழ்வார்கள் ஆரா அமுது
51. விட்டு சித்தன் விரித்த தமிழ்
52. சடகோபர் செந்தமிழ்
53. பரகாலன் பசுந்தமிழ்

**வரலாறு தன் வரலாறு :**

54. நினைவுக் குமிழிகள்-முதற் பகுதி
55. நினைவுக் குமிழிகள்-இரண்டாம் பகுதி
56. நினைவுக் குமிழிகள்-மூன்றாம் பகுதி
57. நினைவுக் குமிழிகள்-நான்காம் பகுதி
58. நினைவுக் குமிழிகள்-ஐந்தாம் பகுதி
59. வேமனர்
60. குரஜாட
61. மேகானி
62. சி.ஆர். ரெட்டி
63. தாயுமான அடிகள்
64. பட்டினத்தடிகள்
65. வடலூர் வள்ளல்
66. பிரதிவாதி பயங்கரம்
67. மலரும் நினைவுகள்

**அறிவியல் :**

68. மானிட உடல்
69. அணுவின் ஆக்கம்
70. இளைஞர் வானொலி
71. இளைஞர் தொலைக்காட்சி
72. அதிசய மின்னணு
73. நமது உடல் (த.அ.ப. பெற்றது)
74. இராக்கெட்டுகள் (த.அ.ப. பெற்றது)
75. அம்புலிப் பயணம்
76. தொலை உலகச் செலவு
77. அணுக்கரு பௌதிகம் (செ.பல்கலைக் கழகப் பரிசு பெற்றது)
78. இல்லற நெறி
79. வாழையடி வாழை
80. அறிவியல் விருந்து (தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றது)
81. வானமண்டலக் காட்சி

**ஆராய்ச்சி :**

82. கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி
83. வடவேங்கடமும் திருவேங்கடமும்
84. Religion and Philosophy of Nalayiram with Special Reference to Nammalvar
85. Studies in Arts and Sciences : (61st Birth Day Cammemoration Volume)
86. Collected Papers.

# பிழை—திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 5 | 10 | சம்புபாதாசிருத ருக்கும் | சம்புபாதாசிருத யருக்கும் |
| 47 | அ.கு-1 | திருமபுரப் | தருமபுரப் |
| 59 | 18 | பாடுவோம் | படுவோம் |
| 93 | 8 | சதகம | சதகம் |
| 97 | 23 | குறிப்பிட்டும் | குறிப்பிடும். |
| 106 | 8 | கிரிப்ப | கிருப்ப |
| 126 | 16 | பாண்டின் | பாண்டியன் |
| 157 | 5 | காத்தல், மறைத்தல் | காத்தல், அழித்தல், மறைத்தல் |
| 166 | 18-9 | திருவலஞ்சுழி | பத்தி இல்லாமல் தொடர்க. |
| 167 | அ.கு.3 | உணவசதிரு | வசதி உண்டு |
| 170 | 18-9 | செயலாகச் கருதப் | செயலாகக் கருதப் |
| 171 | 7 | இருந்திருந்தாள் | இருந்திருந்தால் |
| 172 | அ.கு.8 | பெற்றுள்ளத | பெற்றுள்ளது |
| 179 | 30 | மன்ம் | மனம் |
| 184 | அ.கு.12 | சோணசைல மகலை | சோணசைலமாலை |
| 195 | 25 | ஈண்டு | ஈண்டுக் |
| 201 | 21 | 'அம்மானை' | அம்மனை |
| 248 | 16 | புரிகின்றான | புரிகின்றான் |
| 249 | 11 | சிவபெருமான் | சிவபெருமானை |
| 250 | 16 | ஓதும்லி; | ஓதும் ஒலி; |
| 271 | 18 | வெண்ணாதது | வொண்ணாதது |
| 305 | 24 | நூற்பொரு ளானது | நூற்பொருளாவது |
| 308 | 26 | கூறெறன்று | கூறென்று |
| 313 | 2 | எனவேறும் | எனவேறு |
|  | 3 | பொருள் | பொருளும் |
| 316 | 22 | இவளுரை | இவ்வுரை |
| 338 | 12 | கலிங்கத்தார் | கலிங்கத்தர் |
| 348 | 20 | கொள்ளளப் படும் | கொள்ளப்படும் |
| 367 | 22 | அஃதாயு மிடத்து | அஃதாராயுமிடத்து |